அய்யனாரிதனார் அருளிய

# புறப்பொருள் வெண்பாமாலை

மூலமும் உரையும்

உரை :
**புலியூர்க் கேசிகன்**





சாரதா பதிப்பகம்

690



வெட்சி நிரை கவர்தல்

அய்யனாரிதனார் அருளிய

# புறப்பொருள் வெண்பாமாலை

மூலமும் உரையும்

உரை :
புலியூர்க் கேசிகன்

சாரதா பதிப்பகம்
சென்னை - 600 014.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா ஏஜென்ஸீஸ்**

10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
☎ : 044-2844 3791 / 94440 82232

---

விலை : ரூ. **80.00**


* முதற் பதிப்பு : ஆகஸ்டு 2009



* © உரிமை : பதிப்பகத்திற்கே



* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,

* நூலின் பெயர் : புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும்

* பக்கங்கள் : 304

* ஒளி அச்சு : ஜெய் ஜீனா

* வெளியீடு : சாரதா பதிப்பகம்
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 14.


* ISBN : 978-93-80217-46-8

* அச்சிட்டோர் : **கிளாசிக் பிரிண்டர்ஸ், செ - 2**

CODE : **831**


---


நூலங்காடி / www.thebookstore.in
☎ 044 - 2811 4402 / 97907 06548 / 97907 06549
e-mail : gowra_09@yahoo.com


அம்மாவுக்கு...

# பதிப்புரை

தமிழிலக்கியங்கள் ஏராளம். அவை அக இலக்கியம், புற இலக்கியம் என இரு கூறாகப் பகுக்கப் பெற்றுள்ளன.

அவற்றுள் அக இலக்கியங்கள் எண்பது விழுக்காடும் புற இலக்கியங்கள் இருபது விழுக்காடும் நமக்குக் கிடைத்துள்ளன. அக இலக்கியம் அகத்துறையை மட்டுமே கூறுகின்றது; புற இலக்கியம் கல்வி, கொடை, ஒழுக்கம், வீரம் இவற்றைப் பற்றிக் கூறுகிறது. நான்கு கூறுகளைப் பற்றிக் கூறும் புற இலக்கியம் குறைந்தும்; அகத்தினை மட்டுமே கூறும் அக இலக்கியம் மிகுந்தும் இருப்பது வியப்புக்குரிய ஒன்றுதான்.

தமிழ் இலக்கியங்கள் தாம் மனிதனின் வாழ்வினை இரு கூறாக்கிப் பார்த்தன. அக வாழ்க்கை - புறவாழ்க்கை என இரு கூறுகளுக்குள்ளேயே மனிதனின் வாழ்வு முற்றுப் பெற்று விடுகிறது.

தொல்காப்பியம்தான் இலக்கியச் சுரங்கம்; இலக்கணச் சுரங்கம். இதிலிருந்து தோண்டி எடுக்கப்பெற்ற தங்கங்களே தமிழ்மொழில் மலிந்துள்ள நூல்கள். தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பிரிவுகளாகப் பகுத்துப், பொருளதிகாரத்தினை அகப்பொருள் - புறப்பொருள் என இரு கூறாக்கி, அந்தப் புறப் பொருளிலே புறத்திணை இயல் என்று ஓர் இயலினையே கூறுகிறது.

தொல்காப்பியம் கூறும் புறத்திணை இயலினை வைத்துக் கொண்டு எழுதப்பெற்ற ஒரு நூலே புறப்பொருள் வெண்பாமாலை. இதனை இயற்றியவர் அய்யனாரிதனார். இவரது காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு. அய்யனாரிதனார் சேர மன்னர் மரபினிலே வந்தவர் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். ஆனால், ஓர் அறிஞர் சேர மன்னர் என்றே குறிப்பிட்டுள்ளார். புறப்பொருள் வெண்பாமாலை என்று இது பெயர் பெற்றிருந்தாலும் இதில் மருட்பாவும் உண்டு.

இந்நூலில் முந்நூற்று நாற்பது நேரிசை வெண்பாக்களும் இருபத்தொரு மருட்பாக்களும் உள்ளன. பதினொன்றாவது படலமான கைக்கிளைப் படலம் முழுதும் மருட்பாவில் பாடப்பெற்றுள்ளன. படலங்களின் தொடக்கத்தில் ஆசிரியப் பாக்களாலே பாடப் பெற்றுள்ளன; அவ்வாறு பதினெட்டு ஆசிரியப் பாக்கள் இடம் பெற்றுள்ளன. புறத்திணையினைத் தொல்காப்பியம் ஏழு திணைகள் என்று கூறுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டு படலங்களாகக் கூறுகிறது. பதின்மூன்றாவது படலம் ஒழிபு என்று குறிக்கப் பெற்றுள்ளது.

இதற்கு முதன்முதலில் உரை இயற்றியவர் சாமுண்டி தேவநாயனார் ஆவார். எளிய உரையினை வகுத்தவர் அறிஞர் புலியூர்க் கேசிகனார். அவரது நூல்கள் நாட்டுடைமை ஆக்கிய பின்னர், அவரது நூல்களை முதன்முதலாக எங்களது பதிப்பகத்தின் வாயிலாகப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றோம். அந்த வரிசையில் இந்த நூலும் இடம் பெறுகிறது.

**பதிப்பகத்தார்**

# புறப்பொருள் வெண்பா மாலை
# முன்னுரை

அருமைமிகு தமிழ்மொழியின் அமைதியினை வரையறுத்துக் கண்ட ஆன்றோர்கள், தமிழ் இலக்கணத்தையும் செறிவுடன் அமைத்துச் செந்தமிழின் செழுமையினைப் பேணினார்கள். அந்த இலக்கணச் செறிவுள் அகம், புறம் என வகுத்து உரைக்கப்படும் ஒழுக்கங்களுள், புறவொழுக்கத்தினை விளக்கிச் செல்வது, இந்தப் புறப்பொருள் வெண்பாமாலை ஆகும்.

தென் பொதியத்தே வீற்றிருந்து தமிழ் நலம் பெருக்கிய குறுமுனிவரின் மாணாக்கர்கள் பன்னிருவரும் செய்த பன்னிரு படலம் என்னும் பழந்தமிழ்ப் பெருநூலை முதலாகக் கொண்டு, அதன் வழி நூலாக எழுந்தது இதுவென்பார்கள். இதனை ஆக்கியருளியவர் சேரர் குடியிலே வந்தவரான ஐயனாரிதனார் என்பவர். இவை, இந்நூற்பாயிரத்தில் அறியப்படுவன.

திணைகளை விளக்கும் சூத்திரங்களையும், அச் சூத்திரங்களுள் கூறப்படும் திணை துறைகளுக்கு இலக்கியமாக அமையும் வெண்பாக்களையும், அவ்வெண்பாக்களின் கருத்தைத் தனியே புலப்படுத்தி ஒவ்வொரு வெண்பாவின் முன்னரும் நிற்பனவாகிய கொளுக்களையும், கொண்டு திகழ்வது இந்நூல். இவற்றுள், கைக்கிளைப் படலத்து இலக்கியச் செய்யுள்கள் மருட்பாக்களாக அமைந்துள்ளன; ஒழிபினிடத்துள்ள வெண்பாக்களுக்கு முன்னர்க் கொளுக்கள் எதுவும் காணப்பெறவில்லை.

'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் சான்றோர் வாக்கினை நாம் அறிவோம். எனினும். ஐயனாரிதனாரின் வெண்பாக்களை நோக்கும்போது, இவற்றின் செழுமையும் இனிமையும் நம்மைப் பெரிதும் தமிழின்பத்தே திளைத்துக் களிகொள்ளச் செய்கின்றனவாதலை நாம் காணலாம்.

இந் நூலுக்குச் சாமுண்டி தேவநாயகர் இயற்றிய பழைய உரையொன்றும் உளது. மிகவும் செப்பமாகவும் திட்பமாகவும் அமைந்து அவ்வுரை விளங்குகின்றது. அதன் பொருண்மைச் செறிவினை எளிதாக அறிந்து பயன் பெறுவதற்கு உதவும் வண்ணம் வெளிவருவதே இந்நூல் எனலாம்.

புதையலெடுத்த செல்வத்தைப் போல இதனைத் தேடி எடுத்து ஆராய்ந்து, செவ்வையாக அச்சிற்பதித்துத் தமிழகத்திற்கு வழங்கிய பெருந்தகையார் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களாவர். அவர்களுடைய வள்ளன்மையின் நிழலில் நின்றே இந்தத் தெளிவுரையினை அமைத்துள்ளேன். தமிழ் அன்பர்கட்கு ஓரளவாவது இதனாற் பயன் ஏற்படுமாயின், டாக்டர் ஐயரவர்களின் திருத்தொண்டின் சீர்மையே அதற்கும் காரணமாகும். அவர்களின் பணி தமிழுள்ள காலம் வரை தமிழ் நெஞ்சங்களிலே நின்று நிலவும் பெரும் பணியாகும். அவர்களின் திருப்பெயருக்கு அஞ்சலி செய்து இதனைத் தமிழன்பர்கட்கு விருந்தாகப் படைக்கின்றேன்.

இந் நூற் கருத்துகளைத் தொல்காப்பியப் புறத்திணை இயலோடு ஒப்பிட்டு, ஆங்காங்கே விளக்கியும் இந்நூல் அமைந்துள்ளது. இஃது ஒரு புதிய சிறப்பாகும். உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியரது தொல்காப்பியப் புறத்திணை இயல் விளக்கத்தைத் தழுவிய சிறப்பும் இதற்கு உண்டு.

இந்நூலின் பன்னிரண்டு படலத்தும் அமைந்து விளங்கும் பொருண்மை, பொதுவாக அந்நாளிலே நிலவிய புறப்பொருள் ஒழுக்கத்தினை நமக்கு உணர்த்துவதாகும். அவற்றுள்,

**வெட்சித்திணை** பகைவருடைய ஆநிரைகளைக் கவர்தலாகிய ஒழுக்கத்தையும், கரந்தைத் திணை அங்ஙனம் பகைவரானே கவர்ந்து கொண்டு போகப்பட்ட நிரைகளை, அவற்றிற்கு உரியவர் மீட்டலையும் உணர்த்துவன.

**வஞ்சித்திணை** பகைவரது நாட்டைக் கவர்தலை நினைந்து போர் செய்தற்கு மேற்செல்லலாகிய ஒழுக்கத்தையும், காஞ்சித்திணை அங்ஙனம் வந்த பகைவர்க்கு எதிர்சென்று அவரது முயற்சியைத் தடுத்தலையும் உணர்த்துவன.

**நொச்சித்திணை** பகைவருக்கு எதிராகத் தம்முடைய மதிலைக் காத்து நிற்றலையும், உழிஞைத்திணை பகைவரது மதிலைச் சுற்றி வளைத்துக் கொண்டு, காத்து நிற்கும் நொச்சியாரை வெற்றி கொள்ளலையும் உணர்த்துவன.

**தும்பைத்திணை** தம்முடைய போராண்மையின் மிகுதிப்பாடு தோன்றப் பகைவரொடு போரிடுதலையும், வாகைத் திணை போரின்கண் வெற்றிப் பெற்றுச் சிறத்தலையும் உணர்த்துவன.

**பாடாண்திணை** ஒருவனுடைய கீர்த்தி கொடை வலிமை தண்ணளி ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லிப் பாடுதலைக் குறிப்பது.

**பொதுவியல்** முற்கூறியவற்றுக் கெல்லாம் பொது வாயுள்ளனவாக, அவற்றுள் கூறப்படாதொழிந்தனவற்றைக் கூறிச் செல்வது, கைக்கிளை ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருபகுப்பாக இயங்கும். ஒருமருங்கு பற்றிய கேண்மையினை விளக்குவது.

**பெருந்திணை** ஆண்பாற் கூற்று, இருபாற் பெருந்திணையென்னம் பகுப்புக்களோடு இயங்கும் பொருந்தாக் காமத்தினது ஒழுக்கத்தையும் ஒழிவு பாடாண் பகுதியிலும் வாகையிலும் கூறப்படாதொழிந்த புறத்துறைச் செய்திகளையும் உணர்த்துவன.

இவ்வாறாக, இத்திணைகள் இயங்கும் துறைகளோடு அமைந்துள்ள இந்நூல், தமிழகத்துப் புறப்பொருள் ஒழுக்கம் செவ்வைப்பட நின்று இயங்கிய சீரினைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளதன் அருமையினை நோக்கித் தமிழன்பர்கள் ஆழ்ந்து கற்றுப் பயனடைதல் வேண்டும்.

புறப்பொருள் பற்றியவாக வரும் இலக்கிய நூற்களின் பொருள் நயத்தினை முற்றவும் அறிந்து பயன்பெற வேண்டுமானால், புறப்பொருள் இலக்கணத்தின் அமைதிகளைத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். அவ்வகையில், இந்நூல் தமிழ் அன்பர்கட்குச் சிறந்த துணையாக அமைந்து உதவும்.

**புலியூர்க் கேசிகன்**



நிரை மீட்டல் கரந்தை



வட்கார்மேற் செல்வது வஞ்சி

# பொருளடக்கம்


கடவுள் வாழ்த்து ........ 1

சிறப்புப் பாயிரம் ........ 4

1. வெட்சிப் படலம் ........ 6

2. கரந்தைப் படலம் ........ 24

3. வஞ்சிப் படலம் ........ 37

4. காஞ்சிப் படலம் ........ 58

5. நொச்சிப் படலம் ........ 78

6. உழிஞைப் படலம் ........ 86

7. தும்பைப் படலம் ........ 109

8. வாகைப் படலம் ........ 130

9. பாடாண் படலம் ........ 155

10. பொதுவியற் படலம் ........ 193

 1. பொதுவியற்பால ........ 193

 2. சிறப்புப் பொதுவியற்பால ........ 204

 3. காஞ்சி பொதுவியற்பால ........ 215

 4. முல்லை பொதுவியற்பால ........ 219

11. கைக்கிளைப் படலம் ........ 226

 1. ஆண்பாற் கூற்று ........ 226

 2. பெண்பாற் கூற்று ........ 232

12. பெருந்திணைப் படலம் ........ 240

 1. பெண்பாற் கூற்று ........ 240

 2. இருபாற் பெருந்திணை ........ 252

13. ஒழிபு ........ 264

இந்நூலின் பொருளமைதி ........ 274

சூத்திர முதற்குறிப்பு அக்ரவரிசை ........ 274

**பின்னிணைப்புகள்**

1. துறை அகரவரிசை ........ 275

2. கொளு முதற்குறிப்பு அகராதி ........ 279

3. வரலாற்று வெண்பாமுதற் குறிப்பு அகராதி ........ 283

# புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும்

## கடவுள் வாழ்த்து

*எடுத்துக்கொண்ட செயல் இனிது நிறைவெய்துதலின் பொருட்டாகக் கடவுளருளைப் போற்றிப் பாடுவது இது. இதன்கண் ஆனைமுகனையும், சிவபிரானையும், கலைமகளையும் ஆசிரியர் போற்றுகின்றார்.*

### ஆனைமுகன்

**நடையூறு சொன்மடந்தை நல்குவது நம்மேல்**
**இடையூறு நீங்குவது மெல்லாம் - புடையூறும்**
**சேனைமுகத் தாளிரியச் சீறுமுகத் தூறுமதத்**
**தானைமுகத் தானைநினைத் தால்.** 1

*'பகுதி பகுதியாக மேன்மேல் வந்துகொண்டிருக்கின்ற எதிரிகளின் படைமுகத்திடத்தே, அவ் வீரர்கள் அனைவரும் அச்சமுற்றவராக ஓடிப்போகுமாறு, சீற்றங்கொள்ளுகின்ற திருமுகத்தை உடையவன் ஆனைமுகவன். சுரக்கின்ற மத நீரினையும் அவன் கொண்டிருப்பவன். அவனது திருவடிகளை நினைத்தால், சொன் மடந்தையானவள் நடைவளம் சுரக்கின்ற ஆற்றலினைத் தந்தருளுவாள்; அல்லாமலும், நம்மேல் வந்துறுகின்ற இடையூறுகள் எல்லாம் நம்மைவிட்டு நீங்குவதும் உண்டாகும்.'*

*'நடை' என்பது, நூலிடத்தே பயின்று வருவதான சொல்லமைதியின் இனிதான செறிவோடுங்கூடிய ஒழுக்கம், ஆனைமுகத்தானை நினைத்தால், விக்கினங்களைப் போக்குபவனாகிய அவனருளால், இடையூறுகள் அனைத்தும் விலகும் என்பதனுடன், அவனருளைப் பெறும்போது கலைமகளின் திருவருளும் வந்தெய்தும் என்றனர். விநாயகப் பெருமான் அகர உகர மகாரமாகிய ஓங்கார வடிவினன் ஆதலின், அவனருளால் அகர முதலாகிய எழுத்தெல்லாம் வளத்துடன் வந்தெய்தப் பெறுதலும் கூடும் என்பது இது. முகம்-இடம்; இங்கே படைமுகம். 'ஆள்' என்றது, எதிர்த்து வந்த பகைவீரரை, 'அவர் இரியச் சீறும்' என்றதனால், 'அச் சீற்றத்தினுக்கே அஞ்சியவராகிப் போரிடாதே பகைவர் ஓடிப் போவர்' எனப் பெருமானது பெருந்திறலைக் குறித்தனர். 'நாமும் இத்தகைய பெருமானது துணையைப் பெற்றனமானால், நம்பால் எதிரிட்டு வருகின்ற பகைகளும் அங்ஙனமே விலகிப்போம்' என்பது கருத்து.*

'ஆனைமுகத்தான்' என்பதற்கு ஏற்ப, 'ஊறு மதத்து' எனக் கூறினர். சிரித்துப் புரம் எரித்த சிவகுமரனின் பேராற்றல், 'சேனைமுகத்து ஆளிரியச் சீறும்' என்பதனால் நன்கு காட்டப்பெற்றது.

'நடையூறு, சொன், மடந்தை நல்குவது' எனக் கொண்டு, 'நடையழகிலே ஊற்றமிகுந்த சொல்வளத்தினைக் கலைமகள் தந்தருள்வாள்' என உரைப்பதும் ஒன்று. இது வழிபடு கடவுளை வாழ்த்தியது.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப கண்ணுதற்**
**பவள மால்வரை பயந்த**
**கவள யானையின் கழல்பணி வோரே.** 2

நெற்றிக் கண்ணினை உடையவனும், செம்பவளத்தின் ஒரு பெரிய மலையினைப்போன்று விளங்குபவனுமாக சிவபிரான் பெற்றருளிய, கவளங்கொள்ளும் யானையினது திருவடிகளைப் பணிபவர்கள், தாம் எண்ணியன அனைத்தும் எண்ணியதன் வகையே எய்துதலைப் பெறுவார்கள்.

'கழல் பணிவோரே எய்துப' என்றதனால், கழல் பணியாதவர் எய்தார் என்பதும், 'கழல் பணிவோர் எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்றதனால், பணியாதார் எண்ணிய எண்ணியதன் மாறுபாடாக எய்துதலையும் பெறுவர்' என்பதும் பெற்றாம்.

'யானை' என்றது, யானை முகவனை, யானை என்றதற்கு இயைய, அது கவளம் கொள்ளும் இயல்பினைக் கூறுவாராகக். 'கவள யானை' என்றனர். கழல்-வீரக் கழல்; கழல் விளங்கும் திருவடிகளைக் குறித்தது.

தானே அருளுதற்குரிய வல்லமை உடையவன் ஆனைமுகன், எனினும், அவனது சிறப்பின் மிகுதியினை மேலும் விதந்து. 'கண்ணுதற் பவள மால்வரை பயந்த' என அவனைப் பெற்ற சிவபிரானின் தகுதி மேம்பாட்டினையும் கூறினார்.

***'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்***
***திண்ணிய ராகப் பெறின்'***

என்பது குறள். அவர் திண்ணியராக இருப்பதுடன் கவள யானையின் கழல் பணிவோராகவும் இருத்தல் வேண்டும் எனக் கூறுவது இது.

## சிவபிரான்

**கண்ணவனைக் காண்கவிரு காதவனைக் கேட்கவாய்ப்**
**பண்ணவனைப் பாடப் பதஞ்சூழ்க - எண்ணிறைந்த**
**நெய்யொத்து நின்றானை நீலமிடற் றானையென்**
**கையொத்து நேர்கூப்பு க. 3**

*'எள்ளினுள் விளங்கும் எண்ணெயினைப் போன்று அனைத்தினும் இரண்டறக் கலந்து நிற்பவனாகிய முதல்வனும், நீல கண்டத்தை உடையவனும் ஆகிய சிவபெருமானையே என் கண்கள் காண்பனவாக! என் காதுகள் அவன் திருப்பெயர்களையே கேட்பனவாக! என் வாயிடத்தே தோன்றும் பண்ணெல்லாம் அவனைப் போற்றுதலின் பொருட்டாகவே சொற்பதங்களைப் புனைந்து விளங்குவனவாக! என் கைகளும் என் உள்ளத்தோடு ஒருமை கொண்டவையாகி, அவன் திருமுன்பிலேயே குவிந்து வணங்கியிருப்பனவாக!'*

*அனைத்திலும் கலந்துநிற்கும் இறையின் ஆற்றலைக் கூறுவார். 'உண்ணிறைந்த நெய்யொத்து நின்றான்' என்றனர். பிறர் துன்புற்றவிடத்துத் தான் அதனையேற்று அவரைக் காக்கின்ற பெருங்கருணைப் பெருமான் அவன் என்பதனைக் குறிக்கவே, ஆலகாலத்தை உண்டு கழுத்திடத்தே அடக்கிய அந்தப் பெருஞ்செயலை நினைந்தவராக, நீலமிடற்றன்' என்றனர்.*

## கலைமகள்

**தவளத் தாமரைத் தாதார் கோயில்**
**அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே. 4**

*'அருமை மிகுந்த தமிழ் நூலாகிய இது இனிதாக நிறைவெய்துதலைக் குறிக்கொண்டு, வெண் தாமரை மலர்களின் மகரந்தம் நிறைந்து விளங்குகின்ற கோயிலிடத்தே கோயில் கொண்டிருப்பவளான, கலைமகளை நாம் போற்றுவோமாக!'*

*கலைமகளின் இருக்கை வெண்டாமரை ஆதலின், அதனைத் 'தவளத் தாமரைத் தாதார் கோயில்' எனக் கூறினர்.*

*'அருந்தமிழ்' என்றது. இந்நூலினை, வாணியாகிய அவளது அருளினையும் வேண்டுகின்றனர். வாணியின் அருளிருப்பின், வாக்குநலம் பெருகும் என்பது கருத்து.*

## சிறப்புப் பாயிரம்

**மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்**
**தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்**
**தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த**
**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்**
**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்**
**ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட**
**வாங்குவில் தடக்கை வானவர் மருமான்**
**ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு**
**மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க**
**வெண்பா மாலை யெனப்பெயர் நிறீஇப்**
**பண்புற மொழிந்தனன் பான்மையின் தெரிந்தே.**

*'நிலைபெற்ற சிறப்பினை உடையவரான வானோர்கள் வேண்டிக் கொள்ளுதலினாலே, தென்மலையாகிய பொதியத் திடத்தே வந்து வீற்றிருந்தவர், சீர்மை நிறைந்த முனிவராகிய அகத்தியர். அவரிடத்தே தண்மைசெறிந்த தமிழ் மொழியின் நுட்பங்களைப் பழுதின்றிக் கற்றுணர்ந்த கிடைத்தற்கரிய புகழினைப் பெற்றவர்கள், தொல்காப்பியர் முதலாகிய பன்னிரு புலவர்களும் ஆவர். அவர்கள் பகுதியோடும் அமையச் சொல்லிய புறப்பொருள் நூல் 'பன்னிரு படலம்' என்பது. அந்நூல் முழுவதனையும் குற்றமின்றிக் கற்றுணர்ந்த சிறப்பினை உடையவர் ஐயனாரிதனார் என்னும் இவர். உயர்ந்த மேம்பாட்டினையுடைய உலகம் முழுவதையுமே ஆட்சிசெலுத்தி வந்தவரும், வளைந்த வில்லினைத் தம் பெரிய கையிடத்தே கொண்டோருமான சேரர் குடியினரின் வழிவந்தவரும் இவராவர். அகற்சியை உடைய நிலப்பரப்பினதான தமிழ்நாட்டின்கண் உள்ளவர்க்குக் குற்றமற்ற வகையிலே புறப்பொருள் இலக்கணம் வழுவின்றி விளங்கும் பொருட்டாக, வெண்பாமாலை என்னும் பெயரினை இட்டு, அப் பொருளினை முறையோடும் தெளிந்தவராக, நூற்பண்பு பொருந்த, அவர் இதனைச் சொல்லியருளினர்'.*

இது சிறப்புப் பாயிரம், அதனால். இதனைச் செய்தவர் இவருடைய ஆசிரியர், ஒருசாலை மாணாக்கர், அல்லது இவர்தம் மாணாக்கர் ஆகியோருள் ஒருவராக இருக்கலாம்.

புறப்பொருள் இலக்கணம், வெட்சி முதலாகப் பன்னிரு படலங்களாகக் கூறப்படும். இவற்றை ஒவ்வொருவரும் ஒவ்வொரு படலமாக அகத்தியரின் மாணாக்கர்கள் பன்னிருவரும் செய்தனர். அதனாலேயே, அது பன்னிரு படலம் எனப் பெயர் பெற்றது எனவும் கொள்வர். அதனையொட்டிய வழி நூல் இது. 'பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த..... பண்புற மொழிந்தனன்' என்பதனால் இப்படிக் கொள்ளப்படும்.

'ஓங்கிய சிறப்பின் உலகம்' என்றது, பண்பால் உயர்வுற்றிருந்த சிறப்பினையுடைய தமிழகப் பகுதியினை, 'அகலிடம்' என்பது, செந்தமிழ் கொடுந்தமிழ் வழங்கும் நாடுகளை எல்லாம் உள்ளடக்கி உரைத்ததாம்.

✡✡✡

# 1. வெட்சிப் படலம்

**வெட்சி வெட்சியரவம் விரிச்சி செலவு**
**வேயே புறத்திறை ஊர்கொலை ஆகோள்**
**பூசன் மாற்றே புகழ்சுரத் துய்த்தல்**
**தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு**
**உண்டாட் டுயர்கொடை புலனறி சிறப்பே**
**பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே**
**கொற்றவை நிலையே வெறியாட் டுளப்பட**
**எட்டிரண் டேனை நான்கொடு தொகைஇ**
**வெட்சியும் வெட்சித் துறையும் ஆகும்.** (1)

*வெட்சி, வெட்சியரவம், விரிச்சி, செலவு, வேய், புறத்திறை, ஊர்கொலை, ஆகோள், பூசன் மாற்று, சுரத்துய்த்தல், தலைத்தோற்றம், தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை, புலனறி சிறப்பு, பிள்ளை வழக்கு, துடிநிலை, கொற்றவைநிலை, வெறியாட்டு என இவை இருபதும் வெட்சித் திணையும். அதன் துறைகளும் ஆம்.*

*வெட்சி என்பது திணையும், வெட்சியரவம் முதலாயின அதன் துறைகளும் என்று கொள்க.*

## வெட்சியின் விளக்கம்

***வெட்சி என்பது இருவகைத்து; மன்னுறு***
***தொழிலும் தன்னுறு தொழிலும்** என.*

*வெட்சி என்பது, மன்னுறு தொழிலும், தன்னுறு தொழிலும் என இரு வகையினை உடையது.*

***வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்***
***சென்றி கன்முறை ஆதந் தன்று.***

*பகைவரை வெற்றி பெறுதலைக் கருதிய வேந்தன் ஏவிய பொழுதிலாயினும், அவனது ஏவுதல் இல்லாதே யாயினும் சென்று, மாறுபாட்டினையுடைய பகை நாட்டிடத்தேயுள்ள பசு நிரைகளைக் கைக்கொண்டு வருவது, வெட்சி ஆகும்.*

*'பணிப்பவும்' என்பது, அவன் வெளிப்படையாக ஆணையிட்ட காலத்து எனவும், 'பணிப்பின்றியும்' என்பது, அவனது ஆணை பிறக்கா முன்பே எனவும் கொள்ளப்படல் வேண்டும்.*

*அவற்றுள், மன்னுறு தொழில் வருமாறு:-*

*முன்னர்ச் சொல்லிய இரண்டனுள்ளும் மன்னன் ஏவிய பொழுதே செய்யும் தொழில்கள் வருகின்ற முறைமையாவது-*

**மண்டு மெரியுண் மரந்தடிந் திட்டற்றாக்**
**கொண்ட கொடுஞ்சிலையன் கோல்தெரியக் - கண்டே**
**அடையார் முனையலற ஐயிலைவேற் காளை**
**விடையாயங் கொள்கென்றான் வேந்து.** 1

*கொடிய வில்லினைக் கைக்கொண்டவன் அம்புகளை ஆராய்தலைக் கண்டும், அரசனானவன், மிகக் கொழுந்துவிட்டு எரிய நின்ற நெருப்பினுள்ளே மரத்தை வெட்டி இட்டதொரு தன்மைத்தாக, 'வியக்கத்தக்க இலைத்தொழிலினாற் சிறந்த வேலினையுடைய காளையே! நம் பகைவரின் போர்முனை அலறும்படியாக நீ சென்று, ஏறுகளையுடைய அவரது ஆநிரைகளைக் கைப்பற்றிக் கொணர்க' என்று ஏவினான்.*

*இது கண்டோர் கூற்று,*

*'கொண்ட கொடுஞ் சிலையன் கோல் தெரியக் கண்டே' என்றதனால், அவ் வீரன் பகைவரொடு போரியற்றுதற்கு முனைந்து நின்றனன் என்பதும், அவனது அந்த வெஞ்சினம் மேலும் மிக்கெழுமாறு, அரசன் 'விடையாயம் கொள்க' என்றனன் என்பதும் விளங்கும். இதனையே, 'மண்டும் எரியுள் மரந்தடிந் திட்டற்றால்' எனக் கூறினர்.*

*இனித் தன்னுறு தொழில் வருமாறு:-*

*இனி, அரசன் ஏவாதேயே செல்லுதலாகிய தன்னுறு தொழிலின் முறைமை வரும் வகையாவது,*

**அறாஅ நிலைச்சாடி ஆடுறு தேறல்**
**மறாஅன் மழைத்தடங் கண்ணி-பொறாஅன்**
**கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை**
**நெடுங்கடைய நேரார் நிரை.** 2

*குளிர்ந்த பெரிய கண்களையுடைய கள்விலையாட்டியே! கள்நீங்காத நிலைத்தாழியில் இருக்கின்ற அடுதலுற்ற மதுத் தெளிவை இவனுக்கு வார்த்தற்கு நீயும் மறுக்காதே. தறுகண்மையினை உடையவன் இந்த மறவன். இவன் அதனைப் பொறுக்கமாட்டான். இவன், தன் காலிலே வீரக் கழலினைக் கட்டினான் என்றால், நாளைக் காலையில், பகைவருடைய ஆநிரைகள் முற்றவும், நின்னது நெடிய வாயிலிடத்தனவாக ஆகுமே!*

'நேரார் நிரை நாளைக் காலை நின் நெடுங்கடைய ஆகுமாதலின், மறாதே தேறல் வார்ப்பாயாக' என்று கண்டோர்கள் விலையாட்டிக்குக் கூறினர்.

'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென் றன்ன விருவகைத்தே வெட்சி' என்பது பன்னிருபாட்டியல் சூத்திரம் (இ. வி. சூ. 602 மேற்.) ஆதலையும் இங்கு நினைக்க வேண்டும். தொல்காப்பியப் புறத்திணையியல் 'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந் தோம்பல் மேவற்றாகும் வெட்சி'யென உரைத்து, நிரைகோடலையும் நிரை மீட்டலையும் வெட்சியுள் அடக்கிக் கூறும். இருவர்க்கும் கோடற்றொழில் உளதாதலின் அங்ஙனம் உரைத்தனர். 'மீட்டல்' கரந்தை எனத் தனித்திணையாகவே இந்நூலுட் கூறப்படுகின்றது. இதனை 'வெட்சிக் கரந்தை' என்றும் உரைப்பர். 'ஆதந்தன்று' என்று மட்டுமே இந்நூலிற் கூறினர். ஆனால், தொல்காப்பியப் புறத்திணை இயலோ, 'களவின் ஆதந்து ஓம்பல்' எனக் களவாற் கொள்ளப்படுதல் இது எனவும் உரைக்கின்றது.

## வெட்சித் திணையின் துறைகள்

வெட்சித் திணையின் துறைகள் பத்தொன்பதாகும். அவை வெட்சியரவம் முதலாக, வெறியாட்டு இறுதியாக வருவன.

### 1. வெட்சி அரவம்

***கலவார் முனைமேற், செலவு அமர்ந்தன்று.***

வெட்சியரவமாவது, தம்மொடு பொருந்தாத பகைவரின் போர் முனையிடத்துப் போதலை விரும்பியது ஆகும்.

**நெடிபடு கானத்து நீள்வேன் மறவர்**
**அடிபடுத் தாரதர் செல்வான் - துடிபடுத்து**
**வெட்சி மலைய விரவார் மணிநிரைக்**
**கட்சியுட் காரி கலுழ்ம்.** 3

நெடிதான வேற்படையினைக் கைக்கொண்ட மறவர்கள், காலிலே செருப்பை இட்டவராகச், சிள்வீடு என்னும் வண்டானது ஒலிக்கின்ற காட்டிடத்தே, கடத்தற்கு அரியதாக விளங்கும் வழியினைக் கடந்து செல்லுதலின் பொருட்டாகத், துடியினைக் கொட்டப்பண்ணி, வெட்சிப் பூவினையும் சூடப், பகைவரது மணியாற் சிறப்புற்றுள்ள ஆநிரைகளுள்ள காட்டினிடத்தே, 'காரி' என்னும் பறவையும் தீநிமித்தமாக அழுகுரலெடுத்து அரற்றும்.

நெடி-சிள்வீடு என்னும் வண்டு. அடிபடுத்தல்-செருப்பினைக் காலடியிற் சேர்த்தல். துடி-துடி என்னும் பறை. வெட்சி-வெட்சிப் பூ; வெட்சி மறவர் என்பதற்கான அடையாளப் பூ. விரவார்-

பொருந்தாதார்; பகைவர். கட்சி-காடு. காரி-காரிப் பறவை; இந்நாளிற் சாக்குருவி என்பர். நிரைகோடற்குரிய மறவர்கள் நெடுவேலுடையராய், செருப்பினை அடிப்படுத்து, வெட்சிப்பூச் சூடித், துடிபடுத்து, நெடிபடு கானத்து ஆரதர் செல்வான் வந்து, பாடிப்புறத்தே ஒன்று கூடுகின்றதைக் குறிப்பது இத் துறையாகும். இங்ஙனம் அவர் திரளுங்கால் எழுகின்ற ஆரவாரத்தைக் கருதி இது 'வெட்சி யரவம்' எனப்பெற்றது. இதனைப் 'படையியங்கு அரவம்' எனத் தொல்காப்பியம் தெளிவுறக் கூறுதலை அறிக. காரி-கரும்பிள்ளை எனவும் கூறப்படும்.

## 2. விரிச்சி

***வேண்டிய பொருளின் விளைவுநன்கு அறிதற்கு***
***ஈண்டு இருண் மாலைச் சொல்ஓர்த் தன்று.***

நிரைகோடற்கு விரும்பிய மறவர்கள், தாம் விரும்பிய பொருளினது விளைவாக வந்துறும் நன்மையினை அறிந்து கொள்ளலின் பொருட்டாக, செறிகின்ற இருளினைக் கொண்ட மாலைப்பொழுதிலே, நற்சொல்லைக் கேட்டறிவது விரிச்சியாகும்; (விரிச்சி-சொல்),

ஒன்றைச் செய்யத் தொடங்கும் முன்னர், அதை மனத்துட் கொண்டவர், ஏதிலார் வாய்ச் சொற்களாக எழுகின்றவற்றைக் கேட்டு, அச் செயல் இனிது முடியுமென உணர்தல் இது.

**எழுவணி சீறூர் இருண்மாலை முன்றிற்**
**குழுவினம் கைகூப்பி நிற்பத் – 'தொழுவிற்**
**குடக்கண்ஆக் கொண்டுவா' என்றாள் குனிவில்**
**தடக்கையாய் வென்றி தரும். 4**

கணைய மரங்கள் சூழ்ந்திருக்கும் சிற்றூரிடத்தே, இருள் கொண்ட மாலைப்பொழுதிலே, முற்றத்திடத்தே திரண்டிருந்த நம் மறவர்கூட்டம் கை கூப்பி நற்சொல்லை வேண்டித் தொழுது நிற்க, அவ்வேளையில், 'தொழுவின் மேற்குப் புறத்தே நிற்கும் ஆவினைக் கொண்டு வருக' என்றாள் ஒருத்தி. ஆதலால், வளைந்த வில்லினை ஏந்தியிருக்கும் பெரிய கையினை உடைய தலைவனே! நமக்கே இம் முயற்சி வெற்றியைத் தருவதாம்.

இது, படைமறவருட் சிலர் தலைவனிடம் உரைத்ததாம். எழு-கணையமரம். ஊரைச் சுற்றினும் கட்டு வேலியாகக் கணையமரங்கள் நிறுத்தப் பெற்றிருத்தலைக் குறிக்க. 'எழுவணி சீறூர்' என்றனர். முன்றில்-முற்றம்; கோயின் முற்றம் எனவும் கொள்வர். 'குடக்கணீ கொண்டுவா என்றாள்' எனப் பாடங்கொண்டு 'கட்சாடி இருக்கும் ஏணியிற் குடத்துக்கள்ளை

*எடுத்துக் கொண்டுவா என்றனள்' எனவும் உரைப்பர். எனினும், நிரைகோடற்குச் செல்பவர்க்கு 'ஆக் கொண்டுவா' என்னும் சொல்லே நற்சொல்லாக அமைவது பொருத்தமாகும்.*

## 3. செலவு

***வில்லேர் உழவர் வேற்றுப் புலமுன்னிக்***
***கல்லேர் கானங் கடந்துசென் றன்று.***

*செலவாவது, வில்லாகிய ஏரினையுடைய உழவராகிய வெட்சி மறவர்கள், மாற்றாரது இடத்தினைக் கருதியவராகக், கற்கள் பொருந்தின காட்டைக் கடந்து, பகைவர் அறியாதபடி சென்றது ஆகும்.*

**கூற்றினத் தன்னார் கொடுவில் இடனேந்திப்**
**பாற்றினம் பின்படர முன்படர்ந்து-ஏற்றினம்**
**நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய**
**குன்றம் கொடுவில் லவர். 5**

*கூற்றினது கூட்டத்தைப் போன்று திரண்டிருந்த வெட்சி மறவர்கள், வளைந்த வில்லினை இடப்பக்கத்திற் கொண்டவராகக், கழுகும் பருந்தும் ஆகியவை பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கத், தமது வலியானே, வளைந்த வில்லினை உடையவரான பகைவரது ஏறுகளையுடைய ஆனினம் நின்ற இடத்தினைக் கருதியவராக, நீண்ட மூங்கில்களையுடைய குன்றத்தினைத் தம் நினைவிற்கொண்டு சென்றனர்.*

*அவர் கூற்றினத்து அன்னாராக, அவராற் பகைவர்கள் தவறாது மடிவர் என்பது கருதிப், பாற்றினம் பின்படர்தலைச் செய்தன என்க; இது அவருடைய போர்மறத்தை வியந்து கூறியதாம். இப்படிச் செல்லும் அவர், பகைவருடைய காவன் மறவர்கள் அறியாதேயே செல்வர் என்பது, அடுத்து வருகின்ற 'வேய்' என்னும் துறையினால் புலனாகும்.*

## 4. வேய்

***பற்றார் தம்முனைப் படுமணி யாயத்து***
***ஒற்றா ராய்ந்த வகையுரைத் தன்று.***

*'வேய்' என்பது, பகைவருடைய இடத்தே சென்று, ஒற்றர்கள், அப் பகைவருடைய ஒலிக்கும் மணிகள் பூட்டிய ஆநிரைகள் நின்ற இடத்தே, ஒற்றினை ஆராய்ந்து தெரிந்து வந்த கூறுபாட்டினைக் கூறுவது ஆகும்.*

*ஒற்றிவருதல் பகைவருடைய காவன் மறவர்களின் வலிமையினை அறிந்து, அவரை வென்று நிரைகளைக்*

கொள்ளுதற்கான வாய்ப்பினை அறிவதன் பொருட்டாகும். இதனால், அவர் வெட்சி மறவர் வந்ததனை அறியாதவராக இருந்த நிலையினர் என்பது தெளிவாகும்,

**நிலையும் நிரையும் நிரைப்புறத்து நின்ற**
**சிலையும் செருமுனையுள் வைகி-இலைபுனைந்த**
**கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து**
**நள்ளிருட்கண் வந்தார் நமர்.** 6

பச்சிலையுடைய விரவித்தொடுத்த தேன்பொழியும் மாலையினையும், வீரக் கழலினையும் உடையவனே! போரினை விரும்புகின்ற மறத்தினைக் கொண்டவனாகப் போர்முனையுள் வந்திருக்கும் தலைவனே! நம்மவராகிய ஒற்றர்கள், பகைவரது ஆனிரை நிற்கின்ற இடத்தையும், அவற்றின் அளவையும், அந் நிரைகளின் புறத்தே அவற்றின் காவலாக நிற்கின்ற வில்வீரர்களின் அளவினையும், செறிந்த இருளிடத்தே சென்று ஒற்றி அறிந்தவராகத் திரும்பி வந்துள்ளனர்.

இஃது, ஒற்றர் மீண்டு வருவதனை அறிந்த வெட்சி மறவருள் ஒருவன், தன் தலைவனிடத்தே சென்று அச் செய்தியினை அறிவித்தல், நிரைகோடற்குச் செல்லுமுன் அவை நிற்கும் இடத்தையும், அவற்றின் அளவையும், அவற்றைக் காத்து நிற்போரது வலிமையையும் அறிதலின் முறைமை இதனால் விளங்கும். இங்ஙனம் அறிந்தபின் மேற்செல்லுதலே வெற்றியின் உறுதிக்குத் துணைசெய்வதாகும். 'நள்ளிருட்கண் வந்தார்' என்பது, இப்படி ஒற்றியறிதல் இருளினூடே செய்தற்குரியது என்பதனைக் காட்டும்.

## 5. புறத்திறை

***நோக்கரும் குறும்பின் நூழையும் வாயிலும்***
***போக்கற வளைஇப் புறத்திறுத் தன்று.***

ஏனையோர் புறத்திறை என்பது, சென்று காணுதற்கும் அரிதான இயல்பினையுடைய காவற்காட்டினது சிறுவழியும் பெருவாயிலும், உள்ளிருப்போர் புறம்போதலில்லாதபடிக்குச் சுற்றிவளைத்தவராக, வெட்சி மறவர், அதனைப் புறஞ்சூழ்ந்து முற்றியிருப்பது ஆகும்.

நூழை-சிறுவழி. வாயில்-பெருவழி. 'போக்கு அறவளைஇ,' என்றது அவரைப் புறம்போக விடின், அவர் தம் மன்னர்க்குச் செய்தியறிவித்துத் தம் காவலைப் பலப்படுத்திக் கொள்வா ராதலின், அங்ஙனம் போகவிடாது தடுத்து வளைத்துக் கொண்டு என்பதாம். குறும்பு-காவற்காடு; சிற்றரணும் ஆம்.

**உய்ந்தொழிவார் ஈங்கில்லை ஊழிக்கண் தீயேபோல்**
**முந்தமருள் ஏற்றார் முரண்முருங்கத்-தந்தமரின்**
**ஒற்றினான் ஆய்ந்தாய்ந்து உரவோர் குறும்பினைச்**
**சுற்றினார் போகாமற் சூழ்ந்து.** 7

*வலிமைகொண்ட வெட்சி மறவர்கள், தம்முடைய இனத்தாரான ஒற்றர்களினால் பன்முறையும் பகைவரது நிலைகளை ஆராய்ந்தறிந்த பின்னர்ப் போரின்கண் முற்பட வந்து எதிர்ந்தாருடைய மாறுபாடு கெடும்படியாக, ஊழியிறுதிக்கண் தோன்றும் தீயினைப்போல எழுந்து, 'இவ் வரணினின்றும் உயிர்பிழைத்துப் போவார் யாருமில்லை' என்னும்படியாக, எவரும் வெளியேறிப் போகாதபடிக்கு, அரணினைச் சூழ்ந்து வளைத்துக் கொண்டனர்.*

*இது கண்டோர் கூற்று. 'ஊழித் தீக்கு எதிரே உய்ந்து பிழைப்பார் எவருமிலர்' என்பதுபோல, வெட்சிமறவரின் போர் வெம்மைக்கு எதிரிட்டு வந்த பகைவர் முற்றும் அழிவர் என்பதும் உறுதியாகும் என்றதாம். முரண்-மாறுபாடு. முருங்க-அழிய. குறும்பு-காவற்காட்டுச் சிற்றரண். 'போகாமற் சூழ்ந்து' என்பதனால், 'நூழையும் வாயிலும் போக்கற வளைஇய' தன்மை கூறப்பட்டது. 'ஊழிக்கண் தீயேபோல்' என்னும் போர்ச் சினத்தினை வெட்சியாருக்குப் போன்றே கரந்தையாருக்கும் உரித்தாக்குவர். அப்போது, 'அங்ஙனம் வந்து முந்து அமருள் ஏற்றாரின் முரணும் முருங்க, அவரை அழித்து வெல்பவர் வெட்சியார்' என்று உரைக்க.*

## 6. ஊர்கொலை

***விரைபரி கடவி வில்லுடை மறவர்***
***குரையழல் நடப்பக் குறும்பெறிந் தன்று.***

*ஊர் கொலையாவது, வில்லேந்தியவரான வெட்சி மறவர்கள், விரையச் செல்லுகின்றவான தம்முடைய குதிரைகளைச் செலுத்திச் சென்றவராக, முழங்கும் தீயானது பரவும்படியாகப், பகையரணை அழிப்பதாகும்.*

*'விரைபரி'- போர்க் குதிரைகள். கடவுதல்-செலுத்துதல். குரையழல்-கொழுந்துவிட்டு ஒலியுடன் பற்றியெரியும் பெருந் தீ. நடப்ப-நிகழ. 'குறும்பு எறிதலால் அதனைக் காத்து நின்றவரைக் கொன்றமையும் நிகழும். எனவே, இத்துறை ஊர்கொலை' எனப்பட்டது.*

**இகலே துணையா எரிதவழச் சீறிப்**
**புகலே அரிதென்னார் புக்குப்-பகலே**
**தொலைவிலார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்**
**கொலைவிலார் கொண்டார் குறும்பு.** 8

*கொலைத் தொழிலாற் சிறப்புற்ற வில்லினைக் கைக்கொண்டோரான வெட்சி மறவர்கள், பகையுணர்வு ஒன்றே தமக்குத் துணையாகக் கொண்டவராக, நெருப்பு எழும்படியாகச் சீற்றங்கொண்டு, பகையரணுட் புகுதல் அரிதானதென்றும் கருதாதவராகச் சென்று, பகற் பொழுதிலே எவருக்கும் தோற்காத மறத்தினையுடைய பகைவரது வீரர்கள் செத்து வீழும்படியாக அவரைக் கொன்று, தம் கால்களிற் கட்டப்பெற்றுள்ள வீரக்கழல்கள் ஆர்ப்பொலிசெய்யச் சுழன்று போரிட்டு, அரணினையும் கைப்பற்றிக் கொண்டனர்.*

*இது கண்டவர் உரைப்பதாம். இகல்-மாறுபாடு; பகையுணர்வு. இகலே துணையாயது. அதுவே பகைவரை அழித்தற்குரிய ஊக்கத்தைத் தந்ததால். 'எரிதவழச் சீறி' என்பது சினத்தின் மிகுதியைக் குறித்தது. அன்றிப் பகையரணிடத்து எரிதவழும்படியாகச் சீறி எனினும் ஆம். 'பகலே தொலைவிலார் வீழ' என்றதனால், முற்றியது இரவிலென்பதும், பகைமறவர் அதனை அறியாதாராயிருந்தனர் என்பதும் கூறப்பட்டது. 'தொடுகழல் ஆர்த்தல்' சுற்றிச் சுழன்று போரிடலால், கழல்-வீரக்கழல்; இது, அவர் முன்னரும் போர்பல வென்ற வீரச்செறிவினர் என்பதனைக் குறித்தது. 'புகலே அரிது என்றார்' என்பதனால், அவ் வரணின் வலிமையினையும் கூறினர். அதனைக் கொண்டவராகவே வெட்சியாரின் வீரச் செறிவும் நன்கு புலப்படும்.*

## 7. ஆகோள்

***வென் றார்த்து விறன் மறவர்***
***கன்றோடும் ஆதழீஇ யன்று.***

*ஆகோளாவது, வெற்றியாளரான வெட்சிமறவர்கள் பகையரணை வென்று ஆரவாரித்தவராக, அவற்றுள்ளிருந்தவான கன்றுகளொடும் கூடிய பசுநிரைகளைத் தாம் கைப்பற்றிக் கொண்டது ஆகும்.*

**கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்**
**நெடுவரை நீள்வேய் நரலும்-நடுவூர்க்**
**கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற**
**நிணநிரை வேலார் நிலை.** 9

உயரிய மலையிடத்தே, நீண்ட மூங்கில்கள் ஒலிக்கின்ற தன்மையுடைத்தான ஊரினது நடுவிடத்தே, பகைவரது திரளான ஆநிரைகளைக் கைக்கொண்டவராக, அவ்விடத்து நின்று நீங்காதவருமாக, நிணத்தைக் கோத்த வேலினை உடையவரான வெட்சி மறவர்கள் நின்றிருந்த நிலையானது, புலிகள் ஒன்றுகூடித் திரண்டு ஓரிடத்தே கூட்டமிட்டிருந்த தன்மைத்தாகும்.

இது கண்டோர் உரைப்பது. கொடுவரி-புலி; வளைந்த கோடுகளை உடைமையால் புலிக்குப் பெயராக ஆயிற்று. நரலல்-ஒலித்தல். கையகலார்-இடம் விட்டுப் பெயராதாராய். இதனால், ஆகொண்டு நின்ற வெட்சி மறவரின் பேராண்மையும் கடுஞ்சினமும் விளங்கும்.

## 8. பூசன் மாற்று

*கணம் பிறங்கக் கைக்கொண் டார்*
*பிணம் பிறங்கப் பெயர்த்திட் டன்று.*

ஆநிரைகளை மிகுதியாகக் கைக்கொண்டவரான வெட்சி மறவர்கள், தம்மைப் பின் தொடர்ந்தவராக அவற்றை மீட்பதற்கு வருகின்ற கரந்தை மறவரை, முற்றவும் பிணங்கள் மிகுமாறு கொன்று அழித்து, அவருடைய பூசலை மாற்றுவது, பூசன் மாற்று ஆகும்.

பூசன் மாற்று - போரினை இல்லையாக்குதல். இது, 'வெட்சியார் ஆநிரைகளைக் கவர்ந்து தம்முடைய நாடுநோக்கிச் செல்லுங்காலத்து இடைவழியில் நிகழும்' என்பர்.

**சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்**
**வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணியத் - தாழ்ந்த**
**குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார் எய்த**
**புலவுக் கணைவழிபோய்ப் புள்.** 10

வெட்சி மறவராலே வளைத்துக்கொள்ளப்பட்ட நிரையானது மீளுமாறு, அவரைச் சூழ்ந்து போரினை மேற்கொண்ட கரந்தை மறவர்கள், பட்டு வீழ்ந்தனர். வளைந்த கொடிய வில்லினாற் சிறப்புற்ற கையினை உடையவரும், கூற்றத்தை ஒப்பவருமான அவ்வெட்சி மறவர் எய்த, புலால் நாற்றத்தினையுடைய அம்பு போன வழியினைத் தாமும் பின் பற்றிச் சென்றவாய்ப், புள்களும் பிணங்களிற் படிந்தவாயின.

தலைக் கொண்டார்-போரிடலை மேற்கொண்டார்; கரந்தை மறவர்கள், 'கணை சென்ற வழிச் சென்று படிந்தன புள்கள்' என்றதனால், அம் மறவரது வில்லாண்மை கூறப்பெற்றது; பூசலை மாற்றி நிற்கும் நிலையும் இதனால் உணரப்படும்.

## 9. சுரத்து உய்த்தல்

*அருஞ் சுரத்தும் அகன் கானத்தும்*
*வருந்தாமல் நிரை உய்த்தன்று.*

*கடத்தற்கு அரியவான வழியிடத்தும், அகன்ற காட்டிடத்தும், வருத்தம் உறாதபடியாகப் பேணித், தாம் கைக் கொண்ட நிரைகளை ஓட்டிச் செல்வது, சுரத்து உய்த்தல் ஆகும். சுரத்து உய்த்தல் - வழியூடே கொண்டு போதல்.*

**புன்மேய்ந்து அசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்**
**வின்மேல் அசைஇயகை வெல்கழலான் - தன்மேற்**
**கடுவரை நீரிற் கடுத்து வரக்கண்டும்**
**நெடுவரை நீழல் நிரை.** 11

*வில்லின் மேல் வைத்த கையினையும், வீரக் கழலணிந்த கால்களையும் உடையோனான வெட்சி மறவன், தன்மேலே செங்குத்தான மலையினின்றும் வீழுகின்ற அருவிநீரின் வேகத்துடனே, கரந்தையார் முடுகிவருதலைக் கண்டான்; கண்டும், 'இவ் ஆநிரைகள் நெடிய மலைப்பாங்கிடத்தே புன்மேய்ந்தவாக இளைப்பாறித் தம்மில் ஒருங்கே கூடியவாகச் செல்க' என்று, தன் ஏவலாளருக்குக் கட்டளை இட்டனன்.*

*படைமறவன் பேராண்மையினால் மிக்கவன் எனினும், தான் கைப்பற்றிய ஆநிரைகளைப் பேணிக் கொண்டு செல்லும் உள்ளமும் கொண்டவன். இதனால், வெட்சியார் கரந்தையாரை முற்றவும் அழிக்கின்ற கடுமையினர் எனினும், கவர்ந்த நிரைகளை அன்புடன் கொண்டுசெல்பவர் என்பதும் விளங்கும். அலையலையாகத் தன்மேல் வருகின்ற கரந்தையினரை எதிர்த்து அழிக்க முனைந்து நின்ற அந்த நிலையினும், அவன் ஆக்கள்பாற் கொண்ட கருணை இதனாற் பெறப்படும்.*

## 10. தலைத்தோற்றம்

*உர வெய்யோன் இனந் தழீஇ*
*வரவு உணர்ந்து கிளை மகிழ்ந்தன்று.*

*வலிமையினை விரும்புவோனான படைத்தலைவன், ஆத்திரளைக் கொண்டு வருதலை அறிந்து, அவனுடைய சுற்றத்தவரான பலரும் மகிழ்வது, தலைத்தோற்றம் ஆகும்.*

**மொய்அணல் ஆனிரை முன்செல்லப் பின்செல்லும்**
**மைஅணற் காளை மகிழ்துடி - கையணல்**
**வைத்த எயிற்றியர் வாட்கண் இடனாட**
**உய்த்தன்று உவகை ஒருங்கு.** 12

*செறிந்த அலைதாடியினை உடைய ஆனிரைகள் முற்பட்டுச் செல்லப், பின்னாக அவற்றைப் பேணிச் செல்வோனான கறுத்த தாடியினையுடைய காளையானவன், மகிழ்வுடன் முழக்கும் துடியொலியானது, தம் கணவரின் பிரிவினாற் கவலையுற்றுத் தம் கையினைக் கன்னத்தே வைத்திருக்கும் வேட்டுவிச்சியரது, வாள்போன்ற கண்கள் இடமாகத் துடிப்ப, உவகையினைப் பலருக்கும் ஒருங்கே செலுத்திற்று!*

*'துடியொலி, எயிற்றியரின் இடக்கண் ஆட, உவகை ஒருங்கு உய்த்தன்று' என்பதனால், அவரிடத்து இடக்கண் துடித்தலாகிய நன்னிமித்தம் எழத், துடியொலியும் ஒருங்கே எழலாயிற்று எனவும் கொள்ளலாம். 'வெட்சி மறவர் தம் ஊரினை அணுகினர்' என்னும் துறை இது. இதனைப் 'பாடி' வீட்டுள்ளோர் மகிழ்ந்து உரைத்தற்குக் காரணமான வரவு' எனக்கொண்டு, 'நுவலுழித் தோற்றம்' எனத் தொல்காப்பியப் புறத்திணையியல் கூறும்.*

## 11. தந்து நிறை

***வார் வலந்த துடி விம்ம***
***ஊர் புகல நிரை உய்த்தன்று.***

*வாராலே கட்டின துடியானது ஒலி முழங்கவும், ஊரில் உள்ளார் விருப்புடன் காணவும், வெட்சியார் தாம் கொணர்ந்த நிரையினை ஊர்மன்றத்தே செலுத்துவது தந்து நிறையாகும். தந்து நிறை கொணர்ந்து நிறுத்துதல்.*

**தண்டா விருப்பினள் தன்னை தலைமலைந்த**
**வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று - கண்டாள்**
**அணிநிரை வாண்முறுவல் அம்மா எயிற்றி**
**மணிநிரை மல்கிய மன்று. 13**

*அழகிதாக ஒழுங்குபட்டு ஒளிவிடா நின்ற பல்வரிசை யினையும், அழகிய பெருமையினையும் உடையவளான எயிற்றியானவள், தணியாத விருப்பத்தை உடையவளாகத், தன் தலைவனது தலையினிடத்தே சூடின வண்டு நிறைந்த மணங்கமழும் மாலை வாழ்கவென வாழ்த்தியவளாக, மணிகள் பூட்டப்பெற்ற ஆநிரைகள் மிகுதியாக நின்றிருந்த மன்றத்தினைச் சென்று கண்டாள்!*

*'கண்ணி வாழ்க' என்றது, வெட்சிச் செயலுக்குக் குறிப்பாக அவன் சூடிய அது, அவனுக்கு வெற்றியைத் தந்ததனால் மகிழ்ந்து, அதனை வாழ்த்தியதாம். 'அணிநிரை வாண்முறுவல் அம்மா எயிற்றி' என்றது, அவளுடைய தண்டாவிருப்பின் தகைமை யினைக் கண்டவர் வியப்பினாற் கூறியது.*

## 12. பாதீடு

***கவர்கணைச் சுற்றம் கவர்ந்த கணநிரை***
***அவரவர் வினைவயின் அறிந்தீந் தன்று.***

*பகைவரது உயிரைக் கவருகின்ற அம்புகளைக் கொண்ட தனது படைமறவர் சுற்றம், கைப்பற்றிக் கொணர்ந்த ஆநிரையினைத், தலைவன், அவரவரது தொழில்வகையின் தகுதியை அறிந்து, அதற்கேற்ப அவர்கட்குப் பகுத்துக் கொடுத்தல், பாதீடு ஆகும். கவர்கணை - கவர்ந்த கணையும் ஆம். இதனால், அவரவரின் போராற்றலுக்கு ஏற்பவே அவரவர் பங்குபெற்றனர் என்று கொள்ளவேண்டும்.*

**ஒள்வாண் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந்து உரைத்தார்க்கும்**
**புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை**
**மாறட்ட வென்றி மறவர்தம் சீறூரிற்**
**கூறிட்டார் கொண்ட நிரை.** 14

*ஒள்ளிய வாட்போரினை மேற்கொண்டவர்க்கும், ஒற்றினை ஆராய்ந்து வந்து உரைத்த ஒற்றர்களுக்கும், புள் நிமித்தத்தை அறிந்து வெற்றி வாய்ப்பதனை எடுத்துச் சொல்லிய அறிவுடையோருக்கும், தம்மோடு வேறுபடுவாரை 'மாறுபாடு கெடுத்த வெற்றியையுடைய மறவர்கள், தம்முடைய சிற்றூரிடத்தே, தாம் கைக்கொண்டு வந்த நிரையினைப் பகுத்துக்கொண்டனர்!*

*விள்வார்-வேறுபாடு கொள்வார்; பகைவர்-மாறுஅட்ட-மாறுபாட்டைக் கெடுத்த; அவரை அழித்த. இதனால், கவர்ந்து வந்த நிரையினை வெட்சி மறவர் தமக்குள்ளாகப் பகுத்துக்கொள்ளும் முறைமையினைக் காணலாம்.*

## 13. உண்டாட்டு

***தொட்டு இமிழும் கழன் மறவர்***
***மட்டு உண்டு மகிழ் தூங்கின்று.***

*கட்டப்பட்டு ஆரவாரம் செய்துகொண்டிருக்கும் வீரக் கழலினை உடையவரான மறவர்கள், மதுவினை உண்டவராக மனங்களித்து ஆடி மகிழ்வது, உண்டாட்டு ஆகும். தொடுதல்-கட்டுதல். இம் மட்டுஉண்டல் வெற்றிக் களிப்பினாலே நிகழ்வதாகும். உண்டு ஆடிக் களித்தலால், 'உண்டாட்டு' என்றனர்.*

**இளிகொண்ட தீஞ்சொல் இளமா எயிற்றி**
**களிகொண்ட நோக்கம் கவற்றத் - தெளிகொண்ட**
**வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றார்மேற்**
**செங்கண் மறவர் சினம்!** 15

பகைவர் மேற் சிவந்த கண்களை உடையவரான மறவரது சினமெல்லாம், இளி என்னும் இசையினது இனிமையைக் கொண்ட இனிய சொல்லினை யுடையவளும், இளமையும் பெருமையும் உடையவளுமான எயிற்றியினது, காமக்களிப்பினை உட்கொண்ட பார்வையானது வருத்தவும், தெளிவு கொண்ட வெவ்விய கள்ளானது மிகுதியாகவும், கெடுவதாகும் போலும்!

இந்த உண்டாட்டு நிகழ்ச்சியின் நடைமுறையினை 'நறவும் தொடுமின்' என்னும் புறநானூற்றுப் பாட்டு (262) நன்கு எடுத்துக் கூறும். கவற்ற-வருத்த. விளிவது-கெடுவது. தம் போர்வெம்மை யினை மறந்து உண்டாட்டு அயர்பவரைக் கண்டோர், வியந்து இவ்வாறு உரைத்தனர்.

## 14. கொடை

*ஈண்டிய நிரை ஒழிவின்றி*
***வேண்டி யோர்க்கு விரும்பி வீசின்று.***

தம்முடைய பகுதியாகத் திரண்டுள்ள ஆநிரையை, ஒன்றும் தப்பாதபடியாகத், தம்மை வந்து வேண்டி நின்றோருக்குத், தலைவர்கள் விருப்பத்துடன் கொடுப்பது, கொடை ஆகும்.

'ஒழிவின்றி' என்றது, ஒன்றையும் தமக்கென வைத்துக் கொள்ளாதபடி என்பதாம். வேண்டியோர் - கேட்டு நின்றோர், வீசின்று' என்பது, கொடுத்தலின் அளவுகடந்த பெருக்கத்தைக் குறித்துச் சொல்லப்பட்டதாம்.

**அங்கட் கிணையன் துடியன் விறலிபாண்**
**வெங்கட்கு வீசும் விலையாகும் - செங்கட்**
**செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி**
**வரிச்சிலையால் தந்த வளம்.** 16

சிவந்த கண்ணினராகப் போர்க்குப் பின்னிடாத மன்னர், போர் முனையிலே சீற்றங்கொண்டு, வரிதலையுடைய வில்லினது ஆண்மையாலே கொணர்ந்த ஆநிரையாகிய வளமெல்லாம், அழகிய கண்ணாற் சிறந்த கிணைப்பறையினை உடையவனும், துடிப்பறையினைக் கொட்டுபவனும், விறலியும், பாண்மகனும், தாம் உண்ட வெவ்விய கள்ளுக்கு வீசியெறியும் விலையாக அமையும்.

'வெங்கட்கு வீசும் விலையாகும் வளம்' என்றலால், அவர் கொடையாகப் பெற்ற நிரையினது பெருக்கம் காட்டப்பெற்றது.

## 15. புலனறி சிறப்பு

*வெம் முனைநிலை உணர்த்தி யோர்க்குத்*
*தம் மினுமிகச் சிறப்பீந் தன்று.*

*வெவ்விய வேற்றுப் புலத்தினது தன்மையினைச் சென்றறிந்து வந்து அறிவித்தவரான ஒற்றருக்குத் தம்முடைய பங்கினும் காட்டிற் மிகுதியான சிறப்புக் கொடுப்பது, புலன் அறி சிறப்பு ஆகும்.*

*ஒற்றி அறிந்து வந்து அறிவித்த அந்தச் செவ்வியைக் கருதிச் செய்யப்படுவதனால், புலனறி சிறப்பு எனப்பட்டது.*

**இறுமுறை எண்ணா திரவும் பகலும்**
**செறுமுனையுட் சென்றறிந்து வந்தார் - பெறுமுறையின்**
**அட்டுக் கனலும் அயில்வேலோய் ஒன்றிரண்டு**
**இட்டுக் கொடுத்தல் இயல்பு.** 17

*பகைவரைக் கொன்று, மேலும் சினத்தாற் கொதிப்புறுகின்ற கூரிய வேலினைக் கொண்டுள்ளோனாகிய தலைவனே! தாம் சாதலும் நேருமென்பதனை எண்ணாதவராக, இரவும், பகலும் பகைவரது போர்முனையுள் அவரறியாதவாறு சென்று, அவரது நிலையினை அறிந்து வந்தவர்கள் இவ்வொற்றர்கள். ஆதலின், அனைவரும் பெறுகின்ற பங்கினது முறைமையின் மேலாக இவருக்கு ஒன்றோ இரண்டோ ஏற்றிக் கொடுத்தலே இயல்பு உடையதாம்.*

*'ஒற்றரின் உளவறிந்து வந்து கூறிய தன்மையினாலேயே வெற்றி வாய்ப்பது எளிதாகுமாதலின், அவருக்குப் பிறரினும் அதிகப்படியாக வழங்குவது இயல்பு' என்பது இதனிடத்து உரைக்கப்பட்டது. இதனைப் பாதீட்டினுள் கொள்வர் தொல்காப்பியர். வேய்த்துறையினை முற்றிய ஒற்றருக்குச் செய்யும் சிறப்பு இது.*

## 16. பிள்ளை வழக்கு

*பொய்யாது புள்மொழிந் தார்க்கு*
*வையாது வழக்குரைத் தன்று.*

*நிமித்தம் பொய்யாகிப் போகாதவாறு அறிந்து சொன்னவர் களுக்குப், பாக்கி வையாது கொடுக்கின்ற முறைமையினைச் சொல்வது, பிள்ளை வழக்கு ஆகும்.*

*'பிள்ளை' என்பது காரி என்னும் பறவை, அதன் குரலினது தன்மையினை அறிந்து உரைப்பது 'புள் மொழிதல்' ஆகும். 'கரும்பிள்ளை நிமித்தம் கூறியார்க்கு விதந்து கொடுத்தல்' என்று இலக்கண விளக்கமும் இதனைக் கூறும்.*

**புல்லார் நிரைகருதி யாஞ்செல்லப் புள்நலம்**
**பல்லார் அறியப் பகர்ந்தார்க்குச் - சொல்லாற்**
**கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையான் நான்கு**
**குடஞ்சுட் டினத்தாற் கொடு.** 18

*பகைவரது ஆநிரையைக் கவர்ந்து வருதலைக் கருதி யாம் போக, அதற்கேற்ற புள் நிமித்தத்தினது நன்மையினைப் பலரும் அறியும்படியாக உணர்ந்து சொன்னவர்களுக்கு, மொழியாற் பெறுதற்குரிய முறைமை இதுவென்று கருதுதல் வேண்டா; ஒன்றொரு குடம்பால் கறக்கும் மிக்க மடியினையுடையவான நான்கு பசுக்களை, இனங்கள் தோறும் ஒவ்வொன்றாகக் கொடுப்பாயாக.*

*கடம் சுட்டல் - மொழியாற் பெறுமுறை இதுவெனச் சுட்டிக் கூறுதல். கடுஞ்சுரை -பெரிதான மடி, 'இனத்தால்' என்றது. காரான், சேதான் என வகைக்கு ஒன்று என்பதற்கு. குடஞ்சுட்டு ஆன்- குடப்பால் சுரந்து தரும் பசு.*

## 17. துடி நிலை

***தொடுகழன் மறவர் தொல்குடி மரபிற்***
***படுகழன் இமிழ்துடிப் பண்புரைத் தன்று.***

*கட்டிய வீரக் கழலினை உடையோரான மறவர்கள், பழங்குடி முறைமையினாலே மிக்க கண்ணினை உடையதாய் முழங்குகின்ற, துடியினை முழக்குமவனின் குணத்தைப் பாராட்டி உரைப்பது, துடிநிலை ஆகும்.*

*'தொடுகழன் மறவர்' என மறவரது வீரச்செறிவையும், 'தொல்குடி மரபிற் படுகண் இமிழ் துடி' எனத் துடியினது வழிவழியாக வருகின்ற இசைத்துறை நலத்தையும் குறித்தனர். 'தொல்குடி'யினை மறவரொடும் சேர்த்துத் 'தொடுகழன் மறவன் தொல்குடி' எனவும் உரைப்பர். படை நடத்தற்குத் துடியொலியின் தகைமை கிளர்ச்சியும் செம்மையும் தருவதாதலின். அதனைத் தொல்குடி மரபினின்றும் வழுவாது முழக்கிய துடியனைப், போர் வெற்றிக்குக் காரணமாயவருள் ஒருவனாகக் கருதிப் பாராட்டிச், சிறப்புச் செய்வது இது.*

**முந்தை முதல்வர் துடியர் இவன்முதல்வர்**
**எந்தைக்குத் தந்தை யிவனெனக்கு - வந்த**
**குடியொடு கோடா மரபினாற் கின்னும்**
**வடியுறு தீந்தேறல் வாக்கு.** 19

*என்னுடைய முற்பட்ட மூதாதையருக்கு இவனுடைய மூதாதையர் துடிகொட்டுவோரா யிருந்தனர்; என் தந்தைக்கு இவன் தந்தையும்,*

எனக்கு இவனுமாக அமைந்தனர். இவ்வாறாக, என் குடியோடும் தொடர்ந்து பணிபுரிந்து வந்த பிறழாத மரபினையுடையவனாகிய இவனுக்கு, வடித்தலுற்ற இனிய மதுத் தெளிவினை இன்னமும் வார்ப்பாயாக.

இஃது, உண்டாட்டின்போது துடியனை வியந்தது. 'குடியொடு கோடா மரபு' - வழிவழி இருகுடியினரும் ஒன்று பட்டுப் பிறழ்தலின்றி ஒழுகிவருகின்ற முறைமை.

## 18. கொற்றவை நிலை

*ஒளியின் நீங்கா விறற் படையோள்*
*அளியின் நீங்கா அருள் உரைத்தன்று.*

விளக்கத்தினின்றும் நீங்காத வெற்றியினாலே மேம்பட்ட படையினை உடையவளான கொற்றவையானது, இரக்கத் தினின்றும் நீங்காததான அருளினை உரைத்துப் போற்றுவது கொற்றவை நிலை ஆகும். 'ஒளியின் நீங்கா விறற்படை' என்றது, அவளுடைய சூலப்படையினை, அவள் அத் தகையவள் எனினும், மறவருக்கு 'அளியின் நீங்கா அருள்சுரத்தலையும்' உடையவள். இவளை வழிபடுகிற முறைமையினைச் சிலப்பதிகாரத்து வேட்டுவவரி விரிவாகக் கூறும்.

**ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்**
**கூளி மலிபடைக் கொற்றவை - மீளி**
**அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்**
**முரண்முருங்கத் தான்முந் துறும்.** 20

சிங்கவுருவம் கொண்டு சிறப்புற்ற அழகிய கொடியினையும், பசுங்கிளியினையும், பாய்கின்ற கலைமானாகிய ஊர்தியினையும், பேய்களால் மிகுந்துள்ள படைகளையும் கொண்டவள் கொற்றவையாள். அவள், நம் தலைவன் பகைவரது அரண் அழியுமாறு சென்று ஆக்களைக் கவர்ந்து கொள்ளுதலைக் கருதினால், அப்பகைவரின் மாறுபாடு கெடும்படியாக, அவனுக்கு முற்படத், தான் அவ்விடத்தே எழுந்தருளி அருள் புரிவாள்.

ஆளி-சிங்கம். பாய்கலை-பாய்கின்ற கலைமான். 'அவள் முந்துறும்' என்பது, அவளுடைய அருளால் பகைவர்களது முரண் ஒடுங்கி, வெல்வதற்கு எளிதாக அமைதல் வாய்க்கும் என்பதாம். முருங்க- அழிய. மீளி-தலைவன். கூளி-பேய்.

## 19. வெறியாட்டு

*வாலிழையோர் வினை முடிய*
*வேலனொடு வெறியா டின்று.*

*அழகிய ஆபரணங்களையுடைய மறக்குடி மகளிர், தம் கணவன்மார் மேற்கொண்ட தொழிலானது நன்றாகி முடிவெய்துமாறு, வேன்மகனாகிய பூசாரியோடுங் கூடி வெறியாடலை நிகழ்த்துவது, வெறியாட்டு ஆகும். இதனை வள்ளிக்கூத்து எனவும் உரைப்பர்.*

**காணில் அரனும் களிக்கும் கழன்மறவன்**
**பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண் - வாணுதல்**
**தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப**
**வேன்முருகற் காடும் வெறி.** 21

*வீரக்கழல் அணிந்தோனாகிய மறவனுடைய, ஆபரணம் விளங்கும், மென்மையான முலைகளையும், செவ்வரி பரந்த கண்களையும், ஒளிகொண்ட நெற்றியினையும் உடைய மனைவியானவள், தான், முருகக் கடவுளின் கோலத்தைத் தன் உடலிடத்தே நிறுத்தியவளாக, மாலைகள் பக்கத்தே அசையும் படியாக, வேற்படை யுடையோனாகிய முருகப்பிரானுக்கு ஆடாநின்ற வள்ளிக்கூத்தினைக் காண்பானாயின், கூத்தப் பிரானாகிய அரனும் களிப்பினை அடைவானே!*

*முருகு மெய்ந்நிறீஇ - முருகப்பிரானை உடலிடத்தே நிலை பெறுத்தி. 'வேல் முருகற்கு ஆடும் வெறி நோக்கி அரனும் களிக்கும்' என்றது. அழித்தற் கடவுளான அவன் பகைப் புலத்தார் அழியக் கருணை செய்வான் என்றதாம். பொதுவாக வேலன் ஆடுதலே பெரும்பான்மை வழக்கமாம்; சிறுபான்மை சிறப்பறியா மகளிர் ஆடுதலும் நிகழும்; அவ் வகையுள் ஒன்று இது.*

*வேலனாடுதல் அகத்திணைக்கே சிறப்பு; மேலும், அது வேத்தியலின் வழுவித் தன்னுறு தொழிலாகப் புறத்திணைக் கண் அமைதலின், வழுவெனக் கொள்வர் தொல்காப்பியர்.*

## தொகுத்து உரைத்தல்

*இவ்வாறு சொல்லப்பட்ட முறைமையானே, வெட்சித் திணையானது, வெட்சியரவம் முதலாகிய பத்தொன்பது துறைகளொடும் பொருந்தி நிகழ்தல் இயல்பாம் என்பது விளங்கும். அவை, படையியங்கும் அரவம் நிகழ்தலும், நன்னிமித்தமாகிய விரிச்சி கேட்டலும், கானங் கடந்து செல்லும் செலவும், ஒற்றரால் பகையரணின் வலியை ஒற்றியறியும் வேயும், பகையரணை வளைத்துக் கோடலாகிய புறத்திறையும், பகையரணிற் காவலன் மறவரை அழித்தலாகிய ஊர்கொலையும், பகைவரது ஆநிரைகளைக் கைக்கொள்ளலாகிய ஆகோளும், கொண்டு செல்லுமிடத்துப் பின்தொடர்ந்து வந்தாரான*

பகைவீரரை வென்றழித்தலாகிய பூசன் மாற்றும், ஆநிரைகளைச் சுரத்திடத்தே நடத்திக் கொண்டு செல்லலாகிய சுரத்து உய்த்தலும், ஊரினை அணுகிய விடத்துச் சுற்றத்தார் மகிழ்தலான தலைத்தோற்றமும், ஊர்மன்றிடத்தே நிரைகளைக் கொண்டு நிறுத்தலாகிய தந்து நிறையும், அனைவருக்கும் பகுத்துக் கோடலாகிய பாதீடும், கள்ளுண்டு ஆடிமகிழலாகிய உண்டாட்டும், வேண்டியார்க்கு வழங்கிய மகிழலாகிய கொடையும், பகைவரை ஒற்றி அறிந்து உரைத்தவரைப் பாராட்டும் புலனறி சிறப்பும், நன்னிமித்தம் ஓர்ந்துரைத்தாரைச் சிறப்பிக்கும் பிள்ளை வழக்கும், துடியனின் தொண்டினை வியக்கும் துடிநிலையும், கொற்றவை அருளினை வேண்டும் கொற்றவை நிலையும், மறவர் மகளிரது வேலனாடுதலாகிய வெறியாட்டும் என்பவையாம்.

✡✡✡

## 2. கரந்தைப் படலம்

*(கரந்தை என்பது வெட்சி மறவரால் கவர்ந்து போகப் பெற்ற நிரையினைச் சென்று மீட்டுவருதலாகிய மறச்செயலினைக் குறிப்பதாகும். நிரைகோடலாகிய வெட்சியையும், நிரை மீட்டலாகிய இதனையும் ஒன்றாக வெட்சியுட் கூறுவது தொல்காப்பியப் புறத்திணை இயல். இந்நூல், நிறை மீட்டலாகிய கரந்தையினை வேறாக உரைக்கின்றது. அந்தப் பகுதி இது)*

**சுதமலி கரந்தை கரந்தை அரவம்**
**அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்**
**புண்ணொடு வருதல் போர்க்களத்து ஒழிதல்**
**ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே**
**பிள்ளை யாட்டொடு கையறு நிலையே**
**நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி**
**வேத்தியன் மலிபே மிகுகுடி நிலைஎன**
**அருங்கலை உணர்ந்தோர் அவைபதி னான்கும்**
**கரந்தையும் கரந்தைத் துறையும் என்ப.** (2)

*வெட்சியார் ஆக்கவர்ந்து போனதனால் எழுகின்ற சினத்தின் மிகுதியினாலே மேற்கொள்ளப்படுகின்ற கரந்தைத் திணையானது, கரந்தை அரவம் முதலாகக் கூறப்பட்டுள்ள பதின்மூன்று துறைகளான் இயல்வதாம். அருமையுடைய போர்க் கலையினை உணர்ந்தோர்களான சான்றோர்கள் இவ்வாறு கூறுவார்கள்.*

*கரந்தைத் திணை ஒன்றும், துறை பதின்மூன்றும் ஆகப் பதினான்கு ஆம். இதனையே, 'அவை பதினான்கும் கரந்தையும் கரந்தைத் துறையும் என்ப' என்றனர்.*

### கரந்தைத் திணையின் விளக்கம்

***மலைத்து எழுந்தோர் மறம் சாயத்***
***தலைக்கொண்ட நிரை பெயர்த்தன்று.***

*தம்மொடு மாறுபட்டுப் போர்க்கு எழுந்து வந்தவரான வெட்சி மறவரின் போராற்றல் கெடும்படியாக, அவரை வென்று, அவர் கைப்பற்றிக் கொண்டு போகிற ஆநிரையை மீட்பதனைக் குறிப்பது, கரந்தைத் திணையாகும்.*

*நிரை மீட்டற்கு எழுகின்ற இக் கரந்தை மறவர், கொப்பு நிறைந்த கரந்தையினைத் தலையிலே சூடிச்செல்வது மரபாகலின், இத்திணை, 'கரந்தை' எனப் பெற்றது.*

**அழுங்கல்நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்**
**விழுங்கியபின் வீடுகொண் டற்றால் - செழுங்குடிகள்**
**தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கோடல்**
**நேரார்கைக் கொண்ட நிரை.** 22

*மறத்தினாலே செழுமை யுற்றவரான மறக்குடி மக்கள், கொத்தாகப் பொருந்திய கரந்தைப் பூவைத் தம்முடைய தலையிலே சூடிப் பகைவர்கள் வந்து கைப்பற்றிச் சென்ற தம் நாட்டு ஆநிரையைத் தாம் மீட்டுங் கைப்பற்றி வருதலாகிய செயலானது. ஆரவாரமுடைய கடலினாற் சூழப்பெற்றிருக்கின்ற இவ்வுலகினிடத்தே, பெறுதற்கரிதான ஒருவரது உயிரினைக் கூற்றமானது விழுங்கியதன் பின்னர், அதனை வென்று, அவ்வுயிரினை மீட்டுக்கொண்டது போல்வதொரு செயற்கரிய தன்மைத்து ஆகும்.*

*கரந்தையாரின் போர்மறத்தினைக் கண்டவர் வியந்து கூறுகின்ற பாங்கிலே அமைந்த வெண்பா இது. 'கூற்றம் ஆருயிரை விழுங்கிய பின் வீடுகொண்டற்றால்' என்பதனால் இச்செயலின் கடுமையினையும், இதனை ஆற்றிமுடிக்கும் வீரரது போர்மறத்தின் திண்மையினையும் நன்கு காட்டினர். இனி, இந்தச் செயல் பலவாறாக நிகழுகின்ற துறைப் பாகுபாடுகளைக் கூறுகின்றனர்.*

## கரந்தைத் திணையின் துறைகள்

### 1. கரந்தை அரவம்

***நிரைகோள் கேட்டுச் செய்தொழில் ஒழிய***
***விரைவனர் குழுஉம் வகையுரைத் தன்று.***

*பகைவர் ஆநிரையைக் கொண்டு சென்றதனைக் கேட்டுத் தாந்தாம் செய்திருந்த தொழில்கள் அனைத்தும் அங்ஙனமே இல்லையாக, தம் நிரையினை மீட்டற் பொருட்டாக விரைகின்றவ ரான மறவர்கள், பாடிப்புறத்தே வந்து ஒன்றுகூடுகின்ற கூறுபாட்டினை உரைப்பது, கரந்தை அரவம் ஆகும்.*

**காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட**
**வேலார் வெருவந்த தோற்றத்தார் - காலன்**
**கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே**
**உளர்ந்தார் நிரைப்பெயர்வும் உண்டு.** 23

*காலிடத்தே நிரைந்து ஆரவாரிக்கும் வீரக்கழலினை உடையவராயும், கொடிய வில்லினை உடையவராயும்,*

கையிடத்தே கொண்ட வேலினராயும், கண்டார் அஞ்சத்தக்க தோற்றத்தினைக் கொண்டவராயும், காலன் சினந்து எழுந்தாற் போன்று விளங்குபவராயும் தடாரிப் பறையின் ஓசையினைக் கேட்டதும் மறக்குடியினர் எழுவராயினர்; ஆகலான், இனிப் பகைவராற் கவர்ந்து போகப்பெற்ற நிரை மீள்கின்றதும் உளதாம்.

'காலன் கிளர்தல் - காலன் உயிர்களைக் கவருதற் பொருட்டாகச் சினத்துடன் எழுதல், அவன் தன் செயலில் தவறாமை உடையனாவதுபோல இவரும் தவறார்; பகைவர் உயிரிழந்து அழிவது உறுதி என்பது இதன் குறிப்பாகும். உளர்தல் - அசைதல்; இது, அலையலையாகத் திரண்டு வருகின்ற மறவரைக் குறித்தது. கூட்ட மிகுதியினால், அவர் அசைந்து வருவாராயினர் என்க. இதனால், போர்க்கு அழைப்பதான கிணைப்பறையினது ஒலியினைக் கேட்டதும் திரண்டு வந்து கூடிய வீரர்களின் பெருக்கம் நன்கு உணரப்படும்.

கிணைப் பறையின் பூசலையும், அதனைத் தொடர்ந்து வந்து கூடிய படைமறவரின் ஆரவாரத்தையும், அவற்றைக் கண்டோர் உரைக்கும், 'நிரைப்பெயர்வும் உண்டு' என்றாற் போன்ற சொற்களையும் கொண்டதாக இத்துறை விளங்கும். இதனைப் 'படையியங்கு அரவம்' என்றே தொல்காப்பியம் கூறும். வெட்சியாரால் தம்முடைய நிரை கொள்ளப்பட்ட காரணத்தால், இக் கரந்தை மறவர், அந்தப் பழியினைத் துடைக்கவேண்டு மென்னும் துடிப்பினாலும், அதனால் மிக்கெழுகின்ற சினத்தினாலும், கடுஞ்சினத்துடன் திரள்பவராவர். இத்துறையினும், பிறவற்றினும், இவ்வாறு வெட்சியார், கரந்தையார் ஆகிய இருவரது நிலைகளையும் பகுத்துக் காண்பது சிறப்பாகும்.

## 2. அதரிடைச் செலவு

*ஆற்றார் ஒழியக் கூற்றெனச் சினைஇப்*
*போற்றார் போகிய நெறியிடை யேகின்று.*

போரிடுதற்கு இயலாதவராகிய நிலையினர் ஊரிடத்தே நிற்கப், பிறரெல்லாம் கூற்றம் என்னுமாறு சினங்கொண்டவராகப், பகைவர்கள் ஆநிரைகளைக் கொண்டு சென்ற அந்த நெறியிடத்தே, அவரைப் பின்பற்றித் தாமும் செல்லுவது, அதரிடைச் செலவு ஆகும்.

போற்றார்-பகைவர். ஆற்றார்-போருக்கு ஆற்றார்; சிறாரும், முதியரும், பிணியுடையோரும் ஆகிய மக்கள். வெட்சியார் தாம் செல்வதற்குரிய வழியினைத் தாமே தேர்ந்து கொள்ளற்கு உரியர்; ஆனாற் கரந்தையாரோ வெட்சியார் மீண்டு சென்ற அந்த

வழியினையே பின்பற்றிப் போதற்கு உரியர். இதனை உரைப்பது, 'போற்றார் போகிய நெறியிடை ஏகின்று' என்பது. இந்த வேறுபாட்டினை அறிதல் வேண்டும். புறத்திணை இயல், 'நிரை மீட்டற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறம் போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டு நன்னிமித்தம் ஓர்தலாகிய விரிச்சியினைச் செலவுக்கு முன்னதாகக் கூறும். இங்கு, அது உரைக்கப்படவில்லை. எனினும், செல்பவர் அதனை அறிந்தே செல்வர் என்பது இயல்பு. அல்லது, வெட்சியாரை விரையப் பின்பற்றிச் சென்று போர் மலைதற்கு உரியவர் கரந்தையா ராதலின் விரிச்சியோர்தலை இவர் கருதுவதிலர் என்பதனால், இங்ஙனம் அதனை விடுத்துச் செலவினையே உரைப்பாராயினர் எனவும் கருதலாம்.

**சங்கும் கருங்கோடும் தாழ்பீலிப் பல்லியமும்**
**எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப - வெங்கல்**
**அழற்சுரம் தாம்படர்ந்தார் ஆன்சுவட்டின் மேலே**
**நிழற்கதிர்வேல் மின்ன நிரைத்து.** 24

எவ்விடத்தும், சங்கங்களும், கரிய கொம்புகளும், தொங்கும் மயிற்பீலிகளையுடைய பலவகை வாச்சியங்களும், பறையோசை யுடனே கூடியவையாக எழுந்து ஆரவாரிக்க, வெவ்விய கற்களையுடைய அழல்பரக்கும் காட்டினூடே, நிரைபோன காற்சுவட்டின் மேலாக நிழல்விடுகின்ற சுடர்வேல் ஒளிரும்படியாக ஒழுங்குபடுத்தியவாறு, கரந்தை மறவர்கள், தாமும் சென்றனர்.

பீலி-மயிற்பீலி. இயம்-வாச்சியம். 'வெங்கல் அழற் சுரம்'- வெவ்விய கற்கள் அழலினைக் கக்கிக்கொண்டிருக்கின்ற கடுஞ்சுரமும் ஆம். 'நிரைத்து' என்பது. வீரர் வரிசையாகச் சென்ற ஒழுங்கினைக் குறிப்பதாம். படைமறவர் அந்நாளினும் போர்ப்பறை முதலாய முழக்குடனேயே போர்மேற் செல்வர் என்பது இதனாற் புலனாகும். கோடு -கொம்பு.

## 3. போர் மலைதல்

*வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ*
*உட்குவரத் தாக்கி உளர்செருப் புரிந்தன்று.*

வெட்சி மறவராகிய ஆநிரையினைக் கைக்கொண்டு செல்லுகின்றவர்களைக் கண்ணுற்று, அவரை வளைத்துக் கொண்டவராக, அவர்கட்கு அச்சம் ஏற்படுமாறு தாக்குதலை நிகழ்த்திக், கரந்தை மறவர்கள், அவருடன் எடுப்பும் சாய்ப்புமான போரிடுதலைக் குறிப்பது. இந்தப் போர்மலைதல் என்னும் துறையாகும்.

'உளர்செரு' என்பது, கரந்தை மறவர்கள், மேற்சென்று தாக்கியும், தம்மைப் பகைவரது தாக்குதலினின்றும் தடுத்தும், சுற்றிச் சுழன்று போரிடுதல் ஆகும். 'வளைஇ, தாக்கி, செருப்புரிந்தன்று' என்பன, கண்ணுற்றதனைத் தொடர்ந்த முறையான செயல்களாம், வெட்சியிற் போன்று ஒற்றியறிதலும் புறத்திறையும் ஆகியன இங்குக் கூறப்படவில்லை. ஆனால், தொல்காப்பியம், 'படைகெட ஒற்றின் ஆகிய வேய்' என, நிரைமீட்டற்கு எழுந்தோர் பகைப்புலத்து ஒற்றர் உணராமற் சென்று ஒற்றிய ஒற்றுவகையின் வந்து ஓதிய குறளைச் சொல்லையும், 'வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை' எனக், கரந்தையார் தமது நிரைப்புறத்துச் சென்று விரைவொழிந்து இருக்கும் இருக்கையினையும் கூறுகின்றது.

**புலிக்கணமும் சீயமும் போர்க்களிறும் போல்வார்**
**வலிச்சினமும் மானமும் தேசும் - ஒலிக்கும்**
**அருமுனை வெஞ்சுரத்து ஆன்பூசற்கு ஓடிச்**
**செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து.** 25

கரந்தை மறவர்கள் தம் வளமிக்க இனத்தாற் புலிக்கூட்டத்தை ஒப்பவர்கள்; மானத்தால் சிங்கக் கூட்டத்தை நிகர்த்தவர்கள்; பெருமையால் போர்க்களிறுகளின் திரளைப் போன்றவர்கள். இத்தகையவர்கள், ஆரவாரிக்கின்ற, கிட்டுதற்கு அரிய இடமான வெஞ்சுரத்தினிடத்தே, ஆநிரை மீட்டலாகிய போரினைக் குறித்தவராகக் கடுகிச் சென்று, சினத்தால் மிகுந்தவராகிப் பகைவராகிய வெட்சிமறவருடன் போரிட்டனர்.

தேசு-பெருமை. சீயம்-சிங்கம்.

## 4. புண்ணொடு வருதல்

*மண்ணொடு புகழ் நிறீஇப்*
*புண்ணொடு தான் வந்தன்று.*

நிலத்தோடு அது உளதாகுங் காலம் வரையும் தம் புகழும் நிலைபெறுமாறு நிற்கச் செய்தவராகத், தாம் போரிற் பெற்ற விழுப்புண்களொடு, கரந்தை மறவர், தம்முடைய ஊருக்குத் திரும்பி வருதல், 'புண்ணொடு வருதல்' ஆகும்.

போரிற் புண்பட்டு வருதல் வெட்சியார்க்கும் கரந்தை யார்க்கும் சிறப்பாயினும், கரந்தையாரின் செயலது சிறப்புப் பற்றி அவர்க்கு விதந்து உரைக்கப்பட்டது. இந்தத் துறையினால், புண்பட்டு வருபவரை மருந்திட்டு நலமாக்குவதற்கான ஏற்பாடு களையும் தமிழகப் படையினர் பண்டே கொண்டிருந்தமை உணரப்படும்.

**வெங்குருதி மல்க விழுப்புண் உகுதொறூஉம்**
**இங்குலிகம் சோரும் வரையேய்க்கும் - பைங்கண்**
**இனம்போக்கி நின்றார் இகல்வாட்டி வேந்தன்**
**மனம்போல வந்த மகன். 26**

*பசிய கண்களையுடைய ஆனினத்தை முன்னே செலுத்தியவராக நின்ற, வெட்சியாரது மாறுபாட்டினைத், தன்னுடைய வேந்தனது மனவிருப்பிற்கு ஏற்பக் கெடுத்து, அவரை வெற்றி கொண்டு, தன்னூர்க்கு மீண்டு வந்தோனாகிய வீரமறவனானவன், முகத்தினும் மார்பினும் பெற்ற விழுப்புண்களினின்றும் வெவ்விய குருதியானது மிகுதியாகச் சொரிந்து கொண்டிருக்க விளங்கிய தன்மை, சிவந்த சாதிலிங்கக் குழம்பினைச் சொரிந்திருக்கின்ற மலையினைப் போன்றதாக இருக்கும்!*

*இங்குலிகம்-சாதிலிங்கம்; இதன் நிறம் குருதிச் சிவப்பு. 'வேந்தன் மனம் போல' என்றது, வெற்றியை எதிர்பார்த்திருக்கின்ற மனநிலையினை.*

## 5. போர்க்களத்து ஒழிதல்

***படைக்கோடா விறன் மறவரைக்***
***கடைக் கொண்டு களத்தொழிந் தன்று.***

*பகைவரின் படைஎழுச்சிக்கு எதிராகப் புறங்காட்டி ஓடுதலில்லாத, வெற்றிச் சிறப்பினையுடைய மறவர்களை, இறுதிவரைக்கும் எதிர்நின்று அழித்துக் கரந்தை மறவன், தானும் போர்க்களத்திடையே அழிவினை அடைவது, 'போர்க்களத்து ஒழிதல்' ஆகும்.*

*'களத்து ஒழிதல்' தானும், அவன், படைக்கோடா விறன் மறவரைக் கடைக்கொண்டு வீழ்ந்ததனாற், போற்றற்குரிய செயலாயிற்று. 'படைக் கோடா விறன் மறவர்' என்பது கரந்தையாரைக் குறிப்பதாயின், 'படைக்கு எதிரே புறமிட்டு ஓடாத இயல்புடைய வெற்றியாளரான மறவரைக் கூட்டிச் சென்று கரந்தையாடிய தலைவன், தான் போர்க்களத்தே பட்டது' என உரைக்கவேண்டும். கடைக்கொண்டு - கூட்டி.*

**உரைப்பின் அதுவியப்போ ஒன்னார்கைக் கொண்ட**
**நிரைப்பின் நெடுந்தகை சென்றான் - புரைப்பின்று**
**உளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கவரக்**
**களப்பட்டான் தோன்றான் கரந்து. 27**

*பகைவர் கைப்பற்றிப் போன நிரையினது பின்னாக மேம்பாட்டினையுடைய வீரமறவன் சென்றான். ஒப்பிலாதது எனக் கருதப்பட்ட தன் உடலிடமெல்லாம் பகைவரது ஒள்ளிய*

வாள்கள் கொள்ளை கொள்ளத்தான் களத்திலேயே பட்டும் வீழ்ந்தான். அவன் களத்தினின்றும் ஒளித்துச் சென்று, இங்கு வந்து மீளவும் தோன்றமாட்டான்' என்று கூறினால், அதுதான் வியப்பிற்கு உரியதாமோ?

நிரை மீட்டு வந்தவர், தம்முள் காணாதுபோன வீரன் ஒருவனைக் குறித்துச் சொல்லியது இது. 'புரைப்பின்று உளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கவர' என்றதனால், அவனுடல் அடையாளந் தோன்றாவாறு சிதைக்கப்பட்டுப் போயினதென்பது விளங்கும்.

## 6. ஆளெறி பிள்ளை

*வருவாரை எதிர் விலக்கி*
*ஒருதான் ஆகி ஆள்எறிந்தன்று.*

பகைவரது போர்வெறியின் எதிரே நிற்பதற்கு ஆற்றாதவராகி ஓடிவருபவரான கரந்தை மறவரை, எதிர் நின்று தடுத்து விலகிப் போகச் செய்து, தான் ஒருவனேயாகப் பகைவரிடைப் புகுந்து, பகைவீரரைக் கொன்றழிக்கும் வீரனது ஆண்மை, 'ஆள் எறி பிள்ளை' ஆகும்.

பிறர் உயிர்க்கு அஞ்சியவராக ஓடி வருகிறபோது இவன் மட்டும் அஞ்சானாகிச் சென்று பகைவரை வெட்டி வீழ்த்திய ஆண்மையின் சிறப்பினைக் குறிக்கவே 'பிள்ளை' என்றனர். அவனே 'மகன்' எனச் சிறப்பாகப் போற்றற்கு உரிய புகழினன் என்பது கருத்து. தன் முடிபினைக் கருதாது செயற்பட்ட பிள்ளைமைத் தன்மையன் அவன் என்பதும் விளங்கும்.

**பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க ஆளெறிந்து**
**கொள்ளைகொள் ஆயம் தலைக்கொண்டார் - எள்ளிப்**
**பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்**
**ஒருதனியே நின்றான் உளன்.** 28

பகைவராலே கொள்ளை கொள்ளப்பட்டுப் போயின ஆநிரையினை அடைந்த கரந்தை மறவர்கள், அவருடன் போரிட்டு, வலியழிந்தவராகிக் களத்தினின்றும் மீண்டு போகவும், அழகிய வீரக்கழலினனாகிய ஒருவன் மட்டும், தான் மீண்டு போகானாகினான். போகும் வீரரின் செயலினை இகழ்ந்துரைத் தவனாக, மேல் வருவதை அறியாது செயற்படுகின்ற சிறுபிள்ளையினைப் போலத், தான் ஒற்றைத் தனியனாகவே களத்திடை நின்று, வீழ்ந்த பகைவரது பிணங்கள் மிகும்படியாக, அவர்களை வெட்டி வீழ்த்தினான். அதனால், அவன், யாவர் உளத்தும் உளனாகிய ஒருவனுமாயினான்.

'ஆள் எறி பிள்ளை'- பகையாள்களை வெட்டி வீழ்த்திய விளைவறியாத பிள்ளைமைத் தன்மை. இது, அவனும் பகைவரால் வெட்டி வீழ்த்தப்படுவான் என்பது குறித்துக் கூறப்பட்டது.

## 7. பிள்ளைத் தெளிவு

***கண் மகிழ்ந்து துடிவிம்மப்***
***புண் மகிழ்ந்து புகன்றா டின்று.***

துடியினது கண் மகிழ்வோடும் முழங்காநிற்பத், தன் விழுப்புண்ணினை நோக்கி மகிழ்ந்தானாகக், கரந்தை மறவன் விருப்புடன் கூத்தாடி மகிழ்வது, 'பிள்ளைத் தெளிவு' ஆகும்.

**மேவார் உயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்**
**பூவாள் உறைகழியாப் போர்க்களத்து - ஓவான்**
**துடியிரட்டி விம்மத் தொடுகழலார் முன்னின்று**
**அடியிரட்டித் திட்டாடும் ஆட்டு.** 29

பகைவரது உயிர் உலரும்படியாக, அவர்தம் தலையினை அறுத்து முண்டமாக்கிய பிள்ளைத் தன்மையினைக் கொண்ட கரந்தை மறவன், போர்க் களத்திடத்தே, பொலிவுடைய தனது வாளினை உறையினின்றும் கழித்தவன், அதனின்றும் நீங்காதே, துடிப்பறையின் ஆர்ப்பொலி மிகத், தொடுத்த வீரக்கழலினை யுடைய ஏனை மறவரினும் முன்னாக நின்றானாக, இட்ட அடியின்மேல் மீண்டும் அடியிட்டவனாக நின்று, அவ்விடத்தே கூத்தும் ஆடினன்.

கரந்தை மறவர், வெட்சியாரை வெற்றிகொண்டு நிரை மீட்டுத் தம்முடைய நாடு நோக்கி மீண்டு கொண்டிருக்க, களத்திலே வாளாற்றல் மிகச்செய்த வீரன் ஒருவன், தானும் மீள எண்ணானாகிய தன்மையுடன், அவ்விடத்தேயே நின்று, அடியிரட்டித்து இட்டு வெற்றிக்கூத்தாடி நின்ற நிலையினை வியந்தது இது. 'தொடுகழலார் முன்' என்றது, வெற்றி பெற்றவராகிய கரந்தை மறவரின் முன்பாக என்பதாம். போர் முடிந்தும் களத்தினை நீங்க நினையாத அவனது போர்க்குணத்தினை வியந்து உரைப்பதும் இது. மேவார்- பொருந்தாதவர்; பகைவர். மேன் முடித்தல் - மேற்பகுதியான தலையினை அறுத்தல். 'ஆடும் ஆட்டு' என்பது, அவன் தான் பெற்ற 'விழுப்புண்ணுக்கு உவந்து ஆடியதாகும்.

## 8. பிள்ளையாட்டு

***கூடலர் குடர் மாலை சூட்டி***
***வேல்திரித்து விரும்பி யாடின்று.***

*பகைவருடைய குடரை மாலையாகச் சூட்டிக் கொண்டு, வேலினைச் சுழற்றி, விருப்புடன் ஆடி மகிழ்வது, பிள்ளையாட்டு ஆகும்.*

**மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து**
**கூட்டிய எஃகங் குடர்மாலை-சூட்டியபின்**
**மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட**
**வேறிரிய விம்மும் துடி.** 30

*பகைவரை மாளப் பண்ணின பிள்ளைத் தன்மையினை உடையவன், வெட்சி மறவரது மார்பினைப் பிளந்து, மீளப் பறித்த தன் வேலினை அவரது குடர் மாலையினாலே சுற்றிக் கொண்ட பின்னர், பகைவீரர் அஞ்சி ஓடும்படியாகச் சீற்றங்கொண்டு ஆடுவானாகத், தன் கையினிற் கொண்ட வேலானது திரும்புமாறு அதனைச் சுழற்றி நிற்க, அதனைக் கண்டதும் கரந்தையாரது துடிப்பறை முழக்கமும் மிக்கெழுந்தது.*

*'வேல் திரியத் துடி விம்மும்' என்றது, மீண்டும் மீண்டும் அவன் பகைவரது குடலைப் பிடுங்கி மாலையாகச் சூட்டித் தன் வாளினைத் திருப்பித் திருப்பிக் குடரைக் கிழிப்பவனாக இருந்தனன் என்பதாம். கூட்டிய-பறித்துக் கொண்ட. எஃகம்-வேல்.*

## 9. கையறு நிலை

***வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு***
***கருவி மாக்கள் கையறவு உரைத்தன்று.***

*இசைக் கருவியினைக் கொண்ட மாக்கள், அஞ்சத் தகும் வாட்போரினிடத்தே வீழ்ந்துபட்ட மறவனைக் கண்டு, அவன் பட்ட படியைச் சொல்லுவது, கையறு நிலை ஆகும்.*

**நாப்புலவர் சொன்மாலை நண்ணார் படையுழக்கித்**
**தாப்புலி யொப்பத் தலைக்கொண்டான் - பூப்புனையும்**
**நற்குலத்துள் தோன்றி நல்லிசையாழ்த் தொல்புலவீர்**
**கற்கொலோ சோர்ந்திலவெங் கண்.** 31

*பொற்றாமரைப் பூவினைச் சூடுகின்ற நல்ல பாணர்தம் குலத்திலே பிறந்த, நல்ல இசைத்திறனை உடைய, யாழாற் சிறந்த பழைமையான அறிவினை உடையவர்களே! இவனோ, பவைரது படையினைத் துகைத்து, வலிய புலியினைப் போன்று, இறுதியில் தானும் வீழ்ந்துபட்டனன். இதனைக் கண்டும் எம் கண்கள் சோர்ந்தில. எனின், அவை உணர்வற்ற கற்களாமோ?*

*'அவன் போராற்றிய மறத்தைக் கண்டு களித்த கண்கள், அவன் வீழ்ந்ததும் தாமும் வீழ்ந்தில அதனால் இவை கற்களோ' எனக்*

கூறித் துன்புற்று வருந்தினர் பாணர் என்க. நாப்புலவர்-செந்நாப் புலவர். பூ-பொற்றாமரைப் பூ, அரசர்கள் பரிசிலாக அளிப்பது இப் பூ: இதனை உடையார் ஆதலால், 'பூப் புனையும் நற்குலத்துள் தோன்றிய' என்றனர்.

## 10. நெடுமொழி கூறல்

*மன்மேல் பட்ட மதிக்குடை யோற்குத்*
*தன்மேம் பாடு தானெடுத் துரைத்தன்று.*

மன்னருள் மேம்பாடு உடையவனும், நிலவனைய வெண் கொற்றக் குடையினை உடையவனுமாகிய தன்னுடைய அரசனுக்குக், கரந்தை மறவன், தன்னுடைய மேம்பாட்டினைத், தானே எடுத்துரைத்துப் பேசுவது, 'நெடுமொழி கூறல்' ஆகும்.

தற்புகழ்ச்சி தவறு எனினும், இது வேந்தனின் உள்ளத்தே வெற்றியுறுதியினை நிலைபெறுத்துமாதலால் தவறாகாது சிறப்பே ஆயிற்று.

**ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி**
**வாளொடு வைகுவேன் யானாக - நாளும்**
**கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்**
**பிழிமகிழ் உண்பார் பிறர்.** 32

நாள்தொறும் மிக்குப் பெருகுகின்ற மகிழ்வினாலே வெற்றிச் சிறப்பினையும், வீரக் கழலினையும் கொண்டு விளங்குகின்ற, யாம் விரும்பும் மன்னனே! பகை வீரராகிய படைவெள்ளம் பெருகிவருமானால், அதனை விலக்கியவனாக, யான் வாளொடும் போர்முனையினிடத்தே தங்குவேனாக! பிறர் எல்லாம், நின்னால் வழங்கப்படுகின்ற பிழியப்பட்ட கள்ளின் தெளிவினை உண்டவராக, நின்னுடன் பாசறையிடத்தே தங்கி இருப்பாராக!

'யான் ஒருவனாகவே பகைவரது படையினை வென்று வருவேன்' எனக் கூறிய மேம்பாடு இது. வெய்யோய்-விரும்பப்படுபவனே.

## 11. பிள்ளைப் பெயர்ச்சி

*போர் தாங்கிப் புள் விலங்கியோனைத்*
*தார் வேந்தன் தலையளித் தன்று.*

புள்ளினது தீ நிமித்தத்தினையும் விலக்கியவனாகத், தான் சென்று போரிடுதலை மேற்கொண்டு, நிரை மீட்டுவந்த படை மறவனை, வெற்றிமாலையினை உடைய வேந்தன் தண்ணளி செய்வது, பிள்ளைப் பெயர்ச்சி ஆகும்.

*இதனால், கரந்தையார் நிமித்தத்தினைக் கருதுவார் எனினும், சிலசமயம் தீ நிமித்தத்தைப் பாராட்டாது சென்றும் நிரை மீட்டலை மேற்கொள்வர் எனலாம்.*

**பிணங்கமருள் பிள்ளை பெயர்ப்பப் பெயராது**
**அணங்கஞர்செய் தாளெறிதல் நோக்கி - வணங்காச்**
**சிலையளித்த தோளான் சினவிடலைக்கு அன்றே**
**தலையளித்தான் தண்ணடையும் தந்து.** 33

*மாறுபடும் பூசலிடத்தே புள்ளொலி தீ நிமித்தமாக ஒலித்து விலக்கவும், களத்தினின்றும் பெயராது, பகைவரை வருத்தும் துன்பத்தைச் செய்தானாகப், பகைவீரரை ஒருவீரன் வெட்டி வீழ்த்துதலைக் கண்டான் அவன் மன்னன். வளையாத கல்லினை யொத்த தோளினனான அம்மன்னன், அங்ஙனம் போராடிய சினத்தையுடைய இளங் காளைக்கு, அற்றைப் பொழுதிலேயே, மருத நிலம் பலவும் அளித்து வரிசையளித்தும் பாராட்டினான்.*

*'பிள்ளை பெயர்ப்பப் பெயராது ஆளெறிதலால்' பிள்ளைப் பெயர்ச்சி ஆயிற்று. தண்ணடை - மருதநிலம், 'தண்ணடையும்' என்றதால், பிற வரிசைகளும் அளித்தான் என்க.*

## 12. வேத்தியன் மலிவு

*தோள்வலிய வய வேந்தனை*
*வாள்வலி மறவர் சிறப்புரைத் தன்று.*

*தோள்வன்மையாற் சிறந்த மறமன்னனை, வாள்வலிமை யினாற் சிறந்தோரான கரந்தை மறவர்கள், சிறப்புரைத்துப் போற்றுவது, 'வேத்தியன் மலிவு' ஆகும்.*

**அங்கையுள் நெல்லி அதன்பயம் ஆதலாற்**
**கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த் - தங்கிச்**
**செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேல்வாய்**
**உயிர்வழங்கும் வாழ்க்கை உறும்.** 34

*தேன் பிலிற்றும் வெற்றிமாலையினை உடைய நம் மன்னனது குடைநிழலின் கீழாகத் தங்கியிருந்து, பகைமையினைத் தருகின்ற வாட்போரிலே புகுந்து, பகைவரது வேலின் முனையிடத்தே உயிரினைக் கொடுக்கின்றதான இவ் வீரவாழ்க்கையானது, உறுதியினை உடையதாம். அது எவ்வாறெனின், அங்கையுள் உள்ள நெல்லியினது பழம் காணப்படுதல் போல என்க.*

*மறக்குடியினராதலால் களத்தே பட்டு வீழ்தலால் வருகின்ற புகழ்மேம்பாட்டினையே வாழ்க்கை உறுதியாகக் கூறினர். 'நிழற்கீழ்த் தங்கி' என்பதனால், மன்னனது வெற்றிப் பெருமிதத் தினைச் சிறப்பித்தனர். செயிர்- குற்றம்; பகையுணர்வு.*

## 13. குடி நிலை

*மண்திணி ஞாலத்துத் தொன்மையும் மறனும்*
*கொண்டுபிறர் அறியும் குடிவர வுரைத்தன்று.*

*மண்செறிந்த இந்த நிலவுலகினிடத்தே, பழைமையும் தறுகண்மையும் கொண்டு, அவற்றின் சிறப்பாற் பிறர் எல்லாம் அறியும்படியான புகழுடனே விளங்கும் மறக்குடியினது வரலாற்றை உரைப்பது, குடிநிலை ஆகும்.*

**பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்**
**வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்**
**கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு**
**முற்றோன்றி மூத்த குடி.** 35

*பண்டு, இந்த வையகத்தினைக் கவிந்து கொண்ட தெளிந்து ஆரவாரிக்கும் ஊழிக்கடல் வெள்ளமானது விட்டு நீங்கியதாக, அதன்பின் முற்பட மலைதோன்றி மண்ணானது தோன்றாதிருந்த அந்தப் பழங்காலத்திலேயே, எல்லா மக்கள் குடியினும் முற்படத் தோன்றி, வாளாண்மையுடன் முதிர்ச்சிபெற்று வருவது இம்மறவனின் குடியாகும். அதனால் இவன், பொய்மை நீங்க நாடோறும் புகழினை விளைத்துச் சிறப்புறுதல் என்னதான் அதிசயமோ?*

*வேத்தியன் மரபின் பின்வரும் இது, மன்னன் தன்னுடைய மறக்குடி மாண்பினைப் போற்றி உரைப்பதாகும். வெட்சியுள் வரும், 'துடிநிலை'யோடு இதனை ஒத்துக் காண்க. அங்குத் தலைவன் துடியனைப் போற்றுகின்றான்; இங்கு மறவனை மன்னன் போற்றுகின்றான்.*

## தொகுத்து உரைத்தல்

*பகையரசரது படைமறவரால் வெட்சி மேற்கொண்டு கவர்ந்து போகப்பட்ட நிரையினை, அதற்கு உரியரான நாட்டு மறவர்கள், கரந்தை சூடிப் பின்பற்றிச் சென்று போரிட்டு மீட்டுவருவது இந்தக் கரந்தைத் திணையாகும்.*

*இது, பகைவர் நிரைகொண்டு போயதைக் கேட்டு மறவர்கள் திரண்டெழுகின்ற கரந்தை அரவம், அவர் கூற்றெனச் சினந்தாராக வெட்சியார் சென்ற வழியிலே அவரைப் பின்பற்றிச் செல்லுகின்ற அதரிடைச் செலவு, அவரையடைந்து வளைத்துக் கொண்டு போரிடலாகிய போர் மலைதல், போரிட்டாருள் சிலர் புண்பெற்று வருதலாகிய புண்ணொடு வருதல், சிலர் அயராது போரிட்டுப் பின் வாங்கலின்றிக் களத்திலேயே வீழ்தலாகிய*

போர்க்களத்து ஒழிதல், மறமாண்பினன் ஒருவன் தான் ஒருவனேயாகப் பகைவரிடைப் புகுந்து பகை மறவரை வெட்டி வீழ்த்தும் ஆளெறிபிள்ளை, மீண்ட மறவர் பெற்ற விழுப்புண்ணுக்கு மகிழ்ந்தவராகக் கள்ளுண்டு களித்தாடும் பிள்ளைத் தெளிவு, பகைவீரர் குடரைச் சூட்டிய வேலினைத் திரித்துக் களித்தாடும் பிள்ளையாட்டு, களத்து வீழ்ந்தானின் தன்மையைப் பாணர் உரைத்து இரங்கும் கையறுநிலை, வீரன் மன்னனிடத்தே தானொருவனே பகைப்படை வெள்ளத்தை அழிப்பதாக உரைக்கும் நெடுமொழி கூறல், நீநிமித்தத்தையும் விலக்சிச் சென்று போரிட்டு வெற்றியுடன் மீண்ட வீரனை வேந்தன் தலையளி செய்து போற்றும் பிள்ளைப் பெயர்ச்சி, மறவர்கள் தம் வேந்தனுக்காகப் போரின்கண் மடிவதைச் சிறப்பாகப் போற்றி உரைத்து நிற்கும் வேத்தியன் மலிபு, மன்னன் மறக்குடியின் மாண்பினை உரைத்துப் போற்றும் குடிநிலை என்றவாறு பதின் மூன்று துறைகளாக நிகழுவதாம்.

இந்தத் துறையமைதிகள் ஐயனாரிதனாரால் வகுக்கப் பெற்று விளங்குவன. இவை, தொல்காப்பியப் புறத்திணை இயல் கூறும் பதினான்கு துறைகளுடன் திணைப் புறனாகக் கூறப்படும் இரண்டும் கூட்டிய பதினாறு துறைகட்கும் சில பகுதிகளில் வேறுபடுவதனையும், வெட்சித் திணையிற் கூறப்படும் துறைகளினின்றும் வேறுபட்டு நிகழ்கின்ற தன்மையினையும் கவனிக்க வேண்டும். வெட்சி கரந்தை ஆகிய இரண்டனையும் வெட்சியென்னும் ஒன்றாகக் கொண்டே உரைத்த தொல்காப்பியத்தினும், இந்நூல் அதனை நன்கு ஆராய்ந்து, இருவேறாகக் கொண்டு நுட்பத்துடன் உரைத்துச் செல்லுகின்ற திட்பத்தினை நன்கு கற்றறிந்து இன்புறல் வேண்டும்.

✡✡✡

# 3. வஞ்சிப் படலம்

*(பகைவேந்தருக்கு உரிமையான நாட்டகத்தே புகுந்து, அந்நாட்டவருக்கு உரியவான ஆநிரைகளைக் கவர்ந்து வருதலாகிய 'வெட்சி' என்னும் போரியல் பற்றியும், அப்படிக் கவர்ந்து போவாரை வென்று அவற்றிற்கு உரிய நாட்டவர் தம் நிரைகளை மீட்டுப் போதலாகிய 'கரந்தை' என்னும் போரியல் பற்றியும் முதலிரு படலங்களினும் கண்டோம். இவை, எளிதில் நடத்திப் போதற்குரிய இயங்குபொருளான ஆநிரை கவர்தலையும் மீட்டலையும் குறிக்கோளாகக் கொண்டவை. இவற்றினும், பகைவேந்தரது மண்ணினைக் கைக்கொள்ள முயல்கின்ற இயலாகிய இந்த வஞ்சிப் படலம் மிகவும் கருத்துடன் கற்பதற்கு உரியதாகும். இதன்கண் பிறரது நாட்டை அடிப்படுத்த வேண்டுமென நினைந்து போகின்றவர் வஞ்சியார் ஆதலால், தம் நாட்டின் உரிமையினைக் காப்பதற்கு அயராது போரிடும் உறுதிமிக்க மறவர்களை வெற்றிகொள்ளும் செயலினது கடுமையும், திட்டமிட்டு இயற்றலான முறைமையும் நன்கு கருத்திற்கொள்ளற்கு உரியனவாக விளங்கும். இதனைக் கருத்திற்கொண்டே இந்தப் பகுதியினைக் கற்றல் வேண்டும்.)*

**வாடா வஞ்சி வஞ்சி யரவம்**
**கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாள்நிலை**
**கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி**
**குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை**
**பேராண் வஞ்சி முதுமொழி வஞ்சி**
**கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே**
**ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை**
**பெருவஞ் சிய்யே பெருஞ்சோற்று நிலையொடு**
**நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த**
**எஞ்சாச் சீர்த்தி இருபத் தொன்றும்**
**வஞ்சியும் வஞ்சித் துறையும் ஆகும்.** **(3)**

*வஞ்சித் திணையும், அதன் துறைகள் இருபதும் ஆதலைக் கூறுவது இச் சூத்திரம். வஞ்சித் திணையின் துறைகள், வஞ்சியரவம், குடைநிலை, வாள்நிலை, கொற்றவை நிலை, கொற்றவஞ்சி, கொற்றவள்ளை, பேராண்வஞ்சி, மாராய வஞ்சி, நெடுமொழிவஞ்சி, முதுமொழி வஞ்சி, உழபுலவஞ்சி, மழபுலவஞ்சி, கொடைவஞ்சி, குறுவஞ்சி, ஒருதனிநிலை, தழிஞ்சி,*

பாசறை வஞ்சி, பெருவஞ்சி, பெருஞ்சோற்றுநிலை, நல்லிசைவஞ்சி என்னும் இருபதும் ஆம்.

'நாட்டினர் தொகுத்த எஞ்சாச் சீர்த்தி' என்று உரைப்பதனால். இவை, அந்நாளில் போரியன் மரபாக நாட்டினரால் தொகுத்து உரைக்கப்பட்டு வழங்கிவந்தன வாதலும் தெளியப்படும்.

## வஞ்சித் திணையின் விளக்கம்

*வாடா வஞ்சி தலை மலைந்து*
*சூடார் மண் கொளல் குறித்தன்று.*

வாடாத வஞ்சிப்பூவின் கண்ணியினைத் தலையிலே சூடியவனாகப், பகைவரது மண்ணினைச் சென்று கைப்பற்றிக் கொள்ளலை ஒரு வேந்தன் கருதுவது, வஞ்சித் திணையாகும்.

'குறித்தன்று' என்பதனால், அதுகுறித்து மேற்கொள்ளும் பலவகைப் படையெழுச்சியும் பிறவுமாகிற எல்லாம் இதனுள் அடங்குவனவாம். இப்படி வஞ்சிசூடிச் செல்வார்க்கு எதிர் வருவாரின் ஒழுக்கத்தைக் 'காஞ்சி' என இந்நூல் கொள்ளுகிறது. ஆனால், ஒருவன் மண்ணசையான் மேற்சென்றால், அவனும் அம் மண் அழியாமற் காத்தற்கு எதிர்வருதலின், இருவருக்கும் மண்ணசையான் மேற்சேறல் உளதாம். ஆதலின் அவ்விருவரும் வஞ்சிவேந்தர் எனவே தொல்காப்பியம் உரைக்கின்றது. 'எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன், அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே' என்பது புறத்திணையியற் சூத்திரம் (62). ஆனால், இந்நூலாசிரியரோ, மண்நசைஇ என்பதனைச் சுடார் மண் கொளல் எனவும், கடிமனை காத்தல் எனவும் இருகூறாக்கி, ஒன்றை வஞ்சியெனவும், மற்றதனைக் காஞ்சி எனவும் வகுக்கின்றார். ஆகவே இவ்வாறு இருவகையாகக் கொள்ளப்படும் மரபினையும் நாம் அறிதல் வேண்டும். 'காஞ்சி என்பது எப்பொருட்கும் நிலையாமை கூறுதலின், பெரிதும் ஆராய்ச்சிப் படும் பொதுவியற் பெயராற் கூறல் ஆகாமை உணர்க' என, எதிர்சேரல் காஞ்சி என்பவரது கருத்தினை நச்சினார்க்கினியர் மறுத்தலையும் கவனிக்க வேண்டும். ஆனாலும், போரியங்கும் மரபு இருசாராருக்கும் இருவகைத் தனிப்பட்ட தன்மையுடைய தாதலின், ஐயனாரிதனார் இருவேறாகவே வகுத்து உரைத்தனர் என்க.

**செங்கண் மழவிடையின் தண்டிச் சிலைமறவர்**
**வெங்கள் மகிழ்ந்து விழவமர - அங்குழைய**
**வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்**
**குஞ்சி மலைந்தான்எங் கோ.** 36

*சிவந்த கண்களையுடைய இளமைப் பருவத்து ஆனேற்றினைப்போல மிகைத்து எழுந்து, வில்லினையுடைய மறவர்கள் வெவ்விய கள்ளினை அருந்தி வில்விழலினை விரும்பா நிற்ப, அழகிய தளிரினையுடைய வஞ்சியைத், தன்னை வணங்காதவரை வணங்கச் செய்விக்கும் பொருட்டாக, எம் வேந்தனானவன், வண்டினம் ஆரவாரிக்கத் தன் தலைமயிரினிடத்தே சூடினான்.*

*மழவிடை-இளைய ஆனேறு. அது செருக்குற்று எழுந்தாற்போலத் தன் கண்கள் கோபத்தாற் சிவக்க, வேந்தனும் மிகைத்து எழுந்தான் என்க. 'சில மறவர் வெங்கள் மகிழ்ந்து விழவமர்தல்', போர் வாய்த்தது என்கின்ற பூரிப்பினாலே ஆகும். 'வணங்காரை வணக்கிய வேந்து வஞ்சி சூடினான்' என்பதனால், அவன் அப் பகை மன்னனது நாட்டைக் கொள்ளக் கருதியது புலனாகும். குஞ்சி-ஆண்மயிர்; குடுமியும் ஆம், இது, வேந்தன் போர்மேற் கொண்டு வஞ்சி சூடியதனைக் கண்டார், அதனை உரைத்ததாம்.*

## 1. வஞ்சி யரவம்

*வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க*
*ஒள்வாட் டானை உருத்தெழுந் தன்று.*

*வலியினையுடைய வாரினாலே கட்டப்பெற்ற வீர முரசத்தினொடு வலிய போர்க்களிறுகளும் சேர்ந்து முழக்கமிட, ஒள்ளிய வாளினைக் கொண்டோரான படைமறவர்கள், சினந்து கிளர்ந்ததனைக் குறிப்பது, வஞ்சியரவம் ஆகும்.*

*இதனை, 'இயங்குபடை அரவம்' என்று தொல்காப்பியம் உரைக்கும். உருத்தல்-சினத்தல்.*

**பௌவம் பணைமுழங்கப் பற்றான்மண் பாழாக**
**வெளவிய வஞ்சி வலம்புனையச்-செவ்வேல்**
**ஒளிறும் படைநடுவண் ஊழித்தீ யன்ன**
**களிறும் களித்ததிருங் கார். 37**

*கடலைப்போல வீரமுரசம் முழங்கப், பகைவரது நிலம் பாழுற்றுப் போகக், கைப்பற்றின வஞ்சிப்பூவினை வெற்றியாகப் புனைந்தனன் வேந்தன். பகைவரது குருதிக்கறையினாலே சிவந்த வேல்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கத், திரண்டு நின்ற படையினது நடுவேயிருந்து, ஊழிக்காலத்துப் பெரு நெருப்பினைப் போல எதிர்ப்பட்ட பகைவரை அழிக்கின்ற தன்மையினை உடைய களிறும், அப்பொழுது களிப்புற்றுக் கார்மேகத்தினைப் போல முழங்கா நின்றது.*

*இது கண்டோர் கூற்று. வெற்றி முரசின் முழக்கமும், களிற்றின் முழக்கமும், வஞ்சி புனைதலுடன் எழ, இது வஞ்சியரவம் ஆயிற்று. 'களிறு அதிரும்' என்றதனால், பிற படைப்பகுதிகளும் அங்ஙனமே ஆரவாரிக்கும் என்பதும் கொள்க.*

## 2. குடை நிலை

***பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்***
***கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று.***

*தன்மேல் இட்டிருக்கின்ற மாலைகளிலே வண்டினம் ஆரவாரிக்கவும், மிக்க அறிவினை உடையவரான புலவர்கள் தன்னுடைய புகழினைப் பாடவுமாக, கத்தரிகையால் மட்டஞ்செய்த தாரினையுடைய வேந்தனானவன், தன் கொற்றக் குடையினை நல்ல வேளையிலே புறவீடு விடுவது, குடைநிலை ஆகும்.*

*'தாரினைக் கட்டியபின் கத்தறித்து மட்டஞ்செய்து அணிவதும் வழக்கம்' என்பதனைக் 'கொய்தார்' என்பது காட்டும். 'குடைநாட்கொள்ளல்' குடைநிலை.*

**முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்**
**துன்னருந் துப்பிற் றொழுதெழா - மன்னர்**
**உடைநாள் உலந்தனவால் ஓதநீர் வேலிக்**
**குடைநாள் இறைவன் கொள.** 38

*தன் முன்னே வீரமுரசு முழங்க, எம் இறைவன், திரைமிகுந்த கடலினை வேலியாக உடைய உலகினிடத்தே, குடைநாட் கொள்ளுதலைச் செய்தனன். செய்யப், பெரிய கடல் போன்ற படையினையும், கிட்டுதற்கரிய வலியினையும் உடையராயிருந்த நிலையால், எம் அரசனைத் தொழுதெழலைச் செய்யாது செருக்கியிருந்த மன்னர்களது வாணாளும் கெட்டன.*

*'புறவீடு விட உடைநாள் உலந்தன' என்க. 'குடை நாள் இறைவன் கொள' எனக் குடைநிலை இதன்கண் கூறப்பட்டது.*

## 3. வாள் நிலை

***செற்றார் மேற் செலவமர்ந்து***
***கொற்ற வாள்நாட் கொண்டன்று.***

*பகைவரது நாட்டின்மேற் படையெடுத்துச் செல்லுதலை விரும்பிய மன்னன், தன் வெற்றிவாளினை நல்ல முழுத்தத்திலே புறவீடு விடுவது, வாள்நிலை ஆகும்.*

*வாள் நாட்கொள்ளல் 'வாள்நிலை' ஆயிற்று. செற்றார்-பகைவர்.*

**அறிந்தவர் ஆய்ந்தநாள் ஆழித்தேர் மன்னன்**
**எறிந்திலகு ஒள்வாள் இயக்கம்-அறிந்திகலிப்**
**பின்பகலே யன்றியும் பேணார் அகநாட்டு**
**நன்பகலும் கூகை நகும்.** 39

வட்டக்காலாற் சிறந்த தேரினை உடைய மன்னவன், சோதிட நூலார் தெரிந்துரைத்த நல்ல நாளிலே, பகைவரை வெட்டி விளங்கும் ஒள்ளிய வெற்றிவாளினது புறவீடு விடுதலைச் செய்தானாக, அந்த இயக்கத்தைக் கூகை அறிந்து, தானும் தன் போக்கில் மாறுபட்டு, அவனுடைய பகைவரது உள்நாட்டினிடத்தே, பிற்பகல் வேளையில் அல்லாமலும், நல்ல பகற்பொழுதிலும் தீநிமித்தமாக நகுதலைச்செய்யும்.

'கூகை நன்பகலும் நகுதல்' தீநிமித்தம் என்பர். 'எறிந்திலகு ஒள்வாள் இயக்கம்' அறிந்து, அது பேணாரின் அகநாட்டு நகுதல் கூறியதால், வாள்நிலை உரைக்கப்பட்டது. பேணார்-பகைவர். ஆழி-சக்கரமும் ஆம்.

## 4. கொற்றவை நிலை - 1

*நீடோளான் வென்றிகொள்கென*
*நிறைமண்டை வலனுயரீக்*
*கூடாரைப் புறங்காணும்*
*கொற்றவைநிலை யுரைத்தன்று.*

'நீண்ட தோள்களை உடையவனான தம் மன்னவன் வெற்றி கொள்வானாக' என்று, நல்ல பொருள்களால் நிறைந்துள்ள பாத்திரத்தை வெற்றியாக உயர்த்து, அவன் பகைவரைப் புறங்காணுகின்ற கொற்றவையாளின் அருள்நிலையினைச் சொல்லி அவளைத் துதிப்பது, கொற்றவை நிலையாகும். கொற்றவையின் அருளுதல் நிலையினை வேட்டலால், இது கொற்றவை நிலை ஆயிற்று.

**அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி**
**நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்-கணம்புகலக்**
**கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு**
**மொய்யிரியத் தான்முந் துறும்.** 40

தெய்வத்துக்கு உரியதான எட்கசிவும், நெற்பொரியும், அவரை துவரையும், அவலும் நிணமும் குடரும் உதிரமும் நிறைவித்துத், திரட்சி விரும்பக் கையிலே பாத்திரத்தை ஏந்திய மண்டையினையும், பூதகணங்களையும் உடையவள் துர்க்கையாள். அவள், நம் அரசனுக்குரிய பகை கெட்டழியுமாறு, தான் முற்படச் சென்று அருள்பவளாவாள்.

எட்கசிவு-எள்ளினை இடித்து எண்ணெய்க் கசிவுடன் படைப்பது. 'மோடி தான் முந்துறும்' என்றமையால் அவளுடைய அருள்நிலை உரைக்கப்பட்டது.

## 5. கொற்றவை நிலை-2

*மைந்துடை ஆடவர் செய்தொழில் கூறலும்*
*அந்தமில் புலவர் அதுவென மொழிப.*

வலியினையுடைய வீரர்கள் செய்யும் போர்த்தொழிலைச் சொல்லுதலும் அத்துறையேயாம் என, முடிவிலாத அறிவுடையோர்கள் சொல்லுவார்கள்.

**தமருள் தலையாதல் தார்தாங்கி நிற்றல்**
**எமருள்யாம் இன்னமென் றெண்ணல் - அமரின்**
**முடுகழலின் முந்துறுதல் முல்லைத்தார் வேந்தன்**
**தொடுகழல் மைந்தர் தொழில்.** 41

'தம்மவரான வஞ்சிமறவருள் தாம் தலைமை உடையவ ராதலும், பகைவரது தூசிப்படையினைத் தடுத்து நிறுத்துதலும், எம் படைவீரருள் யாம் இன்னதொரு சிறப்புடையோம் என எண்ணுதலும், போரின்கண் விரைந்தழிக்கும் ஊழித்தீப்போல முற்படச்சென்று செயலாற்றலுமாகிய இவை, முல்லைத்தாரினை அணிந்த வஞ்சி வேந்தனுடைய தொடுத்த கழலினைக் கொண்ட மறவர்களின், தொழில்கள் ஆம்.

முல்லைத்தார் கூறியது, வஞ்சி முல்லையது புறனாதல் பற்றி யாகும். இத் தொழில்கள் பலவும் கொற்றவை யாளின் அருளது நிலைபேற்றைக் குறிப்பனவாதலின், இச் செய்யுள் கொற்றவை நிலை ஆயிற்று.

## 6. கொற்ற வஞ்சி

*வையகம் வணங்க வாளோச் சினன்எனச்*
*செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று.*

செய்தொழிற் சிறப்பமைந்த வீரக்கழலினை உடையோ னாகிய வஞ்சி வேந்தன், 'உலகமெல்லாம் தன்னை வணங்கி நிற்குமாறு வாளோச்சி வெற்றிவீரனாகத் திகழ்ந்தான்' எனப் படைமறவர் அவனுடைய சிறப்பினை மிகுதியாகக் கூறிப் போற்றுவது, கொற்ற வஞ்சி யாகும்.

வஞ்சி வேந்தனது கொற்றத்தை உரைத்தலால் 'கொற்றவஞ்சி' ஆயிற்று. செய்கழல்-சொல்லிப் பண்ணின கழலும் ஆம்.

**அழலடைந்த மன்றத் தலந்தயரா நின்றார்**
**நிழலடைந்தே நின்னையென் றேத்திக்-கழலடையச்**
**செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்**
**கொற்றங்கொண் டெஃகுயர்த்தான் கோ.** 42

எங்கள் கோமான், சினத்தைப் பாராட்டிக் கோபித்துப் பகைத்து வந்தாரான பகைமன்னர் எல்லாரும் களத்திலே வீழ்ந்துபட்டுத் தம்முடைய பெயரும் கெட்டுப்போமாறும், நெருப்புப் பொருந்திய பகைநாட்டு அம்பலத்திடத்தே நொந்து நெஞ்சழிய நின்றவர் 'நின்னை எம் நிழலாக அடைந்தேம்' என்று போற்றித் தன் அடிகளை வந்தடையுமாறும் கொற்றத்தினை மேற்கொண்டு, தன்னுடைய வேலினை வலமாக உயர்த்தினான்.

அரசன் வேலினை உயர்த்த, அவனது கொற்றத்தைப் படைமறவர் போற்றிக் கூறுவது இது. அதனால் கொற்ற வஞ்சி ஆயிற்று. சிலைத்து-கோபித்து. வீதல்-படல். 'அவிய' என்றது, அவருடைய பழைய புகழும்கெட என்பதற்காம்.

## 7. கொற்ற வள்ளை

***மன்னவன் புகழ்கிளந்து***
***ஒன்னார்நாடு அழிபிரங்கின்று.***

வஞ்சி வேந்தனது புகழினை எடுத்துச் சொல்லி, அவனுடைய பகைவரது நாடு அழிவது குறித்து வருந்துவது, 'கொற்றவள்ளை' ஆகும்'.

தம் மன்னனது புகழையும், பகைநாட்டது அழிவையும் ஒருங்கே பாடுதலின் 'கொற்ற வள்ளை' என்பதாயிற்று.

**தாழார மார்பினான் தாமரைக்கண் சேந்தனவாற்**
**பாழாய்ப் பரிய விளிவதுகொல்-யாழாய்ப்**
**புடைத்தேன் இமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்**
**நடைத்தேர் ஒலிகறங்கும் நாடு.** 43

யாழையொப்ப இசையொலி செய்தனவாகப் பக்கங்களிலே வண்டினங்கள் ஆரவாரிக்கின்ற மாலையினையும், பொலிவினை யுடைய கண்களையும் உடையவரான சிறுவர்களின், சிறுதேர் உருளுகின்ற ஒலியானது முழங்கிக் கொண்டிருக்கும் வளமுடையது பகைவரது நாடு. ஆரந் தாழ்ந்த மார்பினை உடையவனான நம் மன்னனது தாமரை மலர் போன்ற கண்கள் சினத்தாற் சிவந்தனவாதலினால், இனி அதுவும் பாழ்பட்டதாகிக் கண்டார் இரங்கும்படியாகக் கெட்டழியும் போலும்!

'நாடு பாழாய்ப் பரிய விளிவது கொல்' என இரங்கியதனால் 'கொற்ற வள்ளை' ஆகுமாறு காண்க. நடைத்தேர்-நடை பயிலுதற்குரிய சிறுதேர். 'யாதுங் குற்றமற்ற அச்சிறாரின் வாழ்வும் கெடும்படியாகப் பகைநாடு அழிவது போலும்!' என இரங்குவதன் தகைமையை உணர்க. பகையிடையேயும் ஏதும் தம்பால் குற்றமிலாத சிறாரும் அழிவதனை எண்ணி இரங்கும் வீரரது உள்ளம் மிகவும் சிறப்புடைத்தாகும்.

## 8. பேராண் வஞ்சி-1

***கேளல்லார் முனைகெடுத்த***
***மீளியாளர்க்கு மிகவுய்த்தன்று.***

பகைவரது போர்முனையினை அழித்துவந்த தலைமைச் செறிவினையுடைய மறவர்களுக்கு, வஞ்சிவேந்தன், மிகவும் சிறப்பு வழங்குவது, 'பேராண்வஞ்சி' ஆயிற்று.

பேராண்-பெரிதான ஆண்மை. அதனையுடையரான படைத்தலைவரைச் சிறப்பித்தலால், பேராண் வஞ்சியாயிற்று.

**பலிபெறு நன்னகரும் பள்ளி யிடனும்**
**ஒலிகெழு நான்மறையோர் இல்லும்-நலிவொரீஇப்**
**புல்லார் இரியப் பொருதார் முனைகெடுத்த**
**வில்லார்க்கு அருள்சுரந்தான் வேந்து.** 44

மன்னவன், பலியினைப் பெறுகின்ற நன்மையுடைய கோயில்களும், துறந்தாரிருக்கும் பள்ளியிடங்களும், ஓசை பொருந்திய நான்மறையோரது வீடுகளும் நலிவடைதலைக் கைவிட்டும், போரிடற்குப் பொருந்தாத பிறரும் ஓடிப் போகும்படி விட்டும், போரிடற்கு எதிர்ந்த பகைவரது செருவினை வென்றுவரும் வில்லாளர்க்குத் தானும் அருளினைச் சுரந்தானாக, வரிசை நல்கிச் சிறப்பித்தான்.

பகைவர் நாட்டிடத்தும் வீரரைமட்டுமே வென்று பிறருக்குத் தீமைசெய்யாது அருள்காட்டி நின்ற வீரரின் ஆண்மையை, மன்னன் பாராட்டி அருள் சுரத்தலால், இது பேராண் வஞ்சியாயிற்று. 'புல்லார் இரிய' என்பதனால், அவரை அழித்தல் ஆண்மையொடு பட்டதன்று என்பதும் விளங்கும்.

## 9. பேராண் வஞ்சி-2

***அருந்திறை யளப்ப ஆறிய சினத்தொடு***
***பெரும்பூண் மன்னர் பெயர்தலும் அதுவே.***

பேரணிகலன்களைப் பூண்டவனான வஞ்சிவேந்தன், பெறுதற்கரிய பொருளினைப் பகையரசன் திறையாக அளந்து

*கொடுக்க, அதனால் தணிவெய்திய சினத்தினை உடையவனாக, அவனை மேலும் நலிவியாமல், தன் நாட்டிற்கு மீண்டு போதலும், பேராண் வஞ்சி ஆகும்.*

*பகை நாட்டை முற்றவும் அழிப்பதாகச் சினந்து சென்ற போதும், பகையரசன் பணிந்து திறையளப்பத் தன் சினந்தணிந்து தன் நாடு திரும்புதலால், இது 'பேராண் வஞ்சி' ஆயிற்று.*

**கூடி முரசிரங்கக் கொய்யுளைமா முன்னுகளப்**
**பாடி பெயர்த்திட்டான் பல்வேலான் - கோடி**
**நிதியந் திறையளந்தார் நேராரும் தன்கீழ்**
**முதியமென் றாறி முரண்.** 45

*பகைவரும் தனது அடியின் கீழ்ப்பட்ட பழையோம் என்று கூறிக் கோடிப் பொருள்களைத் திறையாகவும் அளந்து தந்தனர். அதனால், பலவாகிய வேற் படையினை உடையனாகிய மன்னனும் தன்னுடைய மாறுபாடு நீங்கப் பெற்றனன். பலவாச்சியங்களுடன் கூடி வெற்றிமுரசம் ஒலிமுழங்கவும், கொய்யப்பெற்ற தலையாட்டத்தையுடைய போர்க்குதிரைகள் முன்னே தாளத்தொடு பொருந்த நடக்கவும், தன்னுடைய பாசறையினை விட்டுத் தன் நாட்டினை நோக்கிப் பெயர்வானும் ஆயினான்.*

*பணிந்த பகைவர்க்கு அருளிய பேராண்மை இதன்கண் உரைக்கப்பட்டது. முதியம்-பழையம். உளை-தலையாட்டம்.*

## 10. மாராய வஞ்சி

***மறவேந்தனிற் சிறப்பெய்திய***
***விறல்வேலார் நிலையுரைத்தன்று.***

*போர் மறத்தையுடைய வஞ்சிவேந்தனாற் சிறப்புகளை அடைந்தவரான, வெற்றி வேலோரான மறவர்களது நிலைமையைச் சொல்வது, 'மாராய வஞ்சி' ஆகும்.*

*சிறப்புகள், ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும், நாடும் ஊரும் முதலியனவும் பெறுதல். 'மாராயம்' என்பது அரசனால் செய்யப்பெறும் சிறப்பு.*

**நேராரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்**
**சேரார் முனைநோக்கிக் கண்சிவப்பப்-போரார்**
**நறவேய் கமழ்தெரியல் நண்ணார் எறிந்த**
**மறவேல் இலைமுகந்த மார்பு.** 46

*பெரிய மேம்பாட்டினையும், பொருந்திய வீரக்கழலினையும் உடையவன், பகைவர்தம் போர்முனையை நோக்கி வெகுண்டு,*

*கண்கள் சிவக்க நோக்கவும், போரினைச் செய்கின்றவரான, தேன்பொருந்திய நறுநாற்றம் கமழுகின்ற மாலையினை யுடையரான பகைவர்கள் வேலினை எறிந்தனர். வீரமிக்க அவ்வேலின் முனையினைத் தன் மார்பின்பால் அவன் ஏற்றுக் கொண்டான். அப்படி ஏற்ற அவனது மார்பு இப்போது நம் மன்னனால் வழங்கப்பட்ட இனமொத்த முத்தாரங்களை அணிந்தது.*

*விழுப்புண்பட்ட வீரனுக்குச் சிறப்புச் செய்த மன்னனது செயலைக் கூறுதலால், இது மாராயவஞ்சி ஆயிற்று. நறவு-தேன். மறவேல்-வீரவேல். இலை-வேலின் முனை.*

## 11. நெடுமொழி வஞ்சி

***ஒன்னாதார் படைகெழுமித்***
***தன்னாண்மை எடுத்துரைத்தன்று.***

*பகைவர்தம் படையணியினை நெருங்கி நின்று, ஒரு வஞ்சி மறவன், தன்னுடைய பேராண்மையினைத் தானே உயர்த்துச் சொல்வது, நெடுமொழி வஞ்சி ஆகும்.*

**இன்னா் எனவேண்டா என்னோ டெதிர்சீறி**
**முன்னர் வருக முரணகலும் - மன்னர்**
**பருந்தார் படையமருட் பல்லார் புகழ**
**விருந்தாய் அடைகுறுவார் விண்.** 47

*மாறுபாடு மிகுதியாகின்ற தன்மையினரான மன்னர்கள் எவராயினும், இன்ன தன்மையார் என்று சொல்லி நிற்றல் வேண்டா. என்னொடும் போரிடுதற்கு எதிரிட்டுச் சீறி என் முன்னர் வருவாராக. வந்தாராயின், பருந்தினம் நிறைந்திருக்கும் தானைப் போரிடத்தே, பலரும் போற்றுமாறு, விண்ணவர்க்கு விருந்தாக அவர்கள் சென்று சேர்வார்கள்.*

*படையணி முன்நின்று, மாற்றாருள் எதிர்ந்தார் யாவரேனும் அவரை விண்ணவர்க்கு விருந்தாக்குவதாக வஞ்சி மறவன் கூறுதலின், இது நெடுமொழி வஞ்சி ஆயிற்று. முரண் அகலும்-மாறுபாடு விரிந்து பெருகும். படையமர்-தானைப்போர்;*

## 12. முதுமொழி வஞ்சி

***தொன்மரபின் வாட்குடியின்***
***முன்னோனது நிலைகிளந்தன்று.***

*தொன்மையான மரபினொடுங் கூடிய வாள்மறவர் குடியிலே வந்தோன் ஒருவனைச் சுட்டி, அவன் முன்னோன் ஒருவனது நிலையினைச் சொல்லிச் சிறப்பிப்பது, முதுமொழி வஞ்சி ஆகும்.*

வாட்குடி-வாள்வீரரது குடி. முன்னோனது நிலை கிளத்தலால், இது முதுமொழி வஞ்சி எனப்பட்டது.

**குளிறு முரசங் குணில்பாயக் கூடார்**
**ஒளிறுவாள் வெள்ளம் உழக்கிக்-களிறெறிந்து**
**புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்**
**தண்ணடை நல்கல் தகும்.** 48

பொலிவுடைய கழலினை அணிந்துள்ளவனே! முழங்கும் வீர முரசங்களிலே கடிப்புத் தாக்கி முழக்கமுண்டாக்கச் சென்று, பகைவரது ஒளிறுகின்ற வாட்படை வீரராகிய வெள்ளத்தைக் கலக்கி, அவர்தம் போர்க்களிற்றினையும் வெட்டிக் கொன்று, தான் விழுப்புண்ணொடும் மீண்டானாகிய வீரமறவனது புதல்வனாகிய இவனுக்கு, நாம் மருதநிலங்களை வழங்குதல் தகுதியுடையதாகும்.

குளிறும்-முழங்கும். குணில்-கடிப்பு. 'புதல்வனுக்கு நல்கல் தகும்' என்றலால், முன்னோனது சிறப்பினைக் கருதிக் கூறியதாகிய முதுமொழி வஞ்சி ஆயிற்று. புண்ணொடு வந்தான் புதல்வற்கு நல்கல்' எனவே, அவன் புண்ணின் காரணமாக இறந்தமையும் புலனாகும்.

## 13. உழபுல வஞ்சி

**நேராதார் வளநாட்டைக்**
**கூரெரி கொளீஇயன்று.**

பகைவரது வளமுடைய நாட்டினை மிக்க நெருப்பை இட்டுக் கொளுத்துவது, உழபுல வஞ்சி ஆகும்.

'உழல்' உழப்புதல். பகை நாட்டை உழப்பி அழித்தலால், உழபுல வஞ்சி என்றனர். புறத்திணையியல் இதனை 'எரிபரந் தெடுத்தல்' என்று குறிப்பிடும்.

**அயிலன்ன கண்புதைத்து அஞ்சி யலறி**
**மயிலன்னார் மன்றம் படரக்-குயிலகவ**
**ஆடிரிய வண்டிமிரும் செம்மல் அடையார்நாட்டு**
**ஓடெரியுள் வைகின ஊர்.** 49

பகைவரது நாட்டின்கண் உள்ளவான ஊர்கள், குயில்கள் அகவிக் கொண்டிருக்கவும், யாண்டும் மக்கள் போக்குவரத்தினரா யிருக்கவும், யாண்டும் வண்டினம் முரன்றுகொண்டிருப்பவுமாக, வளத்தால் தலைமைகொண்டு விளங்கின. இந்நாளில், வஞ்சி மறவரது தாக்குதலால், வேலனைய தம் கண்களைப் பொத்தியவாறே அச்சமுற்று அலறியவராக, மயில்போன்ற சாயலையுடைய பெண்கள் எல்லாரும் ஊரம்பலத்திடத்தே

செல்லும்படியாக, அவை பரந்தோடும் நெருப்பினிடத்தே தங்கியவாயின.

பகைவரது வளநாடு மிக்க எரியுள் வைகியது கூறுதலால், இது உழபுல வஞ்சி ஆயிற்று. அயில்-வேல். அஞ்சி அலறல்-வஞ்சி மறவரின் போர்க் கடுமையால் விளைந்த அழிபாட்டிற்கும், விளையப்போகும் கொடுமைகட்கும் அஞ்சிக் கதறல். 'மயிலன்னார் மன்றம் படர்தல்' உயிர் பிழைத்தற்பொருட்டு. மகளிரைக் கொல்லுதல் மறவரின் இயல்பன்று.

## 14. மழபுல வஞ்சி

*கூடார் முனை கொள்ளை சாற்றி*
*வீடறக் கவர்ந்த வினை மொழிந்தன்று.*

பகைவரது வேற்றுப் புலத்தினைக் கொள்ளையூட்டி, அவ்விடத்து வீடுகள் அனைத்தும் பாழ்பட்டுப் போமாறு, ஆங்குள்ள செல்வங்களையும் கொள்ளையிட்ட செயலைச் சொல்லுவது, மழபுல வஞ்சி ஆகும்.

**களமர் கதிர்மணி காலேகம் செம்பொன்**
**வளமனை பாழாக வாரிக்-கொளன்மலிந்து**
**கண்ணார் இலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்**
**நண்ணார் கிளையலற நாடு.** 50

கண்ணுக்கு நிறைந்த தோற்றத்தவரான வில்வீரர்கள், வீரக் கழலினையுடைய தம் வேந்தனுக்குப் பகைவராகியோரின் சுற்றத்தார் அலறும்படியாக, அவர் நாட்டினிடத்துள்ள களமர்களையும், ஒளிவிடும் மணிகளையும், முத்துகளையும், செம்பொன்னையும், அவரது வளமனை முற்றவும் பாழாகும் படியாக வாரிக் கொள்ளுதலிலே மிக்கவராகி, அவற்றைக் கைக்கொண்டனர்.

களமர்-அடியவர். 'வளமனை பாழாக வாரிக் கவர்ந்தது உரைத்தலால்' இது மழபுல வஞ்சி ஆயிற்று. காலேகம் - முத்து. பொருள்களோடு சேரக் 'களமர்' என்பாரையும் குறிப்பிடுதலால், அக்காலத்து அடித்தொழில் செய்யும் அடிமையர் கூட்டமும் இருந்தனராதல் வேண்டும். 'வளமனை, பகையரசரது அரண்மனை. 'கிளை' - அவரது அரசச் சுற்றம் 'அவர் அலற' என்பதனால், பகைமன்னர் முன்பே போரில் அழிந்தமையும் பெறப்படும்.

## 15. கொடை வஞ்சி

*நீடவும் குறுகவும் நிவப்பவுந் தூக்கிப்*
*பாடிய புலவர்க்குப் பரிசில் நீட்டின்று.*

வஞ்சி வேந்தன், தனது வெற்றியைக் குறித்து, உச்சமாகவும், மந்தமாகவும் அதன்மேற் சமமாகவும் இசையினை அளந்து பாடியவராகத் தன்னைப் போற்றின இசைப்புலவருக்குப் பரிசில் வழங்குவது, கொடை வஞ்சி ஆகும்.

'தூக்கி' என்பது, செந்தூக்கு முதலான எழுவகைத் தூக்கினாலும் தூக்கி என்றும் கொள்ளப்படும். 'நிவப்ப' என்றது, இடைத்தரமான ஓசையினை. 'பாடிய புலவர்' என்பதனால் பாணர் முதலியோரும் இப் பரிசிற்கு உரியராவர்.

**சுற்றிய சுற்ற முடன்மயங்கித் தம்வயிறு**
**எற்றி மடவார் இரிந்தோட - முற்றிக்**
**குரிசில் அடையாரைக் கொண்டகூட் டெல்லாம்**
**பரிசின் முகந்தன பாண். 51**

பகைத்தார் நாட்டுப் பெண்கள் எல்லாம் தம்மைச் சூழ்ந்த சுற்றத்தாருடன் கூடி ஒக்கக் கலங்கியவராகத், தம் வயிற்றிற் புடைத்துக் கொண்டு, தம் நிலைகெட்டு ஓடும்படியாக, நம் வேந்தனானவன், அப் பகைவரது நாட்டை வளைத்துக் கொள்ளை கொண்ட பொருள்முழுவதும், தாம் பெறும் பரிசிலாகப் பாண்மக்களால் வாரிக்கொள்ளப் பெற்றனவே!

'கொண்ட கூட்டெல்லாம் பரிசின் முகந்தன' என்றலால், இது 'கொடை வஞ்சி' ஆயிற்று. 'குரிசில் - தலைவனும் ஆம்.

## 16. குறுவஞ்சி-1

*மடுத்துஎழுந்த மறவேந்தர்க்குக்*
*கொடுத்துஅளித்துக் குடியோம்பின்று.*

மண்டிப் படைகொண்டு எழுந்து சென்றவரான வீரத்தையுடைய வஞ்சிவேந்தர்க்குப், பகைநாட்டு மன்னன், திறைப் பொருளைக் கொடுத்துத், தன் குடிமக்களுக்குத் தண்ணளிபண்ணிக் காத்துக் கொள்வது, குறுவஞ்சி ஆகும்.

வஞ்சிசூடிப் போனாருடைய போர்ச்செயல் முற்றுப் பெறாதே, பகையரசன் தந்த திறைபெற்று மீண்டுவருதலால், இது 'குறுவஞ்சி' ஆயிற்று.

**தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்**
**வாட்டானை வெள்ளம் வரவஞ்சி-மீட்டான்**
**மலையா மறமன்னன் மால்வரையே போலும்**
**கொலையானை பாய்மாக் கொடுத்து. 52**

போரிடத்தே எதிர்த்துநிற்க மாட்டாதவனாகிய தறு கண்மையினையுடைய பகைமன்னன், முழந்தாளினளவுக்குத் தாழ

*நீண்டுவிளங்கும் பெரிய கையினையும், ஒப்பிலாத மதியினை யொத்த வெண்கொற்றக் குடையினையும் உடையவனான நம் வேந்தனின், வாள் மறவரது படைவெள்ளமானது தன் நாட்டினுள் வருதற்கு அஞ்சியவனாகப், பெரிய மலையினைப்போல விளங்கும் கொலையானையினையும் சதிபாயும் குதிரையினையும் திறையாகக் கொடுத்துத், தன் நாட்டினை அழிவினின்றும் மீட்டுக் கொண்டான்.*

*'கொடுத்து மீட்டான்' என்பதனால் 'குறுவஞ்சி' ஆயிற்று. 'மலைமா மறமன்னள்', இகழ்ச்சிக் குறிப்பு. 'தாட்டாழ் தடக்கை', ஆடவரது உறுப்பிலக்கணத்துட் சிறப்புடைத்தாக உரைக்கப்படும். அதனையுடையானாகவே வஞ்சி வேந்தனின் சிறப்பும் உரைக்கப்பட்டது. பேராண் வஞ்சிக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனித்தல் வேண்டும்.*

## 17. குறுவஞ்சி - 2

**கட்டூரது வகைகூறினும்**
**அத்துறைக் குரித்தாகும்.**

*வஞ்சிவேந்தன் போர்ச் செயலைக் கைவிட்டிருக்கின்ற பாசறையினது கூறுபாட்டினைச் சொன்னாலும், அது குறுவஞ்சித் துறைக்கு உரிமையுடைத்தாகும். 'கட்டூர்'-பாசறை; படை தங்குவதற்கெனப் புதிதாகக் கட்டப் பெறுவதால் 'கட்டூர்' ஆயிற்று.*

**அவிழ்மலர்க் கோதையர் ஆட ஒருபால்**
**இமிழ்முழவம் யாழோ டியம்பக்-கவிழ்மணிய**
**காய்கடா யானை ஒருபாற் களித்ததிரும்**
**ஆய்கழலான் கட்டூர் அகத்து.** 53

*ஆராய்ந்து கட்டிய கழலினை உடையவனான நம் வேந்தனது கட்டூராகிய பாசறை இருக்கையினிடத்தே, ஒரு பக்கத்தே, மலர்ந்த மலர்மாலையினை அணிந்த ஆடுமகளிர்கள் ஆடி நிற்பார்கள்; ஒருபக்கத்தே முழங்குதலையுடைய முழவமானது யாழிசை யோடும் ஒத்ததாக ஒலிமுழங்கும்; மற்றொரு புறத்தே, கவிழ்ந்த மணிகளையும் சினத்தற்குக் காரணமான மதப்பெருக்கையும் உடைய போர் யானைகள், களிப்புற்றுப் பிளிறியவாக நிற்கும்.*

*அரசனும் படைஞரும் போர்மலைதலை மறந்து பாசறை யிடத்தே களித்திருக்கும் நிலையினைக் கூறுவது இது. இதுவும் வஞ்சி முற்றாத தன்மையினைக் கொண்டதனால், 'குறுவஞ்சி' எனக் கொள்ளப்பட்டது. 'கோதையர்' என்றது, விறலியராகிய*

ஆடு மகளிரை. 'ஆய்கழலான்' என்பதற்கு மேலாக நல்லோர் தெரிந்த வீரக் கழலினை உடையான் என்பது, பழைய உரையாகும்.

## 18. ஒரு தனி நிலை

*பொருபடையுள் கற்சிறைபோன்று*
*ஒருவன்தாங்கிய நிலையுரைத்தன்று.*

போரினைச் செய்திருக்கும் படையினிடத்தே, வஞ்சி மறவன் ஒருவன், வெள்ளத்தைத் தடுத்து நிற்கும் கல்லணையினைப் போன்று, தங்கள் மேல்வரும் பகைப்படை வெள்ளத்தைத் தான் ஒருவனாகவே தடுத்து நிற்கின்ற நிலையினைச் சொல்லுவது, ஒரு தனி நிலை ஆகும்.

ஒரு தனி நிலை - தனியனாகவே ஒப்பற்றுப் போர் செய்திருக்கும் நிலை, 'வருவிசைப் புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமையானும்' எனப் புறத்திணை இயலுள் (சூ-8) கூறப்படுவதும் இதுவாகும்.

**வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற**
**வாடல் முதியாள் வயிற்றிடம்- கூடார்**
**பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா**
**இரும்புலி சேர்ந்த இடம்.** 54

பகைவருடைய பெரிய படைவெள்ளமானது நெருக்கி வந்து மேலிடவும், தான் நின்ற நிலையினின்றும் நீங்காத பேராண்மையினையுடைய பெரும்புலி அனையான் கிடந்த இடமானது, இவ்விடத்தே நின்ற - வாடிய உடலினளான முதியவளின் வயிற்றிடமே ஆகும் என்பது, வீட்டு நெறியினை உணர்ந்தோரான சான்றோர்க்கும் வியப்பினைத் தருவதாம்.

'வீடுணர்ந்தோர்க்கும் வியப்பாவது,'இரும்புலி சேர்ந்த இடம் வாடல் முதியாளின் வயிற்றிடம்' என அறியும்போது ஏற்படுகின்ற நிலையாமை உணர்வினால் ஆகும். அன்றி, உலக விவகாரப் பற்றற்ற அவரும் அந்த வீரனது ஆண்மைக்குப் பெரிதும் வியப்படைந்தவராக, அவனைப் பெற்ற தாயினைப் போற்றுவர் எனவும் உரைக்கலாம். ஒரு தனி வீரனின் படைநிலையைப் போற்றுதலால், இஃது 'ஒரு தனிநிலை' ஆயிற்று.

## 19. தழிஞ்சி

*அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்*
*கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று.*

தனக்கு எதிராற்றாது வலியழிந்தோர் கெட்டோடுங் காலத்து, அவரது முதுகுப்புறத்தே தன்னுடைய கூரிய வாளினை எறியாத

ஒரு வீரனது மிக்க மறப்பண்பினைக் கண்டோர், அதனை விருப்பத்துடன் சொல்லுவது, தழிஞ்சி ஆகும்.

'தழிஞ்சி' என்பது பிறரது கருத்தினைத் தானும் தழுவிக் கோடல். உயிர் பிழைக்க ஓடுவானது கருத்தினைத் தானும் தழுவியவனாக, அவன் முதுகிடத்து வாளோச்சாது, அவனைப் பிழைத்துச் செல்ல விட்டமையால் இது 'தழிஞ்சி' எனப்பட்டது. தொல்காப்பியர், புறத்திணை இயலுள், 'அழிபடை தட்டோர் தழிஞ்சி' எனக்கூறி, அது, 'வேந்தர், தம் படையாளருள், முன்பு போர்செய்துழிப் பகைவர் எறிந்த படைகளைத் தம்பால் ஏற்றுத் தடுத்து விழுப்புண்பட்டு மீண்டிருக்கும் மறவரைச் சென்று கண்டு, பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக்கோடல் 'தழிஞ்சி' என்று கூறுவர் (சூ-8)

**கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினும்**
**தான்படை தீண்டாத் தறுகண்ணன்-வான்படர்தல்**
**கண்ணியபின் அன்றிக் கறுத்தார் மறந்தொலைதல்**
**எண்ணியபின் போக்குமோ எஃ்கு?** 55

காட்டிடத்தே தோன்றிய நெருப்பினைப் போலப் பவைர் தன்னை மீதூர்ந்து வந்த விடத்தும், அவர் வானுலகம் புகுதலை நினைந்து தன்னை எதிர்த்தபின்னர் அல்லாமல், தான் அவர்மேற் படைவிடுதலை மேற்கொள்ளாத தறுகண்மையினை உடையனான வீரமறவன், அப்பகைவர் வீரத்தைக் கைவிட்டு முதுகிடுதலைக் கருதியபின்னர், அவர்மேல் தன் வேலினைப் போக்குவானோ?

கறுத்தார், மறந்தொலைதல் எண்ணியபின்பு எஃ்கு போக்கானாகவே, இது தழிஞ்சித்துறை ஆயிற்று.

## 20. பாசறை நிலை

*மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து*
*மன்னரெல்லாம் மறந்துறப்பவும்*
*பதிப்பெயரான் மறவேந்தன்*
*பாசறை யிருந்தன்று.*

நிறை மதியினைப் போன்ற தனது கொற்றக்குடையின் கீழாகத் தாழ்வு சொல்லியவராகப், பகைவேந்தர் எல்லாரும் தமது மறத்தினைக் கைவிட்டுப் பணிந்து போகவும், மறத்தகையினனான வஞ்சிவேந்தன், அப் பாசறையாகிய கட்டூரினின்றும் போகானாகி, அந்தப் பாடிவீட்டிலேயே இருந்த தன்மையைச் சொல்வது, 'பாசறைநிலை' ஆகும்.

**கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்**
**பெரும்புனல் வாய்திறந்த பின்னும் - சுரும்பின்**
**தொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த் தாரான்**
**பகைமெலியப் பாசறையு ளான். 56**

*வண்டுகளின் கூட்டம் மிகுதியாக மொய்த்திருக்கின்ற, குளிர்ந்த குவளையின் தூய மலர்களாலான தாரினை உடையோனான வஞ்சிவேந்தன், பகைவர்கள் வலியழிந்து மெலியுமாறு, அவர்களது கரும்பொடு காய்நெற் பயிர்களையும் முழங்கும் எரியினை யூட்டி அழித்தும், பெரிதான நீர்நிலைகளை உடைத்தும் அழிவுசெய்த பின்னரும், பாசறையின்கண் இருக்கின்றானே!*

*உணவும் உண்ணுநீரும் கெடும்படி பகைநாட்டை வலிதொலைத்துப் பகைவரைப் பணியச் செய்த பின்னரும் பாசறையிலிருப்பது, அவற்றானும் தான் கொண்ட சினம் தணியாமையினாலே என்று கொள்க. காய்நெல்-காய்த்த பருவத்திலிருக்கும் நெற்பயிர்.*

## 21. பெரு வஞ்சி

***முன் அடையார் வளநாட்டைப்***
***பின்னரும் உடன்று எரிகொளீ இயன்று.***

*பகை மன்னர் வலியழிந்துபோயின நிலையினும், தன் முன்னே வந்து பணிந்து சேராதாராக, அவரது வளமிக்க நாட்டினை, வஞ்சிவேந்தன் பின்னரும் கோபித்தவனாக, எரியூட்டி அழிப்பது, பெருவஞ்சி ஆகும்.*

*வஞ்சிசூடிச் சென்ற செயலில் வெற்றி கண்ட பின்னரும், பெருஞ்சினத்தால் இச்செயல் செய்யப்படுவதனால், பெருவஞ்சி ஆயிற்று. 'பின்னரும்' என்றது, முன்னரே 'உழபுல வஞ்சி'யில் உரைத்தாற்போல எரியூட்டியமையின்.*

**பீடுலா மன்னர் நடுங்கப் பெரும்புகை**
**ஊடுலாய் வானத் தொளிமறைப்ப-நாடெலாம்**
**பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கால்**
**மன்னன் கனல மறம். 57**

*காலிலே இட்ட வீரக்கழலினையுடைய வஞ்சி வேந்தனது சினமானது மேலும் மூள்கையினாலே, பெருமைபரந்த பகைமன்னர்கள் நடுங்குமாறும், பெரிய புகைப்படலமானது வானத்து ஊடேயும் எழுந்து ஞாயிற்றினது ஒளியினை மறைக்குமாறும், பகைவரது நாடுகள் எல்லாம் பின்னரும், மிகுதியான நெருப்பாலே மூட்டப்பட்டவாயின.*

*'பீடுலா மன்னர்' என்றது பகைவேந்தரை; இது இகழ்ச்சிக்குறிப்பு. 'வானத்து ஒளி' என்றது, ஞாயிற்றினது ஒளிவிளக்கத்தை, 'நாடெலாம் பின்னும் பிறங்கழல் வேய்ந்தன' என்றதால் 'பெருவஞ்சி' ஆயிற்று.*

## 22. பெருஞ்சோற்று நிலை

***திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவரெனப்***
***பெருஞ்சோ றாடவர் பெறுமுறை வகுத்தன்று.***

*'இம் மறவர்கள் தம் பகைவரது வேற்றுப் புலத்தினை அழித்துத் தருவர்' என்று சொல்லி, வஞ்சி வேந்தன், அம் மறவர்களுக்கு மிக்க சோற்றை வீரர்கொள்ளும் முறையானே கொடுப்பது, பெருஞ்சோற்று நிலையாகும்.*

*இதனைப் 'பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை' என்று தொல்காப்பியர் கூறுவர். அரசன் படைஞருடன் இருந்து சோற்றுத்திரளை அவர்க்கு வரிசையறிந்து வழங்குதலான ஒரு மரபு இது. 'ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்' என வரும் புறப்பாட்டு (2) அடிகளும் இதனை விளக்கும். 'பின்றாச் சிறப்பின் பெருஞ்சோற்று வஞ்சியும்' எனச் சிலம்பு (25,144) கூறுவதும் காண்க.*

**இயவர் புகழ எறிமுரசு ஆர்ப்பக்**
**குயவரி வேங்கை யனைய-வயவர்**
**பெறுமுறையாற் பிண்டங்கோள் ஏவினான் பேணார்**
**இறுமுறையால் எண்ணி இறை.** 58

*அரசன், பகைவர் அழியும் வகையாலே ஆராய்ந்து, இசைக்கருவியாளர் புகழவும், கொட்டப்படும் முரசுகள் ஆரவாரிக்கவும், அரிவாளே போன்ற வரியினையுடைய வேங்கைப்புலியினைப் போன்ற தன் படைமறவர்கள், தாம் பெறுதற்குரிய முறைப்படியே பெற்று உண்ணும்படியாகச் சோற்றுத் திரளையைக் கொள்ளுதலை ஏவினான்.*

*இயவர்-இயத்தை உடையோர். குயம்-அரிவாள். வயவர்-போர்மறவர். பிண்டம்-சோற்றுத் திரளை. இறை-வஞ்சி வேந்தன்.*

## 23. நல்லிசை வஞ்சி-1

***ஒன்னாதார் முனைகெட இறுத்த***
***வென்வேல் ஆடவன் விறன்மிகுத் தன்று.***

*பகைவரது வேற்றுப்புலமானது அழியும்படியாகச் செய்த வெற்றிவேலினை உடையவனான படைத்தலைவனது, வெற்றியை*

*மிகுத்துச் சொல்லுவது, நல்லிசை வஞ்சி ஆகும். நல்+இசை=நல்லிசை-சிறந்த புகழ்.*

**மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார் மண்மேல்**
**இடங்கெடச் சென்றிறுத்த பின்னும்-நுடங்கெரிபோல்**
**வெல்லப் பெருகும் படையாற்கு வேந்தர்மேற்**
**செல்லப்பெருகும் சினம்.** 59

*வெற்றி கொள்ளுமாறு மேன்மேலும் பெருகுகின்ற படைப்பெருக்கினை உடையவனான வஞ்சி வேந்தனுக்குச் சிங்கம் போலக் கோபித்துத் தன்னொடு மாறுபட்டு எழுந்தாரது நிலத்தின் மேல், அவ்விடம் எல்லாம் வளங்கெடுமாறு சென்று வென்று தங்கிய பின்னரும், அசைந்து எரியும் நெருப்பினைப் போல, மேலும் செல்லுதற்குச் சினம் பெருகா நிற்கும்!*

*'மண்மேல் இடங்கெடச் சென்றிறுத்தல்' என்பது, பகைவரது படைமுனைகளொடு கூடிய அரண்களையும் படை வீடுகளையும் குறிக்கும். அவற்றைக் கைக்கொண்ட பின்னர், அவர் வீழ்ந்தனராக, அதனைக் கருதாது, அவரது நாடு முழுவதனையுமே கைக்கொள்ளக் கருகிச் சினம் பெருகும் என்க. 'வேந்தர்மேல்' எனவும் பொருள் கொள்வர்; அன்றித் தப்பிச் சென்ற பகைவேந்தர்மேல் எனினும் பொருந்தும்.*

## 24. நல்லிசை வஞ்சி-2

***இறுத்தபின் அழிபு இரங்கல்***
***மறுத்து உரைப்பினும் அத்துறை யாகும்.***

*வஞ்சிவேந்தன் பகைநாட்டை வென்று அதனைக் கைக்கொண்டு தங்கிய பின்னர், அந் நாட்டினது அழிபிற்கு இரங்குதலை அழித்துச் சொன்னாலும், அப்படிக் கூறுவது நல்லிசை வஞ்சித் துறையே யாகும். 'மறுத்து' என்றது. வஞ்சிவேந்தனது வெற்றிச் சிறப்பைக் கூறுதலை. இதனை மறுத்துப் பகைநாட்டு அழிபாட்டைக் கூறினால், அதுவும் இவனது வெற்றிச் சிறப்பையே கூறுவதாகும். ஆதலால், நல்லிசை வஞ்சியாகவே கொள்ளப்பட்டது. 'கொற்றவள்ளை' என்னும் துறைக்கும், இதற்கும் உள்ள வேறுபாட்டினைக் கவனித்து அறிதல் வேண்டும். அது, வரும் அழிவினைக் குறித்த இரக்கம்; இது, நிகழ்ந்த அழிவைக் குறித்து இரங்குதல்.*

**குரையழல் மண்டிய கோடுயர் மாடம்**
**சுரையொடுபேய்ப் பீர்க்கும் சுமந்த-நிரைதிண்டேர்ப்**
**பல்லிசை வென்றிப் படைக்கடலான் சென்றிறுப்ப**
**நல்லிசை கொண்டடையார் நாடு.** 60

ஒழுங்குபட்ட திண்ணிய தேர்களையும், பலவாகிய புகழொடும் கூடிய வெற்றியினைக் கொண்ட படையாகிய கடலினையும், உடையான் வஞ்சிவேந்தன், அவன், போர்மேற் சென்று தங்குகையினாலே, அவனது நற்புகழைத் தானும் போற்றிக்கொண்டு அவனை அடைந்திராத பகைவரின் நாட்டினது, முழங்கும் எரிமண்டிய மலையொப்ப ஓங்கின மாளிகைகள் எல்லாம், பேய்ச்சுரையொடு பேய்ப்பீர்க்கினையும் தம்மேற் கொண்ட வாயினவே!

'கோடுயர் மாடம்' என்றது, பகையரசனுடைய மாளிகையை, அது தனக்குரிய கொடியினை, இழந்து, சுரை பீர்க்குக் கொடிகளைச் சுமந்தது என இரங்கியமை இது. இதனாலும், வஞ்சி வேந்தனது புகழ் கூறப்படுவது உணர்க.

## தொகுத்து உரைத்தல்

இவ்வாறு, கூறப்பட்ட முறைமையானே, வஞ்சித்திணை யானது வஞ்சியரவம் முதலாக வருகின்ற துறையமைதிகளொடு பொருந்தி நிகழ்தல் இயல்பென அறிதல் வேண்டும். அவை, வஞ்சிகூடிப் படைமறவர் திரள்தலாகிய வஞ்சி யரவமும்; நல்ல முழுத்தத்திலே குடையைப் புறவீடு பெயர்த்தலாகிய குடைநிலையும்; வெற்றி வாளினைப் புறவீடு விடுதலாகிய வாள்நிலையும்; கொற்றவையானது அருளைக் கூறுதலும் மைந்துடை ஆடவரது செய் தொழிலினைக் கூறுதலுமாகிய கொற்றவை நிலையும்; வஞ்சிவேந்தனது கொற்றத்தை மிகுத்துக் கூறுதலாகிய கொற்ற வஞ்சியும்; அதனாற் பகைவர் நாடு அழிவெய்துமென இரங்குதலாகிய கொற்றவள்ளையும்; பேராண்மை உடையாரை அரசன் சிறப்பித்தலும் பகைவர் திறைதரச் சினம் ஆறியவனாகத் திரும்புதலுமான பேராண்வஞ்சியும்; அரசனாற் சிறப்புப் பெற்ற வீரரது மாண்பினைக் கூறுதலாகிய மாராய வஞ்சியும்; படைமறவன் தன் ஆண்மையைத் தானே உயர்த்துக் கூறுதலாகிய நெடுமொழி வஞ்சியும்; ஒரு மறவனது குடிமுதல்வனது வாளாண்மையைச் சிறப்பித்துக் கூறுதலாகிய முதுமொழி வஞ்சியும்; பகைவரது நாட்டை எரிகொளுவுதலாகிய உழபுல வஞ்சியும்; அதனைக் கொள்ளையிடலாகிய மழபுல வஞ்சியும்; கொண்ட கொள்ளையினைப் பாணர்க்குக் கொடுத்து மகிழ்தலான கொடை வஞ்சியும், பகையரசன் திறைகொடுத்துத் தன் குடிகளைக் காக்க முன்வர அதனை ஏற்றிருத்தலும் அல்லது பாசறையிடத்துப் போரினை மறந்து களித்திருத்தலும் ஆகிய குறுவஞ்சியும்; படைஞருள் ஒருவன் தனியனாகப் பகைப்படையைத் தாங்கி

நின்றதை வியந்து கூறும் ஒருதனி நிலையும்; புறமுதுகு இட்டான்மேல் வாளோச்சாது நின்ற வீரனது தகுதியைப் போற்றும் தழிஞ்சியும்; பகைமன்னர் அடிபட்ட பின்னரும் நாடு திரும்பானாக வஞ்சிவேந்தன் படைவீட்டில் இருத்தலாகிய பாசறை வஞ்சியும்; பகைநாட்டைக் கைப்பற்றிய பின்னர் மீண்டும் அதனை எரிகொளுவுதலாகிய பெருவஞ்சியும்; பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை வகுத்தலாகிய பெருஞ்சோற்று நிலையும், பகைவரது போர்முனை கெடுமாறு அழித்த வெற்றி வேலோனது விறலினைச் சிறப்பித்துக் கூறுதலும் அதனை மறுத்துப் பகைநாட்டின் அழிபாட்டு நிலையைக் கூறுதலுமாகிய நல்லிசை வஞ்சியும் ஆகியவை ஆகும்.

✡✡✡

# 4. காஞ்சிப் படலம்

*('காஞ்சி' என்பது காஞ்சி மரத்தினது பூ. இதனைச் சூடியவராக இவர் போர்மலைதலால் இது காஞ்சிப் படலம் எனவாயிற்று. 'வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே' என்பது பன்னிரு படலம். இதனால், இது வஞ்சித் திணைக்கு எதிரான போர்ச்செயல் இதுவென்பது விளங்கும். வஞ்சி, ஒரு மன்னன் தன்னுடைய பகை நாட்டின்மேற் படைகொண்டு சென்று அதனைக் கைக்கொள்ள நேர்வது. அதற்கு மாறான இது, அங்ஙனம் பகைவேந்தன் படைகொண்டு வருதலை அறிந்த நாட்டிற்கு உடையான், அவனுக்கு எதிராகப் பொருது தன் நாட்டினைக் காத்துக்கொள்ளற்கு முற்படுவது ஆகும்.)*

**காஞ்சி காஞ்சி யதிர்வே தழிஞ்சி**
**பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சிய்யே**
**வாள்செல வென்றா குடையது செலவே**
**வஞ்சினக் காஞ்சி பூக்கோள் நிலையே**
**புகழ்த்தலைக் காஞ்சி தலைமா ராயம்**
**தலையொடு முடிதல் மறப்பெயர்க் காஞ்சி**
**மாற்றரும் பேய்நிலை பேய்க்காஞ் சிய்யே**
**தொட்ட காஞ்சி தொடாக் காஞ் சிய்யே**
**மன்னைக் காஞ்சி கட்காஞ் சிய்யே**
**ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி**
**முனைகடி முன்னிருப் புளப்படத் தொகைஇ**
**எண்ணிய வகையான் இருபத் திரண்டும்**
**கண்ணிய காஞ்சி துறையென மொழிப.** (4)

*காஞ்சி என்பது திணை, அதனோடு, அதன் துறைகளான காஞ்சியதிர்வு முதலாக, முனைகடி முன்னிருப்பு ஈறாக வரும் இருபத்தொன்றும் சேரக், காஞ்சி இருபத்திரண்டு என்று ஆன்றோர் உரைப்பார்கள்.*

*காஞ்சியதிர்வு, தழிஞ்சி, படைவழக்கு, பெருங்காஞ்சி, வாள் செலவு, குடைச் செலவு, வஞ்சினக் காஞ்சி, பூக்கோள் நிலை, தலைக்காஞ்சி, தலைமாராயம், தலையொடுமுடிதல், மறக் காஞ்சி, பேய்நிலை, பேய்க்காஞ்சி, தொட்டகாஞ்சி, தொடாக்காஞ்சி, மன்னைக் காஞ்சி, கட்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, முனைகடி முன்னிருப்பு எனவரும் இருபத்தொன்றும் இத்திணையின் துறைகள் ஆகும்.*

இத் திணையினைப் பெருந்திணைக்குப் புறனாகும் என, 'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே(புறத்:22) என உரைப்பர் தொல்காப்பியர். அவ்வாறே கொண்டு அதற்குரிய விளக்கத்தையும் வகுப்பர். இந்த வேறுபாட்டினை நன்றாக உளங்கொண்டு 'காஞ்சி' எனக் குறிக்கப்படும் இடங்களை உணர்தல் வேண்டும். அந்தக் குறிப்பு இந்நூலை ஒட்டியதாயின், அது வஞ்சியார்க்கு எதிராகத் தம் நாட்டைக் காத்து நிற்பாரது செயல்களுள் ஒன்றையும், தொல்காப்பியப் புறத்திணையியலை ஒட்டியதாயின், பெருந்திணைக்குப் புறனாக வீடுபேறு நிமித்தமான பல்வேறு நிலையாமைப் பொருள்களையும் கூறுவதென அறிதல் வேண்டும்.

சிலப்பதிகாரக் கால்கோட் காதையுள், செங்குட்டுவன் வடவாரிய மன்னரொடு போரிட்டு வென்றதைக் கூறும்,

***'இரைதேர் வேட்டத்து எழுந்த அரிமாக்***
***கரிமாப் பெருநிரை கண்டுளம் சிறந்து***
***பாய்ந்த பண்பிற் பல்வேல் மன்னர்***
***காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப-' (26:188-191)***

என்ற தொடர்கள், 'காஞ்சித் தானை' என, இந்த நூற்பொருளினை ஒட்டியே கொண்டு உரைக்கப் பட்டிருத்தலையும் காண்க.

## காஞ்சித் திணையின் விளக்கம்

***வேஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்***
***காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று.***

வெவ்விய சினத்தையுடைய வேற்றுநாட்டு அரசன் போரிடலை மேற்கொண்டு வந்துவிட, அந் நாட்டிற்கு உரியவனாகிய மன்னன், தான் காஞ்சிப் பூவைத் தன்பாற் சூடிக்கொண்டவனாகத், தன் காவலிடத்தைக் காக்க நினைவது, காஞ்சித் திணை ஆகும்.

**அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்**
**பெருவரைச் சீறூர் கருதிச் - செறுவெய்யோன்**
**காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ**
**தோஞ்செய் மறவர் தொழில்? 61**

செருமுனையிற்படப் பொருதுவார் இல்லாதபடியினாலே, முன்பு, 'ஏறுதற்கரிய மலையேறி வீழ்ந்தாயினும் சாவேம்' என்று உரைக்கும் வீரத்தினையுடையோர், இன்று, இந்தப் பெருமலையிடத்ததான சிற்றூரைக் காப்பான் வேண்டிக் கருதிப் போரை விரும்புகின்ற தம் மன்னவன் காஞ்சிப் பூவினைச் சூடலும், போரிடற்கு அணிவகுத்து நிற்கும் அதுவோ, குற்றத்தைப் பண்ணும் மறவரது தொழில்?

ஓகாரம் எதிர்மறை, குற்றத்தைப் பண்ணும் தொழிலன்று; சிறந்த வினை என்பது கருத்து. தோம்-குற்றம். 'பகை வரவு கேட்டதுமே போர்க்கெழாது கடைக்கணித்து நிற்பதோ? அது தோஞ்செய் மறவர் தொழில் அல்லவோ?' எனக் கூறி, வீரன் ஒருவன் துடித்தெழுவதாகவும் இதனைக் கொள்ளலாம்.

## காஞ்சித் திணையின் துறைகள்

### 1. காஞ்சி யதிர்வு

*மேல்வரும் படைவரன் மிகவும் ஆற்றா*
*வேல்வல் ஆடவன் விறன்மிகுத் தன்று.*

தன் மேல் மண்டிவருகின்ற வஞ்சியாரது படைவரவினைப் பெரிதும் பொறாத, வேற்படைத் தொழிலிலே வல்லானாகிய காஞ்சி மறவனுடைய, வெற்றிச் செல்வியை மிகுத்துக் கூறுவது, காஞ்சி யதிர்வு ஆகும்.

**மன்மேல் வருமென நோக்கான் மலர்மார்பின்**
**வென்வேல் முகந்தபுண் வெய்துயிர்ப்பத் - தன்மேல்**
**பிடிக்கலும் ஆற்றாப் பெருந்தகை ஏவத்**
**துடிக்கண் புலையன் தொடும்.** 62

அகன்ற தனது மார்பிடத்தே வென்றிவேல் பாய்ந்து முதுகுப்புறத்து உருவிய புண்ணின் காரணமாக, வெய்தாக மூச்செறியாநிற்பத் தன் வேலினைப் பிடித்திருத்தலுக்கும் ஏலாதானாகி விளங்கும் பெரிய மேம்பாட்டினை உடையவனான இந்த வீரன், மாற்றரசன் தன் மேலே மீதூர்ந்து வருமெனவும் பாரானாகித், துடியனை ஏவ, அவனும் தன் துடியினது கண்ணினைக் கொட்டி முழக்கா நிற்கும்!

'புண் வெய்துயிர்ப்ப' என்றது, உயிர்ப்புப் புண்வழி ஓடலைக் குறித்ததாம்: மார்பிற் பட்ட புண்ணாதலால் இவ்வாறு கூறினார். 'மன்மேல் வருமென நோக்கான்-ஏவத்துடிக்கண் புலையன் தொடும்' என்றது. துடியோசை கேட்டாற் பகைமன்னன் மேல்வருதல்' கூடும் என்பதனையும், அவனை எதிர்க்கும் வலியழிந்து போயின தன்நிலையினையும் கருதானாக மீளவும் போரிடலைக் கருதித் துடிமுழக்க ஏவிய அவனது வீரத்தை வியந்ததாம். 'அதிர்வு' -துடியின் அதிர்வு எனக் கொள்க.

### 2. தழிஞ்சி

*பரந் தெழுதரு படைத் தானை*
*வரம் பிகவாமைச் சுரங்காத் தன்று.*

*எங்கணும் பரந்தவாக நடவாநின்ற படைவன்மையினைக் கொண்ட வஞ்சியாரது தானைப் பெருக்கமானது, தங்கள் நாட்டு எல்லையிற் புகுதாதபடி, அருவழியைக் காஞ்சியார் காத்து நிற்பது, தழிஞ்சி ஆகும். சுரம்- அருவழி.*

*வஞ்சித் தழிஞ்சி இங்ஙனம் நிகழ்வதன்று என்பதனைக் கவனிக்க. தம் எல்லையை வஞ்சியார் கடந்து மேல் வராதபடி தழுவி நின்று காஞ்சியார் காத்தலாலும், அவரது நினைப்பிற்கேற்ப வஞ்சியார் மேல்வராது நிற்றலாலும், இது காஞ்சிக்குரிய தழிஞ்சி ஆயிற்று.*

**குலாவுஞ் சிலையார் குறும்புகொள வெஃகி**
**உலாவு முழப்பொழிக வேந்தன் - கலாவும்**
**இனவேங்கை யன்ன இகல்வெய்யோர் காவல்**
**புனவேய் நரலும் புழை.** 63

*புனத்திடத்து மூங்கில் ஒலிமுழங்கா நிற்கும் வழியானது தம்மிற் கலக்கும் இனத்தால் உயர்ந்த புலியினையொத்த மாறுபாட்டினையே விரும்புவோரான காஞ்சி மறவருடைய காவலை உடைத்தாயிருக்கின்றது. அதனால், வஞ்சிசூடிப் போர்மேற்கொண்டு வருகின்ற வேந்தன், ஏறிட்ட வில்லினை யுடைய அக் காஞ்சியார் தம் காட்டரணைக் கைக்கொள்ளுதலை விரும்பி, இயங்குகின்ற தன் முயற்சியை இனிக் கைவிடுவானாக!*

*காஞ்சியாரது காவல் வலிமையைக் கூறி, வஞ்சிவேந்தனை மேற்செல்ல வேண்டாமெனத் தடுத்துக் காஞ்சியாரது கருத்தினைத் தழுவி நிகழுதல்பற்றி, இது காஞ்சித் தழிஞ்சி ஆயினமை காண்க. உழப்பு- முயற்சி. புழை-வாயில்; வழி.*

## 3. படை வழக்கு - 1

***முத் தவிர்பூண் மற வேந்தன்***
***ஒத் தவர்க்குப் படை வழங்கின்று.***

*முத்துகள் ஒளிவீசுகின்ற அணிகலன்களையுடைய மறப் பண்பினனான காஞ்சிவேந்தன், தம்மில் இனமொத்த போர் மறவர்கட்குப் படைக்கலன்களை வழங்குவது, படை வழக்கு ஆகும்.*

*படை வழங்கியது குறித்தலால், இத்துறை 'படை வழக்கு' என ஆயிற்று. 'ஒத்தவர்' என்றது, படைமறவர்க்குரிய குணமெல்லாம் ஒத்திருத்தல் பற்றி, படைக்கலன்களை அரசு சேமித்து வைத் திருப்பதும், போர்த் தொடக்கத்து வீரர்க்கு வழங்குவதுமாகிய மரபினையும் இதனாற் காணலாம்.*

**ஐயங் களைந்திட் டடல்வெங்கூற் றாலிப்ப**
**ஐயிலை எஃகம் அவைபலவும் - மொய்யிடை**
**ஆட்கடி வெல்களிற்று அண்ணல் கொடுத்தளித்தான்**
**வாட்குடி வன்க ணவர்க்கு.** 64

*பூசலிடத்தே ஆளைக் கடிகின்ற போரினை வெல்லும் யானையினை உடையவனாகிய தலைவன், மறக்குடியினராகிய தறுகண்மை உடையார்க்குக், கொலைத் தொழிலினனான வெய்ய கூற்றுவன் ஐயப்பாட்டை ஒழித்து உணவு பெற்றே மென்று ஆர்த்துக் கொள்ள, வியக்கத்தக்க இலைத்தொழிலான் மிக்க வேல் முதலிய படைக்கலங்கள் பலவற்றையும் வழங்கித் தலையளி செய்தான்.*

*வாட்குடி-மறக்குடி, வன்கணவர்-தறுகண்மையினரான மறவர். ஆலித்தல்-ஆர்ப்பரித்தல். ஐ-வியப்பு. ஐயம்-ஐயப்பாடு. 'எஃகம் அவை பலவும் கொடுத்து அளித்தான்' எனப் படைவழக்குக் கூறப்பெற்றது.*

## 4. படை வழக்கு-2

***கொடுத்த பின்னர்க் கழன்மறவர்***
***எடுத் துரைப்பினும் அத்துறை யாகும்.***

*அரசன் படைக்கலன்களைக் கொடுத்த பின்னர், கழல் விளங்கும் காலினரான மறவர்கள், அரசன் படைகொடுத்த அதனை உயர்த்துச் சொன்னாலும், அது படைவழக்கு என்னும் துறையாகும்.*

*படை வழங்கியதனையே விதந்து கூறுதலால், இதுவும் படைவழக்கு ஆயிற்று.*

**துன்னருந் துப்பின் தொடுகழலார் சூழ்ந்திருப்பத்**
**தன்னமர் ஒள்வாளென் கைத்தந்தான்-மன்னற்கு**
**மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்**
**விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து.** 65

*கிட்டுதற்கு அரிதான வலியினையும், கட்டிய வீரக் கழலினையும் உடையரான மறவர்கள் பலரும் சூழ்ந்திருப்பவும், தனக்கு மேவும் ஒள்ளிய வாளினை, மன்னன் என் கையிடத்தே தந்தான். அங்ஙனம் கொடுத்த எம் மன்னனுக்கு, முத்தமாலை அணிந்த கொற்றக் குடையின் கீழாக இந்தப் பூமியிடமோ தங்கா நின்றது; விண்ணகத்தையும் அதன்கீழ்க் கொண்டுவர அவன் இனி விரும்புவான்போலும்! ('விரும்பின், அதனையும் வென்று அளிப்பேன்' என்பது குறிப்பு.)*

'மன்னர்க்கு' என்பதும் பாடம். அதற்கு, 'இனி, வேற்று மன்னவர்க்கு மண்ணகமோ தங்குமிடமில்லை; அவரை விண்ணகத்தின்கண் ஏற்றலையும் நம் அரசன் விரும்புவான் போலும்!' என்று உரைப்பதாகப் பொருள் கொள்ளுக. 'தன் அமர் ஒள்வாள்'-தான் கைக்கொள்ள விரும்பும் ஒள்ளிய வாள்; அது கொற்றவாள்.

## 5. பெருங்காஞ்சி

*தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்*
*வீங்குபெரும் படையின் வெளிப்படுத் தன்று.*

எதிரிட்டு வருகின்ற மாற்றாரது படையினைத் தடுக்கும் வலியினையுடைய காஞ்சிமறவர்கள், தங்கள் தங்களது பேராற்றலை, மிக்க பெரும் வஞ்சியாரது சேனையிடத்துத் தோற்றுவித்தது, பெருங்காஞ்சி ஆகும்.

காஞ்சி மறவர்கள் வஞ்சியாரது பெரும்படையினை எதிர்த்தழித்து அதனால் தத்தம் ஆற்றலை வெளிப்படுத்தியதனால், இது 'பெருங்காஞ்சி' எனப்பெற்றது.

**வில்லார் குறும்பிடை வேறுவே றார்த்தெழுந்த**
**கல்லா மறவர் கணைமாரி-ஒல்லா**
**வெருவி மறவேந்தர் வெல்களி றெல்லாம்**
**இருவி வரைபோன்ற இன்று.** 66

தறுகண்மையுடைய பகைவேந்தரது போரை வெல்லும் களிறுகள் எல்லாம், விற்படை நிறைந்த அரணிடத்துப் பலவகையாக ஆரவாரித்து வந்த, இயற்கையான மறத்தினை உடையவரான காஞ்சிமறவர்து அம்பு மழையினைப் பொறாவாய், வெருண்டு, இன்று, தினையரிந்த தாளினையுடைய மலைகள் ஒத்தனவே!

இது, காஞ்சி மறவரின் பெரிதான ஆற்றலினைக் கண்டவர் வியந்து கூறியது. 'வெல்களிறு எல்லாம், மறவர் கணைமாரியைப் பொறாவாய் அஞ்சிப் புறமிட்டு இருவி வரை போன்ற வாயின' என்பதைக் கவனிக்க. 'அம்புகள் தைக்கப் பெற்று வீழ்ந்து கிடக்கின்ற யானைகள், தினையரிதாளினைக் கொண்ட மலைபோன்று தோன்றின' என்னும் உவமை, காஞ்சி மறவரது பெருங்காஞ்சி நிலையைக் குறித்ததும் காண்க.

## 6. வாள் செலவு

*அருமுனையான் அறைகூவினபின்*
*செருமுனைமேல் வாள்சென்றன்று.*

*வெல்லுவதற்கு அரிதான போரினை யுடையானான வஞ்சி வேந்தன், போரிடற்குத் தன்னை அறைகூவி அழைத்ததன் பின்னர், காஞ்சியானது கொற்றவாள், படைமுனையிடத்தே போயினதைக் கூறுவது, வாள் செலவு ஆகும்.*

**உணங்கு புலவறா ஒன்னார் குரம்பை**
**நுணங்கரில் வெம்முனை நோக்கி-அணங்கிய**
**குந்த மலியும் புரவியான், 'கூடாதார்**
**வந்தபின் செல்'கென்றான் வாள்.** 67

*வேலிட்டுப் பண்ணுதல் மிகுந்த போர்க் குதிரையினை உடைய காஞ்சிவேந்தன், உலரும் புலாலினது நாற்றம் நீங்காத பிணக்கத்தையுடைய பகைவரது பாசறையிடத்தேயுள்ள, கைநிலை செறிந்த வெவ்விய பகைமையினைப் பார்த்து, 'பகைவர் நம்மேல் போரிடற்கு வந்த பின்னரே நம் கொற்றவாள் செல்வதாக' என்று, தன் மறவர்கட்குக் கூறினான்.*

*இதனாற் காஞ்சியானின் பெருமிதமும், போராண்மையும் புலனாகும். குரம்பை-குடிசை. இதனைக் கொற்ற வாளைப் புறவீடு விட்டதாகவும் கொள்ளலாம். வஞ்சிப் படலத்தில் வரும் வாள்செலவிற்கும் இதற்குமுள்ள வேறுபாட்டை அறிதல் வேண்டும்.*

## 7. குடை செலவு

***முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்***
***கொதியழல் வேலோன் குடைசென்றன்று.***

*பழைமையாகத் தொடர்ந்து வருகின்ற குடியினரான மறவர்கள் முன்னாகச் சூழ்ந்துபோகக், கொதிக்கும் அழலினை யொத்த வேலினையுடைய காஞ்சிவேந்தன், தன் குடையினைப் புறவீடு விடுவது, 'குடைசெலவு' ஆகும்.*

*'கொதியழல்,' சினத்தைக் குறித்தது. வேலோனது சினம் வேலின்மேல் ஏற்றிக் கூறப்பெற்றது.*

**தெம்முனை தேயத் திறல்விளங்கு தேர்த்தானை**
**வெம்முனை வென்றி விறல்வெய்யோன்-தம்முனை**
**நாட்டிப் பொறிசெறித்து நண்ணார்மேற் செல்கென்றான்**
**கூட்டிநாட் கொண்டான் வேந்து.** 68

*பகைவரது நாட்டுவளம் கெடும்படியாக வெற்றி கொள்ளும் ஆற்றல் விளங்காநின்ற தேர்ப்படையினை உடையவன்; வெய்ய போர்முனையிடத்தே வெற்றியினையே கொள்ளும் கொற்றத்தை விரும்பியோன்; காஞ்சி மன்னன். அவன், வஞ்சி வேந்தனுடன்*

பொருதற்கான நாளினை அறுதியிட்டான்; இலாஞ்சினை செறித்த ஓலையினைப் பகைவற்மேற் போகவென்று அனுப்பினான்; அதன்பின், தன் படைவீரரைக் கூட்டிக் கொற்றக் குடையினையும் நல்லநாளிலே புறவீடு விட்டான்.

'தம்முனை' என்பது, இருவேந்தரும் தமக்குள் நேராகப் பொருதுகின்ற பூசல். பொறி-இலாஞ்சினை. 'வாளும் குடையும் மயிர்க்கண் முரசும் நாளொடு பெயர்த்து' (சிலம்பு: 5; 92-2) என வருவதும் இதனை வலியுறுத்தும். 'கூட்டி' என்பதற்கு, 'முரசொடுங் கூட்டி' எனவும் உரைப்பர்.

## 8. வஞ்சினக் காஞ்சி

*வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப*
*வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று.*

வெவ்விய சினத்தைக் கொண்டோனான காஞ்சிவேந்தன், தன் நாட்டின்மேற் படையொடுவந்த மாற்றாரைப் பணிவித்தலின் பொருட்டு, வஞ்சினம் கூறிய கூறுபாட்டினைச் சொல்வது, வஞ்சினக் காஞ்சி ஆகும்.

**இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை**
**வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பின்-என்றும்**
**அரண்அவியப் பாயும் அடையார்முன் நிற்பேன்**
**முரண்அவிய முன்முன் மொழிந்து.** 69

இன்று பகலோன் படுவதன் முன்பாகவே யான் பகைவரை வென்று களங்கொள்வேன்; அங்ஙனம் வென்று களங்கொள்ளாதபடி, யான் என் வேலினை உயர்ப்பேனாயின், என் அரண் அழியுமாறு பாய்ந்துவரும் பகைவரின் முன்பாக, எனது மாறுபாடு கெட, முன்னே முன்னே பணிவான சொற்களைச் சொல்ல, எந்நாளும் வணங்கி நிற்பேனாகுக!

இதனால், காஞ்சியான் வஞ்சினம் உரைத்தல் காண்க. வஞ்சினமாவது, 'இன்னது பிழைப்பின் இன்னவாறாகக் கடவேன்' எனக் கூறுதல்; (தொல்-புறத்24). இதனால், சொல்வானது மறமாண்பும் மானவுயர்ச்சியும் குறிக்கோளது செப்பமும் புலனாகும்.

## 9. பூக்கோள் நிலை

*கார் எதிரிய கடற்றானை*
*போர் எதிரிய பூக்கொண் டன்று.*

கார்மேகத்தை எதிர்ப்பட்ட கடலினைப்போல ஆரவாரித்து எழுகின்ற காஞ்சி மன்னனின் படையானது. வந்து நேர்ந்த

போரினை மேற்கொள்ளும் பொருட்டாகத் தம் அரசன் வழங்கிய போர்ப் பூவினை ஏற்றுக் கொள்வதைக் கூறுவது, 'பூக்கோள் நிலை' ஆகும்.

'பூ' என்பது காஞ்சிப் பூவினை. 'கடற்றானையான்' பாடமாயின், 'காஞ்சி வேந்தன் பூச்சூடியது கூறுவது' என்று ஆகும்.

**பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன**
**குருதியா றாவதுகொல் குன்றூர்-கருதி**
**மறத்திறத்தின் மாறா மறவரும் கொண்டார்**
**புறத்திறுத்த வேந்திரியப் பூ.** 70

*மறமாண்பினின்றும் தப்பாதவர் காஞ்சி மறவர். அவர்களும், தங்களது அரணின் புறத்தே வந்து தங்கிய வஞ்சி வேந்தன் கெட்டழிதலை எண்ணினர். தம் அரசன் வழங்கிய போர்ப் பூவினையும் ஏற்றுக் கொண்டனர். இனி, குன்றிடத்ததான இவ்வூர்தான், ஞாயிறுபடுகின்ற செவ்வானம் உருகிப் பரந்து எங்கணும் ஓடினாற்போலச், செங்குருதி பெருகிவரும் ஆறாகத்தான் போகும் போலும்!*

*பருதி செல் வானம்-ஞாயிறு சென்று மறைகின்ற செவ்வானம். பூக்கொண்ட நிலையினைக் கண்டார், அவ்வீரரது வெற்றிச் செவ்வியை வியந்து, போரினது கடுமையினையும் எண்ணுகின்றனர்.*

## 10. தலைக் காஞ்சி

***மைந்துயர மறங்கடந்தான்***
***பைந்தலைச் சிறப்புரைத்தன்று.***

*காஞ்சியாரது வலிமை உயரும்படியாக, மாற்றார்தம் போர்மறத்தினைக் கடந்து, களத்திலே வீழ்ந்துகிடக்கும் வீரனின், பசுந்தலையினது சிறப்பினை உரைப்பது, தலைக் காஞ்சி ஆகும்.*

**விட்டிடினென் வேந்தன் விலையிடினென் இவ்வுலகின்**
**இட்டுரையின் எய்துவ எய்திற்றால்-ஒட்டாதார்**
**போர்தாங்கி மின்னும் புலவாள் உறைகழியாத்**
**தார்தாங்கி வீழ்ந்தான் தலை.** 71

*பகைவரது போர்வெம்மையினைத் தடுத்து நின்று, ஒளிவிடும் புலால் நாற்றத்தையுடைய தனது வாளினை உறையை விட்டு எடுத்துப் பகைவரை - தூசிப்படையினைத் தடுத்து, அப் போரிடையே வீழ்ந்தான் இவ்வீரன். அங்ஙனம் வீழ்ந்த இவனின் தலையானது, இவ்வுலகத்திலே சிறப்பித்துச் சொல்லும் புகழினாலே பெறுவவெல்லாம் பெற்றதாயிற்று. இனி, அதனை*

அவ்விடத்தேயே விட்டு விட்டால்தான் என்ன? அல்லது, காஞ்சிவேந்தன் அதற்கு விலையிட்டு வழங்கி மதித்தால்தான் என்ன?

'தலையினைக் கண்டு அதனையுடையனான வீரனது மறமேம்பாட்டை உரைத்தலால்' தலைக்காஞ்சி ஆயிற்று. விலையிடல், அத் தலைக்கு உரியானின் சுற்றத்தார்க்கு அரசன் பரிசளித்து, அவன் செயலைப் போற்றுதல். இட்டுரை - புகழ்.. 'தலைகண்டு உரைத்தலால்', உடல் துணிபட்டு உருக் காண முடியாத போர்ப்புண்களால் சிதைந்து போயிருந்ததும் விளங்கும்.

## 11. தலை மாராயம்

*தலைகொடுவந்தான் உண்மலியச்*
*சிலையுடைவேந்தன் சிறப்பீந்தன்று.*

வீரமறவனது தலையினைக் கொண்டு வந்தானது உள்ளம் மகிழ்வினாலே நிரம்புமாறு, வில்லினையுடையனான காஞ்சி வேந்தன், அவனுக்குச் சிறப்பினைத் தருவது. தலைமாராயம் ஆகும்.

**உவன்றலை யென்னும் உறழ்வின்றி யொன்னார்**
**இவன்றலையென் றேத்த வியலும்-அவன்றலை**
**தந்தாற்கு நல்கல் வியப்போ கிளந்தேத்தி**
**வந்தார்க் குவந்தீயும் வாழ்வு.** 72

பகைவரும், 'உவன் தலை' என்று குறிப்பிட்டு இகழுகின்ற மாறுபாடில்லாமல் இவனே தலைமையானவன் என்று சொல்லிப் புகழாநிற்ப நடக்கும் மறவன் அவன். அத்தகைய மறவனது தலையினைக் கொணர்ந்து தந்தான் இவன். அப்படித் தந்தவனுக்கு, மிகப் புகழ்ந்து வந்தார்க்கு உவப்புடன் கொடுக்கும் வாழ்வாகிய செல்வத்தினை, வேந்தனும் கொடுத்தான். இப்படிக் கொடுத்தல்தான் ஒரு வியப்பாகுமோ!

'அம் மறவனது போராண்மையைக் கிளந்தேத்தி வந்தார்க்கே வாழ்வு ஈயும் வேந்து, அவன் தலையினையே தந்தானுக்குச் சிறப்புச் செய்தல் வியப்போ?' எனக் கண்டோர் கூறுவது இது. தலைக்கு அரசன் அளித்த சிறப்பினைக் கூறுதலால் தலைமாராயம் ஆயிற்று. மாராயம், அரசனாற் செய்யப் பெறுகின்ற சிறப்பு. 'வியப்பன்று' என்பதும், அதுவே வேந்தனது கடமை என்பதும் குறிப்பாக உணர்த்தப் பெற்றன.

## 12. தலையொடு முடிதல்

*மண்டமருள் மாறாமைந்திற்*
*கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று.*

*இரு சாராரும் தம்முள் மண்டிச்செய்கின்ற போரினுள், மாறுபடாத வலிமையினைக் காட்டி வீழ்ந்திறந்து கிடக்கின்ற தன் கணவனின் தலையினொடு, திரண்ட வளையணிந்த அவன் மனையியும், தன் உயிர்முடித்துக் கிடந்ததை உரைப்பது, தலையொடு முடிதல்' ஆகும். முடிதல்-உயிர் முடிதல்; இறத்தல்.*

**கொலையானாக் கூற்றங் கொடிதே கொழுநன்**
**தலையானாள் தையலாள் கண்டே-முலையால்**
**முயங்கினாள் வாண்முகஞ் சேர்ந்தினாள் ஆங்கே**
**உயங்கினாள் ஓங்கிற் றுயிர்.** 73

*இத் தையலாள், தன் கொழுநனது தலையினை அமையாத வளாகப் பார்த்தாள்; தன் முலைகளோடும் எடுத்து அணைத்துத் தழுவினாள்; ஒளிசிறந்த தன் முகத்தோடும் சேர்த்துக் கொண்டாள்; அவ்விடத்தே, அந்நிலைக்கு மிகவும் வருந்தினாள்; அவ்வளவில், அவளுடைய உயிரும் அவ்விடத்தேயே போய்விட்டது! கொலைத் தொழிலை அமையாத கூற்றம் மிகவும் கொடுமை உடையதே!*

*'உயக்கம்' அவன் உயர் தன்னுயிரைப் பிரிந்து முற்படப் போயினமைக்கு நெஞ்சழிந்து அவள் வருந்திய வருத்தம். மறத்தியது கற்புச் செறிவினைக் கண்டார், மறவனது மறச் செவ்வியையும் நினைந்து இவ்வாறு கூறினர். காஞ்சி மறவனது மனையாளாதலால், போர்க்களம் ஊரை அணித்தான இடத்தையே அமைதலால், இது நேர்வதாயிற்று.*

## 13. மறக் காஞ்சி-1

***இலைப்பொலிதார் இகல்வேந்தன்***
***மலைப்பொழிய மறங்கடைஇயன்று.***

*பச்சிலையினாலே பொலிவுபெற்ற மாலையாற் சிறந்தவனும், மாறுபாட்டை உடையவனுமான காஞ்சி வேந்தன், பகைவரது போர்ச்செயல் நீங்குமாறு, தன் மறத்தொழிலைச் செலுத்தியது, மறக்காஞ்சி எனப்படும்.*

*மலைப்பு-போர். ஒழிய-நீங்க; அதாவது வஞ்சியார் கெட்டழிய. மறம்-பேராண்மை. கடைஇயன்று-செலுத்தியது. காஞ்சியானின் மறமாண்பு உரைத்தல் 'மறக்காஞ்சி' ஆயிற்று.*

**கருந்தலையும் வெண்ணிணமுஞ் செந்தடியு மீராப்**
**பருந்தோ டெருவை படர-அருந்திறல்**
**வேறாய மன்னர் வியப்பக் கடாயினான்**
**மாறா மறவன் மறம்.** 74

நீங்காத மறமாண்பினைக் கொண்டோனான காஞ்சி மன்னன், அரிய வெற்றிச் சிறப்பினையுடைய பகைமன்னரும் வியப்புக் கொள்ளுமாறும், பருந்தும் கழுகும் இழுத்துக் கொண்டு செல்லுமாறும், கருந்தலையும், வெள்ளிய நிணமும், சிவந்த தசையும் எங்கணும் மிகுமாறு, தனது மறத்தொழிலைக் களத்திடத்தே செலுத்தினான்.

தடி-தசை. மறம்-மறத்தொழில். 'பகைமன்னர் வியத்தல்,' இவனது போர்மறத்தினைக் கண்டு. பருந்தும் கழுகும் படர்தல், அவனால் தமக்குப் பிணங்கள் மிகுதியாகக் கிடைக்கும் என்றதனால். இது, அவன் முன்பும் களங்களில் காட்டிய மறமாண்பினை உடையவன் என்றற்காம்.

## 14. மறக்காஞ்சி-2

*மண்கெழு மறவன் மாறுநிலை நோனான்*
*புண்கிழித்து முடியினும் அத்துறை யாகும்.*

போரிடை நிலத்திலே பட்டுவீழ்ந்த காஞ்சி மறவன், பகைவருடைய மாறுபாட்டிற்குப் பொறானாகத், தன் மார்பிற் பட்ட புண்ணைத் தானே கிழித்துக் கொண்டு தன் உயிரினை விடின், அதுவும் மறக்காஞ்சித் துறை ஆகும்.

மாறுநிலை-களத்தே பகைவர் முன்னேறி வருகின்ற தனக்கு மாறுபாடான நிலைமை. அப்போது, மானவே மிகத் தன் உயிரைத் தானே போக்கிக் கொள்ளுதலால், இது 'மறக் காஞ்சி' ஆயிற்று.

**நகையமர் ஆயம் நடுங்க நடுங்கான்**
**தொகையமர் ஓட்டிய துப்பிற்-பகைவர்முன்**
**நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலாற்**
**பொங்கிப் பரிந்திட்டான் புண். 75**

மகிழ்ச்சிமேவும் தன்னுடைய கூட்டத்தினர் நடுங்கிக் குலையவும், தான் குலையானாய்ச், செறிந்த போரினை ஓட்டிய வலியினையுடைய பகைவர், தன்முன் அமைந்த எல்லையைக் கைப்பற்றிக் கொண்டு தன்பாற் சினந்து வருதலைப் பொறாதவனுமாய், ஒரு காஞ்சி மறவன், வெகுண்டு தன்னுடைய வேலின் முனையினாலே தன் மார்பிற் புண்ணைப் பிளந்து தன் உயிரினை விட்டான்.

'பண்புற வரூஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் மறம்' எனத் தொல்காப்பியப் புறத்திணையியல் (சூ. 24) இதனை உரைக்கும். நகையமர் ஆயம்-நகைத்தலை மேவிய தானையர்; 'நகைத்தல்' அவர் புறமுதுகிட்டு ஓடுதலால் வந்துறும் பிறர் நகையாகிய இழிவு. புறமுதுகிட்டான் என்ற பழியொடு புண்தீர்ந்து

*வாழ விரும்பாது, புண்கிழித்து உயிர்விட்டுச் சிறப்புற்றதால் மறக்காஞ்சி ஆயிற்று.*

## 15. பேய் நிலை

***செருவேலோன் திறம்நோக்கிப்***
***பிரிவின்றிப் பேயோம்பின்று.***

*போரினைச் செய்த வேலினையுடைய மறவன், விழுப்புண் பட்டுக் கிடந்த திறப்பாட்டைக் கண்டு, பேய் ஒன்று, அவனை விட்டு அகலாதிருந்து பாதுகாத்தலை உரைப்பது, பேய் நிலை ஆகும்.*

**ஆயும் அடுதிறலாற் கன்பிலா ரில்போலும்**
**தோயும் கதழ்குருதி தோள்புடைப்பப்-பேயும்**
**களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்**
**உளம்புகல ஓம்ப லுறும்.** 76

*நிலமெல்லாம் நனைய விரைந்த குருதியானது தோளிலே அலைப்பக், களத்திலுள்ளார் விரும்புமாறு வெகுண்டு போர் செய்து, பகைவரது கதிர்த்த வேல்வர்ய்ப்பட்டு வீழ்ந்து கிடந்த மறவனை, அவன் உள்ளம் மகிழுமாறு, பேயும் அருகிருந்து காவல் காத்திருக்கும். பலரும் கொண்டாடும் போரடுதலிலே திறப்பாடுகொண்ட இம் மறவனுக்கு, அன்பில்லாதவர் எவரும் இல்லைபோலும்!*

*பேயும் அன்புகாட்டி ஓம்புதலைக் கூறுதலால், இது பேய் நிலைத் துறை ஆயிற்று. கதிர்வேல்-ஒளிவிடும் வேலும் ஆம். 'ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற் பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும் (புறத்-24)' எனத் தொல்காப்பியம் இதனை உரைக்கும். களத்து வீழ்ந்தாரின் உடலையுண்டு களித்தலை விரும்பித் திரிவதான பேயும், அவனுடைய மறமாண்பினை வியந்து, அவனுடற்குத் தீது நேராதபடி காத்துநின்றது என்க.*

## 16. பேய்க் காஞ்சி

***பிணம் பிறங்கிய களத்து வீழ்ந்தாற்கு***
***அணங் காற்ற அச்சுறீஇ யன்று.***

*பிணங்கள் மிகுந்த போர்க்களத்திலே விழுப்புண்பட்டு வீழ்ந்து கிடந்த ஒரு மறவனுக்குப் பேயானது, மிகவும் அச்சமுறுத்தியதனை உரைப்பது, பேய்க் காஞ்சி ஆகும்.*

*'பேய் மிகுதியாக அச்சுறுத்த முயன்றாலும், வீரன் அஞ்சானாகி அழல நோக்குவான்' என்பதனையும் இவ்விடத்தே கருத்திற் கொள்ளல் வேண்டும்.*

**கொட்கு நிமிருங் குறுகுங் குடர்சூடிப்**
**பெட்ப நகும்பெயரும் பேய்மகள்-உட்கப்**
**புனலங் குருதிப் புலால்வாய்க் கிடந்து**
**கனல விழிப்பவற் கண்டு. 77**

*பேய்மகள், அழகிய குருதிப்புனலிடத்தே புலாலிடத்துக் கிடந்து அழலநோக்கும் காஞ்சி மறவனைக் கண்டாள் அவன் அஞ்சுமாறு, அவன்முன் நின்று தான் சுழன்றாள். நெடிதுயர்ந்தும் கூனிக் குறுகியும் காட்டினாள். குடர் மாலையினைச் சூடிக் கொண்டு தன்னுள்ளம் விரும்பச் சிரித்தும் நின்றாள். பின்னரும், அவன் அஞ்சானாதலைக் கண்டதும் அவ்விடம் விட்டுப் பெயர்ந்தும் போயினாள்.*

*'பெயரும்' என்றது, அவன் அச்செயல்களால் அஞ்சாது மீளவும் கனல விழித்தலால், அதுகண்டு பேய்மகள் அஞ்சியதால் என்க. சாவினும் கலங்காத வீரனது தறுகண்மை இதனாற் கூறப்பெற்றதும் காண்க.*

## 17. தொட்ட காஞ்சி

***வியன் மனை விடலைபுண் காப்பத்***
***துயன் முலைப் பேழ்வாய்ப்பேய் தொட்டன்று.***

*அகன்ற இல்லினிடத்தே, தலைமகனது விழுப்புண்ணை மருந்திட்டுச் சுற்றத்தார் காத்திருப்ப, நான்ற முலையினையும் பெரிய வாயினையும் கொண்ட பேய்மகள் அங்குச் சென்று, அதனைத் தொட்டுப் பார்ப்பது, தொட்ட காஞ்சி எனப்படும்.*

**கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்**
**நின்றுருத்து நோக்கி நெருப்புமிழாச்-சென்றொருத்தி**
**ஒட்டார் படையிடந்த ஆறாப்புண் ஏந்தகலம்**
**தொட்டாள் பெருகத் துயில். 78**

*பேய்மகள் ஒருத்தி, மிக்க இருளின் கண்ணே வீரனின் மனையிடத்துச் சென்றாள்; பகைவரைக் கொன்று மேலும் வெகுண்டு மேற்செல்லும் பண்பினனான, கூரிய வேலினையுடைய அவ்வீரனை நெருங்கியும் நின்றாள்; அவனைச் சினந்து நோக்கியவளாகவும் நின்றாள். அழலினை உமிழ்ந்து கொண்டிருப்பதும், பகைவரது வேற்படை பிளந்ததும், ஆறாத புண்ணை உடையதுமான அவன் மார்பினை, அவன் பேருறக்கம் கொள்ளும்படியாகத் தொடுதலையும் செய்தாள்.*

*'துயில் பெருக' என்றது, உயிர்போக என்பதற்கு, ஆறாப் புண்- ஆறமாட்டாத பெரும்புண். பேய், புண்பட்டுக் கிடப்பாரை இப்படிக் கொல்வதற்கு மாற்றாகச் செய்யும் மரபுகளை அடுத்த துறையிற் காணலாம்.*

## 18. தொடாக் காஞ்சி

*அடல் அஞ்சா நெடுந்தகை புண்*
*தொடல் அஞ்சித் துடித்து நீங்கின்று.*

*கொலைத் தொழிலுக்கு அஞ்சாத பெரிய நிலையினை யுடைய மறவனின் புண்ணினைத் தொடுதற்கு அஞ்சிப், பேயொன்று நடுங்கிப் பெயர்ந்ததனை உரைப்பது, தொடாக் காஞ்சி ஆகும்.*

*'மறவனுடைய மனைவியானவள், பேயினை, அதற்குப் பகையானவற்றை ஆங்கு வைத்துக் கடிந்து, தானும் தொடாதிருத்தல் தொடாக் காஞ்சி' எனத் தொல்காப்பியர் உரைப்பர் (புறத்-24.).*

**ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூய்க்**
**கொய்யாக் குறிஞ்சி பலபாடி-மொய்யிணர்ப்**
**பூப்பெய் தெரியல் நெடுந்தகைபுண் யாங்காப்பப்**
**பேய்ப்பெண் பெயரும் வரும்.** 79

*செறிந்த கொத்தினையுடைய மலரிட்டுத் தொடுத்த மாலையால் நிறைந்த மேம்பாட்டினையுடைய புண்ணை யாங்கள் வெண்சிறு கடுகினைத் தூவியும், நறுமணப் பொருள்களைப் புகைத்தும், பேய்க்குப் பகையாகத் தெரிந்த மலர்களைத் தூவியும், குறிஞ்சிப்பண் பலவற்றைப் பாடியும் காத்திருப்பப் பேய்ப்பெண் அஞ்சி நீங்கும். மீளவும் எம் சோர்வை எதிர் நோக்கி வரும்; மீளவும் அஞ்சி நீங்கும்.*

*கொய்யாக் குறிஞ்சி-குறிஞ்சிப் பண்; இதனைப் பாடுதலால் வேலனின் அருள்தல் கிடைக்கப் பேய் நீங்கும் என்பர், ஐயவியும் நரையும் ஆய்மலரும் பேய்ப்பகை.*

## 19. மன்னைக் காஞ்சி

***வியலிடமருள விண்படர்ந்தோன்***
***இயல்பேத்தி அழிபிரங்கின்று.***

*அகன்ற பூமியிலுள்ளார் மயங்கா நிற்பப், போரிலேபட்டு விண்ணகம் சென்றவனுடைய மறப்பண்பினைப் போற்றி, அவனது இறப்பிற்கு நொந்து வருந்துவது, மன்னைக் காஞ்சி ஆகும்.*

*'இன்னன்' எனக் கூறி, மன்னைச் சொல் பெய்து உலகினர் இரங்குதலால், மன்னைக் காஞ்சி' ஆயிற்று. (தொல் புறத் சூ. 24)*

**போர்க்குப் புணைமன் புரையோர்க்குத் தானுமன்**
**ஊர்க்கும் உலகிற்கும் ஓருயிர்மன்-யார்க்கும்**
**அறந்திறந்த வாயில் அடைத்ததால் அண்ணல்**
**நிறந்திறந்த நீளிலை வேல்.** 80

*போர்த்தொழிலைக் கடத்தற்கு ஒரு புணை போன்றவன். உயர்ந்தோர்க்குத் தாணுவைப் போன்றவன்; ஊருக்கும் உலகிற்கும் ஓர் உயிரைப் போன்றவன்; எம் அண்ணலாகிய இவன்! இவனது மார்பைப் பிளந்த, நீண்ட இலைத் தொழிலாற் சிறந்த பகைவரது வேற்படையானது, யாவருக்கும் அறம்பேணுதலின் பொருட்டுத் திறந்திருந்த ஒரு வாயிலையும் இப்போது அடைத்துவிட்டதே!*

*'அவன் நிறந்திறந்த வேல், அவனுயிரை அழித்ததுடன் அமையாது, அறந்திறந்த வாயிலை அடைத்தலுக்கும் ஏதுவாகிப், பின்னும் பலரது உயிரையும் போக்குதற்குக் காரணமாயிற்றே' என, அதனது அறக்கொடுமையைக் கூறினர்.*

## 20. கட் காஞ்சி

***நறமலியும் நறுந்தாரோன்***
***மறமைந்தர்க்கு மட்டீந்தன்று.***

*தேன் மிகுந்த, நறுமணமுள்ள, தாரினை உடையவனான காஞ்சி வேந்தன், தறுகணாளரான தன் படைமறவர்க்குக் கள்ளினை வழங்குவது, 'கட்காஞ்சி' ஆகும்.*

*மட்டு-கள். இதனை வழங்குதல் அவர்க்குப் போர்மறம் மிகுதற்பொருட்டு.*

**ஒன்னா முனையோர்க்கு ஒழிக இனித்துயில்**
**மன்னன் மறவர் மகிழ்தூங்கா-முன்னே**
**படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்**
**விடலைக்கு வெங்கள் விடும்.** 81

*வேந்தன் மறவர்கள் களித்து ஆடத் தொடங்குவதற்கு முன்பாகத், தழைக் கற்றையான் வேய்ந்த குடிலிடத்துப், புன்கட் கிழவியானவள் பெற்ற இந்த வீரனுக்கு, வெம்மையான கள்ளினை விடாநின்றாள். இனிப் பகைமுனையிலே இருப்போரான வஞ்சிமறவர்க்குத் துயிலும் ஒழிவதாக!*

*'ஒன்னா முனையோர்க்குத் துயில் இனி ஒழிக' என்றது, கள்ளின் களிப்பால் இம்மறவன் இப்போதே அவர்மேற் செல்லலும் கூடும் என்பதால். 'மன்னன்', காஞ்சி மன்னன். கள்ளினை, வீர பானம் எனவும் உரைப்பர்.*

## 21. ஆஞ்சிக் காஞ்சி-1

*காதற் கணவனொடு கனையெரி மூழ்கும்*
*மாதர்மெல் லியலின் மலிபுரைத் தன்று.*

*அன்பினையுடைய தன் கணவனொடு, முழங்கும் எரியிடத்தே மூழ்கியவளாகத் தன் உயிரையும் அவனுடனே சேர்க்கின்ற, காதன்மிகுந்த மெல்லியலாளினது மேம்பாட்டைக் கண்டோர் உரைப்பது, ஆஞ்சிக் காஞ்சி யாகும்.*

*கனையெரி மூழ்கும் அவளது செயல், பிறரால் அச்சத்துடன் போற்றத்தகும் செயலாதலின், ஆஞ்சிக் காஞ்சி ஆயிற்று; அஞ்சி-ஆஞ்சியென முதல் நீண்டது.*

**தாங்கிய கேளொடு தானும் எரிபுகப்**
**பூங்குழை யாயம் புலர்கென்னும்-நீங்கா**
**விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்**
**புலாழித் தலைக்கொண்ட புண்.** 82

*ஒழியாத வாய்நுரையினையுடைய குதிரைகளாற் பொலிந்த படையினையும், வெவ்விய வலியினையும் உடையவரான பகைவர்கள், தன்னுடைய சிற்றூரிடத்தே வந்து, புலால் நாற்றத்தையுடைய சக்கரப் படையினாலே எறிய, அதனால் மார்பிற்பட்ட புண்ணினைத் தாங்கியிருக்கும் தன் கணவனொடு தானும் எரியிடத்தே புகுதலைக் கருதிப், பொலிவான மகரக் குழையினை உடையவளான அவன் மனைவி, தன் தோழியரை 'அகலப் போமின்' என்பாள்.*

*விலாழி-குதிரையின் வாய் நுரை. தோழியரை அகலப் போமின் என்றது, அவர் அவளுடல் வெந்து கருகுதலைப் பொறாதாராய் அச்சமுற்று நலிவர் என்பதனாலாம்.*

## 22. ஆஞ்சிக் காஞ்சி-2

*மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்*
*இன்னுயிர் நீப்பினும் அத்துறை யாகும்.*

*தன் தலைவன் உயிரைப்போக்கின அந்த வேலினாலேயே அவன் மனையோள், தன் இன்னுயிரைப் போக்கிக் கொள்ளினும், அது ஆஞ்சிக் காஞ்சி ஆகும்.*

**கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை**
**வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்-அவ்வேலே**
**அம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்**
**கொம்பிற்கு மாயிற்றே கூற்று.** 83

வெய்யதான வேலின் வாயிலே பட்டு வீழ்ந்தான், வெற்றியை விரும்பினோனான வீரமறவன். அம்பினைப் போலப் பிறழுகின்ற பெரிய கண்களையுடைய அவனுடைய காதற் பூங்கொம்பான மனைவிக்கும், அந்த வேலே இப்போது கூற்றம் ஆயிற்றே! ஆரவாரத்தான் மிக்க கடல்சூழ்ந்த இந்த நிலவுலகத்தின்கண், கற்புடைமை என்பது மிகவும் கொடிதேகாண்!

கவ்வை-ஆரவாரம், 'கற்புடைமை கடிதாயது' அந்நங்கையின் உயிரைக் குடிப்பதற்கு அதுவே ஏதுவாயினதால். இச் செயலைக் கண்டோரும் அஞ்சி ஒதுங்குவராதலால், இதுவும் ஆஞ்சிக் காஞ்சி ஆயிற்று.

## 23. மகட்பாற் காஞ்சி

*ஏந்திழையாள் தருகென்னும்*
*வேந்தனொடு வேறுநின்றன்று.*

'அழகிய இழைகளை உடையாளான நின் மகளை எனக்குத் தருக' எனக் கேட்கும் வஞ்சி வேந்தனொடு, காஞ்சியான், வேறுபட்டு நிற்பது, மகட்பாற் காஞ்சி ஆகும்.

**அளிய கழல்வேந்த ரம்மா வரிவை**
**எளியளென் றெள்ளி யுரைப்பிற்-குளியாவோ**
**பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த**
**கண்போற் பகழி கடிது.** 84

அளியினையுடைய கழன்மன்னர், 'அழகிய திருமகளைப் போன்ற நம் அரசனது செவ்வியைக் கொள்ளுகைக்கு எளியள்' என்று இகழ்ந்து பேசினால், பண்ணைப்போன்ற இன் சொல்லையும், பலவாகிய வளைகளையும் உடைய அவளது ஒளி முகத்திலே விளங்கும் கண்களைப் போன்ற வடிவுடைய அம்புகள், விரையச் சென்று அப்பகை மன்னரது மார்பிடத்தே குளிக்க மாட்டாவோ?

தன் மகளை வலிந்து கொள்ளல் எளிதென வந்த வஞ்சி வேந்தனை மறுத்துக் காஞ்சியான் உரைப்பது இது. இதனாற் சினமிகுதி உடையவனாக, அவன் பகைவரை அழிக்க முற்படுவான் என்பதனால், 'கண்போற் பகழி கடிது குறியாவோ!' எனக் கண்டோர் கூறினர்.

## 24. முனைகடி முன்னிருப்பு

*மன்னர்யாரையு மறங்காற்றி*
*முன்னிருந்த முனைகடிந்தன்று.*

*வஞ்சி வேந்தனொடு துணையாக வந்த மன்னர்கள் அனைவரையும், அவர் மறத்தினை வெளிப்படச் செய்து போராடி, அவரை முன்னேயிருந்த பூசற்களரியினின்றும் போக்கியது, முனைகடி முன்னிருப்பு ஆகும்.*

*முனையினின்றும் கடியப்பட்ட முன்னிருப்பு ஆதலால், முனைகடி முன்னிருப்பு ஆயிற்று.*

**கடிகழல வேரிக் கடைதொறும் செல்லக்**
**கொடிமலி கொல்களி றேவித் - துடிமகிழ**
**ஆர்த்திட் டமருள் அடையாரை அம்முனையிற்**
**பேர்த்திட்டான் பெய்கழலி னான்.** 85

*இட்ட வீரக்கழலினை உடையவனான காஞ்சி மன்னன், போருள் துடிப்பறை கொட்ட ஆரவாரித்தவனாக, வெற்றிக் கொடியால் மிக்க கொல்களிறுகளை ஏவி, மிகநாறும் மதுவினையுடைய மாற்றார், அரணிடத்து வாயிலிடந்தொறும் புறங்கொடுத்துப் போகும்படியாக, அவர்களை அப் போர்முனையினின்றும் அகற்றினான்.*

*வேரி-கள். பகைவரை அவர் நின்ற போர்முனையினின்றும் சிதறியோடச் செய்த மறச்செயல் இதுவாகும்.*

## தொகுத்து உரைத்தல்

*பகைத்து வஞ்சிசூடித் தன் அரண்மேற் படையெடுத்து வந்த மாற்றரசனை, அந்த அரணுக்கு உரியவன் போர் மலைந்து வென்று, தன்னிடத்தைக் காத்துக் கொள்ளுதலாகிய திணை இந்தப் பகுதியாம். இது, இருபத்திரண்டு துறைகள் கொண்டதாக நிகழும். அவை-*

*மேல்வரும் படைவரவிற்கு மிகவும் ஆற்றாத மறவனின் வெற்றியை மிகுத்துச் சொல்லும் காஞ்சியதிர்வும்; காஞ்சியானின் படை சுரத்தினை வரம்பிகவாதபடி காத்தலாகிய தழிஞ்சியும்; மறவர்க்குப் படைவழங்குதலாகிய படைவழக்கும்; வழங்கிய பின்னர் அம்மறவர் தம்முடைய மறப்பண்பினை விதந்து கூறுதலாகிய அதுவும்-*

*பகைவரை எதிர்த்துத் தம் போர் வலிமையை வெளிப்படுத்தலாகிய பெருங்காஞ்சியும்; நல்ல நாளிலே வாளைப் புறவீடு விடுதலாகிய வாட்செலவும்; குடையைப் புறவீடு விடுதலாகிய குடைச் செலவும்; பகைவரை வெல்வதுபற்றி வஞ்சினம் உரைத்தலான வஞ்சினக் காஞ்சியும்-*

காஞ்சியானின் படைமறவர் போர்ப்பூக் கொள்ளலாகிய பூக்கோள் நிலையும்; களத்தில் பட்டானது தலையது மாண்பினைப் பாராட்டும் தலைக்காஞ்சியும்; 'தலைகொடுத் தானுக்கு அரசன் செய்யும் சிறப்பாகிய தலைமாராயமும்; களத்தே வீழ்ந்து பட்டுக்கிடந்த கணவனின் தலையொடு மனைவியும் உயிர் விடுதலாகிய தலையொடு முடிதலும்-

பகைவரது மலைப்பு நீங்குமாறு காஞ்சி வேந்தன் போரைச் செலுத்துவதும், நிலத்து வீழ்ந்த மறவன் தன் புண்ணைத் தானே கிழித்து உயிர் விடுவதும், ஆகிய மறக்காஞ்சியும்-

களத்திலே விழுப்புண்பட்டுக் கிடந்த வீரனைப் பேய் ஓம்புதலாகிய பேய்நிலையும்; பேய் வீரனை அச்சுறுத்த முயலுதலாகிய பேய்க் காஞ்சியும்; புண்ணுற்றுக் கிடந்த வீரனது புண்ணைத் தொட்டு அவனுயிரைப் பேய் போக்குதலாகிய தொட்ட காஞ்சியும்; பேய்ப்பகை அமைந்திருக்கப் பேய் தொடாதேயே அகலும் தொடாக் காஞ்சியும்-

வீழ்ந்த தலைவனது முன்னைச் சிறப்பைக் கூறுதலால் அமையும் மன்னைக் காஞ்சியும்; மறவர்க்குக் கள் வார்க்கும் கட்காஞ்சியும், காதற் கணவனொடு மனைவி எரிமூழ்கியும், வேலினாற் குத்திக்கொண்டும் உயிர்விடுதலாகிய ஆஞ்சிக் காஞ்சியும்-

மகள் தர மறுத்தலாகிய மகட்பாற் காஞ்சியும்; பகைவரை முன்னிருந்த போர்முனையினின்றும் ஓட்டுதலாகிய முனைகடி முன்னிருப்பும் ஆகியவை ஆம்.

✡✡✡

# 5. நொச்சிப் படலம்

*(காஞ்சித் திணை, தன் நாட்டின்மேற் படைகொண்டு வந்து தாக்கிய வஞ்சிவேந்தனை வெற்றிகொண்டு, தன் நாட்டைக் காத்தலின் பொருட்டாக, அந் நாட்டு மன்னன் காஞ்சிப் பூச்சூடிப் போரிடல் பற்றிய செய்திகளை உரைத்தது, இந்த நொச்சிப் படலமும் அங்ஙனம் பகைவேந்தனின் தாக்குதலுக்கு எதிர்த்து நிற்பதுதான். என்றாலும், இது அரணகத்தே இருக்கும் மறவர்கள், தாம் நொச்சிப் பூச்சூடி, அரணினை முற்றியிருப்பாரது *(* அரணை முற்றுவாரது கூறுபாடுகளை உரைப்பது உழிஞைத் திணை' எனப் பின்னர் வரும்.) தாக்குதலைத் தாங்கி, அவரை வென்று, தம் அரணிடத்தைக் காத்துக் கொள்வது ஆகும். இந்த அடிப்படையை மனத்தகத்தே கொண்டே இந்தப் பகுதியை நாம் கற்றல் வேண்டும்.)*

**நுவலரும் காப்பின் நொச்சி யேனை**
**மறனுடைப் பாசி ஊர்ச்செரு என்றா**
**செருவிடை வீழ்தல் திண்பரி மறனே**
**எயிலது போரே எயில்தனை அழித்தல்**
**அழிபடை தாங்கல் மகள்மறுத்து மொழிதல்என**
**எச்சமின்றி எண்ணிய ஒன்பதும்**
**நொச்சித் திணையுந் துறையும் ஆகும். (5)**

*நொச்சித் திணையும் அதன் துறைகளும் பற்றிக் கூறுவது இச் சூத்திரம். நொச்சித் திணையும்; மறனுடைப் பாசி, ஊர்ச்செரு, செருவிடை வீழ்தல், குதிரை மறன், எயிற்போர் எயில்தனை அழித்தல், அழிபடை தாங்கல், மகண் மறுத்து மொழிதல் ஆகியவாகச் சொல்லப்பட்ட எட்டுத் துறைகளுமாக வரும் ஒன்பதும் இத்திணையும் இதன் துறைகளும் ஆம்.*

## நொச்சித் திணையின் விளக்கம்

*ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்*
*காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று.*

*ஏவறையை உடைய முடக்குகளைத் தாங்கின நிலைமையினையுடைய எயிலினைக், காக்கும் வீரர் சூடிக் கொண்ட நொச்சிப் பூவினது சிறப்பினைப் புகழ்வது, நொச்சித் திணை ஆகும்.*

'எயில் காத்தல்' நொச்சித் திணை என்பது கருத்து. தொல்காப்பியர் இதனையும் உழிஞையுள் சேர்ந்ததாகவே கொள்வர். 'முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும், அனைநெறி மரபிற்று ஆகும் என்ப' என்பது அவரது சூத்திரம் (புறத் 10) 'உழிஞையும் நொச்சியும் தம்முள் மாறே' என்ற பன்னிருபடல விதியையொட்டி அமைந்தது இந்நூல்.

வெட்சியுள் கூறப்பட்ட 'புறத்திறை' என்பது, காட்டரணைப் பகைவர் வளைத்துக் கொள்வது. இதுவோ பாதுகாவற்குரிய நுட்பமான ஏற்பாடுகள் பலவற்றையும் உடைத்தாயிருக்கும், மலையும் காடும் நீருமல்லாத அகநாட்டுள் அமைந்த அருமதிலினை, உழிஞையார் முற்றியிருப்ப, அதனைக் காத்து நிற்கும் தன்மையை உரைப்பது. வஞ்சியானுக்கு எதிர்சென்ற காஞ்சியான் தோற்றுத் தன் அரணிடத்தே சென்றிருத்தலும், வஞ்சியான் உழிஞை மேற்கொண்டு முற்றியிருப்பக், காஞ்சியான் நொச்சி சூடிக் காத்தலும், இத் திணையின் ஒழுக்கமாகவே கருதப்படும்.

**ஆடரவம் பூண்டான் அழலுணச் சீறிய**
**கூடரணங் காப்போர் குழாம்புரையைச் - சூடினார்**
**உச்சி மதிவழங்கும் ஓங்கு மதில்காப்பான்**
**நொச்சி நுதிவே லவர்.** 86

நுனையாற் சிறந்த வேலினை உடையவரான மறவர்கள், தனது உச்சியின்கண்ணே மதியமானது ஊரும்படியாக உயர்ந்த அரணிடத்தைக் காவல் செய்வான் வேண்டி, ஆடும் பாம்பாபரணத்தைப் பூண்டானான சிவபிரான் அழலுண்ணு மாறு சினந்த, திரிபுரத்தைக் காப்போரான அவுணர்குழாத்தைப் போலத் திரண்டவராக, நொச்சிப் பூவினைச்சூடிக் கொண்டனர்.

நொச்சியாரது போராண்மையும், எயிலைக் காப்பதனிடத்து அவர் கொண்டிருந்த உறுதிப்பாடும் இதனால் விளங்கும்.

## நொச்சித் திணையின் துறைகள்

### 1. மறனுடைப் பாசி

*மறப்படை மறவேந்தர்*
*துறக்கத்துச் செலவுரைத்தன்று.*

மறத் தகைமையினையுடைய படைமறவர்களது தலைவரா யினாரான மறவேந்தர், உழிஞை மறவரொடு பொருது வீரசுவர்க்கத்துச் சென்ற போக்கினை உரைப்பது, மறனுடைப் பாசி ஆகும்.

**பாயினார் மாயும் வகையாற் பலகாப்பும்**
**ஏயினார் ஏய இகல்மறவர் - ஆயினார்**
**ஒன்றி யவரற ஊர்ப்புலத்துத் தார்தாங்கி**
**வென்றி அமரர் விருந்து.** 87

*அரணைச் சூழப் பரந்திருந்த உழிஞையார் மாயும் வகையினாற், பலவாகிய காப்பும் அவர்மேல் ஏவினார்; அங்ஙனம் ஏவிய மாறுபாட்டையுடைய நொச்சி மறவர்கள், அதன்பின் வெளிப் போந்து, எதிரதாகக் கிட்டினவர் அழியும்படி வெட்டி வீழ்த்தியவாறே, ஊரிடத்து வந்து கொண்டிருந்த பகைவரது தூசிப்படையினைத் தடுத்துப் போரிட்டு, அப்போரிடையே வெற்றியினையுடைய அமரர்கட்கு விருந்தாகவும் ஆயினார்.*

*நொச்சியாரது போராண்மையினையும், தம்முயிர் கொடுத்தேனும் தம் அரணைக் காக்க முந்துகின்ற தறுகண்மையினையும் கண்டவர், இவ்வாறு கூறினார். நீர்ப்பாசி போன்று நீங்காது படர்ந்திருந்த உழிஞைப் படையினரைக் கலக்கிய மறமாண்பினைக் கூறுதலாலும், அவர் தம்முள் பாசிபோல ஒதுங்கியும் தூர்ந்தும் பொருதலானும், இது மறனுடைப் பாசி ஆயிற்று.*

## 2. ஊர்ச் செரு

***அருமிளையொடு கிடங்கழியாமைச்***
***செருமலைந்த சிறப்புரைத்தன்று.***

*பகைவரால் புகுதற்கரிதான காவற் காட்டினோடு, அதனையடுத்திருந்த அகழியும் அவராற் சிதைவுறாமற்படிக்கு, நொச்சிமறவர் போர்செய்த சிறப்பினை உரைப்பது, ஊர்ச் செரு ஆகும்.*

*அரணின் புறத்தேயுள்ள ஊர்க்கண் இப்போர் நிகழுதலால் 'ஊர்ச்செரு' ஆயிற்று. இதனை, 'ஊர்ச்செரு வீழ்ந்த மறன்' எனத் தொல்காப்பியர் உரைப்பர் (புறத்.சூ. 13.).*

**வளையும் வயிரும் ஒலிப்பவாள் வீசி**
**இளையும் கிடங்கும் சிதையத் - தளைபரிந்த**
**நோனார் படையிரிய நொச்சி விறன்மறவர்**
**ஆனார் அமர்விலக்கி யார்ப்பு.** 88

*நொச்சி சூடியோரான வெற்றியையுடைய மறவர்கள், சங்கும் கொம்பும் ஒலிமுழங்கத், தம் வாளினை வீசியவராகக், காவற்காடும் அகழியும் சிதையுமாறு காவற்கட்டினை அழித்த பகைவரது படை கெட்டோடுமாறு போரை விலக்கி ஆரவாரித்தலை ஒழியாதாராயினர்.*

நொச்சியாரது மறச்செயலைக் கண்டோர் வியந்து கூறியது இது. 'இளையும் கிடங்கும் சிதையத் தளைபரிந்த' பகைவரது போரரை விலக்கி ஆரவாரித்தமை கூறலால், 'ஊர்ச்செரு' ஆயிற்று.

## 3. செருவிடை வீழ்தல்

*ஆழ்ந்துபடுகிடங்கோ டருமிளைகாத்து*
*வீழ்ந்தவேலோர் விறன்மிகுத்தன்று.*

கடத்தற்கரிய ஆழமுடைத்தான அகழியோடு, அரிய காவற்காட்டையும், பகைவர் சிதைத்துவிடாவாறு காத்து நின்று, அந்தப் போரிலே வீழ்ந்துவிட்ட வேலாண்மையுடைய நொச்சிமறவரின் வெற்றியை மிகுத்துச் சொல்வது, செருவிடை வீழ்தல் ஆகும்.

'செரு' என்றது ஊர்ச் செருவினை, 'வீழ்ந்த வேலோர்' எனவே, அவர் அமரர் விருந்தாயினமையும் அறியப்படும் தமக்கு நேரும் அறிவிற்கு அஞ்சாது போருடற்றி வீழ்ந்ததால் அதுவும் வெற்றியாயிற்று.

**ஈண்டரில் சூழ்ந்த இளையும் எரிமலர்க்**
**காண்டகு நீள்கிடங்குங் காப்பாராய்-வேண்டார்**
**மடங்கல் அனைய மறவேலோர் தத்தம்**
**உடம்பொடு காவல் உயிர்.** 89

சிங்கத்தை ஒப்பாரான மறத்தகைமை கொண்ட, வேற்படையினரான நொச்சி மறவர்கள், திரண்ட கொடிப் பிணக்குச் சுற்றின காவற் காட்டையும், நெருப்புப் போன்ற பூவினையுடைய காணத்தக்க நீண்ட அகழினையும் காப்பவராகத், தத்தம் உடம்போடு உயிரினைக் காப்பதனையும் வேண்டாதவராயினர்.

அரில்-கொடிப் பிணக்கம். எரிமலர்-செவ்விய மலர்கள். மடங்கல்-சிங்கம்.

## 4. குதிரை மறம்

*ஏமாண்ட நெடும்புரிசை*
*வாமானது வகையுரைத்தன்று.*

எய்யுந் தொழிலால் மாட்சிமைப்பட்ட நெடிய மதிலகத்தே, நொச்சியாரது பாயுங் குதிரைகள் விளங்கிய வகையினை உரைப்பது, குதிரை மறம் ஆகும்.

ஏ-எய்யுந் தொழில், வாம்-வாவும்; தாவும். வாமான்-குதிரை. குதிரைகளின் மறச்செறிவு கூறுதலால், குதிரை மறம் ஆயிற்று.

**தாங்கன்மின் தாங்கன்மின் தானை விறன்மறவிர்**
**ஓங்கன் மதிலுள் ஒருதனிமா-ஞாங்கர்**
**மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்**
**உயிருணிய ஓடி வரும்.** 90

*தானையிடத்துள்ள வெற்றி மறவர்களே! மலைபோன்ற மதிலினுள்ளாக விருந்த ஒப்பற்றவொரு குதிரையானது, தனது பக்கத்தே கவரிமயிரினையிட்டு ஒப்பனை செய்யப் பொங்கி எழுந்து, மேகத்தையொத்துப் பகைவருயிரை உண்ணும் பொருட்டாக விரைய ஓடிவரும். அதனைத் தடுத்தலைச் செய்யாதீர்கள்! தடுத்தலைச் செய்யாதீர்கள்!!*

*'அதனைத் தடுத்தல் அரிது' என்பது கருத்து. மேகம் நீரையுண்ணுமாறு போலக் குதிரையும் பகைவரது உயிரை உண்ணும் என்பது கூறப்பட்டது. இது குதிரையினது மறமாண்பைக் கண்டார் கூறியது.*

## 5. எயிற்போர்

*அயிற்படையின் அரண்காக்கும்*
*எயிற்படைஞர் இகல்மிகுத்தன்று.*

*கூர்மையான படைக்கலன்களாலே அரணிடத்தைக் காத்திருக்கும், மதிலிடத்துப் படைமறவர்களது மாறுபாட்டைப் புகழ்ந்து கூறுவது, எயிற்போர் ஆகும்.*

**மிகத்தாய செங்குருதி மேவரு மார்பின்**
**உகத்தாம் உயங்கியக் கண்ணும்-அகத்தார்**
**புறத்திடைப் போதந் தடல்புரிந்தார் பொங்கி**
**மறத்திடை மானமேற் கொண்டு.** 91

*மதிலின் அகத்தாரான நொச்சிமறவர்கள், பெருகப் பரந்த செங்குருதியானது பொருந்தின தம் மார்பினின்றும் வீழாநிற்பத் தாம் வருந்தியவிடத்தும், சினம் பொங்கியவராகத், தம் மறத்திடையே மானத்தையே மேற்கொண்டவராக, மதிலின் புறத்தே போந்து தம் பகைவரைக் கொல்லுதலையே விரும்பா நின்றனர்.*

*மானமாவது, 'எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையும்' என்பர். அதனை மேற்கொண்டு, தன் உடலழிவையுங் கருதாது, போரிடலை விரும்பினர் என்க. மேவரு மார்பு-உறுப்பிலக்கணம் பொருந்த விளங்கிய பரந்த மார்பும் ஆம்.*

## 6. எயில்தனை அழித்தல்

*துணிவுடைய தொடுகழலான்*
*அணிபுரிசை அழிவுரைத்தன்று.*

*தெளிவுடைத்தான முழக்கினையுடைய, கட்டும் கழலினை உடையானான நொச்சி மறவன், அழகிய மதிலிடத்துப் போரிலே அழிந்து பட்டதனைக் கூறுவது, எயில்தனை அழித்தல் ஆகும்.*

**அகத்தன வார்கழல் நோன்றாள் அரணின்**
**புறத்தன போரெழில் திண்தோள்-உறத்தழீஇத்**
**தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட**
**வாட்குரிசில் வானுலகி னான்.** 92

*ஆரவாரிக்கும் கழல்களையுடைய வலிய தாள்கள் அரணின் உள்ளிடத்தாக வீழ்ந்தன; போர்த்தொழில் சிறந்த அழகான திண்ணிய தோள்களோ மதிலின் புறத்தாக வீழ்ந்தன; வாளினையுடைய தலைவனோ, தன்னை இறுக அணைத்துத் தன் தோள்களைத் தழுவுதற்கு உரிமைபெற்றவரான துணைவளை யாரான தெய்வமகளிர் கொண்டாட வானுலகிற்குச் சென்றனன்!*

*'துணைவளையார்' என்றது தேவமகளிரை. தாள் அகத்தனவாதலும், தோள் புறத்தனவாதலும் அவனுடல் துணிபட்டு வீழ, அவன் நின்று போரிட்ட நேர்மையினைக் காட்டும். 'எயில்', எயில் காக்கும் மறவனை உணர்த்திற்று. அவன் பகைவர்க்கு எதிர்நின்று தன்னை அழித்தலால், எயில் தனை அழித்தலும் ஆயிற்று.*

## 7. அழிபடை தாங்கல்

*இழிபுடன்று இகல்பெருக*
*அழிபடை அரண்காத்தன்று.*

*நொச்சி மறவருள் சிலர், தம்முடைய வீரரின் அழிபாட்டினைக் கண்டு சினந்து, அதனால் மாறுபாடு பெருக, அழிந்து போய் எஞ்சிய படையினைக் கொண்டு தம் அரணிடத்தைக் காத்து நின்றது, அழிபடை தாங்கல் ஆகும்.*

*அழிந்த படையே மீண்டும் திரண்டு அரணிடத்தைக் காத்து நிற்றலைக் கூறுவதால், அழிபடை தாங்கல் ஆயிற்று.*

**பரிசை பலகடந்து பற்றார் எதிர்ந்தார்**
**எரிசெய் இகலரணங் கொண்மார்-புரிசை**
**அத்தடி உய்யாமை அஞ்சுடர்வா ளோச்சி**
**மிகத்தடிந்தார் மேனின் றவர்.** 93

*பகைவர்கள், எரிதலைச் செய்யும் மாறுபாட்டினையுடைய அரணிடத்தைக் கொள்ளுதலின் பொருட்டாகக், கிடுகுப்படை பலவற்றையும் வென்று எதிர்ந்தாராக, மதிலிடத்தின் மேல் நின்றவரான நொச்சி மறவர்கள், உழிஞையாரான அப் பகைவர்கள் தம் மதிலகத்தே காலிடாதபடியாக, அழகிய ஒளியையுடைய தம் வாளினை ஓச்சிப், பிணங்கள் பெருகுமாறு அவரை வெட்டி வீழ்த்தினார்.*

*எரிசெய் இகல்-உள்ளம் வேதலைச் செய்யும் மாறுபாடு; இது நொச்சியாரின் மனவுறுதியாலும் படையாண்மை யாலும் உழிஞையாரிடத்தே எழுந்தது என்க. பரிசை-ஒரு வகைப் படைக்கலன்.*

## 8. மகண்மறுத்து மொழிதல்

***வெம்முரணான் மகள்வேண்ட***
***அம்மதிலோன் மறுத்துரைத்தன்று.***

*வெய்தான பகையினை உடையவனான உழிஞை மன்னன், நொச்சிமன்னது மகளைத் தனக்கு மணஞ்செய்து தரும்படியாக வேண்ட, அழகிய மதிலிடத்தே உள்ளோனான நொச்சியான், அதற்கிசைய மறுத்துக் கூறுவது மகண்மறுத்து உரைத்தல் ஆகும்.*

*வஞ்சி வேந்தன் மகளைக் கேட்குங்காலத்து, அதற்கிசைய மறுத்துப் போரினை மேற்கொள்ளும் காஞ்சிவேந்தனது நிலையான மகட்பாற் காஞ்சிக்கும், இதற்கும் உளதான வேறுபாட்டினை அறிக. மகட்பாற்காஞ்சி அரசற்கு மட்டுமே உரியது எனவும், இது மறவர்க்கு உரியது எனவும் கூறுவர்.*

**ஒள்வாள் மறவர் உருத்தெழுந் தும்பர்நாட்**
**கள்வார் நறுங்கோதை காரணமாக் - கொள்வான்**
**மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்**
**கருங்கண்ணி வெண்கட்டிற் கால். 94**

*இந்தக் கரிய கண்ணினை யுடையாளது வெள்ளிய கட்டிலின் கால்கள், மேனாளிலே, தேனொழுகும் நறுமாலையினையுடைய இவளின் பொருட்டாக, இவளது இடையது அழகினை எண்ணி, இவளைக் கைப்பற்றும் நோக்கத்தொடு சினந்து போர்க்கெழுந்து, வந்தவரான ஒள்ளிய வாளையுடைய மறவரது, இளமையுடைய போர்க்களிறுகளின் கொம்புகளே யாகும்!*

*'முன் வந்தார்போல் நீவிரும் அழிவீர்; இவளைக் கொள்ளுதலைக் கைவிடுமின்' என உரைத்த திண்மையை அறிந்து இன்புறுக.*

## தொகுத்து உரைத்தல்

*எயில் காத்தலாகிய போரொழுக்கமாக நிகழுவது நொச்சி. இது, நொச்சியார் புறங்கொடாது களத்திற் பட்டதாகிய மறனுடைப் பாசியும்; அவர் ஊர்ப்புறத்து உழிஞையாரொடு போரிட்டதாகிய ஊர்ச்செருவும்; அச்செருவிடையே வீழ்தலாகிய செருவிடை வீழ்தலும்; நொச்சியாரது குதிரைகளின் மறப்பண்பு கூறலாகிய குதிரைமறமும்; எயிலிடத்தே நிகழும் போர்மாண்பு கூறலாகிய எயிற்போரும்; எயில்காப்போன் தன்னை அழித்தும் எயிலைக் காத்து நிற்றலாகிய எயில்தனையழித்தலும்; அழிபடை தாங்கி அரண்காத்தலாகிய அழிபடை தாங்கலும்; நொச்சியான் உழிஞையானுக்குத் தன் மகளைத் தருதற்கு மறுத்து உரைத்தலாகிய மகண் மறுத்து மொழிதலும் ஆகிய, எண்வகைத் துறைகளொடும் பொருந்த நிகழுவதாம்.*

✡✡✡

# 6. உழிஞைப் படலம்

*(எயில் காத்தலாகிய நொச்சித்திணை பற்றி ஐந்தாவது படலத்துக் கூறப்பட்டது. அதனையடுத்து, அங்ஙனம் காத்து நிற்பவரை அழித்து வெற்றிகொள்ளும் துணிவோடு, எயிலை முற்றுகையிடுவாரான மறவரின் ஒழுக்கம் இப்பகுதியில் கூறப்படுகின்றது. இவர் உழிஞைப்பூச் சூடித் தம் வினைமேற் செல்வாராதலினால், அவரது ஒழுக்கமாகிய இதுவும் 'உழிஞை' எனப் பெற்றது.)*

**உழிஞை ஓங்கிய குடைநாட் கோளே**
**வாணாட் கோளே முரச வுழிஞை**
**கொற்ற வுழிஞையோ டரச வுழிஞை**
**கந்தழி யென்றா முற்றுழி ஞையே**
**காந்தள் புறத்திறை யாரெயி லுழிஞையொடு**
**கோட்புறத் துழிஞை பாசி நிலையே**
**ஏணி நிலையே யிலங்கெயிற் பாசி**
**முதுவுழி ஞையே முந்தகத் துழிஞை**
**முற்று முதிர்வே யானைகைக் கோளே**
**வேற்றுப்படை வரவே யுழுதுவித் திடுதல்**
**வாண்மண்ணு நிலையே மண்ணுமங் கலமே**
**மகட்பா லிகலே திறைகொண்டு பெயர்தல்**
**அடிப்பட விருத்தல் தொகைநிலை யுளப்பட**
**இழுமென் சீர்த்தி யிருபத் தொன்பதும்**
**உழிஞை யென்மனார் உணர்ந்திசி னோரே.** (6)

*உழிஞை என்னும் திணையும், அதன் துறைகள் இருபத்தெட்டுமாகச் சொல்லப்பட்ட இவை இருபத்தொன்பதும் உழிஞைக்கு உரியனவாம் என்பர் அறிவுடையோர்.*

*குடைநாட்கோள், வாள்நாட்கோள், முரசவுழிஞை, கொற்றவுழிஞை, அரசவுழிஞை, கந்தழி, முற்றுழிஞை, காந்தள், புறத்திறை, ஆரெயிலுழிஞை, தோலுழிஞை, குற்றுழிஞை, புறத்துழிஞை, பாசிநிலை, ஏணிநிலை, எயிற்பாசி, முதுவுழிஞை, அகத்துழிஞை, முற்றுமுதிர்வு, யானை கைக்கோள், வேற்றுப்படை வரவு, உழுது வித்திடுதல், வாள் மண்ணு நிலை, மண்ணுமங்கலம், மகட்பால் இகலல், திறை கொண்டு பெயர்தல், அடிப்பட*

விருத்தல், தொகைநிலை எனச் சொல்லப்பட்ட இவை இருபத்தெட்டும் உழிஞைக்குரிய துறைகளாம்.

## உழிஞைத் திணையின் விளக்கம்

*முடிமிசைஉழிஞை சூடிஒன்னார்*
*கொடிநுடங்காரெயில் கொளக்கருதின்று.*

ஒரு வேந்தன், தன் முடியின்மேலாக உழிஞை மாலையினைச் சூடிப், பகைவருடைய கொடியசையும் அரணினைக் கைப்பற்றக் கருதியது, உழிஞைத் திணை ஆகும்.

உழிஞை-ஒருவகைக் கொடி. அதனைச் சூடி வினையினை மேற்கொள்ளலால், இது உழிஞை எனப் பெற்றது. தொல்காப்பியர், 'எயில் கோடலையும் முற்றலையும் உழிஞையாகவே கொள்வர்' என்பது முன்னரே உரைக்கப் பெற்றது. ஆனால், இந்நூல் எயில் முற்றலை உழிஞை எனவும், காத்துக்கோடலை நொச்சி எனவும் கூறுவதை அறிதல் வேண்டும்.

**உழிஞை முடிபுனைந் தொன்னாப்போர் மன்னர்**
**விழுமதில் வெல்களிறு பாயக்-கழிமகிழ்வு**
**எய்தாரும் எய்தி இசைநுவலுஞ் சீர்த்தியனே**
**கொய்தார மார்பினெங் கோ.** 95

மட்டஞ் செய்த மாலையாற் சிறந்த மார்பினையுடைய எம் அரசன், தனது முடியிடத்தே உழிஞை மாலையைச் சூடிக் கொண்டனன். இவன், தன்னொடு பொருந்தாத போர் மன்னரது சிறந்த எயிலினைத் தனது வெல்லும் யானைகள் குத்தி உடைக்க, அளவிறந்த களிப்பினை எய்தாதாரான சான்றோரும் களிப்பெய்திப் புகழ்ந்து கூறுவதற்குக் காரணமான, பெரும்புகழினையும் உடையவன்

இது, வேந்தனது உழிஞை சூடிய செயலைப் போற்றிக் கண்டோர் உரைப்பதாம். விழுமதில்-பாதுகாவலாற் சிறந்த மதில். இசை-புகழ்.

## உழிஞைத் திணையின் துறைகள்

### 1. குடை நாட்கோள்

*செற்றடையார் மதில்கருதிக்*
*கொற்றவேந்தன் குடைநாட்கொண்டன்று.*

கொற்றத்தையுடைய வேந்தனானவன், தன்னொடு செறுத்துத், தன்னைப் பணிந்து கூடாதவராகிய பகையரசரின் அரணிடத்தைக் கைப்பற்றக் கருதித், தனது வெண்கொற்றக்

*குடையினை நல்ல நாளிலே புறவீடு விட்டது, குடைநாட்கோள் எனப்படும்.*

**நெய்யணிக செவ்வேல் நெடுந்தேர் நிலைபுகுக**
**கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக-வையகத்து**
**முற்றக் கடியரணம் எல்லாம் முரணவிந்த**
**கொற்றக் குடைநாட் கோள். 96**

*உலகிடத்தேயுள்ள காவலனையுடைய அரணிடங்கள் எல்லாம், நம் மன்னன் தனது கொற்றக்குடையிளை நன்னாளிலே புறவீடுவிட்ட அளவானே, முற்றவும் தம்முடைய மாறுபாடு கெட்டன. அதனால், பகைவரின் குருதியாற் சிவப்புற்ற வேல்கள் இனி நெய்யிட்டு அழகு பெறுக! நெடிதான தேர்கள் எல்லாம் தாம் நிற்பதற்குரிய இடங்களுக்குச் சென்று சேர்க! கொய்த தலையாட்டத்தினையுடைய குதிரைகளும், கொல்லுந் தன்மையவான களிறுகளும் போர்க்குச் செய்த பண்கள் களையப்படுவனவாக!*

*'முரண் அவிதல்' - திறைதந்து பணிந்து பகைமையினைக் கைவிடுதல். பண் விடுக - ஒப்பனையினின்றும் விடுபெற்றனவாக. 'குடைநாட்கோள்' எழுந்ததனைக்கண்டு, படைஞருள் சிலர், தம் அரசனது சிறப்பை மிகுத்துக் கூறியது இது.*

## 2. வாள் நாட்கோள்

***கலந்தடையார் மதில்கருதி***
***வலந்தருவாள் நாட்கொண்டன்று.***

*தன்னொடு நட்புச் செய்து சேராதார்து மதிலிடத்தைக் கைப்பற்றக் கருதி, வெற்றிகொள்ளும் கொற்றவாளினை நன்னாளிலே புறவீடு விட்டது, வாள் நாட்கோள் ஆகும்.*

**வாணாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்**
**பேணார் பிறைதொடும் பேமதிற்-பூணார்**
**அணிகொள் வனமுலையார் ஆடரங்கம் ஏறிப்**
**பிணிகொள்பே யாடும் பெயர்த்து. 97**

*நம் மன்னன் தனது கொற்றவாளினைப் புறவீடு விடுதலை மேற்கொள்ளலும், தம்முடைய தாழ்வினைச் சொல்லிவந்து அவனையடையாத பகைவருடைய, பிறையினைத் தொடுமளவுக்கு உயரமான அச்சம் விளைக்கின்ற மதிலிடத்தே, அணிகலன் நிறைந்த அழகினைக் கொண்ட வனப்பமைந்த முலைகளையுடைய மகளிர்கள் ஆடிக் களிப்புத் தருகின்ற ஆடிடங்கள், பேய்கள் கைகோத்துக் கால்பெயர்த்து நின்று ஆடுகின்ற நிலையினவும் ஆகிவிடுமே!*

வாள் நாட்கோளினைக் கண்டார், அதனால் பகைவரது அரணிடம் அழியப்போகின்ற நிலையினைக் கூறித், தம் அரசனின் வெற்றிச் செவ்வியைப் போற்றியது இது. திணை தொறும் வருகின்ற வாள் நாட்கோள், குடைநாட்கோள் ஆகியவற்றின் வேறுபாடுகளைத் தெளிவாக அறிதல் வேண்டும்; மயங்கல் கூடாது. பேம்-அச்சம்.

## 3. முரச உழிஞை

*பொன்புனைஉழிஞை சூடிமறியருந்தும்*
*திண்புணிமுரச நிலையுரைத்தன்று.*

ஆடு வெட்டியிடுகின்ற பலியினை நுகராநின்ற, திண்ணிதாக வாராற் கட்டின முரசத்தினது நிலையினைப், பொன்னாலே செய்த உழிஞை மாலையினைச் சூட்டியவராக, உழிஞையார் தொழுது போற்றுவது, முரச உழிஞை ஆகும்.

**கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி**
**உதிரா மதிலும் உளகொல் - அதிருமால்**
**பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுள்**
**மாக்கண் முரச மழை.** 98

மலர்கள் மிகுந்த மாலையினை உடையோனும், புகழ் விருப்பினனுமாகிய நம் மன்னவனின் மாளிகையிடத்துப், பெரிய கண்ணினையுடைய வீரமுரசும் முகில்போல முழக்கமிடுகின்றது; இனி, ஒளியாற் சிறந்த நெற்றிப் பட்டத்தினையுடையவும், வெற்றிகொள்பவுமான நம்முடைய போர்க்களிறுகள் குத்திப்பாயக், குலைந்து சிதறிப்போகாத மதில்களும் பகைவரிடத்தே உளவாமோ?

வீரமுரசத்தினது முழக்கம், இடிமுழக்கம்போன்று எழுந்தது என்பார், 'முரச மழை' என்றனர். அந்த முழக்கம் பகைவரது அரண்களது அழிவினது முன்னதாகவே அறிவிப்பது எனப் புகழ்ந்தது இது.

## 4. கொற்ற உழிஞை

*அடையாதார் அரண்கொள்ளிய*
*படையொடு பரந்தெழுந்தன்று.*

தன்னைப் பணிந்து சேராத பகைவரது அரணிடத்தைக் கொள்வதன்பொருட்டாக, உழிஞை வேந்தன், தன் படையொடும் கைவளர்ந்து சென்றது, கொற்ற உழிஞை எனப்படும். கைவளர்தல்- பரந்து செல்லல்.

**வெள்வாட் கருங்கழற்கால் வெஞ்சுடர்வேற் றண்ணளியான்**
**கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்- நள்ளாதார்**
**அஞ்சுவரு வாயில் அருமிளைக் குண்டகழி**
**மஞ்சிவரு ஞாயில் மதில். 99**

*வெள்ளிய வாளினையும், வீரக்கழல் கட்டிய வலிய கால்களையும், வெய்ய சுடரொளி பொருந்திய வேலினையும் தண்ணளியினையும் உடையவன் நம் உழிஞை வேந்தன். அவன், தன் பகைவருடைய அச்சம்வருதலைச் செய்யும் வாயில்களையும், புகுதற்கரிய காவற்காட்டையும், ஆழ்ந்த அகழியினையும், மேகந்தவழும் ஏவறைகளையும் உடைய அரணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டாகக், கொடிகளையுடைய தனது படைகளைத் திரட்டிக் கொண்டு, முற்றுகைக்கு எழுந்தான்.*

*குண்டு-ஆழம். அஞ்சுவரு-வெருவரு. அருமிளை-புகுதற்கரிய காவற்காடு. ஞாயில்-ஏவறை. 'தண்ணளியான் மதில் கொள்வான் கொடித்தானை கொண்டு எழுந்தான்' என வருகின்ற முரண்பாட்டின் இனிமையை அநுபவியுங்கள். இதனைக் 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்' என்பர் தொல்காப்பியர் (புறத். சூ.12).*

## 5. அரச உழிஞை

***தொழில்காவலன் மலிந்தியலும்***
***பொழில்காவலன் புகழ்விளம்பின்று.***

*காவல் தொழிலிலே சிறப்பு மிக்கவனாக நடக்கின்ற, பூமிகாவலனான உழிஞைவேந்தனின் புகழைச் சொல்வது, அரச உழிஞை ஆகும்.*

**ஊக்க முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி**
**ஆக்க மவன்கண் அகலாவால்-வீக்கம்**
**நகப்படா வென்றி நலமிகு தாராற்**
**ககப்படா வில்லை யரண். 100**

*மனவெழுச்சியும், மாறுபாட்டின் பெருமையும் பொருந்திய நல்ல சூழ்ச்சித்திறனும் செல்வப்பெருக்கமும் அவனிடத்திருந்து என்றும் அகலாதனவாம். அதனாற் பெருமையினையும், பிறரால் நகைத்தலுக்கு உட்படாத வெற்றியினையும் நன்மைமிக்க மாலையினையும் உடையவன் இவன். இத்தகைய நம் அரசனுக்கு, அகப்படாதனவாகிய பகைவரது அரண்கள் இனி எதுவுமே இல்லையாம்!*

*தொல்காப்பியர் கூறும், 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்' (புறத். சூ-12) என்பதோடு ஒப்புடையது இது. அஃதாவது*

குறித்த குறிப்பினை முடிக்கின்ற வேந்தனது சிறப்பினை, அவன் படைத்தலைவன் முதலியோரும், பகை மன்னர்பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தல்.

## 6. கந்தழி

*மாவுடைத்தார் மணிவண்ணன்*
*சோவுடைத்த மறநுவலின்று.*

*வண்டினையுடைய மாலையாற் சிறந்தவனும், நீலமணி போன்ற மேனியை உடையவனுமான திருமால், 'சோ' என்னும் அரணினைச் சிதைத்த மறத்தினைச் சொல்லியது, கந்தழி எனப்படும்.*

*'கந்தினை அழித்தலால் கந்தழி' என இவர் கொண்டனர். கந்தழி என்பதனை, 'ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்' எனக் கூறிப் பாடாண் திணையுள் தொல்காப்பியர் கூறுவர். இரண்டின் வேறுபாட்டையும் உணர்க.*

**அன்றெறிந் தானும் இவனால் அரண்வலித்து**
**இன்றிவன் மாறா எதிர்வார்யார்-என்றும்**
**மடையார் மணிப்பூண் அடையாதார் மார்பிற்**
**சுடராழி நின்றெறியச் சோ.** 101

*மூட்டார்ந்த மணியணியை உடைய பகைவரது மார்பிடத்தே, சுடருகின்ற தன் சக்கரப்படையானது நின்று அழலா நிற்பச், சோ வென்னும் அரணத்தை அந்நாளிலே அழித்தவனும் இவனே! அதனால், தம் அரண் வலியுடையதென்று தேறி, இன்றும், இவனைப் பகையாகக் கொண்டு எதிர்த்து நிற்பார்தாம் யாவரோ?*

*'இஃது உவமையன்று; மிகுதி கூறியது' என்பது பழைய உரை. 'திருமாலே இம் மன்னனாக வந்துள்ளான்' எனத் தம் மன்னனது ஆற்றலை மிகுத்து உரைத்தது இது. 'சோ' வாணாசுரனுக்கு உரித்தாயிருந்த அரண். இந்த வெற்றியை 'வாணன் பேர் ஊர் மறுகிடை நடந்து நீள்நிலம் அளந்தோன் ஆடிய குடமும்' எனச் சிலம்பு உரைக்கும். 16: 54-5)*

## 7. முற்றுழிஞை

*ஆடியல் அவிர்சடையான்*
*சூடியபூச் சிறப்புரைத் தன்று.*

*அசையும் தன்மையினை உடைத்தாய் விளங்கும் சடையினை உடையானான சிவபிரான், திரிபுரத்தை அழித்த போது சூடிய பூவினது சிறப்பினை உரைப்பது, முற்றுழிஞை ஆகும்.*

**மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே**
**இயங்கரண மூன்றும் எரித்தான்-தயங்கிணர்ப்**
**பூக்கொள் இதழிப் புரிசெஞ் சடையானும்**
**மாக்கொள் உழிஞை மலைந்து** 102

*விளங்காநின்ற கொத்தாகப் பொலிவுகொண்ட கொன்றை மாலையை உடைய, புரிந்த செஞ்சடையானான சிவபிரானும், பெருமைகொண்ட உழிஞைமாலையைச் சூடிக் கொண்டு சென்றல்லவோ, அந் நாளிலே திரிபுரங்கள் மூன்றையும் எரித்து அழித்தான்! மருளாத உழிஞையின் சிறப்பினை வேறு யார் தாம் உணரவல்லார்?*

*புரிதல்-பின்னுதல். 'சிவபிரானே அரணங்களை அழிக்கு முன் சூடிச் சென்றது இந்த உழிஞைமாலை; ஆகவே, இதன் பெருமையினை வேறு யார்தாம் அறிதற்கு இயலும்?' என்று, அதன் சிறப்பைக் கூறினர். அத்துடன், அவன் திரிபுரங்களைத் தீயெரியூட்டிச் சிதைத்தாற் போலவே, இவனும் பகையரண்களை எரியூட்டி அழிப்பான் என்பதும் உரைத்தனர்.*

## 8. காந்தள்

*கருங்கடலுள் மாத்தடிந்தான்*
*செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று.*

*கறுத்த கடலினிடத்தே மாவாகிநின்ற சூரனை அழித்த, முருகன் சூடிய செழுமையான காந்தட்பூவினது சிறப்பினைச் சொல்லிப் போற்றுவது, காந்தள் ஆகும்.*

*'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளும்' எனத் தொல்காப்பியர் பொதுவியலுள் கூறுகின்ற காந்தள் துறையினையும் நோக்கி, இவற்றின் வேறுபாட்டை அறிக. (புறத். சூ. 5.)*

**குருகு பெயரிய குன்றெறிந் தானும்**
**உருகெழு காந்தள் மலைந்தான்-பொருகழல்**
**கார்கருதி வார்முரசம் ஆர்க்கும் கடற்றானைப்**
**போர்கருதி யார்மலையார் பூ.** 103

*குருகினது பெயரினையுடைத்தான கிரவுஞ்ச மலையினை அழித்த முருகக் கடவுளும், அழகுமருவின காந்தட்பூ மாலையினைச் சூடிய போற்மேற் சென்றான். வீரக்கழலினை உடையதாய், வாரால் பிணித்த வீரமுரசம் முகிலையொத்து முழங்கும் கடல்போன்ற படையிடத்துப், போரினை நினைந்து செல்வாருள் யார்தாம், அடையாளப் பூவினைச் சூடிச் செல்லாதார்?*

'முருகனே அடையாளப் பூவான காந்தளைச் சூடிச் சென்றபோது, யார்தாம், தாமும் போர்க்குச் செல்லும் போது பூச்சூடிச் செல்லார்?'' என்றது இது. முருகனைப் போலவே இவனும் பகையினை முடித்துவருவான் என்பதும் குறிப்பாகும்.

## 9. புறத்திறை

*மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்*
*விறற்கொடி மதிலின் புறத்திறுத் தன்று.*

மறத்துறையினிடத்தே விருப்பம் மிகுந்தவராக மேற்சென்று, உழிஞை மறவர், பகைவரது வெற்றிக்கொடி பறக்கின்ற கோட்டைமதிலின் புறத்தே பாடியமைத்துத் தங்கியது, புறத்திறை ஆகும்.

வெட்சிப் புறத்திறைக்கும், இந்த உழிஞைப் புறத்திறைக்கும் உளதான வேறுபாட்டை அறிக.

**புல்லார் புகலொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்**
**பல்லார் மருளப் படைபரப்பி-ஒல்லார்**
**நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்**
**புறத்திறுத்தான் பூங்கழலி னான்.** 104

பொலிந்த வீரக்கழலினை உடையவனான உழிஞை வேந்தன், தன் பகைவர்கள், புகுமிடமும் வெளிப்போதற்குரிய இடமும் ஆகிய இரண்டுமே இல்லாதாராகும்படி, அவர்பாற் சினம் பொங்கினவனாகப், பலரும் கண்டு மயங்கா நிற்பத் தன் படைகளைப் பரப்பிப், பகைவர் மார்பிலே குளித்த வாளாற் சிறந்த தன் சேனையினைப், பகைவர் அரணத்தின் புறத்தே நிறுத்திப் பாடிவீடு கொண்டான்.

## 10. ஆரெயில் உழிஞை

*வாஅண்மறவர் வணங்காதார்*
*நீஇண் மதிலின் நிலையுரைத்தன்று.*

வாளினையுடைய உழிஞை வீரர்கள், தம்மைப் பணியாதாருடைய நெடிய மதிலினது திண்ணிய நிலையை உரைப்பது, ஆரெயில் உழிஞை ஆகும்.

**மயிற்கணத் தன்னார் மகிழ்தேறல் ஊட்டக்**
**கயிற்கழலார் கண்களால் பூப்ப-எயிற்கண்ணார்**
**வீயப்போர் செய்தாலும் வென்றி யரிதரோ**
**மாயப்போர் மன்னன் மதில்.** 105

மாயப்போரினைச் செய்ய வல்லனாகிய இம் மன்னனது மதிலினை, மயிலின் திரளையொத்த மகளிர்கள் களிக்கும் மதுத்

*தெளிவை உண்பிக்க, மூட்டுவாயாற் சிறந்த கழலினையுடைய உழிஞையாரின் கண்கள் கனலினைச் சொரிய, அரணிடத்தார் புலரும்படப் போரினைச் செய்தாலும், வெற்றி பெறுதல் அரிதே யாகும்!*

*'மயிற்கணத் தன்னார்'-பாடிவீட்டிலே மறவர்க்குக் கள் வார்த்திருந்த பணிப்பெண்கள். 'வென்றியரிது' என்றவர் ஒற்றர். எயிலது கடத்தற்கரிய திண்மையை உரைத்தலால், ஆரெயில் உழிஞை ஆயிற்று. கயில்-மூட்டுவாய்.*

## 11. தோல் உழிஞை

***வென்றியொடு புகழ்விளைக்குமெனத்
தொன்றுவந்த தோல்மிகுத்தன்று.***

*'வெற்றியோடே புகழினையும் விளைவிக்கும்' என்று சொல்லித், தொன்றுதொட்டுவந்த கிடுகுப்படையை உழிஞையார் சிறப்பித்தது, தோல் உழிஞையாகும்.*

**நின்ற புகழொழிய நில்லா உயிரோம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும் - வென்றொளிரும்
பாண்டி னிரைதோல் பணியார் பகையரணம்
வேண்டின் எளிதென்றான் வேந்து.** 106

*வென்று விளங்கும் கண்ணாடி நிரைத்த நம் கிடுகுப் படை, நம்மைப் பணியாதவருடைய பகைமைகொண்ட அரணத்தைக் கைப்பற்ற விரும்பினால், அது எளிதே' என்றான் நம் வேந்தன். அங்ஙனம் நிலைபெற்ற நம் புகழ் கெட்டுப்போம்படியாக, நில்லாத உயிரினைப் பாதுகாத்தபடி, இந்நாளிலே நாம் இந்த எயிற்புறத்தே வறிதே பாடியிருத்தல் இழிவாகும் அன்றோ!*

*கிடுகுப்படைத் தலைவருள் ஒருவனது கூற்று இது. தோற்படையின் சிறப்பை மிகுத்துக் கூறுவதனால், தோல் உழிஞை ஆயிற்று.*

## 12. குற்றுழிஞை-1

***கருதாதார் மதிற்குமரிமேல்
ஒருதானாகி யிகன்மிகுத்தன்று.***

*பகைவரது அரணாகிய அழிவற்ற ஒன்றின்மேல், தான் ஒருவனுமேயாகி நின்று, உழிஞை மறவன் ஒருவன், தன் மாறுபாட்டினைப் பெருக்கியது, குற்றுழிஞை ஆகும்.*

*இதனை, 'ஒருதான் மண்டிய குறுமை' என்பர் தொல்காப்பியர் (புறத். சூ. 12.)*

**குளிறு முரசினான் கொண்டான் அரணம்**
**களிறுங் கதவிறப் பாய்ந்த-ஒளிறும்**
**அயிற்றுப் படைந்த அணியெழு வெல்லாம்**
**எயிற்றுப் படையால் இடந்து.** 107

அதிரும் வீரமுரசினை உடையான் அரணினை வென்று கைப்பற்றினான்; அப்போது அவனுடைய போர் யானைகளும், விளங்காநின்ற வேலினது வலிமையைப் பெற்ற, நிரைத்த கணையம் முழுவதையும், தமது கொம்புகளான படைக் கருவிகளாலே பெயர்த்து, அவ்வரணிடத்து வாயிற் கதவுகள் ஒடிந்து வீழுமாறு சினத்துடன் பாய்ந்தன.

குளிறுதல்-முழங்குதல். 'அரணம் கொண்டான்' என்றது, எயிற்புறத்தாரான நொச்சிமறவரை வென்று, அரண்வாயிலை அடைந்தான் என்பதாம். 'குளிறும் முரசினான்' என்றது, உழிஞை வேந்தனை. செயல் முற்றுப் பெறாது, அரணை அணுகுமளவே குறுவெற்றி பெற்றதனால், 'குற்றுழிஞை' ஆயிற்று.

## 13. குற்றுழிஞை-2

*வளைஞரல வயிரார்ப்ப*
*மிளைகடத்தலும் அத்துறையாகும்.*

வீரசங்கம் முழங்கவும், கொம்புகள் ஆரவாரிப்பவும், காவற்காட்டைக் கடந்து புகுதலும், குற்றுழிஞை என்னும் அத் துறையே யாகும்.

**அந்தரந் தோயும் அமையோங் கருமிளை**
**மைந்தர் மறிய மறங்கடந்து - பைந்தார்**
**விரைமார்பின் வின்னரல் வெங்கணை தூவார்**
**வரைமார்பின் வைகின வாள்.** 108

உழிஞை வீரருடைய வாள்கள், வானத்தைத் தொடுகின்றவான மூங்கில்கள் உயர்ந்த, கடத்தற்கரிய காவற் காட்டின்கண் நின்று போரிடும் நொச்சிமறவர் முதுகிடும்படி, அவரது மறத்தினை வென்று, பசிய மாலையினது மணத்தை யுடைய தமது மார்பிடத்தே வில்நாண் ஒலிக்கும்படியாக வெவ்விய அம்பினைத் தூவும், அந் நொச்சிமறவருடைய மலைபோன்ற மார்புகளிலேயும் தங்காநின்றன.

மைந்தர்-மைந்தினை உடையோர்; வீரர். உழிஞையாரின் எண்ணம் குறுக இந்த அழிவு நேரிடலால், இது குற்றுழிஞை ஆயிற்று.

## 14. குற்றுழிஞை-3

*பாடருந்தோற் படைமறவர்*
*ஆடலோடடையினும் அத்துறையாகும்.*

சொல்லுதற்கரிய கிடுகுப்படையினை உடைய உழிஞை மறவர்கள், ஆடுதலுடனே அரணினைக் குறுகினாலும், அது குற்றுழிஞை ஆகும்.

'ஆடலோ டடைதல்' நொச்சியாரது எதிர்ப்பு இன்மையால். இது, உழிஞை மறவர் தம் மறமாண்பு காட்டுமுன்பே வந்துறும் எளிய வெற்றியாதலால், குற்றுழிஞை ஆயிற்று.

**நிரைபொறி வாயில் நெடுமதிற் சூழி**
**வரைபுகு புள்ளின மான-விரைபடைந்தார்**
**வேலேந்து தானை விறலோன் விறன்மறவர்**
**தோலேந்தி யாடல் தொடர்ந்து.** 109

வேலினை உயர்த்த படைமறவரான் மிக்க வெற்றியினையுடைய உழிஞை மன்னனது வெற்றிவீரர்கள், கிடுகுப்படையினைக் கைகளிலே ஏந்திக் கூத்தாடுதலைத் தொடர்ந்தவராக, ஒழுங்குபட்ட பொறிகளையுடையதும் வாயில்களையுடையதுமான நெடிய மதிலிடத்தின் உச்சியிலே, மலையுச்சியிற் சென்றுபுகும் புள்ளினத்தையொப்ப, விரையச் சென்று அடைந்தனர்.

சூழி-உச்சி, 'ஆடல் தொடர்ந்து' என்றது, ஆடலினைச் சூழ்ந்தவராக என்றவாறு.

## 15. புறத்துழிஞை

*விண்தோயு மிளைகடந்து*
*குண்டகழ் புறத்திறுத் தன்று.*

வானிடத்தே தோயும் காவற்காட்டைக் கடந்து, ஆழ்ந்த அகழியின் கரைப்புறத்தே உழிஞைப்படை சென்று தங்கியது, புறத்துழிஞை எனப்படும்.

புறத்திறைக்கும் புறத்துழிஞைக்கும் வேறுபாடு கருதித் தெளிக. மதிற்புறத்துச் சென்று தங்குவதெல்லாம் புறத்திறை; மிளைகடந்து குண்டகழியின் புறத்தே தங்குவது புறத்துழிஞை.

**கோள்வாய் முதலைய குண்டகழி நீராக**
**வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தான்-நீள்வாயில்**
**ஓங்க லரணத் தொளிவளையார் வெய்துயிர்ப்ப**
**ஆங்கொ லரிய வமர்.** 110

வாய்த்த வெற்றிச் சிறப்புடைய வாளினை ஏந்திய மறமன்னன், ஆளைப் பற்றிக் கொள்ளுதலைத் தப்பாத முதலைகளை யுடைய ஆழமான அகழிநீரே தன் படைஞர்க்குரிய குடிக்கும் நீராகுமாறு, அதன் கரையிடத்தே வந்து தங்கினான்; நீண்ட வாயிலாற் சிறந்த அரணிடத்தே யுள்ள ஒள்ளிய வளையினை உடையாரான மகளிர்கள் சுடுமுச்செறியும்படி, வெல்லுதற்கு அரிய கொடிய போரும் இனி நிகழும் போலும்!

உழிஞையாரின் புறத்துழிஞையைக் கண்டவர், மேல் வரும் போரினைக் கருதி உரைத்தது இது.

## 16. பாசி நிலை

*அடங்காதார் மிடல்சாயக்*
*கிடங்கிடைப் போர்மலைந்தன்று.*

பகைவருடைய வலி கெடும்படியாக, உழிஞை மறவர் அகழியிடத்தே போரினை மேற்கொண்டது, பாசிநிலை எனப்படும்.

நொச்சியாரது 'மறனுடைப் பாசி' என்னும் துறையினையும் இதனையும் ஒப்பிட்டுத் தெளிதல் வேண்டும். ஒதுங்கியும் தூர்ந்தும் இருதிறப் படைஞரும் போரிடலால், இது பாசிநிலை எனப் பெற்றது.

**நாவாயுந் தோணியும் மேல்கொண்டு நள்ளாதார்**
**ஓவார் விலங்கி உடலவும்-பூவார்**
**அகழி பரந்தொழுகும் அங்குருதிச் சேற்றுப்**
**பகழிவாய் ஆழ்ந்தார் பலர்.** 111

ஓடமும் ஒருமரத் தோணியும் மேல்கொண்டு, பகை மறவர் ஒழிவற்றாராய்த் தம்மைத் தடுத்து வெகுண்டு போரிடவும், மலர்நிறையும் அகழியிலே மிக்கோடும் அழகிய குருதிச்சேற்றிலே அப்பகைவரது அம்பின் வாய்ப்பட்டு வீழ்ந்தவர்கள், உழிஞையாருள் பலராவர்!

பலர் வீழ்ந்தபோதும், வென்றியே குறித்தவராக மேன்மேல் எதிர்ந்து உழிஞையார் போரிட்டனர் என்பது குறிப்பு. உடலல்-சினத்தல். விலங்கி-குறுக்கிட்டும் ஆம்.

## 17. ஏணி நிலை

*தொடுகழன்மறவர் துன்னித் துன்னார்*
*இடுசூட்டிஞ்சியின் ஏணிசாத்தின்று.*

தொடுத்த கழலினை உடையவரான உழிஞை மறவர், அரணை அணுகிச் சென்று, பகைவர் பண்ணின

*ஏவறைகளையுடைய மதிலிலே ஏணியைச் சாத்தியது, ஏணி நிலை ஆகும். இஞ்சி-மதில்.*

**கற்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்**
**விற்பொறியும் வேலும் விலக்கவும்-பொற்புடைய**
**பாணி நடைப்புரவிப் பல்களிற்றார் சாத்தினார்**
**ஏணி பலவும் எயில்.** 112

*பொலிவினை உடையவும், தாளத்திற்கு ஒப்பச் சதிபாயும் தன்மையவும் ஆகிய குதிரைகளையும், பலவான களிறுகளையும் உடையவர் உழிஞை மறவர்; இவர்கள் இடங்கணியும் அரவும் நெருப்பும் கடிக்குங் குரங்கும் விற்பொறியும் வேலும் ஆகிய நொச்சியாரது படைக்கலன்கள் எல்லாம் தம்மை அணுகவிடாது விலக்கவும், அவற்றை மேற்கொண்டு, பகைவரது மதிலிடத்தே ஏணிகளைச் சாத்தினார்.*

*கற்பொறி-பெருங் கற்களை வீசி எறியும் பொறி; இதனை இடங்கணி என்பர். பிறவும் பகைவரை மதிலை அணுகவிடாது தாக்கும் எந்திரப் பொறிகள் ஆம். இப்பொறிகளும் இன்னன பலவும் அரணிடத்து அமைதலைச் சிலப்பதிகாரத்தானும் அறியலாம். (காதை 15:207-17). ஏணிகளை நிலைபெறுத்துதலால் ஏணிநிலை ஆயிற்று. இதனையும், அடுத்து வரும் எயிற்பாசி என்பதனையும், ஏணிமிசை மயக்கம் என்பர் தொல்காப்பியர் (புறத். சூ.13)*

## 18. எயிற் பாசி

***உடல்சினத்தார் கடியரணம்***
***மிடல்சாய மேலிவர்ந்தன்று.***

*முனைகின்ற சினத்தினை உடையவரான உழிஞை மறவர், காவலையுடைய பகைவரது அரணத்தின் வலியழியும்படியாக ஏணிமேல் ஏறியது, எயிற்பாசி ஆகும்.*

**சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்**
**கடுமுரண் எஃகங் கழிய-அடுமுரண்**
**ஆறினா ரன்றி அரவும் உடும்பும்போல்**
**ஏறினார் ஏணி பலர்.** 113

*செங்கலாற் செய்த நெடிய மதிலினைச் சூழ்ந்து நீங்காதவராய், கொடிய மாறுபாட்டினையுடைய வேல் தமது மார்பிடத்தே தைத்து ஊடுருவிப் போக, அதனால் பட்டு வீழ்ந்து, தம்முடைய கொல்லுதற்கான மாறுபாட்டினின்றும் நீங்கினாரே யல்லாமல், பலரான பிறரெல்லாம், பாம்பும் உடும்பும் போலப் பிடி தளரவிடாது ஏணிமேல் ஏறினார்கள்.*

'ஏறினார் பலர்' என்றலால், வீழ்ந்தார் சிலர் என்பதும் கொள்க. 'எஃகங் கழிய அடுமுரண் ஆறினார்' என்பதன் பொருண்மையை அறிந்து, உழிஞை மறவரின் மாறுபாட்டது பெருக்கத்தையும் உணர்க. சுடுமண்-செங்கல்; அரண் செங்கற்களால் செம்மையுறக் கட்டப் பெற்றிருந்தது என்பது, கட்டடக் கலையின் முன்னேற்றத்தைக் காட்டுவதாம்.

## 19. முது உழிஞை-1

*வேய்பிணங்கிய மிளையரணம்*
*பாய்புள்ளிற் பரந்திழிந் தன்று.*

மூங்கில்கள் தலைபின்னிய காவற்காட்டினையுடைய பகைவரது அரணின் உட்புறத்தே, பாயும் பறவையைப் போல உழிஞை மறவர் எப்புறமும் பரவிக் குதிப்பது, முது உழிஞை ஆகும்.

**கோடுயர் வெற்பின் நிலங்கண் டிரைகருதும்**
**தோடுகொள் புள்ளின் தொகையொப்பக்-கூடார்**
**முரணகத்துப் பாற முழவுத்தோள் மள்ளர்**
**அரணகத்துப் பாய்ந்திழிந்தார் ஆர்த்து.** 114

முழவுபோலத் திரண்ட தோள்களை யுடையவரான உழிஞை மறவர்கள், குவடோங்கின மலையினின்றும் இரையைப் பூமியிலே கண்டு, அவற்றைக் கொள்ளக் கருதியவராகப் பாயும் தொகுதிகொண்ட பறவையின் கூட்டத்தைப்போலப், பகைவரது மாறுபாடு அவர்தம் மனத்தே கெட்டுப்போகுமாறு, மதிலுச்சியினின்றும் குதித்திறங்கி ஆரவாரித்தனர்.

தோடுகொள்-தொகுதி கொள். தொகை-குழு; கூட்டம். கூடார்-நொச்சியார்.

## 20. முது உழிஞை-2

*செருமதிலோர் சிறப்புரைத்தலும்*
*அருமுரணான் அத்துறையாகும்.*

போர் செய்தற்கு உரியவரான அரணகத்துள்ள நொச்சி மறவரது சிறப்பினை உரைத்தலும், வெல்லுதற்கரிய மாறுபாட்டினைக் கூறுதலால், முது உழிஞை என்னும் அந்தத் துறையே யாகும்.

**அறியார் வயவர் அகத்திழிந்த பின்னும்**
**நெறியார் நெடுமதிலுள் நேரார் - மறியாம்**
**கிளியொடு நேராங் கிளவியார் வாட்கண்**
**களியுறு காமங் கலந்து.** 115

நம் படை மறவர்கள் அரணிடத்துள்ளே இறங்கிய பின்னரும், நெறிப்புமிகுந்த நெடிய மதிலிடத்துள்ளே இருந்த பகைவரான நொச்சியார், தாம் தோற்றொழிதலை அறியாராயினர்; கிளியை யொத்த பேச்சினையுடைய மகளிரது, மான்மறியினது போன்ற ஒளியுடைய கண்ணோக்கிலே களிப்புக் கொள்ளும் காமவேட்கைபோன்று, தம் மனத்தே போர் வேட்கை விரவுதலின், எதிர்த்துப் போரிடுவாரும் ஆயினர்!

இது உழிஞை மறவருள் ஒருவன், நொச்சியாரது வலியழிந்த தன்மை நோக்கியும், அப்போதும் அவர் போரிடும் மாறுபாட்டை வியந்தும் கூறியது. இதனால் அவரை வெல்லும் உழிஞையாரது மறமாண்பும் உரைக்கப்பட்டது. நெறி-நெறிப்பு; அடுக்கு அடுக்காக ஒன்றுளொன்று விளங்கும் தன்மை.

## 21. அகத்து உழிஞை

*முரண் அவியச் சினஞ் சிறந்தோர்*
*அரண் அகத்தோரை அமர்வென் றன்று.*

சினமிகுந்தாரான உழிஞை மறவர்கள், நொச்சியாரது மாறுபாடு கெட, அரணகத்தே இருந்த அவரைப் போரிடத்தே வென்றது, அகத்து உழிஞை ஆகும்.

'முரண் அவிய' என்பது, உழிஞையார்க்கும் பொருந்தும்; வெற்றியால் தம் மாறுபாடு கெட இவரும் விளங்குதலால்.

**செங்கண் மறவர் சினஞ்சொரிவாள் சென்றியங்க**
**அங்கண் விசும்பின் அணிதிகழும்-திங்கள்**
**முகத்தார் அலற முகிலுரிஞ்சுஞ் சூழி**
**அகத்தாரை வென்றார் அமர்.** 116

சினத்தாற் சிவப்புற்ற கண்ணினரான உழிஞை மறவர்கள், செற்றத்தைப் பொழிகின்ற வாள் போய்ப் பகை மறவரிடையே உலவ, அழகிய இடத்தையுடைய வானகத்தின் கண் அழகாக விளங்கும் நிலவனைய முகத்தாரான மகளிர் அலறிக் கூச்சலிடும்படியாக, முகில்கள் தவழும் உச்சிகளையுடைய அரணின் உள்ளிருந்த நொச்சிமறவரைப், போரிலே வென்றனர்.

'அங்கண் விசும்பின் அணிதிகழும் திங்கள் முகத்தார்' என்றது நொச்சியாரது மகளிரை. அவர் அலறுதல். நொச்சியார் பட்டு வீழ்ந்த கொடுமையைக் கண்டதனால்.

## 22. முற்று முதிர்வு

*அகத்தோன் காலை அதிர்முர சியம்பப்*
*புறத்தோன் வெஞ்சினப் பொலிவுரைத் தன்று.*

*அகத்தோனாகிய நொச்சி வேந்தனது, காலைப்போதிலே முழங்குகின்ற முரசமானது முழங்க, அதனைக் கேட்டுப் புறத்தோனாகிய உழிஞை வேந்தன்பால் எழுந்த வெய்ய சினத்தினது மிகுதியைச் சொல்லியது, முற்று முதிர்வு ஆகும்.*

**காலை முரசம் மதிலியம்பக் கண்கனன்று**
**வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்-மாலை**
**அடுகம் அடிசிலென் றம்மதிலுள் இட்டார்**
**தொடுகழலார் மூழை துடுப்பு. 117**

*காலை முரசமானது பகையரணின் உள்ளேயிருந்து ஒலிக்க, அதனைக் கேட்டுக் கண்கள் கனன்றவனாகத் தன்னுடைய வெற்றி வேலினை வெற்றியை விரும்புவோனாகிய உழிஞை வேந்தன் நோக்கினான்; நோக்குதலும், கட்டிய கழலினை உடையவரான உழிஞை மறவர்கள், 'இன்று மாலைப் போதிலே யாம் சோறு அடுவோம்' என்றவராக, அரணினுள்ளே தம்முடைய மூழையினையும் துடுப்பினையும் எறிந்தார்கள்.*

*'மாலைக்குள் அரணை வென்று கைப்பற்றி, அதன்பின்னரே சோறாக்கி உண்போம்' எனச் சினந்து எழுந்தனர் உழிஞை மறவர் என்க. மூழை-அகப்பை.*

## 23. யானை கைக்கோள்

***மாறுகொண்டார் மதிலழிய***
***ஏறுந்தோட்டியும் எறிந்துகொண்டன்று.***

*பகை கொண்டாரது அரண்மதில் அழிந்ததாக, உழிஞையார், அவர்களுடைய களிறுகளையும் காவல்களையும் வென்று கைக்கொண்டது, யானை கைக்கோள் ஆகும்.*

**ஏவல் இகழ்மறவர் வீய இகல்கடந்து**
**காவலும் யானையும் கைக்கொண்டான்-மாவலான்**
**வம்புடை ஒள்வாள் மறவர் தொழுதேத்த**
**அம்புடை ஞாயில் அரண். 118**

*குதிரைத் தொழிலிலே வல்லவனான உழிஞையான், கச்சினையுடையவரான தனது ஒள்ளிய வாள்வீரர்கள் தன்னைத் தொழுது போற்றுமாறு, அம்புகளையுடைத்தான ஏவறைகளையுடைய பகையரணை அழித்து, தன்னுடைய ஏவலை இகழ்ந்தாரான நொச்சி மறவர்கள் பட்டொழியும்படியாக, அவர்தம் மாறுபாட்டைக் கடந்து, அவ்விடத்துக் காவலையும் யானைகளையும் தான் கைப்பற்றிக் கொண்டான்.*

'ஏறுந் தோட்டியும்' என்பதற்கு, வெண்பாவில் வரும் 'காவலும் யானையும்' என்பதையொட்டிப் பொருள் கொள்ளப் பெற்றது. 'தோட்டி' காவல் என்ற பொருளிலே வருவதும் காண்க.

## 24. வேற்றுப்படை வரவு

*மொய்திகழ் வேலோன் முற்றுவிட் டகலப்*
*பெய்தார் மார்பிற் பிறன்வர வுரைத்தன்று.*

போரிடத்தே மிக்கு விளங்கும் வேற்படையினை உடையோனாகிய உழிஞை மன்னன், முற்றுகையை விட்டு நீங்குமாறு, மாலையிட்ட மார்பினையுடைய வேற்று வேந்தனது வரவினைச் சொல்லியது, வேற்றுப்படை வரவு ஆகும்.

**உவனின் றுறுதுயரம் உய்யாமை நோக்கி**
**அவனென் றுலகேத்தும் ஆண்மை-இவனன்றி**
**மற்றியார் செய்வார் மழைதுஞ்சு நீளரணம்**
**முற்றியார் முற்று விட.** 119

'அப்படிக்கொத்தவன் அவன்' என்று சொல்லி உலகம் போற்றுகின்ற ஆண்மைச் செயலினை, இதோ வரும் இவனையன்றி மற்று யார்தான் செய்ய வல்லவர்? இந் நொச்சி மன்னன் இந்நாளிலே அடைந்த துயரத்தினின்றும் உய்யாமற் போகின்ற தன்மையினை நோக்கி, மேகந் தவழும் நெடிய மதிலை முற்றியவர்தம் முற்றுகையை விட்டொழித்தலைச் செய்யுமாறு, துணையாகி வந்தனனே!

நொச்சியானுக்கு உதவியாக வந்த வேற்றரசனின் படை வரவைக் கண்டார் கூறியது இது. வேற்றுப்படை வரவுதான் கூறியிருக்கிறது; இது வென்றதும் தோற்றதும் கூறப்படவில்லை. அங்ஙனம் கூறுங்கால், இவர் உழிஞையாராக, அரணைக் கைக்கொண்டிருக்கும் உழிஞையார் நொச்சியாராக அவரது ஒழுக்கம் மாறுபடுதலையும் நினைக்க.

## 25. உழுது வித்திடுதல்

*எண்ணார் பல்லெயில் கழுதையே ருழுவித்து*
*உண்ணா வரகொடு கொள்வித் தன்று.*

தாம் அழிதலை எண்ணாரான பகைவரது பலவான அரண்களையும் இடித்து, அவ்விடத்தைக் கழுதைபூட்டிய ஏரானே உழுவித்துக், கவடியும் குடைவேலும் விதைத்தது, உழுது வித்திடுதல் ஆகும்.

உண்ணாவரகு-கவடி; கொள்-குடைவேல்.

**எழுதெழின் மாடத் திடனெலாம் நூறிக்**
**கழுதையேர் கையொளிர்வேல் கோலா - உழுததற்பின்**
**வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்**
**கள்விரவு தாரான் கதம்.** 120

*சித்திரம் எழுதிய அழகிய மாடத்திடம் எல்லாம் இடித்துக், கழுதையே ஏராகவும் கையிடத்தே ஒளிருகின்ற வேலே ஏரடிக்குங் கோலாகவும் கொண்டு உழுவித்து, அதன்பின் வெள்வரகும் கொள்ளும் விதைத்திட்டாலும், தேன் கலந்த மாலையினை யுடைய உழிஞை மன்னனின் கோபம், அதன் பின்னரும் கெடாதுபோலும்!*

*உழிஞை வேந்தனின் ஆறாத கோபத்தைக் கண்ட படை மறவருள் ஒருவன் கூறியது இது. கள்-தேன். 'வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப் பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்' என வரும் புறப்பாட்டு அடிகளும் இதனைக் காட்டும்; (புறம்.15:2-3). 'வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி, வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்' என வரும் புறப்பாட்டும் இதனை வலியுறுத்தும்; (புறம் 392, 9-10).*

## 26. வாள்மண்ணு நிலை

***புண்ணிய நீரிற் புரையோர் ஏத்த***
***மண்ணி வாளின் மறங்கிளந் தன்று.***

*உயர்ந்தோர்கள் போற்றப் புண்ணியநீராலே மஞ்சன மாட்டிய கொற்றவாளினது மறப்பண்பினைச் சொல்லியது, வாள்மண்ணுநிலை ஆகும். மண்ணுதல் - நீராட்டுதல்.*

**தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்**
**கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்-பேர்த்தும்**
**இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்**
**புடையார் அறையப் புகழ்.** 121

*வெற்றிக் கொடி விளங்கும் தேரினனான உழிஞை வேந்தன், பின்னரும், இடி முழக்கினை ஒத்த வீரமுரசம் ஆர்ப்ப, இந்த மதிலினுள்ளே, தீர்த்த நீரும் மலரும் பெய்து, திக்கெலாம் தன் புகழ் விளங்குமாறு, பக்கத்துள்ள மன்னரெல்லாம் தனது புகழினைப் பேசக், கூர்மையான தனது கொற்ற வாளினை நீராட்டிக், களவேள்வி வேட்டான்!*

*'பேர்த்தும் வேட்டான்' என்பதனால், முன்னரும் வேட்டானாயிற்று. புடையார்-பக்கலிருந்த பிற வேந்தர்; இவர் உழிஞை வேந்தனுக்குப் படைத்துணை வந்தவர். தீர்த்த நீர்-புண்ணிய நன்னீர். பணை துவைப்ப-ஆர்ப்பொலி எழுப்ப.*

## 27. மண்ணு மங்கலம்

*வணங்காதார் மதிற்குமரியொடு*
*மணங்கூடிய மலிபுரைத்தன்று.*

*தன்னைப் பணியாதாரான பகைவரது அரணாகிய கன்னியுடன் உழிஞை வேந்தன் மணங்கூடிய மிகுதிப் பாட்டைச் சொல்லியது, மண்ணுமங்கலம் ஆகும்.*

*'மதிற் குமரி' என்றது, அதுவரை பிறராற் கொள்ளப்படாமையினைச் சொல்லுதற்கு.*

**எங்கண் மலர எயிற்குமரி கூடிய**
**மங்கல நாள்யாம் மகிழ்தூங்கக்-கொங்கலர்தார்ச்**
**செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே**
**மொய்சுடர்ப்பூண் மன்னர் குடி.** 122

*எம்முடைய கண்கள் மலர்ச்சிகொள்ள, இந்த எயிலாகிய குமரியை இவ்வேந்தன் மணங்கூடிய மங்கல நாளிலே, யாம் மேலும் மகிழ்ச்சியடையுமாறு, மதுவலரும் வெற்றி மாலையினையும் கையாற் செய்யப்பட்டு ஒளிசிறந்த அணிகலன்களையும் பூண்டவனான உழிஞை மன்னவனது, சிவந்த அடிநிழலின் கீழாகச், செறிந்த சுடரொளியால் நிறைந்த அணிகலன்களையுடைய அரசர்களது முடிகளும் தங்கினவே!*

*உழிஞை மறவருள் ஒருவன், தன் வேந்தனின் வெற்றியைக் கண்டு மகிழ்ந்ததுடன், பிற மன்னர் தன் வேந்தனைப் பணிந்ததனையும் கண்டு கூறியது இது. மங்கல நாள்-மணநாள்.*

## 28. மகட்பால் இகல்

*மயிற்சாயன் மகள்வேண்டிய*
*கயிற்கழலோன் நிலையுரைத்தன்று.*

*நொச்சியரசனது மயில்போன்ற சாயலையுடைய மகளை விரும்பிய, மூட்டுவாயாற் சிறந்த கழலினனான உழிஞை வேந்தனின் நிலைமையைக் கூறியது, மகட்பால் இகல் ஆகும்.*

**அந்தழை யல்குலும் ஆடமை மென்தோளும்**
**பைந்தளிர் மேனியும் பாராட்டித்-தந்தை**
**புறமதில் வைகும் புலம்பே தருமே**
**மறமதில் மன்னன் மகள்.** 123

*மறப்பண்பே தனக்கு அரணாகவுடைய நொச்சி மன்னனது மகள், உழிஞை 'வேந்தனுக்கு, அவளுடைய அழகிய தழையாடையைக் கொண்ட அல்குலையும், அசையும் மூங்கில்*

போன்ற மென்மையான தோளினையும், பசிய மாந்தளிர் போன்ற மேனி வனப்பையும் பாராட்டியவனாகத் தன் தந்தையது மதிலின்புறத்தே தங்கும்' தனிமைத் துயரையே கொடாநிற்கும்!

இதனால், அவளை நினைந்து உழிஞை வேந்தன் மதிற் புறத்துத் தன் பாடி வீட்டிலே இருந்து வருந்துவானாயினான் என்பதும் கூறினர். புலம்பு-வருத்தம்.

'மறமதில் மன்னன்' என்றது நொச்சியானை; தன் அரணாகிய மதிலை இழந்தாலும், மறமாகிய மதிலினை அவன் உடையவனாக இருந்தான் என்பது கருத்து.

## 29. திறைகொண்டு பெயர்தல்

*அடுதிறல் அரணத் தரசுவழி மொழியப்*
*படுதிறை கொண்டு பதிப்பெயர்ந் தன்று.*

கொல்லும் திறனாலே மிகுந்தவனான வேந்தன், எயிலினிடத்து அரசர் எல்லாம் தாழ்வு சொல்லிப் பணிய, அவர் தந்த முறையான திறையைக் கொண்டு, தன் பதிக்குப் பெயர்தல், திறைகொண்டு பெயர்தல் ஆகும்.

**கோடும் வயிரும் இசைப்பக் குழுமிளை**
**ஓடெரி வேய உடன்றுலாய்ப்-பாடி**
**உயர்ந்தோங் கரணகத் தொன்னார் பணியப்**
**பெயர்ந்தான் பெருந்தகையி னான்.** 124

பெருந்தகைமையினை உடையவனான உழிஞை வேந்தன், சங்கினமும் கொம்பினமும ஆரவாரிக்கத், தன் பகைவரது செறிந்த குறுங்காட்டைப் பரந்த எரிமூடும்படியாகச் சினந்து கிளர்ந்து, மிகவுயர்ந்த மதிலகத்தாரான பகை மன்னர் தன்னைப் பணிந்தமையானே, தான் தன் பாடியிருக்கையினின்றும் நீங்கித், தன் பதிக்குப் பெயர்ந்து போயினான்.

'மடுத்தெழுந்த மறவேந்தர்க்குக் கொடுத்தளித்துக் குடியோம்பின' தான குறுவஞ்சித் துறைக்கும், இதற்கும் உளதான நிலைவேறுபாட்டை நினைவிற் கொள்க. 'பெருந்தகை', பேரழகும் ஆம்.

## 30. அடிப்பட இருத்தல்

*பேணாதார் மறங்கால*
*ஆணைகொண் டடிப்படவிருந்தன்று.*

பகைவரானவர், உழிஞை வேந்தன் சினத்தை உமிழ, அவனது ஆணையை ஏற்றுக்கொண்டு, அவனுக்கு அடிப்பட்டவராக இருந்தது. அடிப்பட இருத்தல் ஆகும்.

'மறங்கால' என்பதற்கு, மறப்பண்பு ஒளிவீச என்றும் பொருளுரைக்கலாம். 'கால' என்பதற்குக் கைவிட எனப் பொருள் கொண்டு, மறங்கால என்பதனை நொச்சியார் மேல் ஏற்றுவார் சிலர்.

**ஒன்றி யவர்நா டொருவழித்தாய்க் கூக்கேட்ப**
**வென்றி விளையா விழுமதிலோர்-என்றும்**
**பருந்தார் செருமலையப் பாடி பெயரா**
**திருந்தான் இகன்மறவ ரேறு.** 125

மாறுபாட்டாற் சிறந்த மறவரேறான உழிஞை வேந்தன், தன்னொடும் பொருந்திய பகைவரது நாடெல்லாம் ஒருவழிப்பட்டுத் தனது ஏவலைக் கேட்குமாறும், வெற்றியினைத் தங்கள் பங்கிற்கு விளைக்கமாட்டாத சிறந்த மதிலிடத்தோர், என்றும் பருந்துகள் நிறையும் பூசலைச் செய்ய, அதனைத் தடுக்குமாறும், தன் பாடிவீட்டினின்றும் பெயராதவனாக, அவ்விருப்பிலேயே மேலும் இருந்தான்.

'பகைவர் அடிப்படவும், உழிஞையான் மேலும் அவர் போர் மலைதல் கூடுமெனக் கருதிப் பாடி பெயராது இருந்தான்' என்றலால், அடிப்பட இருத்தல் ஆயிற்று.

## 31. தொகை நிலை

***எம்மதிலின் இகல்வேந்தரும்***
***அம்மதிலின் அடியடைந்தன்று.***

தோற்று வீழ்ந்த இந்த மதிலினை உடையான் அல்லாமல், பிற எவ்வகைப்பட்ட மதிலின்கண் இருந்தோரான பகைவேந்தரும், அந்த மதிலினிடத்தே வந்து உழிஞை வேந்தனின் அடிகளை அடைந்தது, தொகைநிலை ஆகும்.

ஏனையோர் வந்து அடியடைதல், தமக்கும் அத்தகைய அழிபாடு வந்துறாமற் பொருட்டு. இதனால், உழிஞையானின் போர்மற மாண்பினது உயர்ச்சியும், தொகையாக மன்னர் பலரும் பணிந்த தொகைநிலையும் புலனாகும்.

**நாவல் பெயரிய ஞாலத் தடியடைந்**
**தேவ லெதிரா திகல்புரிந்த-காவலர்**
**வின்னின்ற தானை விறல்வெய்யோற் கம்மதிலின்**
**முன்னின் றவிந்தார் முரண்.** 126

வில்லாற்றல் நிலைபெற்ற படைப்பெருக்கை உடையோனாயிருந்த வெற்றிவிருப்பினனாக உழிஞை வேந்தனுக்கு, நாவலம் பொழில் என்னும் பெயருடையதான இந்த

உலகிடத்தே, அதுகாறும் அடியடைந்து ஏவலை ஏற்றுக் கொள்ளாது மாறுபாடு புரிந்த பகைமன்னர் அனைவரும், அதன்பின், அவன் முன்னே வந்து பணிந்து நின்று, தம்முடைய மாறுபாடு அவிந்தாராக ஆயினர்.

'நாவல் பெயரிய ஞாலம்' - சம்புத் தீவு.

## தொகுத்து உரைத்தல்

இதுகாறும், பகைவேந்தர் அரணிடத்தே காவலுடன் அமைந்தாராக, அவரை வென்று அடிமைப்படுத்துவான் வேண்டி, அவ்வரணை முற்றுகையிட்டுச் செயல்முடித்த உழிஞை வேந்தனது ஒழுகலாறுகளான உழிஞைத் திணையின் கூறுபாடுகள் பலவும் உரைக்கப்பட்டன.

கொற்றக் குடையினை நன்னாளிற் புறவீடு விடுதலாகிய குடை நாட்கோள்; கொள்ள வாளினை நன் முழுத்தத்தே புறவீடு விடுதலாகிய வாள் நாட்கோள்; கொற்ற முரசத்தை அவ்வாறே புறவீடு விடுதலாகிய முரசவுழிஞை; பகையரணைக் கொள்ளுதலைக் குறித்துப் படையொடு செல்லலாகிய கொற்றவுழிஞை;

உழிஞை வேந்தனது புகழினைப் பாராட்டுதலாகிய அரசவுழிஞை; திருமால் சோவரணைச் சிதைத்தது கூறுதலாகிய கந்தழி; சிவபிரான் திரிபுரத்தை எரித்தது கூறுதலாகிய முற்றுழிஞை; முருகப்பிரான் சூரனை அழித்தது கூறுதலாகிய காந்தள்;

உழிஞையானின் படைப் பெருக்கம் பகையரணின் புறத்தே சென்று தங்குதலாகிய புறத்திறை; பகைவரது அரணது காவன் மறவரின் நிலையுரைத்தலான ஆரெயில் உழிஞை; தொன்றுதொட்டு வீரம் விளைத்து வந்த கிடுகுப்படையைப் பாராட்டலாகிய தோல் உழிஞை;

பகைவரது, அதுவரை பிறராற் கொள்ளப்படாத மதிலின் மேல் வீரன் ஒருவன் ஒற்றைத் தனியனாக நின்று செருச் செய்து அதனால் பாறுபாட்டை மிகுவித்தல், காவற் காட்டைக் கடந்து புகுதல், ஆடலோடு அரணைச் சார்தல் ஆகிய குறுவஞ்சிகள்;

காவற்காட்டைக் கடந்து அரணின் புறத்தே சேர்ந்து தங்குதலாகிய புறத்துழிஞை; அகழியிடத்தே இருசாராரும் பொருதலாகிய பாசிநிலை; மதின்மேல் ஏணி சார்த்தலாகிய ஏணிநிலை; ஏணிமேல் ஏறுவார் தடுப்பாருடன் பொருதவாறே மேலேறிச் செல்லலாகிய எயிற்பாசி;

மதில்மேனின்றும் அரணுள் பாய்தலாகிய முதுவுழிஞை; மதிலகத்து மறவரது சிறப்பினை உரைத்தலாகிய முதுவுழிஞை; அரணகத்தோரை அமர் வெல்லுதலாகிய அகத்து உழிஞை; அரணகத்துக் காலை முரசவொலி எழக் கேட்டு உழிஞையானின் சினம் முதிர்தலாகிய முற்று முதிர்வு.

மதிலைக் கைக்கொண்டு காவலையும் யானைகளையும் கைப்பற்றுதலாகிய யானை கைக்கோள்; அரணகத்தார்க்கு உதவ வேற்றுப்படை வரவு உரைத்தலாகிய வேற்றுப்படை வரவு;

அரணிடத்து இடனெல்லாம் இடித்துக் கழுதையேர் பூட்டிக் கவடியும் குடைவேலும் வித்தலாகிய உழுதுவித்திடுதல், கொற்றவாளிற்கு நன்னீர் ஆட்டுதலாகிய வாள் மண்ணு நிலை; மண்ணின் காவற் பொறுப்பினைத் தான் மேற் கொள்ளலாகிய மண்ணு மங்கலம்;

நொச்சி வேந்தனது மகள்மேற் காதலுற்று வருந்துதலாகிய மகட்பால் இகல்; நொச்சியான் பணிந்து திறைதரப் பெயர்தலாகிய திறைகொண்டு பெயர்தல்; பகை யரணினர் அடிப்பட்ட பின்னரும் பாடி பெயராது இருத்தலாகிய அடிப்பட இருத்தல்; வெற்றிச் சேதி கேட்க வேந்தர் பலரும் தொகுதியாக அடியடைதலான தொகை நிலை; ஆகிய இவையெல்லாம் உழிஞைப் படலத்தின் துறைகளாம்;

✡✡✡

# 7. தும்பைப் படலம்

*(தும்பை என்பது, அகத்திணையுள் நெய்தலுக்குப் புறனாக விளங்கும் புறத்திணைப் பகுதியாகும். 'மண் இடையீடாகப் பொரும் வஞ்சிக்கும், மதில் இடையீடாகப் பொரும் உழிஞைக்கும் பின்னர், மைந்து பொருளாகப் பொரும் தும்பையாகிய இது கூறப்படுகிறது' என்பது, நச்சினார்க்கினியரது விளக்கம். இதனை மனத்திற்கொண்டே இப்பகுதியினைக் கற்றல் வேண்டும். காடும் மலையும் கழனியும் அல்லாத, களரும் மணலும் இதற்குப் பொருகளமாதல் வேண்டும். வீரக் குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின் கண் இரங்குபவாதலானும், ஒருவரும் ஒழியாமற் பட்டுழிக் கண்டோர் இரங்குபவாதலானும், பிறகாரணங்களானும், இது நெய்தற்குப் புறனாகக் கூறப்பெறுவதாயிற்று. இது மைந்து பொருளாக, அதாவது தனது வலிமையினை உலகம் மிகுத்துப் போற்றுதல் ஒன்றே தனக்குப் பெறுபொருளாக, இருசாராரும் பொருதல் ஆகும். இதனையும் நாம் கவனத்திற்கொண்டு, இப்பகுதியைக் கற்றறிதல் வேண்டும்.)*

**துன்னரும் கடும்போர்த் தும்பை தும்பையரவம்**
**தன்னிகர் இல்லாத் தானை மறமே**
**யானை மறத்தொடு குதிரை மறமே**
**தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே**
**இருவரும் தபுநிலை எருமை மறமே**
**ஏம எருமை நூழில் என்றா**
**நூழி லாட்டே முன்தேர்க் குரவை**
**பின்தேர்க் குரவை பேய்க்குர வையே**
**களிற்றுட னிலையே ஒள்வாள் அமலை**
**தானை நிலையே உவகைக் கலுழ்ச்சி**
**தன்னை வேட்டல் தொகைநிலை உளப்பட**
**நன்பொருள் தெரிந்தோர் நாலிரு மூன்றும்**
**வண்பூந் தும்பை வகையென மொழிப. (7)**

*மறமாண்பு ஒன்றே பொருளாகக் கருதி மேற்கொள்ளுவதான இந்தத் தும்பை என்னும் ஒழுக்கம், இருபத்து மூன்று துறைகளாக இயலும் என்று, நன்மையான பொருளது வேறுபாட்டை அறிந்தோரான சான்றோர் உரைப்பார்கள். அவற்றுடன் திணையும் கூட்டி, இத் திணைப்பகுதி இருபத்து நான்காக உரைக்கப்படுவதாகும்.*

*தும்பை அரவம், தானை மறம், யானை மறம், குதிரை மறம், தார் நிலை, தேர் மறம், பாண் பாட்டு, இருவரும் தபு நிலை, எருமை மறம், ஏம எருமை, நூழில், நூழிலாட்டு, முன் தேர்க் குரவை, பின் தேர்க்குரவை, பேய்க்குரவை, களிற்றுடனிலை, ஒள்வாள் அமலை, தானை நிலை, வெருவரு நிலை, சிருங்கார நிலை, உவகைக் கலுழ்ச்சி, தன்னை வேட்டல், தொகை நிலை ஆகியன உழிஞையின் துறைகளாம்.*

*தொல்காப்பியம் இதனைப் பன்னிரு துறைகளுள் உட்படுத்தும் (புறத். சூ. 17).*

## தும்பைத் திணையின் விளக்கம்

*செங்களத்து மறங்கருதிப்*
*பைந்தும்பை தலைமலைந்தன்று*

*மறம் மேம்பாட்டைக் கருதிக், குருதியாற் சிவந்த போர்க்களத்தின் கண்ணே, வேந்தன் ஒருவன், பசிய தும்பையாகிய போர்ப்பூவினைத் தலையிடத்தே சூடியது, தும்பைத் திணை ஆகும்.*

**கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்**
**சோர்குருதி சூழா நிலநனைப்ப-போர்கருதித்**
**துப்புடைத் தும்பை மலைந்தான் துகளறுசீர்**
**வெப்புடைத் தானையெம் வேந்து.** 127

*குற்றம் தீர்ந்த புகழினையும், வெம்மை மிகுந்த படையினையும் உடையான் எம் வேந்தன்; அவன், கார்மேகத்தை ஒப்பாகக் குறித்து ஒழியாதே நின்று முழங்குகின்ற ஆரவாரத்தாற் சிறந்த வீரமுரசத்தினையும் உடையவன். இப்போது, ஒழுகும் குருதியானது சூழ்ந்து போரிடும் களத்தினை நனைப்பப் போர்செய்தலைக் கருதினான்; அதற்கு அடையாளமாகத் தும்பைப்பூ மாலையையுஞ் சூடினான்.*

*துப்பு-வலிமை. வெப்பு-வெம்மை. துகள்-சிறு குற்றம்.*

## தும்பைத் திணையின் துறைகள்

### 1. தும்பை அரவம்

*பொன்புனைந்த கழலடியோன்*
*தன்படையைத் தலையளித்தன்று.*

*பொன்னினாலே இயற்றப்பெற்ற வீரக்கழலை அணிந்திருக்கின்ற காலினை உடையவனான மன்னன், தனது படையைத் தலையளி பண்ணியது, தும்பை அரவம் ஆகும்.*

*தலையளி பண்ணலாவது, வரிசையறிந்து பொருள் நல்கி மகிழ்வித்தல். இதன்போது ஆரவாரம் எழுதல் இயல்பாதலால், இது தும்பை அரவம் ஆயிற்று.*

**வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும்**
**கொல்களிறும் மாவும் கொடுத்தளித்தான்-பல்புரவி**
**நன்மணித் திண்தேர் நயவார் தலைபனிப்பப்**
**பன்மணிப் பூணான் படைக்கு.** 128

*பல மணிகள் அழுத்தின அணிகலன்களை அணிந்தோனான வேந்தன், பலவாகிய குதிரைகளையும் நன்றாகிய மணிகளையும் திண்ணியவான தேர்களையும் உடையவரான தன் பகை வேந்தர்கள் தலை நடுங்கும்படியாகத், தன் படையினருக்குப், போர் வெல்லுதற்குரிய அடையாளமும், பலவூர்களை யுடைய சிறு நாடுகளும், சிறந்த பொருளும், மருத நிலங்களும், கொல்லும் களிறுகளும், குதிரைகளும் கொடுத்து அவர்களுக்கு அருளுதலைச் செய்தான்.*

*'வெல் பொறி' - வெல்லுதற்கான அடையாளம். நாடு-பற்று - பலவூர்களையுடைய சிறுநாடு. மருதநிலம்-விளை வயல்.*

## 2. தானை மறம்-1

***தாம்படைத் தலைக்கொள்ளாமை***
***ஓம்படுத்த உயர்புகூறின்று.***

*பொருதற்கு எதிரிட்ட படைகள் இரண்டும், தாம் போர் செய்து அழிந்து படாமற்படிக்கு, தம்முள் போரை விலக்கிப் பாதுகாத்த உயர்ச்சியைக் கூறுவது, தானை மறம் ஆகும்.*

*போரிடின் இருபடையும் அழிவெய்தும் அளவிற்கு நிகரான வலியுடையன; ஆதலின், அதனைக் கருத்திற் கொண்டு ஓம்படுத்த உயர்பாகிய இது, தானை மறம் ஆயிற்று.*

**கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முள்**
**இழுதார்வேற் றானை இகலிற்-பழுதாம்**
**செயிர்காவல் பூண்டொழுகும் செங்கோலார் செல்வம்**
**உயிர்காவல் என்னும் உரை.** 129

*'குற்றத்தை உலகிற் புகுதாமற் காத்தொழுகும் காவலைப் பூண்டு நடக்கின்ற செங்கோன்மையினை உடையவர்களின் செல்வமாவது, பலஉயிரையும் காத்தல்' என்பது ஆன்றோர்களின் உரை; நெய்யணிந்த வேலினையுடைய படையானது, பேய்கள் மிகுந்த போர்க்களத்தை அடைந்து, தம்முள்ளே மாறுபட்டுப் போரிடப் புகுந்தால், அந்த ஆன்றோர் உரைக்குக் குற்றமாம்.*

இங்ஙனம் கருதித் தும்பை வேந்தன், போர் நிகழுதலை விலக்கினான். 'போர் நிகழின் பல்லுயிரும் இறந்து பாழ்படும்' என்பது கருத்து. 'இஃதன்றி, ஒருவன் படைஞரே தம்முள் மாறுபட்டுப் பொருதல் உரைபழுதாம் செயல்' எனவும் கூறுவர்.

## 3. தானை மறம் - 2

*பூம்பொழிற் புறங்காவலனை*
*ஓம்படுத்தற்கும் உரித்தெனமொழிப.*

பொலிவுபெற்ற நாடுகாவலனாகிய அரசனுக்கு, உறுதிப் பொருளினை எடுத்துக் கூறிய, போரினைக் காலங் கடத்தலை விலக்குதற்கும், இந்தத் தானை மறத்துறை உரியதென்று ஆன்றோர் கூறுவர்.

**வயிர்மேல் வளைஞரல வைவேலும் வாளும்**
**செயிர்மேற் கனல்விளைப்பச் சீறி - உயிர்மேற்**
**பலகழியு மேனும் பரிமான்தேர் மன்னர்க்கு**
**உலகழியும் ஓர்த்துச் செயின்.** 130

கொம்புகளின் ஓசையின்மேற் சங்குகளின் முழக்கம் எழக், கூர்த்த வேலும் வாளும் போரிடத்து நெருப்புப் பரக்க வெகுண்டு போரிட்ட விடத்து, உயிர்கள் மேலும் பலவாகக் கழிந்து போகுமேனும், குதிரைபூட்டிய தேரினை உடையவனரான மன்னருக்குக், காலந்தாழ்ப்ப ஆராய்ந்து செய்யின், அதனால் பூமியே அழிவினை அடைதலும் நேரும்.

'உயிர் மேற்பல கழியுமேனும் அதனைக் கருதிக் காலந் தாழ்க்காது, போரினை உடனே செய்தல் வேண்டும்' என அமைச்சர் படைத்தலைவர் ஆயினார் கூறுவர் இது. அதனையும் கருதாது முற்படும் மறத்தொழிலால் இதுவும், தானை மறம் ஆயிற்று.

## 4. தானை மறம் - 3

*வேற்றானை மறங்கூறி மாற்றார தழிபிரங்கினும்*
*ஆற்றின் உணரின் அத்துறை யாகும்.*

முறையாக ஆராய்ந்து உணர்வோமானால், வேற்படையினது மறமாண்பினை எடுத்துக் கூறி, அதனால் வந்துறுகிற பகைவருடைய கேட்டிற்கு இரங்கினாலும், அதுவும் தானை மறத் துறையே யாகும்.

**மின்னார் சினஞ்சொரிவேன் மீளிக் கடற்றானை**
**ஒன்னார் நடுங்க உலாய்நிமிரின்-என்னாங்கொல்**
**ஆழித்தேர் வெல்புரவி அண்ணல் மதயானைப்**
**பாழித்தோள் மன்னர் படை.** 131

வட்டக் காலாற் சிறந்த தேரினையும், போர்வெல்லும் குதிரையினையும், தலைமைப்பாட்டை யுடைய மதயானை யையும், வலிகொண்ட தோளினையும் உடைய பகைவரது படைகள் எல்லாம், ஒளிநிறைந்த சினத்தீயினைச் சொரியும் வேலினையும் தலைமையினையும் உடைய கடல்போன்ற நம் மன்னனது தானையானது, பகைவர் அச்சத்தால் நடுங்குமாறு நிலைபெயர்ந்து நடக்குமானால், என்ன பாடுதான் படுமோ?

தும்பையாரின் செற்றத்தைக் கண்டோர், அதனாற் பகைப்படைக்கு வந்துறும் அழிபாட்டைக் குறித்து இரங்கியது இது.

## 5. யானை மறம்

*எழுமரவக் கடற்றானையான்*
*மழகளிற்றின் மறங்கிளர்ந்தன்று.*

ஆரவாரித்து எழுகின்ற, கடல்போற் பரந்த சேனையினை உடையானான தும்பை மன்னனது, இளங்களிற்றினது மறத்தைச் சொல்லுவது, யானை மறம் ஆகும்.

மழகளிற்றின் மறத்தினைச் சொல்வது, அதனாற் பகைப்படை உறப்போகும் அழிவிற்கு இரங்குவதுமாகித், தும்பைத் திணை ஆயிற்று.

**அடக்கருந் தானை அலங்குதார் மன்னர்**
**விடக்கும் உயிரும் மிசையக்-கடற்படையுள்**
**பேயும் எருவையும் கூற்றுந்தன் பின்படரக்**
**காயும் கழலான் களிறு.** 132

வீரக் கழலினை உடையானான தும்பை வேந்தனின் கொல்களிறானது, பகையரசரது கடல்போன்ற படையுள் புகுந்து, அடக்குதற்கரிய அவரது தானையதும், அசைகின்ற மாலையுடைய அம் மன்னர்களது, தசையினையும் உயிரினையும் உண்ணும்பொருட்டாகக் கழுகுகளும் கூற்றுவனும் தன்னைப் பின்தொடர்ந்து வரச், சென்று வெகுளுமே!

விடக்கு-தசை. களிற்றது ஆற்றலால் பகைப்படைக்கு நேரப்போகிற அழிவினைக் குறித்து இரங்கிய, தும்பை மறவன் ஒருவனது கூற்று இது.

## 6. குதிரை மறம்

*எறிபடையான் இகலமருள்*
*செறிபடையான் திறங்கிளந்தன்று.*

*எறியும் மாறுபாட்டினையுடைய வேற்படையினைக் கொண்டவனான தும்பைவேந்தனது, மாறுபாட்டினைச் செய்யும் போரின்கண், போர்க்கலை செறிந்த குதிரையினது திறத்தைச் சொல்லுவது, குதிரைமறம் ஆகும்.*

*எறிபடை-கொல்லும் வேற்படை; இதனை உடையான் தும்பை வேந்தன். குதிரைமறத்தைக் குறித்து, அதனாற் பகைப்படைக்கு வரும் அழிபிற்கு இரங்கியது இது. நொச்சித் திணையுள் வரும் குதிரை மறத்திற்கும் இதற்கும் அமைந்த வேறுபாட்டை அறிக.*

**குந்தங் கொடுவில் குருதிவேல் கூடாதார்**
**வந்த வகையறியா வாளமருள்-வெந்திறல்**
**ஆர்கழல் மன்னன் அலங்குளைமா வெஞ்சிலை**
**வார்கணையின் முந்தி வரும்.** 133

*வெய்தான வலியினையும், நிறைந்த வீரக்கழலினையும் உடையவன் தும்பை வேந்தன்; இவனுடைய அசையும் தலையாட்டத்தையுடைய குதிரையானது, பகைவருடைய குந்தப் படையும், கொடிய விற்படையும், குருதியளைந்த வேற்படையும், தாம் வந்த வகையறியாது நிலைகலங்கித் தலைமயங்கிய வாட்போரினுள், கொடிய வில்லிலே தொடுத்து விட்ட நீண்ட கணையினைப் போல முற்பட்டுப் பாய்ந்து வருமே!*

*'கணையினும் கடுவிரைவுடன் வரும்' எனக் குதிரை மறத்தை உரைத்து, அதனால் வரும் பகைப்படை அழிபிற்கு இரங்கினான் உழிஞை மறவருள் ஒருவன் என்க. குந்தம்-ஈட்டி போன்ற ஒருவகைப் படைக்கலன்; சவளம் என்பர் பழைய உரைகாரர்.*

## 7. தார்நிலை-1

***முன்னெழுதரு படைதாங்குவனென***
***மன்னவற்கு மறங்கிளந்தன்று.***

*ஒரு மறவன், தும்பை மன்னனுக்கு, 'முற்பட எழுந்து வருகின்ற பகைவரது தூசிப்படையினை யானே தடுப்பேன்' எனத் தனது தறுகண்மையைச் சொல்லியது, தார்நிலை ஆகும்.*

**உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்**
**சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய்-எறிசுடர்வேல்**
**தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னொடு**
**பாங்கலா மன்னர் படை.** 134

*எறிதற்குரிய ஒளிகாலும் வேலினையும், தேன்மலர்ந்த பூமாலையினையும் உடைய தேர்வேந்தனே! நின்னோடும்*

உறவல்லாத வேந்தர்களது படையெல்லாம், யான் மிக்க ஒளியினையுடைய வாளுடனே ஒருகால் எதிர்நின்று தடுப்பேனாயின், 'சிறு சுடரினது முன்னர் அகன்றுபோம் பேரிருளைப்போலக் கெட்டழியும்' என்பதனைக் காண்பாயாக!

உழிஞை மறவன், 'சிறுசுடர் முன் பேரிருள் போலக் கெட்டழியுமாறு, யான் ஒருவனாகவே பகைப்படையை ஒழிப்பேன்' என்று கூறிய மறமாண்பால், இது தார்நிலை ஆயிற்று.

## 8. தார்நிலை-2

*ஒருகுடை மன்னனைப் பலகுடை நெருங்கச்*
*செருவிடைத் தமியன் தாங்கற்கும் உரித்தே.*

ஒப்பற்ற கொற்றக்குடையினை உடையவனான தன் வேந்தனைப், பலகுடை மன்னர்களும் ஒருங்கே வந்து நெருங்கிய போரிடத்து, உழிஞை மறவருள் ஒருவன், தான் ஒருவனாகவே நின்று அவர்களைத் தடுத்தலும், தார்நிலை என்னும் துறை ஆகும்.

**காலான் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்**
**வேலான்கை வேல்பட வீழ்ந்தனவே-தோலா**
**இலைபுனை தண்டார் இறைவன்மேல் வந்த**
**மலைபுரை யானை மறிந்து.** 135

தோல்வியே அறியாத, இலையால் தொடுத்த மாலையினை யுடைய, அரசனின் மேலாக வந்த மலைபோன்ற யானைகள் எல்லாம், அம் மன்னனது வேல்வீரன் ஒருவனின் கையகத்து வேல் தாக்குதலால், காற்றாலே நிலைகுலைந்து கதிர் மண்டிலத்தை மறைத்த கரிய மேகங்களைப் போலக், கீழ்மேலாய் நிலைகுலைந்து வீழ்ந்தனவே!

'கால்'-காற்று. 'வேலன் கை வேல்பட யானை வீழ்ந்தனவே' என்றதனால், இது தார்நிலை ஆயிற்று. 'தார்' என்றது தூசிப்படையினை.

## 9. தேர் மறம்

*முறிமலர்த்தார் வயவேந்தன்*
*செறிமணித்தேர்ச் சிறப்புரைத்தன்று.*

தளிர்விரவின மாலையினையுடைய வலிய வேந்தனது, செறிந்த மணிகளையுடைய தேரின் சிறப்பினைச் சொல்லியது தேர்மறம் ஆகும்.

**செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்**
**அருமுரண் ஆழி தொடர-வருமரோ**

**கட்டார் கமழ்தெரியற் காவலன் காமர்தேர்**
**ஒட்டார் புறத்தின்மேல் ஊர்ந்து.** 136

*கட்டுதற்றொழில் மிகுந்த மணங்கமழும் மாலையினை உடையானான நம் வேந்தனது அழகிய தேரானது, பகைவருடைய பிணப்புறத்தின் மேலாக நடந்து, போர்த் தொழிலால் மிகுந்த வெவ்விய களத்தினிடையே, செவ்விய குருதிவெள்ளமானது கிட்டுதற்கரிய மாறுபாட்டையுடைய தேருருளைத் தொடர வரா நிற்ப, வந்து கொண்டிருக்கும்!*

*தேர் ஊர்ந்து வருகின்ற நிலையைச் சொல்லுகிறான், கண்டான் ஒருவன். 'சக்கரம் பதிந்த தடத்தோடே பகைவரது செங்குருதி வெள்ளமாகத் தொடர்ந்துவரத் தேர் சென்றது' எனத் தேர்மறங் கூறியதும் காண்க. 'தேர், பகைப்படையைச் சிதைத்த மறமாண்பும் கூறப்பட்டது.*

## 10. பாண்பாட்டு

***வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்***
***கைவல்யாழ்ப் பாணர் கடனிறுத் தன்று.***

*யாழினை இசைக்கின்ற கைத்தொழிலிலே வல்லவரான பாணர், குருதி வெள்ளத்தாற் சிவந்த போர்க்களத்திடையே, பகைவருடைய களிறுகளைக் கொன்று அப்போரிடையே தாமும் பட்டு வீழ்ந்தாரான தும்பை மறவர்கட்குச், செய்யுங் கடனைச் செய்து அவர் புகழைப் பாடுவது, பாண்பாட்டு ஆகும்.*

**தளரியல் தாய்புதல்வர் தாமுண ராமைக்**
**களரிக் கனன்முழங்க மூட்டி-விளரிப்பண்**
**கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு**
**விண்ணினார் செய்தார் விருந்து.** 137

*போர்க்களத்திலே, பகைவரது களிற்றினைக் கொன்று தாமும் பட்டு வீழ்ந்த தும்பை வீரருக்குத், துறக்கத்தே உள்ளவர்கள் விருந்து செய்தனர்; பாணர்களோ, தளர்ந்த இயல்பினையுடைய அவர்தம் மனைவியும் தாயும் புதல்வரும் தாம் அவ்வீரர் களத்துப்பட்டதை அறியாமையாலே, களத்திலே அவருடற்கு நெருப்பினை முழங்க மூட்டிச், சாப்பண்ணைப் பாடுதலையும் கருதினார்கள்.*

*விளரிப்பண்-இரங்கற்பண். இதனைப் பாடுதலும் உடற்கு எரியிடுதலும் செய்தலால், இத்துறை பாண்பாட்டு ஆயிற்று. 'தாம் உணராமைக் களரிக்கனன் முழங்க மூட்டி, என்பதற்கு, 'அவர் உணரின் உறுகின்ற வேதனைக்கு இரங்கி, அவர் உணராமற்படிக்கு உடற்கு எரியூட்டினர் பாணர்' எனவும் பொருள் கொள்ளலாம்.*

## 11. இருவரும் தபுநிலை

*பொருபடை களத்தவிய*
*இருவேந்தரும் இகலவிந்தன்று.*

*போர் செய்த இருதிறத்துப் படைகளும் களத்திலே கெட்டழியப், போரிட்ட வேந்தர்கள் இருவரும், தாமும் களத்திலே போரிட்டு வீழ்ந்து தம் மாறுபாடு அவிந்தது, இருவரும் தபுநிலை ஆகும்.*

*மன்னர் இருவரும் பட்டனராகவே, இருவரும் தபுநிலை ஆயிற்று. இதனை அறிந்தார் இரங்குவர் என்பது குறிப்பு.*

**காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி**
**வேந்தர் இருவரும் விண்படர-ஏந்து**
**பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி**
**இருபடையும் நீங்கா இகல்.** 138

*பகைத்துப் பொருத மன்னர்கள் இருவரும், கடிய போர்க்களிறுகள் கண்ணழலக் கைகலந்து விண்ணினைச் சேர்ந்தாராக, தாம் ஏந்திய போரிடும் படைக்கலன்கள் மின்னுமாறு, அவரது இருதிறத்துப் படைகளும் புறங்கொடுத்துப் போகாவாறு வெகுண்டு, தம் மாறுபாடு நீங்காவாய்ப் பொருது, தாமும் களத்தே பட்டன!*

*அரசும் படையும் இருதிறத்தும் பட்டதனைக் கண்டு பிறர் இரங்கியது இது. 'இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்' (புறத். 17) என்ற தொல்காப்பிய விதியையும், 'இருபெருவேந்தர் தானைத் தலைவருந் தத்தம் வேந்தர்க்காகித் தார் தாங்குதலேயன்றி, அத் தலைவரிருவருந் தம்மிற் பொருது வீழ்தல்' இதுவென நச்சினார்க்கினியர் உரைக்கும் விளக்கத்தையும், ஒப்பிட்டுக் கருதுக.*

## 12. எருமை மறம்

*வெயர்பொடிப்பச் சினங்கடைஇப்*
*பெயர்படைக்குப் பின்னின்றன்று.*

*வேர்வை அரும்பும்படி சினத்தைச் செலுத்தியவாறு, தும்பை மறவன் ஒருவன், முதுகிட்ட தன் படைக்குப் பின்னே நின்றது, எருமை மறம் ஆகும்.*

**கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி**
**நெடுங்கைப் பிணத்திடை நின்றான்-நடுங்கமருள்**
**ஆள்வெள்ளம் போகவும் போகான்மை வேலூன்றி**
**வாள்வெள்ளந் தன்மேல் வர.** 139

*தறுகண்மை மிக்கானாகிய தும்பை மறவன், கண்டோர் நடுக்கமுறும் கொடுமையதான போரிடத்தே, காலாள் வெள்ளமானது முதுகிட்டுப் போகவும், தான் அவற்றுடன் போகானாகிப், பகைவரின் வாள்வீரரது வெள்ளம் தன்மேல் அடர்ந்து வராநிற்பவும், நெருப்புப்போல விழித்துச் சினந்து, தன் கைவேலை ஊன்றியவாறே, நெடுங்கைகளை உடைய யானைப் பிணத்தின் நடுவே நின்றான்!*

*'உடை படை ஒருவன் புக்கு ஒருவனைக் கூழை தாங்கிய எருமையும்' என்பர் தொல்காப்பியர்; (புறத். 17). 'தனது உடைந்த படைக்கண்ணே ஒரு படைத்தலைவன் சென்று நின்று, அங்ஙனம் கெடுத்த மாற்றுவேந்தன் படைத்தலைவனை அவன் எதிர்கொண்டு நின்ற பின்னணியோடே தாங்கின கடாப்போலச் சிறக்கணித்து நிற்கும் நிலைமை' என்ற நச்சினார்க்கினியரின் உரையினை இதனுடன் நோக்கி, இதனைத் தெளிதல் வேண்டும். கடாப்போலச் சிறக்கணிந்து நிற்கும் நிலையால், எருமை மறம் ஆயிற்று.*

## 13. ஏம வெருமை

***குடைமயங்கிய வாளமருள்***
***படைமயங்கப் பாழிகொண்டன்று.***

*மன்னர் குடைகள் தம்முள் தலைமயங்கிய வாட்போரி னுள்ளே, தனது வேற்படை மாற்றாரது பொருகளிற்றின் மத்தகத்தே குளிப்ப எறிந்து, பின், படையின்றியே தன் தோள்வலியால் வெற்றி கொண்டது, ஏம எருமை ஆகும்.*

*'படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்' என்பர் தொல்காப்பியர் (புறத். 17). 'கைப்படையைப் போக்கி மெய்யாற் போர்செய்யும் மயக்கம்' என்பது பொருள். பாழி-வலி; அதனைச் செலுத்திய வெற்றிக்கு ஆயிற்று.*

**மருப்புத்தோ ளாக மதர்விடையிற் சீறிச்**
**செருப்புகன்று செங்கண் மறவன்-நெருப்பிமையாக்**
**கைக்கொண்ட எஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி**
**மெய்க்கொண்டான் பின்னரும் மீட்டு.** 140

*சிவந்த கண்ணினை உடையானான மறவன், போரினை விரும்பித், தான் கைக்கொண்ட வேற்படையினைப் பகைவரது கடிய யானையின்மேல் போக்கிவிட்டு, மதர்த்த எருமைக் கடாவைப் போலச் சீறியவனாகத், தன் தோள்களே கொம்பு களாகக் கொண்டு, பின்னரும் பொறிபிறப்ப விழித்தவனாகத், தனது மெய்வலியினாலே போரிட்டு வெற்றி கொண்டான்!*

*இந்தத் துறைக்கு மேற்கோளாக நச்சினார்க்கினியர் காட்டும்,*

*"கொல்லேறு பாய்ந்தழிந்த கோடுபோல் தண்டிறுத்து*
*மல்லேறு தோள்வீமன் மாமனைப்-புல்லிக்கொண்டு*
*ஆறாத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தார்*
*ஏறாடல் ஆயர் என'*

என்ற பாரதப் பாட்டையும் நோக்குக.

## 14. நூழில்

*கழல்வேந்தர் படைவிலங்கி*
*அழல்வேல்திரித் தாட்டமர்ந்தன்று.*

வீரக்கழல் அணிந்தாரான பகைவேந்தரது படையினைக் கொன்று, வீரன் ஒருவன், அழலும் தன் வேலினைச் சுழற்றியவனாக ஆடுதலை விரும்பியது, நூழில் ஆகும்.

நூழிலாவது, கொன்று குவித்தல்; 'வள்ளை நீக்கி வயமீன் முகந்து, கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர், வேழப் பழனத்து நூழிலாட்டு' எனவரும் மதுரைக்காஞ்சி அடிகளையும் நோக்குக- (மதுரை. 255-257).

**ஆடல் அமர்ந்தான் அமர்வெய்யோன் வீழ்குடர்**
**சூடல் மலைந்த சுழல்கட்பேய்-மீடல்**
**மறந்தவேல் ஞாட்பின் மலைந்தவர் மார்பம்**
**திறந்தவேல் கையில் திரித்து.** 141

மீளுதல் ஒழிந்த வேற்பொருள், மாறுபட்டவர் மார்பத்தை ஊடுருவின வேலினைக் கையிலே திரித்தவனாக, ஆடுதலை மேற்கொண்டான் வீரன் ஒருவன். அப்போது சுழலும் விழியினையுடைய பேய்களும் வீழும் குடரினை மாலையாகத் தாம் சூடுதலை மேற்கொண்டன.

மலைந்தவர்-மாறுபட்டுப் போரிட்டார். ஞாட்பு-போர். இதனைக் கண்டு பகைவரது அழிவிற்கு இரங்கியோர் கூற்று இது.

## 15. நூழிலாட்டு

*களங்கழுமிய படையிரிய*
*உளங்கிழித்தவேல் பறித்தோச்சின்று.*

பொருளகத்தைப் பொருந்திய படைகள் கெட்டோடத், தன் மார்பத்தைத் திறந்த வேலைப் பறித்து ஒருவன் எறிந்தது, நூழிலாட்டு ஆகும்.

வேலைத் திரித்து ஆடலை விரும்பியது நூழில்; தன் மெய் வேலைப் பறித்துப் பகைவர் கெட்டோட எறிந்தது நூழிலாட்டு.

**மொய்யகத்து மன்னர் முரணினி யென்னாங்கொல்**
**கையகத்துக் கொண்டான் கழல்விடலை-வெய்ய**
**விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த**
**படுசுடர் எஃகம் பறித்து.** 142

*வீரக்கழலினை உடையானான இவ்வீரன், வெய்தான மிகுகனலைச் சிதறி, மணம் நாறும் தன் மார்பத்தைப் பிளந்த ஒளிதோன்றும் வேலினைப் பறித்துத், தன் கையகத்தேயும் பற்றிக் கொண்டான்; இனிப், போரிடத்துப் பகைவேந்தரின் மாறுபாடுதாம் என்னாகுமோ?*

*பகைவர் அழிவரென்பது கருத்து. வேலைப் பறித்த அவனும் சாவான் என்று இரங்குதலும் கொள்க.*

## 16. முன்தேர்க் குரவை

***கழுவுறழ் திணிதோள் வேந்தன் வெல்தேர்***
***முழுவலி வயவர் முன்னா டின்று.***

*கணைய மரத்தைப் போன்ற, திண்மையான தோள்களை உடைய தும்பை வேந்தனின் வெற்றித்தேருக்கு முன்பாக, நிரம்பிய வலிமையினை உடைய தும்பை மறவர்கள் குரவையாடுவது, முன்தேர்க் குரவை ஆகும்.*

*வாகைத் திணைக்கண், 'வெற்றி பெற்ற வேந்தனின் தேர் முன்பாக இவ்வாறு நிகழுவதும்' முன்தேர்க் குரவை எனப்படும் - (வெண்பா. 161)*

**ஆனா வயவர்முன் ஆட அமர்க்களத்து**
**வானார்மின் னாகி வழிநுடங்கும் - நோனாக்**
**கழுமணிப் பைம்பூண் கழல்வெய்யோன் ஊரும்**
**குழுமணித் திண்தேர்க் கொடி.** 143

*பகை பொறாதவனும், கழுவிய மணிகளானே அமைந்த அணிகலன்களைப் பூண்டவனும், வீரக் கழல் அணிந்தவனும், போர் விருப்பினை உடையோனுமாகிய தும்பை வேந்தன், ஊர்கின்ற திரண்ட மணிகளையுடைய திண்ணிய தேரின் கொடியானது, அமையாத வீரர்கள் தேர்முன் ஆடிவர, அமர்க்களத்தே, வானிடத்துப் பொருந்திய மின்னைப் போன்று முறையே ஒளியுடன் ஆடாநிற்கும்.*

*'கொடி, வயவர் ஆட வழி நுடங்கும்' என்க. தும்பை மறவனின் தேர்செல்லுகிற மறமேம்பாடு கண்டார், கூறியது இது.*

## 17. பின்தேர்க் குரவை

*கருங்கழன் மறவரொடு வெள்வளை விறலியர்*
*பெருந்தகை தேரின் பின்னா டின்று.*

*பெரிதான மேம்பாட்டினையுடைய தும்பையானது தேரின் பின்னாக, வலிய கழலணிந்த மறவரொடும், வெள்ளிய வளையணிந்த விறலியரும் குரவையாடிச் செல்வது, பின்தேர்க் குரவை ஆகும்.*

*வாகைத் திணையிலும், 'வெற்றி பெற்று வாகை சூடிச் செல்லும் வேந்தனது தேரின் பின்னாக' இது நிகழும் - (செய். 162) இரண்டின் வேறுபாட்டையும் உணர்க.*

**கிளையாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணும்**
**வளையா வயவரும் பின்னாக்-கொளையாய்ந்து**
**அசைவிளங்கும் பாடலோ டாட வருமே**
**திசைவிளங்கும் தானையான் தேர்.** 144

*திசைகளிலே விளங்கும் தானைப் பெருக்கினை உடைய தும்பை வேந்தனது தேர், அதன் பின்பக்கத்தே, கிளை நரம்பினை ஆய்ந்தமைத்த சுருதியான் மிகுந்த யாழிசையை எழுப்பலிலே வல்ல பாண் மகளிரும், தோலாத வீரமறவரும், இசையாய்ந்து தூக்குதல் அமைந்த பாடலுடனே ஆடலையும் நிகழ்த்தியவராக வந்து கொண்டிருப்பவரும்.*

*இது, தேர் வருவதனைக் கண்டார் கூறியது. தேரின் பின்னாகக் குரவையாடி வருதலைக் கூறுதலின், 'பின்தேர்க் குரவை' ஆயிற்று.*

## 18. பேய்க் குரவை

*மன்னன் ஊரும் மறமிகு மணித்தேர்ப்*
*பின்னும் முன்னும் பேயா டின்று.*

*மன்னவன் செலுத்துகின்ற மறத்தன்மை மிகுந்த மணிகள் விளங்கும் தேரினது. பின்னும் முன்னுமாகப் பேய் ஆடியது, பேய்க் குரவை ஆகும்.*

*முன்தேர்க் குரவையும் பின்தேர்க் குரவையும் வயவரும். வயவரொடு விறலியரும் ஆடி வருவது; இது பேய்கள் ஆடி வருவது; அதனால், பேய்க் குரவை ஆயிற்று.*

**முன்னரும் பின்னரும் மூரிக் கடற்றானை**
**மன்னர் நெடுந்தேர் மறனேத்தி-ஒன்னார்**
**நிணங்கொள்பேழ் வாய நிழல்போல் நுடங்கிக்**
**கணங்கொள்பேய் ஆடும் களித்து.** 146

*பெரிதான கடலைப்போன்ற தானையையுடைய வேந்தனது, நெடிய தேரின் முன்னாகவும் பின்னாகவும், பகைவரது தசையை உணவாகக் கொள்ளும் பெரிய வாயினையுடையவும் திரண்டு வருவனவும் ஆன பேய்கள், நிழல் போலத் தொடர்ந்து வந்தவாய்க், களிப்புடன் அசைந்தாடி வருவது, பேய்க் குரவையாகும்.*

*கணங்கொள்ளல்-திரட்சி கொள்ளல். மூரிக்கடல்-பெரிய கடல். தமக்கு உணவு மிகுதியாகக் கிடைக்கப்போகிறதென்ற களிப்பால், பேய்கள் இவ்வண்ணம் ஆடி வருவனவாம்.*

## 19. களிற்றுடனிலை

***ஒளிற் றெஃகம் பட வீழ்ந்த***
***களிற் றின்கீழ்க் கண்படுத் தன்று.***

*ஒள்ளிய வேலினாலே பகைவரது களிற்றினை எறிந்து, அவ் வேல் பட்டு வீழ்ந்த அக் களிற்றின் கீழாக, ஒரு வீரன், தானும் பட்டுப் பேருறக்கம் கொண்டது, களிற்றுடனிலை ஆகும்.*

*இதனைக் 'களிறு எதிர்ந்தோர் பாடு' என்று தொல்காப்பியம் கூறும். (புறத். சூ. 17). களிறெறிந்தானது நிலை கூறுவது இது. இதனை யானை மறத்துடன் ஒப்பக் கருதிவிடலாகாது.*

**இறுவரை வீழ வியக்கற் றவிந்த**
**தறுகட் டகையரிமாப் போன்றான்-சிறுகட்**
**பெருங்கைக் களிறெறிந்து பின்னதன்கீழ்ப் பட்ட**
**கருங்கழற் செவ்வே லவன்.** 146

*சிறுத்த கண்களையும் பெரிதான கையினையுமுடைய பகைவேந்தரது களிற்றினைத், தன் வேலான் எறிந்து, பின், அதன் கீழ்த் தானும் பட்டு வீழ்ந்தோனான வலிய கழலினையும் சிவந்த வேலினையும் உடையானான அவ்வீரன், பெரிய மலையொன்று முறிந்து வீழப் போக்கற்று அதனடியிற்பட்ட தறுகண்மையுடைய போர்த்தொழிலாற் சிறந்த சிங்கவேற்றைப் போன்றவன் ஆவான்!*

*வீரன் வீழ்ந்துபட்டது பகைவரது ஆண்மைச் செயலான் அன்று; எதிர்பாராத நிகழ்ச்சியால் என்பதனை அறிக.*

## 20. ஒள்வாள் அமலை

***வலிகெழுதோள் வாள்வயவர்***
***ஒலிகழலா னுடனாடின்று.***

*உரம் பொருந்திய தோளினையுடைய வாள்வீரர்கள், ஆரவாரிக்கும் கழலினை உடையானைச் சூழ்ந்து, அவனுடன் கூத்தாடியது, ஒள்வாள் அமலை ஆகும்.*

**வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்**
**ஆளமர் வென்றி யடுகளத்துத் - தோள்பெயராக்**
**காய்ந்தடு துப்பிற் கழன்மறவர் ஆடினார்**
**வேந்தொடு வேள்வாள் விதிர்த்து.** 147

*வெகுண்டு கொல்லும் வலியினையுடைய, கழலணிந் தோரான தும்பை மறவர்கள், தம் அரசனைப் பணிந்து வந்து சேராதாரின் வீரர்கள் மேவும், வெற்றியிடையுடைய கொலைக் களத்தின்கண், அரசனுடனே விளர்த்த வாளினை அசைத்தவராக ஆடாநின்றனர்! அது, வாளை மீன் மிளிருகின்ற மடுவினை ஒப்பத் தோன்றியது!*

*வாளை விதிர்த்து ஆடுதல், வாளைமீன் கயத்திடத்தே பிறழ்தல் போலத் தோன்றிற்று என்க. 'அரசன்' என்றது தும்பை வேந்தனை. ஒள்வாள் உயர்த்து ஆடலின், ஒள்வாள் அமலை என்றனர்.*

## 21. தானை நிலை

*இருபடையும் மறம் பழிச்சப்*
*பொருகளத்துப் பொலிவெய்தின்று.*

*இரண்டு சாராரின் படையும் மறத்தினை ஏத்தப், பொருகளத்தே, தும்பை மறவன் ஒருவன் சிறப்படைந்தது, தானை நிலை ஆகும்.*

*தானை மறத்திற்கும் தானை நிலைக்கும் இடையிலுள்ள ஒழுக்க வேறுபாடுகளை அறிதல் வேண்டும்.*

**நேரார் படையின் நிலைமை நெடுந்தகை**
**ஓரான் உறைகழியான் ஒள்வாளும்-தேரார்க்கும்**
**வெம்பரிமா ஊர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்கும்**
**கம்பமா நின்றான் களத்து.** 148

*பெரிய மேம்பாட்டினை உடையவனான மறவன், பகைவரது தானையின் வலிமையது நிலையினையும் விசாரித்து அறிய மாட்டான். தன் ஒளிசிறந்த வாளினையும் உறையிடத்தினின்றும் வாங்கமாட்டான்; தேர் வீரர்க்கும், வெய்ய செலவினை யுடைய குதிரையைச் செலுத்தினார்க்கும், வெல்லும் களிற்றின் மேலார்க்கும், நிலைத்தூண் போலக் களத்திலே உரத்துடன் நின்றான்!*

*கம்பம்-நிலைத்தூண்; நடுக்கமும் ஆம். அப்போது பகைவரது நால்வகைப் படையினருக்கும் நடுக்கத்தை விளைவிப்பவனாக மறச்செயலாற்றி அவரைத் தடுத்து நின்றான் என்க.*

## 22. வெருவரு நிலை

*விலங்கமருள் வியலகலம்*
*வில்லுதைத்த கணைகிழிப்ப*
*நிலந்தீண்டா வகைப்பொலிந்த*
*நெடுந்தகை நிலையுரைத்தன்று.*

*பெரிய மேம்பாட்டினை உடைய மறவனது, பகையைத் தடுக்கும் போரிடத்தே, அகன்ற மார்பிடத்தைப் பகைவரது வில் உமிழ்ந்த அம்புகள் பிளப்ப, அவை, அவன் உடல் நிலத்தைத் தீண்டாதபடியாகத் தாங்கி நின்ற, அந்தச் சிறந்த நிலைமையைக் கண்டோர் கூறியது, வெருவரு நிலை ஆகும்.*

**வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப**
**எங்கும் மருமத் திடைக்குளிப்பச்-செங்கட்**
**புலவாள் நெடுந்தகை பூம்பொழில் ஆகம்**
**கலவாமற் காத்த கணை.** 149

*வெவ்விய கண்ணையுடைய போர்முரசம் ஆரவாரித் திருக்கின்ற வேற்போரினிடத்தே, பகைவரது வில் உமிழ்தலால் வந்த கணைகள் மார்பின் எவ்விடத்தும் பட்டு ஊடுருவின; சினத்தாற் சிவந்த கண்களையும் புலால் நாறும் வாளினையும் உடைய நெடுந்தகையான், நிலமடந்தையது மார்பினைத் தழுவாதபடியாக, அக் கணைகளே அவனுடலைத் தடுத்துத் தாங்கி நின்றன.*

*'நெடுந்தகை ஆகத்தைப் பூம்பொழில் ஆகம் கலவாமல் கணை காத்த என்க. 'மைந்து பொருளாகப் பொருதலினும் நின்ற யாக்கை சிறத்தலும் இருநிலந் தீண்டா யாக்கை அதனிற் சிறத்தலும் கூறினார்' என வரும் நச்சினார்க்கினியரது உரைக்கருத்தினையும் இங்கே கருதுக. (புறத். சூ. 16 உரை)*

## 23. சிருங்கார நிலை

*பகைபுகழக் கிடந்தானை*
*முகைமுறுவலார் முயக்கமர்ந்தன்று.*

*பகைவரும் புகழும்படியாகப் போர்க்களத்தே பட்டுக்கிடந்த மறவன் ஒருவனது உடலினை, முல்லை மொட்டுப் போன்ற பல்லினை உடையாரான மகளிர்கள் தழுவுதலைப் பொருந்தியது, சிருங்கார நிலை ஆகும்.*

**எங்கணவன் எங்கணவன் என்பார் இகல்வாடத்**
**தங்கணவன் தார்தம் முலைமுகப்ப-வெங்கணைசேர்**
**புண்ணுடை மார்பம் பொருகளத்துப் புல்லினார்**
**நுண்ணிடைப் பேரல்கு லார்.** 150

*நுண்ணிதான இடையையும் பெருத்த அல்குலினையும் உடையவரான குலமகளிர், 'எம் கணவன் இவன்; எம் கணவன் இவன்' என்று சொல்லும் தேவமகளிரது மாறுபாடு கெடத், தம் கணவனது வெவ்விய அம்புசேர்ந்த புண்ணையுடைய மார்பகத்தினை, அதன்கண் விளங்கும் மாலையினைத் தம் முலைகள் முகந்துகொள்ளுமாறு பொருகளத்திலே தழுவினார்!*

*தழுவலான அந்தச் சிருங்காரக் காட்சியைக் கண்டார் இரங்கியது இது. 'எங்கணவன் எங்கணவன்' என்பார் பரத்தையர் எனவும் கருதுவர். 'பேரல்குலார்' எனப் பன்மைப் பட உரைத்தது, அவன் பன்மனைவியரை மணந்திருந்தவன் என்பதனால் என்றும் கூறுவர்.*

## 24. உவகைக் கலுழ்ச்சி

**வாள்வாய்த்த வடுவாழ்யாக்கைக்**
**கேள்கண்டு கலுழ்ந்துவந்தன்று.**

*வாளாலே வாய்ப்புப் பெற்ற விழுப்புண் ஆழப் பதிந்துள்ள வீரனது உடலினை, அவனுடைய மனைவி கண்டதும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து மகிழ்வுற்றது, உவகைக் கலுழ்ச்சி ஆகும்.*

**வெந்தொழிற் கூற்றமும் நாணின்று வெங்களத்து**
**வந்த மறவர்கை வாள்துமிப்பப்-பைந்தொடி**
**ஆடரிமா வன்னான் கிடப்ப அகத்துவகை**
**ஓடரிக்கண் நீர்பா யுக.** 151

*வெவ்விய போர்க்களத்தே போரிடற்கு எதிர்ந்துவந்த மாற்றாரது கையிடத்து வாள் துணிசெய்ய, வெற்றியையுடைய, சிங்கத்தைப் போன்ற தன் கணவன் அதனால் விழுப்புண்பட்டுக் கிடத்தலைப், பசிய வளையினையுடைய அவன் மனைவியும் கண்டாள். அதனால் எழுந்த உள்ளத்து உவகையினாலே, செவ்வரி கருவரி பரந்த தன் கண்ணகமெல்லாம் நீர் பரந்து வீழவும் நின்றாள். அதனைக் கண்டு, வெய்ய தொழிலதான கூற்றமும் அன்று நாணமுற்றது!*

*கூற்றம் நாணியது, 'இத்தகைய வீரமறத்தியின் கணவனது உயிரைப் பறித்த தன் செயலினை நினைந்தும், அவனொடு தானும் உயிர்விடப்போகும் அவளது கற்புநிலையைக் கருதியும்' ஆகும்.*

## 25. தன்னை வேட்டல்-1

*தம்மிறைவன் விசும்படைந்தென*
*வெம்முரணான் உயிர்வேட்டன்று.*

*தம் இறைவன் போரிடத்தே வானகஞ் சேர்ந்தனன் எனக் கண்ட, வெவ்விய மாறுபாட்டை உடையானான தும்பை மறவன் ஒருவன், தன் உயிரையும் களத்திலே வேள்வி செய்தது, தன்னை வேட்டல் ஆகும்.*

*'செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ, ஒருவன் மண்டிய நல்லிசை நிலை' என்பதும் இது; (தொல். புறத். சூ. 17) இதனால், அவன் தலைமயங்கிப் பொருது உயிர்விட்டு நல்ல புகழைப் பெறுவான் என்பதும் அறிதல் வேண்டும். இதனைத் 'தன்னுறு தொழில்' என்பர் இளம்பூரணர் (புறத். சூ. 14)*

**வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா**
**மானமே நெய்யா மறம்விறகாத்-தேனிமிரும்**
**கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்**
**ஒள்ளழலுள் வேட்டான் உயிர். 152**

*தன் அரசன் விண்ணகத்தே சென்றானாக, வண்டுகள் ஆரவாரியா நின்ற தேன்துளிக்கும் மாலையினையும், வீரக் கழலினையும் உடையவனான வெவ்விய மறவன், வாட்போராகிய ஒள்ளிய நெருப்பினுள், தனது தறுகண்மையே விறகாகவும், தனது மானப்பண்பே நெய்யாகவும், தனது வாளே துடுப்பாகவும் கொண்டு, தன் உயிரை வேள்வி செய்தான்.*

*பாரதப் போர்க்களத்தே துரியோதனன் பட்டுவீழக் கண்ட அசுவத்தாமன், கொதித்தெழுந்து பலரையும் கொன்று குவித்த செயலைப் போல்வது இம் மறச்செயல் ஆகும்.*

## 26. தன்னை வேட்டல்-2

*காய்கதிர் நெடுவேற் கணவனைக் காணிய*
*ஆயிழை சேறலும் அத்துறை யாகும்.*

*பகைவரைச் சுடுகின்ற ஒள்ளிய நெடுவேலினை யுடைய தன் கணவனைக் காணும் பொருட்டாக, அழகிய அணிகலன்களை உடையாளான அவன் மனைவியானவள், களத்திடத்தே போயினதும், தன்னை வேட்டல் என்னும் அந்தத் துறையேயாகும்.*

**கற்பின் விழுமிய தில்லை கடையிறந்து**
**இற்பிறப்பும் நாணும் இடையொழிய-நற்போர்**
**அணங்கிய வெங்களத் தாருயிரைக் காண்பான்**
**வணங்கிடை தானே வரும்! 153**

மகளிருக்கக் கற்புடைமையினைக் காட்டினும் சிறந்த் தொன்று யாதுமில்லை. வாயிற் கடையினைக் கடந்து, குடிப்பிறப்பும் நாணமும் தன்னிடத்தைவிட்டு நீங்க, நல்ல போரினிடத்தே பட்ட மறவர்கள் கிடந்த கொடிதான களத்தினை விரும்பித், தன் ஆருயிரான கணவனைக் காணும் பொருட்டாக, நுடங்கும் இடையினை உடையாள், தமியளான வராநின்றனளே!

'ஆருயிரைக் காண்பான்' என்றது, தன் உயிரைக் கொண்டு அவனுயிரைத் தேடிக் காண்பாள் போல உயிர்விடற்கு முற்பட்டுத் துணிந்தாளாக என்பதாம். மறவர் உடலங்கள் கிடந்த களத்தின் கொடுமையினை, 'நற்போர் அணங்கிய வெங்களம்' எனக் குறித்தனர். குலமகளாகிய அவள் கொடிய போர்க்களத்தே சென்றது, தன் உயிரையும் கணவனது உயிரொடு விடுதல் பற்றி; ஆதலின் இது, தன்னை வேட்டல் ஆயிற்று.

## 27. தொகை நிலை

*அழிவின்று புகழ்நிறீஇ*
*ஒழிவின்று களத்தொழிந்தன்று.*

உலகிடத்தே என்றும் அழியாதபடி தம்முடைய புகழினை நிலைபெறுத்தியவராகப், போரிடத்தே எதிர்ந்த வேந்தர் இருவரும், தம்மில் ஒருவரும் ஒழியாமற்படிக்குக், களத்திலே பட்டு வீழ்தல், தொகை நிலை ஆகும்.

உழிஞைத் தொகைநிலைக்கும் இத் தும்பைத் தொகை நிலைக்கும் வேறுபாட்டைக் கருதி உணர்க. அது,'உழிஞையானின் வெற்றிகண்டு அஞ்சிய வேந்தர் பலரும் தொகையாக வந்து அவன் திருவடி சேர்தல்'; இது,'பொருதிய இருதிறத்து வேந்தரும் ஒருங்கே களத்திற் படல்'. இதனை 'வாள் வாய்த்து இருபெரு வேந்தர் தாமும், சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகை நிலை' என்பர் தொல்காப்பியர் (புறத். சூ. 17)

**மண்டமர்த் திண்தோள் மறங்கடைஇ மண்புலம்பக்**
**கண்டிரள்வேல் மன்னர் களம்பட்டார்-பெண்டிர்**
**கடிதெழு செந்தீக் கழுமினார் இன்னும்**
**கொடிதேகாண் ஆர்ந்தின்று கூற்று. 154**

செறிந்த போரினிடத்தே, திண்ணிய தோளாற்றலால் மாறுபாட்டைச் செலுத்தி, மண்ணகம் தனிமைப்பட்டுப் புலம்புமாறு, காம்பு கண்திரண்ட வேலினையுடைய இரு மன்னர்களும் களத்தே இறந்துபட்டனர். அவர் பெண்டிரும் விரைந்தெழுகின்ற சிவந்த தீயிடத்தே புகுந்து நிறைந்தனர்; இன்னும் வயிறு நிரம்பியதன்று ஆகலான், கூற்றமும் மிகக் கொடியதே காண்!

அனைவரது அழிவையும் கண்டோர் இரங்கிக் கூறுவது இது. பெண்டிர்-தேவியர். இருதிறப் படைஞரும் முற்றவும் அழிபாடுற்றதும் இதனால் விளங்கும்.

## தொகுத்து உரைத்தல்

மறத்தொழில் ஒன்றே கருதி, இருபெரு வேந்தர்கள் தம் தானையுடன் போரினை மேற்கொள்ளலாகிய தும்பைத் திணை என்னும் ஒழுக்கமானது, இருபத்து நான்கு துறைகளாக நிகழ்வதாம். அவை-

அரசன் தன் படைமறவரைத் தலையளிசெய்து போற்றுத லாகிய தும்பையரவமும்; போர் செய்து இருபடையும் மடிந்து போகாமற்படிக்கு விலக்கிய உயர்பும், காலந்தாழ்க்கையைக் கூடாதென அமைச்சர் உறுதிப்பொருள் உரைத்தலும், தன் படைமேம்பாட்டைக் கூறி மாற்றார் படையினது அழிவிற்கு இரங்கலும் ஆகிய தானை மறமும்;

தும்பையானின் இளங்களிற்றது மறமாண்பு கூறுதலாகிய யானை மறமும்; அவனது குதிரையது திறத்தைக் கூறுதலாகிய குதிரை மறமும்; தூசிப்படையைத் தானே தடுப்பதாக முன்வரும் வீரரது மறமும், பகைமன்னர் பலரும் கூடித் தன் மன்னனை வளைத்தபோது தான் ஒருவனாகவே அவரைத் தடுத்தபடி நிற்கும் வீரனது மறமும் கூறலாகிய தார் நிலையும்; வேந்தனது தேரினது நன்மையைச் சொல்லுதலாகிய தேர்மறமு'ம்;

பகைவரது களிற்றைக் கொன்று பட்டு வீழ்ந்தார்க்குப் பாணர் இறுதிக் கடன் செய்தலாகிய பாண்பாட்டும்; பொருதிய இருதிறப் படைகளும் அழிய, அவ் வேந்தர் இருவரும் தாமும் போரிட்டு மடிதலாகிய இருவரும் தபுநிலையும்; புறமுதுகிடும் தன் படைக்குப் பின்னணியிலே சினத்தோடு ஒரு வீரன் நிற்றலாகிய எருமை மறமும்; தன் வேலினை மாற்றாரது களிற்றின்மேல் எறிந்துவிட்டுத் தோள்வலியாற் போரிடும் ஒருவனின் ஏம எருமையும்;

பகைவரது படைமறவரைக் கொன்று, வேல் திரித்து மறவன் ஒருவன் ஆடுதலாகிய நூழிலும்; தன் உள்ளத்தே கிழிந்த வேலைப் பறித்துப் பகைப்படை கெட்டோட எறிந்த வீரனின் செயலாகிய நூழிலாட்டும்;

படைஞர் வேந்தனின் தேர்க்கு முன்னாக ஆடும் முன்தேர்க்குரவையும்; வீரரும் விறலியரும் தேர்க்குப் பின்னாக ஆடும் பின்தேர்க்குரவையும்; தேர்க்கு முன்னும் பின்னும் பேய்கள் கூத்தாடலாகிய பேய்க்குரவையும்; களிற்றை வேலால் எறிந்து அது பட்டுவீழ அதனடியில் அகப்பட்டு உயிர்துறந்த வீரனின் செயலான களிற்றுடனிலையும்;

வாளேந்திய மறவர் வேந்தனொடும் கூடி ஆடுதலாகிய ஒள்வாள் அமலையும்; இருபடையும் தன் வீரத்தைப் பாராட்ட ஒரு வீரன் களத்தே சிறத்தலாகிய தானை நிலையும்;

அம்புகள் ஊடறுத்த உடலினனான வீரனின் உடலைத் தரைமகள் தழுவாதபடி அந்த அம்பு முனைகளைத் தாங்கி நின்றதான வெருவரு நிலையும்; பட்டுப் பகைபுகழக் கிடந்த வீரனை, அவன் மனைவி நெஞ்சிறுகத் தழுவுதலாகிய சிருங்கார நிலையும்; வாளால் புண்பட்ட வடுவானது ஆழ்ந்திருந்த மார்பகத்தையுடைய தன் கணவனைக் கண்ட மனைவி, உவகை மீதூரக் கண்ணீர் சொரிதலாகிய உவகைக் கலுழ்ச்சியும்;

தன் மன்னன் இறந்தானாக, வீரமறவன் அது பொறுக்காது, தன் உயிரையும் போக்குதலாகிய தன்னை வேட்டலும்; தன் கணவன் உடலைத் தேடியவளாக மறத்தி களம் சேறலாகிய தன்னை வேட்டலும்; இரு பெரு வேந்தரும் பிறரும் முற்றவும் அழிந்துபடுதலாகிய தொகை நிலையும் ஆம்.

✡✡✡

# 8. வாகைப் படலம்

*(வாகைப் படலம், போரின்கண் பகைவேந்தனையும் அவன் படைகளையும் அழித்து, மறவர்களும் அரசனும் வாகைப்பூச் சூடியவராக ஆரவாரித்துக் களிப்பதனைக் கூறுவதாகும்.)*

*இது பாலையாகிய அகத்திணைக்குப் புறனாகக் கொள்ளப் படுவது, பாலைக்குப் 'புணர்ச்சியின் நீங்கி இல்லறம் நிகழ்த்திப் புகழ் எய்துதற்குப் பிரிதல்' ஒழுக்கமாம். அதுபோலச் சுற்றத் தொடர்ச்சியினின்றும் நீங்கி, அறப்போர் செய்து துறக்கம் பெறுங் கருத்தினாற் செல்வதனாலும், வாளினும் தாளினும் நிறையினும் பொறையினும் வென்றியெய்துவோரும் மனையோரை நீங்கிச் செல்வதனாலும், பிரிவு இதற்கும் உளதாயிற்று.*

*பாலை தனக்கென ஒரு நிலமின்றி, நால்வகை நிலத்தும் நிகழும். அதுபோல, முற்கூறிய புறத்திணைகள் அனைத்தும் இடமாக இவ்வாகைத் திணையும் நிகழும்.*

*இதனை அரசர்க்கு உரியதாகக் கூறினர் இந்நூலாசிரியர். எனினும், துறைப் பகுப்புள் ஏனையோர்க்கும் உரியதாகக் காட்டுதலையும் நாம் காணலாம். இதனால்,*

*'தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்*
*பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப' (புறத். சூ. 19)*

*என்ற தொல்காப்பிய விதிப்படியே இதனைக் கொள்ளல் பொருந்துவதாகும். இதன்கண் கூறும் பாகுபட மிகுதிப்படுத்தல் என்பது, தன்னைத்தானே மிகுதிப்படுத்தலும், பிறர் மீக்கூறு படுத்தலுமாம். இவற்றுள் உறழ்ச்சியாற் பெற்ற வென்றியை வாகை யெனவும், இயல்பாகப் பெற்ற வென்றியை முல்லை எனவும் கூறுவார்கள். இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டே இப் பகுதியினைக் கற்றல் வேண்டும்.)*

**சீர்சால் வாகை வாகை யரவம்**
**அரச வாகை முரச வாகை**
**மறக்கள வழியொடு களவேள் வியே**
**முன்தேர்க் குரவை பின்தேர்க் குரவை**
**பார்ப்பன வாகை வாணிக வாகை**
**வேளாண் வாகை பொருந வாகை**
**அறிவன் வாகை தாபத வாகை**

**கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை**
**அரச முல் லை பார்ப்பன முல்லை**
**அவைய முல்லை கணிவன் முல்லை**
**மூதின் முல்லை ஏறாண் முல்லை**
**வல்லாண் முல்லை காவன் முல்லை**
**பேராண் முல்லை மறமுல் லையே**
**குடைமுல் லையொடு கண்படை நிலையே**
**அவிப்பலி யென்றா சால்பு முல்லை**
**கிணைநிலை யேனைப் பொருளொடு புகறல்**
**அருளொடு நீங்கல் உளப்படத் தொகைஇ**
**மூன்று தலையிட்ட மூவீ ரைந்தும்**
**வான்தோய் வாகைத் திணையது வகையே.** (8)

*சீர்மையாற் சிறந்தது வாகைத் திணை. இது முப்பத்திரண்டு துறைகளைக் கொண்டு நிகழும். அவை.*

*வாகையரவம், அரச வாகை, முரச வாகை, மறக்கள வழி, களவேள்வி, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, பார்ப்பன வாகை, வாணிக வாகை, வேளாண் வாகை, பொருந வாகை, அறிவன் வாகை, தாபத வாகை, கூதிர்ப் பாசறை, வாடைப் பாசறை என்பனவும்-*

*அரசமுல்லை, பார்ப்பன முல்லை, அவையமுல்லை, கணிவன் முல்லை, மூதின் முல்லை, ஏறாண்முல்லை, வல்லாண் முல்லை, காவன் முல்லை, பேராண்முல்லை, மறமுல்லை, குடை முல்லை, கண்படைநிலை, அவிப்பலி, சால்புமுல்லை என்பனவும்-*

*கிணைநிலை, பொருளொடு புகறல், அருளொடு நீங்கல் என்பனவும் ஆம்.*

## வாகைத் திணையின் விளக்கம்

***இலைபுனை வாகை சூடி இகன்மலைந்து***
***அலைகடல் தானை அரசட் டார்த்தன்று.***

*தளிரானே விரவித்தொடுத்த வாகை மாலையைச் சூடி, மாறுபாட்டை மேற்கொண்டு, அலையும் கடல்போன்ற சேனையினையுடைய பகைவேந்தனைக் கொன்று ஆரவாரிப்பது, வாகைத்திணை ஆகும்.*

*'வாகை' என்பது பாலைக்குரிய ஒரு மரம். போரிற் பகைவரை வென்றார், இதன் மலரைச் சூடி ஆரவாரிப்பர். அதனால், இது வாகைத்திணை ஆயிற்று.*

**சூடினான் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்**
**பாடினார் வெல்புகழைப் பல்புலவர்-கூடார்**
**உடல்வேல் அழுவத் தொளிதிகழும் பைம்பூண்**
**அடல்வேந்தன் அட்டார்த் தரசு.** 155

ஒளிதிகழும் பசும்பொன்னாற் செய்த ஆபரணங்களையும், மாறுபாட்டினையும் கொண்ட வேந்தன், பகைவரது மாறுபாட்டினையுடைய வேற்படையின் நடுவிலே, தன் பகைவனான அரசனைக் கொன்று ஆரவாரித்தானாக, வாகையது ஒளியுடைய மாலையினைப் புனைந்தான். அங்ஙனம் அவன் புனைதலும், அவனுடைய பகைவெல்லும் புகழ்ச் செயலைப் புலவர்கள் பலரும் போற்றிப் பாடினார்கள்.

## வாகைத் திணையின் துறைகள்

### 1. வாகை அரவம்

***வெண்கண்ணியும் கருங்கழலும்***
***செங்கச்சும் தகைபுனைந்தன்று.***

வெள்ளை மாலையினையும், வலிய வீரக்கழலையும், சிவந்த அரைக்கச்சினையும், அழகிதாக மறவர் சூடிக்கொண்டது, வாகை அரவம் ஆகும்.

அங்ஙனம் சூடுங்காலத்தே அரவம் எழுதல் இயல்பாதலின், வாகை அரவம் என்றனர்.

**அனைய அமருள் அயில்போழ் விழுப்புண்**
**இனைய இனிக்கவலை இல்லை-புனைக**
**அழலோ டிமைக்கும் அணங்குடைவாள் மைந்தர்**
**கழலொடு பூங்கண்ணி கச்சு.** 156

அத் தன்மையவாகிய போரினிடத்தே நம் மறவர்கள் பெற்ற வேல்பிளந்த விழுப்புண்கள் இத்தகைய ஆயின; இனிமேல் நமக்கொரு கவலையும் இல்லை; அதனால், நெருப்போடு இமைக்கும், பகைவர்க்கு வருத்தஞ் செய்தலையுடைய வாளாற் சிறந்த மறவர்கள் எல்லாரும், வீரக்கழலோடே பொலிந்த வாகை மாலையினையும் கச்சினையும் இனிப் புனைவாராக!

இது, அரசன் தன் படைமறவர்க்குக் கூறியதாம். கண்ணி, கழல், கச்சு இவை மூன்றும் பூணலாகிய மரபினை நோக்குக. 'அழலோடு இமைக்கும்' என்றது, பகைவரது குருதிக்கறை படிந்த செந்நிறத்தை வாள்கள் பெற்றிருந்தமையால்.

### 2. அரச வாகை

***பகல் அன்ன வாய் மொழி***
***இகல் வேந்தன் இயல்புரைத் தன்று.***

நுகத்தின்கட் பகலாணியைப் போன்று நடுவுநிலையொடு விளங்கும் சொல்லினையுடைய, மாறுபாட்டாற் சிறந்த தம்வேந்தனது இயல்பினைக் கூறுவது, அரச வாகை ஆகும்.

'ஐவகை மரபின் அரசர் பக்கம்' என்பது தொல்காப்பியம் (புறத். சூ. 20). அதாவது, ஓதல், வேட்டல் ஈதல், காத்தல், தண்டஞ் செய்தல் என்னும் ஐவகை இலக்கணத்தையுடைய அரசன்கூறும் என்பது அதன் பொருள்.

**காவல் அமைந்தான் கடலுலகம் காவலால்**
**ஓவல் அறியா துயிர்க்குவகை-மேவருஞ்சீர்**
**ஐந்தொழில் நான்மறை முத்தீ இருபிறப்பு**
**வெந்திறல் தண்ணளியெம் வேந்து.** 157

பொருந்துதல் வரும் நன்மையினையுடைய ஐந்து தொழிலினையும், நான்கு மறைகளையும், மூன்று தீயினையும், இரு பிளப்பினையும், பகையிடத்து வெவ்விய ஆற்றலினையும், பிறரிடத்து தண்ணிய அருளினையும் உடையவன் எம் மன்னன்; அவன், கடல்சூழ்ந்த பூமியினைக் காவல் செய்தலாகிய தொழிற்கண்ணே அமைந்தனன்; இவன் காவலினாலே பல்லுயிருக்கும் மகிழ்ச்சி ஒழிதல் அறியாது!

ஐந்துதொழில்-ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிலுதல், பல்லுயிர் ஓம்புதல்' என்பதாம். தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர், இவற்றை 'ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய்தல் என்பர். (புறத். சூ. 20 உரை.)

இருபிறப்பு, பூணூல் அணிதற்கு முன்னும் பின்னுமாகிய பிறப்புகளைக் குறித்தது. இதனால், மன்னர் பூணூல் அணிவதென்பதும் இந்நூலாசிரியர் காலத்து வழக்காதலை அறிக.

## 3. முரச வாகை

*ஒலிகழலான் அகனகருட்*
*பலிபெறுமுரசின் பண்புரைத்தன்று.*

ஒலிக்கின்ற வீரக்கழலினை உடைய மன்னனது அகற்சியமைந்த மாளிகையிடத்துப், பலியைப் பெறும் வெற்றி முரசினது தன்மையைச் சொல்லியது, முரசவாகை ஆகும்.

இதுவும் முரசினை உடையானது வெற்றி மேம்பாட்டைக் கூறுவதே ஆகும். உடையானது வெற்றி உடைமையின் மேலாகக் கொண்டு கூறப்பெற்றது.

**மதியேர் நெடுங்குடை மன்னர் பணிந்து**
**புதிய புகழ்மாலை வேய-நிதியம்**
**வழங்கும் தடக்கையான் வான்தோய் நகருள்**
**முழங்கும் அதிரும் முரசு.** 158

*பகையுள்ள காலத்தே அதிருகின்ற இயல்பினதாயிருந்த முரசமானது, திங்களையொத்த உயர்ந்த கொற்றக் குடையினை உடையவரான அரசர்கள் பலரும் பணிந்து புதிதான புகழ்மாலையினைச் சூட்ட, செல்வத்தை இரவலர்க்கு வழங்கும் பெரிய கையினையுடைய நம் அரசனது, விண்ணைத் தொடுமளவு உயரத்தைக் கொண்டதான மாளிகையிடத்தே, இப்பொழுது வெற்றிமுழக்கத்தை எழுப்பியதாயிருக்கின்றது!*

*வெற்றி முரசினை முழக்கும் ஒலிவகை, பகையுள்ளபோது இடிக்குங் குரலாகவும், வெற்றியுள்ளபோது முழக்குங் குரலாகவும் அமைவதனை அறிக. வெற்றிச் செய்தியை முழக்கும் முரசது சிறப்புக் கூறுதலான், முரச வாகை ஆயிற்று.*

## 4. மறக்கள வழி

***முழவுறழ் திணிதோளானை***
***உழவனாக உரைமலிந்தன்று.***

*முழவினைப் போலத் திரண்ட திண்ணிய தோளினை உடையானான மன்னனை, உழுதொழிலையுடைய வேளாளனாக மிகுத்துச் சொல்லியது, மறக்களவழி ஆகும்.*

*'ஏரோர் களவழியன்றிக் களவழித் தேரோர் தோன்றிய வென்றியும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரப் பகுதியையும் (புறத். சூ. 21.) இதனோடு ஒப்பிட்டுக் காண்க. 'உழவர் செயலொடு மன்னரின் போர்க்களத்துப் புகழ்விளைக்குஞ் செயலை ஒப்பிட்டுக் கூறுவது இதுவாகும்.*

**அஞ்சுவரு தானை அமரென்னும் நீள்வயலுள்**
**வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும்-செஞ்சுடர்வேற்**
**பைங்கட் பணைத்தாட் பகட்டுழவன் நல்கலான்**
**எங்கட் கடையா இடர்.** 159

*கண்டார்க்கு அச்சம் வரச்செய்தற்குக் காரணமாகும், தானையாகிய வரம்பினையுடைய போர்க்களம் என்னும் நெடிய வயலினுள்ளே, வெவ்விய சினம் என்னும் வித்தினை விதைத்துப் புகழாகிய பயனை விளைக்கின்ற, செம்மை சுடரும் வேலினைக் கோலாகக் கொண்டு, பச்சென்ற கண்ணினாலும் பணைத்த தாளினாலும் சிறந்த களிறாகிய ஏரினை நடத்தி, உழவினைச் செய்பவன் எம் மன்னன்; அவன் அளித்தலால், எங்கட்குத் துன்பங்கள் ஏதும் வந்து இனி அடையா!*

*'நல்கல்,' வெற்றியை என்க. 'பொருள்' எனக் கொண்டால், இரவலர்க்கு வழங்குதலான் அவர்க்கு வறுமை வந்தடைய எனக் கொள்க.*

## 5. களவேள்வி

*அடுதிறல் அணங்கார*
*விடுதிறலான் களம்வேட்டன்று.*

*கொல்லும் வலியினையுடைய பேய் வயிறார உண்ணுமாறு, பரந்த வலியினையுடைய மன்னன், களவேள்வி வேட்டது, களவேள்வி ஆகும்.*

*நிணக்கூழ் அட்டுக் காளிக்குப் படைத்துப் பேய்கட்கு உண்ணத் தருவது இது.*

**பிடித்தாடி யன்ன பிறழ்பற்பேய் ஆரக்**
**கொடித்தானை மன்னன் கொடுத்தான்-முடித்தலைத்**
**தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக**
**மூளையஞ் சோற்றை முகந்து** 160

*வெற்றிக் கொடியினை உயர்த்த தானையினையுடைய மன்னவன், பலுவையொத்த பிறழ்ந்த எயிற்றினையுடைய பேய்கள் உண்ணுமாறு, மகுடத்தலையாகிய மிடாவிலே, தோளுடன் வெட்டுண்டு வீழ்ந்த தோள்வளையாற் சிறந்த கையே துடுப்பாகக் கொண்டு, மூளையாகிய அழகிய சோற்றை முகந்து வழங்கினான்.*

*பலு-பிடித்தாடி என்னும் ஒருவகைக் கருவி; கை நழுவாதபடிக்குப் பிடிப்பு வலுப்பெறுவதற்கு, அதன் கண் தெற்றியபடி அமைந்திருக்கும் அமைதியுடன் கூடியது இது; பலகறை எனவும் இதனைக் கூறுவர்.*

## 6. முன்தேர்க் குரவை

*வென்றேந்திய விறற்படையோன்*
*முன்றேர்க்கண் அணங்காடின்று.*

*தன் பகையினை வென்று எடுத்த, வெற்றியான் மிக்க படைக்கலங்களை உடைய மன்னனது தேரின் முன்னிடத்தே பேய்கள் கூத்தாடியது, முன்தேர்க் குரவை ஆகும்.*

*தும்பைக்கண் வரும் முன்தேர்க் குரவை (143)யுடன் ஒப்பிட்டு வேறுபாட்டினை அறிக. வாகைத் திணைக்கண்ணும் அணங்காடியது என்பது இது; தொல்காப்பிய உரைக்கண் (புறத். சூ. 21) நச்சினார்க்கியர், 'தேரின்கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப்பாலே தேர்த் தட்டில் நின்று, போர்த் தலைவரொடு கைபிணைந்தாடும் குரவை' இதுவென்பர்.*

**உலவா வளஞ்செய்தான் ஊழிவாழ் கென்று**
**புலவாய புன்தலைப்பே யாடும்-கலவா**

**அரசதிர நூறி அடுகளம் வேட்டான்**
**முரசதிர வென்றதேர் முன்.** 161

*தன்னொடும் பொருந்தாத அரசர்கள் நடுங்கும்படியாக, வெட்டிக் களவேள்வியைச் செய்து வாகை சூடினான், நம் மன்னன்! வெற்றி முரசம் முழங்க அங்ஙனம் போரினை வென்ற தேரின் முன்பாகக், 'கெடாத நன்மையினைச் செய்தானாகிய இவன் நெடுங்காலம் வாழ்வானாக' என்று சொல்லிப், புலால் நாறும் வாயினையும் புற்கென்ற தலையினையும் உடையவான பேய்கள் நின்று கூத்தாடும்!*

*'உலவா வளஞ்செய்தான்' எனப் பேய்கள் போற்றுவது, அவை உண்டுகளிக்கப் பகைவரைக் கொன்று குவித்த வெற்றிச் செயலினைக் குறித்தாம். உலவா-கெடாத.*

## 7. பின்தேர்க் குரவை

***பெய்கழலான் தேரின்பின்***
***மொய்வளை விறலியர் வயவரோ டாடின்று.***

*இட்ட வீரக்கழலினை உடையானது தேரின் பின்னாகச், செறிந்த தொடியினையுடைய பாணிச்சியர் வீரரொடும் சேர்ந்து கூத்தாடியது, பின்தேர்க் குரவை ஆகும்.*

*இதனையும், தும்பைக்கண் வரும் பின்தேர்க் குரவையோடு ஒப்பிட்டு வேறுபாடு அறிக. 'தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச்சுற்றும் ஆடுங் குரவை' இது வென்பர் நச்சினார்க்கினியர் (புறத். சூ. 21).*

**வஞ்சமிலாக் கோலானை வாழ்த்தி வயவரும்**
**அஞ்சொல் விறலியரும் ஆடுபவே-வெஞ்சமரில்**
**குன்றேர் மழகளிறும் கூந்தற் பிடியும்போல்**
**பின்றேர்க் குரவை பிணைந்து.** 162

*வெற்றியினையுடைய வீரரும், அழகிய மொழியினை உடையாரான பாணிச்சியரும், வெவ்விய போரினிடத்தே, குன்றினை நிகர்த்த இளங்களிறும் கூந்தலையுடைய இளம் பிடியினையும் போல, பொய்யாத செங்கோலை உடையவனான தம் அரசனை வாழ்த்தி, அவனது தேரின்பின்னர்க் குரவைக் கூத்தினைக் கைகோத்து ஆடும் கோப்பைக் கொண்டு, கூத்தாடா நின்றனர்!*

*தும்பையின் முன்தேர்க் குரவையும் பின்தேர்க் குரவையும் போர்க்குச் செல்லுகின்ற தேரின்மேல்; இவை வென்று நின்ற தேரின்மேல். இதைக் கவனிக்க. மழ-இளமை. கூந்தல்-பிடியானையது கழுத்தடி மயிர்.*

## 8. பார்ப்பன வாகை

*கேள்வியாற் சிறப்பெய்தியானை*
*வேள்வியான் விறல்மிகுத்தன்று.*

கேட்கக் கடவன கேட்டுத் தலைமை பெற்றவனை, வேள்வியான் வெற்றியைப் பெருக்கியது; பார்ப்பன வாகை ஆகும்.

**ஓதங் கரைதவழ்நீர் வேலி உலகினுள்**
**வேதங் கரைகண்டான் வீற்றிருக்கும்-ஏதம்**
**சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த**
**விடுசுடர் வேள்வி யகத்து.** 163

விரும்பின பரந்த அனலையுடைய யாகத்திடத்தே, திரை கரை மீதிலே தத்தும் கடலே வேலியாகவுடைய நிலவுலகினுள்ளே நான்கு வேதங்களையும் கரைகண்டானான இவன், குற்றத்தைச் சுடும் நெருப்புத் தானேயாகி, எல்லாரும் புகழ்ந்து போற்றத், தாபதர்க் கரசாய்ச் செம்மாந்து வீற்றிரா நின்றான்!

உலகினுள் வேதங் கரைகண்டான், வேள்வியகத்து, ஏதம் சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீற்றிருக்கும் என்க.

*'ஒன்று புரி கொள்கை இருபிறப் பாளர்*
*முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி*
*ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்*
*அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுக்க*
*நாவலம் கொண்டு நண்ணார் ஓட்டிப்*
*பார்ப்பன வாகை சூடி, ஏற்புற*
*நன்கலங் கொண்டு தன்பதிப் பெயர்வோன்.'*

எனவரும் சிலப்பதிகாரப் பராசரன் கதைப்பகுதியும், இதனை விளக்கும். (சிலம்பு: 23; 67-73.)

## 9. வாணிக வாகை

*செறுதொழிலிற் சேணீங்கியான்*
*அறுதொழிலும் எடுத்துரைத்தன்று.*

பொல்லாத வினையினின்றும் விலகித் தொலைவின்கண் சென்ற வணிகனுடைய, ஆறு தொழில்நலத்தையும் உயர்த்துச் சொல்லியது, வாணிக வாகை ஆகும்.

**உழுது பயன்கொண் டொலிநிரை ஓம்பிப்**
**பழுதிலாப் பண்டம் பகர்ந்து-முழுதுணர**
**ஓதி அழல்வழிபட் டோம்பாத ஈகையான்**
**ஆதி வணிகர்க் கரசு.** 164

நிலத்தை உழுது அதன் பயனாகிய விளைபொருளைக் கைக் கொண்டும், ஆரவாரிக்கும் ஆனிரையைப் பாதுகாத்தும், குற்றமில்லாத பண்டங்களை விற்றும், கற்றற்குரியன முற்றவும் உணரக் கற்றும், முத்தீயினை வழிபட்டும்; தன் பொருளைச் சீர்தூக்காது வழங்கும் வண்மையினை உடையான், முதன்மை வணிகர்க்கெல்லாம் அரசன் ஆவான்.

'பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த, ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்; வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்துவான் என்பான்' என வரும் சிலம்பின் தொடர்களையும் இங்கே கருதுக- (1:31.33).

## 10. வேளாண் வாகை

*மேல்மூவரும் மனம்புகல*
*வாய்மையான் வழியொழுகின்று.*

மேற் சொல்லிய அரசரும் பார்ப்பனரும் வணிகரும் ஆகிய மூன்று சாராரும் நெஞ்சத்தால் விரும்பும்படியாக, வாய்மையிலே வழிபட்டு நடந்துவருவது, வேளாண்வாகை ஆகும்.

'இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்' என்ற சூத்திரப் பகுதியில் (புறத்: 20) 'வேதம் ஒழிந்தன ஓதலும், ஈதலும், உழவும், நிரையோம்பலும், வாணிகமும், வழிபாடுமாகிய ஆறு பகுதிகளையும் உடைய தொழிலினர் வேளாளர்' என நச்சினார்க்கினியர் கூறுவர். இந் நூலாசிரியரோ வழிபாடு மட்டுமே இவர்க்குக் கூறுகின்றனர். இது சமூகத்து அன்றைய நிலையினைக் காட்டுவதாம்.

**மூவரும் நெஞ்சமர முற்றி அவரவர்**
**ஏவல் எதிர்கொண்டு மீண்டுரையான்-ஏவல்**
**வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்**
**உழுவான் உலகுக்கு உயிர்.** 165

அந்தணர் அரசர் வணிகர் எனச் சொல்லப்பட்ட மூவரும் மனம் விரும்புமாறு ஒழுக்கத்தால் முதிர்ந்து, அவரவர் ஏவின செயலை ஏற்றுக் கொண்டு மீண்டும் மறுத்துச் சொல்லாதவனாய், நீதி நூல் ஏவிய வழியே வழுவாதவனாய், முறையே நிலைபெற்று, வண்டினம் நிறையும் கழனியுள் உழுதலைச் செய்யும் அவனே, உலகுக்கு உயிர் அனையான் ஆவான்.

வேளாளரைப் பற்றிய, மூவர் ஏவல் கொள்ளலாகிய கருத்து ஏற்புடையது ஆகாமை தெளிவாம். எனினும், அக்காலத்தய சமூக நியதி இங்ஙனம் இருந்ததென்று கொள்க.

## 11. பொருந வாகை

*புகழொடு பெருமை நோக்கி யாரையும்*
*இகழ்தல் ஓம்பென எடுத்துரைத் தன்று.*

*'நினது புகழொடு நின் பெருநிலையினையும் நோக்கி, யாரையும் இகழ்தலைக் கைவிடுக' என எடுத்துக் கூறுவது பொருந வாகை ஆகும்.*

*பொருந-ஒப்பு நோக்கிய. இதனால் அவன் பிறரினும் வென்றியமைந்த சிறப்பினனாதலும் காண்க.*

**வெள்ளம்போல் தானை வியந்து விரவாரை**
**எள்ளி உணர்தல் இயல்பன்று-தெள்ளியார்**
**ஆறுமேல் ஆறியபின் அன்றித்தம் கைக்கொள்ளார்**
**நீறுமேற் பூத்த நெருப்பு.** 166

*'கடல்போன்ற தானைப் பெருக்கினை உடையோம் யாம்' என்று வியந்து, பகைவரை இகழ்ந்து அறியுமது சிறந்த இயல்பன்று; தெளிந்த அறிவாளர், பொடிமேலே மூடிய தழலினை, அஃது ஆறுவதாயின் முற்றமும் ஆறியபின், அல்லாது, தங்கள் கையின்கண் ஏந்தமாட்டார்.*

*'விரவாரை எள்ளி உணர்தல் இயல்பன்று' என உரைத்தமை, அங்ஙனம் உணர்தற்குரிய வெற்றிச் செவ்வியன் அவன் என்றதனால். அவன் செருக்குற்றுச் செயன் மறவாத வகையமைச்சர் கூறினது இதுவாதலையும் அறிக. 'அறிமரபின் பொருநர்கட் பாலும்' (புறத். சூ. 20) என உரைப்பதனையும் இதனுடன் ஒப்பிட்டுக் காண்க.*

## 12. அறிவன் வாகை

*புகழ்நுவல முக்காலமும்*
*நிகழ்பறிபவன் இயல்புரைத்தன்று.*

*தன் புகழினை உலகோர் சொல்லுமாறு, முக்காலமும் நிகழ்பவற்றை அறிபவனின் தன்மையைச் சொல்லியது, அறிவன் வாகை ஆகும்.*

*'மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்' என உரைப்பதும் இது-(தொல். புறத். சூ. 20.). அறிவர் என்பார், குறுமுனி போன்றவர்.*

**இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்**
**அம்மூன்றும் முற்ற அறிதலால்-தம்மின்**
**உறழா மயங்கி உறழினும் என்றும்**
**பிறழா பெரியோர்வாய்ச் சொல்.** 167

'மேல் கீழ் நடு' வென்று சொல்லப்படுகின்ற இந்த மூன்று உலகிடத்தும், நிறைந்த இருளினைப் போக்கும் அழகிய கதிரவனைப் போல, இறப்பு நிகழ்வு எதிர்வென்னும் மூன்று காலத்தையும் முற்றவும் அறிதலால், தம்மின் தாம் மாறுபடாதன கலங்கி மாறுபடுதல் உளவாயினும், பெரியோரின் வாய் மொழியாகப் பிறந்த சொற்கள், எக்காலத்தினும் தப்பாவாம்.

பெரியோர் என்றது, அறிவரை. 'வினையின் நீங்கி விளங்கிய அறிவன்' என்பதும் இத் தகையாரையே.

## 13. தாபத வாகை

*தாபத முனிவன் தவத்தொடு முயங்கி*
*ஓவுதல் அறியா ஒழுக்குரைத் தன்று.*

தவஞ்செய்யும் முனிவர்கள், தாம் மேற்கொண்ட தவநெறியொடு பொருந்த ஒழுகி, அந்த ஒழுக்கத்தினின்றும் ஒழிதலை அறியாதாராக விளங்கும் ஒழுக்கச் சிறப்பினை உரைப்பது, தாபத வாகை ஆகும்.

'நாலிரு வழக்கின் தாபதப் பக்கம்' என்பதும் இது-(தொல். புறத். சூ. 20).

**நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடீஇச்**
**சோர்சடை தாழச் சுடரோம்பி-ஊரடையார்**
**கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்**
**வானகத் துய்க்கும் வழி.** 168

பலகாலும் நீரிடத்தே மூழ்கியும், வெறுநிலத்துப் படுத்தும், மான் தோலை உடுத்தும், நெகிழ்ந்த சடை வீழ்ந்து தூங்கத் தீயைப் பாதுகாத்து, மக்கள் வாழும் ஊரிடத்தே உணவு வேட்டுச் சென்று சேராதாராய், கானகத்துக் கிடைப்பவான காய்கனி கிழங்கு இலை முதலாயவற்றை உட்கொண்டவராய், அவற்றாலே கடவுளையும் விருந்தினரையும் பேணியவராய் ஒழுகுதல், ஒருவரை வானகத்தே கொண்டு செலுத்தும் தவநெறி யாகும்.

'ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய் வாளாமை' என்னும் எட்டும் தவஞ்செய்வார்க்கு இருக்க வேண்டிய ஒழுக்கங்கள் என்பர் நச்சினார்க்கினியர். யோகியர்க்கு இயமம், நியமம், ஆசனம், வளி நிலை, தொகைநிலை, பொறை நிலை, நினைதல், சமாதி என்னும் எட்டும் உரியனவாம் என்பர்-(புறத். சூ. 21 உரை).

## 14. கூதிர்ப் பாசறை

*கூற்றனையான் வியன்கட்டூர்க்*
*கூதிர்வான் துளிவழங்க*
*ஆற்றாமை நனிபெருகவும்*
*அயில்வேலோன் அளிதுறந்தன்று.*

பகைவர்க்குக் கூற்றத்தினை நிகர்த்தவனது அகன்ற பாசறையிடத்துக், கூதிர்க்காலத்து மேகமானது துளிகளை வழங்கவும், அதனாற் பிரிவாற்றாமையானது மேன்மேற் பெருகவும், கூரிய எஃகினை உடையான் கருணையைத் துறந்தது, கூதிர்ப் பாசறை ஆகும்.

'கூதிர்' என்பது, ஐப்பசி கார்த்திகையாகிய மாதங்களைக் கொண்ட பெரும் பொழுது. இக்காலத்துப் பிரிதல் வன்மையின் இது வென்றி யாயிற்று.

**கவலை மறுகிற் கடுங்கண் மறவர்**
**உவலைசெய் கூரை யொடுங்கத்-துவலைசெய்**
**கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்**
**மூதின் மடவாள் முயக்கு.** 169

கொடியாற் பொலிந்த தேரினை யுடையான், கவர்த்த நெறிகளிடத்தே, தறுகண்மை உடையரான வீரர்கள் தழையாற் பண்ணின கூரையிடத்திலே சென்று ஒடுங்கும்படியாகச் சிறுதுளியைப் பண்ணும் கூதிர்க்காலம் வருத்தவும், பழைய மனையிடத்து மனைக்கிழத்தியின் தழுவலை நினையான் ஆயினன்!

இதனைப் 'பாசறை முல்லை' எனக் காட்டுவர் நச்சினார்க்கினியர்-(புறத். சூ. 21. உரை). உள்ளுதல் இயல்பேனும், போர்வென்றிமேற் சென்ற உள்ளத்தினாலே உள்ளான் ஆயினான் என்க.

## 15. வாடைப் பாசறை

*வெந்திறலான் வியன்பாசறை*
*வேல்வயவர் விதிர்ப்பெய்த*
*வந்துலாய்த் துயர்செய்யும்*
*வாடையது மலிபுரைத்தன்று.*

வெவ்விய திறலினை உடையானது அகன்ற பாசறையிடத்தே, வேலாற் சிறந்த மறவர்கள் நடுக்கமுறும்படியாக வந்து இயங்கித் துன்பஞ் செய்கின்ற வாடைக் காற்றது மிகுதியைச் சொல்லியது, வாடைப் பாசறை ஆகும்.

வாடை வருத்தவும் வென்றியே கருதியிருந்தனன் ஆதலால் வாடைப் பாசறை ஆயிற்று. தொல்காப்பியம், 'கூதிர்வேனில் என்றிரு பாசறைக் காதலினொன்றிக் கண்ணிய மரபினும்' என்று கூறும் - (புறத். சூ. 21). இங்கு வேனிற் பாசறை கூறிற்றிலர். ஏனைய காலங்களாற் பாசறைப் பெயர் இன்றென்றற்கு இரண்டானும் பெயர் கூறினார்' என்னும் நச்சினார்க்கினியர் கருத்தையும் இங்குக் கருதுக.

**வாடை நலிய வடிக்கண்ணாள் தோணசை**
**ஓடை மழகளிற்றான் உள்ளான்கொல்-கோடல்**
**முகையோடு அலம்வர முற்றெரிபோற் பொங்கிப்**
**பகையொடு பாசறை யுளான்.** 170

பட்டத்தையுடைய இளங்களிற்றினைக் கொண்டவன். வாடைக் காற்றானது தன்னை வருத்தவும், மாவடுப் போன்ற கண்ணாளுடைய தோள்களைத் தழுவுகின்றதனை விரும்புதலை நினையான் போலும்! காந்தள் முகையோட சுழலும்படி முதிர்ந்த, நெருப்புப்போற் கோபித்துப், பகைவர்கள் கெட்டோடுதற்குக் காரணமான பாசறையிடத்து உள்ளானே!

'வடிக்கண்ணாள் தோள்நசை உள்ளான்கொல்; பகையோடப் பாசறையுளான்' என, அவனது காமத்தை வென்ற போர் வெற்றி விருப்பினைச் சிறப்பித்தனர்.

## 16. அரச முல்லை

*செருமுனை உடற்றுஞ்*
*செஞ்சுடர் நெடுவேல்*
*இருநிலங் காவலன்*
*இயல்புரைத் தன்று.*

போர் முனையுள் பகைவரை வருத்தும், சிவந்த சோதியாற் சிறந்த நெடிய வேலினை உடையானான, பெரிய நிலவுலகைக் காக்கும் மன்னனது இயல்பினைச் சொல்லியது, அரச முல்லை ஆகும்.

**செயிர்க்கண் நிகழாது செங்கோல் உயரி**
**மயிர்க்கண் முரசம் முழங்க-உயிர்க்கெல்லாம்**
**நாவ லகலிடத்து ஞாயி றனையனாய்க்**
**காவலன் சேறல் கடன்.** 171

நாடு காக்கும் காவலன், குற்றத்திடத்துச் செல்லாதே செங்கோன்மையினை உயர்த்தி, மயிரான் மிக்க கண்ணினை யுடைய வீரமுரசம் முழங்க, நாவலந் தீவாகிய அகன்ற இடத்தின்கண் வாழுகின்ற எல்லாவுயிர்க்கும், ஞாயிற்றைப் போன்றவனாக நடத்தல் முறைமையாகும்.

முல்லை, இயல்பு மிகுதி கூறுதல் என்பதனைக் கருத்திற் கொள்ளுக.

## 17. பார்ப்பன முல்லை

*கான்மலியும் நறுந்தெரியல்*
*கழல்வேந்தர் இகலவிக்கும்*
*நான்மறையோன் நலம்பெருகு*
*நடுவுநிலை யுரைத்தன்று.*

செவ்விமிக்க நறுநாற்றஞ் செறிந்த மாலையினையுடைய, வீரக்கழலாற் பொலிந்த மன்னரது மாறுபாட்டினை அவிக்கும் நான்மறையோன், நன்மைமிக்க செப்பநிலையினைச் சொல்லியது, பார்ப்பன முல்லை ஆகும்.

**ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே**
**நல்லிசை முச்செந்தீ நான்மறையோன்-செல்லவும்**
**வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை**
**என்றன்றி மீண்ட திலர். 172**

பகைமேற் சென்றவிடத்து அவரை வெற்றி கொண்டன்றி மீள்தலில்லாத வெற்றி வேந்தர்கள், நன்றாகிய புகழினையும் மூவகைச் செந்தீயினை ஓம்பலையும் நான்மறைக் கேள்வியையும் உடையானாகிய இவன் சந்துவேண்டிச் செல்லவும், வெவ்விய பகையென்று சென்று மீண்டனரே அல்லாமற், போர்வென்று மீண்டதென்பது இலராயினர்; இதனால் ஒல்லென ஒழிக்கும் கடலாற் சூழ்ந்த இவ்வுலகத்து, அறிவே சாலச் சிறந்ததா யிருந்தது!

போரினை ஒழித்த அறிவனது சால்பினைக் கூறியது இது; இத்தகைய அறிவுசால் செயலை நிகழ்த்துவோர் தூது செல்வாராகிய பார்ப்பனர் எனவே, இது பார்ப்பன வாகை ஆயிற்று.

## 18. அவைய முல்லை

*நவைநீங்க நடுவுகூறும்*
*அவைமாந்தர் இயல்புரைத்தன்று.*

குற்றம் நீங்கும்படியாக, நடுவுநிலை நின்று நியாயத்தைக் கூறுகின்ற, அறங்கூறும் அவையத்துச் சான்றோரின் இயல்பினைச் சொல்லியது, அவைய முல்லை ஆகும்.

**தொடைவிடை ஊழாத் தொடைவிடை துன்னித்**
**தொடைவிடை ஊழிவை தோலாத்-தொடைவேட்டு**
**அழிபடல் ஆற்றல் அறிமுறையேன் றெட்டின்**
**வழிபடர்தல் வல்ல தவை. 173**

வினாவும் விடையும் முறைமையாக, வினாவினையும் அதற்குப் பெற்ற விடையினையும் பொருத்தமுற ஆராய்ந்து

வினாவும் விடையும் முறைமையையும் என்னுமிவைகளில் தப்பாத முடிபினைச் செய்தலை விரும்பி, அழிபும் அடலும் ஆற்றலும் அறிகின்ற முறையினை மேற்கொண்டு, எண்வகைப் பண்பிற்கும் ஏற்பச் செல்லவல்லது எதுவோ, அதுவே அவையாகும்.

எட்டின் வழிபடர்தலாவது, குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை என்னும் இவை உடையராய் விளங்குதல். இத்தகையார் அவைக்கண் முந்தியிருப்பதான வெற்றியைக் கூறுதலால், இது அவைய முல்லை ஆயிற்று. 'அழிபும் அடலும் ஆற்றலும் அறிமுறை ஏன்று' என்பது, அவற்றை அறிதற்குரிய வகைமையானே அறிந்து மேற்கொண்டு என்பதாம்.

## 19. கணிவன் முல்லை

***துணிபுணருந் தொல்கேள்விக்***
***கணிவனது புகழ்கிளந்தன்று.***

முடிவாக நிச்சயித்துப் பலவும் அறியும் பழைய கேள்வி ஞானத்தினை உடையோனான, சோதிட நூல் வல்லானது கீர்த்தியைச் சொல்லியது, கணிவன் முல்லை ஆகும்.

கணிவன் - காலக் கூறுபாடுகளைக் கணித்தறியும் அறிவுடையோன்; கோள்நிலை கணித்துக் கூறுவோனும் ஆம்.

**புரிவின்றி யாக்கைபோல் போற்றுவ போற்றிப்**
**பரிவின்றிப் பட்டாங் கறியத்-திரிவின்றி**
**விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்**
**கண்ணி உரைப்பான் கணி.** 174

தப்பாதபடி, தன் உடலினைப் போலப் பேணவேண்டிய நூல்களைப் போற்றிக் கற்று, துன்பமின்றி உண்மையினை அறியத், தப்பில்லாமல் வான மண்டிலமும் இவ்வுலகமும் விளைக்கின்ற விளைவுகளை எல்லாம் கருதிச் சொல்லும் அவனே, சிறந்த கணியாவான்.

புரிவின்றி-தப்பு இல்லாமல். பட்டாங்கு-உண்மை.

## 20. மூதின் முல்லை

***அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்***
***மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று.***

கொல்லும் வேலினையுடைய வீரர்க்கல்லது, அம் மறக்குடியின் மடப்பத்தையுடைய மகளிர்க்கும் சினத்தைச் சிறப்பித்தது, மூதின் முல்லை ஆகும்.

**வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து**
**வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ-முந்தை**
**முதல்வர்கல் தான்காட்டி மூதில் மடவாள்**
**புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு.** 175

*பழையதாகிய மறக்குடியிலே பிறந்த, மடப்பத்தை உடையாள், தங்கள்மேற் போருக்குவந்த பகைப் படையின் வரவினைப் பொறாதவளாய்ப், பாலுண்ணும் புதல்வனது வாயினின்றும் தன் முலையை வாங்கியவளாக, வெவ்விய வலியினையுடைய வேலினை அவனது கையிலே கொடுத்து, முன்பு தன் வழியிலுள்ளோருடைய நடுகல்லினையும் அவனுக்குக் காட்டி, அப் புதல்வனைப் போருக்குச் செல்வாயாக என்றாள்!*

*இறைக் கொளீஇ - முன்பு பகைவரைக் குத்தி வளைந்த வளைவினைத் தவிர்த்தும் ஆம்.*

## 21. ஏறாண் முல்லை

***மாறின்றி மறங்கனலும்***
***ஏறாண்குடி எடுத்துரைத்தன்று.***

*மாறுபாடு இல்லாத பொழுதிலேயும், சினம் கனலுகின்ற ஏறாநின்ற ஆண்மைத் தன்மையினையுடைய குடியொழுக்கத் தினை உயர்த்துச் சொல்லியது, ஏறாண் முல்லை ஆகும்.*

*ஏறு ஆண்-ஏறா நின்ற ஆண்மைத் தன்மை.*

**கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்**
**முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்-பின்னின்று**
**கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி**
**எய்போற் கிடந்தானென் ஏறு.** 176

*என் தந்தை முன்னாட் போரிலே பட்டு நடுகல்லாகி நின்றான்; என் கணவனும் போர்க்களத்திலே பட்டான்; என் தமையன்மார் முன்னணியிலே நின்று பொருது பட்டு வீழ்ந்தனர்; என் மகன், கெட்டோடும் தன் படைக்குப் பின்னாக நின்று, தன் கை சென்று அம்பினைச் செலுத்தப், பகை மன்னன் மேலே சென்று, அவ்விடத்தே எய்ப்பன்றி போலே பட்டுக் கிடந்தான்.*

*எய்ப்பன்றி - முள்ளம்பன்றி; பகைவரது அம்புமாரி தைக்க வீழ்ந்து கிடந்த புதல்வனுக்கு உவமை. இதனால், ஏறாண் குடியது திறப்பாட்டை அறிக.*

## 22. வல்லாண் முல்லை

***இல்லும் பதியும் இயல்புங் கூறி***
***நல்லாண் மையை நலமிகுத் தன்று.***

ஒரு மறவனது குடியையும் ஊரையும் இயல்பு மேம்பாட்டையும் எடுத்துக்கூறி, அவனது நன்றாகிய ஆண்மைத் தன்மையை நன்மைபெருகச் சொல்லியது, வல்லாண் முல்லை ஆகும். வல் ஆண்மை - வலிய ஆண்மைத் தன்மை.

**வின்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறார்**
**முன்முன் முயலுகளும் முன்றிற்றே - மன்முன்**
**வரைமார்பின் வேன்மூழ்க வாளமுவந் தாங்கி**
**வரைமாலை சூடினான் ஊர். 177**

அரசனின் முன்னாகத், தன் மலைபோன்ற மார்பத்திடத்தே பகைவர் எறிந்த வேற்படை அழுந்த, வாட்போரைத் தடுத்துப் புகழ்மாலையினைச் சூடினான், இம் மறவன். இவனுடைய ஊரானது, வில்லின் முன்னே அம்பினை ஆராயும் வேட்டைச் சிறுவர்களின் முன்னாக முன்னாக, முயல்கள் பாய்கின்ற வீட்டுமுற்றங்களை உடையதாகும்.

## 23. காவன் முல்லை-1

***தவழ்திரை முழங்குந் தண்கடல் வேலிக்***
***கமழ்தார் மன்னவன் காவன் மிகுத்தன்று.***

கரையிடத்தே தவழ்கின்ற அலையினைக் கொண்ட, ஆரவாரிக்கும் குளிர்ந்த கடலினை வேலியாகவுடைய உலகத்தின் கண், மணம் நாறும் மாலையினையுடைய மன்னவனின் பாதுகாத்தலைச் சிறப்பித்தது, காவன் முல்லை ஆகும்.

**பெரும்பூண் சிறுதகைப் பெய்ம்மலர்ப் பைந்தார்க்**
**கருங்கழல் வெண்குடையான் காவல் - விரும்பான்**
**ஒருநாள் மடியின் உலகின்மேல் நில்லா**
**திருநால் வகையார் இயல்பு. 178**

பெரிய அணிகளையும், நல்லோரை வணங்கும் வணக்கத்தையும், மலரிட்டுத் தொடுத்த பசிய மாலையினையும், வலிய வீரக்கழலையும், வெண்மையான கொற்றக் குடையினையும் உடையனான வேந்தன், நாடு காத்தல் தொழிலைச் செய்வதற்கு விருப்பமற்றவனாகி, ஒரு நாள் அளவிற்கு உள்ளம் சோம்பினனாயின், இவ்வுலகின் மேற் குடிப்பிறப்பு முதலாகிய எண்வகை இயல்புடைய சான்றோரது தன்மையும் தங்காதுபோம்.

எண்வகை இயல்புகள் எவை என்பது முன்னரே உரைக்கப்பட்டது.(வெண்பா.173 உரை)

## 24. காவன் முல்லை-2

***தக்காங்குப் பிறர்கூறினும்.***
***அத்துறைக் குரித்தாகும்.***

*பொருந்தினபடி காவலியல்பினைப் பிறர் எடுத்து உரைப்பினும், அது காவன் முல்லைத் துறைக்கு உரித்தான தாகும்.*

*முன்னது காவலியல்பைச் சிறப்பித்துக் கூறியது; இது காவலியல்பை மன்னனுக்குச் சான்றோர் எடுத்துக் கூறியது.*

**ஊறின் றுவகையுள் வைக உயிரோம்பி**
**ஆறிலொன் றானா தளித்துண்டு-மாறின்றி**
**வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்**
**தான்காவல் கொண்டல் தகும்.** 179

*தனக்கு மாறுபட்டார் எவருமின்றி, வானகத்தைக் காவல் மேற்கொண்ட தந்தையது நெறியே நிலை நின்று, நாள்தொறும், மன்னன், குற்றமின்றி உவகையுள்ளே வைகுமாறு உயிர்களைக் காத்தும், தான் கொள்ளும் கடனாகிய ஆறில் ஒன்றினை ஒழியாதே பிறர்க்குக் கொடுத்துத் தானும் உண்டும், தான் காவல்தொழிலினைச் செவ்வியதாக மேற்கொள்ளல், தகுதியுடையதாகும்.*

### 25. பேராண் முல்லை

*உளம்புகல மறவேந்தன்*
*களங்கொண்ட சிறப்புரைத்தன்று.*

*மறமாண்பினை உடையவனான, மன்னன் மனம் விரும்பும் படியாகப், போர்க்களத்தே பகைவரை வென்று களத்தைத் தனதாக்கிக் கொண்ட வெற்றிச் சிறப்பினை உரைத்தது, பேராண் முல்லை ஆகும்.*

*இருவரும் பொருதுகளத்துப், பகைவர் அழிய, களம் இவனதாகவே சிறத்தலைச் செய்த பேராண்மை இயல்பினை உரைத்தலால், பேராண் முல்லை ஆயிற்று.*

**ஏந்துவாள் தானை யிரிய உறைகழித்துப்**
**போந்துவாள் மின்னும் பொருசமத்து-வேந்தர்**
**இருங்களி யானை யினமிரிந் தோடக்**
**கருங்கழலான் கொண்டான் களம்.** 180

*வலிய வீரக்கழலினை யுடையான், மறவர்கள் கூட்டினின்றும் நீக்கியெடுத்துப் போந்த நிலையினானே, ஒளிமின்னும் ஒள்ளிய வாள்களைக் கொண்டிலங்கிய போர்க்களத்திலே, பகைவேந்தரது உயர்ந்த வாட்சேனை உடையும்படியும், பெரும் மதத்தினை யுடைய யானைத்திரள் கெட்டோடவுமாக வென்று, களத்தைத் தான் கைக்கொண்டான்!*

*பொருசமம்-பொருதுகின்ற போர், அது நிகழ்ந்த களத்தைக் குறித்தது.*

## 26. மறமுல்லை

*வெள்வாள் வேந்தன் வேண்டிய தீயவும்*
*கொள்ளா மறவன் கொதிப்புரைத் தன்று.*

தெளிந்த வாளினை யுடையானான வேந்தன், விரும்பின எல்லாம் கொடுக்கவும், அதனை ஏற்றுக்கொள்ளாத மறவனின் மனக்கொதிப்பினை உரைத்தது, மறமுல்லை ஆகும்.

மறவன் கொள்ளாது கொதித்து நின்றது, பகைவரை அழித்தற்கு எழுந்த சினமொன்றே அவன்பால் மிக்கெழுந்து நின்றதனால்,

**வின்னவில் தோளானும் வேண்டிய கொள்கென்னும்**
**கன்னவில் திண்டோட் கழலானும்-மன்னன்முன்**
**ஒன்றான் அழல்விழியான் ஒள்வாள் வலனேந்தி**
**நின்றான் நெடிய மொழிந்து.** 181

வில்பொருந்திய தோளினையுடைய மன்னவனும், 'நீ விரும்பினவற்றைக் கொள்வாயாக' என்று சொல்லா நிற்கும்; மலையொத்த திண்ணிய தோள்களையும் வீரக்கழலையும் உடைய மறவனும், அங்ஙனம் கேட்கின்ற மன்னனின் முன்பாக வேண்டிப் பெறுவதற்குப் பொருந்தமாட்டான்; அழல் தெறிக்கும் விழியினனான அவன், தனது ஒள்ளிய வாளினை வலமாக உயர்ந்தவனாக, உயர்ந்த மறவுரைகளைச் சொல்லிய வண்ணம் நின்றான்!

பரிசிலும் பெறுதற்கு மறந்து நின்ற மறவனின், மறப்பண்பது இயல்புமிகுதி கூறினதால், மறமுல்லை ஆயிற்று.

## 27. குடைமுல்லை

*மொய்தாங்கிய முழுவலித்தோள்*
*கொய்தாரான் குடைபுகழ்ந் தன்று.*

பூசலைத் தடுத்த வலியினையுடைய தோளாற் சிறந்தவனும், கொய்து மட்டஞ் செய்யப்பெற்ற தாரினனுமான மன்னனது, கொற்றக் குடையினைப் புகழ்ந்தது, குடைமுல்லை ஆகும்.

பாடாணில் வருகின்ற குடைமங்கலத்தையும் இதனையும் கருதி வேறுபாடு அறிக. இது வாகைசூடி வீற்றிருக்கும் மன்னனது குடையினைப் புகழ்தல்; அது நாற்றிசையும் புகழ அரசுவீற்றிருக்கும் ஒருவனது குடையைப் புகழ்தல்.

**வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டம்**
**தாய புகழான் தனிக்குடைக்குத்-தோயம்**
**எதிர்வழங்கு கொண்மூ இடைபோழ்ந்த சுற்றுக்**
**கதிர்வழங்கு மாமலை காம்பு.** 182

பரந்த புகழினை உடையானது ஒப்பிலாத வெண்கொற்றக் குடைக்கு, வானமே போர்வையாம்; விளங்கா நின்ற கதிரே மேல் வட்டமாம்; நீர்த்தாரையை ,எதிரே சொரியும் மேகமே இடைவிட்ட சுற்றுத் தாமமாம்; சந்திரா சித்தர் வழங்கும் மேரு மலையே காம்பாம்!

'இடை போழ்ந்து சுற்றிக் கதிர்வழங்கு மாமலைக் காம்பு' என்று பாடமோதி, 'மாகத்தைப் பிளந்து சுற்றிக் கதிர் வழங்கு மாமலை காம்பு' என்பாரும் உளர். மாகம்-வானம், இதனாற் கொற்றக் குடைநிழலுள், உலகெலாம் அடங்கிற்று என, அதனியல்பு சிறப்பித்துக் கூறியதும் ஆயிற்று.

## 28. கண்படை நிலை

*மண்கொண்ட மறவேந்தன்*
*கண்படைநிலை மலிந்தன்று.*

பகைவரை வென்று, அவரது பூமியைக் கைக்கொண்ட மறமாண்புடைய வேந்தனது, உறக்கச் செவ்வியை மிகுத்து உரைத்தது, கண்படை நிலை ஆகும்.

**கொங்கலர்தார் மன்னரும் கூட்டளப்பக் கூற்றணங்கும்**
**வெங்கதிர்வேல் தண்தெரியல் வேந்தற்குப்-பொங்கும்**
**புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்**
**கனலா துயிலேற்ற கண்.** 183

இயமனை வருத்தும் வெய்ய ஒளிர்வேலினையும், குளிர்ந்த மாலையினையும் உடைய வேந்தனுக்குத், திறைகொடாத மதுமலர்ந்த மாலையினையுடைய வேந்தர்களும் அடங்கித் திறையளப்பப், பொங்கும் கடலாகிய ஆடையை உடுத்தாளான நிலமகளும் ஒப்பனை சிறந்த கொற்றக் குடையின் கீழாகத் தங்கக், கண்களும் அழலாவாய் உறக்கத்தை எதிர்ந்தன!

கூட்டு-திறைப் பொருள். 'பகை ஒழிந்ததனால், கண்கள் கனலாவாய்த் துயிலேற்றன' எனக் கண்படுதலின் இயல்பைக் கூறினார்.

## 29. அவிப்பலி

*வெள்வாள் அமருள்*
*செஞ்சோ றல்லது*
*உள்ளா மைந்தர்*
*உயிர்ப்பலி கொடுத்தன்று*

தெளிந்த வாட்பூசலிடத்தே, செஞ்சோற்றுக் கடனை யன்றிப் பிறிதினை நினையாத ஆண்மையாளர்கள், தம் உயிரைப் பலியாகக் கொடுத்தது, அவிப்பலி ஆகும்.

பகைவர் நாணும்படியாக, உயர்ந்தோரான் நன்கு மதித்தலைக் கருதி, 'இன்னது செய்யேனாயின் இன்னது செய்வல்' எனத் தான் கூறிய பகுதி இரண்டனுள், ஒன்றனோடே பொருந்திப் பலபிறப்பினும் பழகிவருகின்ற உயிரை அங்கியங் கடவுளுக்குக் கொடுத்த அவிப்பலி' என நச்சினார்க்கினியர், 'ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து, தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்' என்னும் தொல்காப்பியவிதியின் உரைக்கண் கூறுவார்-(புறத். சூ. 21. உரை). இதற்கு, 'இழைத்த திகவாமைச் சாவாரை யாரே பிழைத்தது ஒறுக்கிற் பவர்' என்ற குறளையும் மேற்கோள் காட்டுவர் அவர்.

**சிறந்த திதுவென்னச் செஞ்சோறு வாய்ப்ப**
**மறந்தரு வாளமர் என்னும்-பிறங்கழலுள்**
**ஆருயிர் என்னும் அவிவேட்டார் ஆங்கஃதால்**
**வீரியரெய் தற்பால வீடு.** 184

சிறந்தது இதுவே எனச் சொல்லிச், செஞ்சோற்றுக் கடன் தப்பாதபடி, மறத்தினைத் தருகின்ற வாட்போர் என்னும் பெரிய நெருப்பினுள்ளே, பெறுதற்கரிய உயிர் என்னும் அவியினைக் கொடுத்தார், இம் மறவர்கள்; வீரத்தை உடையார் அடைதற்கான பகுதியையுடைய சுவர்க்கம் என்பதும், ஆங்கு அவ்விடத்ததே யாகும்.

'அவி'-அவிப்பலி, 'வேள்வியுள் நெருப்பிடத்துப் பலியைச் சொரிதல் போல, வாட்போராகிய வேள்வியுள், தம் உயிராகிய அவியைச் சொரிந்தனர்' என்க. 'வெற்றி வேந்தன் கொற்றம் கொள்க' என, வீரர் பலிபீடிகையில் தலையறுத்து வைத்து வேண்டுதலும் அவிப்பலி எனப்படும். (சிலம்பு 5:79-86).

## 30. சால்பு முல்லை

*வான்றோயும் மலையன்ன*
*சான்றோர்தம் சால்புரைத்தன்று.*

விண்ணினைத் தொடும் மலையினைப் போன்று, தம் சால்பாலே உயர்ந்து விளங்கும் சான்றோர்களது, சால்பினது இயல்பை உரைத்தது, சால்பு முல்லை ஆகும்.

**உறையார் விசும்பின் போல உவாமதி**
**நிறையா நிலவுதல் அன்றிக்-குறையாத**
**வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ**
**சங்கம்போல் வான்மையார் சால்பு.** 185

சங்கைப்போன்று தூய்மை உடையவர்களின் அமைதி, மழையான் நிறைந்த வானத்திடத்தே விளங்கும் உவாநாள் மதியைப் போல நிறைவுடையதாக நிலவுதல் என்பதல்லாமல்,

குறையாத மரக்கலம் பிளக்கும் கடலிடத்து வளத்தை எல்லாம் பெறுமிடத்தும், வேறுபடுமோ? (வேறுபடாது என்பது கருத்து.)

சங்கது தூய்தான வெண்மை, சான்றோரது மருவற்ற தூய்மைக்கு உவமை. உவாமதி-பௌர்ணமித் திங்கள்.

## 31. கிணை நிலை

*தண்பணை வயலுழவனைத்*
*தெண்கிணைவன் திருந்துபுகழ் கிளர்ந்தன்று.*

தெளிந்த கிணைப்பறையினை முழக்குமவன், மருதநிலத்திற் கழனியிடத்து, வேளாளனது நல்ல புகழினைச் சொல்லி முழக்கியது, கிணைநிலை ஆகும்.

**பகடுவாழ் கென்று பனிவயலுள் ஆமை**
**அகடுபோல் அங்கண் தடாரித்-துகடுடைத்துக்**
**குன்றுபோற் போர்விற் குரிசில் வளம்பாட**
**இன்றுபோம் எங்கட் கிடர்.** 186

குளிர்ந்த கழனியுள் விளங்கும் ஆமையது வயிற்றைப் போன்ற, அழகிய கண்ணினையுடைய கிணைப்பறையினது மாசினைத் துடைத்து, 'ஏர் வாழ்க' என்று வாழ்த்திக், குன்றைப் போல விளங்கும் நெற்போர்வினையுடைய உபகாரியது செல்வத்தைப் பாட, இன்று எங்களது வறுமையனைத்தும் நீங்கும்.

## 32. பொருளொடு புகறல்

*வையகத்து விழைவறுத்த*
*மெய்யாய பொருள்நயந்தன்று.*

இவ்வுலகத்துப் பொருளின்மேற் செல்லுகின்ற ஆசையினை நீக்கி, மெய்யான பொருளினை அடைதலை விரும்பியது, பொருளொடு புகறல் ஆகும்; புகறல்-விரும்புதல்

'பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்' என்னும் தொல்காப்பிய விதிக்கு (புறத். சூ. 21) உரை வகுக்கும் நச்சினார்க்கினியர், 'அரசருக்கு உரியவாகிய படைகுடிகூழ் அமைச்சு நட்பு முதலியனவும், புதல்வரைப் பெறுவனவுமாகிய பொருட்டிறத்துப்பட்ட வாகைப் பகுதியானும்' என்று பொருள்கூறிப், 'பக்கம் என்றதனால் மெய்ப்பொருள் உணர்த்துதலும் கொள்க' என்று உரைப்பதும் காண்க.

**ஆமினி மூப்பும் அகன்ற திளமையும்**
**தாமினி நோயும் தலைவரும்-யாமினி**
**மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த**
**ஐயைந்தும் ஆய்வ தறிவு.** 187

இளமையும் அகன்று போயது; இனி மூப்பும் உண்டாகும்; இனி நோய் தாமும் மீதூர்ந்து வந்துவிடும். அதனால், யாம், இனி உடலைப் பற்றியவான ஐம்புல இச்சைகளும் நம்மை அடரும்படியாகத் தங்கியிராமல், தலைவந்த இருபத்தைந்தாகிய மெய்ப்பொருள்களை ஆராய்வதே, அறிவுடைமை ஆகும்.

'மெய் ஐந்தும் மீதூர்தல்'-மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளிற் பிறக்கின்ற இச்சைகள் நம்மை மேற்கொண்டு நிற்றல். ஐயைந்து-இருபத்தைந்தாகிய தத்துவப் பொருள்கள்; அவை, ஞானேந்திரியங்கள் ஐந்தும், மகாபூதங்கள் ஐந்தும், தன் மாத்திரைகள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், மனம் முதலான அந்தக்கரணம் நான்கும், சீவன் ஒன்றும் ஆகியவை.

*'புலமார் பொருள்கள் இருபத் தைந்துள;*
*நிலம்நீர் தீவளி ஆகா யம்மே;*
*மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே;*
*உறுசுவை யொளியூ றோசைநாற் றம்மே;*
*வாக்குப் பாணி பாதபாயு ருபத்தம்;*
*ஆக்கும் மனோபுத்தி ஆங்கார சித்தம்;*
*உயிரெனும் ஆன்மா ஒன்றோடும் ஆம்'(மணி. 27:233-239)*

என வரும், சாங்கியவாதியின் விளக்கம் இந்தப் பொருள் களை விளக்கியுரைப்பதனைக் காண்க.

## 33. அருளொடு நீங்கல்

*ஒலிகடல் வையகத்து*
*நலிவுகண்டு நயப்பவிந்தன்று.*

முழங்கும் கடலாற் சூழப்பெற்றிருக்கும் உலகிடத்து வந்தடையும் துயரங்களைக் கண்டு, உலகப்பற்றினை ஒழிந்தவராவது, அருளொடு நீங்கல் ஆகும்.

'அருளொடு புணர்ந்த அகற்சியானும்' என்பது தொல்காப்பியம்-(புறத். சூ. 21). அருளொடு புணர்தலாவது, ஓருயிர்க்கு இடர்வந்துழித் தன்னுயிரைக் கொடுத்துக் காத்தலும், அதன் வருத்தம் தனதாக வருந்துதலும், பொய்யாமை கள்ளாமை முதலியனவுமாம். இக் கருத்து நிகழ்ந்த பின்னர்த் துறவுள்ளம் பிறத்தலின் இதுவும் அறவெற்றி ஆயிற்று' என்பது நச்சினார்க்கினியரது விளக்கம்.

இதனை யடுத்துக், 'காமம் நீத்த பாலினானும்' என்று உரைக்கும் தொல்காப்பிய விதியினையும் இதனோடு ஒப்பக் கொள்ளல்வேண்டும்-(புறத். சூ. 21). 'எப்பொருள்களினும் பற்றற்ற

நிலையெனவும், உலகியலுள் நின்றே காமத்தைக் கைவிட்ட நிலையெனவும் அது இருபகுதிப்பட இயலுவதும் அறிக.

**கயக்கிய நோய்வாய்க் கையிகந்து நம்மை**
**இயக்கிய யாக்கை இருமுன்-மயக்கிய**
**பட்படா வைகும் பயன்ஞால நீள்வலை**
**உட்படாம் போதல் உறும்.** 188

நம்மைக் கலக்கிய நோவுகளை உடையவாய்க் கை கடந்து நம்மை நடத்திய உடலானது இற்றுப் போவதற்கு முன்பாகவே, மருளப்பண்ணின குணம் அடுத்துத் தங்கும் பயனாகிய உலகமென்னும் நெடிய வலையுள்ளே அகப்படேமாகி, நன்னெறிக் கண்ணே சென்று சேர்தல், உயிருக்கு உறுதியுடைத்தாம்.

இதுவும் வாழ்விற் சிறந்த வெற்றிப்பாடே ஆதலால், வாகைத்திணை ஆயிற்று. பண்பு-பட்பு என விகாரமாயிற்று.

## தொகுத்து உரைத்தல்

வாகையாகிய வெற்றி மேம்பாட்டினை உரைக்கின்ற இந்தப் படலமானது, வாகை மாலையினைச் சூடிப் பகைவரை அழித்து வென்று சிறப்பது எனவும், இயல்பினது மிகுதிப்பாட்டைக் கூறும் முல்லைப்பகுதி எனவும் அமைவதனைக் கண்டோம். இவற்றின் துறையமைதிகளான முப்பத்திரண்டு பகுதிகளையும் அறிந்தோம். அவை-

பகைவரை வென்று வாகைமாலை சூடுதலாகிய வாகை அரவம்; வாய்மொழி நடுநிலை தவறாத மன்னனது இயல்பினை உரைத்தலான அரசவாகை; பலிபெறு முரசின் பண்பினைக் கூறுதலான முரசவாகை; போர்க்களச் செயலாண்மையினை உழவோடு ஒப்புக்காட்டி உரைத்தலாகிய மறக்களவழி;

பேய்கள் உண்டுகளிக்க வேட்ட களவேள்வி; தேர்த்தட்டின் முன்பாகப் பேய்கள் ஆடுதலான் முன்தேர்க் குரவை; நேரின் பின்னாக மறவரும் பாணிச்சியரும் ஆடுதலான் பின் தேர்க் குரவை; மறைக் கேள்வியால் மாண்புற்ற பார்ப்பனன் வேள்வியாற் சிறப்புற்றது கூறலாகிய பார்ப்பன வாகை; வணிகனின் அறுதொழில் மாண்பினை எடுத்துரைக்கும் வாணிக வாகை;

உழவனின் வெற்றி மேம்பாடு கூறலாகிய வேளாண் வாகை; ஒப்பு நோக்கி இகழாமை கூறலாகிய பொருநவாகை; முக்காலமும் நிகழ்பவற்றை அறிபவனின் சிறப்பினை உரைத்தலாகிய அறிவன் வாகை; தவத்தாரது ஒழுக்க மேம்பாடு கூறலாகிய தாபத வாகை;

கூதிர்க் காலத்துப் பிரிவாற்றாமையைப் பொறுத்துப் பாசறையிடத்தே இருத்தலாகிய கூதிர்ப் பாசறை; வாடை வருத்தியும் பாசறையிடத்தே இருத்தலாகிய வாடைப் பாசறை;

மன்னனது காவல் மேம்பாடு உரைத்தலாகிய அரச முல்லை; பார்ப்பனனது நலம்பெருகும் நடுவுநிலை உரைத்தலாகிய பார்ப்பன முல்லை;

அவைமாந்தர் நடுவுகூறும் இயல்பினை உரைத்தலாகிய அவைய முல்லை; கணியது புகழ்கூறலாகிய கணிவன் முல்லை; கூறலாகிய மூதின் முல்லை; ஏறுகின்ற ஆண்மைச் செவ்வியுடைய குடிச் சிறப்புக் கூறுதலாகிய ஏறாண்முல்லை;

இல்லும் பதியும் இயல்புங் கூறி நல்லாண்மையைப் போற்றுதலான் வல்லாண் முல்லை; மன்னனது காவல் தொழிலது மேம்பாட்டைக் கூறலாகிய காவன் முல்லை; அரச நெறி மன்னனுக்குப் பிறர் உரைத்தலான கா்வன் முல்லை; மன்னன் களங்கொண்டது கூறலாகிய பேராண்முல்லை.

மன்னனது கொடையினும் மனம்பற்றாது போர்க்குத் துடிப்புடன் நிற்கும் மறவனது கொதிப்பினை உரைத்தலாகிய மறமுல்லை; மன்னனது கொற்றக் குடையது சிறப்பைக் கூறுதலாகிய குடைமுல்லை; மன்னன் கண்படுத்த இயல்பு கூறலாகிய கண்படை நிலை; மறவர் செஞ்சோற்றுக் கடனாக உயிரினை நல்குவதாகிய அவிப்பலி; சான்றோர்தம் சால்பினை உரைத்தலாகிய சால்புமுல்லை;

உழவனைக் கிணைவன் போற்றியதாகிய கிணை நிலை; மெய்ப்பொருள் விரும்பலாகிய பொருளொடு புகறல்; அனைத்துயிர்க்கும் அருளோடு உலகப்பற்று நீங்குதலாகிய அருளொடு நீங்கல் என்னும் இவைகளாம்.

# 9. பாடாண் படலம்

*(பாடாண் படலம் என்னும் இந்தப் பகுதியினைப் பாடப்படுகின்ற ஆண்மகனது ஒழுகலாறுகளைப் பற்றிக் கூறுவதென்று கொள்ளல் வேண்டும். இதனைக் 'கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாக அமைவது' என்பர் தொல்காப்பியர்.)*

வெட்சி முதலாக வாகை ஈறாகச் சொல்லப்பட்ட எட்டுப் படலங்களினும், ஒருவரை ஒருவர் புகழ்வதென்பது, புகழ்வார் புகழப்பட்டாரது தகுதியும் செயலும் கருதிப் புகழ்வதே யன்றித், தமக்கொரு பரிசிலை மனங்கொண்டு பாடுவது ஆகாது. ஆனால், ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்டுகின்றான்; ஒரு புலவன் பொருளும் பிறவுமாகிய பரிசிலை வேண்டுகின்றான். இவை தம்மின் வேறாகிய இச்சைகளை உடைமை வெளிப்படை. இதனாற்றான் இத்திணையைக் கைக்கிளையின் புறன் என்றனர். பரிசில் நாட்டமின்றிப் புகழ் மேம்பாட்டைப் பாடுதலை விரும்பிமட்டுமே புலவர்கள் பாடினராயின், அது கைக்கிளைப் புறனாகக் கொள்ளப்படுவது அன்று என்பதனையும், நாம் இவ்விடத்தே அறிதல் வேண்டும்.

***'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாலிரண்டு உடைத்தே'***

என்பர் தொல்காப்பியர்-(புறத். சூ. 25), 'பாடாண் திணைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவுங் கூட்டி ஒன்றும், இருவகை வெட்சியும் (வெட்சி கரந்தை), வஞ்சியும், உழிஞையும் (நொச்சியும் இதனுட்படும்) தும்பையும் வாகையும், காஞ்சியுமாகிய பொருள்கள் ஏழுமாகிய எட்டுமாம்' என்பது இதன் பொருள்.

'இவை பாடாண் பொருளாகுமாறு காட்டும்போது, எல்லாத் திணையும் ஒத்ததாயினும், அவை பெரும்பான்மையும் சிறுபான்மையுமாகி வருதலும், அவை இரண்டும் பலவும் ஒருங்கு வருதலும், பாடாண் திணைக்கு மேற்கூறும் பொருளும் விராய் வருதலும் ஆம்' என்பர் நச்சினார்க்கினியர்.

இந் நூலாசிரியரோ, இத்திணைக்குத் துறைப்பாட்டுகளாக நாற்பத்தேழினைக் கூறுகின்றனர். இவை பலவும் 'பாடாண் திணைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவுங் கூட்டி ஒன்றும்' எனச் சொல்லப்பட்டதனுள் அடங்குவனவாம். இவற்றது நுட்பங்களை எல்லாம் வருமிடங்களுள் பின்னர்க் கண்டு தெளிவுறுக.

பாடாண் பாட்டே வாயில் நிலையே
கடவுள் வாழ்த்தொடு பூவை நிலையே
பரிசில் துறையே இயன்மொழி வாழ்த்தே
கண்படை நிலையே துயிலெடை நிலையே
மங்கல நிலையொடு விளக்கு நிலையே
கபிலை கண்ணிய புண்ணிய நிலையே
வேள்வி நிலையொடு வெள்ளி நிலையே
நாடு வாழ்த்தொடு கிணையது நிலையே
களவழி வாழ்த்தே
வீற்றினி திருந்த பெருமங் கலமே

குடுமி களைந்த புகழ்சாற்று நிலையே
மணமங் கலமே பொலிமங் கலமே
நாண்மங் கலமே பரிசில் நிலையே
பரிசில் விடையே ஆள்வினை வேள்வி
பாணாற்றுப் படையே கூத்தராற்றுப் படையே

வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉக்
குடைமங் கலமொடு வாண்மங் கலமே
மண்ணுமங் கலமே ஓம்படை ஏனைப்
புறநிலை வாழ்த்தும் உளப்படத் தொகைஇ
அமரர்கண் முடியும் அறுவகை யாகிய

கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்
புலவரை யவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல்
புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர்ப் பணிதல்
நிகழ்ந்த காமப் பகுதியுள் தோன்றிய

கைக்கிளை வகையுள் பெருந்திணை வகையும்
நற்றுனி நவின்ற பாடாண் பாட்டும்
கடவுட் பக்கத்தும் ஏனோர் பக்கத்தும்
மடவரன் மகளிர் மகிழ்ந்த பக்கமும்
மாதர் மகிழ்ந்த குழவியும் ஊரின்

கண்ணே தோன்றிய காமப் பகுதியோடு
ஆங்க வாறெண் பகுதிப் பொருளும்
பாங்குற உரைப்பது பாடாண் பாட்டே. (9)

*'பாடாண் பாட்டு' என்கின்ற பாடாண் திணையாவது நாற்பத்தெட்டு ஆகும். அவை திணை ஒன்றும் துறைகள் நாற்பத்தேழும் ஆம். துறைகளாவன-*

*வாயில் நிலை; கடவுள் வாழ்த்து; பூவை நிலை; பரிசில் துறை; இயன்மொழி வாழ்த்து; கண்படை நிலை; துயிலெடை நிலை;*

மங்கல நிலை; விளக்கு நிலை; கபிலை கண்ணிய புண்ணிய நிலை; வேள்வி நிலை; வெள்ளி நிலை;

நாடு வாழ்த்து; கிணை நிலை; களவழி வாழ்த்து; வீற்றினி திருந்த பெருமங்கலம்; குடுமி களைந்த புகழ்சாற்று நிலை; மணமங்கலம், பொலிவு மங்கலம், நாள் மங்கலம்; பரிசில் நிலை;

பரிசில் விடை; ஆள்வினை வேள்ளி; பாணாற்றுப் படை; கூத்தராற்றுப்படை; பொருநராற்றுப்படை; விறலியாற்றுப்படை; வாயுறை வாழ்த்து; செவியறிவுறூஉ; குடை மங்கலம்; வாள் மங்கலம்; மண்ணு மங்கலம்; ஓம்படை;

புறநிலை வாழ்த்து; கொடிநிலை; கந்தழி; வள்ளி; புலவர் ஆற்றுப்படை; புகழ்ந்தனர் பரவல்; பழிச்சினர் பணிதல்; கைக்கிளை; பெருந்திணை; புலவிபொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு; கடவுள்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம்; கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்; குழவிக்கண் தோன்றிய காமப்பகுதி; ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி என்பவைகளாம்.

அவற்றுள்:

## பாடாண் திணையின் விளக்கம்

***ஒளியும் ஆற்றலும் ஓம்பா வீகையும்***
***அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று.***

ஒரு தலைவனுடைய புகழும், வலியும், சீர்தூக்காது வழங்கும் கொடையும், தண்ணளியும் என்னும் இவைகளை ஆராய்ந்து சொல்லியது, பாடாண் பாட்டு ஆகும்.

இதனைக் கைக்கிளைக்குப் புறன் என்றும், இது எட்டு வகைப்படும் என்றும் தொல்காப்பியர் கூறுவர். - (புறத். சூ. 25).

***பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே***
***நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே.***

என்பது சூத்திரம், எட்டாவன, 'கடவுள் வாழ்த்து வகை, வாழ்த்தியல் வகை, மங்கல வகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படை வகை, பரிசிற்றுறை வகை, கைக்கிளை வகை, வசை வகை என்பது இளம்பூரணரின் விளக்கம்.

**மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை**
**அன்ன நடையினார்க் காரமுதம்-துன்னும்**
**பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்**
**எருசினவேற் றானையெங் கோ.** 189

*குளிர்ந்த பூவால் தொடுத்த மாலையினையும், அழலும் சினத்தையுடைய வேற்படையினைத் தாங்கிய தானைவீரரையும் உடையவன் எம் கோமான். அவன், பகை அரசர்க்குச் சிங்கம் போன்றனன்; மறையவர்களின் சொன்மாலையாகத் திகழ்பவன்; அன்னம்போலும் நடையினரான மகளிருக்கு நிறைந்த அமுதமாக இருப்பவன்; தன்னை அடையும் பரிசிலர்களுக்கு மழையினைப் போல வழங்குபவன்!*

## பாடாண் திணையின் துறைகள்

### 1. வாயில் நிலை

***புரவலன் நெடுங்கடை குறுகிய என்னிலை***
***கரவின் றுரைகெனக் காவலற் குரைத்தது.***

*'புரவலனான நின் அரசனின் நெடிய வாயிலை அணுகிய என்னுடைய வரவினை, மறைவின்றி அவனிடம் சென்று சொல்வாயாக' என்று, வாயிற்காவலனுக்கு உரைத்தது, வாயில் நிலை ஆகும்.*

*'சேய்வரல் வருத்தம் வீட வாயிற், காவலர்க் குரைத்த கடைநிலை' என்பர் தொல்காப்பியர் - (புறத். சூ. 35). இது வாயிலோனுக்குக் கூறிற்றேனும் அவ் வருத்தம் தீர்க்கும் பாடாண் தலைவனதே துறையென்பதும் அறிதல் வேண்டும். இஃது உயர்ந்தோர்க்கு உரியது என்பதும், இழிந்தோர்க்குப் 'பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை உரிய தென்பதும் தொல்காப்பியக் கருத்தாகும் (புறத். சூ. 36.).*

**நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை**
**ஈட்டிய சொல்லான் இவனென்று-காட்டிய**
**காயலோங் கெஃகிமைக்கும் கண்ணார் கொடிமதில்**
**வாயிலோய் வாயில் இசை.** 190

*செறுதல் தொழிலானே உயர்ந்த வேல் திகழும், கண்ணுக்கு நிறைந்த கொடிகளாற் பொலிவுற்றிருக்கும் மதிலினது வாயிலைக் காத்திருக்கும், வாயிற் காவலனே! 'பூமியின் கண் நிலைநிறுத்திய மெய்ம்மொழியினை உடைய நாவாற் சீர்சிறந்த அறிவினை யுடையவர்கள் புகழ்ந்த நினது நல்ல புகழினைப் பாடிய சொல்லினை யுடையவன் இவன்' என்று நின் அரசன்பால் என்னைக் காட்டுவான் வேண்டிச் சென்று, நான் வந்த வரலாற்றைச் சொல்வாயாக!*

*காயல்-காய்தல். காயலோங்கு எஃகிமைக்கும் வாயிலோய், கண்ணார் கொடிமதில் வாயிலோய் எனக் கூட்டுக. காட்டிய-வரவினை அறிவிக்கும் பொருட்டாக. வாயில் இசை-வந்த வரலாற்றைச் சொல்; வாயில்-வரலாறு.*

## 2. கடவுள் வாழ்த்து

*காவல் கண்ணிய கழலோன் கைதொழும்*
*மூவரில் ஒருவனை எடுத்துரைத் தன்று.*

பூமியைக் காத்தலைக் கருதிய வீரக்கழலினான வேந்தன் கைகூப்பித் தொழுகின்ற, அரி, அயன், அரன் என்னும் மூவருள் ஒருவனை உயர்த்துச் சொல்லியது, கடவுள் வாழ்த்து ஆகும்.

கடவுளை வாழ்த்துதலும், அக் கடவுளது அருளால் அரசன் வாழ்கவென்பதே ஆகும். அதனால், இதுவும் பாடாண் திணை ஆயிற்று.

**வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்**
**உய்ய உருவம் வெளிப்படுத்தாய்-வெய்ய**
**அடுந்திறல் ஆழி அரவணையாய் என்றும்**
**நெடுந்தகையாய் நின்னையே யாம்.** 191

ஒருவரானும் அளவிட்டு உரைத்தற்கரிய தன்மையினை உடையாய்! அத்தகைய நின்னை, யாம் நிலமகளை நின் திருவடியிலே அடக்கியருளினை எனவும், உலகத்தார் உய்யும் பொருட்டாக உருவத் திருமேனியைத் தோற்றுவித்தருளினை எனவும், வெவ்விதான கொல்லும் வலியினாற் சிறந்த சக்கரப்படையாய் எனவும், பாம்பணையினைக் கொண்டாய் எனவும் சொல்லி வாழ்த்துவோம்!

இது திருமாலை வாழ்த்தியது. வையமகளை அடிப்படுத்தாயென்றது, திருமாலின் உலகளந்த செயலினை, உருவம் வெளிப்படுத்தாய் என்றது. மேற்கொண்ட திருவவதாரங்களை இதுபோல, அயன் அரன் ஆகியோரை வாழ்த்துவனவும் வருமிடங்களும் காண்க.

## 3. பூவை நிலை

*கறவை காவலன் நிறனொடு பொரீஇப்*
*புறவலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று.*

ஆனிரையைக் காத்தவனான மாயவனின் நிறத்தோடு உவமித்துக், காட்டிடத்தே மலர்கின்ற காயாம் பூவைப் புகழ்ந்தது, பூவை நிலை ஆகும்.

பூவை-காயாம்பூ, அதனைப் புகழ்தலால் 'பூவைநிலை' ஆயிற்று.

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்' என, இத்துறையினை வெட்சிப் புறனடையுள் கூறுவர் தொல்காப்பியர்-(புறத். சூ. 5)

**பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்**
**யாவை விழுமிய யாமுணரேம்-மேவார்**
**மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை**
**நிறத்தொடு நேர்தருத லான்.** 192

*அழகிய வீரக்கழலினை உடையோய்! பகைவரது மாறுபாட்டுடனே வஞ்சமல்லரது மாறுபாட்டையும் வென்ற இளமைப் பருவமுடைய மாயவனது, திருமேனியின் நிறத்தினோடே உவமை கொள்ளுதலான், காயா மலரும் செவ்விப் பூவைப் போல, எப்பொருள்தாம் சீரியவை? யாம் அறிகின்றிலமே!*

*இது, திருமாலோடு அரசனை ஒப்பிட்டுக் கூறியது. இவ்வாறு பிற கடவுளரோடு ஒப்பிடினும், இந்தத் துறையே யாகும்.*

## 4. பரிசில் துறை

***மண்ணகங் காவன் மன்னன் முன்னர்***
***எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று.***

*பூமியிடத்தைக் காக்கும் தொழிலையுடைய மன்னனின் முன்னே, கருதிவந்த பரிசில் இதுவெனப் பரிசிலன் உரைத்தது, பரிசில் துறையாகும்.*

*இதற்கும், பின்வரும் பரிசில் நிலைக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்தல் வேண்டும்.*

**வரிசை கருதாது வான்போல் தடக்கைக்**
**குரிசில்நீ நல்கயாம் கொள்ளும்-பரிசில்**
**அடுகளம் ஆர்ப்ப அமரோட்டத் தந்த**
**படுகளி நால்வாய்ப் பகடு.** 193

*மழையினைப் போல வழங்கும் பெரிய கையினை உடையாய்! தலைவனே! எங்கள் தரத்தினை நினையாதே நீ வழங்க, யாம் நின்பாற் பெற்றுக்கொள்ளும் பரிசில், கொல்லும் போர்க்களத்திலே ஆரவாரிக்கும்படியாகப் போரினை நிகழ்த்திப் பகைவரை ஓட்டிவிட்டுக் கைக்கொண்டு வந்த, உண்டான மதக்களிப்பினையும் நான்ற வாயினையும் உடைய, யானையேயாம்!*

*'யானை, யாம் கொள்ளும் பரிசில்' என்றது இது.*

## 5. இயன்மொழி வாழ்த்து-1

***இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்***
***அன்னோர் போல அவையெமக் கீகென***
***என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று.***

'இன்னின்னார் இன்னின்னவைகளை எமக்குக் கொடுத்தார்கள்; நீயும் அத் தன்மையார்போல அத்தகைய பொருளை எமக்குத் தருவாயாக' என்று, எத்தன்மையோரும் அறிய உயர்த்துச் சொல்லியது, இயன்மொழி ஆகும்.

'அடுத்தூர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்து' என்பர் தொல்காப்பியர்-(புறத். சூ. 35) 'தலைவன் எதிர்சென்று ஏறி, அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே ஏற்றிப் புகழ்ந்த இயன்மொழி வாழ்த்து' எனப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

**முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்**
**எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்-தொல்லை**
**இரவாமல் ஈத்த இறைவன்போல் நீயும்**
**கரவாமல் ஈகை கடன்.** 194

முல்லைக்குப் பொற்றேரினையும், மயிலுக்கு அழகிய நீலப் போர்வையினையும், எல்லை கடலாகவுடைய உலகத்தே தம் புகழ் விளங்குமாறு, முற்காலத்தே, அவை இரவாத போதும் கொடுத்த வள்ளல்களைப் போல, நீயும் கரவு ஏதுமின்றிக் கொடுத்தலே நினக்குக் கடமையாகும்.

'இறைவர்' என்றது பாரி, பேகன் என்பாரை.

## 6. இயன்மொழி வாழ்த்து-2

***மயலறு கீர்த்தி மான்றேர் மன்னவன்***
***இயல்பே மொழியினும் அத்துறை யாகும்.***

மயக்கமற்ற மிக்க புகழினையும், குதிரையாற் பூட்டப்பெற்ற தேரினையும் உடைய மன்னவனது இயல்பினையே எடுத்துச்சொன்னாலும், இயன்மொழி வாழ்த்துத் துறையாகும்.

மான்-குதிரை. மான்தேர்- குதிரை பூட்டிய பொற்றேர்.

**ஒள்வாள் அமருள் உயிரோம்பான் தானீயக்**
**கொள்வார் நடுவண் கொடையோம்பான்-வெள்வாள்**
**கழியாமே மன்னர் கதங்காற்றும் வேலான்**
**ஒழியாமே ஓம்பும் உலகு.** 195

தெளிந்த வாளினை உறையினின்றும் வாங்காமலேயே பகைமன்னரது சினத்தினைக் கைவிடச் செய்யும் வேலினை உடையவன் இம் மன்னன். இவன், ஒள்ளிய வாட்போரினிடத்தே உயிரைப் பாதுகாப்பது இவன். தான் கொடுக்கக் கொள்வாரான இரவலரின் நடுவிலே கொடுத்தலைக் கைவிடான்! மேலும், இவ்வுலகினை அறநெறி தப்பாமே காத்தலையும் செய்வான்!

'கொடை ஓம்பான்' என்றது, கொடுத்தலை வேறு எதனைக் கருதியும் கைவிடுதல் இலன் என்பதாம். கதம்-சினம்; காற்றும்-காலச்செய்யும்; கைவிடச் செய்யும். வேலான்-வெற்றிவேலினை உடையான்.

## 7. கண்படை நிலை

*நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்*
*கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று.*

நெடிய தேர்களான் மிக்க பகைப்படை பொடிபடுமாறு செல்லுகின்ற, கடுந் தேரினையுடையவனான மன்னவனது துயிலினை மிகுத்தது. கண்படை நிலை ஆகும்.

வாகைத் திணைக்கண் வருகின்ற கண்படை நிலையினையும் இதனோடு ஒப்பிட்டுக் காண்க. (வெண்பா 183) இதனைக் 'கண்படை கண்ணிய கண்படை நிலை' என்பர் தொல்காப்பியர் (புறத். சூ. 35) 'கண்படை கண்ணிய என்றார். கண்படைதற்கு. அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியபழி மருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவர்க்குக் கண் துயில் கோடலைக் கருதிக் கூறியது இது.' இங்ஙனம் இதனை விளக்குவர் நச்சினார்க்கினியர்.

**மேலார் இறையமருள் மின்னார் சினஞ்சொரியும்**
**வேலாண் விறல்முனை வென்றடக்கிக் - கோலாற்**
**கொடிய உலகிற் குறுகாமை எங்கோன்**
**கடியத் துயிலேற்ற கண். 196**

எம்முடைய அரசன், வீரர்கள் தங்கிய போரிடத்து, ஒளிநிறைந்து சினத்தைச் சொரிகின்ற வேலினாலே, வலிய பூசலினை வென்று அடக்கியும், செங்கோன்மையால் கொடியவை ஏதும் உலகில் எய்தாதபடி நீக்கிக் காத்தும் செயலாற்றியமை யானே, இப்போது அவன் கண்களும் துயிலினை மேவிய வாயின.

அவை இரண்டும் நிறைவேறாவழி அவன் கண்ணும் உறங்காது என்பதும் இது. மேலார்-வீரர். இறைத்தல்-தங்குதல்.

## 8. துயிலெடை நிலை

*அடுதிறல் மன்னரை அருளிய எழுகெனத்*
*தொடுகழல் மன்னனைத் துயிலெடுப் பின்று.*

கட்டுங் கழலினையுடைய தம் வேந்தனை, 'கொல்லும் வலியுடைய பிற வேந்தர்க்கு அருள்செய்யும் பொருட்டாக எழுக' என்று கூறித், துயில் நீங்கியது, துயிலெடை நிலை ஆகும்.

'தாவில் கிடந்தோர்க்கு நல்லிசை கருதிய சூதர் ஏத்திய துயிலெடை நிலை' என்பது தொல்காப்பியம்-(புறத். சூ. 36) 'தமது வலியான' மனக்கவற்சி இல்லாமற்படிக்குத் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயில் எடுப்பான் ஏத்தின துயிலெடை நிலை' என்பது நச்சினார்க்கினியரது விளக்கம். இவற்றையும் இங்குக் கருதல் வேண்டும்.

**அளந்த திறையார் அகலிடத்து மன்னர்**
**வளந்தரும் வேலோய் வணங்கக்-களந்தயங்கப்**
**பூம்மலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்**
**தூமலர்க்கண் ஏற்க துயில்.** 197

வெற்றி தருகின்ற வேலினை உடையாய்! அகன்ற உலகிடத்துப் பிற மன்னரெல்லாம் நினக்கு இட்ட திறையினை உடையராய் வந்து வணங்கும் பொருட்டாக, இடம் விளங்கப் பொலிந்த மலர்களின் மேலே பறவையினம் ஆரவாரிக்கம் பொய்கையிற் சூழ்ந்த தாமரையின் தூய மலரினைப் போன்ற நின் கண்கள் துயிலெழுவனவாக!

ஏற்க- எழுக. எழுக துயிலெனவும் பாடம். 'பூமலர் மேற் புள்ளொலிக்கும்' என்றது, பாசறையிடத்துப் பிறரது ஆரவாரத்தை.

## 9. மங்கல நிலை-1

***கங்குற் கனைதுயில் எழுந்தோன் முன்னர்***
***மங்கலங் கூறிய மலிவுரைத் தன்று.***

கங்குலிடத்தே கொண்டிருந்த மிக்க துயிலினை நீத்து எழுந்தோனான மன்னனின் முன்னே, மங்கலத்தைக் கூறிய மிகுதியைச் சொல்லியது, மங்கல நிலை ஆகும்.

**விண்வேண்டின் வேறாதன் மங்கலம் வேந்தர்க்கு**
**மண்வேண்டின் கைகூப்பல் மங்கலம்-பெண்வேண்டின்**
**துன்னன் மடவார்க்கு மங்கலம் தோலாப்போர்**
**மன்னன் வரைபுரையும் மார்பு.** 198

பிற மன்னர்கள் சுவர்க்கத்தை அடைதற்கு விரும்பினராயின், எம் மன்னனுக்கு மாறுபடுதல் அவர்க்கு ஆக்கமாம்; அன்றி அவர் மண்ணாள விரும்பினராயின், எம் அரசனுக்குக் கைகூப்பிப் பணிதல் ஆக்கமாம்; பெண்மைத் தன்மையை விரும்பினால், மடவார்க்குத் தோல்வியறியாத போராற்றலுடைய எம் மன்னனது மலையொத்த மார்பினை அணைகின்ற அது ஆக்கமாம்!

அவன் ஆண்மையிற் சிறந்தோன் என்பவர், 'பெண் வேண்டின், தோலாப்போர் மன்னன் வரைபுரையும் மார்பு துன்னல் மங்கலம்' என்றனர். துன்னல்-நெருங்கி அணைதல்.

## 10. மங்கல நிலை-2

*மன்னிய சிறப்பின் மங்கல மரபில்*
*துன்னினன் என்றலும் அத்துறை யாகும்.*

*'நின்று நிலைபெற்ற சிறப்பினையுடைய மங்கலமானவற்றை எம் மன்னன் முறைமையினாலே மேவினான்' என்று கூறுதலும். மங்கலநிலையே ஆகும்.*

**தீண்டியுங் கண்டும் பயிற்றியும் தன்செவியால்**
**வேண்டியும் கங்குல் விடியலும்-ஈண்டிய**
**மங்கல மாய நுகர்ந்தான் மறமன்னர்**
**வெங்களத்து வேலுயர்த்த மன்.** 199

*மறமாண்பினை உடைய பகைமன்னரது வெவ்விய போர்க் களத்தினிடத்தே, அவரை வென்று, தன் வேலினை உயர்த்து நின்ற எம் மன்னன், இரவு புலர்ந்ததாகத், தீண்டக் கடவன தீண்டியும், காணக் கடவன கண்டும், சொல்லக் கடவன சொல்லியும், தன் செவியாற் கேட்கக் கடவன கேட்டும். மங்கலமானவற்றை நுகர்ந்தான்.*

*அரசன், பொழுது புலர்ந்ததும், முதற்கண், மங்கல மானவற்றை முறைமையொடுங் கூடி நுகர்ந்தான் என்பது இது.*

## 11. விளக்கு நிலை-1

*அளப்பருங் கடற்றானையான்*
*விளக்குநிலை விரித்துரைத்தன்று.*

*அளத்தற்கு அரிய கடலினைப் போன்று பரந்த தானையினை உடைய மன்னனின், திருவிளக்கு நிலையினை விரித்துச் சொல்லியது, விளக்கு நிலை ஆகும்.*

*'வேலின் ஒக்கிய விளக்கு நிலையும்' என இதனைத் தொல்காப்பியம் கூறும்-(புறத். சூ. 35). மேலும் வேற்றலையும் விலங்காது ஓங்கியவாறு போலக், கோலொடு விளக்கம் ஒன்றுபட்டு ஓங்குவித்த நிலை இது. கார்த்திகை தீபத்தைப் போலக், கீழும் மேலும் வலமும் இடமும் திரிபரந்து சுடர் ஓங்கிக் கொழுந்துவிட்டு எழுந்ததென்று, அறிவோர் ஆக்கம்பற்றிக் கூறப்படும் விளக்கமும் இது. அன்றி, நித்தலும் இடுகின்ற நிலைவிளக்கு எனவும் கருதலாம்.*

**வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி**
**ஒளிசிறந் தோங்கி வரலால்-அளிசிறந்து**
**நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு**
**வென்னெறியே காட்டும் விளக்கு.** 200

*அளித்தற் பண்பிலே சிறந்து, நன்னெறியினையே உலகிற்குக் காட்டவல்ல நலத்தினை ஆராயும் செங்கோன்மை உடையானுக்குக் காற்று எறிந்த விடத்தும், வலமாகச் சுழன்று எழுந்து ஒளிமிகுந்து உயர்ந்து வருவதனால், விளக்கும் வெல்லும் முறைமையினையே காட்டா நிற்கும்.*

*காற்றெறிந்த போதும் அதனால் அவிந்துவிடாது, வலஞ்சுழன்று, பொங்கி ஒளிசிறந்து ஓங்கி வரும் விளக்கைப் போலவே, மன்னனும் பகை வருமிடத்து வெற்றிவீரனாகிச் சிறப்புப் பெறுவான் என்பது கருத்து.*

## 12. விளக்கு நிலை-2

*அடரவிர் பைம்பூண் வேந்தன் தன்னைச்*
*சுடரொடு பொருவினும் அத்துறை யாகும்.*

*பொற்றகட்டாற் சிறந்து விளங்கும் பூணினையுடைய மன்னனை, ஞாயிற்று மண்டிலத்தோடு உவமிப்பினும், முற்கூறிய விளக்குநிலைத் துறையே யாகும்.*

*அடர்-தகடு. சுடர்-ஞாயிறு.*

**வெய்யோன் கதிர்விரிய விண்மேல் ஒளியெல்லாம்**
**மையாந் தொடுங்கி மறைந்தாங்கு-வையகத்துக்**
**கூத்தவை யேத்துங் கொடித்தேரான் கூடியபின்**
**வேத்தவையுள் மையாக்கும் வேந்து. 201**

*உலகிடத்துள்ள கூத்தரது திரளெல்லாம் புகழுகின்ற கொடித் தேரினை உடையான் இவ்வேந்தன். அவன், அரசர்கள் கூடியிருக்கும் அவையினிடத்தே வந்தணைந்த பின்பு, கதிரவனின் ஒளிக்கதிர்கள் பரவா நிற்ப, விண்ணிடத்து ஒளி கொண்டனவான பிறவெல்லாம் புற்கென்று ஒடுங்கி மறைந்து போயினாற்போலப், பிறவேந்தர்கள் எல்லாரும் ஒளிகுன்றிப் போவர்.*

*வேந்தனைப் பேரொளி விளக்கான கதிராகவும், பிறரைச் சிற்றொளி விளக்குகளாகவும், உவமித்த, விளக்கு நிலை இது.*

## 13. கபிலை கண்ணிய புண்ணிய நிலை

*அண்ணல் நான்மறை அந்த ணாளர்க்குக்*
*கண்ணிய கபிலை நிலையுரைத் தன்று.*

*தலைமையிற் சிறந்த நான்மறைகளையும் கேட்டறிந்த அந்தணாளர்களுக்குக், கொடுக்கக் கருதிய பசுவினது தன்மையைக் கூறியது, கபிலை கண்ணிய புண்ணிய நிலை ஆகும்.*

*'கபிலை கண்ணிய வேள்வி நிலை' என்பர் தொல்காப்பியர். (புறத்.சூ. 35). இது வரையா ஈகையுட் படுவதன்று; அரசன்*

*இன்னலுற்றல், கொடுக்கவென உயர்ந்தோர் கூறும் காலையிலே கொடுப்பதாம். அதனால், வேறுபடுத்துத் தனியாகக் கூறினார்.*

**பருக்காழும் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்**
**குருக்கண் கபிலை கொடுத்தான்-செருக்கோடு**
**இடிமுரசத் தானை இகலிரிய எங்கோன்**
**கடிமுரசம் காலைச் செய.** 202

*எம் கோமானான மன்னன், களிப்போடு இடிபோல முழங்கும் முரசினையுடைய மாற்றாரது சேனை மாறுபாடு கெடும்படியாகக், காவன் முரசம் நாட்காலையிலே முழங்கப், பருத்த மணிகளையும் செம்பொன்னையும் பார்ப்பார் தாமே முகந்து கொள்ளா நிற்ப, மேலும், அவருக்கு நிறம்கொண்ட கண்களையுடைய பசுக்களையும் தானமாகக் கொடுத்தான்.*

## 14. வேள்வி நிலை

***அந்தமில் புகழான் அமரரும் மகிழச்***
***செந்தீ வேட்ட சிறப்புரைத் தன்று.***

*முடிவில்லாத புகழினையுடைய மன்னன், தேவர்களும் மகிழும்படியாகச் செந்தீ வேட்டுச் செய்த சிறப்பினை உரைத்தது, வேள்வி நிலை ஆகும்.*

**கேள்வி மறையோர் கிளைமகிழ்தல் என்வியப்பாம்**
**வேள்வி விறல்வேந்தன் தான்வேட்ப-நீள்விசும்பின்**
**ஈர்ந்தார் இமையோரும் எய்தி அழல்வாயால்**
**ஆர்ந்தார் முறையால் அவி.** 203

*வேள்வி இயற்றலை வெற்றிவேந்தன் செய்யா நிற்ப, நெடிய விசும்பிடத்தவரான ஈரத்தாற் சிறந்த மாலையினையுடைய இமையவர்கள் வந்தடைந்து, அழலாகிய வாயாலே இட்ட அவியினை அருந்தினார்கள். அங்ஙனமாகக், கேள்வியினை யுடைய மறையவர்களது சுற்றம் மகிழ்தல் என்ன வியப்பு ஆகும்?*

*அவரும் வேள்விக் காலத்தே ஏராளமான கொடைப் பொருளைப் பெற்றனர் என்பது கருத்து.*

## 15. வெள்ளி நிலை

***துயர்தீரப் புயல்தருமென***
***உயர்வெள்ளி நிலையுரைத்தன்று.***

*உயர்ந்த வெள்ளி என்னும் கோளானது, உலகத்தின் துயர் தீருமாறு மழையினைத் தரும் என்று சொல்லி, அதனது சிறந்த தன்மையைக் கூறியது, வெள்ளி நிலை ஆகும்.*

**சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்**
**தாழ்புயல் வெள்ளந் தருமரோ-சூழ்புரவித்**
**தேர்விற்றார் தாங்கித் திகழ்ந்திலங்கு வேலோய்நின்**
**மார்பிற்றார் கோலி மழை.** 204

*தெரிந்த குதிரைகளாற் பூட்டப்பெற்ற தேரின்மேல் வில்லையுடைய பகைவரது தூசிப் படையைத் தடுத்து, வெற்றியான் மிக்கவிளங்கும் வேலினை உடையோய்! ஞாயிறு முதலாயின இயங்கும் வானத்தை விளங்கப் பண்ணா நிற்கும் வெள்ளியானது, தனது சுடரினைப் பரப்பியதாக, அதனாற் கால்வீழ்த்த மேகம், நின் மார்பிடத்து மாலை போன்று நீர்த் தாரை கோலி, மழை வெள்ளத்தைத் தரும்.*

*'வெள்ளி சுடர்விரியத் தாழ்புயல் வெள்ளந் தருவது நின்னுடைய காவல் சிறப்பினாலேயே' எனப் பாடியது இது.*

## 16. நாடு வாழ்த்து

*தாட்டாழ் தடக்கையான்*
*நாட்டது வளமுரைத்தன்று.*

*முழந்தாளின் கீழேயும் நீண்டு தாழ்ந்திருக்கும், பெரிய கையினையுடைய மன்னனின் நாட்டது வளத்தினை உரைத்தது, நாடு வாழ்த்து ஆகும்.*

*'தாட்டாழ் தடக்கை' உறுப்பிலக்கணத்துட் சிறந்தோனது அமைதி.*

**எண்ணின் இடரெட்டும் இன்றி வயற்செந்நெற்**
**கண்ணின் மலரக் கருநீலம்-விண்ணின்**
**வகைத்தாய் வளனொடு வைகின்று வென்வேல்**
**நகைத்தாரான் தான்விரும்பு நாடு.** 205

*வெற்றி வேலினையும் மலர்ந்த மாலையினையும் உடையான் தான் விரும்பாநின்ற இந் நாடானது, எண்ணுமிடத்து, எட்டு இடர்களும் இல்லாமல், வயல்களிலுள்ள செந்நெற் பயிரினூடே நீலோற்பலம் கண்ணைப்போல மலராநிற்பத், தேவலோகத்தினது தன்மைத் தாய், வளனொடு தங்கா நின்றது!*

*பயிருக்கு வந்துறும் எட்டு இடர்கள், விட்டில், கிளி, நால்வாய், வேற்றரசு, தன்னரசு, நட்டம், பெரும் பெயல் காற்று ஆகியன காரணமாக வருவன. இவை இன்றி வளனொடு விளங்குவது, அரசனின் காவலது சால்பினாலே என்பது கருத்து.*

## 17. கிணை நிலை

*திருக் கிளரும் அகன் கோயில்*
*அரிக் கிணைவன் வளமுரைத்தன்று.*

*செல்வம் பெருகும் அகன்ற அரண்மனையிடத்தே, அழகிய கிணைகொட்டும் அவனது நன்மையைச் சொல்லியது, கிணை நிலை ஆகும்.*

*வாகைக் கிணைநிலை (வெண்பா-186) வயலுழவனைக் குறிப்பது; இது, அரசனைக் குறித்தது.*

**வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை**
**அள்ளகட் டன்ன அரிக்கிணை-வள்ளியோன்**
**முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்னாமுன்**
**என்கடை நீங்கிற் றிடர்.** 206

*வள்ளன்மை உடையாளின் வாயிலின் முன்னாக, வெள்ளி எழுந்த விடியல் வேளையிலே சென்று நின்று, வயலாமையது செறிந்த வயிற்றினையொத்த அழகிய கிணையினைத் தட்டி, 'நின் யானை வாழ்க' என்று சொல்லுவதன் முன்பாகவே, வறுமைத் துயரம் என்னிடத்தே நின்றும் நீங்கிற்று.*

*அள் அகடு-செறிந்த வயிறு. 'வருவோனது குறிப்பறிந்து அவன் இரந்து கேட்பதன் முன்னாகவே வழங்குபவன் மன்னன்' என்பதும் தோன்ற வைத்தனர். கிணைநிலை-கிணை கொட்டுமவனது நிலைமை.*

## 18. களவழி வாழ்த்து

*செங்களத்துச் செழுஞ்செல்வம்*
*வெண்டுறையாழ்ப் பாணர்விளம்பின்று.*

*வெண்டுறைப் பாட்டிலே வல்ல, யாழிசைக்கும் பாணர், சிவந்த போர்க்களத்திடத்தே ஒரு மன்னன் பெற்ற வளவிய செல்வத்தைச் சொல்லிப் பாடியது. களவழி வாழ்த்து ஆகும். வெண்டுறை-இசைப்பா வகையுள் ஒன்று.*

**ஈண்டி எருவை இறகுளரும் வெங்களத்து**
**வேண்டியாம் கொண்ட விறல்வேழம்-வேண்டாள்**
**வளைகள் வயிரியம்பும் வாள்தானை வேந்தே**
**விளைகள் பகர்வாள் விலை.** 207

*சங்குகளும் கொம்புகளும் முழங்கா நின்ற, வாள் வீரரைக் கொண்ட தானையினையுடைய வேந்தே! முதிர்ந்த கள்ளினை விற்குமவள், அதற்கு விலையாக, பருந்துகள் திரண்டிருந்து தம் இறகுகளைக் கோதாநின்ற வெவ்விய போர்க்களத்தே, விரும்பி யாம் நின்னிடம் பெற்றுக்கொண்ட, வெற்றிவாரணத்தினை விரும்பாள்!*

அவள் விரும்பாளாயது, கள்ளிற்கு விலையாகக் களிறுகளைத் தந்தோர் முன்னும் பலராக இருந்ததனால், இதனால், களத்தே கைப்பற்றிய செல்வமிகுதியும் விளங்கும்.

## 19. வீற்றினிதிருந்த பெருமங்கலம்

*கூற்றிருந்த கொலைவேலான்*
*வீற்றிருந்த விறல்மிகுத் தன்று.*

கூற்றுவன் குடியிருந்ததனை ஒத்த கொலைவேலினை உடையோனான தம் வேந்தன், செம்மாப்புடன் வீற்றிருந்த அந்த வெற்றிச் செவ்வியைச் சிறப்பித்தது, வீற்றினிதிருந்த பெருமங்கலம் ஆகும்.

**அழலவிர் பைங்கண் அரிமான் அமளி**
**நிழலவிர்பூண் மன்னர்நின் றேத்தக்-கழல்புனைந்து**
**வீமலிதார் மன்னவனாய் வீற்றிருந்தான் வீங்கொலிநீர்ப்**
**பூமலி நாவற் பொழிற்கு.** 208

முழங்கும், ஆரவாரத்தான் மிகுந்த கடலாற் சூழப்பட்டிருக்கும், இந்தப் பொலிவுநிறைந்த நாவலம் பொழில் என்னும் பூமி முழுமைக்கும், வீரக்கழலினைக் கட்டியவனும் மலர்மிக்க மாலையணிந்தவனுமாகிய மன்னவனாகித் தழல் ஒளிரும் பசுங்கண்ணினாற்சிறந்த சிங்கஞ்சுமந்த அணையின் மேலே, நிழலிலங்கும் பூணணிந்த மன்னவர் பலரும் நின்று தன்னை வாழ்த்த, எம் வேந்தன் செம்மாந் திருந்தான்.

தங்கள் மன்னன் பகையொழித்த வெற்றியாளனாகச் செம்மாந்து வீற்றிருந்த சிறப்பினைக் கூறி வாழ்த்தியது இது. 'வீற்றிருந்த நிலையே' இங்கு வாழ்த்துக்கு உரியதாதலைக் கவனிக்க வேண்டும்.

## 20. குடுமி களைந்த புகழ்சாற்று நிலை

*நெடுமதில் எறிந்து நிரைதார் மன்னன்*
*குடுமி களைந்த மலிவுரைத் தன்று.*

நிரைத்த மாலையினையுடைய வேந்தன், பகையரசரது நீண்ட அரணினை அழித்து, அவரது குடுமியைக் களைந்த மிகுதியைச் சொல்லியது, குடுமி களைந்த புகழ்சாற்று நிலை ஆகும்.

பகைவரது குடுமியைக் களைதல், அவரது செருக்கினை ஒழித்தற்கு; சிகையைக் களைதல் எனவும், மணிமுடியை அகற்றுதல் எனவும் இதனைக் கொள்வர். 'குடுமிகளைந்த என்பதற்கு, மயிர்ச் சிகையைக் கூட்டி முடித்தல்' எனப் பழைய உரையாசிரியர் உரைப்பர்.

'மன்னெயில் அழித்த மண்ணுமங்கலமும்' (புறத். சூ. 36)

*என்பதன் உரையில், 'குடுமிகொண்ட மண்ணுமங்கலம் எயிலழித்தல் கூறாமையின் இதனின் வேறாயிற்று' என நச்சினார்க்கினியர் உரைப்பதனையும் இங்கு நினைக்க.*

**பூந்தா மரையிற் பொடித்துப் புகல்விசும்பின்**
**வேந்தனை வென்றான் விறல்முருகன்-ஏந்தும்**
**நெடுமதில் கொண்டு நிலமிசையோர் ஏத்தக்**
**குடுமி களைந்தான்எங் கோ.** 209

*வெற்றியினையுடைய குமரவேள், சரவணப் பொய்கையில், பொலிவினையுடைய தாமரைப் பூவிலே தோன்றினான். வெற்றியாற் சிறந்த வானகவேந்தனை, அந்நாளிலேயே அவன் வென்றான். எங்கோமானாகிய இவனே, அழகேந்தும் உயரிய பகைவரது அரணைக் கைப்பற்றி, அதன் பின்னரே, உலகோர் வாழ்த்தத் தன் குடுமியைக் களைந்தான்.*

*'குடுமி களைந்தான்' என்பதற்கு, வெண்பாவின் அமைதி, குடுமி களைதல் ஆகிய சடங்கு நிகழ்தற்கு முற்பட்ட சிறு பருவத்தேயே பகைவரை வென்று, அவர் அரணினைக் கொண்டான் என்ற பொருளையே தரும்.*

## 21. மணமங்கலம்

***இகலடு தோள் எறிவேல் மன்னன்***
***மகளிரொடு மணந்த மங்கலம் கூறியது.***

*பகையைக் கொல்லும் தோளாற்றலையும், எறிதற்குரிய வெற்றி வேலினையும் கைக்கொண்ட மன்னன், மகளிரொடு மணம்புணர்ந்த, அந்த நன்மையைச் சொல்லியது, மணமங்கலம் ஆகும்.*

**அணக்கருந் தானையான் அல்லியந்தார் தோயந்தோள்**
**மணக்கோல மங்கலம்யாம் பாட-வணக்கருஞ்சீர்**
**ஆரெயின் மன்னன் மடமகள் அம்பணைத்தோள்**
**கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி.** 210

*பிறரானே வணக்குதற்கு அரிய மதிப்பினையும், கைக்கொள்ளற்கு அரிய அரணிடத்தையும் உடைய மன்னனது மடமகள், அழகிய மூங்கிலைப் போன்ற தோள்களையும், கூரிய பற்களையும், சிவந்த வாயிதழ்களையும் பெற்ற காமவல்லிக் கொடி போன்றவள். அவளே, யாம் திருமணக் கோலத்தினைப் போற்றிப் பாடப், பகைவரான் வருத்துதற்கரிய தானையினையுடைய எம் மன்னனின் அழகிய அல்லிமலர் மாலையினைத் தழுவியவள் ஆவாள்.*

## 22. பொலிவு மங்கலம்

*வேல் வேந்தன் உள் மகிழப்*
*பாலன் பிறப்பப் பலர்புகழ்ந் தன்று.*

*வேலினை யுடைய மன்னவன் மனமகிழ்ச்சி கொள்ள, அவனுக்குப் புதல்வன் பிறந்தானாக, அதனைப் பலரும் புகழ்ந்து கொண்டாடியது, பொலிவு மங்கலம் ஆகும்.*

**கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்**
**பெருங்கண் புதல்வன் பிறப்பப்-பெரும்பெயர்**
**விண்ணார் மகிழ்ந்தார் வியலிடத்தார் ஏத்தினார்**
**எண்ணார் அவிந்தார் இகல்.** 211

*வலிய வீரக்கழலையும் வெள்ளிய கொற்றக் குடையினையும் உடைய எம் காவலனுக்குச், சிவந்த வாயினையும் பெருத்த கண்களையும் கொண்ட புதல்வன் பிறந்தான். பிறப்பவும், பெரும்புகழினை உடையவரான வானகத்தார் மகிழ்ந்தார்கள்; அகன்ற பூமியிடத்துள்ளோர் வாழ்த்தினார்கள்; பகைவர்கள் தம் மாறுபாடு அவிந்தனர்.*

*'எண்ணார் இகல் அவிந்தது', புதல்வனைப் பெற்றபின் வேந்தன் பகைவரைக் கடுமையாக அழிப்பதற்கு முற்படுவான் என்றதால், பாலன் பிறப்பதுதான் வாழ்க்கைக்குப் பொலிவுதருகிற சிறப்பாகும் என்பதைப் 'பொலிவு மங்கலம்' என்னும் துறைப்பெயர் விளக்குவதையும் காண்க.*

## 23. நாள் மங்கலம்

*அறந்தரு செங்கோல் அருள் வெய்யோன்*
*பிறந்த நாட் சிறப்புரைத் தன்று.*

*நாட்டிலே அறநெறியை உண்டாக்கும் செங்கோலினை உடையவனும், அருள் விருப்பினனுமாகிய மன்னனின், பிறந்த நாளது சிறப்பினை உரைத்தது, நாள் மங்கலம் ஆகும்.*

*'சிறந்த நாளணி செற்றம் நீக்கிப், பிறந்த நாள்வயிற் பெருமங்கலமும்' என, இதனைத் தொல்காப்பியர் கூறுவர்-(புறத். சூ. 36) 'நாடொறும் தான் மேற்கொள்ளுகின்ற செற்றங்களைக் கைவிட்டுச், சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியும்' என்பது. இதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் இதனைக் கருதுக.*

**கரும்பகடும் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்**
**விரும்பி மகிழ்தல் வியப்போ-சுரும்பிமிர்தார்**
**வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து**
**தம்மதில் தாம்திறப்பர் தாள்.** 212

*வண்டினம் ஆரவாரிக்கும் தாரினையும், வெவ்விய மாறுபாட்டினையுமுடைய வேந்தரும், இந்நாளில், நம் மன்னன் படையினை ஏவமாட்டான் என்று தெரிந்து, வெள்ளிய வளையணிந்தோரான மகளிரின் தோள்நலத்தைப் பெறுதலை விரும்பியவராகத் தம் அரணங்களின் கதவுத் தாள்களைத் தாமே நீக்குவார்கள். அங்ஙனமாக, வலிய யானையும் சிவந்த பொன்னும் பிறந்தநாளில் பரிசிலாகப் பெற்ற இரவலர் முதலாயினார், தாம் விருப்புற்று மகிழ்தல்தான் வியப்பாகுமோ?*

*வெள்ளணி நாளிலே, மன்னன் செருவொழிந்து செற்றம் தவிர்ந்திருக்கும் இயல்பினைக் கூறினார். பகைவரே அச்சம் நீங்கி இன்ப நாட்டத்திலே ஈடுபடும்போது, இரவலர் மகிழ்தல் ஒரு வியப்போ என்பது கருத்து.*

## 24. பரிசில் நிலை

***புரவலன் மகிழ்தூங்க***
***இரவலன் கடைக்கூடின்று.***

*வள்ளலாகிய மன்னவன், மகிழ்ச்சியினாலே அசைய, இரவலன், தன்னூர்க்குப் போவானாக ஒருப்பட்டது, பரிசில் நிலை ஆகும்.*

*'பரிசில் கடைஇய நிலையும்' என்ற தொல்காப்பிய விதியையும் (புறத். சூ. 36) அதற்கு நச்சினார்க்கினியர் உரைக்கும், 'பரிசிலரை நீக்குதல் அமையாது நெடிது கொண்டு ஒழுகிய தலைவனுக்குப், பரிசில் வேட்டோன், தன் கடும்பினது இடும்பை முதலியன கூறித், தான் குறித்த பொருண்மையினைச் செலுத்திக் கடாவின நிலையும்' என்ற பொருளையும் இதனுடன் கருதுக.*

**வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண்டேர்**
**நல்கிய பின்னும் நனிநீடப்-பல்போர்**
**விலங்கும் கடற்றானை வேற்றார் முனைபோலக்**
**கலங்கும் அளித்தென் கடும்பு.** 213

*பகையை வெல்லும் குதிரைகள் பூட்டிய, விளங்கும் மணியினையுடைய திண்ணிய பொற்றேரினைப் பரிசிலாகக் கொடுத்த பின்பும், விடைதருதற்குக் காலந்தாழ்த்தலாவே, என்னுடைய சுற்றம், பலபோர்களையும் விலக்கும் கடல் போன்ற தானையினையுடைய பகைவரது நாட்டினைப்போலக் கலங்கா நிற்கும்; ஆதலால், அஃது அளிக்கத்தக்கது, பெருமானே!*

*'சுற்றம் அருளுதற்கு உரியது' என்றதனால், விடைநல்க வேண்டியதுமாயிற்று. கடும்பு-சுற்றம்.*

## 25. பரிசில் விடை

*வேந்தனுள் மகிழ*
*வெல்புகழ் அறைந்தோர்க்கு*
*ஈந்து பரிசில்*
*இன்புற விடுத்தன்று.*

வேந்தன், உள்ளம் மகிழும்படியாகத் தனது வெற்றிப் புகழினைச் சொல்லிவந்த பரிசிலர்களுக்குப், பரிசில்களைக் கொடுத்து, அவர் தம் சுற்றத்தோடும் சென்றடைந்து இன்புறுமாறு விடுத்தது, பரிசில் விடை ஆகும்.

'பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி, நடைவயிற்றோன்றும் இருவகை விடையும்' என்பர் தொல்காப்பியர்-(புறத். சூ. 36) இந்த விடை, தலைவன் தானே விடுத்தலும், பரிசிலன் தானே போகல் வேண்டும் எனக் கூறி விடுத்தலும் என இருவகையாம்.

**படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரும்**
**நடைநவின்ற பாய்மாவும் நல்கிக்-கடையிறந்து**
**முன்வந்த மன்னர் முடிவணங்குஞ் சேவடியாற்**
**பின்வந்தான் பேரருளி னான்.** 214

பெரிதான அருளினை உடையவனான வேந்தன், படையின் கண் பயின்ற களிறுகளையும், பண்ணுதல் அமைந்த பொற்றேரினையும், தாளத்திற்கொத்த நடைபொருந்திய பாயும் குதிரைகளையும் பலவாக வழங்கினான். அதனுடன், தன் வாயிலைக் கடந்து, முற்படவந்த மன்னர்களது முடிபணியும் சிவந்த தன் பாதத்தாலே நடந்தும், என் பின்னே வந்தான்.

'பின்வந்தான்' என்றது, அப்போதும் பரிசிலனைப் போகவிட இசையாத அவனது அருள்மிகுதியைக் கூறியதாம். 'முன்வந்த மன்னர் முடிவணங்கும்' என்றதனாற், பின்வந்த மன்னர்க்கு அது வாயாது போயினதும் கூறினார்.

## 26. ஆள்வினை வேள்வி

*வினை முற்றிய கனை கழலோன்*
*மனை வெள்வி மலிவுரைத் தன்று.*

தான் மேற்கொண்ட வினையினைச் செய்து முடித்த ஆரவாரிக்கும் கழலினை உடையோன், இல்லறம் நிகழ்த்திய நிறைவைச் சொல்லியது, ஆள்வினை வேள்வி ஆகும்.

ஆள்வினை-முயற்சி; அது வினைமுற்றியபின் இல்லறம் ஆற்றிய சிறப்பு. 'மனைவேள்வி' எனச் சிறப்பிக்கப் பெற்றது. இது ஐம்புலத்தாரையும் ஓம்புதலாகிய அறவேள்வியாதலின்.

**நின்ற புகழொடு நீடுவாழ் கிவ்வுலகில்**
**ஒன்ற உயிர்களிப்ப ஓம்பலால்-வென்றமருள்**
**வாள்வினை நீக்கி வருக விருந்தென்னும்**
**ஆள்வினை வேள்வி யவன்.** 215

போரிடத்தே எதிரிட்ட பகைவரை வென்று, தன்னுடைய வாள்வினையாகிய செயலினை முடித்த பின்னர், 'வருக விருந்தினர்' என்று சொல்லாநின்ற முயற்சியாற் செய்யும் வேள்வியினை உடையவனாயினான் எம் மன்னன். அவன், இவ்வுலகில், ஒருசேர எல்லா உயிர்களும் மகிழும்படியாகக் காத்துவருதலால், நிலைபெற்ற புகழினொடு கூடியவனாக நெடுங்காலம் வாழ்வானாக.

வாள்வினை ஆள்வினை என்ற இருவகை முயற்சிகளின் சிறப்பினையும் ஆய்ந்து அறிக. 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' ஆதலால், அதனை ஆற்றுதல் 'ஆள்வினை' என்று சிறப்பிக்கப்பட்டது.

## 27. பாணாற்றுப்படை

***சேணோங்கிய வரையதரிற்***
***பாணனை ஆற்றுப்படுத்தன்று.***

மிகவும் உயர்ந்த மலைவழியிடத்துப், பாணனை அவன் செல்லற்கான வழியிலே செலுத்தியது. பாணாற்றுப்படை ஆகும்.

பரிசில் நாடிச் செல்லுமவனைப், பெற்றுவரும் பாணன் ஒருவன் வழியிடைக் கண்டு, தனக்கு அளித்த வள்ளலிடத்தே செல்லுமாறு ஆற்றுப்படுத்தியது இதுவாகும். 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தையும் காண்க: (தொ. புறத். சூ. 36) அச் செய்யுள்களைக் கூத்தராற்றுப் படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படை என வழங்குதலும், ஆற்றின் அருமையும், அவனூர்ப் பண்பு முதலியனவும் கூறுதலும் அறிக.

**இன்றொடை நல்லிசை யாழ்ப்பாண எம்மைப்போற்**
**கன்றுடை வேழத்த கான்கடந்து-சென்றடையிற்**
**காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்**
**தாமரை சென்னி தரும்.** 216

இனிய கோவையினை யுடைய நல்லிசையான் மலிந்த, யாழ்வல்ல பாணனே! எம்மைப்போன்றே, கன்றுடை யானைகளைக் கொண்ட காட்டினைக் கடந்து சென்று நீயும் பொருந்தினால், அழகு மருவின சாயலினை உடையாளின்

கணவனான அவன், பொற்பூவினை, நின் சென்னியிற் சூடுமாறு நினக்குத் தருவான்.

இங்ஙனம் பொற்றாமரைப்பூச் சூட்டுதலை,

*அழல் புரிந்த அடர் தாமரை*
*ஐதடர்ந்த நூற் பெய்து*
*புனைவினைப் பொலிந்த பொலன்நறுந் தெரியல்*
*பாறுமயிர் இருந்தலை பொலியச் சூடிப்*
*பாண்முற் றுகநின் நாள்மகிழ் இருக்கை. (புறம். 29:1-5)*

*ஒன்னார் யானை ஓடைப்பொன் கொண்டு*
*பாணர் சென்னி பொலியத் தைஇ*
*வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர். (புறம். 126: 1-3)*

என வரும், சான்றோர்களது உரைகளானும் தெளிக.

## 28. கூத்தராற்றுப்படை

*ஏத்திச் சென்ற இரவலன்*
*கூத்தரை ஆற்றுப்படுத்தன்று.*

தலைவனைக் கண்டு போற்றிச் சென்ற இரவலன், வழியிடை எதிர்வரக்கண்ட கூத்தரை, அவன்பாற் செல்லுமாறு ஆற்றுப்படுத்தியது, கூத்தராற்றுப்படை ஆகும்.

**கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்**
**தலைவ தவிராது சேறி-சிலைகுலாம்**
**காரினை வென்ற கவிகையான் கைவளம்**
**வாரினைக் கொண்டு வரற்கு. 217**

கொலைவில்லைப் போன்ற புருவத்தையுடைய, வஞ்சிக் கொம்பு போன்றவரான விறலியர்களது, கூத்திற்குத் தலைவனே! இந்திரவில் வளைந்த மேகத்தினையும் வெற்றி கொண்ட, கொடைப் பண்பினை உடையானின், கைவழங்கும் செல்வத்தை வாரிக்கொண்டு வருதற்கு, நீயும் தவிராது அவன்பாற்சென்று சேர்வாயாக.

கூத்தரை இங்ஙனம் ஆற்றுப்படுத்தியதால், இது கூத்தராற்றுப்படை ஆயினமை அறிக.

## 29. பொருநராற்றுப்படை

*பெருநல்லான் உழையீராகெனப்*
*பொருநனை ஆற்றுப்படுத்தன்று.*

'பெரிய நன்மையினையுடைய அவ் வள்ளலின் பக்கத்தீர் ஆகுக' எனக், கிணைகொட்டுமவனை வழிப்படுத்தது, பொருநராற்றுப்படை ஆம்.

**தெருவில் அலமரும் தெண்கண் தடாரிப்**
**பொருவில் பொருநநீ செல்லின்-செருவில்**
**அடுந்தடக்கை நோன்றாள் அமர்வெய்யோன் ஈயும்**
**நெடுந்தடக்கை யானை நிரை.** 218

*தெருக்கள் தோறும் சுழன்று திரியும், தெளிந்த கண்ணால் மலிந்த தடாரிப் பறையினையுடைய ஒப்பற்ற பாணனே! பூசலிடத்துப் பகைவரைக் கொல்லும் பெரிய கையினையும், வலிய தாளினையுமுடைய, போரினை விரும்புவோனான தலைவன், நீ அவன்பாற் செல்வையானால், உயர்ந்த பெரிய கையினையுடைய களிற்றின் நிரையையே, நினக்குப் பரிசிலாக வழங்குவான்.*

*இத் துறைக்கு நல்ல உதாரணமாக விளங்குவது, 'சிலைபுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பின்' என்னும் புறப்பாட்டு ஆகும்-(புறம். 394)*

## 30. விறலியாற்றுப்படை

***திறல்வேந்தன் புகழ்பாடும்***
***விறலியை ஆற்றுப்படுத்தன்று.***

*வெற்றியை யுடைய மன்னனது புகழினைப் பாடுகின்ற விறலியை வழிப்படுத்தது, விறலியாற்றுப்படை ஆகும்.*

**சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்**
**பல்புகழ் பாடிப் படர்தியேல்-நல்லவையோர்**
**ஏத்த இழையணிந் தின்னே வருதியாற்**
**பூத்த கொடிபோற் பொலிந்து.** 219

*சில வளைகளானே சிறந்த கையினையும், சிவந்த வாயினையும் உடையவளான விறலியே! போரிடத்துச் சிறந்த படையினை உடையான்கண், அவனுடைய பலவாகிய புகழ்களையும் பாடிச் சென்றனையானால், நல்ல அவையிடத்தே உள்ளவர்கள் புகழ, ஆபரணத்தைப் பூண்டு, மலர்ந்த பூங்கொடிபோலப் பொலிவுற்று, இப்பொழுதே நீயும் திரும்பி வருவாய்!*

*'அணிபல தருவான்' என விறலியை ஊக்கி வழிப்படுத்தியது இது. 'விறல்பட ஆடுவாளை' 'விறலி' என்பர் சான்றோர்.*

## 31. வாயுறை வாழ்த்து

***பிற்பயக்கும் எம்சொல்லென***
***முற்படர்ந்த மொழிமிகுத்தன்று.***

*'எம் சொல் பின்னே பலிக்கும்' என்று சொல்லி, மேம்பட்ட தம் மொழியினை மிகுத்துச் சொல்லியது, வாயுறை வாழ்த்து ஆகும்.*

*'வாயுறை வாழ்த்து வயங்க நாடின், வேம்புங் கடுவும் போல வெஞ்சொல், தாங்குதலின்றி வழிநனி பயக்குமென்று, ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தன்றே-(தொல். செய்யுளியல். சூ. 112) எனத் தொல்காப்பியரால் விளக்கப்படும். வாயுறை-சொல் மருந்து. இதற்கு ஒரு தலைவன் வேண்டான் ஆயினும், அவர்க்கு உறுதிபயத்தலைச் சான்றோர் வேண்டுவர். வாய்மொழி மருங்கினால் அவனை வாழ்ச்சிப் படுத்துவர். கைக்கிளைப் புறனாகிய பாடாண் இது. 'இருங்கடல் உடுத்த பெருங்கண் மாநிலம்' என்னும் ஐயாதிச் சிறுவெண் தேரையாரின் புறப்பாட்டும் இதற்கு நல்ல உதாரணமாகும்-(புறம்-363.) 'எருமையன்ன' என்னும் புறப்பாட்டையும் நோக்குக-(புறம்-5).*

**எஞ்சொல் எதிர்கொண் டிகழான் வழிநிற்பிற்**
**குஞ்சர வெல்படையான் கொள்ளானோ-எஞ்சும்**
**இகலிடன் இன்றி எறிமுந்நீர் சூழ்ந்த**
**அகலிடம் அங்கை அகத்து.** 220

*எம்முடைய வார்த்தையை எள்ளானாகி ஏற்றுக் கொண்டு, அதன் வழித்தாய் இவன் நிற்பின், வெல்லும் யானைப் படையினனான நம் வேந்தன், அலையும் கடல்பரந்த பூமியிடம் எல்லாம், ஒழியும் பகைநிலம் ஏதும் இல்லாமற் படிக்குத், தன் உள்ளங்கையி னிடத்தாகக் கைக்கொள்ள மாட்டானோ?*

*'கைக்கொள்வான்' என்பது குறிப்பு.*

## 32. செவியறிவுறூஉ

***மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி***
***அறந்தெரி கோலாற் கறிய உரைத்தன்று.***

*அறத்தினை ஆராயும் செங்கோலினை உடையானுக்கு, மறமும் திரிவும் இல்லாத, நின்று நிலைத்த பெரிய எண்ணத்தினை, அவன் உணரும்படியாகக் கூறியது, செவியறிவுறூஉ ஆகும்.*

*'செவியுறைதானே, பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண், அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே' என்னும் செய்யுளியல் சூத்திரத்தையும் காண்க-(தொல். செய். 114). 'இயல்பாகிய குணங்கூறி, அவற்றொடு செவியுறையும் கூறுவர்; செவியுறைப் பொருள் சிறப்புடைத் தென்று அவன் கருதி வாழ்தல் வேண்டி' என்ற முறைமையினையும் கருத்திற் கொள்க.*

**அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்**
**தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே-முந்தை**
**வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி**
**மொழிநின்று கேட்டன் முறை.** 221

தாரினையுடைய மன்னனே! அந்தணர், சான்றோர், அரிய தவநெறியினர், தம்முடைய தமையன்மார், தந்தை, தாயர் எனப்படும் இவர்கட்கு, முன்னோர் செய்த வழியே நின்று, அதன் பின்னையே, விளங்கும் கடலை எல்லையாகவுடைய உலகத்து மொழிகளை நின்று கேட்டறிதல், நினக்கு முறையுடைத்தாகும்.

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்' என்ற புறப்பாட்டையும்-(புறம்.6) அறிந்து, இத்துறையினது அமைதியை உணர்க. 'வயங்குநீர் வேலி மொழி'-உலகோர் கூறும் சொற்கள். நின்று கேட்டல்-மனம் பொருந்தக் கேட்டுணர்தல்.

## 33. குடைமங்கலம்

*நாற்றிசையும் புகழ்பெருக*
*வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று.*

நாற்றிசைகளினும் தன்னுடைய புகழானது பெருகும் படியாகச், செம்மாந்து வீற்றிருந்த மன்னனது, கொற்றக் குடையினைப் புகழ்ந்தது, குடை மங்கலம் ஆகும்.

'நடைமிகுத்து ஏத்திய குடைநிழன் மரபு' என்பதும் இது. (தொல். புறத். சூ. 36.) 'உலக ஒழுக்கத்தை மிகவும் உயர்த்துப் புகழ்ந்து கூறப்பட்ட குடைநிழலது இலக்கணம்' இது என்பர். 'செங்கோலுந் திகிரியும் போல்வனவற்றைப் புனைந்து உரையாக்கலும்' இதனுடன் கொள்வது மரபாம்.

**தன்னிழலோர் எல்லோர்க்கும் தண்கதிராம் தற்சேரா**
**வெந்நிழலோர் எல்லோர்க்கும் வெங்கதிராம்-இன்னிழல்வேல்**
**மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்**
**கோவாய் உயர்த்த குடை.** 222

இனிய நிழல்விடும் வேலினையும், என்றும் புதுவதால் வரும் சீரிய புகழினையும், முல்லைத் தாரினையும் உடையவன் சோழன். அவன், அரசு தொழிற்கு அமைந்து உயர்த்த கொற்றக் குடையானது, தன் நிழலிடத்தே உள்ளவர் அனைவருக்கும் குளிர்ந்த மதியம் ஆகும்; தன்னை அடையாத வெய்ய நிழலினராகிய பகைவர் அனைவருக்கும் வெவ்விய ஞாயிறு ஆகும்.

'முல்லைத்தார்,' வெற்றிமாலை எனப்படும். 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ் அங்கண் உலகளித்த லான்' என்னும் சிலப்பதிகாரத் தொடர்களையும் இங்கே நினைக்க.

## 34. வாள் மங்கலம்

*கயக் கரும் கடற் றானை*
*வயக் களிற்றான் வாள்புகழ்ந் தன்று.*

*பகைவரானே கலக்குதற்கு அரியதான கடல்போற் பரந்த சேனையினையும், வலிய களிறுகளையும் உடையவனான தம் மன்னனது, கொற்றவாளினைப் புகழ்ந்தது, வாள் மங்கலம் ஆகும்.*

*'மாணார்ச் சுட்டிய வாண்மங்கலம்' என்பது தொல்காப்பியம்-(புறத். சூ. 36). வாள் மண்ணு நிலை வெண்பா (121) வேறு; இது வேறு. அது வாளினை உழிஞையார் மங்கல நீராட்டுதல்; இது, பிறர் போற்றுதல்.*

**கொங்கவிழ் ஐம்பான் மடவார் வியன்கோயில்**
**மங்கலங் கூற மறங்கனலும்-செங்கோல்**
**நிலந்தரிய செல்லும் நிரைதண்தார்ச் சேரன்**
**வலந்தரிய வேந்திய வாள்.** 223

*நீதியினை நிலத்திற்குத் தருவான் வேண்டி நடக்கும், நிரைத்த குளிர்ந்த மாலையினை உடையான் சேரன். அவன் வெற்றியினை வேண்டி உயர்த்த வாளானது, தேன் மலரும் சுருள்குரல் அளகத்தை யுடையவரான மடவார், அகன்ற மாளிகையிடத்தே மங்கல மொழிகளைக் கூறவும், தான் சினத்தைக் கனலா நிற்கும்!*

*'மாணார்ச் சுட்டிய' என்னும் விதியினைக் கருத, இது 'புகழ்ச்சிக்கண் பகைவரை இகழ்ந்து மன்னனது வாளாண் மையைச் சிறப்பித்தலாகவே' பொருள்படும். இதனாற்றான், 'மடவார் மங்கலங் கூற, வாள் மறங்கனலும்' என்றனர். 'கனலல்,' அப் பகைவராகிய மாணாரை ஒழித்தற்கு.*

## 35. மண்ணு மங்கலம்

***எண்ணருஞ் சீர்த்தி இறைவன் எய்தி***
***மண்ணும் மங்கல மலிவுரைத் தன்று.***

*எண்ணி அறிவதற்கும் அரிய புகழினையுடைய அரசன் பொன்முடி புனைந்த ஆண்டு நிறைவினைப் பொருந்தித் திருமுழுக்காடுகின்ற மங்கலத்தினது மிகுதியைச் சொல்லியது, மண்ணு மங்கலம் ஆகும்.*

*'அரசற்குச் சிறப்பெய்திய மிக்க புகழை எய்துவிக்கும் முடிபுனைந்து ஆடும் நீராட்டு மங்கலம் இது' எனச், 'சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்'-(புறத். சூ. 36) என்பதன் உரைக்கண் நச்சினார்க்கினியர் உரைப்பர். குறுநில மன்னர்க்காயின் அவர்க்குரிய பட்டத்தொடு கூடிய மண்ணுமங்கலம் என்று கொள்க. யாண்டு இத்துறைச் சென்றதென்று எழுதும் நாண்மங்கலமும் இதனாற் பெறுதும்.*

**கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்**
**மங்கலங் கூற மலிபெய்திக்-கங்கையாள்**
**பூம்புனல் ஆகம் கெழீஇயினான் போரடுதோள்**
**வேம்பார் தெரியல்எம் வேந்து.** 224

*போரினை வெல்லுகின்ற தோளாற்றலையும், வேப்பமலர் மாலையினையும் உடையோனான எம் வேந்தன், தாதுவிரியும் மாலையாற் பொலிவுற்ற கன்னியாளாகிய மடப்பத்தையுடைய நல்லாள் தனது மங்கலத்தைச் சொல்ல, அதனாற் சிறப்பெய்தி, கங்கை என்னும் பெயருடையாளது பொலிந்த நீராகிய மார்பத்தையும் அணைந்தான்!*

*பாண்டியனது வடபுல வெற்றியைச் சிறப்பித்துக் கூறுகின்ற சிறப்பினை ஓர்க. குமரியையும் கங்கையையும் பெண்களாக உவமித்து, அவர்களின் நாயகனாகப் பாண்டியனைப் புனைந்து கூறினர். உழிஞையுள் வரும், மன்னெயில் அழித்த மண்ணுமங்கலத்திற்கும் இதற்கும் வேறுபாட்டினைக் கருதி அறிக.- (வெண்பா.122).*

## 36. ஓம்படை

***இன்னது செய்தல் இயல்பென இறைவன்***
***முன்னின் றறிவன் மொழிதொடர்ந் தன்று.***

*புலமை மிக்கவன், அரசனின் முன்னாக நின்று, 'இன்ன தொன்றினைச் செய்தல் இயல்புடைத்து' என அடுத்துச் சொல்லியது, ஓம்படை ஆகும்.*

*ஓம்படையாவது, ஒப்பித்தல். 'இன்னது செய்தல் இயல்பு' என அடுத்தடுத்து உரைத்து, நன்மைக்கண் ஒப்பித்தலால், ஓம்படை ஆயிற்று.*

**ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்**
**வென்று களங்கொண்ட வேல்வேந்தே-சென்றுலாம்**
**ஆழ்கடல்சூழ் வையகத்துள் ஐந்துவென் றாறகற்றி**
**ஏழ்கடிந் தின்புற் றிரு.** 225

*ஒன்றாகிய உண்மை ஞானத்தினாலே இரண்டாகிய நன்மை தீமைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்து, பகை, நட்பு, நொதுமல் என்னும் மூன்றினையும் உட்கொண்டு, யானை, தேர், புரவி, காலாள் என்னும் நால்வகைப் படையினாலே பூசலை வென்று, போர்க்களத்தைக் கைக்கொண்ட வேல்வேந்தனே! கரைமேற் சென்று தவழும் அலைகளையுடைய ஆழ்ந்த கடலாற் சூழ்ந்திருக்கப்பட்ட இந்த உலகினுள்ளே, ஐம்புலன்களையும் வென்று, அரசனுக்குரிய ஆறு உறுப்புகளையும் பெருக்கி,*

ஏழுவகைக் குற்றங்களையும் கடிந்து, நெடுங்காலம் வாழ்ந்திருப்பாயாக!

பெருக்குதற்குரியன ஆறு; படை குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் எனத் திருக்குறள் உரைக்கும் (குறள். 381). இதனை, 'நாடிய நட்பு, பகை, செலவு, நல்லிருக்கை, கூடினரைப் பிரித்தல், கூட்டல்' ஆறு எனவும் கூறுவர்.

கடிதற்குரியன ஏழு: ஈடிலா வேட்டம், கடுஞ்சொல், மிகுதண்டம், சூது, பொருளீட்டம், கள், காமம் என்பன.

ஒன்று-ஆன்மா; இரண்டு-புண்ணிய பாவம்; மூன்று-காமம், வெகுளி மயக்கம்; நான்கு-சாம, பேத, தான, தண்டம்; ஐந்து-சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றும் ஆம்.

'தலைவர் உயிர்வாழுங் காலத்தைக் கருதிய ஓம்படை' என்று இதனைத் தொல்காப்பியம் கூறும்-(புறத்.சூ. 36).

## 37. புறநிலை வாழ்த்து

*வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப*
*வழிவழி சிறக்கென வாய்மொழிந் தன்று.*

'நீ வழிபடுகின்ற தெய்வம் நின்னைப் பாதுகாவா நிற்ப, நின் வழிவழி மிகுவதாக' எனச் சொல்லி வாய்மொழி கூறியது, புறநிலை வாழ்த்து ஆகும்.

'ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்' என்னும் தொல்காப்பிய விதியையும் (புறத். சூ. 35). அதற்குத் தெய்வ வழிபாடு உடைத்தாயினும் மக்கள் கண்ணதேயாகித் தோன்றும் பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகத், தெய்வம் படர்க்கையாக, வாழ்த்தும் வாழ்த்தும்' என வரும் நச்சினார்க்கினியர் உரையினையும் இங்குக் கருதுக.

*வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்*
*பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து*
*பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே.*

(செய்யுளியல்.110)

என்னும் தொல்காப்பிய விதியையும் அறிக. தெய்வத்தைப் படர்க்கையாகப் புறநிறுத்தி வாழ்த்துதலால் புறநிலை வாழ்த்து ஆயிற்று.

**கொடிபடு முத்தலைமேற் கூற்றக் கணிச்சிக்**
**கடிபடு கொன்றையான் காப்ப - நெடிதுலகில்**
**பூமலி நாவற் பொழிலகத்துப் போய்நின்ற**
**மாமலைபோன் மண்ணுக நீ.** 226

ஒழுங்குவிடும் முத்தலைவேலாகிய சூலத்தினையும், கூற்றத்தை நிகர்த்த குந்தாலிப் படையினையும், நறுமணமிகும் கொன்றை மாலையினையும் உடையவனான இறைவன் பாதுகாத்தருள, நீ, நிலவலயத்துப் பொலிவுமிகுந்த இந்த நாவலந் தீவகத்திடத்து, அண்டம் உருவிப்போய் நின்ற மாமேரு மலையினைப் போல, நின்று நிலைப்பாயாக!

கொடி-ஒழுங்கு, நாவலந்தீவு, உலகவட்டத்தின் ஒரு கூறாதலால், 'உலகில், பூமலி நாவற் பொழிலகத்து' என்றனர்.

## 38. கொடி நிலை

***மூவர்கொடி யுள்ளு மொன்றொடு பொரீஇ***
***மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று.***

அரி, அயன், அரன் என்னும் முப்பெருங் கடவுளரின் கொடிகளுள்ளும் ஒன்றோடு உவமித்துப், பலரும் பொருந்துதல் வரும் வேந்தனது கொடியைப் புகழ்ந்தது, கொடிநிலை ஆகும்.

***'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற***
***வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்***
***கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.*** (புறத். சூ. 32)

என்பதனையும் காண்க. 'கொடி நிலை' என்பது கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் எனவும், எப்புறமும் நீடுசென்று எறித்தலின் அந் நீடல் நிலைமை பற்றிக் கொடியென்பாரும் உளர்' எனவும், நச்சினார்க்கினியர் உரைப்பர். 'பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை, மையறு மண்டிலம் வேட்டனள் வையம், புரவூக்கும் உள்ளத்தேன் என்னை இரவூக்கும், இன்னா இடும்பைசெய்தாள் (கலி. 141) என அவர் காட்டும் உதாரணத்தையும் கருதுக.

**பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்**
**பாம்புண் பறவைக் கொடிபோல-ஓங்குக**
**பல்யானை மன்னர் பணியப் பணிமலர்த்தார்க்**
**கொல்யானை மன்னர் கொடி.** 227

பலவான யானைகளை யுடைய பகை மன்னரும் வந்து அடிபணிய வீற்றிருக்கும், குளிர்ந்த மலரானே அமைந்த தாரினைச் சூடியோனாகிய, கொல்லும் களிற்றினையுடைய எம் மன்னனின் வெற்றிக் கொடியானது, பொலிவுடைய கண்களையும், நெடிய திருமுடியினையும், காயாம் பூப்போல விளங்கும் திருமேனியினையும் உடையானான திருமாலினது, பாம்பினை உண்ணும் பறவையான கருடன் விளங்கும் கொடியினைப் போல உயர்ச்சி பெறுவதாக!

மூவர் கொடியுள், திருமாலின் கொடியோடு ஒப்பிட்டது இது. பிறவும் வருமாற்றான் அறிக.

## 39: கந்தழி

***சூழு நேமியான் சோஎறிந்த***
***வீழாச்சீர் விறன்மிகுத்தன்று.***

*வளைந்த சக்கரப்படையினை உடையான், சோவென்னும் அரணினை எறிந்த, கெடாத தன்மையினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது, கந்தழி ஆகும்.*

*'கந்தழி என்பது ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்தபொருள்' என்பது நச்சினார்க்கினியரது விளக்கம்-(புற. சூ. 33. உறை). கொடிநிலைக்கும் வள்ளிக்கும் பொதுவாய் நிற்பது இது எனவும் உரைப்பர். உழிஞைக்கண் வரும் கந்தழி என்பது, அரண் எறிந்த அரசனைத் திருமாலொடு சார்த்திக் கூறியது (வெண்பா. 101): இது கடவுள் வாழ்த்து வகையில் அமைந்தது.*

**மாயவன் மாயம் அதுவால் மணிநிரையுள்**
**ஆயனா எண்ணல் அவனருளால்-காயக்**
**கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்**
**சுழலழலுள் வைகின்று சோ.** 228

*மாயவன் அருளாகிக் கோபிக்க, அவ்வளவிலே அசுரர் கட்டின வீரக்கழல்கள் நெகிழவும், விழிகள் அழலவும், கைகளில் வளையணிந்த மகளிர் மயங்கவும், சுழன்றெரியும் நெருப்பினுள்ளே தங்கினது சோ என்னும் அரண்; மாயவனுடைய மாயம் அவ்வகையது; ஆதலால், அவனை மணிகளையுடைய ஆத்திரளினுள் அமைந்த இடையனாக எண்ணுதல் வேண்டா!*

*கந்தழிக்கு நச்சினர்ர்க்கினியர் காட்டும் மேற்கோட் செய்யுள் மிகவும் சுவையுடையது. அது,*

***'சார்பினால் தோன்றாது தான்அருவாய் எப்பொருட்கும்***
***சார்பென நின்று எஞ்ஞான்றும் இன்பந் தகைத்தரோ***
***வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த***
***தூய்மையதாம் மைதீர் சுடர்'***

*என்பதாம்.*

## 40. வள்ளி

***பூண்முலையார் மனமுருக***
***வேன்முருகற்கு வெறியாடின்று.***

*அணிகளாற் சிறந்த முலைகளை உடையவரான மகளிரது மனம் உருகுமாறு, வேன்முருகனுக்கு வெறியாடிப் போற்றுவது, வள்ளி ஆகும்.*

*'வள்ளி' என்பது வள்ளிக் கூத்து. 'வள்ளி என்பது தண் கதிர் மண்டிலம் எனவும், கொடி எனவும் கூறுவாரும் உளர்.*

**வேண்டுதியால் நீயும் விழைவோ விழுமிதே**
**ஈண்டியம் விம்ம இனவளையார்-பூண்தயங்கச்**
**சூலமோ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு**
**வேலனோ டாடும் வெறி.** 229

*ஆபரணம் இலங்கச் சூலத்துடனே நின்று கூத்தாடும் சோதியான் மிகுந்த சடையினை உடையானின் திருமகனுக்கு, தம்மில் தாம் ஒத்த வளையினை உடையாரான மகளிர்கள், திரண்ட இசைக்கருவிகள் முழங்காநிற்ப, வேலனொடு கூடி ஆடாநின்ற வள்ளிக்கூத்தினை, நீயும் வேண்டுதியால்! நினது இவ் விருப்பம் மிகவும் சீரிதாம்!*

*'வெறி வேண்டுதியால் நீயும், அவ் விழைவோ விழுமிதே' என்றனர்.*

## 41. புலவராற்றுப் படை

***இருங்கண்வானத் திமையோருழைப்***
***பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று;***

*பெரிய இடத்தினையுடைய வானத்துத் தேவர்களிடையே பெரும் புலமையாளனை வழிப்படுத்தது, புலவராற்றுப்படை ஆகும்.*

**வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்**
**நெறிகொள் படிவத்தோய் நீயும்-பொறிகட்**
**கிருளீயும் ஞாலத் திடரெல்லம் நீங்க**
**அருளீயும் ஆழி யவன்.** 230

*முறைமைகொண்ட வேடத்தினை உடையோய்! நீயும் நறுநாற்றத்தைக் கொண்டிருக்கும் ஒலிக்கும் அருவிகளையுடைய வேங்கடத்திடத்தே சென்றனையானால், ஐம்பொறிகட்கும் மயக்கத்தைத் தருகின்ற இந்த உலகத்தினது துன்பம் எல்லாம் நின்னைவிட்டு நீங்கும்படியாக, சக்கரத்திலே உடையானான திருமால், நினக்கு அருளினை வழங்குவான்.*

*'உலவா ஊக்கமோடு உன்னியது முடிக்கும், புலவராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே' என்பது பன்னிரு பாட்டியல்-(சூ. 320). 'ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப், பெற்ற*

*பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்ற பயன் எதிரச் சொன்ன பக்கமும்' என்னுஞ் சூத்திர உரையுள் (புறத். சூ. 36), 'தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்து பெறாதார்க்கு இன்னவிடத்தே சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச் சென்று, அக் கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும்' என இதனையும், 'பக்கமும்' என்றதனால் அடக்கிக் கூறுவர் நச்சினார்க்கினியர்.*

## 42. புகழ்ந்தனர் பரவல்

***இன்னதொன் றெய்துதும் இருநிலத் தியாமெனத்***
***துன்னருங் கடவுள் தொடுகழல் தொழுதன்று.***

*பெரிய பூமியிடத்து, யாம் இன்னதொரு பதத்தினை அடைவோம் என்று, கிட்டுதற்கரிய கடவுளின் கட்டும் வீரக் கழலினையுடைய பாதங்களைப் பணிந்தது, புகழ்ந்தனர் பரவல் ஆகும்.*

**சூடிய வான்பிறையோய் சூழ்கடலை நீற்றரங்கத்து**
**ஆடி அசையா அடியிரண்டும்-பாடி**
**உரவுநீர் ஞாலத்து உயப்போக வென்று**
**பரவுதும் பல்காற் பணிந்து.** 231

*சடாமுடியிலே இளம்பிறையினைச் சூடியுள்ளோய்! பேய்கள் சூழ்ந்திருக்கும் சுடலையாகிய சாம்பல் அரங்கத்திலே இடையறாது ஆடியிருந்தும் வருத்தமுறாத நின் திருவடிகள் இரண்டையும், உலாவும் கடல்சூழ்ந்த பூமியினின்றும் பிழைத்து நன்னெறியினிடத்தே போவோமென்று பலகாலும் தொழுது பாடி, யாம் போற்றுவோம்.*

*'ஞாலத்து உயப்போக' என்றது, உலகத்து மீளவும் பிறவிப் பிணியிற் சிக்குண்டு துயருறாமற் பிழைத்துப்போக என்பதாம். 'பரவுதும் பணிந்து' என்றலால், 'நின் அருளினைத் தருக' என வேண்டுதலும் ஆயிற்று.*

## 43. பழிச்சினர் பணிதல்

***வயங்கியபுகழ் வானவனைப்***
***பயன்கருதிப் பழிச்சினர்ப்பணிந்தன்று.***

*விளங்கிய புகழினை உடைய இறைவனைப், பெறுதற்குரிய பயனைக் கருதி வாழ்த்தினராகப் பணிந்தது, பழிச்சினர்ப் பணிதல் ஆகும்.*

*'ஞாலத்து உய்ப்போகப்' பரவுதல் மேற் கூறினார்; பயன் கருதிப் பழிச்சுதல் இங்குக் கூறுகின்றார். பயனாவது, பிறவி எடுத்ததன் பயன்.*

**ஆடல் அமர்ந்தான் அடியடைந்தார் என்பெறார்**
**ஓடரி யுண்கண் உமையொருபாற்-கூடிய**
**சீர்சால் அகலத்தைச் செங்கண் அழல்நாகம்**
**தாராய்த் தழுவப் பெறும். 232**

*திருநடனஞ் செய்தலைப் பொருந்தியோனாகிய சிவபிரானின் திருவடிகளையே கதியாகச் சென்று அடைந்தவர்கள் என்ன பேற்றினைத்தான் பெறமாட்டார்கள்; பரந்த செவ்வரி கருவரிகளையுடைய மையுண்ட கண்ணினளான உமையம்மையைத் தன் ஒருபாகத்தே பொருந்தியிருக்கின்ற அப் பெருமானது திருமார்பத்தைச், சிவந்த கண்ணினை உடையதால் அழலும் நாகப் பாம்பும், மாலையாகித் தழுவுகின்ற பேற்றினைப் பெறுமே!*

*'என் பெறார்?' என்றது. 'அடைந்தவர் அனைத்தும் கருதியவாறே பெறுவர்' என்பதனை உணர்த்துவதாம்.*

## 44. கைக்கிளை

***தண்டாக் காதல் தளரியல் தலைவன்***
***வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று.***

*கெடாத அன்பினையும், நுடங்கும் இயல்பினையும் உடையாள் ஒருத்தி, தலைவனுடைய வளவிய மாலையினைப் பெறுதற்கு ஆசைப்பட்ட வகையினை உரைப்பது, கைக்கிளை ஆகும்.*

*'கைக்கிளை' என்பது ஒருதலைக் காமம். இதனைக் காமப் பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினும்' என்மனார் புலவர் (புறத். சூ. 27) என்பதனுள் வரும், 'ஏனோர் பாங்கினும்' என்பதனுள் அடக்குவர் நச்சினார்க்கினியர்.*

*'இன்னும், பகுதி என்றதனாலே எழுதிணைக்குரிய காமமும் காமஞ்சாலா இளமையோள் வயிற் காமமும் அன்றி இது வேறோர் காமம் என்று கொள்க' எனவும் அவர் கூறுவர்.*

**மங்குல் மனங்கவர மான்மாலை நின்றேற்குப்**
**பொங்கும் அருவிப் புனனாடன்-கங்குல்**
**வருவான்கொல் வந்தென் வனமுலைமேல் வைகித்**
**தருவான்கொல் மார்பணிந்த தார். 233**

*மிகுகின்ற ஒழுக்கத்தையுடைய அருவிகளைக் கொண்ட நீராற் சிறந்த நாடனாகிய சோழன், முகில்கள் மனத்தைக் கவர்தலாலே மயக்கத்தைத் தருகின்ற மாலைப்போதிலே தனித்து நின்றேனுக்கு அருளுதற்பொருட்டு, இரவிலே வருவானோ? வந்து,*

என்னுடைய அழகிய முலையின் மேலாகத் தங்கித், தன் மார்பிடத்தே அணிந்திருக்குந் தாரினையும் எனக்குத் தருவானோ?

'தாரானாயின் யான் காமந் தாழாது அழிந்தே போவேன்' என்பது குறிப்பு. மங்குல்-சிறுதுவலை. தூற்றும் கார் என்பது பழைய உரை.

## 45. பெருந்திணை

*பெய்கழல் பெருந்தகை*
*பேணா முயக்கிவர்ந்து*
*மல்கிருட் செல்வோள்*
*வகையுரைத் தன்று.*

இட்ட வீரக் கழலினையும் மிக்க தலைமையினையும் உடையவன், தன்னை விரும்பாத தழுவுதலை விரும்பியவளாக, மிக்க இருட்காலத்தே, அவனை நாடிச் செல்பவளது தன்மையைச் சொல்லியது, பெருந்திணை ஆகும். 'பெருந்திணை' என்பது பொருந்தாக் காமம்.

**வயங்குளைமான் தென்னன் வரையகலந் தோய**
**இயங்கா இருளிடைச் செல்வேன்-மயங்காமை**
**ஓடரிக் கண்ணாய் உறைகழிவாள் மின்னிற்றால்**
**மாட மறுகின் மழை.** 234

செவ்வரி கருவரி படர்ந்த கண்ணினை உடையாய்! விளங்கும் தலையாட்டத்தால் அழகுபெற்ற குதிரையினை யுடைய பாண்டியனது, வரைபோன்ற மார்பத்தைத் தழுவும் பொருட்டாக, ஒருவரும் நடக்கத் தகாத இருளிடத்தே செல்வேன்; அப்படிச் செல்லும் யான் மயங்காமற் பொருட்டு, மாடங்களான் மிக்க தெருவிடத்தே, உறை நீக்கின வாளினைப் போல, மேகமும் மின்னலிட்டது.

'இயங்கா இருளிடை, மயங்காமை மழை மின்னலிடத் தென்னன் வரையகலந் தோயச் சென்றனள்' எனலால், பெருந்திணை ஆயிற்று.

## 46. புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு

*வில்வேர் நுதலி விறலோன் மார்பம்*
*புல்லேம் யாமெனப் புலந்துரைத் தன்று.*

விற்போன்ற அழகிய நுதலினை உடையவள் ஒருத்தி, 'வெற்றியாளனாகிய தலைவனின் மார்பகத்தைப் புல்லேம் யாம்' என்று ஊடிச் சொல்லியது, புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு ஆகும்.

**மலைபடு சாந்தம் மலர்மார்ப யாம்நின்**
**பலர்படி செல்வம் படியேம்-புலர்விடியல்**
**வண்டினம் கூட்டுண்ணும் வயல்சூழ் திருநகரில்**
**கண்டனம் காண்டற் கினிது.** 235

*மலையகத்தே உண்டான சந்தனத்தையுடைய அகன்ற மார்பனே! பரத்தையர் பலரும் படிகின்ற நின்னது செல்வத்திடத்தே யாமும் இனிப் படியேம்; பொழுது புலர்கின்ற விடியற்காலத்திலே, வண்டினங்கள் புணர்ந்து நுகரும் வயல்கள் சூழ்ந்த செல்வமிக்க நகரினிடத்தே, அதனை யாம் கண்டனம்; நோக்குதற்கு அது இனிதாயும் இருந்தது!*

*'காண்டற்கு இனிது' என்றது இகழ்ச்சிக் குறிப்பு. 'வண்டினங்கள் கூட்டுண்ணும் வயல்சூழ் திருநகரில்' என்றது, குறிப்பால் தலைவனது பரத்தைமையைச் சுட்டிக் கூறியது, 'காண்டற்கு இனிதாய காட்சியைக் கண்டனம்' எனினும் ஆம். 'செல்வம்' என்றது, தலைவனது மார்பிடத்துப் பெறும் முயக்கத்தினை.*

## 47. கடவுள் மாட்டுக் கடவுட்பெண்டிர் நயந்த பக்கம்

***இமையா நாட்டத்து இலங்கிழை மகளிர்***
***அமையாக் காதல் அமரரை மகிழ்ந்தன்று.***

*இமையாத கண்ணினையும், ஒளியிலங்கும் அணிகலன் களையும் உடையவரான தெய்வ மகளிர், ஆராத காதலையுடைய அமரர்களை விரும்பியது, கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம் ஆகும்.*

*'காமப் பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்' என்னும் தொல்காப்பிய விதியுள் (புறத். சூ. 28.) இது அடங்கும்.*

**நல்கெனின் நாமிசையாள் நோமென்னும் சேவடிமேல்**
**ஒல்கெனின் உச்சியாள் நோமென்னும்-மல்கிருள்**
**ஆடல் அமர்ந்தாற் கரிதால் உமையாளை**
**ஊடல் உணர்த்துவதோர் ஆறு.** 236

*'அருள் செய்க' என்று சொல்லின், நும் நாமேல் இருப்பாளாகிய சொன்மகள் நோவுபடும் என்பள்; 'சேவடிமேல் வணங்குவேன்' என்று கூறின், நும் தலையுச்சியிலே உள்ளாகிய நங்கையாள் நோவுபடும் என்பள்; ஆகலின், மிக்க இருளிடத்தே திருக்கூத்தினை விரும்பியோனான இறைவனுக்கு, உமையாளை ஊடல் உணர்த்துவதென்னும் ஒருவழி, காண்டற்கு அரியதா யிருந்தது.*

*இறைவனையே பிரமனாகவும் கூறினமை காண்க.*

## 48. கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்

***முக்கணான் முயக்கம்வேட்ட***
***மக்கட்பெண்டிர் மலிவுரைத்தன்று.***

*முக்கண்ணனாகிய பெருமானின் முயக்கத்தை விரும்பின மானிட மகளிரது கூறுபாட்டைச் சொல்லியது, கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் ஆகும்.*

*ஏனைக் கடவுளரை நயந்த மானிடப் பெண்டிர் தன்மை கூறுதலும், இத் துறையாகவே கொள்ளப்படும்.*

**அரிகொண்ட கண்சிவப்ப அல்லினென் ஆகம்**
**புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி-வரிவண்டு**
**பண்ணலங்கூட் டுண்ணும் பனிமலர் பாசூரென்**
**உண்ணலங் கூட்டுண்டான் ஊர்.** 237

*இரவுப் போதிலே, கனவிடத்தே, என் மார்பிடத்தே முறுக்குதலை உடைத்தான பூணூலது தழும்பு படுமாறு தழுவி, செவ்வரி உருவரி படர்ந்த என் கண்கள் சிவக்குமாறு என்னுடைய உள்ளழகைச் சிறிதும் ஒழியாமல் நுகர்ந்தவனுடைய ஊரானது, வரிகளையுடைய வண்டினம், பண்ணின் நலத்தைப் பாடியவாகத் திரண்டு நுகரும் குளிர்ந்த பூவினையுடைய திருப்பாசூர் என்பதே ஆகும்.*

*'பாசூர்'-திருப்பாசூர் என்னுந் தலம்.*

## 49. குழவிக்கண் தோன்றிய காமப் பகுதி

***இள மைந்தர் நல் வேட்ட***
***வள மங்கையர் வகையுரைத் தன்று.***

*குழவிப் பருவத்தராகிய மைந்தரது நலத்தினை விரும்பிய, காமப்பகுதி நிறைந்த மங்கையரது தன்மையைச் சொல்லியது, குழவிக்கண் தோன்றிய காமப்பகுதி ஆகும்.*

*'குழவி மருங்கினும் கிழவதாகும்' (புறத். சூ. 29) எனத் தொல்காப்பியர் உரைப்பதனையும், அதற்கு நச்சினார்க்கினியர் வகுத்துள்ள உரைப்பகுதியினையும் இவ்விடத்துக் கருதுக.*

**வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா**
**அரிக்கண்ணி அஞ்சி யலற-எரிக்கதிர்வேற்**
**செங்கோலன் நுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்**
**எங்கோலம் தீண்டல் இனி.** 238

*வாள் வேந்தனின் மைந்தனே! அரிபரந்த கண்ணினளான இவள் அஞ்சி அலறும்படியாக, இவளுடைய அழகிய பந்தினை*

எடுத்துக் கொண்டு மறைந்தனை; ஆகலான், நெருபபுப் போன்ற ஒளிவேலினையும் செவ்விய கோலினையும் உடைய நும்முடைய கோமான் சினக்களிற்றின் மேலாகக் கொண்டு தர வந்தனையானாலும், இனி எம் அணியினைத் தீண்டாதே கொள்.

'நுங்கோ' என்றது, தம் மகனுடன் ஊடிக் கூறுகின்றனள். ஆதலின், நுங்கோ, புதல்வனின் தகப்பனான அவள் காதலனைக் குறித்தது.

## 50. ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி

***நீங்காக் காதன் மைந்தரும் மகளிரும்***
***பாங்குறக் கூடும் பதியுரைத் தன்று.***

நீங்காத காதலையுடைய ஆடவரும் மகளிரும், அழகு பொருந்தத் தம்முட் கூடுகின்ற பதியினைச் சொல்லியது, ஊரின் கண் தோன்றிய காமப்பகுதி ஆகும்.

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' (புறத். சூ. 30) என்பது தொல்காப்பியம். இது புரைதீர் காமத்திற் கன்றிப் பக்கநின்ற காமத்திற்கும் புறனடை கூறுகின்றது எனவும், பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுள் இதுவெனவும் நச்சினார்க்கினியர் உரைக்கின்றனர்.

**ஊடிய ஊடல் அகல உளம்நெகிழ்ந்து**
**வாடிய மென்தோள் வளையொலிப்பக்-கூடியபின்**
**யாமநீ டாகென்ன யாழ்மொழியார் கைதொழூஉம்**
**ஏமநீர்க் கச்சியெம் ஊர்.** 239

யாழிசையைப் போலும் இனிதான சொல்லினை உடைய மகளிர், தம் கணவரோடு ஊடியிருந்த ஊடல் அகன்றுபோக, நெஞ்சம் நெகிழ்ந்து பிரிவாலே வாடின தம் மென்மையான தோளிடத்து வளைகள் ஒளிசெய்யத், தம் கணவருடனே கூடிய பின்னர், இரவுப் பொழுது நீடிப்பதாக எனச் சொல்லிக் கைகூப்பும், காவல் உடையதாயும் நீர்வளஞ் சிறந்ததாயும் இருக்கின்ற காஞ்சியே, எங்கள் பகுதியாகும்.

'யாமம்' இரவுப் பொழுதைப் பொதுப்படக் குறித்தது.

## தொகுத்து உரைத்தல்

ஒரு வேந்தனது புகழும் வலிமையும ஓம்பா ஈகையும் அளியும் என்னும் இவற்றை ஆராய்ந்து, அவனைப் புகழ்ந்து உரைத்தலாகிய இந்தப் பாடாண் படலம் நாற்பத்தெட்டுத் துறைகளை உடையதாம். அவை,

வாயிலோனை வரவுஉரை எனக் கூறுதலான வாயில் நிலையும்; அரசன் கைதொழும் கடவுளை வாழ்த்தலாகிய கடவுள் வாழ்த்தும்; காட்டிடத்து மலரும் காயாம்பூவைக் கண்ணனின் திருமேனியுடன் ஒப்பிடலாகிய பூவை நிலையும்; மன்னன்முன் 'எண்ணிய பரிசில் இது' என உரைத்தலாகிய பரிசில் துறையும்; இன்னார் கொடுத்தது போல நீயும் தருகுவை எனவும், அரசனுடைய தன்மை இன்னதெனவும் கூறுதலாகிய இயன்மொழி வாழ்த்தும்; மன்னனின் உறக்கத்தைப் பாராட்டுத லாகிய கண்படை நிலையும்; மன்னனைத் துயிலெழுப்புதலாகிய துயிலெடை நிலையும்; துயில் எழுந்தோனின் முன்னர் மங்கங் கூறலாகிய மங்கலமும்; மங்கல மரபில் ஆக்கத்தைத் துன்னினன் எனவுரைக்கும் மங்கலமும்;

திருவிளக்கது நிலையினைக் கூறுதலாகிய விளக்குநிலையும்; அரசனைக் கதிரவனோடு ஒப்பிடலாகிய விளக்குநிலையும்; அந்தணர்க்குப் பசுத்தானம் கொடுக்கக் கருதிய கபிலை கண்ணிய புண்ணிய நிலையும்; மன்னன் வேள்வி முடித்த வேள்வி நிலையும்; வெள்ளியது நிற்குநிலை உரைத்தலாகிய வெள்ளி நிலையும்; நாட்டது வளம் உரைத்தலாகிய நாடு வாழ்த்தும்; அரண்மனையில் தான் பெற்ற பரிசிலைப் பற்றிக் கிணைவன் கூறுதலாகிய கிணை நிலையும்; களத்துக் கைப்பற்றிய செல்வமிகுதியைப் பாணர் கூறும் களவழி வாழ்த்தும், மன்னன் வீற்றிருந்த செவ்வியைப் போற்றுதலாகிய வீற்றினிதிருந்த பெருமங்கலமும்; அவன் குடுமி களைந்த புகழினைச் சாற்றுகின்ற குடுமி களைந்த புகழ்சாற்று நிலையும்;

மன்னன் மணங் கொண்டதைக் கூறிப் போற்றுதல் ஆகிய மணமங்கலமும்; பாலனின் பிறப்பினைப் போற்றி வாழ்த்தலாகிய பொலிவு மங்கலமும்; மன்னனது பிறந்த நாளின் சிறப்பினைக் கூறுதலாகிய நாள் மங்கலமும்; இரவலன் ஊர்க்குப் போக விரும்பிப் பரிசில் கேட்டலான பரிசில் நிலையும்; பரிசிலனை மன்னன் விடையளித்து விடுத்தலான பரிசில் விடையும்; மனைவேள்வி இயற்றலாகிய ஆள்வினை வேள்வியும்; பாணராற்றுப் படையும்; கூத்தராற்றுப் படையும்; பொருநராற்றுப் படையும்; விறலியாற்றுப் படையும்;

'எம் சொல் பின்னர் நயக்கும்!' எனச் சொல்லும் வாயுறை வாழ்த்தும்; சான்றோர் நிலைபெற்ற கருத்தினைக் கூறலாகிய செவியறிவுறூஉம்; கொற்றக் குடையைப் புகழ்தலாகிய குடைமங்கலமும்; கொற்றவாளினைப் புகழ்தலாகிய வாள்மங்கலமும்; புண்ணிய நீராட்டலாகிய மண்ணு மங்கலமும்;

இன்னது செய்தல் நினக்குத் தகுதியாகும் என அறிவன் மன்னனுக்குச் சொல்லுதலாகிய ஓம்படையும்; 'நீ வழிபடு தெய்வம் நின்னைப் பாதுகாக்க, நின் குடியினர் வழிவழி சிறப்பதாக' என வாழ்த்தும் புறநிலை வாழ்த்தும்; முக்கடவுளரின் கொடிகளுள் ஒன்றோடு உவமித்து மன்னனது கொடியைச் சிறப்பித்தலாகிய கொடிநிலையும்; திருமால் சோ அரணை அழித்த சீரினைப் போன்றது நினது சீரும் ஆகும் எனப் போற்றுதலான கந்தழியும்;

மகளிர் மனமுருக வேல்முருகனுக்கு வெறியாடுதலான வள்ளியும்; பரிசில் பெற்றானொரு புலவன் பெறச் செல்வான் ஒருவனைத் தலைவனிடம் ஆற்றுப்படுத்தலான புலவராற்றுப் படையும்; 'இன்னது அடைவோம்' எனக் கடவுள் திருவடிகளைத் தொழுது போற்றலாகிய புகழ்ந்தனர் பரவலும்; உலக வின்பங்களுள் ஒற்றை வேட்டு இறையடி தொழுது போற்றுதலாகிய பழிச்சினர் பணிதலும்; தலைவனது மாலையினை ஒருத்தி விரும்புவதாகக் கூறிப் போற்றலாகிய கைக்கிளையும்;

தலைவனை நாடி நள்ளிருளில் வந்து கூடிச் செல்வாள் ஒருத்தியெனக் கூறுதலாகிய பெருந்திணையும்; ஒருத்தி தலைவனைத் தழுவேனென்று ஊடிநின்று கூறலாகிய புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டும்; கடவுட் பெண்டிர் கடவுளை நயந்தது கூறுதலாகிய கடவுள்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கமும்; கடவுளிடத்து மானிடப் பெண்டிர் காமுற்றது கூறிப் பாடுதலாகிய கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும்; குழவிப் பருவத்தாரிடம் மகளிர் கொள்ளும் விருப்பினைக் கூறுதலாகிய குழவிக்கண் தோன்றிய காமப் பகுதியும்; 'காதலர் இன்னதோர் ஊரிற் கூடுவேம் என உரைத்தனர் எனக் கூறுதலான ஊரின்கண் தோன்றிய காமப்பகுதியும் என்பனவாம்.

# 10. பொதுவியற் படலம்

*(பொதுவியற் படலம் என்னும் இதனை இந் நூலாசிரியர் தனியாக வகுத்துக் கொண்டு, அதன் துறைகளாக வருகின்ற பலவற்றையும் உரைக்கின்றனர். ஆசிரியர் தொல்காப்பியனார், இவற்றை வெட்சி முதலாய திணைப் பகுதிகளுள் கூறிச் செல்வர்.)*

அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாதலும் முற்கூறப் பட்டுள்ள திணைவகைகளும் பொதுவாக நிகழும் இயல்பினை உடையனவாதலும், இத் திணைக்கண் வருவனவாகிய துறைகளின் இயல்பாம். இவற்றை அவற்றின் இயல்போடு ஒட்டிக் காணுதல் வேண்டும்.

இந்தப் படலத்தைப் **பொதுவியற்பால, சிறப்பிற் பொதுவியற் பால, காஞ்சிப் பொதுவியற்பால, முல்லைப் பொதுவியற் பால** என நான்கு பகுதிகளாகக் கூறுகின்றது இந்நூல். அவற்றுள் முதலாவது இது.

## 1. பொதுவியற்பால

**சீர்சால் போந்தை வேம்போடு ஆரே**
**உன்ன நிலையே ஏழக நிலையே**
**கழனிலை ஏனைக் கற்காண் டல்லே**
**கற்கோள் நிலையே கன்னீர்ப் படுத்தல்**
**கன்னடு கல்லே கன்முறை பழிச்சல்**
**இற்கொண்டு புகுதல் என்றபன் னிரண்டும்**
**பொதுவியற் பால என்மனார் புலவர். (10)**

*சிறப்பானே மிகுந்த போந்தை, வேம்பு, ஆர், உன்ன நிலை, ஏழக நிலை, கழனிலை என்பவையும், கற்காண்டல், கற்கோள்நிலை, கன்னீர்ப் படுத்தல், கல் நடுகல், கன்முறை பழிச்சல், இற் கொண்டு புகுதல் என்பவையும் ஆக, இப் பொதுவியலுள் அடங்குவன பன்னிரண்டு துறைகள் என்பர் புலவர்கள்.*

*தொல்காப்பியர், இத் திணைத் துறைகளை எல்லாம் வெட்சி பற்றிய சூத்திரத்துள் கூறுவர்-(புறத். சூ. 5.).*

*.............................. உறுபகை*
*வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்*
*போந்தை வேம்பே ஆரென வரூஉம்*
*மாபெருந் தானையர் மலைந்த பூவும். (5: 2-5)*

*.............................. வயவர் ஏத்திய*
*ஓடாக் கழனிலை உளப்பட ஓடா*
*உடல்வேந் தடுக்கிய உன்ன நிலையும்.* (5: 6-8)

*காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்*
*சீர்த்தது சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று*
*இருமூன்று வகையிற் கல்லொடு புணர.* (5: 19-21)

'ஏழகத் தகரும் யானையும் கோழியும் பூழும் வட்டும் வல்லுஞ் சொல்லும் முதலியவாற்றால், தமக்கு வரும் புகழைத் தாம் எய்துதற்குத், தத்தம் வேந்தர் அறியாமற் படைத் தலைவர் தம்முண் மாறாய் வென்று ஆடுங்கால், இன்ன அரசன் படையாளர் வென்றார் என்பதற்கு அவரவர் பூச்சூடி ஆடுவர் என்பதூஉம், அது தன்னுறு தொழில் என்பதூஉம், அக் கூத்தும் வேத்தியற் கூத்தின் வழீஇயின கருங்கூத்தென்பதூஉம் உணர்த்தியதாம். இதனை இங்ஙனம் தன்னுறு தொழிலாக்காமல் வேந்துறு தொழிலாக்கின் அது தும்பையாம், புகழ்ந்தது கூறிற்றெனின் பாடாண் திணையாம்.' (5: 2-5க்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம்.)

'முன்பு கழல் கால் யாத்த வீரர் மழலைப் பருவத்தான் ஒருவன் களத்திடை ஓடாது நின்றமை கண்டு, அவனைப் புகழ்ந்து அவற்குக் கட்டிய கழனிலைக் கூத்து'

'வேந்தன் கருத்தானன்றி, அவன் மறவன், வேந்தற்கு நீ வெற்றி கொடுத்தால், யான் நினக்கு இன்னது செய்வல் எனப் பரவுதலும், எம் வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக் கோடு பொதுளுக எனவும், பகை வேந்தர்க்குக் கேடு உளதெனின் அக் கோடு படுவதாக எனவும் நிமித்தங் கோடலும் என, இருவகைத் தெய்வத் தன்மை உடையது, பிறக்கடியிடா உடன்ற வேந்தனை உன்னமரத்துடன் அடுக்கிக் கூறப்பட்ட உன்ன நிலை-(5: 6-8. நச்சர் விளக்கம்).

'கல்கெழு சுரத்திற் சென்று கற்காண்டலும், அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப் பின்னர்க் கற்காண்டலும் காட்சியாகும்.

'கல் அறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் ஆவன் ஆண்டுவருவதற்குக் கால்கோடலும், கால்கோள் ஆகும்.

'கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழி நீராட்டுதலும், நீர்ப்படை ஆகும்.

'கல்லினை நடுதலும், அக் கல்லின்கண் மறவனை நடுதலும், நடுகல் ஆகும்.

'கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தலும், வாழ்த்தல் ஆகும். (5: 19-21. நச்சினார்க்கினியர் உரை.)

மேலே சொல்லப்பட்ட இந்தக் கருத்துகளை மனத்துட் கொண்டு, இந்தப் பகுதியைக் கற்பது பயனுடையதாகும்.

## 1. போந்தை

***கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பிற்***
***புலவேல் வானவன் பூப்புகழ்ந் தன்று.***

பொருந்தாத வேந்தர்கள் நெருங்கிய போரினிடத்தே, புலால் நாறும் வேலினையுடைய சேரமான் சூடுகின்ற பூவினைப் புகழ்ந்தது, போந்தை ஆகும். போந்தை-பனந்தோடு; சேரனின் அடையாளப் பூ.

**குடையலர் காந்தள்தன் கொல்லிச் சுனைவாய்த்**
**தொடையவிழ் தண்குவளை சூடான்-புடைதிகழும்**
**தேரதிரப் பொங்கும் திருந்துவேல் வானவன்**
**போரெதிரிற் போந்தையாம் பூ. 240**

பக்கம் விளங்கும் பகைவரது தேர்த்தானையர் நடுக்கமுறச், சினத்தாற் பொங்கியோனான, திருந்திய வேலினையுடைய சேரமான், தனக்குப் போரானது வந்து தோன்றின், குடைபோன்று மலர்ந்திருக்கும் காந்தள் மலர்களையுடைய தன் கொல்லிமலைச் சுனையிடத்தே, கட்டலர்ந்திருக்கும் தண்ணிய செங்கழுநீர்ப் பூவினைச் சூடமாட்டான்; பனந்தோடாகிய பூவையே சூடா நிற்பான்.

## 2. வேம்பு

***விரும்பார் அமரிடை வெல்போர் வழுதி***
***சுரும்பார் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று.***

பகைவரொடு செய்யும் போரிடத்தே, வெல்லுகின்ற போராற்றலை யுடையவனான பாண்டியன், வண்டினம் நிறைந்திருக்கின்ற தன் முடிமேலாகச் சூடும் பூவைப் புகழ்ந்தது, வேம்பு ஆகும். வேம்பு-பாண்டியனின் அடையாளப் பூ.

**தொடியணிதோள் ஆடவர் தும்பை புனையக்**
**கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின்-முடியணியும்**
**காத்தல்சால் செங்கோற் கடுமான் நெடுவழுதி**
**ஏத்தல்சால் வேம்பின் இணர். 241**

காத்தல் தொழிலிலே சிறப்பான செங்கோன்மையினையும், கடிதாகச் செல்லுகின்ற குதிரையினையும் உடையவன், புகழால்

உயர்ந்த பாண்டியன் அவன், கொடியாற் சிறந்த தன் தேர்ப்படை பகைப்படையினை வருத்துங் காலமாகிய போர்க்காலத்தே, வீர வலயம் பொலிந்த தோளினையுடையவரான போர் மறவர்கள் தும்பை மாலையினைச் சூடாநிற்பத், தான் புகழ்தல் அமைந்த வேம்பின் பூக்கொத்தினைச் சூடா நிற்பான்.

## 3. ஆர்

*விறற்படை மறவர் வெஞ்சமம் காணின்*
*மறப்போர்ச் செழியன் மலைபூ உரைத்தன்று.*

வெற்றியினையுடைய படைமறவரின் வெய்ய பூசலைக் காணுமிடத்துத், தறுகண்மையுடைய பூசலைச் செய்ய வல்லவனான செழியன் புனையும் பூவினை உரைத்தது, ஆர் ஆகும். ஆர்-ஆத்திமாலை.

**கொல்களி றூர்வர் கொலைமலி வாள்மறவர்**
**வெல்கழல் வீக்குவர் வேலிளையர் – மல்கும்**
**கலங்கல் ஒலிபுனற் காவிரி நாடன்**
**அலங்கல் அமரழுவத் தார்.** 242

போர்க்களத்து நடுவே, கொலைத் தொழிலானே மிகுந்த வாள்வீரர்கள், கொல்லுதலிலே வல்ல களிற்றினை ஊர்ந்து செல்வர்; வேலேந்திய மறவர்கள் வீரக்கழலினைக் கட்டுவர்; செங்கலங்கல் மிகுதியும் உடைத்தாய், முழங்கும் புனலினைக் கொண்டுவருகின்ற காவிரிநாட்டிற்கு உரிய சோழன் சூடுவது ஆத்திமாலை ஆகும்.

## 4. உன்ன நிலை

*துன்னருஞ் சிறப்பின் தொடுகழன் மன்னனை*
*உன்னஞ் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று.*

கிட்டுதற்கு அரிதான நன்மையினையும், கட்டும் கழலினையும் உடைய தம் மன்னனை, நிமித்தம் பார்ப்பதற்குரிய மரத்தொடு கூட்டி, அவனது மிகுபுகழைச் சொல்லியது, உன்ன நிலை ஆகும்.

உன்னம்-ஒருவகை வலிய மரம். 'எம் மன்னன் வெல்வானாகில் நின்கோடு பூக்க என்றும், பகைவன் அழிவானாகில் நின்கோடு பட்டுப்போக' என்றும் சுட்டிக்கூறி நிமித்தம் காண்பது மரபு.

**துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து**
**முன்னர் வணங்கார் முரண்முருங்க-மன்னரும்**
**ஈடெலாந் தாங்கி இகலவிந்தார் நீயும்நின்**
**கோடெலாம் உன்னம் குழை.** 243

*உன்ன மரமே! கிட்டுதற்கரிய சேனையினையும் கட்டிய வீரக்கழலினையும் உடையான் நம் வேந்தன்; இவனது வலியொடு மாறுபட்டு முன்னே வந்து வணங்காதிருக்கும் அவருடைய மாறுபாடு இனிக் கெடும்படியாக, அங்ஙனம் எதிர்த்துவந்த மன்னர்களும், இவன் வலியெல்லாம் தடுத்துத் தம் மாறுபாடு ஒழிந்தனர்; நீயும் நின் கொம்பெல்லாம் தளிர்க்கப் பொலிவாயாக.*

## 5. ஏழக நிலை-1

***ஏழகம் ஊரினும் இன்னன் என்றவன்***
***தாழ்வில் ஊக்கமொடு தகைபுகழ்ந்தன்று.***

*எம் மன்னவன் ஆட்டுக்கடாயினை மேற்கொண்டு செலுத்துகின்றவன் எனினும், 'இத் தன்மையன்' என்று அவனுடைய குற்றமில்லாத மனவெழுச்சியொடு கூடிய தகைமையைச் சொல்லியது. ஏழக நிலை ஆகும். ஏழகம்-ஆட்டுக்கிடாய்; அதை ஏறிச் செலுத்தும் பருவம், மிக்க இளமைப் பருவம்.*

**எம்மனை யாம்மகிழ ஏழகம் மேற்கொளினும்**
**தம்மதில் தாழ்வீழ்த் திருக்குமே-தெம்முனையுள்**
**மானொடு தோன்றி மறலுங்கால் ஏழகத்**
**தானொடு நேராம் அரசு.** 244

*எம் அரசன், எம்முடைய மனையினிடத்தே, யாம் மகிழுமாறு ஆட்டுக்கிடாயின் மேலேறிச் செலுத்துவான் ஆயினும், இவனுடைய ஆற்றலுக்கு அஞ்சிப் பகைவர்கள் தம் மதிற்கதவங் களைத் தாழ்வீழ்த்து இருப்பார்களே! பகைப் புலத்துக் குதிரை மேலானாகத் தோன்றி, இவன் போரைச் செய்யுங்காலத்து, கிடாயின் மேலானான இவனோடு, அப் பகைவர்கள் அனைவரும் ஒப்பாவாராம்!*

*'இவனொருவனுக்கு அவர் அனைவரும் நேராகார்' எனத் தம் மன்னனது ஆண்மைப் பெருக்கினைக் கூறினார்.*

## 6. ஏழக நிலை-2

***ஏந்துபுகழ் உலகின் இளமை நோக்கான்***
***வேந்து நிற்றலும் ஏழக நிலையே.***

*உயருகின்ற புகழினையுடைய உலகினிடத்தே, ஒருவன், தன் இளமையினைப் பாராதே, வேந்தியல் தொழிலினை மேற்கொண்டு நிற்றலும், ஏழக நிலையே ஆகும்.*

**வேண்டார் பெரியர் விறல்வேலோன் தானிளையன்**
**பூண்டான் பொழில்காவல் என்றுரையாம்-ஈண்டு**

**மருளன்மின் கோள்கருது மால்வரை யாளிக்**
**குருளையும் கொல்களிற்றின் கோடு.** 245

*'பகைவராவாரோ ஆண்டால் பெரியவர்கள்; வெற்றி வேலேந்திய நம் மன்னவன் மகனோ தான் மிகவும் இளையன்; இருப்பவும், இவன் பூமிகாவலை மேற்கொண்டான்' என்று சொல்லமாட்டோம். பெரிய மலையிடத்துக் கொள்ளுதலைக் கருதும் யாளியினது குட்டியும், கொலைத்தொழில் வல்ல களிற்றினது கொம்பினையே கொள்ளக்கருதும்; ஆதலால், இவ்விடத்து மருட்சி கொள்ளன்மின்.*

*"யாளிக் குட்டியும் கொல்களிற்றை வெல்லும் என்பது போல, இவனும் பகையை வெல்வான்" என்பது கருத்து.*

## 7. கழனிலை

***அடுமுரண் அகற்றும் ஆளுகு ஞாட்பிற்***
***கடுமுரண் வயவன் கழன்புனைந் தன்று.***

*அடுதற்குக் காரணமான முரண்பாட்டினைப் பெருக்கும் மறவர்கள் படுதற்கிடமான போரிடத்துக், கடிய முரண்பாட்டினை உடையான் ஒரு வீரன், கழலினைப் புனைந்தது, கழனிலை ஆகும்.*

*'வயவர் ஏத்திய ஓடாக் கழனிலை உளப்பட' என்பர் தொல்காப்பியர். 'முன்பு கழல் காய்ந்த வீரர் மழலைப் பருவத்தான் ஒருவன் களத்திடை ஓடாது நின்றமை கண்டு, அவனைப் புகழ்ந்து அவனுக்குக் கட்டிய கழனிலைக் கூத்து இது.*

**வாளமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ**
**கேளலார் நீக்கிய கிண்கிணிக்காற்-காளை**
**கலங்கழல் வாயிற் கடுத்தீற்றி யற்றால்**
**பொலங்கழல் கான்மேற் புனைவு.** 246

*தனக்கு உறவாயிராதாரைப் போக்கிய, கிண்கிணி விளங்கும் கால்களையுடைய காளை எம்வேந்தன்; இவன் பொன்னாற் செய்த வீரக்கழலினைக் கான்மேற் புனையும் அது, மிக்க நெருப்பினது வாயிடத்தே நஞ்சினைத் தீற்றினாற்போன்ற தன்மையதாகும்; இனி, இவன் செய்யப்புகும் வாட்பொருள், இவனை எதிர்நின்று தடுத்து வானகம் செல்பவர்தாம் யார் தாமோ?*

## 8. கற்காண்டல்

***ஆனா வென்றி அமரில் வீழ்ந்தோற்குக்***
***கானம் நீளிடைக் கற்கண் டன்று.***

அமையாத வெற்றியினையுடைய போரினிடத்தே வீழ்ந்து பட்ட மறவனுக்குக், கானத்தின் நெடிய இடத்திலே நடுதற்குத் தக்க கல்லைக் கண்டது, கற்காண்டல் ஆகும்.

இஃது இருவகைப்படும்; கல்கெழு சுரத்திற் சென்று கற்காண்டலும்; அது கொணர்ந்து செய்வது நாட்டிப் பின்னர்க் கற்காண்டலும் ஆம்.

**மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்**
**புகையணங் கப்பூமார் சிந்திப்-பகையணங்கும்**
**வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த**
**காளைக்குக் கண்டமைத்தார் கல். 247**

பகைவரை வருத்தும் வீளைக்குரலொடு செல்லும் கடுமையான அம்பினாலே, உயிரும் உடலும் வேறுபட்டுப் போக, வானிடத்துச் சென்ற இளைய மறவனுக்கு, மிக்க தெய்வத்தை உடம்பிலே நிறுத்தியவராகத், தலைமையினையுடைய மறவர்கள், நறும்புகை கண்களை வருத்தப் பூமாரி சிந்திக் கல்லினைக் கண்டு உறுதி செய்தார்கள்.

'புகையணங்குதல்-நறும்புகை மிகுதி, கூடியிருந்தாரது கண்களை வருத்துதல். மீளி-தலைவன்.

## 9. கற்கோள்நிலை

*மண் மருளத் துடி கறங்க*
*விண் மேயாற்குக் கற்கொண் டன்று.*

மண்ணகம் மயக்கங் கொள்ளவும், துடிப்பறை முழக்கஞ் செய்யவும், விண்ணாட்டைச் சேர்ந்த வீரனுக்குத், தாம் கண்ட கல்லினைக் கொண்டது, கற்கோள்நிலை ஆகும்.

கண்ட கல்லினைப் பெயர்த்துக் கொள்ளுதல் இதுவாம். தொல்காப்பியர், காட்சிக்குப் பின்னர்க் கால்கோள் என்பதனைக் கூறுவர்.

**பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து**
**நாவுரை நன்மணி நன்கியம்ப-மேவார்**
**அழல்மறங் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்**
**கழல்மறவர் கைக்கொண்டார் கல். 248**

வீரக்கழலினை உடைய மறவர்கள், பகைவருடைய அழலும் சினத்தினைக் காலுவித்துப் பட்ட மறவனுக்குத் தக்கது இதுவாகும் என்று சொல்லி, அதனைத் துதித்துப் பூவொடு நீரும் கலந்து தூவி, எழும்படியாக நறுமணப் பொருள்களைப் புகைத்து, நாவினாற்

*பொலிந்த நல்ல மணியானது நன்றாக இசைக்கக், கல்லினைக் கைக்கொண்டனர்.*

*காற்றி-வெளிப்படச் செய்து; அதாவது வென்று.*

## 10. கல்நீர்ப்படுத்தல்-1

***வண்டுசூழ் தாமம் புடையே அலம்வரக்***
***கண்டு கொண்ட கல்நீர்ப் படுத்தன்று.***

*வண்டினம் மொய்க்கும் மாலையானது பக்கத்திலே அசைந்துவரக், கண்டு கைக்கொண்ட கல்லினை நீர்ப்படை செய்தது, கல்நீர்ப் படுத்தல் ஆகும்.*

*நீர்ப்படுத்துத் தூய்மை செய்தல் இது.*

**காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்**
**கூடிய வெம்மை குளிர்கொள்ளப்-பாடி**
**நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்**
**கயத்தகத் துய்த்திட்டார் கல்.** 249

*போரிற் பட்டானுக்குக் கைக்கொண்ட கல்லினை, மறவர் காடு அழலும்படியாகக் கதிரவன் சினத்தினைச் சொரிதலாலே பொருந்திய வெப்பம் மாறிக் குளிர்ச்சி கொள்ளும்படியாக, வாழ்த்தி, நன்மையுண்டாகச் சுத்திபண்ணி, நறுமணப் பொருள்களைக் கலந்து நன்னீராட்டிப், பின்னர், நீர்நிலையிடத்தே செலுத்தி அழுத்தினர்.*

*கயம்-குளம்; நீர்நிலை.*

## 11. கல்நீர்ப்படுத்தல்-2

***ஓங்கியகல் உய்த்தொழுக்கல்***
***ஆங்கெண்ணினும் அத்துறையாகும்.***

*உயர்ந்த நடுகல்லினைச் செலுத்தி நிரைத்தலை அவ்விடத்தே எண்ணினாலும், அது, முன்பு சொன்ன கல்நீர்ப்படுத்தல் என்னும் துறையே யாகும்.*

**கணனார்ந் துவப்பக் கடுங்கண் மறவர்**
**பிணனார்ந்து பேய்வழங்கு ஞாட்பின்-நிணனார்**
**விழுக்கினால் வேய்ந்த விறல்வேலோர் கல்லை**
**ஒழுக்கினார் ஒன்றொருவர் முன்.** 250

*பேய்கள் பிணத்தைத் தின்று திரியும் போர்க்களத்தே, நிணம் நிறையும் பகைவரது நெஞ்சின் தசையினாலே மூடின வெற்றி வேலினைக் கைக்கொண்ட மறவர்களுக்கு நடுவதற்குரித்தான*

கல்லினைத், தமது திரள் நிறைந்து உவகை மேற்கொள்ளத், தறுகண்மையினரான மறவர்கள், ஒருவர் முன்பு ஒன்றாக முறையே நிரைத்தார்கள்.

இறந்தோர் பீடும் பெயரும் எழுதிய கல்லினை மறவர்கள் நிரைத்து நின்று, ஒருவர்முன் ஒன்றாக நிறுத்தி, நடுதற்கு முறைப்படுத்தினர் என்பது இது. நீர்ப்படுத்தல், இங்கு நீர்மைப்படுத்தல் என்னும் பொருளது.

## 12. கல் நடுதல்

*அவன்பெயர்கல் மிசைப் பொறித்துக்*
*கவின்பெறக் கல்நாட்டினது.*

கல்லின் மேலாக, இறந்துபட்ட வீரனின் பெயரைப் பொறித்து, அதனை அழகுபெற நாட்டியது, கல்நடுதல் ஆகும்.

'கல்லினை நடுதலும், அக் கல்லின் கண் மறவனை நடுதலும் என இஃது இருவகையாகும்' என்பர் நச்சினார்க்கினியர்.

**மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்**
**பீலி அணிந்து பெயர்பொறித்து-வேலமருள்**
**ஆண்டக நின்ற அமர்வெய்யோற் காகென்று**
**காண்டக நாட்டினார் கல்.** 251

'வேற்போரிடத்தே ஆண்மைத் தன்மை மிகுதிபெறும் படியாக நின்ற, போரினை விரும்பியோனுக்கு, இஃது உருவமாக' என்று சொல்லி, அவனைக் குறித்துக் கொணர்ந்த கல்லினை, மாலை அசையவும், மணியொலி எழவும், கள்ளினைத் தெளித்தும், மயிற்பீலியைச் சூட்டியும், அவன் பெயரினைப் பொறித்தும், காட்சிபொருந்த நாட்டினார்கள்.

## 13. கன்முறை பழிச்சல்

*நிழலவிர் எழில்மணிப்பூண்*
*கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று.*

நிழல்விடும் எழிலுடைய மணிப்பூணினையும், வீரக் கழலினையும் உடையானான, போர் விருப்பத்தை உடைய வீரனுக்கு நாற்றிய கல்லினை வாழ்த்தியது, கன்முறை பழிச்சல் ஆகும். பழிச்சல்-வாழ்த்துதல்.

'கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும்' பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக வாழ்த்தலும் என இஃது இருவகை ஆகும்.

**அடும்புகழ் பாடி அழுதழுது நோனாது**
**இடும்பையுள் வைகிற் றிருந்த-கடும்பொடு**
**கைவண் குரிசில்கற் கைதொழூஉச் செல்பாண**
**தெய்வமாய் நின்றான் திசைக்கு.** 252

*பாணனே! கை வளப்பத்தினையுடைய நம் தலைவன், இப்பொழுது எட்டுத் திசைக்கும் ஒரு தெய்வமாகக், கன்மேல் நின்றான்; அதனால், அவனை இழந்தது பொறாதே, துன்பத்துள்ளே தங்கியிருந்த சுற்றத்தோடு, அழுதழுது வருந்துதலின்றி, அவன் பகைவரை ஆடுகின்ற சீர்த்தியைப் பாடினாயாக, அக் கல்லினைக் கைதொழுது மேற்செல்வா யாக.*

## 14. இற்கொண்டு புகுதல்

***வேத் தமருள் விளிந்தோன் கல்லென***
***ஏத்தினர் துவன்றி இற்கொண்டு புக்கன்று.***

*'வேந்தர் செய்த போரிடத்தே வீழ்ந்துபட்டோனின் கல் இது' வென வாழ்த்தினராய்த் திரண்டு, கோயில் எடுத்துப் புக்கது, இற்கொண்டு புகுதல் ஆகும்.*

*'இற்கொண்டு, அதனுள் ஏத்தினார் புகுதல்' என்று கொள்ளுக. 'சீர்த்தகு பெரும்படை' (புறத். சூ. 5) எனத் தொல்காப்பியம் கூறுகின்ற பெருஞ் சிறப்புகளைப் படைத்தலும், இற்கொண்டு புகுதலும் ஒன்றாகும்.*

**வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்**
**கோட்புலி அன்ன குரிசில்கல்-ஆட்கடிந்து**
**விற்கொண்ட வென்றி விறன்மறவர் எல்லோரும்**
**இற்கொண்டு புக்கார் இயைந்து.** 253

*பகையரசரது தானைவீரரை ஓட்டி, வில்லாற்றலாற்கொண்ட வெற்றியினையுடைய திறல்வீரர் எல்லோரும், கொல்லும் புலியையொத்த தலைமையுடையானது கல்லினை, அதற்குக் கோயில் எடுத்து, வாளுக்கு உணவு கொடுத்துத், தெளிந்த மணியோசை நிலையாக ஒலிக்கக் கூடி, அக் கோயிலிலுள்ளும் புகுந்து போற்றுவா ராயினர்.*

*புகா-உணவு; வாட்புகா, என்றது பலியினை.*

## தொகுத்து உரைத்தல்

*பொதுவியற் படலத்துள் முதலாவதான பொதுவியல் என்னும் இப் பகுதி, பன்னிரண்டு துறைகளைக் கொண்டதாகும். அவை-*

போந்தை சூடியது புகழ்தலாகிய போந்தை; வேம்பு சூடியது புகழ்தலாகிய வேம்பு; ஆத்திமாலையைச் சூடுதலாகிய ஆர்; உன்ன மரத்தது நிலைகண்டு நிமித்தம் காணலாகிய உன்ன நிலை; ஆட்டுக்கிடாய் ஊர்கின்ற பருவத்தது சிறப்பைக் கூறலாகிய ஏழகநிலை; இளமை நோக்காது அரசுபூணலாகிய ஏழகநிலை;

வளமிக்கவன் கழல் கட்டியது கூறுதலாகிய கழல்நிலை; களத்தே பட்ட மறவனுக்குக் கல்லினைத் தெரிதலாகிய கற்காண்டல்; அதனைக் கைக்கொள்ளலாகிய கற்கோள் நிலை; அதனை மாலையிட்டு நீராட்டலும், நடுதற்கான இடத்திலே கொண்டு நிறுத்தலுமாகிய கல்நீர்ப்படுத்தல்;

பெயர்பொறித்துக் கல்லினை நடுதலாகிய கல்நடுதல்; நடுகல்லை வாழ்த்துதலாகிய கல்முறை பழிச்சல்; கோயில் எடுப்பித்து வாழ்த்தி வழிபடலாகிய, இற்கொண்டு புகுதல் என்பவையாம்.

“கற்காணச் சேறலும், இடைப்புலத்துச் சொல்லுவனவும், கண்டுழி இரங்குவனவும், கையறுநிலையும், பாணர் கூத்தர் முதலியோர்க்கு உரைப்பனவும், அவர் தமக்கு உரைப்பனவும் போல்வன, கற்காண்டலின் பகுதியாய் அடங்கும்.

கால்கொள்ளுங் காலத்து, மாலையும் மலரும் மதுவும் சாந்தும் முதலியன கொடுத்தலும், அனையோர்க்கு இனைய கல் தருமென்றலும், தமர்பரிந் திரங்கலும், முதலியன கால்கோளின் பகுதியாய் அடங்கும்.

நீர்ப்படுக்குங்கால் ஈர்த்துக்கொண்டு ஒழுக்கலும் ஏற்றிய சகடத்தினின்று இழிந்தவழி ஆர்த்தலும், அவர் தாயங் கூறலும் முதலியன, நீர்ப்படையாய் அடங்கும்.

நடுதற்கண், மடையும் மலரும் மதுவும் முதலியன கொடுத்துப், பீலித்தொடையலும் மாலையும் நாற்றிப், பல்லியம் இயம்ப விழவுச் செய்யுஞ் சிறப்பெல்லாம் நடுதலாய் அடங்கும்”

பெயரும் பீடும் எழுதுங்காலும் இப் பகுதிகள் கொள்க.”

“நாட்டப்படும் கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப்புகளும் படைத்தல் பெரும்படைப் பகுதியாய் அடங்கும்.

“வாழ்த்தற்கண்ணும், இதுதான் நெடிது வாழ்கவெனவும், இதன்கண்ணே அவன் நின்று நிலாவுக வெனவும், பிறவுங் கூறுவனவும் எல்லாம், வாழ்த்துதலாய் அடங்கும்; ஏனையவற்றிற்கும் இவ்வாறே துறைப்பகுதி கூறிக்கொள்க”

நச்சினார்க்கினியரது இந்த விளக்கத்தையும் இங்கே நாம் அறிதல் வேண்டும்-(புறத். சூ. 5. உரை)

## 2. சிறப்பிற் பொதுவியற்பால

*(பொதுவியற்பாலன போல எழுதிணைக்கும் பொதுவாகாது, சிலவற்றிற்கே பொதுவாக நிற்பன இவை. ஆதலின், இங்ஙனம் வேறுபிரித்துச் சொல்வாராயினர்)*

**முதுபா லையே சுரநடை யேனைத்**
**தபுதார நிலையே தாபத நிலையே**
**தலைப்பெய நிலையே பூசன் மயக்கே**
**மாலை நிலையேல் மூதா னந்தம்**
**ஆனந் தம்மே ஆனந்தப் பையுள்**
**கையறு நிலையுளப் படப்பதி னொன்றும்**
**மையறு சிறப்பிற் பொதுவியற் பால.** (11)

*முதுபாலை, சுரநடை, தபுதாரநிலை, தாபதநிலை, தலைப்பெயல்நிலை, பூசன்மயக்கு, மாலைநிலை, மூதானந்தம், ஆனந்தம், ஆனந்தப் பையுள், கையறுநிலை ஆகியன பதினொன்றும், குற்றமற்ற, சிறப்பிற் பொதுவியற் பாலன ஆகும்.*

*இத் துறைகள், தொல்காப்பியரால், காஞ்சித் திணைச் சூத்திரத்து உரைக்கப்படுவனவாம்-(தொல். புறத். சூ. 24) அவற்றையும் அவற்றுக்குரிய உரையாசிரியர்களின் விளக்கங்களையும் கற்றறிதல் பயனுடைத்து.*

### 15. முதுபாலை

***காம்புயர் கடத்திடைக் கணவனை இழந்த***
***பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று.***

*மூங்கில் ஓங்கின காட்டினிடத்தே, தன் கொழுநனை இழந்தாளான பூங்கொடிபோன்ற மடந்தையது, தனிமையைச் சொல்லியது, முதுபாலை ஆகும்.*

*இதனை, 'நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து, தனிமகள் புலம்பிய முதுபாலையும்' என்பர் தொல்காப்பியர்-(புறத். சூ. 24). 'பாலை' என்பது, பிரிவு; இதுவோ பெரும் பிரிவு; அதனால் 'முதுபாலை' ஆயிற்று.*

**நீர்மலி கண்ணொடு நின்றேன் நிலையிரங்காய்**
**தார்மலி மார்பன தகையகலம்-சூர்மகளே**
**வெள்ளில் விளைவுதிரும் வேயோங்கும் வெஞ்சுரத்துக்**
**கொள்ளல்நீ கோடல் கொடிது.** 254

*பேய் மகளே! விளாவினது பழம் உதிருகின்றது. மூங்கில் ஓங்கினதுமான வெய்ய சுரத்திடத்தே, நீர்மிகும் கண்ணொடு தமியளாகி நின்ற என் நிலையினுக்கு இரங்காயோ? மாலைமிக்க*

மார்பினை உடையானான என் கணவனது அழகிய மார்பகத்தை, நீ கொள்ளுதலை ஒழிவாயாக; அங்ஙனம் இரங்காயாய்க் கொள்ளுமது மிகவும் கொடுமையானது!

'சூர்மகள் கொள்ளல்', தனக்கு உணவாக, வெள்ளில் விளைவு-விளாமரத்தது பயனான பழம். மனைவியது துயர நிலையொடு, நிலையாமையும் உணர்த்தப்பெற்றது.

## 16. சுரநடை

***முதரில் நிவந்த முதுகழை ஆரிடைக்***
***காதலி யிழந்த கணவனிலை உரைத்தன்று.***

முதிர்ந்த பிணக்கம் ஓங்கிய, முற்றின மூங்கிலையுடைத்தாய் நிறைந்த இடத்திலே, காதலியை இழந்த தலைவனின் நிலைமையைச் சொல்லியது, சுரநடை ஆகும்.

சுரநெறியிலே நடந்து போகுங் காலத்து, இங்ஙனம் இழக்க நேருதல் என்பதனால், இது சுரநடை ஆயிற்று.

**உரவெரி வேய்ந்த உருப்பவிர் கானுள்**
**வரவெதிரின் வைவேல்வாய் வீழ்வாய்-கரவினால்**
**பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை என்மார்பிற்**
**கோதையைக் கொண்டொளித்த கூற்று.** 255

களவினாலே, பேதைமை உடையாளைப், பெண்மைத் தன்மை கொண்டவளை, இட்ட வளையல்களை உடையவளை, என் மார்பிடத்து மாலைபோல விளங்கியவளைப், பற்றிக் கொண்டு ஒளித்திருக்கும் கூற்றமே! உலாவும் நெருப்பு மூடின வெப்பமிகுந்த இக் காட்டினுள்ளே, நீ எனக்கு எதிரிட்டு வருதலை ஏற்பாயானால், என் கூரிய வேலின் வாயிலே பட்டு வீழ்வாய்!

காதலியை இழந்தவன், கூற்றத்தைச் சினந்து இப்படிக் கொதிக்கின்றான். பெண்ணின் சோகம் புலம்பலாக அமைந்ததையும், ஆணின் சோகம் கூற்றத்தின்பாற் கொண்ட கொடுஞ்சினமாக நிகழ்வதையும் கவனிக்க.

## 17. தபுதார நிலை

***புனையிழை இழந்தபின் புலம்பொடு வைகி***
***மனையகத் துறையும் மைந்தன்நிலை யுரைத்தன்று.***

அணிந்த அணிகலன்களை உடையாளான தன் காதலியை இழந்ததன் பின்னர், அந்தத் தனிமைத் துயரொடும் பொருந்தியவனாகத், தன் இல்லிடத்தே தங்காநின்ற ஆடவனது நிலையினைச் சொல்லியது, தபுதாரநிலை ஆகும்.

*தாரமிழந்த நிலை, 'தபுதார நிலை' எனப்பட்டது. 'காதலி இழந்த தபுதார நிலையும்' என்பர் தொல்காப்பியர்-(புறத். சூ. 24). யாக்கையும் இன்பமும் ஒருங்கு நிலையின்மை என்பதனையும் உணர்த்திற்று இது.*

**பைந்தொடி மேலுலகம் எய்தப் படருழந்த**
**மைந்தன் குரிசில் மழைவள்ளல்-எந்தை**
**தபுதாரத் தாழ்ந்த தனிநிலைமை கேளாச்**
**செவிடாய் ஒழிகென் செவி.** 256

*பச்சென்ற வளையல்களை உடையாளாகிய தன் மனைவி மேலுலகத்தைப் பொருந்தினமையாலே, துன்புற்று வருந்திய வலிமையாளனும், தலைவனும், மழைபோல வழங்கும் வள்ளலும் ஆகிய என் தந்தை போல்வான், காதலியை இழந்து அழுந்தின தனிமைத் துன்பமுடைமையைக் கேளாதபடி, என் செவிகள், தாம் செவிடாய்ப் போவனவாக.*

*இது, பரிசிலன் ஒருவன், வள்ளலது தபுதார நிலைகண்டு தன்னுள்ளம் நொந்து கூறியதாம். 'ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை, இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே' (புறம். 245) என வருவது, தலைவன் தானே வருந்துதலை உரைக்கும்.*

## 18. தாபதநிலை

***குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்***
***கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று.***

*குருந்தம்பூ மல்ரும் கண்ணியினை உடையோனான தன் கொழுநன் இறந்தானாகக், கருமையும் அகற்சியுமுடைய கண்ணினளான அவன் மனைவி, கைம்மை நோன்பு எய்தியவாற்றைச் சொல்லியது, தாபத நிலை ஆகும்.*

*தாபத நிலையாவது, நோன்பு நிலை: தவம்புரிந்து ஒழுகிய நிலைமை என்பர். 'இருவரும் ஒருயிரால் நிகழ்ந்தமையின், உயிரும் உடம்பும் இன்பமும் செல்வமும் ஒருங்கிழந்தாள் தலைவியே ஆகும்' என, நச்சினார்க்கினியர், 'காதலன் இழந்த தாபத நிலையும்' (புறத். சூ. 24) என்பதன் உரையுட் கூறுவதையும் கருதுக.*

**கலந்தவனைக் கூற்றம் கரப்பக் கழியாது**
**அலந்தினையும் அவ்வளைத் தோளி-உலந்தவன்**
**தாரொடு பொங்கி நிலனசைஇத் தான்மிசையும்**
**காரடகின் மேல்வைத்தாள் கை.** 257

*தன்னோடும் இரண்டறக் கலந்தவனான தன் கணவனைக் கூற்றமானது ஒளிப்பத், தானும் அவனுடனே அப்போதே*

இறந்துபடாது, நொந்து வருந்துவாளான, அழகிய தொடியணிந்த தோளினை உடையாள், தன்னைவிட்டு இறந்தவனின் மாலையொடு சினந்து, வெறு நிலத்தில் வதிந்து, தான் அருந்தும் கரிய இலையுணவின்மேல் கைவைப்பாள் ஆயினாள்.

'அடகின்மேல் கை வைத்தாள்' எனவே, அதனையும் வேண்டா வெறுப்பொடு நோக்குவாளாயினள் என்பதாம். 'பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுது மறுத்து, இன்னா வைகல் உண்ணும், அல்லிப் படூஉம் புல்லாயினவே' என்னும் புறப்பாட்டு அடிகளும் இதனை விளக்கும்-(புறம்-248.).

## 19. தலைப்பெயல் நிலை

*இன்கதிர் முறுவற் பாலகன் என்னும்*
*தன்கடன் இறுத்ததாய் தபுநிலை உரைத்தன்று.*

இனிதான ஒளிவீசும் நகையினையுடைய, புதல்வன் என்னும், தான் இறுக்கக் கடவதான கடனை இறுத்த தாய், தான், அதன்பின்னர் இறந்த முறைமையைச் சொல்லியது, தலைப்பெயல் நிலை ஆகும்.

**இடம்படு ஞாலத்து இயல்போ கொடிதே**
**தடம்பெருங்கண் பாலகன் என்னும் - கடன்கழித்து**
**முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரணவியா**
**வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய். 258**

முட்போலக் கூரிய பல்லினையுடையாள், மிகப் பெரிய கண்ணினையுடைய பிள்ளையென்று சொல்லும், தான் உலகிற்குக் கொடுக்கக் கடவதனைக் கொடுத்துவிட்டு, மாறுபாடு கெடாது பெரிய பல்லினையுடைய கூற்றுவனது வாயிடத்துத், தானே சென்று புகுந்தாள்; அகன்ற பூமியினது தன்மையோ மிகவும் கொடிதேயாம்!

புதல்வனைப் பெற்றுக் கடன் தீர்ந்த பின்னர், இறந்த தன் கணவனுடன் தானும் சென்று சேர்தலை விரும்பித், தன்னை மாய்த்துக் கொண்ட கற்புடையாளின் செவ்வி கூறியது இது. அவள் கருவுற்றிருந்தபோது, கணவனை இழந்தாள் ஆதல் வேண்டும். இங்கு, 'ஈன்று புறந்தருதலாகிய தன் கடன்' தீர்ந்ததும் கூற்றுவாய்ப் பட்டாளது அந்தத் தகைமையே போற்றப்படுகின்றது. ஆனால், 'ஆய் பெருஞ்சிறப்பிற் சிறுவற் பெயரத், தாய் தப வருஉந் தலைபெயல் நிலை' என வரும் (புறத். சூ.24) தொல்காப்பிய விதிக்குப், 'பொருகளத்துப் பொருது மாயும் பெருஞ் சிறப்பில் தீர்ந்து, தன் மகன் புறங்கொடுத்துப் போந்தானாக, அதுகேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்று,

மகனைக் கூடும் கூட்டம் ஒன்றானும்; இனி, அவன், பிறர் சிறப்பு மாய்தற்குக் காரணமாகிய பெருஞ்சிறப்பொடு களப்பட்டுத் துறக்கத்துப் போயவழி, அவனோடு இறந்துபட வரும் தாயது தலைப்பெயல் நிலைமை யொன்றானும்' என உரைவகுப்பர் நச்சினார்க்கினியர். இவற்றையும் நினைவிற் கொள்க.

## 20. பூசன் மயக்கு-1

*பல்லிதழ் மழைக்கண் பாலகன் மாய்ந்தெனப்*
*புல்லிய பெருங்கிளைப் பூசல்கூ றின்று.*

பலவாகிய இதழ்களையுடைய தாமரைப் பூவைப் போன்று விளங்கும், குளிர்ச்சியான கண்களையுடைய பாலகன் மாய்ந்தான் என்பதனால், பொருந்திய, பெரிய சுற்றத்தினது ஆரவாரத்தினைச் சொல்லியது, பூசன் மயக்கு ஆகும்.

**அலர்முலை அஞ்சொல் அவணொழிய அவ்விற்**
**குலமுதலைக் கொண்டொளித்தல் அன்றி-நிலமுறப்**
**புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ**
**கொல்லிய வந்தொழியாக் கூற்று.** 259

கொல்வான் வேண்டி வந்து, தன் செயலிலே தவிராத தன்மையுடைய கூற்றமானது, பணைத்த முலையினையும், அழகிய சொல்லினையுமுடைய தலைவி அவ்விடத்தே ஒழிய, அந்த வீட்டினது குலமுதலாகிய பிள்ளையைக் கைப்பற்றிக் கொண்டு மறைத்தலல்லது, நிலத்திலே மிகப் பொருந்திய பலவாகிய சுற்றத்தின் ஆரவாரத்திற்கு இரக்கமுற்று, அவனைப் பற்றாதுவிட்டுப போய்விடுமோ?

குலமுதல்வனான புதல்வன் இறந்தது குறித்துச் சுற்றம் அரற்றுவதனைக் குறிப்பிடுகின்றது இது. 'பேரிசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் ஆய்ந்த பூசன் மயக்கத் தானும்' என்னும் தொல்காப்பிய விதியும் (புறத். சூ. 24), அதற்கு நச்சினார்க்கினியர் வகுத்துள்ள உரையும், இதனினும் வேறான கருத்தினைக் கூறுகின்றன.

'பெரும்புகழுடையவனாகி மாய்ந்தான் ஒருவனைச் சுற்றிய பெண்கிளைச் சுற்றம் குரல் குறைவுபட்ட கூப்பீட்டு மயக்கம்' எனவும், 'சுற்றம் மாய்ந்த மயக்கம் என்பது பாடமாயின், சுற்றம் ஒருங்கே மாய்ந்தவழிப், பிறர் அழுத பூசன் மயக்கம் என்று கொள்ளினும் அமையும்' எனவும் கூறுவார் அவர்.

## 21. பூசன் மயக்கு-2

*வேந்தன் மாய்ந்தென வியலிடம் புலம்பினும்*
*ஆய்ந்த புலவர் அதுவென மொழிப.*

*தம் மன்னர் இறந்தானாக, அது குறித்து, அகன்ற நிலத்தின்கண் உள்ளார் இரங்கினும், அந்தப் பூசன்மயக்கு என்றே, ஆராய்ந்த அறிவினையுடையோர் சொல்வார்கள்.*

**எண்ணின் இகல்புரிந்தோர் எய்தாத தில்போலும்**
**கண்ணினொளிர் வேலான் சுரந்தபின்-அண்ணல்**
**புகழொடு பூசன் மயங்கிற்றால் பொங்கும்**
**அகழ்கடல் வேலி யகத்து.** 260

*கண்ணிடத்தே ஒளியெறிக்கும் வேற்படையினை உடையான் நம் மன்னன். அவன் பொருகளத்தே இறந்ததன் பின்னர், மிகாநின்ற அகழ்ந்த கடலினை வேலியாகவுடைய இப் பூமியினிடத்தே, ஆரவாரமெல்லாம், அத் தலைமையாளனின் புகழொடு கூடியவாகத் தலைமணந்தது; ஆதலான். ஆராயின், போரினை விரும்பிய வீரர்கள் பெறாத பேறுதான் ஒன்றுமில்லை போலும்!*

*புகழினை உலகிலே நிலைநிறுத்தியதனால், அவன் பெறக் கடவ பேறுகளைப் பெற்றானாயிற்று; அத்தகைய புகழுடையானும் மாய்ந்தான் என நிலையாமையும் கூறப்பட்டது.*

## 22. மாலை நிலை

***கதிர்வேற் கணவனொடு கனையெரி முழுக***
***மதியேர் நுதலி மாலைநின் றன்று.***

*இறந்துபட்ட, கதிர்த்த வேலினாற் சிறந்த தன் கணவனொடு, தானும் செறிந்த நெருப்பிடத்தே முழுகுதற்குப், பிறையை யொத்த நெற்றியினை உடையவள், மாலைக் காலத்தே மனம் பொருந்தி நின்றது, மாலைநிலை ஆகும்.*

*இதனைப் 'பாலைநிலை' என உரைத்து, 'நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச், சொல்லிடையிட்ட பாலை நிலையும்' (புறத். சூ. 24) என்பர் தொல்காப்பியர். 'அவனொடு எரிபுகுதல் வேண்டி எரியை விலக்கினாரோடு உறழ்ந்து மனைவி கூறிய புறங்காட்டு நிலையும்' என நச்சினார்க்கினியர் விளக்கம் உரைப்பர்.*

**சோலை மயிலன்னாள் தன்கணவன் சொல்லியசொல்**
**மாலை நினையா மனங்கடைஇக்-காலைப்**
**புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்**
**அகையழல் ஈமத் தகத்து.** 261

*சோலையிடத்தே வாழ்கின்ற மயிலைப்போன்ற சாயலினை உடையவள் ஒருத்தி; அவள், தன் கணவன் சொல்லிய சொற்களை*

யெல்லாம் மாலைக் காலத்தே நினைத்தவளாகத், தன் மனத்தை முடுக்கிக், காலைப் பொழுதிலே, மூளும் அழலைப் போன்ற வேலினை உடையவனான தன் கணவனுக்குத் துணையாகித், தானும், கொழுந்துவிட்டு எரியும் நெருப்புப் பொருந்திய சுடுகாட்டகத்தே சென்று நின்றாள்.

'கணவன் சொல்லிய சொல்', 'நின்னைப் பிரியேன்' என்பது. 'வேலோன் புணர்ப்பாகி நின்றாள்' என்றது, அவனுடலொடு கலந்து தானும் நெருப்பிற் குளித்தாள் என்பதாம்.

## 23. மூதானந்தம்-1

***கயலேர் கண்ணி கணவனொடு முடிய***
***வியனெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று.***

கயலையொத்த கண்ணினை உடையாள், தன் கணவனொடு தானும் இறந்துபட, அகன்ற வழியிடத்தே செல்வோர், அவளது கற்புச் செறிவினைக் கண்டு, வியந்து சொல்லியது, மூதானந்தம் ஆகும்.

'கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தம் (புறத். சூ. 24) என்பர் தொல்காப்பியர். 'முதுமை கூறினர் உழுவலன்பு பற்றி' என்பதனால், அவர் பிறவி பலவாகத் தொடர்ந்துவரும் உழுவலன்பினர் என்பதனையும் அறிதல் வேண்டும்.

**ஒருயி ராக உணர்க உடன்கலந்தார்க்கு**
**ஈருயி ரென்பர் இடைதெரியார்-போரில்**
**விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்**
**உடனே உலந்த துயிர்.** 262

போரினிடத்தே நஞ்சினைத் தாங்கும் வேலினை உடையானாகிய தலைவனுக்கும், வெள்ளிய வளையினளான அவன் மனைவிக்கும் உயிர் ஒக்கவே பிரிந்தது; ஆகலான், ஒக்கமணந்த அவ்விருவருக்கும் ஓர் உயிர் என்பதாகவே அறிக; அவர்கட்கு இரண்டு உயிரென்று சொல்லுவோர், நடுநிலை காணத் தெரியாதார் ஆவர்.

'நடு தெரியார்'-சீர்தூக்கி உண்மையினை ஆராய்ந்து அறியாதார்.

## 24. மூதானந்தம்-2

***கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்தொழில்***
***முடியான் அவிதலும் மூதா னந்தம்.***

*கடுவினையாளன், தன்மேற் பகைவருடைய கூரிய அம்புகள் அழுந்துதலானே, தான் கருதிய வினையினை முடியாதானாகவே இறத்தலும், மூதானந்தம் ஆகும்.*

**முந்தத்தான் மாவொடு புக்கு முனையமருட்**
**சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக்-குந்தத்தாற்**
**செல்கணை மாற்றிக் குருசில் சிறைநின்றான்**
**கொல்கணைவாய் வீழ்தல் கொடிது.** 263

*நம் தலைவனானவன், பலரினும் முந்தத் தான் குதிரையுடனே களம்புகுந்தான்; முற்பட்ட போரினுள், பகைவர் சிதறியோடும்படி எதிர்த்து வந்தாரது போரினை விலக்கினான்; தன் கையிடத்துச் சவளப்படையினாலே, தன்மேல் வருகின்ற அம்புகளை நீக்கிக், கரையினைப்போலப் பகைப்படையைத் தடுத்தும் நின்றான்; அவன், பகைவர் விடுத்த கொல்லும் கணைவாய்ப்பட்டு வீழ்தல் என்பது, கொடிதாகும்.*

*'அத் தகையானும் மாய்ந்தானே' என இரங்குவதனால், யாக்கையது நிலையாமையும் கூறினர்.*

## 25. ஆனந்தம்-1

***ஆடமைத் தோளி விரிச்சியும் சொகினமும்***
***வேறுபட அஞ்சி விதுப்புற் றன்று.***

*அசையும் மூங்கிலைப்போன்ற தோளினை யுடையாள், நற்சொல்லும் நன்னிமித்தமும் மாறுபடுதலானே, அச்சமுற்று நடுக்கமுற்றது, ஆனந்தம் ஆகும்.*

*விழுப்புண் பட்டிருந்த தன் கணவனைப் பேணி வருவாள். தீ நிமித்தம் தோன்றக் கண்டு அஞ்சி நடுங்குவது இது.*

**வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேலமுவந் தாங்கினான்**
**சாந்தார் அகலத்துத் தாழ்வடுப்புண்-தாந்தணியா**
**மன்னா சொகினம் மயங்கின வாய்ப்புளும்**
**என்னாங்கொல் பேதை இனி?** 264

*அரசர் ஆரவாரிக்க, வெய்ய போரிடத்தே வேற்காட்டினைத் தடுத்து நின்றான் இவன்; இவனுடைய சந்தனம் நனைந்த மார்பிடத்தே, ஆழ்ந்த வாயினையுடைய புண்கள் தாம் ஆறாவாயின; நிமித்தமும் பொருந்தாதனவாயின; நற்சொல்லும் கலங்கியிருந்தன; இனி, இப்பேதையாள்தான் என்னாகுவளோ?*

*'அவன் சாவ, அவளும் உடன் சாவாள்' என்பது இரங்கியோரின் குறிப்பு. 'ஆனந்தம்' என்பது, சாக்காட்டைக் குறித்தது.*

## 26. ஆனந்தம்-2

*தவப் பெரிய வெஞ்சமங் குறுகும்*
*அவற் கிரங்கினும் அத்துறை யாகும்.*

*மிகப் பெரிய வெவ்விய போரினை மேற்கொண்ட மறவனுக்கு, இரக்கமுற்றுக் கூறினாலும், அந்த ஆனந்தத் துறையே ஆகும்.*

*'இவன் இறந்துபடுவானே' என இரங்குதலின், இது ஆனந்த மாயிற்று.*

**இன்னா சொகினம் இசையா விரிச்சியும்**
**அன்னா வலம்வருமென் ஆருயிரும்-என்னாங்கொல்**
**தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்**
**புக்கான் விடலையும் போர்க்கு.** 265

*அன்னையே! திரண்டு வந்தாரான பகைவேந்தரது வெல்லும் துடிப்பறையும் ஒலி முழங்க, நம் தலைவனும் அவரொடு போரிடற்குக் களத்திடத்தே புகுந்தான்; நிமித்தமும் இன்னதாயுள்ளது; நற்சொல்லும் பொருந்துவனவாக அல்ல; என்னுடைய அரிய உயிரும் சுழலா நின்றது; இதுதான், இனி என்னவாகுமோ?*

## 27. ஆனந்தப் பையுள்

*விழுமங் கூர வேய்த்தோள் அரிவை*
*கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று.*

*மூங்கிலைப் போன்ற தோளினை உடையாள், தன்னுடைய கணவன் இறந்துபட, அதனால் இடும்பை மிகுந்தாளாகி மெலிந்து வருந்தியது, ஆனந்தப் பையுள் ஆகும்.*

**புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை**
**திகழொளிய மாவிசும்பு சேர-இகழ்வார்முன்**
**கண்டே கழிகாதல் இல்லையாற் கைசோர்ந்தும்**
**உண்டே அளித்தென் உயிர்.** 266

*பொலிந்த வீரக்கழலினையுடைய தலைவன், தன்னுடைய புகழானது இந்த உலகத்திலே நிற்கவும், தன்னுடைய உயிர் ஒளிதிகழும் பெரிய வானுலகத்தைச் சேர்ந்த தன்மையன் ஆயினான்; அவனுடன் போகாத என்னை இகழ்கின்றாரை எதிரே கண்டும், அவன் பிரிவாலே செயலற்று நின்றும், உடனே அவனுடன் சென்றுவிடும் பெரிதான காதல் என்பது என்னிடத்தே இல்லையாயிற்றே! என் உயிர் இன்னமும் உளதாயிருக்கிறதே! அது இரங்கத்தக்கது!*

இங்ஙனம் கூறி வருந்துவாள், அடுத்து இறந்து படுதலையும் செய்வாளாகவே, இது ஆனந்தப் பையுள் ஆயிற்று.

## 28. கையறு நிலை-1

*செய்கழன் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்*
*கையற வுரைத்துக் கைசோர்ந் தன்று.*

செய்வினையினாலே சிறப்புற்ற கழலினை அணிந்தோனான மன்னன், போரிடையே இறந்தான் என, அவனைச் சேர்ந்தோர், தம்முடைய கையறவினை உரைத்துச் செயலற்று நிற்பது, கையறு நிலை ஆகும்.

'கையறு நிலை' என்பது 'கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ, ஒழிந்தோர் புலம்பியது' என்பர் தொல்காப்பியர்-(புறத். சூ. 24). கணவனொடு மனைவியர் கழிந்துழி, அவர்கட்பட்ட அழிவு பொருளெல்லாம் பிறருக்கு அறிவுறுத்தித், தாம் இறந்து படாது ஒழிந்து, ஆயத்தாரும், பரிசில் பெறும் விறலியரும் தனிப்படர் உழந்த செயலறு நிலைமை' என்பர் நச்சினார்க்கினியர்.

**தாயன்னான் தார்விலங்கி வீழத் தளர்வொடு**
**நீயென்னாய் நின்றாயென் நெஞ்சளியை-ஈயென்றார்க்கு**
**இல்லென்றல் தேற்றா இகல்வெய்யோன் விண்படரப்**
**புல்லென்ற நாப்புலவர் போன்று.** 267

என்னுடைய நெஞ்சமே! அனைத்துயிருக்கும் தாயைப் போன்று அருள்சுரந்து நின்றவன், பகைவரது முன்னணிப் படையினைத் தடுத்து அப்போரிலே வீழ்ந்து படத், தளர்வுடனே நீ என்னவாகி நின்றனையோ? 'இது தருக' என்று இரந்தார்க்கு, இல்லை என்று உரைத்தலையே அறியாதவனும், போரினை விரும்புவோனுமான நம் தலைவன், வானகம் செல்லப், பொலிவழிந்து போயின செவ்விய நாவினைக் கொண்ட புலவர்களைப் போன்று, நீயும் அளியினை உடையை காண்!

'அளியை-என்றது, இரங்குதற்கு உரியை என்பதாம். அரசனின் சுற்றத்தாரது கையறுநிலை இது.

## 29. கையறு நிலை-2

*கழிந்தோன் தன்புகழ் காதலித் துரைப்பினும்*
*மொழிந்தனர் புலவர் அத்துறை என்ன.*

இறந்தோனது புகழினை அன்புற்று எடுத்துச் சொன்னாலும், அது கையறுநிலைத் துறையாகும் என்று, அறிவுடையோர் சொல்லுவர்.

**நின்று நிலமிசையோர் ஏத்த நெடுவிசும்பில்**
**சென்று கழிந்தான் செருவெய்யோன்-என்றும்**
**அழலுங் கதிர்வேல் அவன்புகழ் பாடி**
**உழலும் உலகத் துயிர்.** 268

*போரினை விரும்புவோனாகிய நம் தலைவன், உலகிலுள்ளோர் நிலையாகத் தன்னைப் புகழ, நெடிதான விசும்பிடத்தே தானும் சென்றனன்; உலகத்தே உளவான உயிர்கள், எரியும் கதிர்த்த வேலினை ஏந்தியோனாகிய அவனது புகழினைப் பாடியவாக, இனி, எந்நாளும் சுழலா நிற்கும்.*

*'சென்று கழிந்தான்,' ஒரு சொல்; 'சென்றான்' என்பது பொருள். 'உலகனைத்தும் புரந்து வாழ்ந்த ஒருவன் மாய்ந்தனனே' என இரங்கிய கையறுநிலை இது.*

## தொகுத்து உரைத்தல்

*பொதுவியற் படலத்துச் சிறப்பிற் பொதுவியற் பாலவாக அமைந்த துறைகள் இதுவரை உரைக்கப்பட்டன. அவை-*

*காட்டிடத்தே கணவனை இழந்த மடந்தையது தனிமைத் துயரைச் சொல்லும் முதுபாலையும்; சுரத்திடையே தன் காதலியை இழந்த கணவனது நிலையைக் கூறும் சுரநடையும்; மனைவியை இழந்த கணவனது நிலையை யுரைக்கும் தபுதார நிலையும்; கணவனை இழந்து கைம்மை பூண்டவளின் நிலையைக் கூறும் தாபத நிலையும்;*

*தன் கடன் முடித்த பின், தாய் இறந்தது கூறலான தலைப்பெயல் நிலையும்; குலமுதலாகிய செல்வன் மறைந்தான் எனச் சுற்றம் பூசலிடலும், வேந்தன் இறந்தானென நாட்டவர் வருந்துதலும் ஆகிய பூசன் மயக்கும்;*

*இறந்த கணவனோடு எரிமூழ்கக் கருதிய மனைவியது மாலைக்காலத்து நிலையினை உரைத்தலாகிய மாலை நிலையும்; கணவனோடு எரி மூழ்குவாளைக் கண்டோர் வியந்து கூறுதலும், கடுவினையாளன் ஒருவன் பகைவரது கணைபட்டுத் தன் செயல் முடியானாக, வீழக் கண்டோர் கூறுதலுமான மூதானந்தமும்;*

*கணவனது புண்ணினைப் பேணியிருக்குமவள், தோன்றிய விரிச்சியும் சொகினமும் மாறுபட நடுங்கியதும், போரினை மேற்கொண்டு செல்வான் ஒருவனைக் கண்டோர் விரிச்சியும் சொகினமும் மாறுபடக் கண்டு உரைத்தலும் ஆகிய ஆனந்தமும்;*

*கணவன் இறந்துவிட, அவனுடன் அக்கணமே உயிர் விடாத தன் நிலைமை குறித்து இரங்கிய மனைவியது நிலையான ஆனந்தப் பையுளும்; மன்னன் மாய்ந்தானாக அவனைச்*

சேர்ந்தோர் செயலற்றதும், இறந்தோன் புகழினைக் கூறி உலகத்து உயிரது சுழற்சிக்கு இரங்கியதுமான கையறு நிலையும் என்பனவாம்.

## 3. காஞ்சிப் பொதுவியற்பால

*(காஞ்சி என்பது வீடுபேறு நிமித்தமாகப், பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றும் குறிப்பினது. இந்த வகையிற், பொதுவியற் பாங்குடன் நிகழ்வன இப்பகுதியுள் கூறப்பெறுகின்றன.)*

**மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி**
**பெருங்காஞ் சிய்யே பொருண்மொழிக் காஞ்சி**
**புலவர் ஏத்தும் புத்தேள் நாட்டொடு**
**முதுகாஞ் சிய்யொடு காடுவாழ்த் துளப்பட**
**மையறு சீர்த்தி வருமிரு மூன்றும்**
**பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால.** (12)

*முதுமொழிக் காஞ்சி; பெருங்காஞ்சி; பொருண்மொழிக் காஞ்சி; புலவரேத்தும் புத்தேள்நாடு; முதுகாஞ்சி; காடு வாழ்த்து என்பன ஆறும், காஞ்சிப் பொதுவியற் பாலன ஆகும்.*

## 30. முதுமொழிக் காஞ்சி

***பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்***
***உலகியல் பொருள்முடி புணரக் கூறின்று.***

*உலகோர் பலரும் புகழுகின்ற அறிவுடையோர்கள்' குற்றம் நீக்கி ஆராய்கின்ற உலகியலுள், முடிந்த பொருளாகிய அறம் பொருள் இன்பத்தை, அனைவரும் அறியக் கூறியது, முதுமொழிக் காஞ்சி ஆகும்.*

**ஆற்றின் உணரின் அருளறமாம் ஆற்றார்க்குப்**
**போற்றார் வழங்கின் பொருள்பொருளாம்-மாற்றிப்**
**புகலா தொழுகும் புரிவளையார் மென்தோள்**
**அகலா தளித்தொழுகல் அன்பு.** 269

*நெறியோடு ஆராய்ந்து உணருமிடத்துப், பல்லுயிர்களிடத்தும் அருளுடைமையே அறம் எனப்படுவதாகும்; வறியார்களுக்குத், தமக்கெனப் போற்றி வையாதவராகப் பொருளினை வழங்கின், அதுவே பொருளுடைமை ஆகும்; கொண்டதோர் அன்பினை மாற்றிப் பிறனொருவன்பால் விருப்பங் கொள்ளாது நடக்கின்ற, முறுக்குவளையினை உடைய மகளிரின் மென்மையான தோளினை, நீங்காதே தண்ணளி செய்து கூடி ஒழுகுதலே காதல் ஆகும்.*

‘அறம் பொருள் இன்பம்’ எதுவென வரையறுத்துக் கூறினர். இவையன்றிப் பிறவெல்லாம் மெய்யான முப்பொருள் ஆகாவென உரைத்து, அவற்றது நிலையின்மையைக் காட்டுவதால், இது முதுமொழிக் காஞ்சி ஆயிற்று.

## 31. பெருங் காஞ்சி

*மலையோங்கிய மாநிலத்து*
*நிலையாமை நெறியுரைத்தன்று.*

மலைகள் உயர்ந்துநிற்பதான இந்தப் பெரிய உலகிடத்தே, நிலையாமை என்பதாகிய நெறியினைச் சொல்லியது, பெருங்காஞ்சி ஆகும்.

‘மாற்றாரும் கூற்றம் சாற்றிய பெருமை’ என, வாணாளது நிலையாமையை உரைக்கும் தொல்காப்பிய விதியையும்-(புறத். சூ. 24.) இதனொடு கருதுக.

**ஆயா தறிவயர்ந் தல்லாந் தகலிடத்து**
**மாயா நிதிய மனைச்செறீஇ-ஈயா**
**திறுகப் பொதியன்மின் இன்றொடு நாளைக்**
**குறுக வருமரோ கூற்று.** 270

உயிரைக் கவரும் கூற்றானது இன்றைக்கோ நாளைக்கோ நும்மை அணுக வரலாம்; அதனால், ஆராயாதே அறிவு தளர்ந்து சுழன்றவராக, அகன்ற உலகத்தின்கண், கெடாத பெருஞ் செல்வங்களை மனையகத்தே சேர்த்து வைத்துப், பிறர்க்குக் கொடாது சிக்கெனக் கட்டி வையாதிருங்கள்.

‘பொருளால் அறங்களைச் செய்து உயிருக்கு உறுதி தேடுங்கள்’ என்பது இது. பெரும்பொருளது நிலையாமை கூறலாற், ‘பெருங் காஞ்சி’ என்றனர்.

## 32. பொருண்மொழிக் காஞ்சி

*எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்*
*புரிந்து கண்ட பொருண்மொழிந் தன்று.*

அவிர்ந்து திகழும் சடாமுடியினை உடையவரான துறவியர், விரும்பித் தெளிந்த பொருளைச் சொல்லியது, பொருண்மொழிக் காஞ்சி ஆகும்.

‘மெய்ப்பொருள் இது’ என உணர்த்துவதால், பொருண் மொழிக் காஞ்சி ஆயிற்று.

**ஆய பெருமை அவிர்சடையோர் ஆய்ந்துணர்ந்த**
**பாய நெறிமேற் படர்ந்தொடுங்கித்- தீய**
**இருளொடு வைகா திடம்படு ஞாலத்து**
**அருளொடு வைகி அகல்.** 271

நெஞ்சமே! உண்டாய பெருமையினையும், விளங்கும் சடாமுடியினையும் உடையோரான முனிவர்கள், தெரிந்து அறிந்த பரந்த மெய்ந்நெறியின் மேலே சென்று அடங்கித், தீதான மன மயக்கத்தொடு தங்காது, அகன்ற பூமியிடத்தே அருளொடு கூடினாயாக இருந்து, பிறவித் துயரினின்றும் நீங்குவாயாக!

## 33. புலவரேத்தும் புத்தேள் நாடு

*நுழைபுலம் படர்ந்த நோயறு காட்சி*
*விழைபுலம் கடந்தோர் வீடுரைத் தன்று.*

நுண்ணிதான அறிவு சென்ற, குற்றமற்ற மெய்க் காட்சியினை உடையவராய், விருப்பத்திற்குக் காரணமான ஐம்புலங்களையும் வெற்றி கொண்டோர், சேர விரும்பும் வீட்டினது தன்மையைச் சொல்லியது, புலவரேத்தும் புத்தேள் நாடு ஆகும்.

பகலும் இரவுமில்லை; பாசமுமில்லை; உணவும் இல்லை; மாறுபாடும் இல்லை; தாழ்வுமில்லை; இப்படி விளங்குவதே வீட்டுலகம் என்பது ஆன்றோர் கருத்தாகும். இதனை விளக்கியுரைப்பது இந்தத் துறை.

**பொய்யில் புலவர் புரிந்துறையும் மேலுலகம்**
**ஐயமொன் றின்றி அறிந்துரைப்பின்-வெய்ய**
**பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்று**
**இகலின் றிளிவரவும் இன்று.** 272

பொய்ம்மையற்ற மெய்யறிவினர்கள் விரும்பி உறைதற்கிடமான மேலுலகம் எப்படிப்பட்டதென்பதை, ஐயப்பாடு ஒன்றேனும் இல்லாதே உணர்ந்து சொல்வதானால், அங்கே வெய்ய பகலும் இல்லை; இரவும் இல்லை; பற்றும் இல்லை; உணவும் இல்லை; மாறுபாடும் இல்லை; தாழ்வும் இல்லை என்க.

'இவற்றானே இவ்வுலகிடத்து உழலும் நாம், இவையில்லாத மேலுலகத்தை நாடுதல் சிறப்புடைத்து என்பது கருத்து; 'துற்று' என்றது வினை நுகர்ச்சியை.

## 34. முது காஞ்சி

*தலைவரும் பொருளைத் தக்காங் குணர்த்தி*
*நிலைநிலை யாமை நெறிப்பட உரைத்தன்று.*

எவற்றுக்கும் மேலாக வருகின்ற மெய்ப்பொருளினது வகைமையைத் தக்கபடி அறிவித்து, ஏனையவற்றது நிலை, நில்லாமையினை முறைப்படச் சொல்லியது, முதுகாஞ்சி ஆகும்.

*நிலையுடையது மெய்ப்பொருள் எனவும், பிற நிலையாமை உடையன எனவும் உணர்த்துதல் இது.*

**இளமை நிலைதளர மூப்போ டிறைஞ்சி**
**உளமை யுணரா தொடுங்கி-வளமை**
**வியப்போவ லில்லா வியலிடத்து வெஃகாது**
**உயப்போகல் எண்ணின் உறும்.** 273

*இளமைப் பருவமானது தன் நிலையினின்றும் தளர்ந்து போக, முதுமையுடனே தாழ்ந்து, உண்மையினை உணராதே அடங்கிச், செல்வத்தினது ஆச்சரியம் ஒழிதலில்லாத அகன்ற இப்பூமியிடத்தே, எதனையும் விரும்பாமல் பிழைத்துப் போதலை எண்ணினால், அஃது உயிருக்கு உறுதியுடைத்தாம்.*

*'இளமை நிலையாமையினையும், செல்வ நிலையாமை யினையும் உணர்ந்து, விருப்பம் என்பதும் அற்றவராக, உண்மைப் பொருளினைத் தெளிந்து, பிழைத்துப் போதலை நினைந்தால் பயன் உண்டாகும்' என்பது கருத்து.*

## 35. காடு வாழ்த்து

***பல்லவர்க் கிரங்கும் பாடிமிழ் நெய்தல்***
***கல்லென ஒலிக்கும் காடுவாழ்த் தன்று.***

*உலகிடத்து எஞ்சியோர் பலருக்கும் நிலைமையினை அறிவுறுத்துவதுபோல முழங்கும், பெரிதான முழக்கத்தையுடைய சாப்பறையானது கல்லென்று முழங்கா நின்ற சுடுகாட்டை வாழ்த்தியது காடு வாழ்த்தியது ஆகும்.*

*'மலர் தலை உலகத்து மரபு நன்கறியப், பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து' என்பர் தொல்காப்பியர் (புறத். சூ. 24). பிறந்தோரெல்லாம் இறப்பவும், தான் நிலைத்திருக்கும் காட்டினை வாழ்த்துவது இது.*

**முன்புறந் தான்காணும் இவ்வுலகை இவ்வுலகில்**
**தன்புறங் கண்டறிவார் தாமில்லை-அன்பின்**
**அழுதார்க ணீர்விடுத்த வாறாடிக் கூகை**
**கழுதார்ந் திரவழங்குங் காடு.** 274

*அன்பினாலே அழுதவருடைய கண்கள் சொரிந்த நீராகிய ஆற்றிலே முழுகி, கூகையும் கோட்டானும் நிறைந்து இராப் பொழுதிலே உலவுவதற்கு இடமான சுடுகாடு, இவ்வுலகத்தினைத் தான் முன்னே முதுகுகாணும்; அன்றி, அதனை முதுகுகண்டு அறிந்தவர்தாம் எவரும் இல்லை.*

*உலகத்தவர் பலரையும் தான் கொண்ட சுடுகாடு நிலையானது; அதனால், உடலது அழிவும் உறுதியானது; ஆகவே, உயிர்க்கு உறுதி தேடல் வேண்டுமென்பது கருத்து.*

## தொகுத்து உரைத்தல்

காஞ்சிப் பொதுவியற்பால என்னும் இப்பகுதி ஆறு துறைகளை உடையது. அவை-

அறம் பொருள் இன்பம் உணர்த்துவதான முதுமொழிக் காஞ்சியும்; நிலையாமை நிலை உரைத்தலாகிய பெருங்காஞ்சியும்; பொருளியல்பு கூறலாகிய பொருண் மொழிக் காஞ்சியும்;

புத்தேளுலகின் தன்மை கூறலாகிய புலவரேத்தும் புத்தேள் நாடும்; நிலையுள்ளனவும் நிலையற்றனவும் உணர்த்துதலாகிய முதுகாஞ்சியும்; பலர் செலத் தான் செல்லாத சுடுகாட்டை வாழ்த்துதலாகிய காடு வாழ்த்தும் ஆம்.

## 4. முல்லைப் பொதுவியற்பால

*(பொதுவியலுள் முல்லைப் பொதுவியற் பால பற்றிக் கூறுவது இந்தப் பகுதியாம். இவை பெரும்பாலும், வாகைத் திணையின் சார்பு உடையன. 'இயல்புமிகுதி கூறுதல் முல்லை' என்று முன்னரே விளக்கப்பட்டது. அதனை மனத்துட் கொண்டே இப்பகுதியினைக் கற்றறிதல் வேண்டும். அகப்பொருளில் வரும் முல்லை, இருத்தலும் இருத்தல் நிமித்தமும் கூறுவது; இது இயல்பு மிகுதி உரைப்பது. இந்த வேறுபாட்டையும் உணர்தல் வேண்டும்.)*

**சீர்சால் முல்லையொடு கார்முல்லை என்றா**
**தேர்முல் லையொடு நாள்முல்லை என்றா**
**இல்லாள் முல்லையொடு பகட்டுமுல்லை என்றா**
**பால்முல் லையொடு கற்புமுல்லை என்றாங்கு**
**இருநான் முல்லையும் பொதுவியற் பால.** (13)

முல்லை; கார் முல்லை; தேர்முல்லை; நாள் முல்லை; இல்லாள் முல்லை; பகட்டு முல்லை; பால் முல்லை; கற்பு முல்லை என்பன எட்டும் பொதுவியற்பாலன ஆகும்.

அவற்றுள்:

### 36. முல்லை

*தடவரை மார்பன் தன்னமர் காதல்*
*மடவரற் புணர்ந்த மகிழ்ச்சிநிலை உரைத்தன்று.*

பெரிய மலையினைப் போன்ற மார்பினை உடைய தலைவன், தன்னை மேவின அன்பினையுடைய, மடப்பத்தினைக் கொண்ட தன் தலைவியைக் கூடிய மகிழ்ச்சியது மிகுதியைச் சொல்லியது, முல்லை ஆகும்.

**ஊதை உளர ஒசிந்து மணங்கமழும்**
**கோதைபோன் முல்லைக் கொடிமருங்குற்-பேதை**
**இவைஇ யிணைந்த குவிமுலை யாகம்**
**கவைஇக் கவலை யிலம்.** 275

*காற்று அசைத்தலானே வணங்கி மணங் கமழுகின்ற மாலையினை யொத்த, முல்லைக் கொடியினைப் போன்ற இடையினையுடைய மடவாளது, தம்மில் இணையொத்துக் குவிந்த முலைகளையுடைய மார்பைத் தழுவிக்கொண்டு, யாம் கவலையில்லேம் ஆயினேம்.*

*'ஆகம் கவைஇக் கவலை இலேம்' எனத், தழுவலது இயல்பினை மிகுத்துக் கூறுதலால், இது முல்லை ஆயிற்று.*

## 37. கார் முல்லை

*அருந்திறற் கட்டூ ரவர்வா ராமுன்*
*கருங்கடன் முகந்து கார்வந் தன்று.*

*பெறுதற்கரிய வலியினையுடைய பாசறையினின்றும் தலைவர் வந்து சேருதற்கு முன்பாகவே, மேகம், கருங் கடலின் நீரை முகந்துகொண்டு வந்தது என்பது, கார் முல்லை ஆகும்.*

**புனையும் பொலம்படைப் பொங்குளைமான் திண்தேர்**
**துனையும் துனைபடைத் துன்னார் - முனையுள்**
**அடல்முகந்த தானை யவர்வாரா முன்னம்**
**கடல்முகந்து வந்தன்று கார்.** 276

*பூணும் பொற்படையாகிய மேலீட்டையும், எழுந்தசையும் தலையாட்டத்தையும் உடைய குதிரைகள் பூட்டப் பெற்ற திண்மையான தேர், கடிய செலவினைக் கொண்ட படையினையுடைய பகைவரது போரிடத்தே, கொலைத் தொழிலை ஏற்றுக் கொண்ட தானையினையுடைய தலைவர் இங்கு வருதற்கு முன்பாகவே, மேகம், கடல்நீரை முகந்து கொண்டு இங்கே வந்தது.*

*இது தலைவியது கூற்று, கார் வரவினது இயல்பினை மிகுத்துக் கூறுதலால் 'கார் முல்லை' ஆயிற்று.*

## 38. தேர் முல்லை

*உருத்தெழு மன்னர் ஒன்னார் தந்நிலை*
*திருத்திய காதலர் தேர்வர வுரைத்தன்று.*

*சினங்கொண்டு போரிடற்கு எழுந்த மன்னர்களாகிய பகைவரது அந்தத் தன்மையினைத், தம் ஆற்றலானே அவரை வென்று திருத்தியமைத்த, காதலரது தேர்வரவினைச் சொல்லியது, தேர் முல்லை ஆகும்.*

சொல்வாள் தலைவி என்பதும், அது செயன்முடித்து மீளும் தலைவனது தேர் வரவைக் கண்டபோது என்பதும் கொள்க. தேர் வரவினை மிகுத்துக் கூறுதலால் தேர்முல்லை ஆயிற்று.

**தீர்ந்து வணங்கித் திறையளப்பத் தெம்முனையுள்**
**ஊர்ந்துநங் கேள்வர் உழைவந்தார்-சார்ந்து**
**பரிகோட்ட மின்றிப் பதவார்ந் துகளும்**
**திரிகோட்ட மாவிரியத் தேர். 277**

போர் முனையிலே பகைவர்கள் தம்முடைய சினம் தீர்ந்தவராக வணங்கித் திறையினை அளந்து கொடுக்கவும், நம்முடைய காதலர், ஒன்றோடொன்று சார்ந்து செலவு வளைவின்றிச், செங்கோல் அறுகம் புல்லைத் தின்று துள்ளா நிற்கும் வளைந்த கொம்பினை யுடையவான மானினம் கெட்டோடும் படியாகத், தேரினைக் கடிதாகச் செலுத்தி, நம்பக்கத்தே வந்தனர்.

'தீர்ந்து வணங்கித் திறையளப்ப' என்றதனால், பகைவரை வென்று, அவரது உருத்தெழுந்த நிலையைத் திருத்தியது ஆயிற்று.

## 39. நாண் முல்லை

*செறுநர் நாணச் சேயிழை யரிவை*
*வறுமனை வைகித் தற்காத் தன்று.*

சிவந்த அணிகலன்களைக் கொண்டிருந்தாளான ஒருத்தி, தன் பகைவரும் நாணங் கொள்ளும்படியாகத், தன் கணவன் இல்லாததால் வறிதான மனையிடத்தே தங்கியிருந்து, தன்னைக் காத்துக் கொண்டது, நாண் முல்லை ஆகும்.

'நாணே வேலியாகத் தன்னைக் காத்தனள்' என, அதன் மிகுதியைக் கூறுலால், நாண் முல்லை ஆயிற்று.

**கொய்தார மார்பிற் கொழுநன் தணந்தபின்**
**பெய்வளை யாட்குப் பிறிதில்லை-வெய்ய**
**வளிமறையும் இன்றி வழக்கொழியா வாயில்**
**நளிமனைக்கு நற்றுணை நாண. 278**

மட்டஞ் செய்த மாலையினை யுடைய மார்பினனான கணவன் பிரிந்துசென்ற பின்பு, பெய்த வளைகளை உடைய அவன் தலைவிக்கு வேறொரு காவலும் இல்லை; வெய்ய காற்றினை மறைக்கும் கதவுதானும் இல்லாதே, யாவரும் இயங்குதலும் ஒழியாதே இருக்கும் வாயிலையுடைய பெரிய மனைக்கு, அவளுடைய நாணே நல்லதொரு துணையாக அமைந்தது.

வளிமறை-கதவைக் குறித்தது.

## 40. இல்லாள் முல்லை-1

*கழுமிய காதற் கணவனைப் பழிச்சி*
*இழுமென் சீர்த்தி இன்மலி புரைத்தன்று.*

*பொருந்திய காதலினையுடைய கணவனை வாழ்த்திப், பலரும் இழுமென இசைக்கும் பாடலாற் புகழப்படும், இல்லாளின் இயல்பு மிகுதியை உரைத்தது, இல்லாள் முல்லை ஆகும்.*

**கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி**
**ஒல்லும் வகையால் விருந்தோம்பிச்-செல்லுந்தம்**
**இற்செல்வம் அன்றி இரந்தவர்க் கீகல்லாப்**
**புற்செல்வம் பூவா புகழ்.** 279

*கல்லென்று முழங்கும் கடலினையே வேலியாக உடைய உலகத்திடத்துக், கணவனின் திருவடிகளை வாழ்த்திச், செயற்படும் வகையானே விருந்ினரைப் பாதுகாத்துச், செல்லும் தம்முடைய வீட்டினுடைய செல்வம் புகழ் பூப்ப தல்லாது, வந்து இரந்தவர்களுக்கும் கொடுக்க மாட்டாத புன்மை கொண்ட செல்வமானது, என்றும் புகழ்பூப்பதில்லை.*

*'வீட்டினுடைய செல்வம்' என்று சிறப்பித்தது மனையாளை, 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' (குறள்) என்பதும் இது.*

## 41. பகட்டு முல்லை

*வயன்மிகு சிறப்பின் வருத்தமும் நோன்மையும்*
*வியன்மனைக் கிழவனைப் பகட்டொடு பொரீஇயன்று.*

*வயல்கள் விளைவாலே மிகுதற்குரிய சிறப்பினைச் செய்தலாலே வந்துறுகின்ற வருத்தத்தாலும், பாரம் பொறுத்த லாலும், அகன்ற மனைக்கு உரியவனை, எருதினோடு ஒப்பிட்டுக் கூறுவது, பகட்டு முல்லை ஆகும்.*

*வேளாண் குடியது இல்லறத் தலைவனைப் பகட்டுக்கு உவமிப்பது, பகட்டுமுல்லை என்பது இது.*

**உய்த்தல் பொறுத்தல் ஒழிவின் றொலிவயலுள்**
**எய்த்தல் அறியா திடையின்றி-வைத்த**
**படுநுகம் பூண்ட பகட்டொடு மானும்**
**நெடுமொழி யெங்கணவன் நேர்.** 280

*செலுத்தலாலும், பாரம் பொறுத்தலாலும், இடையறாது நீரொலிக்கும் வயலினுள்ளே இளைப்பென்பதனை அறியாது, இடையீடின்றி, கழுத்துமேல் வைக்கப்பட்ட பெரிய நுகத்தினைப் பூண்ட எருதொடு, நெடிய புகழினையுடைய எம் கணவன், நேர் ஒப்பவன் ஆவான்.*

*இல்லறத்தை இடையறாது நடத்திச் செல்லுதலையும், அதனிடத்து வருகின்ற குடும்ப பாரத்தைத் தாங்குதலையும், இப்படி உவமித்தனர். மானும்-ஒக்கும். படுநுகம்-பெரிய நுகத்தடி.*

## 42. பால் முல்லை

***அரிபாய் உண்கண் ஆயிழைப் புணர்ந்தோன்***
***பரிவகல் உள்ளமொடு பால்வாழ்த் தின்று.***

*செவ்வரி கருவரி பரந்த மையுண்ட விழிகளையும் தெரிந்த ஆபரணத்தையும் உடையாளை மணந்தவன், வருத்தம் நீங்கின உள்ளத்தொடு, தனக்கு அவளைக் கூட்டிய விதியை வாழ்த்தியது, பால் வாழ்த்து ஆகும்.*

*பால்-பகுதி; அது, அந்தப் பிறப்புக்கெனப் பகுத்து விதிக்கப்படுவதனால் ஆயிற்று.*

**திங்கள் விளங்கும் திகழ்ந்திலங்கு பேரொளி**
**அங்கண் விசும்பின் அகத்துறைக-செங்கண்**
**குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்**
**பயில்வளைய நல்கிய பால்.** 281

*கடை சிவந்த கண்களையும், குயிலது குரலைப் போன்ற இனிய பேச்சினையும், கூர்மையான பற்களைக் கொண்ட சிவந்த வாயினையும், செறிந்த வளையல்களையும் உடையாளான இவளை, எனக்கு மனைவியாகத் தந்தருளிய விதியானது, திங்கள் மண்டிலம் விளங்கும் பெரிதான சோதியை உடைய அழகிய இடமகன்ற வானத்தின் அகத்தாகச், சென்று உறைவதாக!*

*நல்லூழது மிகுதியைக் கூறலால், இது பால் முல்லை ஆயிற்று.*

## 43. கற்பு முல்லை - 1

***பொன்திகழ் சுணங்கிற் பூங்கண் அரிவை***
***நன்றறி கொழுநனை நலமிகுத் தன்று.***

*பொன்னைப்போல விளங்காநின்ற தேமற் புள்ளிகளையும், பொலிவமைந்த கண்களையும் உடையாள் ஒருத்தி, நன்மையை அறிவானான தன் கணவனுடைய நலத்தை மிகுத்துச் சொல்லியது, கற்புமுல்லை ஆகும்.*

*நலத்தது மிகுதியைக் கூறுதலால், இது கற்பு முல்லை ஆயிற்று.*

**நெய்கொள் நிணந்தூ நிறைய அமைத்திட்ட**
**குய்கொள் அடிசில் பிறர்நுகர்க-வைகலும்**
**அங்குழைக் கீரை அடகு மிசையினும்**
**எங்கணவன் நல்கல் இனிது.** 282

நெய்யைத் தன்னிடத்தே கொண்ட, நிணமும் தசையும் மிகுதியாகக் கூட்டி ஆக்கின, பொரிக்கறியை உடைத்தான சோற்றைப், பிறர் அருந்துக; அழகிய தளிரையுடைய கீரையாகிய இலைக்கறியையே அருந்தினாலும், எமது கணவன் எமக்கு அருளும் அதுவே, எமக்கு நுகர்தற்கு இனிதாயிருக்கும்.

குய்-தாளிதம். 'கணவன் அருளுதலைப் பெற்றால் கீரை அடகு மிசையினும் இனிது' எனக் கற்பின் மிகுதியால் உரைத்த இயல்பு கூறப்பட்டது.

## 44. கற்பு முல்லை-2

***மேவரும் கணவன் தணப்பத் தன்வயின்***
***காவல் கூறினும் அத்துறை யாகும்.***

பொருந்துதல் வந்த கணவன் தன்னை விட்டு நீங்கினனாக, மனைவி, தன்னிடத்து அமைந்த காவலைச் சொல்லினும், அது கற்புமுல்லை ஆகும்.

**மௌவல் விரியும் மணங்கமழ் மான்மாலைத்**
**தௌவல் முதுகுரம்பைத் தான்றமியள்-செவ்வன்**
**இறைகாக்கும் இவ்வுலகில் இற்பிறந்த நல்லாள்**
**நிறைகாப்ப வைகும் நிறை.** 283

செவ்விதாக மன்னவன் காத்துவருகின்ற இந்த உலகினிடத்தே, நற்குடியிலே பிறந்த நற்பண்பினை உடையாள், முல்லைமலரா நின்ற மணங்கமழும் மயக்கத்தையுடைய மாலைப் பொழுதிலே, அழிந்த பழங்கூரையினைக் கொண்ட குடிலிடத்தே, தான் தனியளாகவே இருக்கின்றனள்; எனினும் காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கமாகிய நிறையுடைமை காத்தலினாலே, அவளுடைய கற்பும் நிலைபெறா நின்றது.

மௌவல்-முல்லை. தௌவல்-அழிந்த. கற்புத் தன்மையது மிகுதி இவ்வாறு கூறப்பட்டது.

## 45. கற்பு முல்லை-3

***திருவளர் நன்னகர் அடைந்த கொழுநன்***
***பெருவளம் ஏத்தினும் அத்துறை ஆகும்.***

செல்வம் பெருகும் அழகிய மாளிகையிலே சேர்ந்த கணவனது பெரிய செல்வத்தினை, மனைவி வாழ்த்தினாலும், அது கற்புமுல்லைத் துறை ஆகும்.

**ஊழிதோ றூழி தொழப்பட் டுலைவின்றி**
**ஆழிசூழ் வையத் தகமலிய-வாழி**
**கருவரை மார்பினெங் காதலன் நல்க**
**வருவிருந் தோம்பும் வளம்.** 284

*வலிய மலைபோன்ற மார்பகத்தை உடையவனான எம் காதலன் அருள, யான் வருகிற விருந்தினரைப் போற்றுகின்ற இந்த வளமானது, நெடுங்காலந்தோறும் நெடுங்காலந் தோறும் வணங்கப்பட்டுக், கெடுதலின்றிக், கடல் சூழ்ந்த இவ்வுலகிடத்தே பெருக வாழ்வதாக!*

*'ஊழிதோறூழி' எனவே, தொடர்ந்து அவனையே கணவனாக அடைதலையும், அவன் வீட்டது வளம் பெருகுதலையும் நினைந்தனள்; இதனால், அவளது கற்புத் தன்மையின் மிகுதியும் அறியப்படும்.*

## தொகுத்து உரைத்தல்

*பொதுவியலுள், முல்லைப் பொதுவியற்பாலனவாகிய ஒழுக்கம், எட்டு வகைத் துறைகளான் அமையும். அவை-*

*தலைவன் தலைவியொடு கூடிய மகிழ்ச்சியது மிகுதியினை உரைத்தலாகிய முல்லையும்; தலைவன் வினைமுற்றி மீண்டு வாராமுன் வந்து தோன்றிய காரினது மிகுதியைக் கூறலாகிய கார் முல்லையும்; வினை முடித்து வரும் தலைவனது தேரது மிகுதியைக் கூறலாகிய தேர்முல்லையும்;*

*நாணே காவலாகப் பிரிவிடை இருந்தாளது சிறப்பை மிகுத்துக் கூறலாகிய நாண்முல்லையும்; இல்லாளது தன்மை மிகுதியை உரைத்தலாகிய இல்லாண் முல்லையும்; மனைவி, தன் கணவனை உழவெருதோடு ஒப்பிட்டுக் கூறுதலாகிய பகட்டு முல்லையும்.*

*கணவன், மனைவியை அடையத் தந்த ஊழினை வாழ்த்தலாகிய பான்மிகுதியும்; கணவனின் நன்மையை மனைவி பாராட்டலும், தனக்குத் தானே நிறைபூண்டிருக்கும் மனைவியது காவல் மிகுதியை உரைத்தலும், கணவனது வளமனைச் செல்வத்தை மனைவி வாழ்த்தலும் ஆகிய கற்பு முல்லையும் ஆம்.*

✡✡✡

# 11. கைக்கிளைப் படலம்

*(கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம் ஆகும். அது, ஒருவர் மாட்டுக் காமவிருப்பு எழப், பிறிதொருவர் மாட்டு எழாதேயிருக்கின்ற ஒரு நிலைமை. இதனை அகத்திணை இயலுள் கொள்வர் தொல்காப்பியர். இது, ஆண்பாற் கூற்று எனவும், பெண்பாற் கூற்று எனவும், இருவகையுள் அடங்கும்.)*

## 1. ஆண்பாற் கூற்று

**காட்சி ஐயம் துணிவே உட்கோள்**
**பயந்தோர்ப் பழிச்சல் நலம்பா ராட்டல்**
**நயப்புற் றிரங்கல் புணரா இரக்கம்**
**வெளிப்பட இரத்தல் எனவிவ் வொன்பதும்**
**ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.** (14)

*ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை; காட்சி; ஐயம்; துணிவு; உட்கோள்; பயந்தோர்ப் பழிச்சல்; நலம் பாராட்டல்; நயப்புற் றிரங்கல்; புணரா இரக்கம்; வெளிப்பட இரத்தல் என்னும் ஒன்பது துறைகளான் நிகழும்.*

### 1. காட்சி

***கரும்பிவர் பூம்பொழிற் சுடர்வேற் காளை***
***கருந்தடங் கண்ணியைக் கண்டுநயந் தன்று.***

*வண்டு பறக்கும் பூம்பொழிலினிடத்தே, ஒளி சுடருகின்ற வேலினை உடையானான தலைவன், கரிய பெரிய விழியினை உடையாள் ஒருத்தியைக் கண்டு, அவளை அடைதலை விரும்பியது, காட்சி ஆகும்.*

*(மருட்பா)*

**கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா**
**அரும்பிவர் மென்முலை தொத்தாப்-பெரும்பணைத்தோட்**
**பெண்டகைப் பொலிந்த பூங்கொடி**
**கண்டேங் காண்டலும் களித்தவெங் கண்ணே.** 285

*கரிய பெரிய தன் கண்களே வண்டுகளாகவும், தன் செவ்விய வாயே தளிராகவும், அரும்பைப் போன்ற மெல்லிய முலைகளே பூங்கொத்தாகவும், பெரிய மூங்கில் போன்ற தோளாலும்,*

*பெண்மைத் தன்மையாலும் அழகுபெற்ற, மலர்க்கொடி ஒன்றினை யாம் கண்டேம்; காண்டலும், எம் கண்கள் களித்தன.*

*இது, பொழிலிடைக் காரிகை ஒருத்தியைக் கண்டானொரு தலைவன், காமுற்றதனைக் கூறுவது.*

## 2. ஐயம்

***கன்னவில் தோளான் கண்டபின் அவளை***
***இன்னளென் றுணரான் ஐயமுற் றன்று.***

*உலக்கல் சீலிக்கப்பட்ட தோளினை உடையானான தலைவன், அங்ஙனம் ஒருத்தியைக் கண்டதன் பின்னர், அவள் இன்ன தன்மையள் என்று உணராதவனாக ஐயமுற்றது, ஐயம் ஆகும்.*

*'கன்னவில்' என்பதற்குக், 'கல்லினை யொத்த திண்மை வாய்ந்த' எனினும் ஆம்.*

**தாமரைமேல் வைகிய தையல்கொல் தாழ்தளிரின்**
**காமருவும் வானோர்கள் காதலிகொல்-தேமொழி**
**மையமர் உண்கண் மடந்தைகண்**
**ஐய மொழியா தாழுமென் நெஞ்சே.** 286

*இனிதான பேச்சினையும் மையுண்ணும் கண்களையும் உடைய இந்த மடவாளிடத்தே, என்னுடைய நெஞ்சம் ஐயப்பாட்டின் நீங்காதாய்த் துயரத்தில் அழுந்துகின்றதே! இவள், தாமரை மலரிடத்தே தங்கின திருமகள் தானோ? தாழும் தளிரினையுடைய பொழிலிடத்தே பொருந்திய வானோர்களது காதன்மிக்க ஒரு தெய்வமகளோ? இவள்தான் யாரோ?*

*'காதலி' என்றது, காதன்மிக்க மகளை.*

## 3 . துணிவு

***மாநிலத் தியலு மாத ராமெனத்***
***தூமலர்க் கோதையைத் துணிந்துரைத் தன்று.***

*தூய மலர்களால் ஆகிய மாலையினை உடையவளான தலைவியைப், பெரிய பூமியிடத்தாக நடக்கும் மானிடமகளே எனத் துணிந்து, அதனைச் சொல்லியது, துணிவு ஆகும்.*

*துணிதல்-தெளிதல்.*

**திருநுதல் வேரரும்பும் தேங்கோதை வாடும்**
**இருநிலம் சேவடியும் தோயும்-அரிபரந்த**
**போகிதழ் உண்கணும் இமைக்கும்**
**ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே.** 287

*இவளுடைய அழகிய நெற்றியும் வேர்வை அரும்பும்; இவள் அணிந்துள்ள தேனையுடைய மலர்மாலையும் வாடும்; இவளது சிவந்த அடிகளும் பெரிய நிலத்திடத்தே பொருந்தும்; இவளின் செவ்வரி கருவரி பரந்த நீண்ட இமையினையுடைய கண்களும் இமைக்கும்; ஆகலான், இவள், இந்த அகன்ற பூமியிடத்து மானிடமகளாகிய ஓர் அணங்கே ஆகும்.*

*வேர் அரும்புதல் முதலாயின அடையாளங்களால், மானிட மகள் எனத் துணிந்தான்; தேவமகள் ஆயின், இவை தோன்றா என்பதும் அறிக.*

## 4. உட்கோள்

***இணரார் கோதையென் நெஞ்சத் திருந்தும்***
***உணரான் என்னையென வுட்கொண் டன்று.***

*'கொத்து நிறைந்த மாலையினை உடையவள், என் நெஞ்சிடத்தே நிறைந்துருந்தும் என்னை அறியாளாயினள்' எனத், தன் உள்ளத்திலே தலைவன் கருதுவது, உட்கோள் ஆகும்.*

*'என்னை உணரான்' என்றது, என் ஆராத காம விருப்பினை அறியாள் என்றதாம்.*

**கவ்வை பெருகக் கரந்தென் மனத்திருந்தும்**
**செவ்வாய்ப் பெருந்தோள் திருநுதலாள்-அவ்வாயில்**
**அஞ்சொல் மாரிபெய் தவியாள்**
**நெஞ்சம் பொத்தி நிறைசுடும் நெருப்பே.** 288

*சிவந்த வாயினையும், பெரிய தோளினையும், அழகிய நுதலினையும் உடையவள், ஆரவாரம் மிக மறைந்து என் நெஞ்சத்தே இருந்தும், தனது அழகிய வாயினது அழகிய சொன்மாரி யாகிய மழையைச் சொரிந்து, என் நெஞ்சிடத்தே மூடி என் நிறையுடைமையைச் சுடுகின்ற இந்தக் காம நெருப்பினை, அவியாள் ஆயினளே!*

*உட்கோளாவது, இவளை அடைவோம் என்பதனை உள்ளத்தே உறுதி கொள்ளுதல்.*

## 5. பயந்தோர்ப் பழிச்சல்

***இவட்பயந் தெடுத்தோர் வாழியர் நெடிதென***
***அவட்பயந் தோரை ஆனாது புகழ்ந்தன்று.***

*'இந்த மடவாளைப் பெற்றெடுத்தவர் பெரிதும் வாழ்வாராக' என, அவளைப் பெற்றோரை அமையாது புகழ்ந்தது, பயந்தோர்ப் பழிச்சல் ஆகும். எடுத்தல்-வளர்த்தல்.*

**கல்லருவி யாடிக் கருங்களிறு காரதிரும்**
**மல்லலஞ் சாரன் மயிலன்ன-சில்வளைப்**
**பலவொலி கூந்தலைப் பயந்தோர்**
**நிலவரை மலிய நீடுவா ழியரோ!** 289

*மலையருவியிலே நீராடிக் கரிய களிற்று யானைகள் மேகங்களைப் போல முழங்காநிற்கும் வளப்பத்தையுடைய, அழகிய மலைப்பக்கத்தே, சில தொடியினையும் பல பகுதியாய்த் தழைந்த கூந்தலையும் உடையாளாய் மயில்போன்று நின்றாளைப் பெற்றோர், பூமியெல்லையிலே நெடுங்காலம் வளம்பெருக வாழ்வாராக!*

*கார் அதிரும்-காரினது இடியொலியினைப் போல முழங்கும். ஒலி கூந்தல்-தழைத்த கூந்தல்.*

## 6. நலம் பாராட்டல்

***அழிபடர் எவ்வம் கூர ஆயிழை***
***பழிதீர் நன்னலம் பாராட் டின்று.***

*மிகுதியாகப் படருகின்ற காமத் துன்பமானது பெருகா நிற்ப, ஆராய்ந்த அணிகளை உடையாளது, குற்றமற்ற நல்ல அழகினைப் பாராட்டியது, நலம் பாராட்டல் ஆகும்.*

**அம்மென் கிளவி கிளிபயில ஆயிழை**
**கொம்மை வரிமுலை கோங்கரும்ப-இம்மலை**
**நறும்பூஞ் சார லாங்கண்**
**குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணே.** 290

*இவளுடைய அழகிய மெல்லிதான வார்த்தையைக் கிளி பழகா நிற்பத், தெரிந்த அணிகளை உடையவளான இவளது குவிந்த அழகிய முலைகளைக் கோங்க மரங்கள் அரும்புதலைச் செய்ய, இந்த மலையிடத்து, நறுமலர்களையுடைய இந்தச் சாரலிடத்தேயுள்ள சிறுசுனைக் குவளையிடத்தே, இவளது மிகப்பெரிய கண்களும் மலர்ந்துள்ளனவே!*

*சொல்லையும், முலைகளையும், கண்களையும் வியந்து அவற்றது அழகினைப் பாராட்டியது இது.*

## 7. நயப்புற்றிரங்கல்

***கொய்தழை யல்குல் கூட்டம் வேண்டி***
***எய்துதல் அருமையின் இறப்பப் புகழ்ந்தன்று.***

*கொய்த தழையாடையினை அணிந்த அல்குல் தடத்தினை உடைய தலைவியது கூட்டத்தினை விரும்பி, அதனை அடைதல்*

*அருமையுடைத்தாதலின் மிகவும் புகழ்ந்தது, நயப்புற்று இரங்கல் ஆகும்.*

*கூட்டத்தை நயந்து, அது பெறுதற்கு அருமையாயினதால் இரங்கியது இதுவாகும்.*

**பெருமட நோக்கிற் சிறுநுதற் செவ்வாய்க்**
**கருமழைக்கண் வெண்முறுவல் பேதை-திருமுலை**
**புல்லும் பொறியி லேனுழை**
**நில்லா தோடுமென் நிறையில் நெஞ்சே.** 291

*என்னுடைய நிறையில்லாத நெஞ்சமானது, மிகுதியான மடப்பத்தாற் சிறந்த பார்வையினையும், சிறுத்த நுதலினையும், சிவந்த வாயினையும், கரிய மழைபோலக் குளிர்ந்த கண்களையும், வெள்ளிய முறுவலையும் உடைய மடவாளது, அழகிய முலைகளைத் தழுவும் விதியில்லாதேனிடத்தே இருக்கத் தரியாது, ஓடா நின்றதே!*

*'ஓடுதல்' அவளிடத்தே என்க.*

## 8. புணரா இரக்கம்

*உணரா எவ்வம் பெருக ஒளியிழைப்*
*புணரா இரக்கமொடு புலம்புதர வைகின்று.*

*பிறர் அறியாத துக்கமானது தன்பாற் பெருகுதலானே, சுடர்விடும் ஆபரணத்தை உடையாளை மணவாத துன்பத்தோடே, தனிமையுறத் தங்கியது, புணரா இரக்கம் ஆகும்.*

**இணரார் நறுங்கோதை எல்வளையாள் கூட்டம்**
**புணராமற் பூசல் தரவும்-உணராது**
**தண்டா விழுப்படர் நலியவும்**
**உண்டால் என்னுயிர் ஓம்புதற் கரிதே.** 292

*கொத்து நிறைந்த நறிய மாலையினையும், ஒளியிலங்கும் வளைகளையும் உடையாளது புணர்ச்சியினைப் பெறாமையினாலே, பிறர் இகழும் ஆரவாரம் உண்டாகவும் அறியாது கெடாத சீர்மையினையுடைய நினைவு வருத்தவும் என்னுடைய உயிரானது சிறிதே உளதாயிருக்கின்றது; இனியும், இதனைப் பாதுகாத்தற்கு என்னால் அரிதாகும்.*

*இனியும் அவள் இணங்காளாயின், என்னுயிர் என்னை விட்டுப் போய்விடும் எனப் புலம்பியது இது.*

## 9. வெளிப்பட இரத்தல்

*அந்தழை அல்குல் அணிநலம் புணரா*
*வெந்துயர் பெருக வெளிப்பட இரந்தன்று.*

*அழகிய தழையாடை அணிந்த அல்குலினை உடையாளது, நல்ல நலத்தினைக் கூடாத வெய்ய வருத்தமானது மிகுதியாக வெளிப்படுதலினாலே, தலைவன் அவளை இரந்தது, வெளிப்பட இரத்தல் ஆகும்.*

**உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன**
**கரவரு காமம் கனற்ற-இரவெதிர**
**முள்ளெயி றிலங்கு முகிழ்நகை**
**வெள்வளை நல்காள் விடுமென் உயிரே.** 293

*வலிய ஆரவாரத்தையுடைய கடலானது, கரை கடந்து ஏறிப் பரந்தாலொத்த, ஒளித்தற்கரிய காமமானது என்னை அழற்ற, யான் இவளை இரத்தலை மேற்கொள்ளவும், முட்போன்ற பற்கள் விளங்கும் மூரல் முறுவலையும் வெள்ளிய வளையல்களையும் உடையாள், எனக்கு அருளாள் ஆயினள்; அதனால், இனி என் உயிர் என் உடலுடன் கொண்ட தொடர்பையும் விட்டுவிடும்.*

*'நல்காளாகவே உயிர் விடுவேன்' எனக் கூறியது இது.*

## தொகுத்து உரைத்தல்

*கைக்கிளைப் படலத்தின் ஆண்பாற் கூற்று நிகழுவதன் முறைமையினை இதுவரை கண்டோம்.*

*தலைவன் ஒருவன் பொழிலிடத்தே தலைவியைக் காண்டலாகிய காட்சியும்; கண்ட அவளைத் தேவமகளோ மானுட மகளோ என ஐயுறும் ஐயமும்; அவள் மானுடமகளே எனத் துணிதலான துணிவும்;*

*தன்னைத் தலைவி அறிந்திலளே எனத் தலைவன் உள்ளத்தே கருதியதாகிய உட்கோளும்; தலைவியைப் பெற்றோரை வாழ்த்துதலாகிய பயந்தோர்ப் பழிச்சலும்; தலைவியது அழகினை வியந்து பாராட்டுதலாகிய நலம் பாராட்டலும்;*

*தலைவியை எய்துதல் அருமையாயினமையின், தலைவன் அவளைப் பெரிதும் புகழ்ந்து நின்றதான நயப்புற் றிரங்கலும், தலைவியைக் கூறப்பெறாத துன்பமிகுதியோடே தலைவன் தனிமையுற்று வருந்துதலான, புணரா இரக்கமும்; தலைவியைக் கூடாத வெய்ய துன்பமானது வெளிப்பட்டுப் பெருகத், தலைவன் இருந்து கூறுதலான, வெளிப்பட இரத்தலும் என்னும் ஒன்பது துறைகளாக இது நிகழும்.*

## 2. பெண் பாற் கூற்று

*(கைக்கிளைப் படலத்தின் பெண்பாற் கூற்று நிகழும் முறைமையினை உரைப்பது இந்தப் பகுதி. தன் பால் காதல் கொள்ளுதல் இல்லாதான் ஒரு தலைவனைத், தலைவி ஒருத்தி, தான் காமுற்றுக் கூடுதலை விரும்பியவளாகக் கூறுதல் இதுவாகும்.)*

**காண்டல் நயத்தல் உட்கொள் மெலிதல்**
**மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்**
**பகன்முனி வுரைத்தல் இரவுநீடு பருவரல்**
**கனவின் அரற்றல் நெஞ்சொடு மெலிதல்**
**பெண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.** (15)

*காண்டல், நயத்தல், உட்கோள், மெலிதல், மெலிவொடு வைகல், காண்டல் வலித்தல், பகல் முனிவுரைத்தல், இரவு நீடு பருவரல், கனவின் அரற்றல், நெஞ்சொடு மெலிதல் என்னும் பத்தும் பெண்பாற் கூற்றுக் கைக்கிளை ஆகும்.*

*அவற்றுள்:-*

### 10. காண்டல்

***தேம்பாய் தெரியல் விடலையைத் திருநுதல்***
***காம்பேர் தோளி கண்டுசேர்ந் தன்று.***

*மதுப் பொழியும் மாலையினையுடைய ஒரு தலைவனை, அழகிய நுதலினையும் மூங்கிலையொத்த தோள்களையும் உடையாள் ஒரு தலைவி நோக்கி, அவன்பாற் காமுற்றது காண்டல் ஆகும்.*

**கடைநின்று காமம் நலியக் கலங்கி**
**இடைநின்ற ஊரலர் தூற்றப்-புடைநின்ற**
**எற்கண் டிலனந் நெடுந்தகை**
**தற்கண்ட னென்யான் கண்ட வாறே.** 294

*அந்தப் பெரிய மேம்பாட்டினையுடைய தலைவன், என்னிடத்தே ஆசையானது நிலைபெற்று வருத்தவும், அதனாற் கலங்கி நடுகின்ற ஊரவர் அலர் தூற்றவும், தன் பக்கத்திலேயே நின்ற என்னைத் தான் கண்டான் அல்லன்; யானே அவனைக் கண்டேன்; யான் கண்டபடியும் இவ்வாறேயாம்.*

*'அவனை யான் கண்டு ஆசையுற்றதன்றி, அவன் என்னைக் கண்டிலன்' என்றனள். கடை-இடம், புடை-பக்கம்.*

### 11. நயத்தல்

***கன்னவில் திணிதோட் காளையைக் கண்ட***
***நன்னுதல் அரிவை நயப்புரைத் தன்று.***

*கல்லினை ஒப்பாகக் கூறுதற்குரிய திண்மையான தோள்களை உடையவனான, காளைபோல்வானைக் கண்ட நல்ல நுதலினை*

உடையாள், தனது ஆசைப்பாட்டைச் சொல்லியது, நயத்தல் ஆகும்.

**கன்னவில் தோளானைக் காண்டலும் கார்க்குவளை**
**அன்னவென் கண்ணுக் கமுதமாம் - என்னை**
**மலைமலிந் தன்ன மார்பம்**
**முலைமலிந் தூழூழ் முயங்கங் காலே.** 295

மலையையொத்த தோளானைக் கண்டேனாகக், கருங்குவளை மலரினையொத்த என்னுடைய கண்களுக்கு அதுவே அமுதமாக இருந்தது; மலை பரந்தாற் போன்ற அவனது மார்பகத்தினை, என் முலைகள் விம்மியவையாய் முறை முறையாகத் தழுவுமிடத்து, அந்த இன்பம் எங்ஙனே இருக்குமோ?

தழுவலை நயந்து இறங்கியது இது. ஊழ்-முறை.

## 12. உட்கோள்

***வண்டமர் குஞ்சி மைந்தனை நயந்த***
***ஒண்டொடி அரிவை உட்கொண் டன்று.***

வண்டினம் மேவும் மயிரினையுடைய தலைவனைத் தழுவுதலை விரும்பிய, ஒள்ளிய வளையினையுடைய தலைவியானவள், அந்த நினைவினைத் தன்னுட் கொண்டு வருந்தியது, உட்கோள் ஆகும்.

**உள்ளம் உருக ஒளிவளையும் கைநில்லா**
**கள்ளவிழ் தாரானும் கைக்கணையான்-எள்ளிச்**
**சிறுபுன் மாலை தலைவரின்**
**உறுதுயர் அவலத் துயலோ அரிதே.** 296

நெஞ்சமானது உருகுதலானே ஒள்ளிய வளைகளும் கையிடத்து நில்லாவாயின; தேன் ஒழுகப்பட்ட தாரினை உடையானாகிய அவனும் என் கைகளுக்கு அகப்படான் ஆயினன்; என்னை இகழ்ந்து, சிறுமையிடைத்தாய்ப் புற்கென்ற மாலைக்காலமும் மேல்வந்ததாயின், அப்பொழுது, மிகாநின்ற துன்பமாகிய இழுக்கினின்றும் யான் தப்பிப் பிழைத்தல், மிகவும் அருமையுடையதாகும்.

எனவே, எங்ஙனமும் அவனைக் கூடுதல் வேண்டும் எனக் கருதினள் என்க.

## 13. மெலிதல்

***ஒன்றார் கூறும் உறுபழி நாணி***
***மென்றோள் அரிவை மெலிவொடு வைகின்று.***

பொருந்தாதார் கூறுகின்ற மிக்க பழிச்சொல்லுக்கு நாணியவளாக, மெத்தென்ற தோளினையுடைய தலைவியானவள், நாணமுற்று, வாட்டத்துடனே தங்கியது, மெலிதல் ஆகும்.

**குரும்பை வரிமுலைமேற் கோல நெடுங்கண்**
**அரும்பிய வெண்முத் துகுப்பக்-கரும்புடைத்தோட்**
**காதல்செய் காமங் கனற்ற**
**ஏதி லாளற் கிழந்தனென் எழிலே.** 297

*அழகிய நெடிய கண்கள், தம்மிடத்தே அரும்பிய வெண்முத்தான கண்ணீரைக், குரும்பைபோன்ற அழகிய முலைகளின் மேலாகச் சிந்தக் காமனது கரும்பெழுதிய தோளினைத் தழுவுதல் வேண்டுமென்னும் ஆசையினைச் செய்தலான காமமானது வெதுப்ப, யான், நமக்கு அருளாத அயலான் ஒருவனின் பொருட்டாக, என் அழகினை இழந்தேனே!*

*வரி-அழகு. கோலம்-அழகு. காதல் செய் காமம்-காதலைத் தோன்றச் செய்கின்ற காமம். கனற்ற-வெதுப்ப.*

## 14. மெலிவொடு வைகல்

***மணிவளை நெகிழ மாநலம் தொலைய***
***அணியிழை மெலிவி னாற்றல் கூறின்று.***

*மாணிக்க வளையல்கள் கழலவும், பெரிதான அழகெல்லாம் கெடவும், அழகிய ஆபரணங்களை உடையவள், தனது மெலிவினது வலிமையைச் சொல்லியது, மெலிவொடு வைகல் ஆகும்.*

**பிறைபுரை வாணுதல் பீரரும்ப மென்றோள்**
**இறைபுனை எல்வளை யேக-நிறைபுணையா**
**யாம நெடுங்கடல் நீந்துவேன்**
**காம வொள்ளெரி கனன்றகஞ் சுடுமே.** 298

*இளம் பிறையினைப் போன்ற ஒளியுடைய நெற்றி பீர்க்கம் பூப்போலப் பசலை பூக்கவும், மெத்தென்ற தோளின் முன்கையிடத்தாகச் செறித்த ஒளிவளைகள் கழன்று ஓடவும், இவ் யாமமாகிய பெரிய கடலினை, யான், என் நிறையே புணையாகக் கொண்டு நீந்தாநிற்பேன்; ஆயினும், காமமென்னும் ஒள்ளிய அழலானது கனன்று, என் உள்ளத்தை எரித்துக் கொண்டும் இருக்குமே!*

*'யாம நெடுங்கடலை நிறைபுணையா நீந்துவேன், என்னைக் காம வொள்ளெரி கனன்று அகஞ் சுடும்' என்றனள்.*

## 15. காண்டல் வலித்தல்

***மைவரை நாடனை மடந்தை பின்னரும்***
***கைவளை சோரக் காண்டல் வலித்தன்று.***

மேகத்தைப் பொருந்தின மலைநாடனை, மடவாள், அதன் பின்னரும், தன் கைவளைகள் நெகிழ்தலானே, காணுதற்கு உறுதிகொண்டது, காண்டல் வலித்தல் ஆகும்.

**வேட்டவை எய்தி விழைவொழிதல் பொய்போலும்**
**மீட்டும் மிடைமணிப் பூணானைக்-காட்டென்று**
**மாமை பொன்னிறம் பசப்பத்**
**தூமலர் நெடுங்கண் துயில்துறந் தனவே.** 299

'செறிந்த மணியாற் சிறந்த ஆபரணத்தை உடையவனைக் காட்டுக' என்று சொல்லி, எனது மாமை நிறமானது பொன்னிறமாகப் பசலை பாயாநிற்பத், தூய குவளைமலர் போன்ற என் நெடுங்கண்களும், தாம் துயிலினைக் கைவிட்டனவாயின; ஆகலான், விரும்பினவற்றை அடைந்து ஆசைப்பாடு நீங்குவதென்பதும், இவ்வுலகிடத்தே பொய்தான் போலும்!

முன் கண்டவள், பின்னரும் காண்டற்கு விரும்பிக் கூறுதல் இது.

## 16. பகல் முனிவுரைத்தல்

*புரிவளை நெகிழப் புலம்பொடு நின்றோள்*
*பருவரல் உள்ளமொடு பகல்முனி வுரைத்தன்று.*

முறுக்கு வளையல்கள் கைகளினின்றும் சோரத், தனிமைத் துயரோடே நின்ற தலைவியானவள், துயரம் மிக்கதான தன் உள்ளத்தோடே, பகற்பொழுதை வெறுத்த அந்த நிலையைச் சொல்லியது, பகல் முனிவுரைத்தல் ஆகும்.

**தன்கண் அளியவாய் நின்றேற்குத் தார்விடலை**
**வன்கண்ணன் நல்கான் எனவாடும்-என்கண்**
**இடரினும் பெரிதால் எவ்வம்**
**படரினும் பெரிதாற் பாவியிப் பகலே.** 300

'மாலையினை யுடைப தலைவன் தறுகண்மை உடையவன் ஆதலால், தன்னிடத்துத் தண்ணளியை விரும்பினளாய் நின்ற எனக்கு அருள் செய்யான்' என்று நினைந்து வாட்டங் கொள்ளுகின்ற என்னிடத்து நிலவுகின்ற துன்பத்தினும் காட்டில், எனது மானமே பெரிய தொன்றாகும்; பாவியான இப் பகற்பொழுதோ, அந்த என் நினைவினும் பெரிதானதாயிருந்தது!

'எவ்வம் பெரிதால்' என்றது, தான் கொண்ட ஒருதலைக் காமத்தானே ஏற்பட்ட மானக்கேட்டால் வந்துற்ற பெரிதான வருத்தத்தை.

## 17. இரவுநீடு பருவரல்

*புலம்பொடு வைகும் பூங்குழை கங்குற்*
*கலங்கினேன் பெரிதெனக் கசிந்துரைத் தன்று.*

*தனிமைத் துயரத்துடனே தங்கும் பொலிந்த குழையினை உடையவள், 'இரவின்கண் பெரிதும் துன்பமுற்றேன்' என, நெஞ்சங் கசிந்தாளாகச் சொல்லியது, இரவுநீடு பருவரல் ஆகும்.*

*இரவுப் பொழுதில் நெடியதாகத் தோன்றுதலால் வந்துற்ற பருவரல் இது. பருவரல்- துன்பம்.*

**பெண்மேல் நலிவு பிழையென்னாய் பேதுறீஇ**
**விண்மேல் இயங்கு மதிவிலக்கி-மண்மேல்**
**நினக்கே செய்பகை எவன்கொல்**
**எனக்கே நெடியை வாழியர் இரவே? 301**

*இராப் பொழுதே, நீ வாழ்வாயாக! உலகின்மேல் நினக்கு யான் பகையாகச் செய்ததுதான் என்னவோ? பெண் பாலினிடத்தே துன்பிழைத்தல் பிழையெனவும் கருதாயாய், அறிவுகெட்டு, விசும்பிடத்தே செல்லாநின்ற திங்களையும் போகாதபடி விலக்கி, எனக்கே நெடியையாக இருந்தனையே!*

*பேது-அறியாமை. மதி-திங்கள். நலிவு-துன்பம். 'வாழியர்' என்றது, இகழ்ச்சிக் குறிப்பு; வாழாது ஒழிந்து போக என்பது கருத்து.*

## 18. கனவின் அரற்றல்-1

*ஒண்டொடி மடந்தை உருகெழு கங்குலிற்*
*கண்டவன் கரப்பக் கனவின் அரற்றின்று.*

*ஒள்ளிய வளையல்களை உடையாளான தலைவி, அஞ்சுதல் பொருந்திய இராப்பொழுதிடத்தே, கனவிடத்தே காணப்பட்ட தலைவன் மறைந்தானாக, நனவின்கண் வாய்விட்டுப் புலம்பியது, கனவின் அரற்றல் ஆகும்.*

**அயர்வொடு நின்றேன் அரும்படர்நோய் தீர**
**நயம்வரும் பள்ளிமேல் நல்கிக்-கயவா**
**நனவிடைத் தமியேன் வைகக்**
**கனவிடைத் தோன்றிக் கரத்தல்நீ கொடிதே. 302**

*கீழ்மகனே! மயக்கத்தொடும் நின்றேனாகிய எனது அரிய நினைவினாலே வந்த நோயானது தீரும்படியாக, நன்மை யுண்டாகும் படுக்கையிடத்தே, கனவிடத்தே தோற்றி எனக்குத் தண்ணளி செய்து, நனவினிடத்தே, யான் தனியளாகி இருக்கும்படியாக நீ மறைந்துபோகுதல் கொடிய செயலாகும்.*

*பெண்டிரை இவ்வாறு வஞ்சித்தல் உயர்ந்தோன் இயல்பன்று என்பவள், 'கயவா' என விளித்தனள், கயவன்-கீழ்மகன்.*

## 19. கனவின் அரற்றல்-2

*பெய்வளை அவனொடு பேணிய கங்குல்*
*உய்குவன் வரினென உரைப்பினும் அதுவே.*

*இட்ட வளையலினை உடையவள், 'தலைவனொடு விரும்பிய இரவுப்போது வரின் பிழைப்பேன்' எனச் சொல்லினும், 'அது கனவின் அரற்றல் ஆகும்.*

*'கனவிலாவது இரவு வரின் உய்குவன்' எனத் தன் ஆற்றாமை கூறுதலால், கனவின் அரற்றல் ஆயிற்று.*

**தோடவிழ்தார் யானும் தொடர அவனுமென்**
**பாடகச் சீறடியின் மேற்பணிய-நாடகமா**
**வைகிய கங்கல் தலைவரின்**
**உய்குவன் உலகத் தளியேன் யானே.** 303

*அவனுடைய இதழ்விரிந்த மாலையானது செவ்வியழிந் திருந்தமை பற்றி யானும் அவனை வினவ, அவனும் என்னுடைய பாடகமணிந்த சிறிய அடியியின்மேற் பணிதலைச் செய்ய, ஒரு நாடகத்தைப் போல இருந்த அந்த இரவுப் பொழுது, இன்னும் வருமாயின் யான் பிழைப்பேன்; இன்றேற், பூமியிடத்து யான் அளிக்கத்தக்காளாகி வருந்துவேன்.*

*'தொடரவும் பணியவுமாக, எல்லாம் நாடகம்போல அமைந்திருந்தது' என்றனள்.*

## 20. நெஞ்சொடு மெலிதல்-1

*அஞ்சொல் வஞ்சி அல்லிருட் செலீஇய*
*நெஞ்சொடு புகன்று நிலையுரைத் தன்று.*

*அழகிய சொல்லினை யுடைய வஞ்சிக் கொம்பினைப் போன்றாளான தலைவி, இரவுப் பொழுதின் இருளின்கண் செல்லக் கருதியவளாகத், தன் மனத்தொடு விரும்பிய நிலையைச் சொல்லியது, நெஞ்சொடு மெலிதல் ஆகும்.*

**மல்லாடு தோளான் அளியவாய் மாலிருட்கண்**
**செல்லாம் ஒழிக செலவென்பாய்-நில்லாய்**
**புனையிழை யிழந்த பூசல்**
**நினையினு நினைதியோ வாழியென் நெஞ்சே.** 304

*என் நெஞ்சே, வாழ்வாயாக! மல்லாடும் தோளினை உடையவனது தண்ணளியினை விரும்பி, மயங்குதற்குக்*

காரணமான இருளினூடே யாம் செல்வேம் அல்லேம்; ஆதலாற் செலவினைத் தவிர்க என்பாய்; ஆனால், நீயோ செல்லாது நின்றாயில்லை; அங்ஙனம் செல்லும் நீ, யான் அணிந்த ஆபரணம் சோர்ந்த ஆரவாரத்தை நினைப்பாயோ, நினைக்க மாட்டாயோ? அதனைக் கூறுவாயாக.

'செல்லாம்' என்றது, செல்வது மகளிர்க்கு மரபன்று ஆதலின்,

## 21. நெஞ்சொடு மெலிதல்-2

*வரிவளை நெகிழ்ந்தோன்*
*முன்செல வலித்தேன்*
*அரிவையர் அறிகென*
*உரைப்பினும் அதுவே.*

'அழகிய வளையலை நெகிழப் பண்ணினானது முன்பாகச் செல்வதற்குத் துணிந்தேன்; இதனை மகளிர் எல்லீரும் அறிவீராக' என்று தலைவி சொன்னாலும், அது நெஞ்சொடு மெலிதல் என்னும் துறையே யாகும்.

அலர் தூற்றும் மகளிர்க்குக் கூறுவது இது; தலைவன்பாற் செல்வேன் என்பது கருத்தாகக் கூறினால் பெருந்திணை ஆகும்.

**நல்வளை ஏக நலந்தொலைவு காட்டிய**
**செல்லல் வலித்தெனச் செம்மல்முன்-பில்லாத**
**வம்ப வுரையொடு மயங்கிய**
**அம்பற் பெண்டிரும் அறைகவெம் அலரே. 305**

எனது நல்லவளைகள் கழன்றுபோமாறு எனது அழகழிந்த இந்த நிலையினைக் காட்டும் பொருட்டு, தலைவனின் முன்பாகச் செல்லுதலை யானும் துணிந்தேன்; இல்லாத புதிய உரையொடு கலங்கிய புறங்கூறும் பெண்டிரும், எம்முடைய இந்தச் செயலினையும் இனி எடுத்துத் தூற்றுவாராக!

## தொகுத்து உரைத்தல்

கைக்கிளைப் படலத்தின் பெண்பாற் கூற்றுப் பகுதியான இது, பத்துத் துறைகளை உடையது, அவை,

ஒருத்தி தலைவன் ஒருவனைக் கண்டு காமுற்றுச் சோர்தலாகிய காண்டலும்; தன்னை விரும்பாத அவனைத் தான் விரும்புதலைக் கூறுதலாகிய நயத்தலும்; அங்ஙனம் நயந்தவள் அவனைக் கூடுதலை நினைத்தலாகிய உட்கோளும்;

அங்ஙனம் கூடலை உட்கொண்டவள், அதனால் வரும் பழிக்கு நாணி வருந்தி மெலிவுறலாகிய மெலிதலும்; அந்த

*மெலிவொடு காமம் வருத்த மேலும் நலிதலாகிய மெலிவொடு வைகலும்;*

*மெலிவொடு வைகியவள் அவனைப் பின்னரும் காணுதற்கு உறுதிகொள்ளுதலான காண்டல் வலித்தலும்; அவள் துன்பமிகுந்த நெஞ்சினளாகப் பகற்பொழுதை வெறுத்துக் கூறுதலாகிய பகல்முனி வுரைத்தலும்; அவள் இரவுநீட்டித்தற்கு வருந்திக் கூறுதலாகிய இரவுநீடு பருவரலும்;*

*கனவிடைத் தோன்றியவள் நனவிடை மறைதலால் அவள் வாய்விட்டுப் புலம்புதலும், இரவிற் கனவிடை அவன் வரின் உய்வேன் எனக் கூறுதலுமாகிய கனவின் அரற்றலும்;*

*அவள், இரவுப் பொழுதிலே தலைவனது இருக்கைக்குச் செல்லக் கருதிய தன் மனவிருப்பினைச் சொல்லியதும், அவர் கூறும் பெண்டிர்க்கு, யான் அவன்முன் செல்லத் துணிந்தேன் எனக் கூறலுமாகிய நெஞ்சொடு மெலிதலும் ஆம்.*

✡✡✡

# 12. பெருந்திணைப் படலம்

*(பெருந்திணையாகிய இதனைத் தொல்காப்பியம் அகத்திணையுட் கொள்ளும். 'கந்தருவத்துட்பட்டு வழீஇயிற்றாகச் செப்பிய இந்நான்கும் பெருந்திணைக் கருத்து' எனவும் உரைக்கும். இந்நூலாசிரியரோ, இதனை அகப்புறமாகக் கொண்டு கூறுகின்றனர்.)*

கைக்கிளை, ஒருதலைக் காமத்தினை உணர்த்திற்று; இது மிகைபடு காமமாகிய தன்மையைச் சொல்லுகின்றது.

*'ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்*
*தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்*
*மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்*
*செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.*
*(தொல். அகத். 51)*

என்ற விதி,

'மடன்மாக் கூறுதலொடு நில்லாது மடலேறுதலும்; தலைவனுக்குத் தலைவி இளையளாகாதுபோயின தன்மையும்; தெளிவுகொள்ளுதல் ஒழிந்த அறவழி குணன் உடையளாதலும்; காம மிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதிற் புணர்தலும் ஆகிய, அன்பு நெறியினின்றும் வழீஇயின நான்கும், பெருந்திணைப் பகுதிப்பாற்படும்' என்கின்றது. இதனை நினைவிற் கொள்ளல் வேண்டும்.

## 1. பெண்பாற் கூற்று

*(பெருந்திணை ஒழுக்கத்திற்குரிய பெண்பாற் கிளவிகள் பற்றிய பகுதி)*

**வேட்கைமுந் துறுத்தல் பின்னிலை முயறல்**
**பிரிவிடை ஆற்றல் வரவெதிர்ந் திருத்தல்**
**வாராமைக் கழிதல் இரவுத்தலைச் சேறல்**
**இல்லவை நகுதல் புலவியுட் புலம்பல்**
**பொழுதுகண் டிரங்கல் பரத்தையை ஏசல்**
**கண்டுகண் சிவத்தல் காதலிற் களித்தல்**
**கொண்டகம் புகுதல் கூட்டத்துக் குழைதல்**
**ஊடலுள் நெகிழ்தல் உரைகேட்டு நயத்தல்**
**பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல்**

**பள்ளிமிசைத் தொடர்தல் செல்கென விடுத்தலென**
**ஒன்பதிற் றிரட்டியோ டொன்றும் உளப்படப்**
**பெண்பாற் கூற்றுப் பெருந்திணைப் பால. (16)**

*பெருந்திணைக்கு உரிய பெண்பாற் கிளவிகள் யாவை என உணர்த்துவது, இச் சூத்திரம், அவை, வேட்கை முந்துறுத்தல், பின்னிலை முயறல், பிரிவிடை ஆற்றல், வரவெதிர்ந்திருத்தல், வாராமைக்கு அழிதல், இரவுத் தலைச் சேறல், இல்லவை தருதல், புலவியுட் புலம்பல், பொழுதுகண் டிரங்கல், பரத்தைய ஏசல், கண்டு கண் சிவத்தல், காதலிற் களித்தல், கொண்டகம் புகுதல், கூட்டத்துக் குழைதல், ஊடலுள் நெகிழ்தல், உரைகேட்டு நயத்தல், பாடகச் சீறடி பணிந்த பின் இரங்கல், பள்ளிமிசைத் தொடர்தல், செல்கென விடுத்தல் ஆகிய பத்தொன்பதும் ஆம்.*

*அவற்றுள்:-*

## 1. வேட்கை முந்துறுத்தல்

***கையொளிர் வேலவன் கடவக் காமம்***
***மொய்வளைத் தோளி முந்துற மொழிந்தன்று.***

*கையிடத்தே ஒளிர்கின்ற வேலினையுடைய தலைவனைக் காமமானது செலுத்தாநிற்பச், செறிந்த தொடியாற் சிறந்த தோளினையுடையவள், தலைவனுக்கு முன்பாகத் தன் வேட்கையைச் சொல்லியது, வேட்கை முந்துறுத்தல் ஆகும்.*

*கடவல்-செலுத்தல், மகளிர் தம் வேட்கையைத் தாமே முற்படச் சொல்லி வேண்டுதல் இயல்பன்று; ஆதலின், இது பெருந்திணை ஆயிற்று.*

**எழுதெழின் மார்பம் எனக்குரித் தாகென்று**
**அழுதழுது வைகலும் ஆற்றேன்-தொழுதிரப்பல்**
**வல்லியம் அன்ன வயவேலோய் வாழ்கென**
**அல்லியந்தார் நல்கல் அறம். 306**

*புலியைப் போன்றோனும், வலிய வேலினை உடையோனும் ஆகிய தலைவனே! சந்தன குங்குமச் சேற்றால் வரிக்கும் அழகினை யுடைய நினது மார்பகம், எனக்கே உரிமை உடையதாக வேண்டுமென்று, நாள்தோறும் அழுதழுது, இனி உயிரோடிருத் தலையும் ஆற்றேனாயினேன்; நின்னைத் தொழுது வேண்டுவேன்; நீ வாழ்க என்று சொல்லி, நினது அல்லியினை யுடைய மாலையினை முயங்குதற்குத் தருதல்தான் அறமாகும்.*

*தார் நல்கலாவது, தழுவி இன்புறுத்தல்.*

## 2. பின்னிலை முயறல்

*முன்னிழந்த நலன்நசைஇப்*
*பின்னிலை மலைந்தன்று.*

*தலைவி, தான் முன்பு இழந்துபோன தன்னுடைய அழகினை மீளவும் பெறுதலை விரும்பித், தலைவனுக்குப் பின்னாக இரந்து நிற்றலை மேற்கொண்டது, பின்னிலை முயறல் ஆகும்.*

**மற்கொண்ட திண்டோள் மறவேல் நெடுந்தகை**
**தற்கண்டு மாமைத் தகையிழந்த-எற்காணப்**
**பெய்களி யானைப் பிணரெருத்திற் கண்டுயான்**
**கைதொழுதேன் தான்கண் டிலன்.** 307

*மல்லநாடுதலை மேற்கொண்ட திண்ணிய தோள்களையும், மறத்தன்மை பொருந்திய வேற்படையினையும் கொண்டவனான, பெரிய மேம்பாட்டினை உடையவனைக் கண்டு, மாமை நிறத்தின் தகையினை இழந்து நின்ற என்னை அவன் காணும்படியாக, பொழியும் மதத்தினையுடைய களிற்றினது சருச்சரையாற் பொலிந்த கழுத்தகத்தே கண்டபோது, யானும் கைதொழுது நின்றேன்; அவனோ என்னைத்தான் கண்டான் அல்லன்.*

*மாமை-பொன்னிறம்; மாந்தளிரது வண்ணமும் ஆம். எருத்து - கழுத்து. பிணர் - சருச்சரை.*

## 3. பிரிவிடை ஆற்றல்

*இறைவளை நெகிழ இன்னா திரங்கிப்*
*பிறைநுதன் மடந்தை பிரிவிடை ஆற்றின்று.*

*இளம்பிறையினைப் போன்ற வடிவினைக் கொண்ட நெற்றியினையுடைய மடவாள், தலைவன் பிரிந்த விடத்துத், தன் முன் கையிடத்து வளைகள் கழன்று வீழத், தன்னை வெறுத்து வருந்தியவளாக ஆற்றியிருந்தது, பிரிவிடை ஆற்றல் ஆகும்.*

**ஓடுக கோல்வளையும் ஊரும் அலர்அறைக**
**தோடவிழ் தாழை துறைகமழக்-கோடுடையும்**
**பூங்கானற் சேர்ப்பன் புலம்புகொள் மான்மாலை**
**நீங்கானென் நெஞ்சகத்துள் நின்று.** 308

*இதழ் விரியும் தாழை, நீர்த்துறையெல்லாம் மணம் நாறாச் சங்குபோல மலர்கின்ற, பொலிந்த கடற்கானலை உடையவன் என் சேர்ப்பன்; அவன், தனிமை கொண்ட மயக்கத்தை உடையதான இந்த மாலைக் காலத்தும், என் நெஞ்சிடத்தே நிலைபெற்று, அதனின்றும் போகாதவனாக இருப்பான்; அதனால், திரண்ட*

தொடிகளும் என் கையை விட்டுப் போவனவாக; ஊரிலுள்ள பெண்டிரும் அலர் கூறி என்னைத் தூற்றுவாராக!

கோடு-சங்கு; தாழை மலருக்கு உவமை. இதனால், அது வெண் தாழை என்பதும் அறியப்படும்.

## 4. வரவெதிர்ந்திருத்தல்

*முகைபுரை முறுவல் முள்ளெயிற் றரிவை*
*வகைபுனை வளமனை வரவெதிர்ந் தன்று.*

முல்லை யரும்பினைப் போலும் நகையாற் சிறந்த கூரிய பல்லினையுடைய மடவாள், பலவகையாகப் புனைந்திருக்கப் பட்ட தன் வளமான மனையிடத்தே, தலைவனது வருதலை ஏற்றிருந்தது, வரவெதிர்ந் திருத்தல் ஆகும்.

**காம நெடுங்கடல் நீந்துங்காற் கைபுனைந்த**
**பூமலி சேக்கைப் புணைவேண்டி - நீமலிந்து**
**செல்லாய் சிலம்பன் வருதற்குச் சிந்தியாய்**
**எல்லாக நெஞ்சம் எதிர்.** 309

என் நெஞ்சமே! காமமாகிய நெடுங்கடலினை நீந்துமிடத்து, ஒப்பனை செய்யப்பெற்றதும் மலர்கள் மிகுந்ததுமான படுக்கையிடத்துப் பெறும் கூட்டமாகிய தெப்பத்தினது துணையினை வேண்டுவாயாக, நீ விரைந்து போகமாட்டாய்! தலைவனாகிய சிலம்பன் விரைந்து வருதலைக் குறித்தும் சிந்திக்க மாட்டாய்; நீ மயக்கம் நீங்கி விளக்கம் உறுவாயாக.

'நெஞ்சமே! நீ எல்லாக' என்றதனால், 'நீ விரைந்து தலைவன்பாற் செல்லுக; அவன் வருதற்குச் சிந்திக்க' என்றனளாயிற்று. நெஞ்சொடு புலந்து, தலைவி இங்ஙனம் கூறினளாம்.

## 5. வாராமைக்கு அழிதல்

*நெடுவேய்த் தோளி நிமித்தம் வேறுபட*
*வடிவேல் அண்ணல் வாராமைக் கழிந்தன்று.*

நெடிய மூங்கிலைப் போன்ற தோளினை யுடையாளான தலைவி, நிமித்தமானது வேறுபட்டதனாலே, வடித்த வேலினை யுடைய தலைவன் வாராது ஒழிவன் என்று கருதியவளாகத் தன் நெஞ்சழிந்தது, வாராமைக்கு அழிதல் ஆகும்.

**நுடங்கருவி ஆர்த்திழியும் நோக்கருஞ் சாரல்**
**இடங்கழி மான்மாலை எல்லைத்-தடம்பெருங்கண்**
**தாரார மார்பன் தமியேன் உயிர்தளர**
**வாரான்கொல் ஆடும் வலம்.** 310

*எனது மிகப் பெரிய கண்ணானது வலப்பக்கத்தே துடியா நின்றது; அசையும் மலையருவி ஆரவாரித்து வீழும், நோக்குதற்கு அரிதான மலைப்பக்கத்தே, எல்லை கடந்த காமத்தையுடைய இம் மாலைப் பொழுதிற்குள்ளாக, மாலையாற் சிறந்ததும் சந்தனத்தை உடையதுமான மார்பினை உடையவனான தலைவன், என்னுடைய உயிரானது தளரும்பொருட்டாக, இனியும் வரமாட்டான் போலும்!*

*'கண் வலமாகத் துடித்தலால் அவன் வாரான் போலும்; என் உயிர் மேலும் தளரும்' என, நிமித்தம் வேறுபடக் கண்டவள் புலம்பினாள்.*

## 6. இரவுத்தலைச் சேறல்

***காண்டல் வேட்கையொடு கனையிருள் நடுநாள்***
***மாண்ட சாயன் மனையிறந் தன்று.***

*தலைவனைக் காணல் வேண்டுமென்னும் விருப்பத்தோடே, செறிந்த இருளினையுடைய இரவின் நடுயாமத்தே, மாட்சிமைப் பட்ட சாயலினை உடையவளான தலைவி, தன் இல்லினின்றும் வெளியேறிச் சென்றது, இரவுத்தலைச் சேறல் ஆகும்.*

**பணையா வறைமுழங்கும் பாயருவி நாடன்**
**பிணையார மார்பம் பிணையத்-துணையாய்க்**
**கழிகாமம் உய்ப்பக் கனையிருட்கண் செல்கேன்**
**வழிகாண மின்னுக வான். 311**

*கற்பாறையிடத்தே வீரமுரசத்தைப் போலப் பாய்கின்ற அருவியானது, முழக்கத்தைச் செய்யும் நாட்டினை யுடையவன் நம் தலைவன்; அவனது, மூட்டுவாயினையுடைய ஆரமணிந்த மார்பத்தினைத் தழுவுதற்கு, எனக்குத் துணையாய் மிக்க ஆசையானது என்னைச் செலுத்த, யானும் போவேன்; யான் வழியைக் காணுதற்கு உதவியாக, மேகமே, நீயும் மின்னலினை இடுவாயாக!*

## 7. இல்லவை நகுதல்

***இல்லவை சொல்லி இலங்கெயிற் றரிவை***
***நல்வயல் ஊரனை நகைமிகுத் தன்று.***

*விளங்கும் பல்லினை யுடைய மடவாள், உள்ளன அல்லாதவற்றைச் சொல்லி, நல்ல கழனிகளை யுடைய ஊருக்கு உரியவனான தன் தலைவனை நகை மிகுத்தது, இல்லவை நகுதல் ஆகும்.*

*தலைவி, தானே தனக்குள் கூறிக்கொண்டு நகையாடுதல் இதுவாகும்.*

**முற்றா முலையார் முயங்க இதழ்குழைந்த**
**நற்றார் அகலம் நகைதரலின் - நற்றார்**
**கலவேம் எனநேர்ந்துங் காஞ்சிநல் லூர**
**புலவேம் பொறுத்தல் அரிது.** 312

*காஞ்சி மரத்தையுடைய நல்ல ஊரனே! முற்றாத இளமுலைகளை உடையவரான பரத்தையர் தழுவ, அதனால் இதழ்வாடின நல்ல மாலையினை யுடைய நின் மார்பம், எனக்கு நகைப்பைத் தருதலானே, யாம், அழகிய அந்த மாலையினொடு பொருந்தமாட்டேம் என உறுதி கொண்டிருந்தும், நின்பால் ஊடமாட்டேம்; ஏனெனில், நின்பால் ஊடின், அதனைப் பொறுத்தல் என்பது எமக்கு அரிதாயிருக்கும்.*

## 8. புலவியுட் புலம்பல்

*நல்வளை மடந்தை நற்றார் பரிந்து*
*புலவி யாற்றுள் புலம்புற் றன்று.*

*அழகிய தொடியினையுடைய மடவாள், தலைவனது நல்ல மார்பின் மாலையினை அறுத்தும், தன் ஊடல் ஆற்றாளாகத் தனிமை யுற்றுப் புலம்புதல், புலவியுட் புலம்பல் ஆகும்.*

**ஓங்கிய வேலான் பணியவும் ஒள்ளிழை**
**தாங்காள் வரைமார்பின் தார்பரிந்து-ஆங்கே**
**அடும்படர் மூழ்கி அமைமென்தோள் வாட**
**நெடும்பெருங்கண் நீந்தின கண்.** 313

*ஒளிகொண்ட அணிகளை உடையவளான தலைவி, உயர்ந்த வேலினையுடைய தலைவன் தன்னைப் பணியவும், தான் கொண்ட சீற்றம் தாளாதாளாக, அவனது மலையன்ன மார்பிடத்தே விளங்கிய மாலையினை அறுத்தும், வருத்துந் துயரத்திலே மூழ்கினளாகத், தனது மூங்கிலைப் போன்ற மென்மையான தோள்கள் வாடாநிற்ப நின்றாள்; அவ் விடத்து, அவளது நீண்ட பெரிய கண்கள் நீரிலே மிதந்தன!*

## 9. பொழுது கண்டு இரங்கல்

*நிற்றல் ஆற்றாள் நெடிதுயிர்த் தலமரும்*
*பொற்றொடி யரிவை பொழுதுகண் டிரங்கின்று.*

*உயிர் உடலொடுங்கூடி நிற்றலையும் பொறாதவளாக, நெட்டுயிர்த்துச் சுழலும் பொன்வளையலையுடைய தலைவி யானவள், மாலைப்பொழுதினைக் கண்டு வருந்தியது, பொழுது கண்டு இரங்கல் ஆகும்.*

**இறையே இறந்தன எல்வளை உண்கண்**
**உறையே பொழிதலும் ஓவா - நிறையைப்**
**பருகாப் பகல்சுரந்த பையுள்கூர் மாலை**
**உருகா உயங்கும் உயிர்.** 314

*என் நிறையினைக் குடித்துக் கதிரவன் ஒளித்த, நோய் மிகும் மாலைக் காலத்திலே, என் ஒளிவளைகள் முன் கையினின்றும் கழன்று போயின; மையுண்ணும் கண்களும் துளியைச் சொரிதலை ஒழியாவாயின; என் உயிரோ உருகுதலுற்று வருந்தா நிற்கும்! (யான் என் செய்வேனோ?)*

*மாலைப் பொழுது கண்டு, தலைவி, தன்னுடைய பொறுக்கலாற்றாத் தனிமைத் துயிரினை நினைந்து, இரங்கிப் புலம்பியது இதுவாம்.*

## 10. பரத்தையை ஏசல்

***அணிவயல் ஊரனோ டப்புவிழ வமரும்***
***பணிமொழி யரிவை பரத்தையை ஏசின்று.***

*அழகிய வயல்களையுடைய ஊரனுடனே, நீர்விளை யாட்டினை விரும்பும், மெல்லிய சொல்லினை யுடைய தலைவியானவள், பரத்தையை ஏசியது, பரத்தையை ஏசல் ஆகும்.*

*அமர்தல்-விரும்புதல்.*

**யாமுயங்கு மென்முலையால் யாணர் வயலூரன்**
**தேமுயங்கு பைந்தார் திரைமுயங்க-யாமுயங்க**
**எவ்வையர் சேரி யிரவும் இமைபொருந்தாக்**
**கவ்வை கருதிற் கடை.** 315

*யாம் பொறுத்தற்கு ஆற்றாது வருந்தும் எம்முடைய மென்மையான முலைகளாலே, புதுவளப்பத்தையுடைய கழனியால் நிறைந்த ஊரனது, தேன் தழுவும் பசிய மாலையினை, நீரலைகள் தழுவா நிற்பவும், அதனோடே யாமும் தழுவுதற்கு விரும்புவோம்; எம் தங்கையரான பரத்தையரது சேரியானது இரவு முழுதும் கண்ணிமை பொருந்தாத ஆரவாரத்தை உடையதாயிருந்ததனை நினைந்தால், அது பெரிதும் கடையான செயலாம்.*

*நீர் விளையாட்டை விரும்பிய தலைவி, அதற்கு வாய்ப்பின்றித் தலைவனைத் தம்பாற் கொண்டிருந்த பரத்தையரைக் குறித்து ஏசியது இதுவாம்.*

## 11. கண்டுகண் சிவத்தல்

*உறுவரை மார்பன் ஒள்ளிணர் நறுந்தார்*
*கறுவொடு மயங்கிக் கண்சிவந் தன்று.*

பெரிய மலைபோன்ற மார்பத்தினை உடையவனது, ஒள்ளிய கொத்தினையுடைய நறுமணங்கமழும் மாலையினை முனிவோடே பார்த்துக் கலங்கித், தலைவி, தன் கண்சிவந்தது, கண்டு கண் சிவத்தல் அகும்.

**கூடிய கொண்கன் குறுகக் கொடிமார்பின்**
**ஆடிய சாந்தின் அணிதொடர்ந்து-வாடிய**
**தார்க்குவளை கண்டு தரியா இவள்முகத்த**
**கார்க்குவளை காலுங் கனல். 316**

மணந்த கணவன் அணுகவும், கொடிபோன்ற பரத்தையது மார்பிடத்துத் தோய்ந்த சந்தனத்தின் அழகு மேவி அதனால் வாடியிருந்த செங்கழுநீர் மாலையைக் கண்டு, பொறாவாய், இவளுடைய முகத்திலுளவாகிய, கருங்குவளை மலர் போலுங் கண்கள், தாம் நெருப்பைச் சொரியுமே!

'கொடி' பரத்தையைக் குறித்தது. நெருப்புச் சொரிதல்-சினத்தாற் கண்சிவத்தல்.

## 12. காதலிற் களித்தல்

*மைவரை நாடன் மார்பகம் பொருந்திக்*
*கைவிடல் அறியாக் காதலிற் களித்தன்று.*

தலைவியானவள், மேகம் பொருந்தின மலைநாடனான தலைவனுடைய மார்பகத்திலே தழுவியபடி, இருந்தாளாகி, அதனைக் கைவிடற்கும் அறியாத தன்மையளாகக், காதன் மிகுதியாற் களித்தது, காதலிற் களித்தல் ஆகும்.

**காதல் பெருகிக் களிசெய்ய அக்களியாற்**
**கோதையுந் தாரும் இடைகுழைய - மாதர்**
**கலந்தாள் கலந்து கடைக்கண்ணாற் கங்குல்**
**புலந்தாள் புலரியம் போது. 317**

காதலானது பெருகிக் களிப்பினைச் செய்யாநிற்ப, அக்களிப்பினது மிகுதியினாலே தன் மார்பிற் கோதையும் தலைவனது மார்பின் தாரும் தம்மிடையே குழைந்துபோகத், தலைவியானவள் தலைவனுடனே கூடினாள்; அங்ஙனம் கூடியவள், விடியற்காலைப் பொழுதிலே, இரவு விரைந்து கழிந்தமைக்கு வருந்தினளாக. இரவுப் போதையும் தன் கடைக்கண்ணாற் சினந்தாள்.

இதனாற். காதலிற் களித்தது நன்கு புலனாயிற்று.

## 13. கொண்டகம் புகுதல்

*காதல் பெருகக் கணவனைக் கண்ணுற்றுக்*
*கோதையாற் பிணித்துக் கொண்டகம் புக்கன்று.*

*தன்பாற் காதலானது பெருகக், கணவனை நோக்கித் தன்மாலையினாலே அவனைப் பிணித்தவளாகத், தலைவி தன் இல்லுள் அவனுடனே புகுந்தது, கொண்டகம் புகுதல் ஆகும்.*

**கண்டு களித்துக் கயலுண்கண் நீர்மல்கக்**
**கொண்டகம் புக்காள் கொடியன்னாள் - வண்டினம்**
**காலையாழ் செய்யும் கருவரை நாடனை**
**மாலையான் மார்பம் பிணித்து.** 318

*பூங்கொடியினைப் போன்றாளான தலைவியானவள், வண்டினம் காலைப்போதிலே யாழொலிபோல முரன்று கொண்டிருக்கும் வளத்தினையுடைய கரிய மலைநாடனாகிய தலைவனைக் கண்டு களித்தாளாகிக், கயல்போன்ற மையுண்ட தன் கண்களிடத்தே நீர் பெருக, அவனை, மாலையாற் பிணித்துப் பற்றிக்கொண்டு, தன் இல்லத்துள்ளும் புகுந்தனள்.*

## 14. கூட்டத்துக் குழைதல்

*பெய்தார் அகலம் பிரிதல் ஆற்றாக்*
*கொய்குழை அல்குல் கூட்டத்துக் குழைந்தன்று.*

*கொய்து கொண்ட தழையால் ஆகிய, ஆடையானது விளங்கும் அல்குலை உடையாளான தலைவி, இட்ட மாலையையுடைய தலைவனது மார்பினைப் பிரிதலைப் பொறாதவளாகக், கூட்டத்திடத்தே தான் குழைந்தது, கூட்டத்துக் குழைதல் ஆகும்.*

**மயங்கி மகிழ்பெருக மால்வரை மார்பில்**
**தயங்கு புனலூரன் தண்தார்-முயங்கியும்**
**பேதை புலம்பப் பிரிதியோ நீயென்னும்**
**கோதைசூழ் கொம்பிற் குழைந்து.** 319

*பேதைமை உடையவளான தலைவி, தன் காமவேட்கையது மிகுதியினாலே மயக்கமுற்று, மகிழ்ச்சி பெருகப் பெரிய வரையினைப் போன்ற மார்பினையுடையவனும், அசையும் புனலினை உடையவனுமான தலைவனின் குளிர்ந்த மாலையினைத் தழுவியும், 'நான் தனித்திருந்து வருந்த நீ பிரிகின்றாயோ?' என்று, மாலை சுற்றிய பூங்கொம்பைப் போலக் குழைந்தவளாகச் சொல்லுவாள்.*

*கூட்டத்திடையே அடுத்து வரும் பிரிவினை நினைந்து தலைவனிடம் கேட்டவாறு தலைவி தளர்வது இதுவாம்.*

## 15. ஊடலுள் நெகிழ்தல்

*நள்ளிருள் மாலை நடுங்கஞர் நலிய*
*ஒள்வளைத் தோளி ஊடலுள் நெகிழ்ந்தன்று.*

*ஒள்ளிய தொடிசெறிந்த தோளினை உடையவள் வாடியிருந்த காலத்திலே, செறிந்த இருளையுடைய மாலைக் காலத்தே வந்தடையா நின்ற நடுக்கந்தரும் துயரம் தன்னை வருத்தவும், தான் பெரிதும் நெகிழ்ச்சி கொண்டது ஊடலுள் நெகிழ்தல் ஆகும்.*

**தெரிவின்றி ஊடத் தெரிந்துநங் கேள்வர்**
**பிரிவின்றி நல்கினும் பேணாய்-திரிவின்றித்**
**துஞ்சேம் எனமொழிதி தூங்கிருள் மான்மாலை**
**நெஞ்சே யுடையை நிறை.** 320

*நெஞ்சமே! ஆராயாதே நாம் ஊடுதலானே, அதனைத் தெரிந்தாரான நம் கணவர், நம்மை விட்டுப் பிரிதலின்றி அருகிருந்து தலையளி புரிவர்; புரிந்தாலும், நீ, அதனைப் பேணுகின்றிலை; நின் நிலையில் மாறுபடலின்றி, உறங்கேம் எனவும் சொல்லுதி; தங்கும் இருளினையுடைய மயக்கந்தரும் மாலைக் காலத்தே, நீ நிறையினையும் உடையையாய் இருந்தனை.*

*ஊடலுள், தலைவி, ஆசை மிகுதியால் தளர்தலை இது உணர்த்திற்று. மாலையிலே, 'இரவில் துஞ்சேம் என அஞ்சுவாய்' என்றனள்.*

## 16. உரைகேட்டு நயத்தல்

*துயரொடு வைகிய சூழ்வளைத் தோளி*
*உயர்வரை நாடன் உரைகேட்டு நயந்தன்று.*

*துயரத்தொடுந் தங்கியிருந்தவளான சூழ்ந்த வளையினைக் கொண்ட தோளினையுடையவள், உயர்ந்த மலைநாட்டவனான தலைவனது உரையைக் கேட்டு நயந்தது, உரைகேட்டு நயத்தல் ஆகும்.*

**ஆழ விடுமோ அலரொடு வைகினும்**
**தாழ்குரல் ஏனல் தலைக்கொண்ட - நூழில்**
**விரையாற் கமழும் விறல்மலை நாடன்**
**உரையால் தளிர்க்கும் உயிர்.** 321

*வளைந்த கதிரையுடைய தினையிலே படர்ந்த நூழிற் கொடியினது மணமானது கமழாநின்ற, வெற்றி பொருந்திய மலைநாடனான தலைவனது உரையொன்றாலேயே தளிர்க்கும் இயல்புடைய என் உயிரானது, பிறர் கூறுகின்ற அலரொடு தங்கியிருந்தாலும், என்னைத் துயரத்துள் ஆழும்படியாக விட்டுவிடுமோ?*

*'விடாது' என்பது குறிப்பு.*

## 17. பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல்

*கோடுயர் வெற்பன் கூப்பிய கையொடு*
*பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கின்று.*

கோடுகள் உயர்ந்த மலைநாட்டினை உடையவன், குவிந்த கையுடனே பாடகம் விளங்கும் தனது சிறிய பாதங்களிற் பணிந்தபின் பின்னர்த், தலைவி அவனுக்கு இரங்கியது, பாடகச்சீறடி பணிந்தபின் இரங்கல் ஆகும்.

**அணிவரும் பூஞ்சிலம் பார்க்கும் அடிமேல்**
**மணிவரை மார்பன் மயங்கிப் - பணியவும்**
**வற்கென்ற நெஞ்சம் வணங்காய் சிறுவரை**
**நிற்கென்றி வாழியர் நீ!** 322

அழகிய வரையனைய மார்பினையுடையான் கலங்கி, அழகுவருகின்ற பொலிவுடைய சிலம்பு முழங்கும் நம் அடி மேல் வீழ்ந்து பணியவும், வன்மையுடையாய் இருந்த என் நெஞ்சமே! நீ, வணங்குதற்கு ஆற்றாயாய்ச் சிறுபொழுது மேலும் ஊடிநிற்க என்கின்றனை; நீ வாழ்க!

## 18. பள்ளிமிசைத் தொடர்தல்

*மாயிருங் கங்குல் மாமலை நாடனைப்*
*பாயல் நீவிப் பள்ளிமிசைத் தொடர்ந்தன்று.*

மிகப் பெரிய இரவுப் பொழுதினிடத்தே, தலைவி, உறக்கத்தை ஒழித்தாளாகப், பெரிய மலைநாட்டை உடையவனை, அவனது படுக்கை மேலாகப் பற்றிக்கொண்டது, பள்ளிமிசைத் தொடர்தல் ஆகும்.

**யானை தொடரும் கொடிபோல யானுன்னைத்**
**தானை தொடரவும் போதியோ - மானை**
**மயக்கரிய உண்கண் மடந்தைதோள் உள்ளி**
**இயக்கருஞ் சோலை இரா.** 323

தலைவனே! யானையைப் போகவிடாது பற்றியிழுக்கின்ற கொடியினைப்போல யான் நின்னை ஆடைபற்றி இழுக்கவும், எவரும் இயங்குதலற்ற இரவுப் போதிலே, நீயும், மானையும் மயக்குதற்குத் தக்க வரிகளையுடைய மையுண்ட கண்களையுடைய பரத்தையது தோள் நலத்தினை நினைந்தாயாகப் போகின்றாயோ!

அரிய-வரிகளையுடைய.

## 19. செல்கென விடுத்தல்

*பாயிருட் கணவனைப் படர்ச்சி நோக்கிச்*
*சேயிழை யரிவை செல்கென விடுத்தன்று.*

*பரந்த இருட்பொழுதிலே, சிவந்த அணிகளையுடைய தலைவியானவள், கணவனுடைய செல்கையைக் கண்டு, 'நீ செல்க' எனக் கூறிப்போக விடுத்தது, செல்கென விடுத்தல் ஆகும்.*

**விலங்குநர் ஈங்கில்லை வெள்வேலாய் சென்றீ**
**இலங்கிழை எவ்வம் நலியக் - கலங்கிக்**
**குறியுள் வருந்தாமைக் குன்றுசூழ் சோலை**
**நெறியுள் விரிக நிலா.** 324

*வெற்றி வேலினை உடையாய்! இவ்விடத்தே நின்னைத் தடுப்பவரோ எவருமில்லை; குறியிடத்தே நின் வரவினுக்குக் காத்திருக்கும் விளங்கும் அணிகலன்களை உடையவள், துன்பம் வருத்தத் தான் நெஞ்சங் கலங்கி வருந்தாமற்படிக்கு நீ அவள்பாற் செல்வாயாக! அங்ஙனம் நீ செல்லும்போது, குன்றுகள் சூழ்ந்த சோலையிடத்து வழியின்கண், நிலவும் கதிர்விரித்து நினக்கு உதவுமாக!*

*'இலங்கிழை' என்றது, புதியவளான தலைவனது காதற்கு உரியவளை.*

## தொகுத்து உரைத்தல்

*பெருந்திணைப் படலத்துப் பெண்பாற் கூற்று, மேலே சொல்லியவாறு பத்தொன்பது துறைகளாக நிகழும் அவை:-*

*தலைவனுக்கு முற்பட்டுத் தலைவி தனது வேட்கையைக் கூறுதலாகிய, வேட்கை முந்துறுத்தலும்; தலைவி தலைவனை இருந்து பின்னிற்றற்கு மேற்கொள்ளலாகிய, பின்னலை முயறலும்; தலைவனது பிரிவினைத் தலைவி ஆற்றியிருத்தலாகிய பிரிவிடை ஆற்றலும்;*

*மனையிடத்தே தலைவனது வருகையை ஏற்றிருத்தலாகிய, வரவெதிர்ந்திருத்தலும்; தீ நிமித்தத்தால் தலைவன் வாரான் எனக் கருதித் தலைவி நெஞ்சழிதல் ஆகிய வாராமைக்கு அழிதலும்; தலைவனைக் காணும் ஆசையுடனே, தலைவி இரவிடத்தே மனைகடந்து போதலாகிய, இரவுத்தலைச் சேறலும்;*

*தலைவன்பால் இல்லாத பழியை உள்ளதாகக் கூறித் தலைவி நகுதலாகிய இல்லவை நகுதலும்; தலைவனோடு ஊடி நின்று தலைவி புலம்புதலாகிய புலவியுட் புலம்பலும்; மாலைப் பொழுதைக் கண்டு தலைவி வருந்துதலாகிய பொழுது கண்டு இரங்கலும்;*

*தலைவனொடு நீர் விளையாட்டை விரும்பித், தலைவி பரத்தையைப் பழித்தலாகிய, பரத்தையை ஏசலும்; பரத்தை*

*வீட்டிலிருந்து வந்த தலைவனைக் கண்டு, தலைவி வெகுண்டதாகிய கண்டுகண் சிவத்தலும்; மிக்க காமத்தாலே தலைவனைத் தழுவுதலாகிய காதலிற் களித்தலும்; தலைவனைக் காமத்தாற் பற்றிக்கொண்டு வீட்டுட் புகுதலாகிய கொண்டகம் புகுதலும்; கூட்டத்திடத்தே அவனது பிரிவை நினைந்து தலைவி குழைதலாகிய, கூட்டத்துக் குழைதலும்;*

*ஊடுதலுள்ளும் தனிமை பொறாளாய்த் தலைவி மாலைப் பொழுதில் தளர்தலாகிய ஊடலுள் நெகிழ்தலும்; காமத் துன்பத்தால் வாடித் தலைவனது உரையையானும் கேட்க விரும்புதலாகிய உரைகேட்டு நயத்தலும்; தலைவன் தன் அடிகளிற் பணிந்தபின் தலைவி நெஞ்சு நெகிழ்தலாகிய, பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கலும்;*

*தலைவனைத் தலைவி படுக்கையிடத்திருந்து போகவிடாது தடுத்துக் கொள்ளலாகிய, பள்ளிமிசைத் தொடர்தலும்; பரத்தைபாற் செல்வானது குறிப்பினை அறிந்து, 'போக' என விடுத்தலாகிய, செல்கென விடுத்தலும் ஆகும்.*

## 2. இருபாற் பெருந்திணை

*(தலைவன் தலைவி ஆகிய இருபாலாரிடையேயும் காம மிகுதி பற்றி நிகழ்வனவும் பிறவும் இப்பகுதியுள் உரைக்கப்படும்)*

**சீர்செல வழுங்கல் செழுமடல் ஊர்தல்**
**தூதிடை யாடல் துயரவற் குரைத்தல்**
**கண்டுகை சோர்தல் பருவ மயங்கல்**
**ஆண்பாற் கிளவி பெண்பாற் கிளவி**
**தேங்கமழ் கூந்தல் தெரிவை வெறியாட்டு**
**அரிவைக் கவள்துணை பாண்வர வுரைத்தல்**
**பரிபுரச் சீறடிப் பரத்தை கூறல்**
**விறலி கேட்பத் தோழி கூறல்**
**வெள்வளை விறலி தோழிக்கு விளம்பல்**
**பரத்தை வாயிற் பாங்கிகண் டுரைத்தல்**
**பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்**
**குற்றிசை ஏனைக் குறுங்கலி உளப்பட**
**ஒத்த பண்பின் ஒன்றுதலை யிட்ட**
**ஈரெண் கிளவியும் பெருந்திணைப் பால. (17)**

*செலவழுங்கல், மடலூர்தல், தூதிடையாடல், துயரவற்குரைத்தல், கண்டு கைசோர்தல், பருவமயங்கல், ஆண்பாற் கிளவி, பெண்பாற் கிளவி, வெறியாட்டு, பாண்வரவு உரைத்தல், பரத்தை கூறல், விறலி கேட்பத் தோழி கூறல், விறலி தோழிக்கு*

விளம்பல், பரத்தை வாயில் பாங்கி கண்டு உரைத்தல்; பிறர் மனைத் துயின்றமை விறலி கூறல், குற்றிசை, குறுங்கலி என்னும் பதினேழும் பெருந்திணைப்பாற்பட்டன ஆகும்.

அவற்றுள்:-

## 20. செலவழுங்கல்

*நிலவுவேல் நெடுந்தகை நீள்கழை ஆற்றிடைச்*
*செலவுமுன் வலித்துச் செலவழுங் கின்று.*

நிலவினைப் போல ஒளிசிதறும் வேலினையும், பெரிய மேம்பாட்டினையும் உடைய தலைவன், நீண்ட மூங்கில் பொருந்தின நெறியினிடத்தே செல்லுதலை முன்னே துணிந்து, பின்னர் அதனைத் தவிர்ந்தது, செலவழுங்கல் ஆகும்.

**நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப**
**ஒடுங்கி உயங்கல் ஒழியக்-கடுங்கணை**
**வில்லேர் உழவர் விடரோங்கு மாமலைச்**
**செல்லேம் ஒழிக செலவு.** 325

நெஞ்சே! நறிய நுதலினை உடையாளது நல்ல அழகெல்லாம் பீர்க்கம் பூவினது நிறத்தினைப்போலப் பசலை பூக்க, அவள் நடுங்கி ஒடுங்கி வருந்துதல் நீங்குமாறு, யாம், கடிய அம்பினையுடைய வில்லினை ஏராகக் கொண்டிருக்கும் வேடர்களது முழைகள் உயர்ந்த, பெரிய மலைபொருந்திய வழியூடே போகேம்; அதனால், நின் செலவு விருப்பத்தினைக் கைவிடுவாயாக!'

'நறுநுதலாள் உயங்கல் ஒழிய' என்றது, செல்லாமைக்குக் காரணம் இதுவெனக் கூறியது. விடர்-மலைப் பிளப்பு.

## 21. மடலூர்தல்

*ஒன்றல்ல பலபாடி*
*மன்றிடை மடலூர்ந்தன்று.*

ஒன்றன்றியே பலவற்றையும் பாடியபடி, ஊர்மன்றினிடத்தே தலைவன் மடன்மாவைச் செலுத்தியது, மடலூர்தல் ஆகும்.

**இன்றிப் படரோ டியானுழப்ப ஐங்கணையான்**
**வென்றிப் பதாகை எடுத்தானாம் - மன்றில்**
**தனிமடமான் நோக்கித் தகைநலம் பாராட்டிக்**
**குனிமடல்மாப் பண்ணிமேற்கொண்டு.** 326

அம்பலத்தே, ஒப்பற்ற மடப்பத்தையுடையவளும் மான் போன்ற பார்வையினைக் கொண்டவளுமான தலைவியது

*மிகுதியான நலத்தினைப் பாராட்டி, வளைந்த பனைமடலினாலே குதிரை போலப் பண்ணி அதன்மேல் ஏறிக்கொண்டவனாக, 'இந்தத் துயரோடு யான் வருந்தும்படியாக இன்று ஐங்கணையான் தன் வெற்றிக் கொடியினை எடுத்தானாம்' என்பான் ஒருவன்.*

*படர்-துன்ப நினைவுகள், ஐங்கணையான்-காமதேவன்.*

## 22. தூதிடையாடல்

***ஊழ்மலை உறுதுயர் நோக்கித்***
***தோழி நீங்காள் தூதிடை ஆடின்று.***

*ஊழிக் காலத்தைப் போல விளங்கும் மாலைக் காலத்திலே தலைவி அடைந்த துயரத்தினை நோக்கி, அவளைவிட்டு நீங்காதே இருப்பவளான தோழி, தூதுபோகுந் தொழிலை மேற்கொண்டு, தலைவியைத் தனியே விட்டுச் சென்றது, தூதிடை யாடல் ஆகும்.*

**வள்வாய்ந்து பண்ணுக திண்தேர் வடிக்கண்ணாள்**
**ஒள்வாள்போல் மாலை உயல்வேண்டும்-கள்வாய**
**தாதொடு வண்டிமிரும் தாம வரைமார்ப**
**தூதொடு வந்தேன் தொழ.** 327

*தேனைத் தன்னிடத்தேயுள்ள மலரினொடு வண்டினம் ஆரவாரித்திருக்கும் மாலையினை யுடைய, மலைபோன்ற மார்பத்தைக்கொண்ட தலைவனே! நின்னைக் கண்டு தொழுதலின் பொருட்டாகத் தூதுரைக்கும் பணியொடு வந்தேன்; ஒள்ளிய வாளினைப் போன்ற கொடிதான இம் மாலைப் பொழுதினிலே, மாவடுப் பிளவைப் போன்ற கண்ணினை உடையவளான நின் தலைவி பிழைத்தல் வேண்டும்; அதனால், வாரினை ஆராய்ந்தாயாக நின் திண்மையான தேரினையும் இன்னே பண்ணுறுத்துவாயாக.*

*தேரினைப் பண்ணுறுத்தல்-செல்கைக்குத் தயாராக வேண்டுவனவற்றைச் செய்தல். வடிக்கண்-மாவடுவின் பிளப்புப்போன்ற கண்.*

## 23. துயரவற்குரைத்தல்

***மான்ற மாலை மயிலியல் வருத்தல்***
***தோன்றக் கூறித் துயரவற் குரைத்தன்று.***

*மயங்கிய மாலைக் காலமானது மயில்போன்ற இயலினை உடையாளான தலைவியை வருத்துதலைத், தலைவன் அறியும் படியாகச் சொல்லித், தலைவியது துயரத்தை அவனுக்குச் சொல்லியது, துயரவற்குரைத்தல் ஆகும்.*

**உள்ளத் தவலம் பெருக ஒளிவேலோய்**
**எள்ளத் துணிந்த இருள்மாலை-வெள்ளத்துத்**

**தண்டார் அகலம் தழூஉப்புணையா நீநல்கின்**
**உண்டாமென் தோழிக் குயிர். 328**

*ஒளி கொண்ட வேலினாய்! நெஞ்சிடத்தே துயரமானது பெருக, இகழ்தற்கு முடிவுசெய்த இருளினையுடைய மாலையாகிய வெள்ளத்திடத்தே, குளிர்ந்த மாலையினையுடைய நின் மார்பத்தைத் தழுவிக் கரைசேர்தற்குரிய தெப்பமாக நீ தந்தருளினால், என் தோழியாகிய தலைவிக்கு, உயிரும் உண்டாயிருக்கும்.*

*'நல்காயேல் உயிரிழப்பாள்' என்பது, குறிப்பு.*

## 24. கண்டு கைசோர்தல்

*போதார் கூந்தற் பொலந்தொடி யரிவை*
*காதல் கைம்மிகக் கண்டுகை சோர்ந்தன்று.*

*மலர் நிறைந்த கூந்தலினையும், பொன்னாலான தொடியினையும் கொண்டு விளங்குந் தலைவியது காதல்நோய் கைகடந்து பெருக, அதனைக் கண்ட தோழி, தானும் செயலறவு கொண்டது, கண்டு கைசோர்தல் ஆகும்.*

**ஆம்பல் நுடங்கும் அணிவளையும் ஏகின**
**கூம்பல் மறந்த கொழுங்கயற்கண் - காம்பின்**
**எழில்வாய்ந்த தோளி எவனாங்கொல் கானற்**
**பொழிலெல்லாம் ஈயும் புலம்பு? 329**

*ஆம்பலது தண்டை வளைத்து இட்ட அழகிய வளையும் கழன்று போயின; கொழுவிய கயல்மீனைப் போன்ற கண்களும் துயிலை மறந்தன; மூங்கிலினும் அழகு வாய்ந்த தோள்களை யுடைய தலைவி இனி என்னாகுவளோ? கடற்கரைச் சோலை இடமெல்லாம் அவளுக்குத் தனிமைத் துயரினைத் தருமே!*

*'கானற் பொழில்' தனிமையைக் காட்டுதலால், துயர் நல்கும் என்க.*

## 25. பருவ மயங்கல்-1

*உருவ வால்வளை உயங்கத் தோழி*
*பருவ மயங்கிப் படருழந் தன்று.*

*அழகிய வெள்ளிய வளையினை உடையாள் வருந்தத், தோழி காலத்தை அன்றாமென ஐயுற்று வருத்தமுற்றது, பருவ மயங்கல் ஆகும்.*

*பருவத்தை ஐயுற்று மயங்குதல் இது. இது, தோழி ஆற்றுவிக்கும் வகையன்று ஆதலின், பெருந்திணை ஆயிற்று என்பர் உரையாசிரியர்.*

**பெரும்பணை மென்தோள் பிரிந்தாரெம் முள்ளி**
**வரும்பருவம் அன்றுகொல் ஆங்கொல்-சுரும்பிமிரும்**
**பூமலி கொன்றை புறவெல்லாம் பொன்மலரும்**
**மாமயிலும் ஆலும் மலை?** 330

*வண்டினம் ஒலிக்கும் பூக்கள் மலிந்த கொன்றை மரங்கள் குறுங்கா டெல்லாம் பொன்னைப் போலப் பூக்கா நிற்கும்; மலையிடத்தே அழகிய மயில்களும் ஆடா நிற்கும்; பெரிய மூங்கிலைப் போலும் தோளினை உடையாளைப் பிரிந்து சென்றவர் எம்மை நினைந்து வருவதாகக் குறித்த கார்ப்பருவம் இதுவன்று கொல்லோ? அன்றி, இதுவாகும் கொல்லோ?*

*கார் காலத்து அடையாளங்கள் தோன்றுதலால் ஆங்கொல் எனவும், தலைவன் வராமையினால் அன்றுகொல் எனவும் ஐயுற்றனள்.*

## 26. பருவ மயங்கல்-2

***ஆங்கவர் கூறிய பருவம் அன்றெனத்***
***தேங்கமழ் கோதை தெளிதலும் அதுவே.***

*தேன் மணக்கும் மாலையினை உடையாள், அவ்விடத்துத் தலைவர் வருவதாகச் சொன்ன காலம் அஃது அன்றெனத் தெளிவு கொள்ளலும், பருவ மயங்கல் ஆகும்.*

**பொறிமயில் ஆலின பொங்கர் எழிலி**
**சிறுதுவலை சிந்தின சிந்த-நறிய**
**பவர்முல்லை தோன்றி பரியாமல் ஈன்ற**
**அவர்வரும் காலமீ தன்று.** 331

*சோலையாகிய மேகம் சிறு தேன்துளியைச் சிந்தின; அங்ஙனம் சிந்தப் புள்ளிகளையுடைய மயில்கள் கூத்தாடின; இவ்வுண்மை அறியாதே, நறிய கொடியாற் சிறந்த முல்லையும் தோன்றியும் முகிழ்த்தன; இஃது அவர் வருகின்ற காலம் அன்று.*

*காலம் அன்றெனத் தெளிந்தபடியால் பருவ மயங்கல் ஆயிற்று.*

## 27. ஆண்பாற் கிளவி

***காமுறு காமம் தலைபரிந் தேங்கி***
***ஏமுற் றிருந்த இறைவன் உரைத்தன்று.***

*தலைவியின்பால் காமுறுதற்குக் காரணமான காமம் எல்லை கடத்தலானே, ஏக்கமுற்று மயங்கியிருந்த தலைவன் உரைத்தது, ஆண்பாற் கிளவி ஆகும்.*

**கயற்கூடு வாள்முத்தாட் கண்ணிய நெஞ்சம்**
**முயற்கூடு முன்னதாகக் காணின் - உயற்கூடும்**
**காணா மரபிற் கடும்பகலும் கங்குலும்**
**நாணாளு மேயா நகை.** 332

*கண்ணாகிய இணைக் கயல்கள் பொருந்திய ஒளியுடைய முகத்தினளான தலைவியைக் கூடக் கருதிய என்னுடைய நெஞ்சமானது, முயலுக்கு உறைவிடமாகிய மதியத்தை முன்னதாகக் காணின் பிழைத்தல் கூடும்; ஒவ்வொரு நாளும் அவளைக் காணமாட்டாத முறைமையானே, கொடிய பகலினும் இரவினும் ஒருங்கே என்பால் மகிழ்ச்சியும் பொருந்தாதாயிற்றே!*

*'நகை' என்றது, அவளைக் கூடுதலானே பிறக்கின்ற உள்ளக் களிப்பினை.*

## 28. பெண்பாற் கிளவி

***வெள்வளை நெகிழவும் எம்முள் ளாத***
***கள்வனைக் காணாதிவ் வூரெனக் கிளந்தன்று.***

*எம்முடைய வெள்ளிய வளைகள் கழலவும், எம்மை நினையாத கள்வனாகிய அவனை இவ்வூர் காணாது எனத் தலைவி சொல்லியது, பெண்பாற் கிளவி யாகும்.*

**வானத் தியலும் மதியகத்து வைகலும்**
**கானத் தியலும் முயல்காணும் - தானத்தின்**
**ஒள்வளை ஓடவும் உள்ளான் மறைந்துறையும்**
**கள்வனைக் காணாதிவ் வூர்.** 333

*இவ்வூரவர், நாள்தொறும் வானத்தே இயலும் நிறைமதியிடத்துக் காட்டிலே திரியும் முயலினைக் காண்பர்; ஆனால், என் கையிடத்தே நின்றும் ஒள்ளிய வளைகள் கழன்று போகவும் அதனை நினையானாகி மறைந்து வாழுகின்ற கள்வனைக் காணார்கள்.*

*'இல்லாத ஒன்றையும் காண்பதாக உரைக்கின்ற ஊரவர், இருக்கும் அவனைக் காணாதது ஏன்?' என, அவர் கூறும் ஊரது பேதைமையை உரைத்தளன்.*

## 29. வெறியாட்டு

***தேங்கமழ் கோதை செம்மல் அளிநினைந்து***
***ஆங்கந் நிலைமை யாயறி யாமை***
***வேங்கையஞ் சிலம்பற்கு வெறியா டின்று.***

*மணங் கமழுகின்ற மாலையினை உடையாள், தலைவனது தண்ணளியினை நினைவின் கொண்டவளாக, அவ்விடத்து அந்நிலைமையைத் தாய் அறியாமற்படிக்கு, வேங்கை மரங்கள்*

*சூழ்ந்த மலையையுடைய முருகனுக்கு வெறியாடியது, வெறியாட்டு ஆகும்.*

**வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா**
**ஐய நனிநீங்க ஆடினாள் - மையல்**
**அயன்மனைப் பெண்டிரோ டன்னைசொல் அஞ்சி**
**வியன்மனையுள் ஆடும் வெறி.** 334

*தலைவியானவள், வெய்யதாக நெடுமூச் செறிந்தவளாகத், தலைவன் தனக்குத் தண்ணளி செய்தலை நினைந்து, மயக்கத்தை யுடைய அயன்மனைப் பெண்டிருடனே அன்னை சொல்லும் சொல்லுக்கும் அஞ்சியவளாகத், தனது அகன்ற மனையினுள்ளாக, வேன்முருகற்கு ஆடும் வெறியினை, அன்னையது ஐயம் மிகுதியும் நீங்கும்படியாக ஆடினாள்.*

## 30. பாண் வரவுரைத்தல்

***மாணிழைக்கும் வயலூரன்***
***பாண்வரவு பாங்கிமொழிந்தன்று.***

*மாண்ட அணிகளைஉடையாளான தலைவிக்கு, வயலூரனது பாண்மகனின் வரவினைப், பாங்கி சென்று சொல்லியது, பாண்வர வுரைத்தல் ஆகும்.*

**அஞ்சொற் பெரும்பணைத்தோள் ஆயிழையாய் தாநொடியும்**
**வஞ்சந் தெரியா மருண்மாலை-எஞ்சேரிப்**
**பண்ணியல் யாழொடு பாணனார் வந்தாரால்**
**எண்ணிய தென்கொலோ ஈங்கு.** 335

*அழகிய சொல்லையும், பெருத்த மூங்கிலனைய தோளினையும், தெரிந்த அணிகளையும் உடைய தலைவியே! தாம் சொல்லுகின்ற பொய்ம்மையினை ஆராயமாட்டாத மயக்கத்தைச் செய்யும் இம் மாலைப் பொழுதின் கண், எம் சேரியிடத்தே, பண்ணது இயல்புக்கு ஒத்த யாழிசையொடுங் கூடியவராகப் பாணனாரும் வந்தார்; இவ்விடத்தே அவர் எண்ணிவந்த செயல்தான் என்னவோ? அதனை அறிகிலேன்,*

*நொடியும் - கூறும். 'பாணனார்' இகழ்ச்சிக் குறிப்பு.*

## 31. பரத்தை கூறல்

***தேங்கமழ் சிலம்பன் தாரெமக் கெளிதெனப்***
***பாங்கவர் கேட்பப் பரத்தை மொழிந்தன்று.***

*'மணங்கமழும் மலையையுடைய தலைவனது மாலை எமக்குப் பெறுதற்கு எளிது' என்று சொல்லித், தன் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது, பரத்தை கூறல் ஆகும்.*

**பலவுரைத்துக் கூத்தாடிப் பல்வயல் ஊரன்**
**நிலவுரைக்கும் பூணவர் சேரிச்-செலவுரைத்து**
**வெங்கட் களியால் விறலி விழாக்கொள்ளல்**
**எங்கட் கவன்றார் எளிது. 336**

*பாண் மகளே! பல பொய்களையும் தலைவிக்குச் சொல்லி நடித்துப், பல வயல்களையுடைய ஊரனது நிலவைக் காட்டும் முத்தணிகளையுடைய பரத்தையர் சேரியிடத்துப் போக்கைச் சொல்லி, வெவ்விய மதுவையுடைய மகிழ்ச்சியால் விழாவினைக் கொண்டாடாதே கொள்; எமக்கு, அவனுடைய மாலையைப் பெறுதல் மிகவும் எளிதாகும் என்பதனை அறிவாயாக.*

*தலைவனது பரத்தைமையைப் போக்குதற்கு விழாக் கொண்டாடும் விறலியிடம், பரத்தை கூறியது இது.*

## 32. விறலிகேட்பத் தோழி கூறல்

***பேணிய பிறர்முயக் காரமு தவற்றெனப்***
***பாணன் விறலிக்குப் பாங்கி மொழிந்தன்று.***

*பாணனுடைய பாணிச்சிக்குத், 'தலைவனுக்குத் தன்னை விரும்பிய பரத்தையரது தழுவுதல் அரிய அமுதத்தோடு ஒப்பதாகும்' எனப் பாங்கி சொல்லியது, விறலி கேட்பத் தோழி கூறல் ஆகும்.*

**அரும்பிற்கும் உண்டோ அலரது நாற்றம்**
**பெருந்தோள் விறலி பிணங்கல் - கரும்போடு**
**அதிரும் புனலூரற் காரமிர்தம் அன்றோ**
**முதிரும் முலையார் முயக்கு. 337**

*பெரிய தோளினையுடைய விறலியே! நீ பிணங்காதே; மலரினது மணம் அரும்பிடத்தும் உளதாமோ? வண்டுடனே ஆரவாரிக்கும் புனலையுடைய ஊரனுக்கு, முதிரும் முலையினையுடைய பரத்தையரின் தழுவுதல், பெறுதற்கரிய அமுதம் போன்றது அல்லவோ!*

*'முதிரும் முலையார்' என்றது, இளமைப் பருவத்தாரான பரத்தையரை. இது, இளமை தீர் திறம்.*

## 33. விறலி தோழிக்கு விளம்பல்

***ஆங்கன் முப்பவர்க் கருங்களி தருமெனப்***
***பாங்கி கேட்ப விறலி பகர்ந்தன்று.***

*அவ்விடத்துத், தலைவனது மூப்புப் பரத்தையர்களுக்குப் பெறுதற்கரிதான களிப்பினைத் தருவதாகுமென்று, தோழி கேட்கும்படியாகப் பாணிச்சி சொல்லியது, விறலி தோழிக்கு விளம்பல் ஆகும்.*

**உளைத்தவர் கூறும் உரையெல்லாம் நிற்க**
**முளைத்த முறுவலார்க் கெல்லாம்-விளைத்த**
**பழங்கள் அனைத்தாய்ப் படுகளி செய்யும்**
**முழங்கு புனலூரன் மூப்பு. 338**

*வெறுத்தவரான மகளிர் உரைக்கும் சொற்களெல்லாம் நிற்க; ஆரவாரிக்கும் நீரானே சிறந்த ஊரினையுடைய த்லைவனது முதுமையும், தோன்றிய பல்வரிசையினை உடையவராய பரத்தையர்கட் கெல்லாம், ஆக்கின பழங்கள்ளைப் போன்றதாக விளங்கி, மிக்க களிப்பினைச் செய்யுமே!*

*'மூப்புப் பழங்கள் அனைத்தாய்ப் படுகளி செய்யும்' எனத் தலைவன் முதுமையாளனாகி, இளம் பரத்தையரை நாடித் திரிந்தமை தோன்றக் கூறினர். இதுவும் இளமை தீர் திறம்.*

## 34. பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல்

***உம்மில் அரிவை உரைமொழி ஒழிய***
***எம்மில் வலவனும் தேரும் வருமெனப்***
***பரத்தை வாயிற்குப் பாங்கி பகர்ந்தன்று.***

*'உம்முடைய இல்லத்தவளான மடந்தை உரைத்த சொற்கள் பழுதுபட்டு ஒழியும்படியாகத், தலைவனுடைய வலவனும் தேரும் எம்முடைய இல்லத்திற்கு வருமென்று சேரிப்பரத்தையின் தோழி, இற்பரத்தையின் தோழிக்குக் கூறியது, பரத்தை வாயில் பாங்கிகண்டு உரைத்தல் ஆகும்.*

**மாணலம் கொள்ளும் மகிழ்நன் தணக்குமேற்**
**பேணலம் பெண்மை ஒழிகென்பார்-காணக்**
**கலவ மயிலன்ன காரிகையார் சேரி**
**வலவன் நெடுந்தேர் வரும். 339**

*'மாட்சிமைப்பட்ட எமது அழகினை நுகருகின்ற தலைவன் எம்மை நீங்குவானாயின், எம் பெண்மையை யாம் பேணுதலையும் செய்யோம்; அது கெடுவதாக' என்று சொல்லுகின்ற இற்பரத்தையர் கண்டிருப்பவே, தோகையுடைய மயிலைப் போன்ற பரத்தையருடைய சேரியிடத்தாக, பாகனையுடைய தலைவனது நெடிய தேரும் வாராநிற்கும்.*

## 35. பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்

***மற்றவர் சேரியின் மைந்தன் உறைந்தமை***
***இற்றென விறலி எடுத்துரைத் தன்று.***

*பரத்தையரது சேரியிடத்தே தலைவன் தங்கின நிலைமையை இப்படிப்பட்டதெனப் பாணிச்சி தலைவிக்கு எடுத்துரைத்தது, பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல் ஆகும்.*

**தண்டார் அணியவாம் தையலார் சேரியுள்**
**வண்டார் வயலூரன் வைகினமை-உண்டால்**
**அறியேன் அடியுறை ஆயிழையால் பெற்றேன்**
**சிறியேன் பெரிய சிறப்பு.** 340

*குளிர்ந்த மாலையினையுடைய அழகினை விரும்புகின்ற வரான பரத்தையரது சேரியினுள்ளே, வண்டினம் மொய்க்கின்ற கழனியினை உடையவனான தலைவன் தங்கியிருந்தமை உண்டு; ஆனால், யான் அதனைத் தெளிவுற அறியேன்; அடி பொருந்தும் ஆராய்ந்த அணிகளையுடைய தலைவியாலே, சிறிய யான் பெரிய சிறப்பினையும் இப்போது பெற்றேன்.*

*தலைவனது பரத்தைமையை அறிந்து வைத்தும், காதலர்க்குள் பிணக்கினை வளர்க்க விரும்பாதவளான விறலி, 'உண்டால் அறியேன்' எனப் பட்டும்படாமலும் உரைக்கின்றனள்.*

## 36. குற்றிசை

***பொற்றார் அகலம் புல்லிய மகளிர்க்கு***
***அற்றாங் கொழுகா தறங்கண் மாறின்று.***

*தலைவன், தனது அழகிய மாலையுடைய மார்பினைத் தழுவிய மகளிர்க்கு அற்றறுதிப்பட்டு நடவாது, அறத்தைக் கண்மறுத்து நடந்தது, குற்றிசை ஆகும்.*

*அற்றாங்கு ஒழுகுதல்-ஒன்றைக் கடைப்பிடியாகக் கொண்டு இறுதிவரைக்கும் பிறழாது நடத்தல். குற்றிசை-குறுகிய புகழ். அறங்கண் மாறல்-அறம் பிறழ்ந்து ஒழுகுதல்.*

**கரிய பெருந்தடங்கண் வெள்வளைக்கை யாளை**
**மரிய கழிகேண்மை மைந்த-தெரியின்**
**விளிந்தாங் கொழியினும் விட்டகலார் தம்மைத்**
**தெளிந்தாரில் தீர்வது தீது.** 341

*கரியவாய் மிகவும் பெரிய கண்களையும், வெள்ளிய வளைகள் விளங்கும் கைகளையும் உடையவளைப், பொருந்திய மிக்க தொடர்ச்சியினை யுடைய தலைவனே! ஆராய்ந்தால் இறந்து படினும் விட்டு நீங்காராய் தம்மைத் துணையென்று தேறின மகளிரிடத்து நின்றும் விலகுவது, மிகவும் தீமை உடையதாம்.*

## 37. குறுங் கலி

***நாறிருங் கூந்தன் மகளிரை நயப்ப***
***வேறுபடு வேட்கை வீயக் கூறின்று.***

*நறு நாற்றம் கமழுகின்ற பெரிய கூந்தலையுடைய மகளிரை நயக்கும்படி, தலைவனின் நெஞ்சத்தே வேறுபட்டெழுந்த வேட்கையானது கெடும்படியாகக் கூறியது குறுங்கலி ஆகும்.*

*'கலி' என்பது கெடுதி; இங்கே அது சிறுமையுடைய காமங் காரணமாக நேர்வதாதலால், குறுங்கலி எனப்பட்டது.*

**பண்ணவாந் தீஞ்சொற் பவளத் துவர்ச்செவ்வாய்**
**பெண்ணவாம் பேரல்குற் பெய்வளை-கண்ணவாம்**
**நன்னலம் பீர்பூப்ப நல்கார் விடுவதோ**
**தொன்னலம் உண்டார் தொடர்பு.** 342

*பண்ணும் விரும்புதற்குரிய இனிதான சொல்லினையும், பவளம்போல மிகச் சிவந்த வாயினையும், பெண்மைத் தன்மையும் பெற விரும்பும் பெரிதான அல்குலினையும், இட்ட வளையினையும் உடையவள் தலைவி; கண்கள் காணற்கு ஆசைப்படுகின்ற அவளுடைய சிறந்த அழகெல்லாம் கெட்டுப் பீர்க்கம்பூப்போலப் பசலை படரும்படி, அவளுடைய பழைய அழகினை நுகர்ந்தவர் அவளது தொடர்பினைக் கைவிடுவது அறமாகுமோ? "அறநெறிக்கு மாறானது" என்பது கருத்து.*

## தொகுத்துக் கூறுதல்

*பெருந்திணைப் படலத்தின் இருபாற் பெருந்திணையாகிய பகுதி, பதினேழு துறைகளாக நடக்கும் என்பதனை அறிந்தோம். அவை-*

*தலைவன் தலைவியைப் பிரிந்து போகத் துணிந்து, பின் செலவினைக் கைவிடலாகிய செலவழுங்குதலும்; தலைவன் ஊர்மன்றிடை மடன்மா ஊர்ந்து வருதலாகிய மடலூர்தலும், தலைவியின் துயரைக்கண்டு பொறாளாய்த் தோழி தலைவன்பால் தூது நடத்தலாகிய தூதிடையாடலும்;*

*அப்படிச் சென்ற தோழி, மாலைக் காலத்தே தலைவி பிரிவுத் துயருக்கு ஆற்றாது வருந்துகிற மிகுதிப்பாட்டைச் சொல்லுதலாகிய துயரவர்க்குரைத்தலும்; தலைவி காம மிகுதியால் வருந்துதலைக் கண்ட தோழி, தானும் செயலற்ற தாகிய கண்டு கைசோர்தலும்; பருவத்தைக் கண்டு மயங்கித் துயருறுதலாகிய பருவமயங்கலும்; பருவத்தை ஐயுற்று மயங்குதலாகிய பருவ மயங்கலும்;*

*காமம் எல்லை கடந்ததாகத் தலைவன் ஏக்கமுற்றுக் கூறுதலாகிய ஆண்பாற் கிளவியும்; எம் வளை சோரவும் எம்மை நினையாத கள்வனை அலர் கூறும் இவ்வூரவர் கண்டிலரே எனத்*

*தலைவி வருந்தும் பெண்பாற் கிளவியும்; தலைவனது அளியினை வேண்டிய தலைவி, தாய் அறியாதபடி வேன்முருகற்கு வெறியாடி வேண்டுதலாகிய வெறியாட்டும்; தலைவனது பாணன் வந்ததனைத் தோழி தலைவிக்கு உரைத்தலாகிய பாண்வரவு உரைத்தலும்;*

*பரத்தை, தன் பாங்காயினர் கேட்பத் தலைவனைத் தான் பெறுதல் எளிதெனக் கூறும், பரத்தை கூறலும்; தோழி 'தலைவனுக்குப் பரத்தையரது இன்பம் அமுதம் போன்றது' எனப் பாணிச்சிக்குக் கூறுதலாகிய, விறலி கேட்பத் தோழி கூறலும்; 'தலைவனது முதுமை பரத்தையர்க்கு நாட்பட்ட கள் போன்றது' என விறலி தோழிக்கு உரைத்தலாகிய, விறலி தோழிக்கு விளம்பலும்;*

*சேரிப் பரத்தையின் தோழி இற்பரத்தையின் தோழிக்கு உரைத்தலாகிய, பரத்தை வாயில் பாங்கி கண்டு உரைத்தலும்; தலைவன் பரத்தையர் சேரியில் துயின்றதனை விறலி கூறலும்; தலைவியொடு தலைவன் கடைபோக வாழாது இடையிற் கைவிட்டதாகிய குற்றிசையும்; தலைவியை அறவே கைவிட்டுப் பிறமகளை விரும்புதற்குத் தலைவனிடத்தே எழுந்த வேட்கை கெடும்படி கூறியதாகிய குறுங்கலியும் ஆம்.*

✡✡✡

## 13. ஒழிபு

### (வென்றிப் பெருந்திணை)

*(பாடாண் பாட்டிலும் வாகைப் பகுதியிலுமுள்ள புறத்திணைப் பகுதிகளுள், அவ்விடங்களுள் கூறப்படாதன இவ்விடத்துக் கூறப்படுகின்றன.)*

**பாடாண் பகுதியுள் தொல்காப் பியமுதற்**
**கோடா மரபிற் குணனொடு நிலைஇக்**
**கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்**
**விடுத்தல் அறியா விறல்புரி வாகையுள்**
**வாணிக வென்றியும் மல்ல வென்றியும்**
**நீணெறி உழவன் நிலனுழு வென்றியும்**
**இகல்புறி யேறொடு கோழியும் எதிர்வன்**
**தகருடன் யானை தணப்பில்வெம் பூழொடு**
**சிவல்கிளி பூவை செழும்பரி தேர்யாழ்**
**இவர்தரு சூதிடை யாடல் பாடல்**
**பிடியென் கின்ற பெரும்பெயர் வென்றியோடு**
**உடையன பிறவும் உளப்படத் தொகைஇ**
**மெய்யி னார்தமிழ் வெண்பா மாலையுள்**
**ஐய னாரிதன் அமர்ந்தரைத் தனவே.** (18)

*பாடாண் பகுதியிலும் வாகையிலுமுள்ள புறத்திணைத் துறைகளை உணர்த்துதல் இந்தச் சூத்திரம் ஆகும். அவை:-*

*பாடாண் பகுதியுள் கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்;*

*வாகைத் திணையுள் வாணிக வென்றி, மல்வென்றி, உழவன் வென்றி, ஏறுகொள் வென்றி, கோழி வென்றி, தகர் வென்றி, யானை வென்றி, பூழ் வென்றி, சிவல் வென்றி, கிளி வென்றி, பூவை வென்றி, குதிரை வென்றி, தேர் வென்றி, யாழ் வென்றி, சூதுவென்றி, ஆடல் வென்றி, பாடல் வென்றி, பிடி வென்றி எனப் பதினெட்டும் ஆம்.*

*ஐயனாரிதனார் பன்னிரு படலத்தை ஒட்டித் தம் நூலினைச் செய்தவர். எனினும், தொல்காப்பிய நூலினையும் கற்று உணர்ந்தவரான அவர், தாம் கொண்ட முதல் நூலினிற்*

பயிலாதனவற்றை எல்லாம் இப் பகுதியுள் உரைக்கின்றனர். இயல்பாகக் காணப்படும் கொளுவினை இப்பகுதியுள் அவர் இயற்றவில்லை; துறைத் தலைப்புகளுக்கு நேராகவே வெண்பாக்களைச் சொல்லிச் செல்லுகின்றனர். அவற்றுள்:-

## 1. கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்

*(வறியவர்க்கு ஒரு பொருளை மனமுவந்து கொடுக்கின்ற குணமுடையவரைப் புகழ்ந்து, அங்ஙனம் கொடைத்தன்மை இல்லாதாரான கஞ்சரைப் பழித்தல்)*

**சீர்மிகு நல்லிசை பாடிச் செலவயர்தும்**
**கார்முகில் அன்னார் கடைநோக்கிப்-போர்மிகு**
**மண்கொண்ட வேல்மற மன்னரே ஆயினும்**
**வெண்கொண்டல் அன்னாரை விட்டு.** 343

*போரினிடத்தே மிகுதிப் பாட்டினைச் செலுத்திப் பகைவரது நாட்டினைக் கைப்பற்றிக் கொண்ட, வெற்றிவேலினையுடைய மறவேந்தரே யானாலும், பெய்யாத வெண்மேகத்தைப்போன்ற அத்தகையாரை ஒதுக்கிவிட்டுக், கார்மேகத்தைப்போல வண்மையுடையாரது சீர்மை மிகுந்த நல்ல புகழினைப் பாடி, அவரது வாயிலை நோக்கியே யாம் செல்வதற்கு விரும்புவோம்.*

*கொடுப்பாரைப் போற்றியதும்; கொடாதாரைப் பழித்ததும் காண்க.*

## 2. வாணிக வென்றி

*(வாணிகத்தால் பெரும்பொருள் ஈட்டி, ஈட்டியதனைப் பலருக்கும் கொடுத்துதவி வாழுகின்ற, வணிகரது சிறப்பினைக் கூறுதல்)*

**காடுங் கடுந்திரை நீர்ச்சுழியும் கண்ணஞ்சான்**
**சாடுங் கலனும் பலவியக்கி-நீடும்**
**பலிசையாற் பண்டம் பகர்வான் பரியான்**
**கலிகையால் நீக்கல் கடன்.** 344

*காட்டையும் கடிய அலையை யுடைய நீர்ச்சுழியையும் கடத்தற்கு அஞ்சாதவன்; சகடம் பலவும், மரக்கலம் பலவும் இடந்தோறும் செலுத்தி, நீடுகின்ற ஊதியங் காரணமாகப் பல பண்டங்களையும் விற்பவன்; இவன், பொருளில் பற்றிலாதவனாகப் பிறருடைய வறுமைத் துயரை நீக்குதல் கடமையாகும்.*

*சாடு-சகடம், கலம்-மரக்கலம். பலிசை-ஊதியம். கலி-வறுமை.*

## 3. மல்வென்றி

*(மற்போரிடும் மறவர்களது, அந்தச் செயலுள் விளங்கும் சிறந்த மேம்பாட்டைக் கூறுதல்.)*

**கண்டான் மலைந்தான் கதிர்வானம் காட்டியே**
**கொண்டான் பதாகை மறமல்லன்-வண்டார்க்கும்**
**மாலை துயலும் அருவிய மாமலை**
**போலுந் திரள்தோள் புடைத்து.** 345

*மறப்பண்பினை உடையவனான மல்லன், தன் எதிரே பொருத வந்தவனைக் கண்டான்; அருவிநீர் வீழ்கின்ற பெரிய மலையினை யொத்த வண்டினம் ஆர்க்கும் மாலை கிடந்து அசைகின்ற தன் திரண்ட தோள்களைப் புடைத்துக் கொண்டவனாக அவனுடன் போரிட்டான்; அந்த எதிரிக்குக் கதிரையுடைய வானத்தைக் காட்டியவனாகக், குறித்த தாயத்தையும் தான் கைக்கொண்டான்.*

*'கதிர்வானம் காட்டல்-முதுகில் மண்படத் தரையிலே வீழ்த்தி வெற்றி கொள்ளல்; இன்றும் இதுவே மற்போர் மரபாக இருக்கிறது. பதாகை-வெற்றிக் கொடியும் ஆம்.*

## 4. உழவன் வென்றி

*(உழவுத் தொழிலோனது உயர்தொழிலின் மிகுதியைச் சொல்லியது.)*

**மண்பதம் நோக்கி மலிவயலும் புல்செய்யும்**
**கண்பட ஏர்பூட்டிக் காலத்தால்-எண்பதனும்**
**தத்துநீர் ஆர்க்குங் கடல்வேலித் தாயர்போல்**
**வித்தித் தருவான் விளைவு.** 346

*நிலத்தினது பதத்தினைப் பார்த்து, நீர்மலிந்த வயலிடத்தும், நீர்வறந்த கொல்லியிடத்தும் பரக்க ஏரைப் பூட்டி உழுது, இயைந்த பருவத்தாலே விதைத்துத், தவழும் திரையொலிக்கும் கடலினை வேலியாகவுடைய பூமியிடத்துத் தாயரைப் போல எண்வகை உணவுப் பொருள்களையும் விளைத்துத் தருபவன், பல்லுயிர்களுக்கும் ஆக்கம் ஆவான்.*

*எண்பதன், நெல், வரகு, சாமை, தினை, இறுங்கு, கேழ்வரகு, கொள், உழுந்து என்பன. இறுங்கு-சோளம்.*

## 5. ஏறுகொள் வென்றி

*(கொல்லேறு தழுவி வெற்றியடையும் சிறப்பினைச் சொல்லியது.)*

குடைவரை ஏந்தியநம் கோவலனே கொண்டான்
அடையவிழ் பூங்கோதை யஞ்சல்-விடையரவம்
மன்றங் கறங்க மயங்கப் பறைபடுத்து
இன்று நமர்விட்ட ஏறு. 347

*இலைகள் விரிந்த பூமாலையினை யுடைய தலைவியே! நீ எதற்கும் அஞ்சாதேகொள்; மன்றிடத்தே மிக்க ஆரவாரம் முழங்கும்படியும், கண்டார் மயங்கும்படியும் பறையறைந்து இன்று நம் உறவு முறையார் விட்ட கொல்லேற்றினை, குடையாக மலையினை ஏந்திய நம்முடைய தலைவனான, ஆயனே தழுவி வெற்றி கொண்டான்; அதனைக் காண்பாயாக!*

*'மாயவன்' என்றது, அவனைப் போன்ற தன் காதலனை.*

## 6. கோழி வென்றி

*(சேவற் கோழியைப் பொருதற்கு விடுத்து அதன்கண் கொண்ட வெற்றியைச் சிறப்பித்தது.)*

பாய்ந்தும் எறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும்வாய்க் கொண்டுங் கடுஞ்சொல்லார்-ஆய்ந்து
நிறங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டும் தான்வருமே போர்க்கு. 348

*கடிதாகக் கூவுதலையுடைய கோழிச் சேவலானது மேலெழப் பாய்ந்தும், தன் காலின் முள்ளையிட்டு இடித்தும், தாழ்ந்தும், பலகாற் சினந்தும், வாயாற் கொத்தியும் போரிடுகின்ற ஆற்றலை ஆராய்ந்து, நிறங்கண்டு, வல்லார் பொருதவிட்ட சேவற் கோழியைப் புறங்கண்ட பின்னரும், சினம் தீராமையால், மீண்டும் பொருதற்கு வாராநின்றது!*

*'சொல்லுக்குச் சொல் வெல்லும், ஆமைக்கு ஆமை வெல்லும், தெங்குக்குத் தெங்கு வெல்லும் எனக், கோழிகளின் நிறமறிந்து விடுதல் இது' என்பர் பழைய உரையாசிரியர். இவை, கோழி வகைகள் ஆம்.*

## 7. தகர் வென்றி

*(ஆட்டுக்கடாச் சண்டையிலே அடைகின்ற வெற்றியைச் சொல்லியது.)*

அருகோடி நீங்கா தணைதலும் இன்றித்
திரிகோட்ட மாவிரியச் சீறிப் - பொருகளம்
புக்கு மயங்கப் பொருது புறவாயை
நக்குமாம் நல்ல தகர். 349

நல்ல போரியல்பு கொண்ட ஆட்டுக் கடாவானது, தனது எதிர்க் கடாவின் அருகே ஓடி, அதனைவிட்டு நீங்காமலும் மிக நெருங்குதல் இல்லாமலும், முறுக்கமைந்த கொம்புகளையுடைய எதிர்த்த கடாவானது கெட்டோடும்படியாகச் சினந்து போர்க்களத்தே புகுந்து, கலங்கப் போரிட்டு அதனை வென்று, தனது புறவாயினை நக்கியபடியே நிற்கும்.

## 8. யானை வென்றி

(யானைகளைத் தம்முட் பொருதற்கு விடுத்துக் கொண்ட வெற்றியைச் சொல்லியது.)

**கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட**
**குஞ்சரம் வென்ற கொலைவேழம் - துஞ்சாது**
**உழலையும் பாய்ந்திறுத் தோடாது தான்தன்**
**நிழலையும் தான்சுளிக்கும் நன்று.** 350

அட்டி மதுரமிட்டுத் திரட்டின கவளத்தைத் தன் கையிலே கொண்ட யானையை வென்ற, கொலைத் தொழிலாற் சிறந்த வேழமானது, அச் சினம் ஆறாதபடியினாலே, உறங்குதலையும் செய்யாது, கணையத்தையும் செய்யாமல், தான் தன்னுடைய நிலையையும் வெகுண்டு, துகைத்து நிற்கும்!

கஞ்சுகம்-அட்டி மதுரம்; அதிமதுரம் என்பர் சிலர். உழலை-கணையமரம். சுளிக்கும்-காலால் துகைக்கும்.

## 9. பூழ் வென்றி

(குறும்பூழ்ப் பறவையைப் போருக்குவிட்டுக் கொள்ளும் வெற்றியைச் சொல்லியது.)

**சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்காற்**
**சொல்லும் பலவுள சொன்னபின் - வெல்லும்**
**நலம்வர நாடி நடுங்காது நூற்கண்**
**புலவரால் ஆய்ந்தமைந்த பூழ்.** 351

நூற்பழக்கம் யாதுமின்றியே சொல்லாநின்ற குறும்பூழாடிகள் தாம் வேண்டுவனவற்றைச் சொல்லுக; சொல்லுமிடத்துச் சொல்லக்கடவதான மந்திரங்கள் பல உள்ளன; நன்மையுண்டாகும்படி ஆராய்ந்து, கலங்காது, நூலிடத்து அறிவுடையாரால் இலக்கணம் ஆராய்ந்து மதித்த பூழ், அவற்றை முறையாகச் சொன்னதன் பின்பே, தான் போரினை வெல்லும்.

'சொல்லக்கடவ மந்திரம் பலவாவன; தீற்றும் அரிசி ஓது மந்திரமும; பச்சிலை பிசைந்து தடவும்போது சொல்லும் மந்திரமும், செவியுள்ளூறுத்து மந்திரமும்' என்பர், பழைய உரையாசிரியர்.

## 10. சிவல் வென்றி

*(சிவல்களைப் பொருதற்கு விடுத்துக் கொள்ளும் வெற்றியைச் சொல்லியது. 'சிவல்' என்பது, கவுதாரி என்னும் பறவை)*

**ஒட்டியார் எல்லாம் உணரார் புடைத்தபின்**
**விட்டோட வேண்டுமோ தண்ணுமை-விட்ட**
**சுவடேற்கும் ஆயிற் சுடரிழாய் சோர்ந்து**
**கவடேற்க வோடும் களத்து.** 352

*ஒளிசுடருகின்ற அணிகலன்களையுடைய நங்கையே! பந்தயங் கூறும் சிவலினை உடையவர் எல்லாரும் அறியார்; நமது சிவல் எதிர்ச்சிவலைத் தாக்கிய பின்புதான் தண்ணுமையைக் கைவிட்டு ஓடல் வேண்டுமோ? இவர்கள் போர்க்கு விட்ட சிவலுள் யாதானும் ஒன்று அடிப்பாட்டினின்று நம் சிவலை எதிர்க்குமாயின் போர்க்களத்தே அது சோர்வுற்று, நம் சிவலின் கவட்டுள் புகுந்து கண்டோர் நகைக்க ஓடுமே!*

*சுவடு-அடிப்பாடு. ஒட்டியார் - பந்தயங் கூறுவார்.*

## 11. கிளி வென்றி

*(கிளியைப் பாடவைத்துப் பூவையை வெற்றிகொள்ளுதலைச் சொல்லியது.)*

**இலநாம் உரைப்பதன்கண் எல்வளை நாணப்**
**பலநாள் பணிபதமும் கூறிச்-சிலநாளுள்**
**பொங்கரி உண்கணாள் பூவைக்கு மாறாகப்**
**பைங்கிளியைக் கற்பித்தாள் பாட்டு.** 353

*ஒரு சில நாள்களினுள்ளாக, மிக்க அரிபடர்ந்த மையுண்ட கண்ணினளான அவள், பல நாளும் தாழ்ந்த சொற்களை எல்லாம் பயிலக் கூறி, ஒளியுடைய வளையலை யுடைய நீ நாணும்படியாக, நினது பூவைக்கு எதிராகத் தன் கிளிக்குப் பாட்டுக் கற்பித்தாள்; அதனால், நாம் அக் கிளியிடத்து இகழ்ந்துசொல்லும் சொல் யாதுமில்லை.*

*பூவையுடையாளுக்குச் சொல்லியது இது.*

## 12. பூவை வென்றி

*(கிளியைப் பூவை வென்றதனைச் சொல்லியது.)*

**புரிவொடு நாவினாற் பூவை புணர்த்துப்**
**பெரிய அரியவை பேசும்-தெரிவளை**
**வெள்ளெயிற்றுச் செவ்வாய் வரியுண் கணாள்வளர்த்த**
**கிள்ளை கிளந்தவைகீண் டிட்டு.** 354

*நாகணவாய்ப் புள்ளானது, விருப்பத்தோடே வகுத்துப் பெரியவான சொல்லற்கரிய சொற்களைச் சொல்லும்; தெரிந்த வளையினையும், வெள்ளிய பற்களையும், சிவந்த வாயினையும், செவ்வரி கருவரியாற் சிறந்த மையுண்ட கண்ணினையும் உடையாள், தான் வளர்த்த கிளி சொன்ன வார்த்தைகளைக் கிழித்துக் கீழ்ப்படுத்தியே, அது அப்படிச் சொல்லும்.*

## 13. குதிரை வென்றி

*(குதிரை ஏற்றத்தில் வெற்றி கொள்ளுந்தலைச் சொல்லியது.)*

**ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும்**
**கந்து மறமும் கறங்குளைமா - முந்துற**
**மேல்கொண் டவைசெலீஇ வென்வேலான் மேம்பட்டான்**
**வேல்கொண்ட பெண்ணாளை மீட்டு.** 355

*ஐவகைப்பட்ட செலவும், பதினெட்டு வகைப்பட்ட சுற்று வரவும், கழியப் பாய்தலும், கறுவுதலும், ஒலிக்குந் தலையாட்டமும் உடைய குதிரையை முற்பட ஏறிக் கொண்டு, முன்பு சொன்ன அவற்றைச் செலுத்தி, வெற்றி வேலைக் கொண்டு, வெற்றிமகளைத் தன்னிடத்தே மீட்டவனாக, அம் மறவன் மேம்பட்டனன்.*

## 14. தேர் வென்றி

*(தேரூர்தலிலே வெற்றிகொண்டதனைச் சொல்லியது.)*

**ஒலிமணித் திண்தேர் உடையாரை வெல்லும்**
**கலிமணித் திண்தேராற் காளை-கலிமாப்**
**பலவுடன் பூட்டிப் படர்சிறந் தைந்து**
**செலவொடு மண்டிலம் சென்று.** 356

*இந்த மறவன், ஆரவாரிக்கும் மணிகளையுடைய திண்ணிய தேராலே, மனவெழுச்சியுடைய குதிரைகள் பலவும் ஒருசேரப் பூட்டிச் செலவின்கண் சிறப்புற்று ஐந்து வகையான செலவுடனே, பதினெட்டு வகைச் சாரியையும் சென்று, ஒலிக்கும் மணிகளையுடைய திண்ணிய தேரினரான பகைவரை வெல்வான்.*

*'மண்டிலம் சென்று' என்றது; இடசாரி வலசாரியாகச் சுழன்று என்றபடியாம். ஐவகைச் செலவு, விக்கிதம், வற்கிதம், உபகண்டம், ஐவம், மாஜவம் ஆகியவை என்பர்.*

## 15. யாழ் வென்றி

*(யாழ் இசைத்தலிலே வெற்றி கொள்வதனைச் சொல்லியது.)*

**பாலை படுமலை பண்ணி அதன்கூட்டம்**
**கோலஞ்செய் சீறியாழ் கொண்டபின் வேலைச்**

**சுவையெலாம் தோன்ற எழீஇயினாள் சூழ்ந்த**
**அவையெலாம் ஆக்கி அணங்கு.** 357

*தேவமகளையொத்த இவள், படுமலைப் பாலையையும் அல்லாத பிற பாலைகளையும் ஆக்கி, அழகுசெய்த சிறிய யாழைத் தன் கையிலே கொண்ட பின்பு, முன் சொன்ன திரிபாலைத் திறமெல்லாம் அமுதச் சுவை தோன்ற வாசித்தாள்; சூழ்ந்த அவையினுள்ளாரை எல்லாம் தன் வயத்தாராக்கி வெற்றியுட் கொண்டாள்.*

## 16. சூது வென்றி

*(சூதாட்டத்தின்கண் வென்றதைச் சொல்லியது.)*

**கழகத் தியலும் கவற்றின் நிலையும்**
**அளகத் திருநுதலாள் ஆய்ந்து-புழகத்து**
**பாய வகையாற் பணிதம் பலவென்றாள்**
**ஆய வகையும் அறிந்து.** 358

*சூதினது இயல்பினையும், கவற்றினது நிலைமையினையும் பனிச்சையை யுடைய, திருநுதலினாள் ஆராய்ந்து, புகழினை யுடைய மனையிடத்தே, உபாய வகையால் ஆதாயத்தின் கூறுபாட்டையும் அறிந்து, சூதுபொர ஒட்டிய பொருள் பலவற்றையும் வென்றாள்.*

*ஆயம்-ஆதாயம். பணிதம்-ஒட்டும் பொருள்.*

## 17. ஆடல் வென்றி

*(கூத்தாடு தொழிலில் வென்றதைச் சொல்லியது.)*

**கைகால் புருவக்கண் பாணி நடைதூக்குக்**
**கொய்பூங் கொம்பன்னாள் குறிக்கொண்டு-பெய்பூப்**
**படுகளிவண் டார்ப்பப் பயில்வளைநின் றாடும்**
**தொடுகழல் மன்னன் துடி.** 359

*கொய்யப் பெற்ற பூங்கொம்பினைப் போன்றவளும், செறிந்த வளையல்களை உடையவளுமான விறலி, தான் சூடிய மலர்மாலையினிடத்தே வண்டுகள் ஆரவாரிக்கக், கட்டும் வீரக் கழலினையுடைய வேந்தனுக்குத், துடிக் கூத்தினைக் கையாலும் காலாலும் புருவத்தாலும் கண்ணாலும் தாளத்தையும் செலவையும் இசையையும் கருதிக் கொண்டு நின்று, ஆடாநிற்கும்.*

*பாணி - தாளம். தூக்கு - இசை.*

## 18. பாடல் வென்றி

*(இசையெடுத்துப் பாடுதலிலே கொண்ட வெற்றியைச் சொல்லியது.)*

**வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்**
**வெண்டுறையும் செந்துறையும் வேற்றுமையாக்-கண்டறியக்**
**கின்னரம் போலக் கிளையமைந்த தீந்தொடையாழ்**
**அந்நரம்பும் அச்சுவையும் ஆய்ந்து.** 360

*வண்டு தங்கும் கூந்தலையும், மாவடுவின் பிளப்பினை யொத்த கண்ணினையும் உடையாள், கின்னரத்தின் ஓசை போலக் கிளைத் தொடர்ச்சி அமைந்த இனிதான கோவையை யுடைய யாழினது அழகிய நரம்புகளையும் அவ்வவற்றிற்குரிய சுவைகளையும் ஆராய்ந்து, வெண்டுறைப் பாடல்களையும் செந்துறைப் பாடல்களையும் வேறுபாடு தோன்ற, அறிவர் மனத்தாற் கண்டறியும்படியாகப் பாடினாள்.*

## 19. பிடி வென்றி

*(பிடிபோல ஆடுகின்ற கூத்தின்கண் வென்றதனைச் சொல்லியது எனவும், பிடியை நடத்தினதைச் சொல்லியது எனவும் கூறுவர்.*

**குவளை நெடுந்தடங்கண் கூரெயிற்றுச் செவ்வாய்**
**அவளொடு மாமையொப் பான - இவளொடு**
**பாணியந் தூக்கு நடையும் பெயராமைப்**
**பேணிப் பெயர்ந்தாள் பிடி.** 361

*செங்கழுநீர் மலரையொத்த நெடிய பெரிய கண்களையும், கூர்மையான பல்லினையும், சிவந்த வாயினையும் உடைய திருமகளுடனே நிறமொத்தாளான அவளுடனே, தாளமும் இசையும் செலவும் தப்பாதபடி பாதுகாத்து, பிடிபோல அசைந்து பெயர்ந்தாடுங் கூத்தினை இவளும் ஆடினாள்.*

*'பெயர்த்தாள்' எனப் பாடம் ஓதிப், பிடியை நடத்தினாள் எனவும் உரைப்பர்.*

## தொகுத்து உரைத்தல்

*ஒழிபு என்னும் இப்பகுதியுள், பத்தொன்பது துறைப் பகுதிகள் உரைக்கப்பட்டன. அவை, கொடுப்பவரைப் புகழ்ந்தும் கொடாதவரைப் பழித்தும் பாடுதலாகிய, கொடுப்போர் ஏத்திக் கொடாதோர்ப் பழித்தலும்; வணிகரது தொழில் மேம்பாட்டை உரைத்தலாகிய வாணிக வென்றியும், மற்போர் மறவரது வென்றி*

கூறலாகிய மல் வென்றியும்; உழவரது தொழில் மேம்பாடு கூறுதலாகிய உழவன் வென்றியும்;

ஏறுகொள்வாரது வென்றியை உரைத்தலாகிய ஏறுகொள் வென்றியும்; கோழிப்போரிடத்து வென்றியை உரைத்தலாகிய கோழி வென்றியும்; ஆட்டுக்கடாப் போரிடத்து வென்றியை உரைத்தலாகிய தகர் வென்றியும்;

யானைப் போரிடத்து வென்றியைக் கூறுதலாகிய யானை வென்றியும்; குறும்பூழைப் பொரவிடுத்து வெற்றிகொள்வதனைக் கூறுதலாகிய பூழ்வென்றியும்; சிவல்போரிடத்தே வெற்றியுறுதலைக் கூறுதலாகிய சிவல் வென்றியும்;

பூவைக் கிளி வென்றது கூறுதலாகிய கிளி வென்றியும்; கிளியைப் பூவை வென்றது கூறுதலாகிய பூவை வென்றியும்; குதிரையேற்றத்து வெற்றி கூறலாகிய குதிரை வென்றியும்; தேர் செலுத்தலில் பெற்ற வெற்றியைக் கூறுதலாகிய தேர்வென்றியும்.

யாழிசைத்தலிலே பெற்ற வெற்றியை உரைத்தலாகிய யாழ் வென்றியும்; சூதாட்டத்து வெற்றியை உரைத்தலாகிய சூது வென்றியும்; கூத்தாடலில் வென்றது உரைத்தலாகிய ஆடல் வென்றியும்; பாடுதலில் வென்றதனைக் கூறுதலாகிய பாடல் வென்றியும்; பிடிபோல ஆடுதலிலே வென்றதனைக் கூறுதலாகிய பிடிவென்றியும் ஆம்.

**புறப்பொருள் வெண்பாமாலையும்**
**புலியூர்க் கேசிகன் உரையும் முற்றுப் பெற்றன.**

# இந்நூலின் பொருளமைதி

(சூத்திரம் 19)

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை உழிஞை நொச்சி தும்பையென்று
இத்திறம் ஏழும் புறமென மொழிப. (1)

வாகை பாடாண் பொதுவியல் திணையெனப்
போகிய மூன்றும் புறப்புறம் ஆகும். (2)

கைக்கிளை பெருந்திணை ஆமிவ் விரண்டும்
அகப்புறம் ஆமென அறைந்தனர் புலவர். (3)

☆☆☆

## சூத்திர முதற் குறிப்பு அகரவரிசை

(எண் : சூத்திரம் எண்)


| | |
|---|---|
| உழிஞை ஓங்கிய | 6 |
| கதமலி கரந்தை | 2 |
| காஞ்சி காஞ்சி | 4 |
| காட்சி ஐயம் துணிவே | 14 |
| காண்டல் நயத்தல் | 15 |
| சீர்சால் போந்தை | 10 |
| சீர்சால் முல்லையொடு | 13 |
| சீர்சால் வாகை | 8 |
| சீர்செல அழுங்கல் | 17 |
| துன்னருங் கடும்போர்த் | 7 |
| நுவருலம் காப்பின் | 5 |
| பாடாண் பகுதியுள் | 18 |
| பாடாண் பாட்டே | 9 |
| முதுபாலையே சுரநடை | 11 |
| மூதுரை பொருந்திய | 12 |
| வாடா வஞ்சி | 3 |
| வெட்சி வெட்சி | 1 |
| வேட்கைமுந் துறுத்தல் | 16 |

பின்னிணைப்பு : 1

# துறை அகரவரிசை

(எண் : வெண்பாத் தொடர் எண்களைக் குறிக்கும்)


அகத்துழிஞை 116
அடிப்பட இருத்தல் 125
அதரிடைச் செலவு 24
அரச உழிஞை 100
அரசமுல்லை 171
அரச வாகை 157
அருளொடு நீங்கல் 188
அவிப்பலி 184
அவையமுல்லை 178
அழிபடை தாங்கல் 93
அறிவன் வாகை 167
ஆகோள் 9
ஆஞ்சிக்காஞ்சி 82,83
ஆடல்வென்றி 359
ஆண்பாற்கிளவி 332
ஆரெயில் உழிஞை 105
ஆர் 242
ஆளெறிபிள்ளை 28
ஆள்வினை வேள்வி 215
ஆனந்தப்பையுள் 266
ஆனந்தம் 264, 265
இயல்மொழி வாழ்த்து 194,195
இரவுத்தலைச்சேறல் 311
இரவுநீடுபருவரல் 301
இருவரும் தபுநிலை 138
இல்லவைநகுதல் 312
இல்லாண்முல்லை 279
இற்கொண்டுபுகுதல் 253
உட்கோள் 288, 296
உண்டாட்டு 15
உரைகேட்டுநயத்தல் 321
உவகைக் கலுழ்ச்சி 151
உழபுலவஞ்சி 49
உழவன்வென்றி 346
உழிஞை 95
உழுதுவித்திடுதல் 120
உன்னநிலை 243
ஊடலுள் நெகிழ்தல் 320
ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி 239
ஊர்கொலை 8
ஊர்ச்செரு 88
எயில்தனை யழித்தல் 92
எயிற்பாசி 113
எயிற்போர் 91
எருமைமறம் 139
ஏணிநிலை 112
ஏமஎருமை 140
ஏழகநிலை 244, 245
ஏறாண்முல்லை 176
ஏறுகொள்வென்றி 347
ஐயம் 286
ஒருதனி நிலை 54
ஒள்வாள் அமலை 147
ஓம்படை 225
கடவுள் வாழ்த்து 191
கடவுள்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்தபக்கம் 236
கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் 237
கட்காஞ்சி 81
கணிவன்முல்லை 174
கண்டுகண் சிவத்தல் 316
கண்டுகைசோர்தல் 329
கண்படைநிலை 183, 196
கந்தழி 101, 228
கபிலை கண்ணிய புண்ணிய நிலை 202
கரந்தை 22
கரந்தையரவம் 23
கல்நடுதல் 251
கல்நீர்ப்படுத்தல் 249, 250

கல்முறைபழிச்சல் 252
கழல்நிலை 246
களவழிவாழ்த்து 207
களவேள்வி 160
களிற்றுடனிலை 146
கற்காண்டல் 247
கற்கோள்நிலை 248
கற்புமுல்லை 281,282.283,284
கனவின் அரற்றல் 302, 303
காஞ்சி 61
காஞ்சியதிர்வு 62
காடுவாழ்த்து 274
காட்சி 285
காண்டல் 294
காண்டல்வலித்தல் 299
காதலிற்களித்தல் 316
காந்தள் 103
கார்முல்லை 276
காவல்முல்லை 178, 179
கிணைநிலை 186, 206
கிளிவென்றி 353
குடிநிலை 35
குடுமிகளைந்த புகழ்சாற்று
நிலை 209
குடைச்செலவு 68
குடைநாட்கோள் 96
குடைநிலை 38
குடைமங்கலம் 222
குடைமுல்லை 182
குதிரைமறம் 90, 133
குதிரைவென்றி 355
குழவிக்கண் தோன்றிய
காமப்பகுதி 238
குறுங்கலி 342
குறுவஞ்சி 52, 53
குற்றிசை 341
குற்றுழிஞை 107, 108, 109
கூட்டத்துக் குழைதல் 319
கூதிர்ப்பாசறை 169
கூத்தராற்றுப்படை 217
கைக்கிளை 233
கையறுநிலை 31, 267, 268
கொடிநிலை 227
கொடுப்போர் ஏத்திக்
கொடாஅர்ப் பழித்தல் 343
கொடை 16
கொடைவஞ்சி 51
கொண்டகம்புகுதல் 318
கொற்றஉழிஞை 99
கொற்றவஞ்சி 42
கொற்றவள்ளை 43
கொற்றவைநிலை 20,40,41
கோழிவென்றி 348
சால்புமுல்லை 185
சிருங்காரநிலை 150
சிவல்வென்றி 352
சுரத்துய்த்தல் 11
சுரநடை 255
சூதுவென்றி 358
செருவிடை வீழ்தல் 89
செலவழுங்கல் 325
செலவு 5
செல்கெனவிடுத்தல் 324
செவியறிவுறுஉ 221
தகர்வென்றி 349
தந்துநிறை 13
தபுதாரநிலை 256
தலைக்காஞ்சி 71
தலைத்தோற்றம் 12
தலைப்பெயல்நிலை 258
தலைமாராயம் 72
தலையொடுமுடிதல் 73
தழிஞ்சி 55, 63
தன்னைவேட்டல் 152, 153
தாபதநிலை 257
தாபதவாகை 168
தார்நிலை 134, 135
தானைநிலை 148
தானைமறம் 129, 130, 131
திறைகொண்டு பெயர்தல் 124
துடிநிலை 19
துணிவு 287
தும்பை 127
தும்பை அரவம் 128
துயரவற்குரைத்தல் 328
துயிலெடைநிலை 197

| | | | |
|---|---|---|---|
| தூதிடையாடல் | 327 | பாண்வரவுரைத்தல் | 335 |
| தேர்மறம் | 136 | பாதீடு | 14 |
| தேர்முல்லை | 277 | பார்ப்பனமுல்லை | 172 |
| தேர்வென்றி | 356 | பார்ப்பனவாகை | 163 |
| தொகைநிலை | 126, 154 | பால்முல்லை | 281 |
| தொடாக்காஞ்சி | 79 | பிடிவென்றி | 361 |
| தொட்டகாஞ்சி | 78 | பிரிவிடை ஆற்றல் | 308 |
| தோல் உழிஞை | 106 | பிள்ளைத் தெளிவு | 29 |
| நயத்தல் | 295 | பிள்ளைப் பெயர்ச்சி | 33 |
| நயப்புற்றிரங்கல் | 291 | பிள்ளை யாட்டு | 30 |
| நலம்பாராட்டல் | 290 | பிள்ளை வழக்கு | 18 |
| நல்லிசைவஞ்சி | 59, 60 | பிறர்மனைத் துயின்றமை விறலிகூறல் | 340 |
| நாடுவாழ்த்து | 205 | பின்தேர்க்குரவை | 114, 162 |
| நாண்முல்லை | 278 | பின்னிலைமுயறல் | 307 |
| நாள்மங்கலம் | 212 | புகழ்ந்தனர் பரவல் | 231 |
| நூழில் | 141 | புணரா இரக்கம் | 292 |
| நூழிலாட்டு | 142 | புண்ணொடு வருதல் | 26 |
| நெஞ்சொடுமெலிதல் | 304, 305 | புலவரேத்தும் புத்தேள்நாடு | 272 |
| நெடுமொழிகூறல் | 32 | புலவர் ஆற்றுப்படை | 230 |
| நெடுமொழிவஞ்சி | 47 | புலவிபொருளாகத் தோன்றிய பாடாண்பாட்டு | 235 |
| நொச்சி | 86 | புலவியுட்புலம்பல் | 313 |
| பகட்டுமுல்லை | 280 | புலனறி சிறப்பு | 17 |
| பகல்முனிவுரைத்தல் | 300 | புறத்திறை | 7, 104 |
| படைவழக்கு | 64, 65 | புறத்துழிஞை | 110 |
| பயந்தோர்ப் பழிச்சல் | 289 | புறநிலைவாழ்த்து | 226 |
| பரத்தைகூறல் | 336 | பூக்கொள்நிலை | 70 |
| பரத்தையை ஏசல் | 315 | பூசல்மயக்கு | 259, 260 |
| பரத்தைவாயில் பாங்கி கண்டுரைத்தல் | 339 | பூசன்மாற்று | 10 |
| பரிசில்துறை | 193 | பூவைநிலை | 192 |
| பரிசில்நிலை | 213 | பூவைவென்றி | 354 |
| பரிசில்விடை | 214 | பூழ்வென்றி | 351 |
| பருவமயங்கல் | 330, 331 | பெண்பாற்கிளவி | 333 |
| பழிச்சினர் பணிதல் | 232 | பெருங்காஞ்சி | 66, 270 |
| பள்ளிமிசைத் தொடர்தல் | 323 | பெருஞ்சோற்றுநிலை | 58 |
| பாசறைநிலை | 56 | பெருந்திணை | 234 |
| பாசிநிலை | 111 | பெருவஞ்சி | 57 |
| பாடகச்சீறடி பணிந்தபின் இரங்கல் | 322 | பேய்க்காஞ்சி | 77 |
| பாடல்வென்றி | 360 | பேய்க்குரவை | 145 |
| பாடாண்பாட்டு | 189 | பேய்நிலை | 76 |
| பாணராற்றுப்படை | 216 | பேராண்முல்லை | 180 |
| பாண்பாட்டு | 137 | | |

பேராண்வஞ்சி 44, 45
பொழுதுகண்டிரங்கல் 314
பொருநவாகை 166
பொருநர்ஆற்றுப்படை 218
பொருளொடுபுகறல் 187
பொருள்மொழிக்காஞ்சி 271
பொலிவுமங்கலம் 211
போந்தை 240
போர்க்களத்தொழிதல் 27
போர்மலைதல் 25
மகட்பால்இகல் 123
மகட்பாற்காஞ்சி 84
மகள் மறுத்துமொழிதல் 94
மங்கலநிலை 198, 199
மடலூர்தல் 326
மணமங்கலம் 210
மண்ணுமங்கலம் 122, 224
மல்வென்றி 345
மழபுலவஞ்சி 50
மறக்களவழி 159
மறக்காஞ்சி 74, 75
மறமுல்லை 181
மறனுடைப்பாசி 87
மன்னைக்காஞ்சி 80
மாராயவஞ்சி 46
மாலைநிலை 261
முதுஉழிஞை 114, 115
முதுகாஞ்சி 273
முதுபாலை 254
முதுமொழிக்காஞ்சி 269
முதுமொழிவஞ்சி 48
முரசஉழிஞை 98
முரசவாகை 158
முல்லை 275
முற்றுமுதிர்வு 117
முற்றுழைஞை 102
முனைகடி முன்னிருப்பு 85
முன்தேர்க்குரவை 143, 161
மூதானந்தம் 262, 263
மூதின்முல்லை 175
மெலிதல் 297
மெலிவொடுவைகல் 298
யாழ்வென்றி 357
யானை கைக்கோள் 118
யானை மறம் 132
யானை வென்றி 350
வஞ்சி 36
வஞ்சியரவம் 37
வஞ்சிக்காஞ்சி 69
வரவெதிர்ந்திருத்தல் 309
வல்லாண்முல்லை 177
வள்ளி 229
வாகை 155
வாகைஅரவம் 156
வாடைப்பாசறை 170
வாணிகவாகை 164
வாணிகவென்றி 344
வாயில்நிலை 190
வாயுறைவாழ்த்து 220
வாராமைக்கு அழிதல் 310
வாள்செலவு 67
வாள்நாட்கோள் 97
வாள்நிலை 39
வாள்மங்கலம் 223
வாள்மண்ணுநிலை 121
விரிச்சி 4
விளக்குநிலை 200, 201
விறலிகேட்பத் தோழி கூறல் 337
விறலி தோழிக்கு விளம்பல் 338
விறலியாற்றுப் படை 219
வீற்றினிதிருந்த பெருமங்கலம் 208
வெட்சி -
" மன்னுறு தொழில் 1
" தன்னுறு தொழில் 2
வெட்சியரவம் 3
வெருவருநிலை 149
வெளிப்பட இரத்தல் 293
வெள்ளிநிலை 204
வெறியாட்டு 21, 334
வேட்கை முந்துறுத்தல் 306
வேத்தியன் மலிபு 34
வேம்பு 24
வேய் 6
வேளாண்வாகை 165
வேள்விநிலை 203
வேற்றுப்படை வரவு 119

பின்னிணைப்பு : 2

# கொளு முதற்குறிப்பு அகராதி

## (எண் : வெண்பாத் தொடர் எண்களைக் குறிக்கும்)


| | |
|---|---|
| அகத்தோன்காலை அதிர்முர | 117 |
| அஞ்சொல் வஞ்சி | 304 |
| அடங்காதார் மில்சாயக் | 111 |
| அடலவிர் பைம்பூண் | 201 |
| அடலஞ்சா நெடுந்தகைபுண் | 79 |
| அடல்வேல் ஆடவர்க் | 175 |
| அடுதிறல் அரணத் தரசு | 124 |
| அடுதிறல் அணங்கார விடு | 160 |
| அடுதிறல் மன்னரை | 197 |
| அடுமுரண் அகற்றும் | 246 |
| அடையாதார் அரண்கொள் | 99 |
| அணிவய லூரனோ | 315 |
| அண்ணல் நான்மறை அந்த | 202 |
| அத்தழை அல்குல் | 293 |
| அயிற்படையின் அரண்காக் | 91 |
| அரிபாய் உண்கண் | 281 |
| அருஞ்சுரத்தும் அகன்கானத் | 10 |
| அருந்திறை யளப்ப ஆறிய | 45 |
| அருந்திறற்கட்டூர் | 276 |
| அருமுனையான் அறைகூவின | 67 |
| அருமிளையொடு கிடங்ககழி | 88 |
| அவன் பெயர் கல்மிசை | 257 |
| அழிகுநர் புறக்கொடை | 55 |
| அழிபடர் எவ்வம் | 290 |
| அழிவின்று புகழ்நிறீஇ | 154 |
| அளப்பருங் கடல்தானை | 200 |
| அறந்தரு செங்கோல் அருள் | 212 |
| ஆங்கவர் கூறிய | 331 |
| ஆங்கவன் மூப்பவர்க் | 338 |
| ஆடமைத் தோளி | 264 |
| ஆடியல் அவிர்சடையான் | 102 |
| ஆழ்ந்துபடு கிடங்கோ | 89 |
| ஆற்றார் ஒழியக் கூற்றெனச் | 24 |
| ஆனா வென்றி | 247 |
| இகலடுதோள் எறிவேல் | 210 |
| இணரார் கோதையென் | 288 |
| இமையா நாட்டத் | 236 |
| இருங்கண் வானத் | 230 |
| இருபடையும் மறம்பழிச்ச | 148 |
| இலைபுனை வாகைசூடி | 155 |
| இலைப்பொலிதார் இகல் | 74 |
| இல்லவை சொல்லி | 312 |
| இல்லும் பதியும் இயல்புங் | 177 |
| இவட்பயந் தெடுத்தோர் | 289 |
| இழிபுடன்றிகல் பெருக | 93 |
| இளமைந்தர் நலம்வேட்ட | 238 |
| இறுத்தபின் அழிபிரங்கல் | 60 |
| இறைவளை நெகிழ | 308 |
| இன்கதிர் முறுவற் | 258 |
| இன்னது செய்தல் | 225 |
| இன்னதொன் றெய்துதும் | 231 |
| இன்னோர் இன்னவை | 194 |
| ஈண்டிய நிரை ஒழிவின்றி | 16 |
| உடல்சினத்தார் கடியரணம் | 113 |
| உணரா எவ்வம் | 292 |
| உம்மில் அரிவை உரை | 839 |
| உரவெய்யோன் இனந் | 12 |
| உருத்தெழு மன்னர் | 277 |
| உருவ வால்வளை | 330 |
| உளம்புகல மறவேந்தன் | 180 |
| உறுவரை மார்பன் | 316 |
| ஊழிமாலை உறுதுயர் | 327 |
| எண்ணருஞ் சீர்த்தி | 224 |
| எண்ணார் பல்லெயில் | 120 |
| எம்மதிலின் இகல்வேந்த | 126 |
| எரிந்திலங்கு சடைமுடி | 271 |
| எழுமரவக் கடற்றானையான் | 132 |
| எழுவுறழ் திணிதோள் | 148 |
| எறிபடையான் இகலமருள் | 133 |
| ஏத்திச்சென்ற இரவலன் | 217 |
| ஏந்திழையாள் தருகென்னும் | 84 |
| ஏந்துபுகழ் உலகின் | 245 |
| ஏப்புழை ஞாயில் | 86 |
| ஏமாண்ட நெடும்புரிசை | 90 |
| ஏழகம் ஊரினும் | 244 |
| ஒண்தொடி மடந்தை | 302 |
| ஒருகுடை மன்னனைப் | 135 |
| ஒலிகடல் வையகத்து | 188 |

| | | | |
|---|---|---|---|
| ஒலிகழலான் அகனகருட் | 158 | கூற்றிருந்த கொலை | 208 |
| ஒளியினீங்கா விறற்படை | 20 | கேளல்லார் முனைகெடுத்த | 44 |
| ஒளியும் ஆற்றலும் ஓம்பா | 189 | கேள்வியாற் சிறப்பெய்தி | 163 |
| ஒளிற்றெஃகம் படவீழ்ந்த | 146 | கூற்றிருந்த கொலை | 208 |
| ஒன்றல்ல பலபாடி | 326 | கேளல்லார் முனைகெடுத்த | 44 |
| ஒன்றார் கூறும் | 297 | கேள்வியாற் சிறப்பெய்தி | 163 |
| ஒன்னாதார் படைகெழுமி | 47 | கையொளிர் வேலவன் | 306 |
| ஒன்னாதார் முனைகெட | 59 | கொடியான் கூர்ங்கணை | 263 |
| ஓங்கியகல் உய்த்தொழுக் | 250 | கொடுத்த பின்னர் | 65 |
| கங்குற் கனைதுயிர் எழுந் | 193 | கொய்தழை அல்குல் | 291 |
| கட்டூரது வகைகூறினும் | 53 | கோடுயர் வெற்பன் | 322 |
| கணம்பிறங்கக் கைக்கொண் | 10 | சுரும்பிவர் பூம்பொழிற் | 285 |
| கண் மகிழ்ந்து துடிவிம்ம | 29 | சூழுநேமியான் சோவெ | 228 |
| கதிர்வேற் கணவனொடு | 261 | செங்களத்து செழுஞ் | 207 |
| கயக்கருங் கடற்றானை | 223 | செங்களத்து மறங்கருதிப் | 127 |
| கயவேர் கண்ணி | 262 | செய்கழல் மன்னன் | 267 |
| கருங்கடலுள் மாத்தடிந் | 103 | செருநர் நாணச் | 278 |
| கருங்கழன் மறவரொடு | 144 | செருமதிலோர் சிறப் | 115 |
| கருதாதார் மதிற்குமரிமேல் | 107 | செருமுனை உடற்றுஞ் | 171 |
| கலந்தடையார் மதில்கருதி | 97 | செருவேலோன் திறன் | 76 |
| கலவா மன்னர் | 240 | செறுதொழிலிற் சேணீங்கி | 164 |
| கலவார் முனைமேற் | 3 | செற்றடையார் மதில்கருதி | 96 |
| கவர்கணைச் சுற்றங் கவர்ந்த | 14 | செற்றார்மேற் செலவமர்ந்து | 39 |
| கழல்வேந்தர் படைவிலங்கி | 141 | சேணோங்கிய வரையதரில் | 216 |
| கழிந்தோன் தன்புகழ் | 268 | தக்காங்குப் பிறர் கூறினும் | 179 |
| கழுமிய காதற் | 279 | தடவரை மார்பன் | 275 |
| களங்கெழுமிய படையிரிய | 142 | தண்டாக் காதல் | 233 |
| கறவை காவலன் நிறனொடு | 192 | தண்பனை வயலுழவனைத் | 186 |
| கன்னவில் திணிதோட் | 295 | தம்மிறைவன் விசும்படைந் | 152 |
| கன்னவில் தோளான் | 286 | தலைகொடு வந்தான் | 72 |
| காண்டல் வேட்கையொடு | 311 | தலைவரும் பொருளைத் | 273 |
| காதல் பெருகக் | 318 | தவப்பெரிய வெஞ்சமங் | 265 |
| காதற் கணவனொடு | 82 | தவழ்திரை முழங்குந் தண் | 178 |
| காமுறு காமம் | 332 | தாங்கு திறல் மறவர் தத்தம் | 66 |
| காம்புயர் கடத்திடைக் | 254 | தாட்டாழ் தடக்கையான் | 205 |
| காய்கதிர் நெடுவேற் | 153 | தாபத முனிவர் தவத்தொடு | 168 |
| காரெதிரிய கடற்றானை | 70 | தாம்படைத் தலைக்கொள் | 129 |
| காவல் கண்ணிய கழலோன் | 191 | திருக்கிளரும் அகன் | 206 |
| கான்மலியும் நறுந்தெரியற் | 172 | திருந்தார் தெம்முனை | 58 |
| குடைமயங்கிய வாளமருட் | 140 | திருவளர் நல்நகர் | 284 |
| குருந்தலர் கண்ணிக் | 257 | திறல்வேந்தன் புகழ் | 219 |
| கூடலர்குடர் மாலைசூட்டி | 30 | துணிபுணரும் தோல் | 174 |
| கூடார்முனை கொள்ளை | 50 | துணிவுடைய தொடுகழ | 92 |
| கூற்றனையான் வியன்கட்டூர் | 169 | துயரொடு வைகிய | 321 |

துயர்தீரப் புயல்தருமென 204
துன்னரும் சிறப்பின் 243
தேங்கமழ் கோதை 334
தேங்கமழ் சிலம்பன் 336
தேம்பாய் தெரியல் 294
தொடுகழல் மறவர்துன்னி 112
தொடுகழன் மறவர் 19
தொட்டிமிழுங் கழன்மறவர் 15
தொழில் காவன் 100
தொன்மரபின் வாட்குடியின் 48
தோள்வலிய வயவேந்தனை 34
நல்வளை மடந்தை 313
நவைநீங்க நடுவுகூறும் 173
நல்லிருள் மாலை 320
நறமலியும் நறுந்தாரோன் 81
நாறிருங் கூந்தன் 342
நாற்றிசையும் புகழ்பெறுக 222
நிரைகோள் கேட்டுச் செய் 23
நிலவுவேல் நெடுந்தகை 325
நிழலவிர் எழில்மணிப் 252
நிற்றல் ஆற்றாள் 314
நீங்காக் காதல் 239
நீடவுங் குறுகவும் நிவப்பவும் 51
நீடோளான் வென்றிகொள் 40
நுழைபுலம் படர்ந்த 272
நெடுந்தேர்த்தானை நீறுபட 196
நெடுவேய்த் தோளி 310
நெடுமதில் எறிந்து நிரை 209
நேராதார் வளநாட்டைக் 49
நோக்கரும் குறும்பினூழை 7
பகலன்ன வாய்மொழி 157
பகைபுகழக் கிடந்தானை 150
படைக்கோடா விறன்மற 27
பரந்தெழுதரு படைத்தானை 63
பலர்புகழ் புலவர் 266
பல்லவர்க் கிரங்கும் 274
பல்லிதழ் மழைக்கண் 259
பற்றார் தம்முனைப் 6
பாடருந் தோற்படை 109
பாயிருட் கணவனைப் 324
பிணம் பிறங்கிய களத்து 77
பிற்பயக்கும் எம்சொல் 220
புகழொடு பெருமை 166
புகழ்நுவல முக்காலமும் 167
புண்ணிய நீரிற் புரையோர் 121
புரவலன் நெடுங்கடை 190
புரவலன் மகிழ் தூங்க 213
புரிவளை நெகிழப் 300
புலம்பொடு வைகும் 301
புனையிழை இழந்தபின் 256
பூண்முலையார் மனமுருக 229
பூம்பொழிற் புறங்காவலனை 130
பெய்கழலான் தேரின்பின் 162
பெய்கழற் பெருந்தகை 284
பெய்தாமஞ் சுரும்பிமிர 38
பெய்தார் அகலம் 319
பெய்வளை அவனொடு 303
பெருநல்லான் உழையீரா 218
பேணாதார் மறங்கால ஆணை 125
பேணிய பிறர்முயக் 337
பொய்யாது புள்மொழிந் 18
பொருபடை களத்தவிய 138
பொருபடையுட் கற்சிறை 54
பொற்றார் அகலம் 341
பொன்திகழ் சுணங்கிற் 282
பொன்புனை உழிஞை சூடி 98
பொன்புனைந்த கழலடி 128
போதார் கூந்தற் 329
போர்தாங்கிப் புள்விலங்கி 33
மடுத்தெழுந்த மறவேந் 52
மணிவளை நெகிழ 298
மண்கெழு மறவன் மாறு 75
மண்கொண்ட மறவேந்தன் 183
மண்டமருள் மாறாமைந்திற் 73
மண்ணகங் காவல் மன்னன் 193
மண்ணொடு புகழ்நிறீஇ 26
மண்திணி ஞாலத்துத் 35
மண்மருளத் துடிகறங்க 248
மதிக்குடைக்கீழ் வழி 56
மயலறு சீர்த்தி மான்தேர் 195
மயிற்சாயல் மகள் 123
மலைத்தெழுந்தோர் மறஞ் 22
மலையோங்கிய மாநிலத் 270
மறத்துறை மலிந்துமண்டி 104
மறந்திரி வில்லா 221
மறப்படை மறவேந்தர் 87
மறவேந்தினிற் சிறப் 46
மற்றவர் சேரியின் 340

மன்மேம்பட்ட மதிக்குடை 32
மன்னர் யாரையு மறங்காற்றி 85
மன்னவன் புகழ்கிளந் 43
மன்னன் ஊரும் மறமிகு 145
மன்னிய சிறப்பின் மங்கல 199
மன்னுயிர் நீத்த வேலின் 83
மாணிழைக்கு வயலூரன் 335
மாநிலத் தியலு 287
மாயிருங் கங்குல் 323
மாவுடைத்தார் மணிவண் 101
மாறின்றி மறங்கனலும் 176
மாறுகொண்டார் மதிலழிய 118
மான்றமாலை மயிலியல் 328
முகைபுரை முறுவல் 309
முக்கணான் முயக்கம் 237
முடிமிசை உழிஞை சூடி 95
முதுகுடி மறவர் முன்னுறச் 68
முத்தவிர் பூண் மறவேந்தன் 64
முரணவியச் சினஞ்சிறந் 116
முழவுறழ் திணி 159
முறிமலர்த்தார் வயவேந் 136
முன்னடையார் வள 57
முன்னிழந்த நலனசை 307
முன்னெழுதரு படைதாங் 134
மூதரில் நிவந்த 255
மூவர்கொடி உள்ளும் 227
மேல்மூவரும் மனம்புகல 165
மேல்வரும் படைவரல் மிகவு 62
மேவரும் கணவன் 283
மைந்துடை யாடவர் செய் 41
மைவரை நாடனை 299
மைவரை நாடன் 317
மொய்திகழ் வேலோன் 119
மொய்தாங்கிய முழுவலித் 182
வணங்காதார் மதிற்குமரி 122
வண்டமர் குஞ்சி 296
வண்டுசூழ் தாமம் 249
வயங்கிய புகழ் 232
வயல்மிகு சிறப்பின் 280
வரிவளை நெகிழ்த்தோன் 305
வருவாரை எதிர்விலக்கி 28
வலிகெழுதோள் வாள் 147
வழிபடுதெய்வம் 226
வளைஞரல வயிரார்ப்ப 108
வள்வார் முரசமொடு வய 37
வாஅள்மறவர் வணங்காதார் 105
வாடாவஞ்சி தலைமலைந்து 36
வார்வலந்த துடிவிம்ம 13
வாலிழையோர் வினைமுடிய 21
வாள்வாய்த்த வடுவாழ் 151
வான்றோயும் மலையன்ன 185
விண்தோயு மிளைகடந்து 110
வியலிட மருள விண்படர்ந் 80
வியன்மனை விடலை புண் 78
விரும்பார் அமரிடை 241
விரைபரிகடவி வில்லுடை 8
விலங்கமருள் வியலகலம் 149
வில்லேர் உழவர் வேற்றுப் 5
வில்லேர் நுதலி 235
விழுமங்கூர 266
விறற்படை மறவர் 242
வினைமுற்றிய கனைகழ 215
வெஞ்சின வேந்தன் வேற் 69
வெட்சியாரைக் கண்ணுற்று 25
வெண்கண்ணியும் கருங் 156
வெண்கோட்ட களிறெ 137
வெந்திறலான் வியன் 170
வெம்முரணான் மகள் 94
வெம்முனைநிலை யுணர்த்தி 17
வெயர் பொடிப்பச் சினங் 139
வெருவரும் வாளமர் விளிந் 31
வெள்வளை நெகிழவும் 333
வெள்வாள் அமருட் 184
வெள்வாள் வேந்தன் 181
வென்றார்த்து விறன்மறவர் 9
வென்றியொடு புகழ்விளை 106
வென்றிவேந்தன் பணி 1
வென்றேந்திய விறற்படை 161
வேஞ்சின மாற்றான் விடுதர 61
வேண்டிய பொருளின் 4
வேத்தமருள் விளிந்தோன் 253
வேந்தன்உள் மகிழ வெல் 260
வேந்தன் மாய்ந்தென 214
வேய்பிணங்கிய மிளையற 114
வேல்வேந்தன் உளமகிழப் 211
வேற்றானை மறங்கூறி 131
வையகத்து விழைவறுத்து 187
வையகம் வணங்க வாளோ 42

பின்னிணைப்பு : 3

# வரலாற்று வெண்பா முதற்குறிப்பு அகராதி

(எண் : வெண்பாத் தொடர் எண்களைக் குறிக்கும்)


அகத்தன ஆர்கழல் 92
அங்கட் கிணையன் துடியன் 16
அங்கையுள் நெல்லி அதன் 34
அஞ்சுவரு தானை அமர் 159
அஞ்சொற் பெரும்பணைத் 335
அடக்கருந் தானை 132
அடும்புகழ் பாடி 252
அணக்கருந் தானையான் 210
அணங்குடை நோலை பொரி 40
அணிவரு பூஞ்சிலம் 322
அந்தணர் சான்றோர் 221
அந்தரந் தோயும் அமை 108
அந்தழை அல்குலும் 123
அம்மென் கிளவி 290
அயர்வொடு நின்றேன் 302
அயிலன்ன கண்புதைத் 49
அரிகொண்ட கண்சிவப்ப 237
அருகோடி நீங்கா 349
அரும்பிற்கும் உண்டோ 337
அருவரை பாய்ந்திறுது 61
அலர்முலை அஞ்சொல் 259
அவிழ்மலர்க் கோதை 53
அழலடைந்த மன்றத் தலந்த 42
அழலவிர் பைங்கண் 208
அழுங்கனீர் வையகத் 22
அளந்த திறையார் 197
அளிய கழல்வேந்தர் 84
அறாஅ நிலைச்சாடி ஆடுது 2
அறிந்தவர் ஆய்ந்தநாள் 39
அறியார் வயவர் அகத் 115
அனைய அமருள் 156
அன்றெறிந்தானும் இவனா 101
ஆடரவம் பூண்டான் 86
ஆடல் அமர்ந்தான் 141
ஆடல் அமர்ந்தான் அமர் 232
ஆமினி மூப்பும் அகன்ற 187
ஆம்பல் நுடங்கும் 329
ஆய பெருமை 271
ஆயாதறிவயர்ந் 270
ஆயும் அடுதிறலாற் 76
ஆழ விடுமோ 321
ஆளமர் வெள்ளம் பெருகின் 32
ஆளி மணிக்கொடிப் 20
ஆற்றின் உணரின் 269
ஆனா வயவர் முன் ஆட 143
இகலே துணையா எரிதவழ 8
இடம்படு ஞாலத் 258
இணரார் நறுங்கோதை 292
இம் மூவுலகின் இருள் 167
இயவர் புகழ் எறிமுர 58
இலநாம் உரைப்பதன் 353
இளமை நிலைதளர 273
இளிகொண்ட தீஞ்சொல் 15
இறுமுறை எண்ணா திரவும் 17
இறுவரை வீழ இயக்கற்ற 146
இறையே இறந்தன 314
இன்றிப் படரோ 326
இன்று பகலோன் இறவா 69
இன்றொடை நல்லிசை 216
இன்ன ரெனவேண்டா 47
இன்னா சொகினம் 265
ஈண்டரில் சூழ்ந்த இனையும் 89
ஈண்டி யெருவை 207
உணங்கு புலவறா ஒன்னார் 67
உய்த்தல் பொறுத்தல் 280
உய்ந்தொழிவார் ஈங்கில் 7
உரவெரி வேய்ந்த 255
உரவொலி முந்நீர் 293
உரைப்பின் அது வியப்போ 27
உலவா வளஞ் செய்தான் 161


| | | | |
|---|---|---|---|
| உவனின் றுறுதுயரம் | 119 | கடிகமழ் வேரிக் கடை | 85 |
| உவன்தலை என்னும் | 72 | கடுங்கண் மறவன் கனல் | 139 |
| உழிஞை முடிபுனைந் | 95 | கடைநின்று காமம் | 294 |
| உழுது பயன் கொண் | 164 | கணைனார்ந் துவப்பக் | 250 |
| உளைத்தவர் கூறும் | 338 | கண்டான் மலைந்தான் | 345 |
| உள்ளத் தவலம் | 328 | கண்டு களித்துக் | 318 |
| உள்ளம் உருக | 296 | கதிரோடை வெல்களிறு | 98 |
| உறுசுடர் வாளோ | 134 | கயக்கிய நோயவாய் கை | 155 |
| உறையார் விசும்பின் | 185 | கயற்கூடு வாள்முகத் | 332 |
| ஊக்க முரண் மிகுதி | 100 | கரிய பெருந்தடங்கண் | 341 |
| ஊடிய ஊடல் | 239 | கருங்கழல் வெண்குடை | 211 |
| ஊதை உளர | 275 | கருந்தடங்கண் | 285 |
| ஊழிதோ றூழி | 284 | கருந்தலையும் வெண்ணிண | 74 |
| ஊறின் றுவைகயுள் வைக | 179 | கரும்பகடும் செம்பொன் | 212 |
| எங்கணவன் எங்கணவன் | 150 | கரும்பொடு காய்நெற் | 56 |
| எங்கண் மலர எயிற்குமரி | 122 | கலந்தவனைக் கூற்றம் | 257 |
| எஞ்சொல் எதிர்கொண் | 220 | கல்லருவி ஆடிக் | 289 |
| எண்ணின் இகல் புரிந்தோர் | 260 | கல்லெனீர் வேலிக் | 83 |
| எண்ணின் இடரெட்டும் | 205 | கவ்வை பெருகக் | 288 |
| எம்மனை யாம்மகிழ | 244 | கழகத் தியலுங் | 358 |
| எழுதெழில் மாடத்திட | 120 | கழுதார் பறந்தலைக் | 129 |
| எழுதெழுதில் மார்ப | 306 | களமர் கதிர்மணி | 50 |
| எழுவணி சீறூர் இருள் மாலை | 4 | கற்பின் விழுமிய தில்லை | 153 |
| ஏந்துவாள் தானை இரிய | 180 | கற்பொறியும் பாம்பும் | 112 |
| ஏவல் இகழ் மறவர் | 118 | கன்னவில் தோளானைக் | 295 |
| ஐந்து கதியும் | 355 | கன்னின்றான் எந்தை | 176 |
| ஐயங் களைந்திட்டடல்வெங் | 64 | காடு கனலக் | 249 |
| ஐயவி சிந்தி நறைபுகைத் | 79 | காடுங் கடுந்திரை | 344 |
| ஒட்டியார் எல்லாம் | 352 | காணில் அரனுங் களிக்குங் | 21 |
| ஒலிமணித் திண்டே - | 356 | கான்படு தீயிற் கலவார் தன் | 55 |
| ஒள்வாள் மலைந்தார்க்கும் | 14 | காதல் பெருகிக் | 317 |
| ஒள்வாள் மறவர் | 195 | காம நெடுங்கடல் | 309 |
| ஒன்றில் இரண்டாய்ந்து | 225 | காய்ந்து கடுங்களிறு | 138 |
| ஒன்னா முனையோர்க்கு | 81 | கார்கருதி நின்றதிரும் | 127 |
| ஒல்லெனீ ஞாலத் | 172 | காலார் கழலார் | 23 |
| ஒள்வாள் அமருள் | 94 | காலான் மயங்கிக் கதிர் | 135 |
| ஒன்றியவர்நா டொருவழி | 125 | காலை முரசம் | 117 |
| ஓருயிராக உணர்க | 262 | காவல் அமைந்தான் | 157 |
| ஓங்கிய வேலான் | 313 | கிளையாய்ந்து பண்ணிய | 144 |
| ஓடுக கோல்வளையும் | 308 | குடையலர் காந்தள் தன் | 240 |
| ஓதங் கரைத்வழ்நீர்வேலி | 163 | குடைவரை ஏந்திநங் | 347 |
| கஞ்சுகம் வாய்த்த | 350 | குந்தங் கொடுவில் குருதி | 133 |

| | | | |
|---|---|---|---|
| குருகு பெயரிய குன்றெறிந் | 103 | தண்டா விருப்பினள் | 13 |
| குரும்பை வரிமுலைமேற் | 297 | தண்தார் அணியவாம் | 340 |
| குரையழல் மண்டிய | 60 | தமருள் தலையாதல் தார் | 41 |
| குலாவுஞ் சிலையார் | 63 | தளரியல் தாய்புதல்வர் | 137 |
| குவளை நெடுந்தடங்கண் | 361 | தன்கண் அளியவாய் | 300 |
| குளிறு முரசங் குணில்பாயக் | 48 | தன்னிழலோர் எல்லோர்க் | 222 |
| குளிறு முரசினான் | 107 | தாங்கன்மின் தாங்கன் மின் | 90 |
| கூடி முரசிரங்கக் | 45 | தாங்கிய கேளொடு தானும் | ' 82 |
| கூடிய கொண்கன் | 316 | தாட்டாழ் தடக்கைத் | 52 |
| கூற்றினத் தன்னார் | 5 | தாமரைமேல் வைகிய | 286 |
| கேள்வி மறையோர் | 203 | தாயன்னான் தார் விலங்கி | 267 |
| கைகால் புருவங்கண் | 359 | தாழார மார்பினான் | 43 |
| கொங்கலர் கோதைக் | 224 | திங்கள் விளங்கும் | 281 |
| கொங்கலர்தார் மன்னருங் | 183 | திருநுதல் வேரரும்பும் | 287 |
| கொங்கவிழ் ஐம்பால் | 223 | தீண்டியும் கண்டும் | 199 |
| கொடிபடு முத்தலைவேற் | 226 | தீர்த்தநீர் பூவொடு பெய்து | 121 |
| கொடுவரி கூடிக் குழுஉக் | 9 | தீர்ந்து வணங்கித் | 277 |
| கொட்கு நிமிருங் குறுகுங் | 77 | துன்னருந் தானைத் | 243 |
| கொய்தார் மார்பிற் | 278 | துன்னருந் துப்பின் | 65 |
| கொலையானாக் கூற்றங் | 73 | தெம்முனை தேயத் திறல் | 68 |
| கொலைவிற் புருவத்து | 217 | தெரிவின்றி ஊடத் | 320 |
| கொல்களி றூர்வர் | 242 | தெருவில் அலமரும் தென் | 218 |
| கொன்றுருத்த கூர்வே | 78 | தொடியணி தோள் | 241 |
| கோடும் வயிரும் இசைப்ப | 124 | தொடைவிடை ஊழாத் | 173 |
| கோடுயர் வெற்பின் | 114 | தோடவிழ்தார் யானும் | 303 |
| கோள்வாள் முதலைய | 110 | நகையம ராய நடுங்க | 75 |
| சங்கும் கருங்கோடும் | 24 | நடுங்கி நறு நுதலாள் | 325 |
| சில்வளைக்கைச் | 219 | நல்கெனின் நாமிசையாள் | 236 |
| சிறந்த திதுவென்ன | 184 | நல்வளை ஏக | 305 |
| சீர்மிகு நல்லிசை | 342 | நாட்டிய வாய்மொழி | 190 |
| சுடும ணெடுமதில் சுற்றிப் | 113 | நாப்புலவர் சொன்மாலை | 31 |
| சுற்றிய சுற்றமுடன் மயங்கி | 51 | நாவல் பெயரிய ஞாலத் | 126 |
| சூடிய வான்பிறையோய் | 231 | நாவாயுந் தோணியு மேல் | 111 |
| சூடினான் வாகை | 155 | நிரைபொறி வாயில் | 109 |
| சூழ்கதிர் வான்விளக்கும் | 204 | நிலையும் நிரையும் நிரைப் | 6 |
| சூழ்ந்த நிரைபெயரச் சுற்றி | 10 | நின்ற புகழொடு நீடுவாழ் | 215 |
| செங்கண் மழவிடையின் | 36 | நின்ற புகழொழிய நில்லா | 106 |
| செங்கண் மறவர் சினஞ் | 116 | நின்று நிலமிசையோர் | 286 |
| செயிர்க்கண் நிகழாது | 171 | நீர்பலகால் மூழ்கி நிலத் | 168 |
| செருமலி வெங்களத்து | 136 | நீர்மலி கண்ணோடு | 254 |
| சொல்லுஞ் சுவட்டவர் | 351 | நுடங்கருவி ஆர்த்திழியும் | 310 |
| சோலை மயிலன்னாள் | 261 | நெடிபடு கானத்து நீள்வேன் | 3 |

| | | | |
|---|---|---|---|
| நெய்கொள் நிணந்தூ | 282 | மங்குல் மனங்கவர | 233 |
| நெய்யணிக செவ்வேல் | 96 | மடங்கலிற் சீறி மலை | 59 |
| நேராரம் பூண்ட நெடுந்தகை | 46 | மண்டமர் திண்தோள் | 154 |
| நேரார் படையின் நிலைமை | 148 | மண்டு மெரியுண மரந்தடிந் | 1 |
| பகடுவாழ்கென்று | 186 | மண்பதம் நோக்கி | 346 |
| படை நவின்ற பல்களிலும் | 214 | மதியோர் நெடுங்குடை | 158 |
| பணையாய் அறை முழங்கும் | 311 | மயங்காத தார்ப் பெருமை | 102 |
| பண்ணவாந் தீஞ்சொல் | 342 | மயங்கி மகிழ்பெருக | 319 |
| பரிசை பலகடந்துபற்றார் | 93 | மயிற்கணத் தன்னார் | 105 |
| பருக்காழும் செம்பொன் | 202 | மருப்புத் தோளாக மதர் | 140 |
| பருதிசெல் வானம் | 70 | மலைபடு சாந்தம் | 235 |
| பலவுரைத்துக் கூத்தாடிப் | 336 | மல்லாடு தோளான் | 305 |
| பலிபெறு நன்னகரும் பள்ளி | 44 | மற்கொண்ட திண்தோள் | 307 |
| பாயினார் மாயும் வகையாற் | 87 | மண்மேல் வருமென | 62 |
| பாய்ந்து மெறிந்தும் | 348 | மன்னர் மடங்கல் மறை | 189 |
| பாலை படுமலை | 357 | மாட்டிய பிள்ளை மறவர் | 30 |
| பிடித்தாடி அன்ன | 160 | மாணலங் கொள்ளும் | 339 |
| பிணங்கமருட் பிள்ளை | 33 | மாயவன் மாயம் | 228 |
| பிள்ளை கடுப்பப் பிணம் | 28 | மாலை துயல | 251 |
| பிறைபுரை வாணுதல் | 298 | மிகத்தாய செங்குருதி | 91 |
| பீடுலா மன்னர் நடுங்கப் | 57 | மிகையணங்கு மெய்ந் நிறீஇ | 247 |
| புகழொழிய வையகத்துப் | 266 | மின்னார் சினஞ்சொரி வேல் | 131 |
| புரிவின்றி யாக்கை | 174 | முந்தத்தான் மாவொடு | 263 |
| புரிவொடு நாவினாற் | 354 | முந்தை முதல்வர் துடியர் | 19 |
| புலிக்கணமும் சீயமும் | 25 | முல்லைக்குத் தேரும் | 194 |
| புல்லார் புகலொடு | 104 | முற்றா முலையார் | 312 |
| புனையும் பொலம் படைப் | 276 | முன்புறம் தான்காணும் | 274 |
| புன்மேய்ந் தசைஇப் | 11 | முன்னரும் பின்னரும் | 145 |
| பூங்கண் நெடுமுடிப் | 227 | முன்னர் முரசிரங்க மூரிக் | 38 |
| பூந்தா மரையிற் | 209 | மூவரும் நெஞ்சமர முற்றி | 174 |
| பூவை விரியும் புதுமலரிற் | 192 | மேலார் இறையமருள் | 196 |
| பூவொடு நீர் தூவிப் | 248 | மேவார் உயிருணங்க | 29 |
| பெண்மேல் நலிவு | 301 | மொய்யகத்து மன்னர் | 142 |
| பெருமட நோக்கிற் | 291 | மொய்யணல் ஆனிரை | 12 |
| பெரும்பணை மென்றோள் | 330 | மௌவல் விரியும் | 283 |
| பெரும்பூண் சிறுதகை | 178 | யாமுயங்கு மென் முலையால் | 315 |
| பைந்தொடி மேலுலகம் | 256 | யானை தொடருங் | 323 |
| பொய்யகல நாளும் புகழ் | 35 | வஞ்சமில் கோலானை | 162 |
| பொய்யில் புலவர் | 272 | வண்டுறையுங் கூந்தல் | 360 |
| பொறிமயில் ஆலின | 331 | வந்த படை நோனான் | 175 |
| போர்க்குப் புனை மன் புரை | 80 | வயங்குளை மான் | 234 |
| பௌவம் பணை முழங்கப் | 37 | வயிர்மேல் வளைஞரல | 130 |

வரிசை கருதாது வான் 193
வரிப்பந்து கொண்டொளித் 238
வளிதுரந்தக் கண்ணும் 200
வளையும் வயிரும் 88
வள்வாய்ந்து பண்ணுக 327
வாடை நலிய வடிக் 170
வாட்புகா ஊட்டி 253
வாணாட் கொளலும் 97
வாளமரின் முன்விலக்கி 246
வாளை பிறழுங் 147
வானத் தியலும் 333
வானம் இறைவன் 152
விட்டிடினென் வேந்தன் 71
விண்வேண்டின் வேறாதல் 198
விலங்குநர் ஈங்கில்லை 324
வில்லால் குறும்பிடை 66
வின்முன் கணைதெரியும் 177
வின்னவில் தோளானும் 181
வீடுணர்ந் தோர்க்கும் 54
வெங்கண் முரசதிரும் 149
வெங்குருதி மல்க 26
வெந்தொழிற் கூற்றமும் 151
வெய்ய நெடிதுயிரா 334
வெய்யோன் கதிர்விரிய 201
வெல்புரவி பூண்ட 128
வெல்பொறியும் நாடும் 128
வெள்வாட் கருங்கழற் கால் 99
வெள்ளம்போல் தானை 166
வெள்ளி முளைத்த விடியல் 206
வெறிகொள் அறையருவி 230
வேட்டவை எய்தி 299
வேண்டார் பெரியார் 245
வேண்டுதியால் நீயும் 229
வேந்தார்ப்ப வெஞ்சமத்து 264
வேயுள் விசும்பு விளங்கு 182
வைய மகளை அடிப்படுத் 191



✡✡✡





எயில் காத்தல் நொச்சி



எயில் வளைத்தல் உழிஞை



அதிரப் பொருதல் தும்பை



மிக்கார் செரு வென்றது வாகை


அய்யனாரிதனார் அருளிய

# புறப்பொருள் வெண்பாமாலை

மூலமும் உரையும்

உரை :

**புலியூர்க் கேசிகன்**



ISBN : 978-93-80217-46-8

GO 831

நூல் கிடைக்குமிடம் :

நூலங்காடி...
www.thebookstore.in
e-mail : gowra_09@yahoo.in

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

ரூ. 80